www.tamilarangam.net



# தமிழகத்தில் மனித உரிமைகள்
## 1998-2000

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழகத்தில் மனித உரிமைகள் 1998-2000

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

வெளியீடு

**மக்கள் கண்காணிப்பகம்-தமிழ்நாடு**

7, பீ.டி.இராசன் சாலை, இரண்டாவது தெரு, மதுரை-2
தொ.பே: 0452-532432, 531874 ஃபேக்ஸ்: 531874
மின் அஞ்சல் : henri@pronet.net.in, henri@satyam.net.in

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழகத்தில் மனித உரிமைகள்
1998 – 2000

பதிப்பு - செப்டம்பர், 2000

நன்கொடை ரூ.75/-

வெளியீடு மற்றும் கிடைக்குமிடம்
மக்கள் கண்காணிப்பகம்-தமிழ்நாடு
7, பீ.டி.இராசன் சாலை, இரண்டாவது தெரு, மதுரை-2
தொ.பே: 0452-532432, 531874 ஃபேக்ஸ்: 531874
மின் அஞ்சல் henri@pronet.net.in, henri@satyam.net.in

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | நன்றிகள் பல. . . | i |
| | முன்னுரை | iii |
| I. | போலீஸ் நிலைய வன்முறை | 1 |
| II. | வதை | 46 |
| III. | மோதல் சாவுகள் | 79 |
| IV. | சிறை வன்முறை | 100 |
| V. | பெண்கள் மீதான வன்முறைகள் | 114 |
| VI. | சாதிய வன்முறை | 140 |
| VII. | குழந்தை உரிமைகள் | 188 |
| VIII. | சிறுபான்மையோர் உரிமைகள் | 214 |
| IX. | அகதிகளின் நிலை | 230 |
| X. | சுற்றுச்சூழல் உரிமைகள் | 248 |
| XI. | விசாரணை ஆணையங்கள் | 284 |
| XII. | மனித உரிமை முன்முயற்சிகள் | 311 |


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நன்றிகள் பல . . .

தமிழகத்தில் நடைபெறும் அனைத்துத் துறை மனித உரிமை மீறல்களையும் பரிந்துரைகளுடன் தொகுத்து எழுதுவது என்பது சாதாரண பணியல்ல. ஆனாலும் இப்பணியைச் செய்யத் திட்டமிட்டு சிறப்புமிக்க கருத்துக்களையும் அவ்வப்போது ஆலோசனைகளையும் வழங்கி ஊக்கப்படுத்-தாவிடில் இப்பிரம்மாண்டமான பணி நிறைவுற்றிருக்காது. இதையெல்லாம் யார் செய்திருக்க முடியும்? சந்தேகமின்றி எமது நிறுவனத்தின் இயக்குநர் திரு.ஹென்றி டிபேன்தான். முதலும் முக்கியத்துவமும் வாய்ந்த எமது நன்றிகள் அவருக்கே உரித்தாகுகின்றன.

சரி. திட்டமிட்டாயிற்று அடுத்து பல்வேறு துறைகளில் நடப்பு நிகழ்ச்சிகளுக்கு எங்கே போவது? யாரை அணுகுவது? என்று தவித்த எமக்கு உதவிட வந்தவை தோழமை அமைப்புகள்தான். இப்பணி சிறக்க கேட்கும்போதெல்லாம் தேவையான ஆவணங்கள் தந்துதவிய குழந்தை தொழிலாளர் எதிர்ப்பு பிரச்சாரம் (Campaign Against Child Labour-CACL) கோவை, கடலோர செயல்பாட்டு கூட்டு நடவடிக்கைக் குழு, நாகை (Coastal Action Network-CAN) மனித உரிமை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம், சென்னை (HRF) ஈழ ஏதிலியோர் மறுவாழ்வு கழகம், சென்னை, நெய்தல் அமைப்பு, நாகை, பெண் கருக்கொலைக்கெதிரான பிரச்சாரம், (Campaign Against Sex Selective Abortion – CASSA) மதுரை, தமிழக சுற்றுச்சூழல் கழகம் (Tamilnadu Environmental Council) திண்டுக்கல், ஆகிய அமைப்புகளுக்கு மிகுந்த நன்றிகள்.

சித்திரவதையினால் **ஏற்படும் உடல்ரீதியான** பாதிப்புகள் குறித்து மருத்துவ ரீதியான கருத்து**க்களை வழங்கிய டாக்**டர் மதிகரன், எம்.டி, சென்னை அவர்களுக்கும், **உளவியல் ரீதியான** பாதிப்புகள் குறித்து கருத்துக்களை வழங்கிய டாக்டர் சி.இராமசுப்ரமணியம், எம்.டி., மதுரை அவர்களுக்கும் எமது நிறுவனத்தின் சார்பாக நன்றிகள்.

தமக்குக் கொடுக்கப்பட்ட துறைவாரியான அறிக்கைகளை எழுதித்தந்த மக்கள் கண்காணிப்பகத்தின் மதிப்புமிக்க ஊழியர்கள் ஜான் வின்சென்ட், இராசன், பிரிட்டோ, திலகம், கதிர், வனராஜ் ஆகியோருக்கும், இடைவிடாது கடுமையாக உழைத்து பெண்களின் மீதான வன்முறைகள் குறித்து புள்ளி விபரங்களை மிகத் திறமையாகத் தொகுத்துத்தந்த சுதந்திரா அமைப்பின் ஊழியர் ஆண்டாளுக்கும், தகுந்த நூல்கள், ஆவணங்கள் மற்றும் இதழ்களைத் தேடித்தந்த ஆவண மையத்தின் பணியாளர்கள் காந்திமதி, அமுதா, இமயவரம்பன் மற்றும் பூங்கோதை ஆகியோருக்கும், இதெற்கெல்லாம் மேலாக அனைத்து அறிக்கைகளையும் பொறுமையாக சிரமம் பாராது படித்து பிழை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திருத்தியும், அவ்வப்போது ஆலோசனைகளையும் அளித்த எமது நிறுவனத்தின் பயிற்சி ஆலோசகர் முனைவர் தேவசகாயத்திற்கும் எமது உளப்பூர்வமான நன்றிகள்.

இதற்கெல்லாம் மேலாக, அனைத்து அறிக்கைகளையும், (ஒன்றிரண் - டைத்தவிர) பரிந்துரைகளையும் எழுதி, அறிக்கைகளின் உள்ளடக்கத்தை தொடர்ந்து செழுமைப்படுத்தி, முன் அட்டையையும் வடிவமைத்து, இந்த நூலின் தொகுப்பாசிரியராக பணியாற்றிய எமது பதிப்புத்துறை செயலர் சேதுவிற்கு மனமார்ந்த நன்றிகள்.

இறுதியாக, எத்தனை முறை அறிக்கை நகல்களை தட்டச்சு செய்யச் சொன்னாலும், படியெடுக்கச் சொன்னாலும் அலுப்புமின்றி இரவு பகல் பாராமல் அறிக்கைகளை குறுகிய காலத்திற்குள் ஒளி அச்சு (லேசர் டைப்பிங்) செய்து கொடுத்தும், அட்டையையும் வடிவமைத்துக் கொடுத்த எமது நிறுவனத்தின் கணிப்பொறி ஊழியர்கள் பிரபாகரன், உமா, சின்னராணி ஆகியோருக்கும் எத்தனை முறை நன்றி சொன்னாலும் தகும்.

***மக்கள் கண்காணிப்பகம்-தமிழ்நாடு,***
***மதுரை.***



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முன்னுரை

மலர்ந்துவிட்ட புத்தாயிரத்தில் மனித குலம் எத்தனையோ மாற்றங்களைச் சந்திக்கவிருக்கின்றது. தகவல் தொடர்பு சாதனங்கள் மனிதன் சிந்திக்கும் வேகத்தை நெருங்கிவிடும். உலகமெங்கிலுமுள்ள நிறுவனங்களுக்கு மட்டுமல்ல பெரும்பாலான மனிதர்களின் செயல்பாடுகளுக்கும் கணிப்பொறியே தலைமையளித்து ஒருங்கிணைக்கும். இந்த மாற்றங்களுக்கு அடிப்படையாக உலகமயமாதலின் ஒரு பகுதியான சுதந்திரச் சந்தை விளங்கும். நாடுகள், தேசங்களின் எல்லைகள் வர்த்தகம் மற்றும் நுகர்வுப் பொருட்களின் வீச்சினால் மழுங்கிப்போகும். மக்கள் தொடர்பு சாதனங்களான தொலைக்காட்சிகள், பத்திரிக்கைகள் தாங்கள் விரும்புகின்ற வகையில் தங்களுக்கான பார்வையாளர் –களையும், வாசகர்களையும் உற்பத்தி செய்யும். இந்தப் பிரம்மாண்டமான வளர்ச்சி வேகத்தில் மனிதமும், மனித நேயமும் தேட முடியாதபடி தொலைந்துபோகும் என்றே இப்போது எச்சரிக்கை அறிகுறிகள் எங்கெங்கும் தெரிகின்றன. பிரம்மாண்டமான பன்னாட்டு நிறுவனங்களும் தேசங்கடந்த தொழிற்கழகங்களும் நாடுகளுக்கிடையே நடைபெறும் வர்த்தக உடன்பாடுகளில் சுதந்திரமாக வர்த்தகம் புரிய "தேசிய உரிமைகளை" பெறுகின்றன. ஆனால் அதே உரிமைகள் அந்த தேசத்தில் வசிக்கும் சாதாரண குடிமகன்கள் கேட்கும்போது மறுக்கப்படுகின்றன.

கண்ணுக்குத் தெரிந்தும் தெரியாமலும் நம்மைச் சுற்றி நடைபெறும் இந்த மாற்றங்களை உன்னிப்பாக கவனிப்பவர்களுக்கு ஒன்று மட்டும் தெளிவாகத் தெரிகிறது. இன்று வசதி படைத்தவர்களே நுகர்வோர்களாக மாறிவருவதும் மீதியுள்ள சாதாரண மக்களுக்கு சேரிகளும் சிறைகளுமே சொந்தமாகி வருவதும்தான் அது. பன்னாட்டு நிறுவனங்கள் பெறும் தேசிய உரிமைகள் மனிதர்களுக்கு கிடையாது என்றான பின் அவர்கள் வாழ்வதற்கோ, பாரபட்ச – மின்றி நடத்தப்படுவதற்கோ, சித்ரவதை உள்ளிட்ட பல்வேறு வன்முறைகளிலிருந்து தன்னை தற்காத்துக் கொள்வதற்கோ வாய்ப்புகள் மிகவும் அருகி வருகின்றன. அதுவும் அவர்கள் சிறுபான்மையினராகவும் தலித் மக்களாகவும் இருந்தால் அவர்கள் உயிர்வாழ்வதற்கே கூட உரிமைகள் இல்லை. இச்சூழலில் பெண்களாக இருந்தால் அவர்கள் உயிர் வாழ்வதற்கு எந்தவித உத்திரவாதமும் இல்லை என்பது மட்டுமின்றி அவர்களின் உடல்கள் மீதே அவர்களுக்கு எந்தவித உரிமையுமில்லை என்பதையே தமிழக மனித உரிமைகளின் நிலை குறித்த இந்த நூல் காட்டுகின்றது.

இந்நூலில் மனித உரிமை மீறல்களும் வன்முறைகளும் வரிசையாக ஆதாரங்களோடு தொகுக்கப்பட்டுள்ளன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முதல் அத்தியாயம், மக்களின் நண்பர்கள் என்று அறிவித்துக் கொள்ளும் போலீஸ் நிலையங்கள், அதற்கு முற்றிலும் மாறாக சட்ட விரோதமான முறையில் சாதாரண மக்கள் மீது செலுத்தப்படும் வன்முறைக் கூடாரங்களாக மாறிவிட்டன என்பதை ஒவ்வொரு வழக்கின் மூலமாகவும் கூறுகின்றது.

இரண்டாவது அத்தியாயம், போலீஸ் நிலையத்தில் ஒரு கல்லூரிப் பேராசிரியருக்கு நடந்த வதையை விவரிக்கின்றது. ஒரு பேராசிரியருக்கே இந்த நிலை என்றால் சாதாரண மக்களின் கதி என்ன ஆகும்?. தமிழகம் மற்றும் கர்நாடக அதிரடிப்படையினரால் வீரப்பன் தேடுதல் வேட்டை என்ற பெயரில் நடத்தப்பட்ட வதைகளின் மூலம் அதையும் விரிவாகவே விளக்குகின்றது. இந்த வதைகள் இட்லரின் நாசி முகாம்களில் நடத்தப்பட்டவற்றை விட கொடூரமானவை –யாக உள்ளன. விசாரணை என்ற பெயரில் போலீசார் அடிப்பதை சர்வ சாதாரணமாக எடுத்துக்கொள்ளும் போக்கு மக்களிடையே பரவி வருவதும் அது வளரவிடப்பட்டால் எவ்வளவு அபாயகரமான விளைவுகளைத் தோற்றுவிக்கும் என்பதையும் இந்த அத்தியாயம் சுட்டிக் காட்டி எச்சரிக்கின்றது.

மூன்றாவது அத்தியாயம் குற்றம் சாட்டப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் (அவர்கள் பயங்கரமான ரவுடிகளாகவோ அல்லது கிரிமினல்களாகவோ இருந்தாலும்) அவர்களை போலீசார் சட்டப்படியே நடத்த வேண்டுமேயன்றி சுட்டுக்கொல்வதும் அதன்பின் அவர்களை பயங்கரமானவர்களாக சித்தரிப்பதும் அப்பட்டமான அராஜகமே என்பதை தமிழகத்தில் கடந்த 2 ஆண்டுகளாக நடைபெற்ற மோதல் சாவுகளை சுட்டிக்காட்டி தெளிவுபடுத்துகின்றது.

நான்காவது அத்தியாயம், குற்றவாளிகளையும் குற்றம் சாட்டப்பட்டவர் –களையும் சீர்திருத்தும் நோக்கில் அமைக்கப்பட்ட சிறைச்சாலைகளில் கலவரங் –களும் மனித உரிமை மீறல்களும் அதிகரித்து வருகின்றன. இதற்கு முக்கிய காரணம் இச்சிறைகளில் கைதிகளின் மனித உரிமைகள் பேணப்படுவதில்லை என்பதுதான். இதற்கு தீர்வாக சிறைச்சாலைகளின் நிலைமையை மேம்படுத்த, அமைக்கப்பட்ட பல்வேறு குழுக்களினால் பரிந்துரைக்கப்பட்ட சீர்திருத்தங்கள் உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்திக் கூறுகின்றது.

ஐந்தாவது அத்தியாயம், பெண்கள் மீதான வன்முறையின் பரிமாணங்களை புள்ளி விபரங்களோடு விளக்குகின்றது. பாலின ரீதியாக பாரபட்சமான சட்டங்கள் இருப்பதும், இந்த வழக்குகளை புலன் விசாரணை செய்யும் போலீசார் பாலியல் கண்ணோட்டமின்றி இருப்பதுமே இந்த வன்முறை நீடிப்பதற்கான காரணங்கள் என்று கூறுகின்றது. இவ்வன்முறைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க ஒவ்வொரு சட்டமும் எப்படி மாற்றப்பட வேண்டும் என்பதை இந்த அத்தியாயம் வலியுறுத்துகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆறாவது அத்தியாயம், இந்தியாவில் முக்கியமாக தமிழகத்தில் புரையோடிப்போன சாதியம் இன்று சாதிய வெறியாக மாறி தாழ்த்தப்பட்டவர்கள் தங்களது உரிமைகளுக்காக குரல் கொடுக்கும்போதெல்லாம் அவர்களது குரல்வளையை நெறிக்கும் வன்முறைகளாக வெடிப்பதைக் காட்டுகின்றது. இந்த வன்முறைகளில் பாதிக்கப்படுவோர் பெரும்பாலோர் தலித்துகளே என்பதையும் இந்த அத்தியாயம் சுட்டிக்காட்டத் தவறவில்லை. இதற்குத் தீர்வாக தலித்துகள் உயிர் வாழ்வதற்கு எதிரான தீண்டாமையை ஐ.நாவின் இனப்பாகுப்பாட்டிற்கான வரையறையில் ஒன்றாகச் சேர்க்கப்படவேண்டும் என்பதில் துவங்கி பல அழுத்தமான மற்றும் ஆழமான பரிந்துரைகளையும் முன் வைக்கிறது.

ஏழாவது அத்தியாயம் மனித வாழ்வில் குழந்தைப் பருவத்தின் முக்கியத்துவத்தைக் கூறி இன்றைய இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் குழந்தைகளின் அடிப்படையான உரிமைகள் குழந்தைத் தொழிலாளர் முறையி–னாலும் அவர்க்ள் மீது தொகுக்கப்படும் பாலியல் சுரண்டல்களினாலும் மீறப்படு–வதும், இதனால் அவர்களது குழந்தைத் தனம் மட்டுமல்ல ஆளுமையயே சிதைக்கப்பட்டு நாட்டின் எதிர்காலமே அழிக்கப்படுவதையும் விரிவாகப் படம் பிடித்துக் காட்டுகின்றது. குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிக்கப்படுவதற்கு அவசியமான சட்டத் திருத்தங்களையும் கல்வித் துறையில் இலவசக் கட்டாயக் கல்வி ஆக்கப்படுவதற்கான பரிந்துரைகளையும் இந்த அத்தியாயம் முன் வைக்கிறது.

எட்டாவது அத்தியாயமான சிறுபான்மையோர் உரிமைகள் ஆளுங் –கட்சியின் பின் புலத்தோடு இன்றைக்கு நாட்டின் மதச்சார்பற்ற தன்மைக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலையும் அதனால் சிறுபான்மையர் உரிமைகள் நசுக்கப்பட்டு அவர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களையும் சம்பவ வாரியாகத் தொகுத்து அளிக்கின்றது. அரசியல் சாசனத்தில் கூறப்பட்டுள்ள மதச் சார்பின்மையும் சிறு–பான்மையோர் உரிமைகளும் நடைமுறைப்படும்போதே நாட்டின் மதச்சார்பின்மை காக்கப்பட்டு சிறுபான்மையோரின் உரிமைகளுக்கு உத்திரவாதமளிக்கப்படும் என்று கூறுகிறது.

ஒன்பதாவது அத்தியாயம், சிறைக் கைதிகளுக்கு உள்ள உரிமைகள் கூட இன்றி சிறப்பு முகாம்களில் வைக்கப்பட்டுள்ள அகதிகளின் பரிதாப நிலையை படம் பிடித்துக் காட்டுகிறது. சர்வதேச அகதிகள் தொடர்பான உடன்பாட்டை இந்தியா கையெழுத்திட்டு ஏற்றுக்கொள்ளும்போதே அகதிகள் 'அகதி' என்ற அந்தஸ்துடன் நடத்தப்படுவர் என்பது போன்ற ஆணித்தரமான பரிந்துரைகளையும் இந்த அத்தியாயம் முன் வைக்கிறது.

பத்தாவது அத்தியாயம் நாட்டில் வளர்ச்சித் திட்டங்கள் என்ற பெயரால் பகுதியின் சுற்றுச் சூழலை அழித்து மக்களின் வாழ்வுரிமையை பறிக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொழிற்திட்டங்களின் பாதக அம்சங்களையும் அதற்கான சட்ட ரீதியான தீர்வுகளையும் முன் வைக்கிறது.

பதினோறாவது அத்தியாயத்தில், சாதிக் கலவரங்கள், கோவை குண்டு வெடிப்பு போன்ற பெரும் மனித உரிமை மீறல் சம்பவங்களில் நியமிக்கப்படும் நீதிபதிகளின் தலைமையிலான விசாரணை ஆணையங்கள் அவற்றின் முடிவுகள் பிரச்சினைகளுக்கான ஆணையங்களின் பரிந்துரைகளுடன் கூறப்பட்டுள்ளன. இந்த அத்தியாயத்தின் தொடர்ச்சியாக அரசியல் சாசனத்திலுள்ள மனித உரிமைகளை பாதுகாக்கவும் மனித உரிமை மீறல்களை கண்காணித்து அவற்றில் தலையிடவும் நியமிக்கப்பட்டுள்ள தமிழக மனித உரிமை ஆணையம் வெறுமனே பரிந்துரைக்கும் அமைப்பாக இருப்பதைச் சுட்டிக்காட்டி அதன் பலவீனமான செயல்பாடு எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை மாநில மனித உரிமை ஆணையம் வெளியிட்டுள்ள ஆண்டறிக்கையின் மீதான விமர்சனங்களின் மூலம் எச்சரிக்கை விடுக்கின்றது. அத்தோடு மாநில மனித உரிமை ஆணையத்தை வலிமைப்படுத்தும் பரிந்துரைகளையும் முன் வைக்கிறது.

கடைசி அத்தியாயத்தில், அரசு நிறுவனங்களும், சட்டங்களும், நீதித் துறையும் பல்வேறு துறைகளில் நடைபெறும் மனித உரிமை மீறல்களை தடுத்து நிறுத்த முடியாதபடி பலவீனப்பட்டு நிற்கின்றபோது, நம்பிக்கைக்கான ஆதாரங்க – ளாகவும், அரசின் பொறுப்பைச் சுட்டிக்காட்டுவதற்கான, மனித உரிமைக்கான முன்முயற்சி நடவடிக்கைகளாகவும் பல்வேறு மனித உரிமை அமைப்புகள் அரசு சாரா நிறுவனங்கள், வழக்கறிஞர்கள், விஞ்ஞானிகள், சமூக செயல்பாட்டாளர்கள் ஆகியோர் இணைந்து உருவாக்கும் பிரச்சார இயக்கங்களைப் பற்றி துறைவாரியாக கூறப்பட்டுள்ளது.

இறுதியாக, இந்த அத்தியாயங்களில் கூறப்படும் மனித உரிமை மீறல்களுக்கான காரணங்கள் விவாதித்திற்குரிவையாக இருக்கலாம். அவற்றில் சிலருக்கு மாற்றுக் கருத்துகள்கூட இருக்கலாம். ஆனால் கூறப்படும் அனைத்துத் துறைகளிலும் நடந்துள்ள மனித உரிமை மீறல்களையும் அதனால் ஏற்பட்ட பாதிப்புகளையும் பொறுத்தவரை யாருக்கும் எந்த மாற்றுக் கருத்தோ, சந்தேகமோ இருக்க முடியாது. எனவே இத்தகைய மனித உரிமை மீறல்கள் மனித உரிமை அமைப்புகளுக்கும், சமூக செயற்பாட்டாளர்களுக்கும் முன்னால் விடப்பட்ட சவால்களே. இந்த சவால்களை எப்படி எதிர் கொள்ளப்போகிறோம்?

எந்தவிதச் சந்தேகத்திற்கிடமின்றி அரசின் மெத்தனப்போக்கையே இந்த மீறல்கள் படம் பிடித்துக் காட்டுகின்றன. இந்த மீறல்களை நிரந்தரமாகத் தடுத்து நிறுத்தவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு அளித்திடவும் உடனடி நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்ற நம்பிக்கையோடு பின்வரும் அத்தியாயங்களுக்குள் நுழைவோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net



# I. போலீஸ் நிலைய வன்முறை

(கீழ்க்கண்ட வன்முறைத் தொகுப்புகள் மக்கள் கண்காணிப்பகம் நேரடியாக மேற்கொண்ட கள ஆய்வின் அறிக்கைகள்)

## 1. உசிலம்பட்டி - குருவையா

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அருகே டி.கிருஷ்ணாபுரத்தைச் சேர்ந்தவர் 27 வயதான குருவையா. இவருக்கு மனைவி குருவம்மாளும் மூன்று மகன்களும் இருந்தனர். கணவனும், மனைவியும் சொந்த நிலத்தில் விவசாயம் செய்து வந்தனர்.

1998ம் வருடம் ஜுலை 27ம் தேதி காலை 7 மணிக்கு உசிலம்பட்டி துணைக் கண்காணிப்பாளர் திரு. தங்கப்பாண்டியன் தலைமையில் பூச்சி, பாலு என்ற கொள்ளையர்கள் கைதானபோது அவர்கள் கொடுத்த தகவலின் பேரில் விசாரிப்பதாகக் கூறி குருவையாவைத் தேடி வந்த போலீசார், அவருடைய மனைவி அங்கம்மாளைப் பிடித்துச் சென்றனர். பகல் 3 மணிவரை அவரை உசிலம்பட்டி காவல்நிலையத்தில் வைத்திருந்து மற்றும் சிலருடன் சேர்த்து ஊர்மெச்சிகுளம் போலீஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்றனர். அப்போது நடந்துவந்த தொடர் திருட்டுக் குற்றங்களைக் கண்டுபிடிக்க, மதுரை மாவட்டக் போலீஸ் கண்காணிப்பாளர் திரு. திரிபாதி உத்தரவின் பேரில் போலீஸ் துணைக் கண்காணிப்பாளர் திரு.பொன்.நாகராஜ் தலைமையில் அமைக்கப்பட்ட புலனாய்வுக் குழுவின் சித்திரவதை மற்றும் விசாரணைக் கூடமாக ஊர்மெச்சிகுளம் போலீஸ் நிலையம் செயல்பட்டு வந்தது. பின்னர் அதேநாள் (27ம் தேதி) இரவு கோடாங்கி நாயக்கன்பட்டியில் உறவினர் வீட்டிலிருந்த குருவையாவைப் பிடித்த போலீசார் ஊர்மெச்சிகுளம் போலீஸ்நிலையத்திற்கு அவரை மறுநாள் கொண்டு வந்தனர்.

இந்த வழக்கிலும் மற்றும் பிற வழக்குகளிலும் தொடர்புடைய சில பெண்கள் உட்பட, பல்வேறு ஊர்களைச் சேர்ந்த சுமார் பதினாறு பேரை போலீஸ் காவலில் வைத்து விசாரித்துள்ளனர். இரவு கருப்பாயூரணி போலீஸ் நிலையத் திற்கு (மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில் உள்ளது) கூட்டிச் சென்று "பூச்சி, பாலு ஆகியோர் கொடுத்த நகைகளை எங்கே வைத்திருக்கிறீர்கள் ? யாரிடம் கொடுத்தீர்கள் ?"என்று கேட்டு குருவையாவையும், அங்கம்மாளையும் கைகளை பின்புறமாகக் கட்டி, முதுகிலும், புட்டத்திலும் அடித்துள்ளனர். அப்போது அவர்கள், "இரண்டு பேரில் ஒருவன் பக்கத்து செட்டியார் வீட்டில் திருமணம் செய்து கொண்டவன், அப்போது அவனைப் பார்த்தது தவிர அவர்களைப் பற்றி எதுவும் தெரியாது" என்று கூறியும் கடுமையாகத் தாக்கப்பட்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பின் நடத்தப்பட்ட சித்ரவதைகள் மிகவும் குரூரமானவையாகும்:–

- 28ம் தேதி இரவு ஒரு மணிக்கு, சார்பு ஆய்வாளர் ராமசாமி உட்பட மூன்று போலீசார் கணவன், மனைவி இருவரையும் நிர்வாணமாக்கி, இருவரது கைகளையும் சங்கிலியால் பிணைத்து, வெளியில் நடக்கச் சொல்லி மூங்கில் தடியால் அடித்துள்ளனர்.
- கடுமையாக அடித்ததினால் குருவையாவுக்கு விந்து வெளியேறியதைக் கண்டு அங்கம்மாள் கதற, மீண்டும் போலீஸ்நிலையம் கூட்டிச் சென்று விட்டத்தில் கட்டித் தொங்கவிட்டு அடித்துள்ளனர்.
- விட்டத்தில் தொங்கியபடியே மயக்கமுற்ற குருவய்யாவை கீழே தள்ளிவிட்டு, அங்கம்மாளின் மார்பைக் கடித்து பாலியல் வன்முறையில் ஈடுபட்டனர்.
- இதைப் பார்த்த குருவையா "ஐயோ என் மனைவியைக் கெடுத்து விடாதீர்கள்" என்று கதறியுள்ளார்.
- குருவையாவின் கெஞ்சலைப் பொருட்படுத்தாத போலீசார் "தொழு நோயாளியைக் கொண்டு உன் மனைவியைக் கெடுப்போம்" என்று அச்சுறுத்தியுள்ளனர்.
- போலீசார் அங்கம்மாளின் பிறப்புறுப்பில் பூட்ஸ் காலால் மிதித்ததில் கடுமையான இரத்தப்போக்கு ஏற்பட்டுள்ளது. ஏழுமலை போலீஸ்நிலைய ஆய்வாளர் மகாலிங்கம் இவர்களைச் சாட்டையால் அடித்துள்ளார்.
- இருவரது நகக்கண்களில் ஊசியால் குத்தியும், கண்களில் மிளகாயைப் பிழிந்தும் இவர்களைக் குற்றத்தை ஒத்துக் கொள்ள வற்புறுத்தியுள்ளனர்.
- இருவரும் பகலில் ஊர்மெச்சிகுளத்தின் போலீஸ் நிலையத்திலும், இரவில் கருப்பாயூரணி போலீஸ் நிலையத்திலும் வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டுள்ளனர். ஏப்ரல் முதல் தேதி சனிக்கிழமை ஊர்மெச்சிக்குளம் காவல்நிலையத்திலிருந்து கருப்பாயூரணிக்குக் கூட்டிச் செல்லப்பட்ட குருவையா மீண்டும் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார். அவரது உடல்நிலை மிகவும் மோசமாகவே மதுரை அண்ணா பேருந்து நிலையம் அருகிலுள்ள கோமதி மருத்துவமனைக்கு அவரைக் கொண்டு சென்றுள்ளனர். ஞாயிறு காலை அங்கம்மாளை ஜீப்பில் கூட்டிச் சென்று, வழியில் ஒரு டீக்கடை அருகே நிறுத்தி கடைப்பெட்டியின் அடியிலிருந்து குருவையாவைத் தூக்கி வந்து ஏற்றி, துணிகளை மாற்றி மதியம் 1.30 மணியளவில் உசிலம்பட்டி போலீஸ் துணைக்கண்காணிப்பாளரிடம் சேர்த்துள்ளனர். அவர் குருவையாவின் மோசமான உடல்நிலையைப் பார்த்துவிட்டு உசிலம்பட்டி செந்தில் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார். அங்கு டாக்டர். சுப்பிரமணியம் இரண்டு ஊசிகள் மட்டுமே போட்டுவிட்டுச் சென்று விட்டார். மாலை ஆறு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மணியளவில், குருவையா அழுதபடியே தன் மனைவியிடம் நாக்கை காட்டியுள்ளார். அதில் ஓட்டை போடப்பட்டிருந்தது. "அவர் இனி நான் பிழைக்க மாட்டேன், உன்னையும் அடித்தே கொன்று விடுவார்கள். நீயும் செத்து விடு", என்று கூறியவாறு அங்கம்மாளின் மடியில் உயிர் துறந்துள்ளார். இதன் பின்னர் மக்கள் கண்காணிப்பகம் தொடர்ந்த வழக்கினைத் தொடர்ந்து, அங்கம்மாளுக்கு மூன்று லட்சம் ரூபாய் நஷ்ட ஈடாகத் தரப்பட்டுள்ளது. கோட்டாட்சியர் பரிந்துரைப்படி, போலீஸ்துறை துணைத் தலைவர் விசாரணை மேற்கொண்டுள்ளார். இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட யார் மீதும் கொலைக்குற்றம், போலீஸ் காவலில் மரணம் என குற்ற வழக்குகள் தொடரப்படவில்லை. சென்னை உயர்நீதி மன்றம் இந்த வழக்கின் விசாரணையின்போது அரசின் குறிப்பாகக் போலீஸ்துறை அதிகாரிகளின் மெத்தனப் போக்கைக் கண்டித்துள்ளது.

**கண்டறிந்தவையும், பரிந்துரைகளும்**

- குருவையா மீது இதற்கு முன் குற்ற வழக்குகள் ஏதும் இல்லை.
- 27.07.98–ம் தேதி அன்று குருவையாவைக் கைது செய்த உசிலம்பட்டி போலீஸ் துணைக் கண்காணிப்பாளர் தங்கப் பாண்டியன் எந்த சட்ட விதிமுறைகளைக் கடைபிடிக்கவில்லை.
- அவர் ஒப்படைத்ததன் பேரில் திருப்பரங்குன்றம் போலீஸ் துணைக் கண்காணிப்பாளர் பொன் நாகராசனும், அவர் தலைமையில் அமைக்கப்பட்ட விசாரணைக்குழுவில் இடம்பெற்ற ஏழுமலை ஆய்வாளர் மகாலிங்கம், கருப்பாயூரணி சார்பு ஆய்வாளர் இராமசாமி, போலீசார் சங்கர், கணேஷ்குமார், மற்றும் சில அடையாளம் தெரிந்த போலீசார் குருவையாவையும், அவரது மனைவி அங்கம்மாளையும் அடித்ததில் குருவையாவிற்கு எலும்பு முறிவும், நாக்கில் ஓட்டையும், நகக்கண்ணில் காயங்களும், உடலெங்கும் உட்காயங்களும் ஏற்பட்டு முறையான சிகிச்சையுமின்றி மரணமடைந்துள்ளார். அங்கம்மாளுக்குக் கையில் எலும்பு முறிவும், நெஞ்சில் வலியும் ஏற்பட்டு இன்று வரை சிகிச்சை பெற்று வருகிறார்.
- கோட்டாட்சியர் பரிந்துரைத்துள்ளபடி குருவையாவின் மரணத்திற்கு காரணமான போலீஸ்துறை அதிகாரிகள் மீது மாவட்ட மனித உரிமை நீதி மன்றத்தில் இந்திய தண்டனைச் சட்டம் மற்றும் மனித உரிமைப் பாதுகாப்புச் சட்டப் பிரிவுகளின் கீழ் வழக்கை விசாரிக்க வேண்டும்.
- போலீஸ் காவலில் பாலியல் வன்முறைக்கு உள்ளான அங்கம்மாவை அரசுத்துறை ஒன்றில் பணி நியமனம் செய்ய வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



* மரணமடைந்த குருவையாவின் வாரிசுகளான மூன்று மகன்களுக்கும் கல்விச் சலுகையும், அரசுப்பணியில் முன்னுரிமையும் அளிக்க வேண்டும். போலீஸ் துணைக் கண்காணிப்பாளர் தங்கப் பாண்டியனுக்கு உடந்தையாக செயல்பட்ட மருத்துவர் சுப்ரமணியம் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## 2. பழவூர் - முத்து

நெல்லை மாவட்டம் வள்ளியூர் அருகிலுள்ள காற்றாலை ஒன்றில் காவலாளியாக பணிபுரிந்து வந்தவர் முத்து என்பவர் (வயது 35) இவர் இலவஞ்சிப்புரம் நெருஞ்சிக் காலனியில் வசித்து வந்தார். 1998–ம் ஆண்டு ஆகஸ்டு 11–ம் தேதி **அதிகாலையில்** முத்து தனது வேலை முடிந்து வீட்டுக்குச் செல்வதற்காக நண்பர்**களுடன் நின்றிருந்த** வேளையில் அவ்வழியே வந்த இருசக்கர வாகனத்தில் **(டி.வி.எஸ்.50) வந்த** ஒரு நபரிடம் லிப்ட் கேட்டுச் சென்றிருக்கிறார்.

ஆவரைக்குளம் விலக்கு எனுமிடத்தில் ஆட்டோவில் வந்த ரவிப்புதூரைச் சேர்ந்த நான்கு பேர் இருசக்கர வாகனத்தில் வந்த இவர்களை வழிமறித்துள்ளனர். முத்துவை ஏற்றிக் கொண்டு வந்த நபர், அவர்களைப் பார்த்ததும் வாகனத்தைக் கீழே போட்டுவிட்டு ஓடிவிட்டார். ஆட்டோவில் வந்த தம்பிக்குமார் உட்பட நான்கு பேர்களும் "நீயும் வண்டியைத் திருடியவன்தானே?" என்று கேட்டு முத்துவை பலமாக அடித்து காலை 6.30 மணிக்கு பழவூர் போலீஸ் நிலையத்தின் போலீசாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

முத்து கூறியதை நம்பாத போலீசார் அவரை அடித்து காவல் அறையில் வைத்துள்ளனர். ஒன்பதரை மணிக்கு பணிக்கு வந்த சார்பு ஆய்வாளர் ஜூலியஸ் சீசர், முத்துவை கால்சட்டையுடன் நிறுத்தி அவரும் கடுமையாக அடித்துள்ளார். மற்ற போலீசாரும் சேர்ந்து கொண்டு முத்துவை அடித்துள்ளனர். அப்போது வேறு வழக்கில் கைதாகி காவலிலிருந்த காளியப்பன் உடன் இருந்திருக்கிறார். ரவிப்புதூரைச் சேர்ந்தவர்கள் தாக்கி போலீசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதை அறிந்து உறவினர்கள் போலீஸ் நிலையம் சென்றுள்ளனர். அங்கு மயக்க நிலையிலிருந்த முத்துவை, "நடிக்காதே, உட்காருடா", எனக்கூறி போலீசாரும், சார்பு ஆய்வாளரும் அடித்துள்ளனர். முத்து கண் விழிக்காதிருக்கவே, முத்துவை ஒரு ஆட்டோவில் ஏற்றி உறவினர்கள் இருவருடன் அஞ்சுகிராமம் சாந்தி மருத்துவமனைக்குக் கொண்டு சென்றுள்ளனர். அங்கு பாதுகாப்புக்காக இரு ஊசிகள் போட்டுப் பெரிய மருத்துவமனைக்குச் செல்லக் கூறியுள்ளனர். சங்கனாபுரம் அரசு மருத்துவமனைக்குச் சென்று அங்கிருந்து இராதாபுரம் அரசு மருத்துவமனைக்குச் சென்றுள்ளனர். அங்கும் அவரைக் காப்பாற்றுவது கடினம் என்று கூறவே, வாடகைக்கார் அமர்த்தி பாளையங்கோட்டை மருத்துவக்கல்லூரி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். மேற்கூறிய இடங்களுக்கு முத்துவை கொண்டு சென்றபோது சார்பு ஆய்வாளர் தனது மோட்டார் பைக்கில் உடன் சென்றுள்ளார். மனைவி, குழந்தைகள் மற்றும் உறவினர்கள் வந்து பார்த்தபோது பேச இயலாதிருந்த முத்து அன்று மாலை ஏழு மணிக்கு இறந்துவிட்டார். மறுதினம் ஆகஸ்டு 12–ம் தேதி சடலக்கூறாய்வு நடத்தியபோது அது ஒளிநாடாவில் பதியப்படவில்லை. முத்துவின் உடலைப் பார்க்க உறவினர்களையும் அனுமதிக்கவில்லை.

ரவிப்புதூரைச் சேர்ந்த முன்கூறிய நான்கு பேர்கள் அடித்ததனால் தான் முத்து இறந்துவிட்டதாக போலீசார் வழக்கு பதிந்து அவர்களைக் கைது செய்து, இந்த வழக்கை திசை திருப்பி விட்டனர். இதன்பின்னர், பொதுமக்கள் பழலூர் காவல்நிலையத்தை முற்றுகையிட்டும், பழலூர் மற்றும் பனகுடியில் தேசிய நெடுஞ்சாலையின் புறவழிச்சாலையில் அமர்ந்தும் மறியலும் செய்துள்ளனர். அவர்களை கலைக்க போலீசார் தடியடி நடத்தியதில் பலருக்கு எலும்பு முறிவும், காயங்களும் ஏற்பட்டுள்ளன.

**கண்டறிந்தவையும், பரிந்துரைகளும்**

- ரவிப்புதூரைச் சேர்ந்த தம்பிக்குமாரும், மற்றவர்களும் முத்துவை அடித்துள்ளனர். எனினும் வாகனத் திருட்டில் முத்துவும் உடந்தை என்று நம்பிய பழலூர் போலீஸ் நிலையச் சார்பு ஆய்வாளர் சீசர் மற்றும் போலீசார் அடித்து சித்திரவதை செய்ததாலேயே முத்து மரணமடைந்துள்ளார்.
- சடலக்கூறாய்வை ஒளிநாடாவில் பதிவு செய்து, 24 மணி நேரத்திற்குள் தேசிய ஆணையத்திற்கு அறிக்கை அளிக்கத் தவறிய போலீசார் மீது இந்திய தண்டனைச் சட்டம் மற்றும் மனித உரிமை பாதுகாப்புச் சட்டப் பிரிவுகளின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- இறந்த முத்துவின் குடும்பத்தினருக்கு அரசு இழப்பீடு அளிக்க வேண்டும்.

## 3. குடியாத்தம் - கோவிந்தராசன்

வேலூர் மாவட்டம் குடியாத்தத்திலிருந்து பரதராமி செல்லும் வழியில் உள்ளது குப்பகொட்டூர் என்னும் குக்கிராமம். இக்கிராமத்தில் இருபத்தைந்தே குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இவர்கள் கோனார் சமூகத்தினர் ஆவர். இங்கு வசித்து வரும் கோவிந்தராசுவுக்கு (வயது 30) மனைவியும், இரண்டு மகள்களும் ஒரு மகனும் உள்ளனர். கோவிந்தராசுவுக்கு ஓராண்டுக்கு முன்பு ஏற்பட்ட விபத்தில் காலில் ஊனமேற்பட்டது. இதனால் அவர் கூலி வேலைக்குச் செல்வதை விட்டுவிட்டு, சாராய வியாபாரம் செய்து வந்துள்ளார். மதுவிலக்கு போலீசார்களுக்கு மாமூலும் கொடுத்து வந்திருக்கிறார்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


இந்நிலையில் 98–ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 7–ம் தேதி கோவிந்தராசு வீட்டிற்கு வந்த மதுவிலக்கு போலீசார், அரசுக்கு கணக்குக் காட்ட, அவர் மீது சாராயவழக்குப் போடவேண்டும் என்று கூறியுள்ளனர். அதற்கு கோவிந்தராசு எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

ஆகஸ்டு 9–ம் தேதி காலை பத்து மணிக்கு சீருடையின்றி வந்த மதுவிலக்கு போலீசார் கோவிந்தராசனை அடித்து, உதைத்து, மயக்கமான நிலையில் தோளில் தூக்கிச் சென்று ஜீப்பில் வைத்து, பரதராமி போலீஸ்நிலையம் சென்று அங்கிருந்த போலீசாரிடம் அவரை ஒப்படைத்துவிட்டு, கோவிந்தராசு வீட்டில் விஷச்சாராயம் கைப்பற்றப்பட்டிருப்பதாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யுமாறு கூறிவிட்டுச் சென்றுவிட்டனர். உள்ளூர் போலீசாரும் கோவிந்தராஜனை காவல் அறையில் வைத்துக் கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

10–ம் தேதி குடியாத்தம் நீதித்துறை நடுவரிடம் முன்னிலைப்படுத்தி அதன்பின் குடியாத்தம் கிளைச்சிறைக்கு கொண்டு சென்றுள்ளனர். அங்கு வேண்டிய பதிவுகளைச் செய்து விட்டு, குடியாத்தம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று அங்கு அவரை உள்நோயாளியாகச் சேர்த்து சிகிச்சை கொடுத்துள்ளனர். அப்போது கோவிந்தராசுவின் கைகளிலும், முகத்திலும் கன்றிய காயங்களை அவரது மனைவி சரளா பார்த்திருக்கிறார். ஆனால் 10–ம் தேதிக்குப் பிறகு மூன்று நாட்கள் வரை தனது கணவரைப் பார்க்க சரளாவை போலீசார் அனுமதிக்கவில்லை. பகல் 12.45 மணிக்கு கோவிந்தராஜ் இறந்துவிட்டதாக கூறியுள்ளனர். சடலக் கூறாய்வு முடியும் வரை யாரும் பார்க்கக்கூடாது எனப் போலீசார் உறவினர்களைத் தடுத்துவிட்டனர்.

இதனைத் தொடர்ந்து யாதவர் சங்கத் தலைவர் மூலம் முதல்வருக்கும், அதிகாரிகளுக்கும், தொலைவரிச் செய்தி கொடுத்தனர். 13–ம் தேதி காலை போலீஸ் அதிகாரிகள் தலையிட்டு, கோட்டாட்சியரின் விசாரணைக்குப் பின் தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனக்கூறி, உடலை சடலக் கூறாய்வுக்கு அனுப்பினர். சடலக்கூறாய்வு ஒளிநாடாவில் பதியப்பட்டது. அதன்பின், போலீசாரின் வாகனத்திலேயே பிரேதத்தை ஏற்றி, குப்பகொட்டூர் கிராமத்திற்கு கொண்டு வந்து அடக்கம் செய்துள்ளனர். இறுதிச்சடங்குகள் முடியும்வரை போலீசார் இருந்துள்ளனர். இந்த வழக்கில் அரசு தரப்பில் பாதிக்கப்பட்டவருக்கு, இழப்பீடு தரப்படவில்லை. அத்தோடு, குற்றம் புரிந்தவர்கள் மீது நடவடிக்கை ஏதுமில்லை.

**கண்டறிந்தவையும், பரிந்துரைகளும்**

- சாராய வழக்குப் போட போலீசாருக்கு ஒத்துழைக்காததால் ஆத்திரமடைந்த மது விலக்கு போலீசாரும், குடியாத்தம் பரதாமி போலீஸ் நிலையத்திலிருந்த போலீசாரும் தாக்கியதாலேயே கோவிந்தராசன் மரணமடைந்துள்ளார்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



- விசாரணை கைதி கோவிந்தராசனைச் சித்திரவதை செய்து அவர் மரணத்திற்குக் காரணமான போலீசார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அவரது குடும்பத்தாருக்கு அரசு இழப்பீடு வழங்க வேண்டும்.

## 4. காடூர் - பெரியசாமி

பெரம்பலூர் மாவட்டம், காடூரைச் சேர்ந்த தலித் குடியிருப்பில் கடப்பாரை என்ற பெரியசாமி இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் சாராய வியாபாரம் செய்து வந்தார். அப்போது போலீசாரின் தொல்லை அதிகமானதால் தற்காலிகமாக வியாபாரத்தை நிறுத்தியிருக்கின்றார். 98–ம் வருடம் ஆகஸ்டு 21–ம் தேதி போலீசார் சாராய வேட்டை நடத்த வந்திருப்பதை அறிந்து பெரியசாமியை அவரது மனைவி வீட்டுக்குள் ஒளித்து வைத்துள்ளார். குன்னம் போலீஸ்நிலையப் பொறுப்பிலிருந்த சார்பு ஆய்வாளர் நீலகண்டன் மற்றும் சீருடையின்றி வந்த போலீசார் வீட்டை உடைத்து, பெரியசாமியை மாடு கட்டும் கம்பில் அடித்து ஜீப்பில் ஏற்றி குன்னம் போலீஸ் நிலையம் கொண்டு சென்றுள்ளனர்.

அங்கு இரண்டு நாட்கள் வைத்து சித்திரவதை செய்துவிட்டு ஆகஸ்டு 23–ம் தேதி பெரம்பலூர் நீதித்துறை நடுவர் முன் முன்னிலைப்படுத்தி கிளைச்சிறையில் அடைத்துள்ளனர். அவரது உடல் நலம் மோசமான நிலையில் செப்டம்பர் முதல் தேதி அரசு மருத்துவமனையில் மின் அதிர்வு சிகிச்சை கொடுத்து நுண்கதிர்படம் எடுத்துப் பார்த்துள்ளனர். பெரியசாமியின் உடல்நிலை மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதால் அவரை திருச்சி மத்திய சிறைவாசியாக பதிவு செய்து, திருச்சி அரசு மருத்துவமனைக்குக் கொண்டு சென்றுள்ளனர். ஆனால் வழியிலேயே பெரியசாமி இறந்துவிட்டார்.

பெரியசாமியின் மனைவியும், உறவினர்களும் மருத்துவமனையில் சென்று பார்த்தபோது கால்சட்டையுடன் படுக்க வைக்கப்பட்டிருந்த பெரியசாமியின் நெற்றியிலும், கன்னத்திலும் இரத்த காயங்களும், பக்கத்தில் சுருட்டி வைக்கப்பட்டிருந்த வேட்டி, சட்டையில் ரத்தக்கறையும் இருந்துள்ளன.

சார்பு ஆய்வாளரும், போலீசாரும் பெரியசாமியின் மனைவி உண்ணாமலையிடம் அவரது கணவர் சாராயம் குடிப்பதால் அவருக்கு அடிக்கடி நெஞ்சுவலி வரும் என்று கோட்டாட்சியர் விசாரணை நடத்தும்போது கூற வேண்டும் என மிரட்டியுள்ளனர். மேலும் கோட்டாட்சியரின் விசாரணையின்போது போலீஸ் அதிகாரிகள் உண்ணாமலையுடன் இருந்ததாலும் பயத்தில் அவர்கள் சொல்லிக் கொடுத்தவாறே கூறியுள்ளார்.

பெரியசாமியின் உடலைப் புதைக்கக்கூடாது, எரிக்க வேண்டும் எனக் கூறி மிரட்டிய சார்பு ஆய்வாளர் செலவுகளுக்காக அவரின் மனைவியிடம் ரூ.3000 கொடுத்துள்ளார். அவர் கூறியவாறே பெரியசாமியின் உடலை ஊருக்கு கொண்டு வந்து எரித்துவிட்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**கண்டறிந்தவையும், பரிந்துரைகளும்**

- சார்பு ஆய்வாளர் நீலகண்டன் மற்றும் போலீசார் தாக்கியதாலேயே காடூர் பெரியசாமி மரணமடைந்துள்ளார். பெரியசாமியிடம் மாமூல் வாங்கிக் கொண்டு அவரை சாராயம் விற்க அனுமதிப்பதும், அவ்வப்போது அரசிடம் காட்டப்படும் புள்ளிவிபரங்களுக்காக அவர் மீது வழக்கு பதிவு செய்வதும், வியாபாரத்தை நிறுத்துபவர்களையும் லஞ்சத்திற்கு ஆசைப்பட்டு கட்டாயப் படுத்தி விற்க வைப்பதும் மேலதிகாரிகளுக்குத் தெரிந்து அவர்களது ஒப்புதலுடனேதான் நடக்கிறது.
- இவ்வழக்கில் பெரியசாமியின் மரணத்திற்குக் காரணமான குன்னம் போலீஸ் நிலைய சார்பு ஆய்வாளர் நீலகண்டன் மற்றும் போலீசார்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். மரணமடைந்த பெரியசாமியின் குடும்பத்தினருக்கு அரசு இழப்பீடு வழங்க வேண்டும்.

## 5. நெற்கட்டும்செவல் - மாரிச்சாமி

திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில் அருகிலுள்ள நெற்கட்டும் செவல் கிராமத்தைச் சேர்ந்தவர் கருப்பசாமி மகன் மாரிச்சாமி, (வயது 23). கடந்த 13.9.98 அன்று சங்கரன்கோவில் போலீசாரால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டவர் மூன்று நாட்கள் சித்திரவதைக்குப்பின் மரணமடைந்து விட்டார். கழிவறையில் லுங்கியால் தூக்கு போட்டுக் கொண்டார் என போலீசார் கூறிவிட்டனர்.

இப்போலீஸ் நிலைய **மரணத்தின் பின்னணியில் தேவர் மற்றும் கோனார்** ஆகிய பிற்படுத்தப்பட்ட **சாதிகளுக்கிடையில் நிலவிய கசப்புணர்வும்** ஒரு காரணமாக உள்ளது. அதே **ஊரைச் சேர்ந்த குருசாமித் தேவர் மகன் மாரிச்சாமி** என்பவர் சில மாதங்களுக்கு முன் பாரப்பட்டியைச் சேர்ந்த கோனார் சாதிப் பெண்ணைப் பாலியல் பலாத்காரம் செய்த விவகாரத்தில், அந்த ஊரில் வசிக்கும் தங்கப்பாண்டிக் கோனாரின் தூண்டுதல் பேரில் 2.9.98 அன்று மூன்று பேர் சேர்ந்து மாரிச்சாமியை கொலை செய்து விட்டனர். இது தற்கொலை என காவல்நிலையத்தில் பதிவாகி, உறவினர்களால் அடக்கம் செய்யப்பட்டது. கொலை செய்யப்பட்டு இறந்த குருசாமிச் தேவரின் மகன் மாரிச்சாமியின் உறவினர் ஒருவர் கொடுத்த புகாரின் அடிப்படையில் பிணத்தைத் தோண்டி கூறாய்வு செய்து பார்த்தனர். மாரிச்சாமியின் கழுத்து நெறிக்கப்பட்டது தெரிந்து, நெற்கட்டும் செவலைச் சேர்ந்த ராமர், முருகையா மற்றும் தற்போது காவலில் இறந்த கருப்பசாமித் தேவர் மகன் மாரிச்சாமி ஆகியோரைக் போலீஸ் விசாரித்துள்ளது. இதற்குப் பயந்து மூவரும் தலைமறைவாகிவிட்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இரு வாரங்களுக்கு முன்பாக திருமணம் முடித்திருந்த மாரிச்சாமி மட்டும் மீண்டும் வீட்டுக்கு வந்து விட்டார். இந்நிலையில் 13.9.98 இரவு போலீஸ் துணைக்கண்காணிப்பாளர் பிரகாசம் (மற்றும் வாசுதேவநல்லூர் ஆய்வாளர் விஜயராகவன்) ஆகியோரின் தலைமையில் மாரிச்சாமியின் வீட்டுக்கு வந்த போலீசார் விசாரணைக்கென அவரைக் கூட்டிச் சென்றுள்ளனர். செப்டம்பர் 14ம் தேதி அன்று மற்ற இருவரில் ஒருவரான ராமர் கைதாக, மூன்றாவது நபரான முருகன் என்பவர் போலீஸ்நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

15ம்தேதி மாரிச்சாமியின் தந்தை பிரமுகர்களுடன் சென்று கேட்டபோது ஆய்வாளர் விஜயராகவன் இன்னும் மாரிச்சாமியை விசாரிக்க வேண்டியுள்ளது எனக்கூறியுள்ளார். அன்றும், மறுதினமும் (15, 16 தேதிகளில்) போலீசார் அவரை அடித்து பூட்ஸ்காலால் மிதித்து லத்தியால் மாரிச்சாமியின் பிறப்புறுப்பிலும் பலமாக அடித்துள்ளனர். அவர் வலிதாளாமல் தங்களைக் கொலை செய்யத் தூண்டியது தங்கபாண்டிக்கோனார்தான் எனக்கூறியுள்ளார். இதைக்கேட்ட கோனார் இனத்தைச் சேர்ந்த போலீசார் முத்துச்சாமி என்பவர் தலைமைக் போலீசார் குட்டித்துரையையும் சேர்த்துக் கொண்டு, "கோனாரை இதில் இழுக்காதே, நீதான் செய்தாய் என ஒத்துக்கொள்," என்று கூறி, அடித்துள்ளனர். அன்று மதியம் மூன்று மணிக்கு திருநெல்வேலி மாவட்ட கண்காணிப்பாளர் கரண்சின்கா சங்கரன் கோவில் போலீஸ்நிலையத்திற்கு வந்துள்ளார். அவரும் மாரிச்சாமியைப் பார்க்க அவரது உறவினர்களுக்கு அனுமதி மறுத்து விட்டார். மாலை ஆறு மணிக்கு மாரிச்சாமி மரணமடைந்துள்ளார். இத்தகவலை போலீசார் இரவு 9 மணி வரை மறைத்து விட்டு, அங்கு வந்த ஊராட்சி மன்ற உறுப்பினரிடம் மாரிச்சாமி கழிவறையில் தூக்குப் போட்டு இறந்து விட்டதாகக் கூறி சடலத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு கூறியுள்ளனர். மாரிச்சாமியின் மரணம் குறித்து வருவாய் கோட்டாட்சியரால் விசாரிக்கப்பட்டு சடலக் கூறாய்வுக்குப் பின் எரியூட்டப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஆய்வாளர் விஜயராகவன் சார்பு ஆய்வாளர் கோட்டைச்சாமி உட்பட எட்டுப்பேர் இடைநீக்கம் செய்யப்பட்டனர்.

**கண்டறிந்தவையும், பரிந்துரைகளும்**

- பாரப்பட்டி தங்கப்பாண்டிகோனாருடைய தூண்டுதலின் பேரில் போலீஸ் துணைக்கண்காணிப்பாளர் பிரகாசம், ஆய்வாளர் விஜயராகவன் மற்றும் போலீசார் குட்டித்துரை, முத்துசாமி ஆகியோர் தாக்கியதால்தான் மாரிச்சாமி மரணமடைந்துள்ளார்.

- போலீஸ் காவலில் விசாரணைக் கைதியாக இருக்கும்போது தாக்கப்பட்டு மரணமடைந்த மாரிச்சாமியின் குடும்பத்தாருக்கு அரசு இழப்பீடு வழங்க வேண்டும். மாரிச்சாமியின் மரணத்திற்குக் காரணமான அதிகாரிகள் மற்றும் போலீசார் மீது குற்ற வழக்கு தொடர வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## 6. தர்மபுரி சிங்காரக் கோட்டை - முனுசாமி

தர்மபுரி மாவட்டம் ஊத்தங்கரை அருகிலுள்ள ஜான்கென்னடி நகரில், முனுசாமி (வயது 47) என்பவர் (தலித்) தனது மனைவி, மற்றும் குழந்தைககளுடன் அரசு புறம்போக்கு நிலத்தில் குடிசை போட்டு கூலி வேலை செய்துவந்தார். உயர் சாதியினர் இவரது வீட்டைக் காலி செய்ய வைக்கவேண்டும் என்பதற்காக, முனுசாமி கள்ளச்சாராயம் காய்ச்சி விற்கிறார் என வதந்தியைப் பரப்பி விட்டுள்ளனர். அதனால் 7.10.98 அன்று குடிபோதையில் வந்த முனுசாமி, நாயுடு மக்கள் வசிக்கும் பகுதியில் சென்று சத்தம் போட்டுள்ளார்.

அடுத்த நாள் எட்டாம் தேதி காலை ஊர்த்தலைவர் பிரபாகரன் நாயுடு தலைமையில் முனுசாமியைக் கம்பத்தில் கட்டிவைத்து அடித்துள்ளனர். பத்துமணி அளவில் அவரை அவிழ்த்துவிட்டு வீட்டுக்கு அனுப்பி விட்டு அவர்களே போலீஸ் நிலையம் சென்று முனுசாமியின் மீது புகாரும் கொடுத்துள்ளனர். பதினோறு மணியளவில் முனுசாமி குடிசையிலிருந்தபோது அங்கு வந்த சார்பு ஆய்வாளர் சேதுமாதவன் முனுசாமியை ஜீப்பில் ஏற்றி சிங்காரக்கோட்டை போலீஸ் நிலையம் கொண்டு சென்றுள்ளார். அங்கு அவரை நிர்வாணப்படுத்தி மரச்சட்டத்தால் அடித்து பூட்ஸ் கால்களால் மிதித்துள்ளார். இதனைத் தடுக்க வந்த முனுசாமியின் அண்ணன் பெரியதம்பி மற்றும் கேசவன் ஆகியோரையும் போலீசார் பிடித்து வெளியே தள்ளியுள்ளனர்.

பின்னர் முனுசாமி விஷச்சாராயம் விற்றதாக பொய்யாக முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்து அன்று மாலையே ஊத்தங்கரை நீதிமன்ற நடுவர் முன்பு முன்னிலைப்படுத்தி அங்குள்ள கிளைச் சிறையில் அடைத்துள்ளனர்.10.10.98, 13.10.98 ஆகிய தேதிகளில் கிளைச் சிறைக்கு வந்த அரசு மருத்துவர் முனு சாமிக்கு சிகிச்சை அளித்துள்ளார். எனினும் முனுசாமியின் உடல் நிலை மிகவும் கவலைக்கிடமாகவே சேலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளிப்பதற்காக 14ம் தேதி சேலம் மத்திய சிறைக்கு மாற்றியுள்ளனர். 15ம் தேதி காலை 11 மணி அளவில் சேலம் மத்திய சிறையிலிருந்து மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவமனைக்குக் முனுசாமியை கொண்டு சென்றுள்ளனர். ஆனால் செல்லும் வழியிலேயே முனுசாமி மரணமடைந்துவிட்டார்.

அரசு மருத்துவமனையில் நடந்த சடலக் கூறாய்வு ஒளி நாடாவில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மருத்துவமனை போலீஸ் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிந்து, சிறைக் காவலில் ஏற்பட்ட மரணம் என்பதால் கோட்டாட்சியரின் விசாரணைக்கு அனுப்பப்பட்டது.

முனுசாமியின் மனைவி கலா மற்றும் உறவினர்கள் ஏற்கெனவே கொடுத்திருந்த புகாரை வேறு மாதிரியாக எழுதித் தரும்படி கேட்ட கோட்டாட்சியர், யாரிடமும் எதுவும் கூறக்கூடாது என்று மிரட்டியிருக்கிறார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**கண்டறிந்தவைகளும், பரிந்துரைகளும்**

- உயர்சாதி இந்துக்களால் தாக்கப்பட்டும், பின்னர் சிங்காரக் கோட்டை போலீஸ் நிலையத்தில் சார்பு ஆய்வாளர் சேதுமாதவன் மற்றும் போலீசாரால் தாக்கப்பட்டதில் உடல்நலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி சிறைக்காவலில் இருந்தபோது முனுசாமி மரணமடைந்துள்ளார்.
- எனவே, முனுசாமியைச் சித்திரவதை செய்த போலீஸ் அதிகாரிகள் மற்றும் போலீசார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- காவலில் மரணமடைந்த முனுசாமியின் குடும்பத்தினருக்கு அரசு இழப்பீடு வழங்க வேண்டும்.

## 7. பாப்பணப்பட்டு - செங்கேணி

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி போலீஸ்நிலையம் எல்லைக்குட்பட்ட பனையபுரம், பாப்பணப்பட்டு ஆகிய ஊர்களில் சாராய வியாபாரம் செய்பவர் சின்னதுரை. சின்னத்துரைக்கு உணவு எடுத்துச் செல்வது, மதுவிலக்கு அமலாக்கபிரிவினர் சின்னத்துரைமீது போடும் வழக்கை ஏற்றுக் கொள்வது போன்ற வேலைகளை செய்துவந்தவர் பாப்பணப்பட்டு அரிசனக் காலனியிலுள்ள செங்கேணி. (வயது 60). இவர் இடது கை ஊனமுற்றவர்.

18.10.98–ம் தேதி காலை போலீசார் சின்னத்துரையின் வீட்டிலிருந்து செங்கேணியை கூட்டிச் சென்று மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் கைது செய்தனர். அன்று மாலையே செங்கேணியை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி, மூன்று நாட்கள் நீதிமன்றக் காவலில் வைக்க உத்தரவிட்டதன் பேரில் விழுப்புரம் கிளைச்சிறையில் அடைக்கப்பட்டார். மூன்றாவது நாள் (21–ம் தேதி) செங்கேணி யுடன் பாதுகாப்பிற்குச் செல்வதற்கு போலீசார் இல்லையென்ற காரணத்தினால் அவர் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லப்படவில்லை. இந்நிலையில் பகல் 12 மணிக்கு நோய்வாய்ப்பட்ட செங்கேணியை விழுப்புரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு மதியம் ஒருமணியளவில் செங்கேணி மரணமடைந்து விட்டார்.

செங்கேணி மரணமடைந்ததை அறிந்த உறவினர்கள் பஞ்சாயத்துத் தலைவர் ஞான தேசிகனுடன் மருத்துவமனை சென்று பார்த்தபோது அவரது இடது நெற்றியிலும், இரண்டு முழங்கால்களிலும் பலத்த காயங்கள் இருந்திருக்கின்றன. இதன் தொடர்ச்சியாக போலீசார் மீது நடவடிக்கைக் கோரி மக்கள் சாலை மறியல் செய்தனர். மாவட்ட ஆட்சியர் வந்து பேசிய பின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மக்களது கோரிக்கைப்படி சடலக்கூறாய்வு சென்னை பொது மருத்துவமனையில் நடத்தப்பட்டது. கிளைச்சிறை கண்காணிப்பாளர் கொடுத்த புகாரின் அடிப்படை – யில் மரணத்திற்கான காரணம் அறிய கோட்டாட்சியர் விசாரணை செய்துள்ளார். கோட்டாட்சியர் செங்கேணி வலிப்பு நோயால் இறந்ததாகக் கூறியுள்ளார். அவரே மற்ற சாட்சிகளையும் விசாரித்துள்ளார்.

**கண்டறிந்தவையும், பரிந்துரைகளும்**

- 18.10.98–ம் தேதி வீட்டிலிருந்து ஆரோக்கியமான நிலையில் கூட்டிச் செல்லப்பட்ட செங்கேணி, நெற்றியிலும், முழங்கால்களிலும் காயமேற்பட்டு 21ம் தேதி மரணமடைந்துள்ளார்.
- போலீசார் வழக்கமாகப் போடும் சாராய வழக்கு என்பதால் இடையில் யாரும் சென்று பார்க்கவில்லை.
- வலிப்பு நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார் என மருத்துவர் சான்றளித்த போதும், மரணத்திற்கு அதுவே காரணமல்ல. மேலும் நீதிமன்றக் காவலில் உள்ள போது சிகிச்சை அளிக்க வேண்டியது சிறைத்துறை அதிகாரிகளின் கடமை.
- கடமை தவறிய அதிகாரிகளுக்காக அரசு பொறுப்பேற்று, செங்கேணியின் குடும்பத்தினருக்கு அரசு இழப்பீடு வழங்க வேண்டும்.

## 8. கோவை - செந்தில் குமார்

கோவை இராணுவக் குடியிருப்பு அழகேசன் சாலையில் இயந்திரப் பணிமனை வைத்திருக்கும் சக்திவேல் என்பவரது மகன் செந்தில்குமார். இவர் போலியோவில் பாதிக்கப்பட்டு ஊனமுற்ற இளைஞராவார் (வயது 26). சக்திவேல் தனது தொழிலில் நட்டம் ஏற்படவே மனைவி, மகள் மற்றும் மகனைக் காப்பாற்ற இயலாமல் கடந்த 27.10.98 அன்று வீட்டை விட்டுச் சென்று விட்டார். மறுதினம், இவர்களது குடும்பத்தாருடன் பேச்சு வார்த்தையின்றி இருந்த பக்கத்து வீட்டு இராசாத்தி என்பவர் எட்டுப்பவுன் தங்கநகைகள் காணவில்லை என சாய்பாபா போலீஸ்நிலையத்தில் வாய்மொழியாக முறையிட்டுள்ளார். அதன் பேரில், செந்தில்குமாரைக் போலீஸ்நிலையம் கூட்டிச் சென்ற காவலர்கள் அவரது ஊனமுற்ற கால்களிலேயே அடித்துள்ளனர்.

செந்தில்குமாரைக் காணவந்த அவரது தாயார் இந்திராணியிடம் போலீசார், செந்தில்குமார் திருடியதாக ஏற்றுக் கொண்டு முப்பத்திரண்டாயிரம் ரூபாய் கொடுத்தால் விட்டு விடுவதாகக் கூறியுள்ளனர். இந்திராணி தனது உறவினர்களிடம் கடன் பெற்று இரவு 12.30 மணிக்கு உறவினர்களுடன் சென்று



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பணம் கொடுத்தபின் சமாதான ஒப்பந்தம் எழுதப்பட்டுள்ளது. அந்த ஒப்பந்தத்தின் நகலைக் கேட்ட செந்தில் குமாரிடம் போலீசார் பொய் வழக்கு போட்டு விடுவதாக மிரட்டி அனுப்பியுள்ளனர்.

அடுத்த நாள் முழுவதும் தனக்கேற்பட்ட அவமானத்தை மற்றவர்களிடம் கூறிக் கவலைப்பட்டுக் கொண்டு செந்தில்குமார் சாப்பிடாமல் இருந்துள்ளார். அதற்கடுத்த நாளும் காலை பதினோரு மணிக்கு செந்தில்குமார் அவரது தங்கை கவிதா காபி கொடுத்த போது குடிக்க மறுத்திருக்கிறார். கவிதா சென்ற சிறிது நேரத்தில் மாடியிலுள்ள தனது அறையிலேயே தூக்கு போட்டுக் கொண்டார். சிறிது நேரத்தில் அங்கு வந்த இந்திராணியின் தங்கை ராதா என்பவர் செந்தில்குமார் தூக்கில் தொங்குவதைப் பார்த்துள்ளார்.

செந்தில்குமாரின் சடலக் கூறாய்வுக்குப் பிறகு அவரது குடும்பத்தினர் உடலை அடக்கம் செய்தனர். தன் மகன் மரணத்திற்குக் காவலர்கள்தான் காரணம், எனவேதான், ஆட்சித்தலைவர் அலுவலகம் முன்பு தீக்குளிக்கப் போவதாக இந்திராணி அறிவித்ததின் பேரில், பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார் போலீஸ் உதவி ஆணையாளர் அருணாசலம். பின்னர் அவரது உத்தரவுப்படி குற்ற விசாரணை முறைச் சட்டம் பிரிவு 174–ன் படி, சந்தேக மரணம் என்று சாய்பாபா போலீஸ் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டது. மரணமடைந்த செந்தில்குமார் தூக்க மாத்திரைகள் சாப்பிடுபவர், மனநலம் பாதிக்கப்பட்டவர், அதனால் தற்கொலை செய்து கொண்டார் என்பதாக சடலக்கூறாய்வு பொய்யாகப் புனைந்து வழக்கை முடித்துள்ளனர்.

**கண்டறிந்தவையும், பரிந்துரைகளும்**

- திருட்டுப் பொருள் கிடைக்காத பட்சத்தில், திருடியிருக்கக்கூடும் என்ற சந்தேகத்தின் பேரில் போலியோவால் பாதிக்கப்பட்டவர் என்பதையும் பாராமல் ஈவு இரக்கமின்றி செந்தில்குமார் சாய்பாபா போலீஸ் நிலையத்தில் வைக்கப்பட்டு போலீசாரால் கடுமையாக தாக்கப்பட்டுள்ளார்.
- திருடியது செந்தில்குமார்தான் என்று உறுதி செய்யப்படாத நிலையில், போலீசார் அவரது தாயாரை மிரட்டி ரூ.32,000– பெற்றுள்ளனர்.
- மேற்கண்ட சம்பவங்கள் ஏற்படுத்திய அதிர்ச்சியால் மன உளைச்சலுக்கு ஆளான செந்தில்குமார் மறுதினம் தூக்கிலிட்டுக் கொண்டார். அவரது தற்கொலைக்கு போலீசாரே காரணம். எனவே, தற்கொலைக்குத் தூண்டு தலாய் இருந்த, சித்திரவதை செய்த, சட்டவிரோதமாகப் பணம் பறித்த போலீசார் பணி நீக்கம் செய்யப்பட்டு, அவர்கள் மீது மனித உரிமை பாதுகாப்புச்சட்டம் மற்றும் இந்திய தண்டனைச் சட்ட பிரிவுகளின் கீழ் வழக்கு தொடர வேண்டும். மரணமடைந்த செந்தில்குமாரின் குடும்பத்தினருக்கு இழப்பீடு வழங்க வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## 9. செட்டி திருக்கோணம் - பாண்டியன்

பெரம்பலூர் மாவட்டம், அரியலூர் வட்டம் செட்டி திருக்கோணத்தைச் சேர்ந்த பாண்டியன் (வயது 21) என்பவர் இவர் விக்கிரமங்கலம் போலீஸ் நிலையத்திற்கு மாதம் ரூபாய் 5000 மாமூல் கொடுத்துவிட்டு சாராயம் விற்று வந்திருக்கிறார். இவருடன் சேர்ந்து மற்ற சிலரும் சாராயம் விற்று வந்துள்ளனர்.

கடந்த 98–ம் ஆண்டு நவம்பர் மாதம் 9–ம் தேதி மாலை ஆறுமணிக்கு ரூபாய் ஐயாயிரத்தை எடுத்துக் கொண்டு பாண்டியன் விக்கிரமங்கலம் போலீஸ் நிலையம் சென்றுள்ளார். ஏற்கெனவே அவர் மீது பல சாராய வழக்குகள் உள்ளன. பாண்டியனுக்கும், போலீசாருக்கும் இடையேயிருந்த உடன்பாட்டில் ஏதோ பிரச்சனை காரணமாக, போலீசார் பாண்டியனை அடித்துள்ளனர். அப்போது போலீஸ் நிலையத்திற்கு வந்த உள்ளிகுடியைச் சேர்ந்த ஒருவரும், சாத்தம் பாடியைச் சேர்ந்த பெண் ஒருவரும் வேறு புகார் கொடுக்க வந்த பலரும் இதைப் பார்த்திருக்கிறார்கள்.

பாண்டியனால் நிற்கக்கூட முடியாத நிலையில் நான்காம் எண் நகரப்பேருந்தை போலீஸ்காரர் சின்னத்துரையும் போலீசாருக்குத் தகவல் அளிக்கக்கூடிய ரெங்கராஜ் என்பவரும் இணைந்து பாண்டியனை ஏற்றியுள்ளனர். பாண்டியனின் நிலைகண்டு அவரைப் பேருந்தில் ஏற்ற நடத்துநர் மறுத்துள்ளார். நடத்துநரை அதட்டி, பாண்டியனை கட்டாயப்படுத்தி ஏற்றிய போலீஸ்காரர் சின்னத்துரை பின் தொடர்ந்து வருவதாகக்கூறி பேருந்திலிருந்து இறங்கிக் கொண்டார். பேருந்து விக்கிரமங்கலம் கடைவீதியை அடைந்தபோது பாண்டியன் மரணமடைந்துவிடவே, ரெங்கராஜ் பாண்டியனின் உடலை பேருந்திலிருந்து இறக்கி, சாலையில் கிடத்தி வேட்டியால் மூடிவிட்டுச் சென்றுவிட்டார்.

இரவு ஒன்பது மணி அளவில் விக்கிரமங்கலம் அம்பிகாபதி அச்சக உரிமையாளரும், மற்றொருவரும் மோட்டார் சைக்கிளில் செட்டி திருக்கோணம் வந்து பாண்டியன் மனைவி ஜெயந்தியிடம், விக்கிரமங்கலம் கடைவீதியில் பாண்டியன் இறந்து கிடப்பதாகக் கூறியுள்ளனர். அதைக்கேட்டு, பாண்டியனின் தந்தை, தாயார் மற்றும் தனையன் ஆகியோர் நான்கு கிலோமீட்டர் தொலை விலுள்ள விக்கிரமங்கலத்துக்கு நடந்து சென்றுள்ளனர். வழியில் அம்பலவார் கோட்டை எனுமிடத்தில் பேருந்துக்காக நின்றபோது, இச்சம்பவத்தைக் கேள்விப் பட்ட மக்கள் அந்த இடத்திலேயே கூடி மறியல் செய்துள்ளனர். அப்போது அங்கு லாரி ஒன்றில் குடி போதையில் வந்த போலீஸ்காரர் சின்னதுரை தாங்கள் தான் பாண்டியனை அடித்ததாகக் கூறி அதனை எழுதியும் கொடுத்துள்ளார்.

சிறிது நேரத்தில் அங்கு வந்த போலீசார் கூடியிருந்தவர்களை அடித்து விரட்டியுள்ளனர். இதனைத் தொடர்ந்து விக்கிரமங்கலம் போலீஸ்நிலையத்தை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நோக்கிச் சென்ற மக்கள் போலீஸ்நிலையத்தின் மீது கல்லெறிந்து சேதப்படுத்தியுள்ளனர். நவம்பர் 10–ம் தேதி காலை ஆய்வாளர் மற்றும் போலீசாரை பணியிலிருந்து இடைநீக்கம் செய்தபிறகே அரியலூர் அரசு மருத்துவமனையில் சடலக்கூறாய்வு செய்ய மக்கள் அனுமதித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து செட்டி திருக்கோணம் முன்னாள் பஞ்சாயத்துத் தலைவர் உட்பட நூறுபேர் மீது, போலீசாரைத் தாக்கி கொலை செய்ய முயற்சித்ததாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து பத்துப்பேரைக் கைது செய்துள்ளனர். சந்தேகமான முறையில் பாண்டியன் மரணமடைந்ததாக ஒரு முதல் தகவல் அறிக்கையையும் போலீசார் பதிவு செய்துள்ளனர்.

இச்சம்பவத்தினை உடையார்பாளையம் கோட்டாட்சியர் புலன் விசாரணை செய்துள்ளார். சார்பு ஆய்வாளர் வீரபாண்டியன், உடையார்பாளையம் ஆய்வாளர் கோபால் மற்றும் சில போலீசாரும் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

### *கண்டறிந்தவையும், பரிந்துரைகளும்*

- சாராயம் விற்பவர்களிடம் லஞ்சம் வாங்குவதிலும், போலீசாரின் கையே மேலோங்கியிருக்கும் என்பதைக் காட்டவே, பாண்டியன் விக்கிரமங்கலம் போலீசாரால் தாக்கப்பட்டு, குற்றுயிராக்கப்பட்ட நிலையில் ரெங்கராஜின் உதவியோடு பேருந்தில் மரணமடைந்து விக்கிரமங்கலம் கடைவீதியில் பிணமாக அனாதரவாகக் கிடத்தப்பட்டிருக்கிறார்.
- பாண்டியனை விக்கிரமங்கலம் போலீஸ் நிலையத்தில் தாக்கிய போலீசார் மற்றும் போலீஸ் நிலைய பொறுப்பு அதிகாரியான சார்பு ஆய்வாளர் ஆகியோர் பணி நீக்கம் செய்யப்பட்டு அவர்கள் மீது இந்திய தண்டனைச் சட்டம் மற்றும் மனித உரிமை பாதுகாப்புச் சட்ட பிரிவுகளின்கீழ் வழக்குத் தொடரவேண்டும்.
- மரணமடைந்த பாண்டியனின் குடும்பத்தாருக்கு இழப்பீடு வழங்க வேண்டும்.

## 10. சென்னை - பாலு

சென்னை எண்ணூரைச் சேர்ந்த பாபு என்ற பாலு (வயது 25) மீனவர் இனத்தைச் சேர்ந்தவர். சென்னை மாநகராட்சியில் துப்புரவுத் தொழிலாளியாகப் பணியாற்றி வந்தார். நாயுடு இனத்தைச் சேர்ந்த இவர் அம்முலு என்பவரை காதல் திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு 2 பெண் குழந்தைகள் உள்ளனர்.

திருப்பத்தூர், காசிமேடு, எண்ணூர் ஆகிய போலீஸ்நிலையங்களில் இவர் மீது பல திருட்டு வழக்குகள் பதியப்பட்டுள்ளன. இந்நிலையில் கடந்த 2.11.98 இரவு 'ஜெயின் ஜூவெல்லர்ஸ்' என்னும் நகைக்கடையில் இரண்டு லட்சத்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


ஐம்பதாயிரம் மதிப்புள்ள தங்கம், வெள்ளி நகைகள் காணாமல் போய்விட்டதாக 3ம் தேதி இரவு உக்கம்சந்த் என்பவர் கொரட்டூர் போலீஸ்நிலையத்தில் புகார் செய்துள்ளார். சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர் மதியழகன் என்பவர் கொடுத்த தகவலின்படி நவம்பர் 11ம்தேதி காலை, பாலுவின் மனைவி அம்முலுவின் ஊரான தாழங்குப்பத்தில் இருந்த பாலுவைக் கைது செய்து, கொரட்டூர் போலீஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றுள்ளனர்.

12ம் தேதி காலை பாலுவை போலீசார் வீட்டுக்குக் கூட்டி வந்த போது, அவரது கால்கள் வீங்கியிருந்தன. திருடிய நகைகள் எங்கே? எனக்கேட்டு மனைவி அம்முலு, தாயார் வள்ளியம்மாள், பாலுவின் தங்கை கோமளம் ஆகியோரது சேலைகளை உருவி, தெருவில் விட்டு அடித்துள்ளனர். அங்கு ஓடிவந்த பாலுவின் மகள் இரண்டு வயதுச் சிறுமியையும் எட்டி உதைத்துள்ளனர். பாலுவின் வாயில் கம்பால் அடித்ததில் ரத்தம் கொட்டியுள்ளது. போலீசாரிடம் அம்முலு தன் கணவர் வீட்டில் வைத்திருந்த 11 நகைகளை எடுத்துக் கொடுத்து "யாரையும் அடிக்க வேண்டாம்"எனக்கெஞ்சியுள்ளார். மூன்று மாதக் குழந்தையின் காலில் போட்டிருந்த வெள்ளித் தண்டையையும், வீட்டில் இருந்த டேப் ரெக்கார்டரையும் போலீசார் எடுத்துக்கொண்டு, பாலுவை காவல்நிலையத்திற்கு கூட்டிச் சென்றுள்ளனர்.

அடுத்தநாள் 13ம் தேதியும் பாலுவை வீட்டிற்குக் கூட்டி வந்து, அவரது தாயாரையும் மனைவியையும் அடித்து, மனைவி அம்முலுவிடம் பத்தாயிரம் ரூபாய் லஞ்சம் கேட்டுள்ளனர். பணம் கிடைக்காததால் பாலுவை மீண்டும் போலீஸ் நிலையம் கூட்டிச் சென்றுள்ளனர். 14ம் தேதி காலை 11 மணியளவில், பாலுவின் வீட்டருகே உள்ள நாராயணசாமி என்பவருக்கு, பாலு தூக்குப் போட்டு இறந்து விட்டதாக தொலைபேசி வழியே போலீசார் தகவல் கூறியுள்ளனர். இத்தகவல் கிடைத்து போலீஸ்நிலையத்திற்குச் சென்ற மனைவி அம்முலுவிடம் பாலுவின் உடலைக் காட்டாமல் சடலக்கூறாய்வுக்கு அனுப்பி விட்டனர். இரவு 8.30 மணியளவில் போலீசார் அவரிடம் வெற்றுத்தாள்களில் கையெழுத்து பெற்றுக் கொண்டு இரவு 11 மணியளவில் சடலத்தைக் கொடுத்துள்ளனர். அடக்கச் செலவுகளுக்காக அம்முலுவிடம் ஆய்வாளர் பன்னீர் செல்வம் ரூ.2,700– ஐயும் கொடுத்துள்ளார்.

பாலுவின் உடலை சடலக் கூறாய்வு செய்த டாக்டர் செசிலியாவின் கணவர் போலீஸ் துணை ஆணையாளர். மற்றொரு டாக்டர் சாந்தக்குமார் போலீஸ் பயிற்சிக் கல்லூரி பேராசிரியர். பல போலீஸ் நிலைய மரணங்களில் போலீசாருக்கு ஆதரவாகப் போலி அறிக்கைகள் தயாரித்த குற்றச்சாட்டுகளும் இவர்கள் மீது உள்ளன. இச்சம்பவம் தொடர்பான செய்திகள் வெளியானதைத் தொடர்ந்து சார்பு ஆய்வாளர்கள் சக்கரவர்த்தி, தங்கம் உட்பட ஏழு போலீசார் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**கண்டறிந்தவையும், பரிந்துரைகளும்**

- 11.11.98 இரவும் அதன்பிறகும் கொரட்டூர் போலீஸ் நிலையத்தில் வைத்து போலீசார் சித்திரவதை செய்ததாலேயே பாலு மரணமடைந்துள்ளார்.
- பாலுவை விசாரிப்பதாகக்கூறி மனைவி, தாய், தங்கை, ஆகியோரை போலீசார் அடித்து அவமானப்படுத்தியுள்ளனர். நகைகளைப் பெற்று வீட்டிலிருந்த பொருட்களை எடுத்துக் கொண்ட பின்னரும் லஞ்சம் கேட்டுள்ளனர்.
- சட்டத்தால் அனுமதிக்கப்பட்ட 24 மணி நேரத்திற்குப் மேலாக மூன்று நாட்கள் பாலுவை சட்ட விரோதக் காவலில் வைத்துள்ளனர்.
- போலீஸ் காவலில் உள்ளபோது மரணமடைந்தால் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகளான சடலக் கூறாய்வை ஒளிநாடாப் பதிவு செய்தல் மற்றும் தேசிய மனித உரிமை ஆணையத்திற்கு அறிக்கை அளித்தல் ஆகிய எதுவும் இந்த வழக்கில் பின்பற்றப்படவில்லை.
- பாலுவின் மரணத்திற்குப் பொறுப்பான போலீசார் கைது செய்தபோது காவல் குறிப்பு தரவில்லை.
- காவலர்கள் நிரந்தரமாகப் பணி நீக்கம் செய்யப்பட வேண்டும்.
- சட்டவிரோதமாக பாலுவை காவலில் வைத்ததற்காகவும், சித்திரவதை செய்து, கொலை புரிந்த குற்றத்திற்காகவும், சம்பந்தப்பட்ட போலீசார் மீது மாவட்ட மனித உரிமை நீதிமன்றத்தில் வழக்குத் தொடர வேண்டும்.
- மரணமடைந்த பாலுவின் குடும்பத்தாருக்கு இழப்பீடு வழங்க வேண்டும். தவறிழைத்த அதிகாரிகள் அத்தொகையை அவர்களின் அரசுக்கு ஈடு அவர்களின் சம்பளப் பணத்திலிருந்து கட்ட வகை செய்ய வேண்டும்.

## 11. பாஸ்கர் - திருவெறும்பூர்

திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் போலீஸ்நிலையத்தில் 25.11.1998ம் தேதி மதியம் விசாரணைக்காக சரணடைந்த ஆட்டோ ஒட்டுனர் பாஸ்கர் அன்று மாலையே திருச்சியிலுள்ள தனியார் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் இறந்து விட்டார்.

வேங்கூரைச் சேர்ந்த கலியபெருமாள் மகன் பாஸ்கர் (வயது 23) ம.தி.மு.க. உறுப்பினர். திருவெறும்பூர் பஞ்சாயத்து ஒன்றிய அலுவலகம் முன்புள்ள ஆட்டோ நிறுத்தத்தில் சொந்தமாக ஆட்டோ வாங்கி ஓட்டி வந்துள்ளார். இவர் சி.ஐ.டி.யு. தொழிற்சங்க உறுப்பினராகவும் இருந்துள்ளார். சில மாதங்களுக்கு முன், ஓட்டுநர்களிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாட்டின் காரணமாக, அங்கு பா.ஜ.க.வின் பி.எம்.எஸ். தொழிற்சங்கம் ஏற்படுத்தப்பட்டது.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்நிலையில் 15.11.98 அன்று ஆட்டோவை வரிசைக்கிரமமாக நிறுத்துவதை முன்னிட்டு பாஸ்கருக்கும், பி.எம்.எஸ். தொழிற்சங்கத்தைச் சேர்ந்த முருகேசனுக்கும் வாக்குவாதம் நடந்துள்ளது.

அடுத்தநாள் 16ம் தேதி பாஸ்கரும் மற்றும் இரு ஓட்டுநர்களும் காலைத் திரைக்காட்சிக்கு சென்றிருந்த சமயம், அவரது நண்பர்களான பாலு மற்றும் சரவணன் என்போர் குடிபோதையுடன் ஆட்டோவில் அமர்ந்திருக்கின்றனர். முன்பு கூறிய முருகேசனின் நண்பரது தங்கை ஒருவர் ஒரு வேலை நிமித்தமாக அங்கு வந்தபோது பாலுவும், சரவணனும் அவரைக் கேலி செய்துள்ளனர். அவர்களை முருகேசன் கண்டித்துள்ளார். இதனைக் கேள்விப்பட்ட பாஸ்கர் அடுத்தநாள் 17ம் தேதி காலை முருகேசனை அடித்துள்ளார். இது குறித்து சி.ஐ.டி.யு. துணைத்தலைவர் ஜலீலிடம் கூறிய முருகேசன், போலீஸ்நிலையத்திலும் முறையிட் –டுள்ளார். இதனைப் புகாராகப் பதிவு செய்யாமல் அடுத்தநாள் இரு சங்கத்தினர் பேச்சு வார்த்தைக்கு வரும்படி சார்பு ஆய்வாளர் சாமிராஜ் கூறியுள்ளார்.

18ம் தேதி காலையில் ஜலீல், முருகேசன் பாஸ்கரன் ஆகிய இருவரையும் விசாரித்துக் கொண்டிருந்தபோதே முருகேசன் பாஸ்கரை அடித்துவிட்டதால் போலீஸ்நிலையம் சென்றுள்ளனர். போலீஸ் துணைக்கண்காணிப்பாளர் ஆய்வுக்கு வர இருப்பதால் அவர்களை அடுத்தநாள் வரும்படி ஆய்வாளர் கூறியுள்ளார்.

அன்று இரவு பத்து மணியளவில் பி.எம்.எஸ். சங்கத்தின் முருகன் என்பவரது ஆட்டோவை சவாரிக்கு கூட்டிச் சென்ற சிலர் கல்லனை பிரிவு ரோட்டில், முன்பே காத்திருந்த சிலருடன் சேர்ந்து முருகனைத் தாக்கியுள்ளனர். அச்சம்பவம் குறித்து பாஸ்கர் மற்றும் பலர் மீது புகார் பதியப்பட்டது. போலீசாருக்கு பயந்து பாஸ்கர் வேலைக்கு வரவில்லை.

இதனால் இச்சம்பவம் தொடர்பாக பாஸ்கரனை தொடர்ந்து தேடி வந்த போலீசார் அவரது வீட்டிலுள்ளவர்களை மிரட்டியுள்ளனர். 25ம் தேதி காலை பாஸ்கரது உறவினரும், வழக்கறிஞருமான ராமதாஸ் பாஸ்கர் வீட்டுக்கு வந்து போலீஸ்நிலையத்தில் சரணடைந்து நீதிமன்றத்தில் பிணை உத்தரவு பெற்று வந்து விடலாம் ஆலோசனை கூறியதன் பேரில், அவரது ஒன்றுவிட்ட சகோதரர் திமுக பிரமுகர் அங்கராஜ், பாஸ்கர் ஆகிய மூவரும் 11 மணியளவில் போலீஸ் நிலையம் **சென்றனர்.** வழக்கறிஞர் இராமதாசு, சார்பு ஆய்வாளரிடம் "நீங்கள் கூறியபடி ஒப்படைத்து விட்டோம். நீதிமன்றத்தில் ஆஜர் செய்து விடுங்கள்" என்றும், அங்கராஜிடம் ஜாமீனுக்கு ஆவன செய்யவும் கூறியுள்ளார்.

மாலை நான்கு மணியளவில், உடல்நிலை பாதிக்கப்பட்ட பாஸ்கரை 'திருவெறும்பூர் மெடிக்கல் சென்டர்' எனும் தனியார் மருத்துவமனையில் போலீசார் போட்டு விட்டுச் சென்றதாக வேங்கூருக்கு தகவல் வரவே அங்கராஜும், பாஸ்கரின் அண்ணன் ஆனந்தனும் இருசக்கர வாகனத்தில் விரைந்துள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அங்கு ஒரு மேசை மீது சட்டை மற்றும் கால்சட்டையுடன் சுயநினை – வற்றுக் கிடந்த பாஸ்கரின் மூக்கிலும், முழங்காலிலும் இரத்தமும், ஆண்குறியில் வீக்கமும் இருந்துள்ளது. அப்போது சார்பு ஆய்வாளர் ஏற்பாடு செய்த காரில் திருச்சி ஸீ ஹார்ஸ் மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். செல்லும் வழியில் பாஸ்கர் உயிர் பிரிந்தது. போலீசார் அவரது பிரேதத்தை அத்தனியார் மருத்துவ மனையின் திண்ணையிலேயே வைத்துவிட்டுச் சென்று விட்டனர். இதனைத் தொடர்ந்து பாஸ்கர் நஞ்சுண்டு இறந்து விட்டார் என்று காவல்துறை வழக்குப் பதிவு செய்ய முயற்சித்தது.

இதனைக் கேள்விப்பட்ட மக்கள் நீதிகோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அங்கு வந்த திருச்சி கோட்டாட்சியர் மக்களை சமாதானம் செய்து விசாரணையை மேற்கொண்டார். மறுதினம் காலை நடந்த சடலக்கூறாய்வு ஒளிநாடாப் பதிவு செய்யப்பட்டுள்ளது. சார்பு ஆய்வாளர் மற்றும் சில போலீசார் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

***கண்டறிந்தவையும், பரிந்துரைகளும்***

- சம்பவத்தன்று பகல் 12 மணிக்கு வழக்கறிஞர் மற்றும் உறவினரோடு திருவெறும்பூர் போலீஸ் நிலையத்தில் சரணடைந்த பாஸ்கரனை, ஆய்வாளர் பாலகிருஷ்ணன் முன்னிலையில் அவரது ஒப்புதலுடன் சார்பு ஆய்வாளர் சாமிராஜ், பயிற்சியிலிருந்த சார்பு ஆய்வாளர் ஒருவர் மற்றும் கணேசன் உட்பட மற்ற போலீசார் தாக்கியதில் பாஸ்கரனுக்கு மூக்கு, முழங்கால், ஆண்குறி மற்றும் பிற இடங்களில் காயங்களும், வீக்கமும், உடலெங்கும் உட்காயங்களும் ஏற்பட்டு முறையான சிகிச்சையின்றி மரணமடைந்துள்ளார். போலீசார் பாஸ்கரனை அடித்ததை வேங்கூர் கலிய மூர்த்தியும் மற்றும் இருவரும் பார்த்துள்ளனர்.
- ஜாமீன்தாரர்களை ஏற்பாடு செய்ய வேங்கூர் சென்ற அங்குராஜ் பகல் 1 மணிக்கு, போலீஸ் நிலையத்திற்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது பேசிய வழக்கறிஞர் இராமதாசு, பாஸ்கரனை இன்று நீதிமன்றம் கொண்டு வர வேண்டாம். எனவே ஜாமீன்தாரர்களை ஏற்பாடு செய்ய வேண்டாம் எனக் கூறியுள்ளார்.
- பாஸ்கரன் மீதான வழக்குத் தொடர்பாக எதனையும் கைப்பற்ற வேண்டிய தேவையோ, மேலும் விசாரிக்க வேண்டிய தேவையோ இல்லாத நிலையில், போலீஸ் நிலையத்தில் பாஸ்கரனை ஒப்படைத்தபோது, அன்றே நீதிமன்றத்தின் காவலுக்கு ஒப்படைப்பதாகக்கூறிய போலீசார் ஒரு மணி நேரத்தில் முடிவை மாற்றக் காரணம் என்ன ?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



- சார்பு ஆய்வாளரும் மற்றும் சில போலீசார் மட்டும் இடைநீக்கம் செய்யப்பட்டது போதாது. மாறாக, ஆய்வாளர் உட்பட அனைவர் மீதும் மாவட்ட மனித உரிமை நீதிமன்றத்தில் வழக்குத் தொடர வேண்டும். வழக்கு முடியும் வரை அவர்களை எங்கும் பணியமர்த்தக்கூடாது.
- மரணமடைந்த பாஸ்கரனின் குடும்பத்தினருக்கு அரசு தக்க இழப்பீடு அளிக்க வேண்டும்.

## 12. மேகளத்தூர் - இராஜேந்திரன்

தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு அருகே உள்ள மேகளத்தூரில் கூலி வேலை செய்து வந்தவர் இராஜேந்திரன் என்பவர் (வயது 35). இவர் தலித் சமூகத்தைச் சேர்ந்தவர். இவரது மனைவி மலர்க்கொடியின் ஊர் திருக்காட்டுப் பள்ளி. அங்கும் இவர் கூலி வேலைக்காக அடிக்கடி சென்று வருவதுண்டு. 1999ம் வருடம் பொங்கல் விழாவிற்காக திருக்காட்டுப்பள்ளி சென்றிருந்த போது ஜனவரி 13ம் தேதியன்று அருகிலிருக்கும் புது ஆற்காட்டுக்கு சாராயம் குடிக்கச் சென்றிருக்கிறார். அது சமயம் அதிரடி சோதனை நடத்திய நடத்திய ஆய்வாளர் சண்முகம், உதவி ஆய்வாளர் ஸ்டீபன் மற்றும் போலீசார், சாராயம் விற்ற இலட்சுமி, ராஜேந்திரன் உட்பட மூவரைக் கைது செய்துள்ளனர். மற்ற இருவரையும் விட்டு விட்டு இராஜேந்திரனை மட்டும் போலீஸ் காவலில் வைத்து அடித்துள்ளனர்.

15ம் தேதி மாலை, மேகளத்தூரில் பீட்டர் என்பரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்ட போலீசார், இராஜேந்திரன் உடல் மோசமான நிலையில் தஞ்சை அரசு மருத்துவக் கல்லூரி அரசு மருத்துவமனையிலிருப்பதாகக் கூறியுள்ளனர். சிகிச்சையிலிருந்த இராஜேந்திரனுக்கு நெற்றி, ஆணுறுப்பு, தொடை, முழங்கால் ஆகிய இடங்களில் இரத்தக்காயங்கள் இருந்திருக்கின்றன.

16ம் தேதி இராஜேந்திரன் மரணமடைந்து விட்டதாக அரசு மருத்துவ அதிகாரி தொலைவரி செய்தி மூலம் தெரிவித்திருக்கிறார். போலீஸ் காவல்நிலையத்தில் 14ம் தேதி புகார் பதிவு செய்து, நீதிமன்றத்தில் அடைப்பு உத்தரவு பெறுவதற்கு முன் மேகளத்தூரைச் சேர்ந்த இருவர் பிணையில் கூட்டிச் சென்றதாக ஆவணங்களைத் தயாரித்துள்ளனர். இராஜேந்திரனை மனிதாபிமான அடிப்படையில்தான் மருத்துவமனையில் சேர்த்து, தகவல் கொடுத்ததாக என்கின்றனர் போலீஸ் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

அன்று காலையே திருக்காட்டுப்பள்ளி போலீஸ் நிலையத்திற்கு முன்பு பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். சடலக் கூறாய்வு ஒளிநாடாவில் பதியப்பட்டுள்ளது. அன்று இரவே இரண்டு வேனில் வந்த போலீசாரின் பாதுகாப்புடன் உடல் அடக்கம் செய்யப்பட்டது. இச்சம்பவத்தில் கோட்டாட்சியரின் விசாரணை நடத்தப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**கண்டறிந்தவையும், பரிந்துரைகளும்**

- 13–ம் தேதியே இராஜேந்திரனை கைது செய்த திருக்காட்டுப்பள்ளி போலீஸ்நிலைய போலீசார் அவரது கைது பற்றி அதே ஊரிலுள்ள அவரது மனைவியின் பெற்றோர் வீட்டில் தெரிவிக்கவில்லை. மாறாக 15–ம் தேதி இராஜேந்திரனின் சொந்த ஊரான மேகளத்தூருக்கு தெரிவித்துள்ளனர். போலீசார் அடித்ததால் ஏற்பட்ட பலமான இரத்தக்காயங்களால்தான் இராஜேந்திரன் மரணமடைந்துள்ளார்.
- 16–ம் தேதி காலை மரணமடைந்த ராஜேந்திரனின் மனைவி மலர்க்கொடியை காரில் போலீஸ்நிலையம் கூட்டிச் சென்று, தனது கணவருக்கு வலிப்பு நோய் வரும், அதனால்தான் இறந்தார் எனக்கூற வேண்டுமென மிரட்டி, வெற்று வெள்ளைத்தாள்களில் கையெழுத்துக்கள் பெற்றுள்ளனர்.
- சடலக்கூறாய்வு ஒளிப்பதிவு செய்யப்பட்ட போதிலும் தஞ்சை மாவட்ட ஆட்சியர் மணிபாரதி கொடுத்த உறுதிமொழிப்படி இதுவரை எந்த போலீஸ் அதிகாரி மீதோ, போலீசார் மீதோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை.
- சம்பவத்தன்று போராட்டம் நடத்திய பஞ்சாயத்துத் தலைவர்கள் மற்றும் பல்வேறு அரசியல் கட்சிப் பிரமுகர்களைத் திருப்திப்படுத்தும் தற்காலிக நடவடிக்கைகளாகவே ஆட்சியர், கோட்டாட்சியர் ஆகியோரது அணுகு முறைகள் உள்ளன. ஒளிநாடாவில் பதிவு செய்யப்பட்ட சடலக்கூறாய்வு பற்றிய அறிக்கையானது தேசிய ஆணையத்திற்கு அனுப்பப்படவில்லை. அறிக்கையே தயாரிக்கப்படவில்லை.
- ஆய்வாளர் சண்முகம், சார்பு ஆய்வாளர் ஸ்டீபன் மற்றும் போலீசார் மீது மாவட்ட மனித உரிமை நீதிமன்றத்தில் சட்ட விரோதக் போலீஸ் காவலில் வைத்தது, கொடுங்காயங்கள் ஏற்படுத்தியது. உச்சநீதிமன்ற வழிகாட்டுதல் – களை மீறியது ஆகிய குற்றங்களுக்காக விசாரிக்கப்பட வேண்டும்.
- மரணமடைந்த இராஜேந்திரனின் மனைவி மலர்க்கொடி மற்றும் எட்டுவயது மகள் வனிதாவிற்கும் இழப்பீட்டையும் வேலை வாய்ப்பு மற்றும் கல்வியிலுள்ள அரசு சலுகைகளையும் அரசு வழங்க வேண்டும்.

## 13. பாண்டி - திருப்பரங்குன்றம்

99–ம் ஆண்டு மார்ச் 15–ம் தேதி பகல் பன்னிரெண்டு மணி அளவில் திருப்பரங்குன்றம் சார்பு ஆய்வாளர் சண்முகநாதன் மற்றும் காவலர்கள் திருமலையூர் பகுதிக்கு ரோந்து சென்றுள்ளனர். அங்கு சீட்டு விளையாடிக் கொண்டிருந்த சிலர் போலீஸ்காரர்களைக் கண்டு ஓடியுள்ளனர். அப்போது அவ்வழியே வந்த கல்குவாரியில் தொழிலாளியாக வேலை பார்க்கும் சின்னப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாண்டி (வயது 45) என்பவரை சார்பு ஆய்வாளர் கம்பால் அடித்துள்ளார். சுப்பையா உட்பட மற்ற போலீசாரும் தாக்கியுள்ளனர். சரமாரியாக அடித்ததில் பலத்த காயமடைந்த பாண்டி அதே இடத்தில் மயங்கி விழுந்துள்ளார். பொதுமக்கள் அவரை மதுரை இராசாசி அரசு மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். இதனைத் தொடர்ந்து பொதுமக்கள் மார்க்சிஸ்ட் கட்சியின் தலைமையில் நீதி கேட்டு மறியல் செய்தனர். இதனால் சார்பு ஆய்வாளர் இடமாற்றம் செய்யப்பட்டார். இந்நிலையில் சிகிச்சை பலனின்றி 18–ம் தேதி காலை பாண்டி மரணமடைந்து விட்டார். அவருக்கு மனைவி, இரண்டு மகள்கள், ஒரு மகன் உள்ளனர்.

ஏப்ரல் 13–ம் தேதி மதுரை கோட்டாட்சியர் திரு. செல்லையன் விசாரணை நடத்தினார்.

**கண்டறிந்தவையும், பரிந்துரைகளும்**

- தற்செயலாக எதிரே வந்த பாண்டியை பிடித்துச் சூதாடிவிட்டு ஓடுகிறாயா? என்று கேட்டு தெருவில் வைத்து திருப்பரங்குன்றம் சார்பு ஆய்வாளர் சண்முகவேல், சுப்பையா மற்றும் சில போலீசார் கம்பால் அடித்ததில் அந்த இடத்திலேயே மயக்கமுற்று விழுந்த பாண்டி சிகிச்சை பலனின்றி மூன்றாவது நாள் மரணமடைந்துள்ளார்.
- பாண்டியை அடித்த போலீசாரே அவரது மரணத்திற்கு பொறுப்பேற்க வேண்டும். அவர்கள் மீது மாவட்ட மனித உரிமை நீதிமன்றத்தில் வழக்குத் தொடரவேண்டும். பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு அரசு இழப்பீடு வழங்க வேண்டும்.
- திருமணமாகாமல் உள்ள அவரது மகள் மற்றும் மகனுக்கு அரசு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்க வேண்டும்.

## 14. திருப்புவனம் - ஜெகன்

1999ம் ஆண்டு மே 3–ம் தேதியன்று தேவர் கூட்டமைப்பு சார்பாக சண்முகையா பாண்டியன் என்பவர் விடுத்த அழைப்பின் பேரில் தேவர் குருபூசை நடத்த வேன் மற்றும் பேருந்துகளில் மக்கள் சிவகங்கை மாவட்டத்திலுள்ள பசும்பொன் கிராமத்திற்கு வந்தனர். திருப்புவனம் ஊரைச் சுற்றியுள்ள கிராம மக்கள் வாகன உரிமையாளர்களை அணுகிய போது, திறந்த வாகனங்களில் ஏற்றிச் செல்லக்கூடாது எனக் போலீசார் எச்சரித்துள்ளதாகக் காரணம் காட்டி வர மறுத்துள்ளனர். இதன்பின்னர், போலீசார் தலையிட்டு அரசு பேருந்துகளுக்கு ஒழுங்கு செய்வதாகக் கூறியுள்ளனர்.

மதியம் ஒரு மணி வரை பேருந்து வரவில்லை. போக்குவரத்து நிர்வாகத்தினர் அதிக கட்டணம் கேட்டுள்ளனர். அதைத் தொடர்ந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



திருப்புவனத்தில் சிலர் சாலை மறியலில் ஈடுபட்டுள்ளனர். அது தேசிய நெடுஞ்சாலை என்பதால் மறியலைக் கலைக்க போலீசார் தடியடி நடத்திய போது பேருந்துகள் மீது கற்கள் வீசப்பட்டுள்ளன. வைகை ஆற்றுப்பாலத்தின் மீது ஓடியவர்களை விரட்டி அடித்ததில் ஜெகதீசன் என்ற மாணவன் (வயது 16) தலை மற்றும் வயிறு ஆகிய இடங்களில் ஏற்பட்ட காயங்களால் மயங்கி விழுந்து விட்டார். அவரைக் கைது செய்து, ஜீப்பில் போலீஸ்நிலையம் செல்லும் வழியில் வேறு சிலரையும் கைது செய்துள்ளனர்.

மயக்கத்தில் இருந்த ஜெகதீசனை மாலை நான்கு மணிக்கு அரசு மருத்துவமனைக்குக் கொண்டு சென்றுள்ளனர். அங்கு மருத்துவர் இல்லாததால் போலீஸ் நிலையம் வந்து, மீண்டும் விஜயகுமார் மருத்துவமனைக்கு கொண்டு சென்று, திரும்பவும் போலீஸ் நிலையம் கொண்டு வந்து விட்டனர். மாலை ஆறு மணிக்கு லாடனேந்தல் முருகன் என்பவரது மடியில் ஜெகதீசனின் உயிர் பிரிந்துள்ளது. ஜெகதீசனின் இடது தோள்பட்டை மற்றும் கைகளில் கம்பால் அடித்த தடமும், வயிற்றில் பூட்ஸ்காலால் மிதித்த தடமும் இருந்துள்ளது. ஏழு மணிக்கு ஜீப்பில் ஏற்றி மீண்டும் விஜயகுமார் மருத்துவமனை வந்து, மருத்துவரை அழைத்து ஜீப்பில் வைத்தே ஊசி போடவும், அவனது தந்தையும் மற்றவர்களும் சத்தம் போடவே மருத்துவரும், ஆய்வாளரும் போலிசாரும் ஜெகதீசனின் பிரேதத்தை ஜீப்பிலேயே விட்டுவிட்டுஓடி விட்டனர்.

ஜெகதீசனுடன் போலீஸ்நிலையத்தில் இருந்தவர்களை நீதிமன்றக் காவலுக்கு அனுப்ப முயன்றபோது ஜெகன் இல்லாமல் நாங்கள் செல்லமாட்டோம் என மறுக்கவே, போலீஸ் நிலையத்தில் அவர்களை வைத்திருந்துள்ளனர். இரவு மாவட்ட ஆட்சியரும், மற்ற அதிகாரிகளும் வந்து பார்வையிட்டுள்ளனர். காயம்பட்டிருந்த இருவரை மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி விட்டு, மற்றவர்களை அதிகாலை 3 மணிக்கு விடுவித்து விட்டனர். 4ம் தேதி காலை ஆறு மணிக்கு சடலக் கூறாய்வுக்காக மதுரை இராசாசி மருத்துவமனை கொண்டு சென்று அதனை ஒளிநாடாவில் பதிவும் செய்துள்ளனர். நிர்வாக நடுவரான கோட்டாட்சியர் போலீஸ் நிலைய ஆணை எண் 145ன் படி விசாரணை மேற்கொண்டார். அரசு தரப்பில் இந்தச் சம்பவத்தில் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

**கண்டறிந்தவையும், பரிந்துரைகளும்**

- பாலத்தில் ஓடியவர்களை விரட்டி அடித்ததில்தான் ஜெகனுக்கு தலையிலும், வயிற்றிலும் காயங்கள் ஏற்பட்டு மயங்கி விழுந்துள்ளார். அத்தோடு திருப்புவனம் போலீஸ் நிலையத்திற்கு ஜெகனைக் கொண்டுசென்று அடித்துள்ளனர். இதை லாடனேந்தல் முருகன் உட்பட பலர் பார்த்துள்ளனர். தனியார் மருத்துவமனைக்கும், அரசு மருத்துவமனைக்கும் மாறி, மாறி


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொண்டு சென்றவர்கள் ஜெகன் மரணமடைந்து விட்டார் என அறிந்ததும் பிரேதத்தை ஜீப்பிலேயே விட்டுவிட்டு ஓடியுள்ளனர்.

- பஸ் மறியல் செய்த கூட்டத்தைக் கலைக்க போலீசார் முன்னெச்சரிக்கை நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை. பகல் ஒரு மணிக்கே காயம்பட்ட ஜெகனை மாலை ஆறு மணி வரை சிகிச்சைக்காக கூட்டிச் செல்லவில்லை. போலீஸ் நிலையத்தின் பின் வாசலில் ஜீப்பை நிறுத்தி ஏற்றிச் சென்றுள்ளனர். சடலக்கூறாய்வை ஒளிப்பதிவு செய்த போதிலும் தேசிய ஆணைத்திற்கு அறிக்கை அளிக்கவில்லை.
- ஜெகனை போலீஸ் நிலையத்தில் அடித்து சித்திரவதை செய்து, அவரது மரணத்திற்குக் காரணமாக இருந்த ஆய்வாளர் துரைராசன், சார்பு ஆய்வாளர், போலீசார்கள் தர்மலிங்கம், போஸ், பிச்சாண்டி, சிங் ஆகியோர் இடை நீக்கம் செய்யப்படவேண்டும்.
- அவர்கள் மீது மனித உரிமை நீதிமன்றத்தில் வழக்குத் தொடர வேண்டும்.
- அன்று கூட்டத்தை கலைக்கும் பணியில் ஈடுபட்ட போலீசார் மற்றும் போலீஸ் அதிகாரிகளுக்கு ஒரு தடவைக்கான சம்பள உயர்வை ரத்து செய்தல் போன்று கூட்டாக அடையாளத் தண்டனை விதிக்க வேண்டும்.
- பாதிக்கப்பட்ட ஜெகனின் பெற்றோருக்கு அரசு இழப்பீடு அளிக்க வேண்டும்.

## 15. செங்கற்பட்டு - பக்கிரி

கடந்த 1999-ம் ஆண்டில் ஜூன் மாதத்தின்போது செங்கல்பட்டு மாவட்டத்தில் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் பலர் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர். இதைக் கண்டித்து அவ்வமைப்பினர் சாலை மறியல் போராட்டம் நடத்தப்போவதாக அறிவித்தனர்.

இதனையொட்டி ஜூன் மாதம் 18ம் தேதி இரவு பாலூர் காலனியில் சாராயம் விற்கும் இந்து பறையர் வகுப்பைச் சேர்ந்த பக்கிரி (வயது 45) என்பவரை நெல்லிக்குப்பம் போலீஸ்நிலையத்தைச் சேர்ந்த சீருடை அணியாத போலீசார் இருவர் கூட்டிச் சென்றனர். சாராய வழக்கு என்பதால் அபராதம் விதித்து அடுத்த நாள் விட்டு விடுவார்கள் என்று மனைவி இருக்க, முன்னெச்சரிக்கைக் கைது என்றும், சதித்திட்டம் தீட்டிய போது கைதானதாகவும் அவர்மீது வழக்கு பதிந்துள்ளனர். 19ம் தேதி கடலூர் நீதித்துறை நடுவர் முன் பக்கிரியை முன்னிலைப்படுத்தி, மத்திய சிறையில் அடைத்து விட்டனர்.

21ம் தேதி காலை பக்கிரியின் உடல்நிலை மோசமாக இருப்பதாகச் சிறை அதிகாரியிடமிருந்து தொலைவரிச் செய்தி கிடைக்கப்பெற்று, அவரைப் பார்க்கச்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சென்ற உறவினர்களை சிறை அதிகாரிகள் பார்க்க அனுமதிக்காமல் சாப்பாடு மட்டும் வாங்கித் தரக் கூறியுள்ளனர். 22ம் தேதி இரவு எட்டு மணிக்கு பாலூர் காலனிக்கு இரண்டு வாகனங்களில் வந்த போலீசார் பக்கிரியின் மனைவி மற்றும் உறவினர்களைக் கடலூர் மருத்துவமனைக்குக் கூட்டிச் சென்று பக்கிரி மரண மடைந்து விட்டதாக அவரது உடலைக் காட்டியுள்ளனர். அவரது மனைவியிடம் கையெழுத்துக்கள் பெற்றுக் கொண்டு சடலக் கூறாய்வு நடத்தி, ஒளிநாடாவில் பதிவு செய்துள்ளனர். சந்தேக மரணம் என வழக்குப் பதிவு செய்து இச்சம்பவம் குறித்து கோட்டாட்சியர், உட்கோட்ட நடுவர் விசாரணை நடத்தியுள்ளார். நூற்றுக்கும் மேற்பட்ட போலீசார் உடன்வர, அவரது உடல் ஊருக்குக் கொண்டு வரப்பட்டது. உடலைத் தகனம் செய்ய போலீசார் வற்புறுத்தியுள்ளனர். விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பினரது தலையீட்டின் பேரில் அங்கு வந்த வட்டாட்சியர் பக்கிரியின் மனைவி மற்றும் சிலரது வாக்குமூலங்களைப் பதிந்து கொண்டுள்ளார். அதன்பின் பக்கிரியின் உடல் அடக்கம் செய்யப்பட்டது.

*கண்டறிந்தவையும், பரிந்துரைகளும்*

- 18–ம்தேதி இரவு போலீசார் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நெல்லிக் குப்பம் போலீஸ் நிலையத்திற்கு கூட்டிச் செல்லப்பட்ட பக்கிரியைச் போலீசார் அடித்துள்ளனர். போலீஸ் நிலையத்திற்கு தேடிச்சென்ற மனைவி மற்றும் உறவினர்களுக்கு முறையாக பதில் கூறவில்லை. சிறையிலிருந்தபோது சிகிச்சையளித்தும் பலனின்றி 21–ம்தேதி அன்று பக்கிரி மரணமடைந்துள்ளார்.
- தொலைவரிச் செய்தி கொடுத்த சிறை அதிகாரிகளே பக்கிரியைப் பார்க்க வந்தவர்களுக்கு அனுமதி மறுத்திருக்கின்றனர். பிரேதத்தைக் கொண்டுவந்த போலீசார் சுடுகாட்டில் வைத்து எரிக்கும்படி கட்டாயப்படுத்தியுள்ளனர்.
- கைது செய்து சென்ற போலீசார், போலீஸ் நிலையப் பொறுப்பு அதிகாரி ஆகியோரை இடைநீக்கம் செய்து மனித உரிமை மீறல் அவர்கள்மீது குற்றத்திற்காக வழக்குத் தொடர வேண்டும். முறையான சிகிச்சைக்கு உரிய நேரத்தில் ஏற்பாடு செய்யாமல், உறவினர்களையும், உதாசீனப்படுத்திய கடலூர் மத்திய சிறை கண்காணிப்பாளர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு அரசு இழப்பீடு அளிக்க வேண்டும்.

## 16. கொடைக்கானல் - மாரிமுத்து

கடந்த 99ம் ஆண்டு ஜூன் 21ம் தேதி மாலை 7 மணியளவில் கொடைக்கானல் ராமதாஸ் என்பவரின் வீட்டிற்கு அவரது மகன் மாரிமுத்துவைத் தேடி மாருதியில் வந்த டிரைவர் ரமேஷ் மற்றும் அவரது நண்பர்கள், உங்கள் மகன் மாரிமுத்து எங்கே? அவன் எங்களுக்குப் பணம் தர வேண்டும் என்று கேட்டுள்ளனர். மாரிமுத்து அவர் வீட்டில் இருப்பார் என்பதை அறிந்து அங்கு சென்று மாரிமுத்துவை வீட்டைவிட்டு வெளியே இழுத்து வந்து அவரது


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சட்டையைக் கழற்றி, கைகளைப் பின்புறம் கட்டியுள்ளனர். அப்போது சார்பு ஆய்வாளர் மதியழகன் மற்றும் மூன்று போலீசாரும் உடன் இருந்துள்ளனர். மாரிமுத்துவை அவரது சகோதரர் கணேசன் என்பவரது வீடுவரை அடித்து இழுத்துச் சென்று மேலும் சிலரது வீடுகளைக் கேட்டு விசாரித்து அடித்துள்ளனர். இதுகுறித்து மேற்கூறிய ரமேஷ் என்பவரது மனைவியிடம் மாரிமுத்து மனைவி ஜெலினா கேட்டபோது காரிலிருந்து டேப் ரிக்கார்டரைத் திருடிவிட்டதாகவும் அதனால்தான் இப்படி விசாரிக்கிறார்கள் என்றும் கூறியிருக்கிறார்.

மாரிமுத்துவை போலீஸ்நிலையத்திற்கு இழுத்துச் சென்று அடிப்பதைப் பார்த்த மாரிமுத்துவின் மனைவி மற்றும் சகோதரி பாண்டியம்மாள் ஆகியோர் போலீசாரிடம் அடிக்கவேண்டாம் என்று கெஞ்சிய பாண்டியம்மாளை போலீசார் கம்பால் அடித்துள்ளனர். மாரிமுத்துவை வாகனத்தில் ஏற்றிச் சென்று இரண்டு மணி நேரம் கழித்து "ஸ்பீக்கர்" ஒன்றைக் கொண்டு வந்துள்ளனர். பாண்டியம் - மாள், மாரிமுத்து ஆகியோரது வீடுகளில் பொருட்களை வெளியில் இறைத்துப் போட்டு பண்ட பாத்திரங்களை சேதப்படுத்தியுள்ளனர். 22ம் தேதி காலை 10 மணிக்கு மாரிமுத்துவின் தாய் அய்யம்மாள் மனைவி மற்றும் சகோதரி ஆகியோர் போலீஸ்நிலையம் சென்றபோது ஜெயசீலன், மதுரைவீரன் ஆகியோரும் போலீஸ் நிலையத்தில் இருந்துள்ளனர். அப்போது மாரிமுத்துவின் கண்கள் சிவந்து சுற்றி வீங்கியிருந்துள்ளது. மாரிமுத்துவை விடுவிக்க போலீசார் மூவாயிரம் ரூபாய் லஞ்சம் கேட்டுள்ளனர். காசி என்ற போலீசாரிடம் ரூ.1500ம் மாரிமுத்துவின் உபயோகத்திற்காக கம்பளித்துண்டும் தாய் அய்யம்மாள் கொடுத்து வந்துள்ளார். 23ம் தேதி காலை எட்டு மணிக்கு தாயாரும், மனைவியும் போலீஸ் நிலையம் சென்றபோது மாரிமுத்துவைப் பார்க்கவிடவில்லை. மாரி முத்துவின் தந்தை ராமதாசை போலீசார் நகராட்சித் தலைவர் குரியனிடம் கூட்டிச் சென்றுள்ளனர். அவர் மாரிமுத்து மரணமடைந்து விட்டதாகவும், அவரது உடல் 'வான் ஆலன் மருத்துவமனையில்' இருப்பதாகவும் கூறியுள்ளார். அனைவரும் மருத்துவமனை சென்று பார்த்தபோது போர்த்தியிருந்த துணியெங்கும் இரத்தமாகவும், கை விரலில் கட்டுப்போட்டும் இருந்தது. கழுத்து ஒடிந்திருந்தது. பிரேதத்தை படம் எடுத்தவரிடமிருந்து மருத்துவர் ஆனந்த் புகைப்படக் கருவியை பறித்துச் சார்பு ஆய்வாளரிடம் கொடுத்துவிட்டார். 24ம் தேதி காலை மருத்துவமனைக்குச் சென்றவர்கள் துணிகள் மாற்றப்படுள்ளதைக் கண்டுள்ளனர். திண்டுக்கல்லி லிருந்து வந்த மருத்துவர்கள் சடலக் கூறாய்வு செய்தனர். அதை ஒளி நாடாவில் பதிவு செய்யவில்லை. பிரேதத்தைப் பார்க்க யாரையும் அனுமதிக்கவில்லை.

ரமேஷ், தாஸ், முத்து மற்றும் சுப்ரமணியம் ஆகியோர் சாவியால் தனது முதுகில் குத்தியதாக மாரிமுத்து கூறியுள்ளார். காயங்களை மாரிமுத்துவுடன் இருந்த சக கைதி ஜெயசீலனும் பார்த்திருக்கிறார். போலீசார் மாரிமுத்துவின் நடுவிரலில் நூலைக்கட்டி, பின்புறமாக இழுத்து விரலை உடைத்துள்ளனர்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போலீசார் மதுரை வீரன் என்பவரை மட்டும் வீட்டிற்கு அனுப்பிவிட்டனர். இரவு மீண்டும் அவர்களிருவரது தலைமீதும் காலிலும் உட்கார்ந்து கொண்டு அவர்கள் மயக்கமடையும் வரை உள்ளங்கால்களில் அடித்துச் காவல் அறையில் அடைத்துள்ளனர். காலை 5 மணி அளவில் விழித்த ஜெயசீலன், மாரிமுத்து ரத்த வாந்தியெடுத்து, அதன் மேல் முகங்கவிழ்ந்து மூச்சற்றுக் கிடப்பதைப் பார்த்து போலீசாரிடம் கூறியுள்ளார். இரவு போலீஸ்நிலையத்திலேயே தங்கியிருந்த சார்பு ஆய்வாளர் மற்றும் போலீசார் ஜெயசீலனையும் ஏற்றிக்கொண்டு வான் ஆலன் தனியார் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு மாரிமுத்து மரணமடைந்துவிட்டதாக பரிசோதித்த மருத்துவர் கூறிவிட்டார். பிரேதத்தை மருத்துவமனையிலேயே விட்டுவிட்டு அனைத்து போலீசாரும் ஜெயசீலனையும் கூட்டிக்கொண்டு போலீஸ்நிலையம் வந்துவிட்டனர்.

22ம் தேதியே தங்களை வீட்டிற்கு அனுப்பிவிட்டதாகவும் 23ம் தேதி காலை போலீசார் வரக்கூறியதன் பேரில் சென்று கொண்டிருந்த போது வழியில் கழிவறைக்குள் சென்று திரும்பிய மாரிமுத்து மனமுடைந்து விஷமருந்து குடித்துவிட்டதாகவும், தான்தான் மருத்துமனையில் சேர்த்ததாகவும் விசாரிப்பவர் –களிடம் கூறும்படி ஜெயசீலனைக் போலீசார் மிரட்டியுள்ளனர். பின் ஜெயசீலனை சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பியுள்ளனர்.

விசாரணை மேற்கொள்வதற்கு முறையான உத்தரவு வரவில்லை என்று கூறும் கோட்டாட்சியர் செல்லையா, ஜெயசீலனைத் தவிர யாரையும் விசாரிக்க –வில்லை. ஆவணங்களையும் பார்வையிடவில்லை. "மாரிமுத்துவுக்கு வெளிக் காயங்கள் ஏதுமில்லை. இந்நிலையில் சடலக் கூறாய்வு அறிக்கை இன்றி கருத்துக்கூற இயலாது" எனக்கூறியுள்ளார். எனினும் ஐந்து போலீசார் பணியிலி ருந்து இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

**கண்டறிந்தவையும், பரிந்துரைகளும்**

- 21–ம் தேதி மாலை சார்பு ஆய்வாளர் மதியழகன் மற்றும் போலீசார் முன்னிலையில் மாரிமுத்துவை அவரது வீட்டிற்கு முன் டிரைவர் ரமேசும் அவரது நண்பர்களும் அடித்துள்ளனர். பின்னர் மாரிமுத்துவை போலீஸ் நிலையத்தில் வைத்தும் அடித்துள்ளனர். சோதனை என்ற பெயரில் பாண்டியம்மாள் மற்றும் மாரிமுத்து ஆகியோரது வீடுகளை அடித்துச் சேதப்படுத்தியுள்ளனர். மாரிமுத்துவின் தாயாரிடம் லஞ்சம் கேட்டுப் பெற்றுள்ளனர். போலீசார் தாக்கியதில் கண்களைச் சுற்றிக் காயமும், கழுத்தில் எலும்பு முறிவும் உடலெங்கும் இரத்தக் காயங்கள் ஏற்பட்டும் 22–ம் தேதி இரவு மரணமடைந்துள்ளார். அன்றைய தினம் இரவு சார்பு ஆய்வாளர் போலீஸ் நிலையத்திலேயே தங்கியிருந்திருக்கிறார்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



- கொடைக்கானல் நகராட்சித் தலைவர் குரியன் மூலமாக மாரிமுத்து மரணமடைந்த செய்தியை தெரிவித்தபிறகும் கூட வேன் ஆலன் மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்த பிரேதத்தைக் காட்ட போலீசார் மறுத்துள்ளனர். மாரிமுத்துவின் மரணத்திற்குக் காரணமான சார்பு ஆய்வாளர் மதியழகன், போலீசார் வீராச்சாமி மற்றும் அன்று பணியிலிருந்தவர்கள் இடை நீக்கம் செய்யப்பட்டு அவர்கள் மீது மாவட்ட மனித உரிமை நீதிமன்றத்தில் வழக்குத் தொடர வேண்டும்.
- பாதிக்கப்பட்ட மாரிமுத்துவின் மனைவிக்கு அரசு இழப்பீடு வழங்க வேண்டும்.

## 17. பாடலூர் - முத்துலட்சுமி

1999ம் வருடம் ஜூன் மாதம் 20ம் தேதி பெரம்பலூர் மாவட்டம் பாடலூரிலிருந்து நான்கு பெண்களைக் காணவில்லை. 21ம் தேதி அப்பெண்களின் பெற்றோர்கள் போலீஸ்நிலையத்தில் முறையிட்டதன் பேரில் பாடலூர் போலீஸ் நிலையத்தில் புகார் பதிந்துவிட்டு அவர்களிடமே உறவினர்கள் வீடுகளில் விசாரிக்கும்படி கூறியுள்ளனர்.

பெண்கள் காணாமல் போன அதே 20ம் தேதி ரமேஷ் உட்பட மூன்று மாணவர்கள் வீட்டுக்குத் தெரியாமல் வேலை தேடி சென்னைக்கு சென்றுள்ளனர். பெண்களின் பெற்றோர் இம்மாணவர்கள் மீது சந்தேகம் தெரிவிக்கவே 24ம் தேதி மாலை ஆறு மணிக்கு ரமேஷின் விதவைத் தாயான முத்துலெட்சுமியின் (வயது 38) வீட்டுக்கு வந்த சார்பு ஆய்வாளர் லெட்சுமணன், விசாரிக்க வேண்டுமென்று முத்துலெட்சுமியை போலீஸ்நிலையம் கூட்டிச் சென்றுள்ளார்.

ரமேசுடன் சென்னை சென்ற மற்றொரு மாணவன் செந்திலின் தாய் மணிமேகலை. இவர் சமூக ஈடுபாட்டுடன் செயல்படுபவர். மணிமேகலை இரவு நீண்ட நேரம் முத்துலெட்சுமியை போலீஸ் நிலையத்தில் வைத்திருப்பது கண்டு 11.30 மணியளவில் சார்பு ஆய்வாளரிடம் "பெண்களை இரவில் போலீஸ் நிலையத்தில் வைத்திருக்காமல் விட்டுவிடுங்கள்" என்று கேட்டுள்ளார். எனினும் முத்துலெட்சுமியை அனுப்ப போலீசார் மறுத்துவிட்டனர்.

சென்னையில் உணவு விடுதியில் வேலைக்குச் சேர்ந்த மூன்று மாணவர்களும் கிளீனர் ரவியும் வேலை பிடிக்கவில்லையென மீண்டும் 24ம் தேதி இரவு ஊருக்கு வந்து விட்டனர். ரமேசின் தாயாரை போலீஸ் நிலையத்தில் வைத்திருப்பது தெரிந்து இரவு 12 மணிக்கு போலீஸ்நிலையம் சென்றுள்ளனர். இவர்களும் தனி அறையில் சிறை வைக்கப்பட்டனர். முத்துலெட்சுமியை அடித்ததையும் தனக்கு எதுவும் தெரியாது என முத்துலெட்சுமி கதறியதையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கேட்டுள்ளனர். கிளீனர் ரவிக்கு காணாமல் போன பெண்களில் ஒருவரான மதுமதியுடன் பழக்கமுண்டு எனச் சந்தேகப்பட்டு அவரை அடித்ததில் அவரால் நடக்க முடியவில்லை.

மேலும் மூன்று பெண்களை கூப்பிட்டு விசாரித்த போலீசார், இரவு 12.15 மணிக்கு அனைவரையும் வீட்டுக்கு அனுப்பி விட்டனர். முத்துலெட்சுமியிடம் மட்டும் கூப்பிடும்போது வரவேண்டுமெனக் கூறி அனுப்பியுள்ளனர். போலீசார் **தன்னை அடித்ததாகவும், அதனால் தன் வயிற்றின் அடிப்பகுதியில்** எரிச்சல் **உள்ளதாகவும் தனக்குத் தெரிந்தவர்களிடம் முத்துலெட்சுமி** கூறியுள்ளார். **முத்துலெட்சுமியின் வீட்டுக்கு காலை 3.30 மணி அளவில்** வந்த போலீஸ் தரகர்கள் இருவர் ஐயா அழைத்ததாகக் கூறி மீண்டும் அவரைப் போலீஸ் நிலையத்திற்குக் கூட்டிச் சென்றுள்ளனர்.

இந்நிலையில் 25ம் தேதி காலையில் போலீஸ்நிலையத்திலிருந்து நூறு மீட்டர் தூரத்தில் ஒரு கிணற்றின் அருகே முத்துலெட்சுமி உடுத்தியிருந்த சேலை காணப்பட்டுள்ளது. இதை அறிந்த பொதுமக்கள் திருச்சி–சென்னை நெடுஞ் சாலையில் மறியிலில் ஈடுபட்டனர். பெரம்பலூர் மாவட்ட போலீஸ் கண்காணிப்–பாளர் செண்பகராமன் வந்தபின் தீயணைப்புத் துறையினர் கிணற்றிலிருந்து பிணத்தை எடுத்துள்ளனர். கோட்டாட்சியரின் விசாரணைக்குப் பின் தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சடலக் கூறாய்வு செய்து ஒளி நாடாவில் பதிவு செய்துள்ளனர்.

இதற்கிடையில் 25ம் தேதி காலையில் ஊர் திரும்பிய, காணாமல் போனதாக முன்பு கூறிய நான்கு பெண்களும், தாங்கள் பத்தாம் வகுப்புத் தேர்வில் தோல்வியுற்றதால் வேலை தேடி திருப்பூர் சென்றதாகக் கூறியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து சார்பு ஆய்வாளரை வேறு போலீஸ்நிலையத்திற்கு மாற்றியுள்ளனர். முத்துலெட்சுமி மரணமடைந்ததால் அவரது ஒரே மகனான ரமேஷ் இன்று அனாதையாக்கப்பட்டுள்ளார்.

**கண்டறிந்தவையும், பரிந்துரைகளும்**

- தேர்வில் தோல்வியுற்ற மாணவிகள் வீட்டில் கூறாமல் வேலை தேடி திருப்பூர் சென்றதையடுத்து ரமேசும் மற்றும் இரு மாணவர்கள் தான் கூட்டிச் சென்றிருப்பார்கள் என சந்தேகப்பட்டு, ரமேசின் தாயாரான முத்துலெட்சுமியை 24–ம் தேதி பாடாலூர் போலீஸ்நிலையம் கூட்டிச் சென்றுள்ளனர். அங்கு அவர் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டதை சென்னையிலிருந்து ஊர் திரும்பி போலீஸ்நிலையத்திற்கு சென்ற ரமேஷ், ரவி மற்றும் நண்பர்கள் பார்த்துள்ளனர். 24–ம் தேதி இரவு 12 மணிக்கு மேல் வீட்டுக்கு அனுப்பியவர்–கள் மீண்டும் அதிகாலை போலீஸ்நிலையம் கூட்டிச் சென்றுள்ளனர். 25–ம் தேதி காலையில் முத்துலெட்சுமி கிணற்றில் பிணமாகக் கிடந்துள்ளார்.

www.tamilarangam.net



- சட்டவிரோதமாக இரவு நேரத்தில் முத்துலெட்சுமியை போலீஸ்நிலையத்தில் வைத்துள்ளனர். மேலும், காவலில் இருந்தபோது முத்துலெட்சுமியை சித்திர வதை செய்து கொலை செய்து, அதனை மறைக்க அவரது உடலை கிணற்றில் வீசியுள்ளனர்.
- **எனவே ஆய்வாளர், சார்பு ஆய்வாளர் லட்சுமணன் மற்றும் அன்று பணியிலிருந்த போலிசார் இடைநீக்கம் செய்யப்பட்டு அவர்கள் மீது கொலைக்குற்றம் மற்றும் தடயங்களை மறைத்த குற்றங்களுக்காக மாவட்ட மனித உரிமை நீதிமன்றத்தில் வழக்குத் தொடர வேண்டும்.**
- போலீசாருக்கு உடந்தையாகச் செயல்பட்டு போலீஸ் தரகர்களான மயில்வாகனம் மற்றும் நடராசன் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- இறந்த விதவை முத்து லெட்சுமியின் மகன் ரமேசுக்கு அரசு இழப்பீடு வழங்குவதுடன் கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளில் முன்னுரிமை வழங்க வேண்டும்.

## 18. திருத்தணி - பூபாலன்

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணிக்கு அருகில் நொச்சிலிக் காலனி எனும் ஊரில் தனது மாமனார் வீட்டோடு தங்கியிருந்து சாராய வியாபாரம் செய்து வந்தவர் பூபாலன் என்பவர் (வயது 30) இவர் தலித் சமூகத்தைச் சேர்ந்தவர். கள்ளச் சாராயத்தை ஒழிக்க வேண்டுமென தொண்டு நிறுவனம் ஒன்று எடுத்த முயற்சிகளால் 99–ம் வருடம் ஆகஸ்டு மாதம் இரண்டாம் தேதி மாலை திருத்தணி மதுவிலக்குக் போலீசார் பூபாலனை அவரது வீட்டில் கைது செய்து ஆர்.கே. பேட் போலீஸ்நிலையத்தில் சாராய வழக்கு பதிவு செய்துள்ளனர். மூன்றாம் தேதி நீதிமன்றம் கொண்டு சென்று அரக்கோணம் கிளைச்சிறையில் அடைத்துள்ளனர்.

அடுத்த நாள் நான்காம் தேதி உடல்நலக்குறைவான பூபாலனை அரக்கோணம் அரசு மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். உடல்நிலை மேலும் மோசமடைந்ததால், வேலூர் மத்தியச் சிறையில் சிறைவாசியாக பதிவு செய்து, வேலூர் அரசு மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். சிறுநீரகம் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி பதினைந்தாம் தேதி இரவு பூபாலன் மரணமடைந்துள்ளார்.

செய்தி கிடைத்ததும் பூபாலனின் மனைவியும், உறவினர்களும் சென்று பார்த்தபோது அவரது முகத்தில் தீயினாற் சுட்ட வடுக்களும், உடலெங்கும் காயங்களும் காணப்பட்டுள்ளன. மக்கள் நீதிகோரி போராட்டத்தில் ஈடுபட்டதால், அதிகாரிகள் தலையிட்டதன் பேரில், ஆய்வாளர் முனியப்பன், சார்பு ஆய்வாளர் வெங்கடேசன் மற்றும் மூன்று போலீசார் மீது கொலைக்குற்றம் மற்றும்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தாழ்த்தப்பட்டோர் மீதான வன்கொடுமை தடுப்புச் சட்டப் பிரிவுகளின் கீழும் முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டு, அவர்கள் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

**கண்டறிந்தவையும், பரிந்துரைகளும்**

- 2–ம் தேதி மாலை பூபாலன் கைது செய்யப்பட்டு, 3–ம் தேதியே நீதிமன்றக் காவலில் ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அவரது முகத்தில் தீக்காயங் – களும், உடலில் பல இடங்களில் காயங்களும் காணப்பட்டுள்ளன. சிகிச்சை பலனின்றி 15–ம் தேதி பூபாலன் மரணமடைந்துள்ளார். இவ்வழக்கில் பணி இடைநீக்கம் செய்யப்பட்ட போலீஸ் அதிகாரிகள் மற்றும் காவலர்கள் மீது வழக்கு விசாரணை முடியும் வரை அவர்களை வேறு எங்கும் பணியமர்த்தக் கூடாது.

- விசாரணையின் முடிவுக்காக காத்திராமல் பாதிக்கப்பட்ட பூபாலனின் குடும்பத்தினருக்கு அரசு இழப்பீடு வழங்க வேண்டும்.

## 19. வெள்ளக்கோவில் - மணிகண்டன்

திருச்சி மாவட்டம் லால்குடி அருகில் செம்பழனி கிராமத்தைச் சேர்ந்தவர் மணிகண்டன் (வயது 30) இவர் திருமணத்திற்குப்பின் திருவையாறு அருகில் புனவாசலில் கூலி வேலை செய்து வந்தார். இவர்களுக்கு ஒரு மகளும், ஒரு மகனும் உள்ளனர். ஒரு வயது மகள் இவர்களுடனிருக்க, நான்கு வயது நிரம்பிய மகன் திருப்பூரில் மணிகண்டனின் பெரியம்மா வீட்டில் வளர்ந்து வந்தான். மகனைப் பார்ப்பதற்காக மனைவி பிரபாவதியுடன் ஆகஸ்ட் 98 (ஆடி மாதம் கடைசி நாள் – ஆங்கிலத் தேதி ஞாபகமில்லை) திருப்பூர் சென்றுள்ளனர். சென்ற மறுதினம் வயிறு வலிப்பதால் மருத்துவமனைக்குச் சென்று வருவதாகக் கூறிச் சென்றவர் திரும்பவில்லை. மூன்றாவது நாள் (ஆவணி 3–ம் தேதி) திருப்பூர் போலீஸ்நிலையத்தில் முறையிட்டபோது அப்படி யாரும் போலீஸ் காவலில் இல்லை எனக்கூறி அனுப்பிவிட்டனர்.

இந்நிலையில் 26.08.98 அன்று மதியம் இரண்டு மணிக்கு வெள்ளகோவில் நகர சாலையினை ஒட்டிய தெருவில் ஓர் ஆணின் பிணம் கிடப்பதாக கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த புகாரின் அடிப்படையில் சந்தேக மரணம் என முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, விசாரணைக்காக வட்டாட்சியருக்கு அனுப்பியுள்ளனர்.

அதே தினம் மதியம் 1.30 மணியளவில் வாளாடிக்கு வாடகைக்காரில் வந்த போலீஸ்காரார் ஒருவர் மணிகண்டனின் பாட்டி வள்ளியப்ப அம்மாளிடம் மணிகண்டன் மரணமடைந்த விபரம் கூறி வெள்ளகோவில் போலீஸ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நிலையத்திற்கு வருமாறு கூறி ரூ.100 வாங்கிச் சென்றுள்ளார். மணிகண்டனின் மனைவி பிரபாவதிக்குத் தகவல் கூற வாளாடியிலிருந்து ரெங்கராஜ் என்பவர் புனவாசல் சென்றுள்ளார். அதனைக் கேட்ட மணிகண்டனின் உறவினர் துரைமாணிக்கமும், மற்றும் மூவரும் திருப்பூருக்குச் சென்று 27–ம் தேதி காலை ஏழு மணிக்கு மனைவி பிரபாவதியிடம் கூறியுள்ளனர். பகல் பதினோரு மணிக்கு அனைவரும் வெள்ளக்கோவில் போலீஸ் நிலையம் சென்றபோது, போலீசார் மணிகண்டனை அடக்கம் செய்துவிட்டதாகக் கூறி புகைப்படங்களை மட்டும் காட்டியுள்ளனர். மணிகண்டனை புதைத்த இடத்தைக்கூட காட்டவில்லை. இது குறித்து மணிகண்டனின் உறவினர்கள் வேறு எங்கும் முறையிடக்கூடாதென மிரட்டியும் அனுப்பியுள்ளனர்.

டிசம்பர் 15–ம்தேதி மரணமடைந்தவர் திருவையாறு வட்டம் மேலப்புன வாசலைச் சேர்ந்த கோவிந்தராஜ் மகன் மணிகண்டன் எனத் தெரிய வந்ததாக வெள்ளக்கோவில் போலீஸ் நிலைய ஆய்வாளர் அறிக்கை அளித்துள்ளார்.

**கண்டறிந்தவையும், பரிந்துரைகளும்**

- போலீஸ் கூறுவதுபோல வெள்ளக்கோவில் மணிகண்டன் அனாதைப் பிணமாகக் கிடந்திருந்தால் 26–ம் தேதி மதியம் போலீஸ்காரர் ஒருவர் வாலாடிக்குச் செல்ல வாய்ப்பில்லை.
- மேலும் தகவல் சொல்லி அனுப்பிவிட்டு, உறவினர்கள் வருவதற்குள் போலீசாரே அடக்கம் செய்தது ஐயமேற்படுத்துகிறது. எனவே மணிகண்டன் மரணமடைந்தது குறித்து நீதிபதியின் தலைமையிலோ/கோட்டாட்சியரின் தலைமையிலோ விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட்டு அதன் அறிக்கை யினை பொதுமக்களின் பார்வைக்காக வெளியிடப்பட வேண்டும்.
- மணிகண்டனின் மனைவி மற்றும் உறவினர்களிடம் புகைப்படத்தைக் காண்பித்து, விபரங்களை கேட்டுக் கொண்ட போலீசார் வெளியே யாரிடமும் கூறக்கூடாதென மிரட்டியுள்ளனர். நான்கு மாதங்கள் கழித்துத்தான் மரணமடைந்தவர் யாரெனத் தெரிய வந்ததாக கூறியுள்ளனர்.
- வெள்ளக்கோவில் போலீசார் நிலைய ஆய்வாளர், சார்பு ஆய்வாளர், மற்றும் போலீசார் இடைநீக்கம் செய்யப்பட்டு போலீசார் மீது மனித உரிமை நீதிமன்றத்தில் வழக்குத் தொடர வேண்டும்.
- மரணமடைந்த மணிகண்டனின் குடும்பத்திற்கு இழப்பீடு வழங்க வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## 20. தூத்துக்குடி - வின்சென்ட்

தூத்துக்குடி கிராமப்புற பஞ்சாயத்தின் முதல் தொகுதி உறுப்பினராக இருப்பவர், அலங்காரத்தட்டு என்ற கிராமத்தைச் சேர்ந்த வின்சென்ட் என்கிற சண்முக சுந்தரம் (வயது 40) உப்பளத்தொழிலாளியாக பணிபுரியும் இவர் தலித் இனத்தவர் ஆவார்.

தூத்துக்குடியில் இராஜபாளையம் என்கிற இடத்தைச் சேர்ந்த மரியதாஸ் என்பவர் வீட்டில் வெடிகுண்டு கிடைத்ததாகவும், அது வின்சென்ட்டிடம் பெற்றது என மரியதாஸ் கூறியதாகவும், அதனால் 99ம் வருடம் செப்டம்பர் மாதம் 17ம் தேதி இரவு 10.30 மணியளவில் முத்துவுடன் திருவிழா பார்க்கச் சென்று கொண்டிருந்தபோது தாளமுத்து நகர் காவலர்கள் வின்சென்ட், முத்து ஆகிய இருவரையும் கைது செய்து போலீஸ்நிலையம் கூட்டிச் சென்றுள்ளனர்.

செப்டம்பர் 18ம் தேதி காலை 8 மணிக்கு வின்சென்ட் மனைவி கிருஷ்ணம்மாள், முத்து மனைவி ஈஸ்வரி, முத்துவின் சகோதரி மேரி ஆகியோர் போலீஸ்நிலையம் சென்றுள்ளனர். வின்சென்ட், முத்து, மரியதாஸ் ஆகிய மூவரின் கால்களிலும் சங்கிலியால் கட்டியிருந்தனர். வின்சென்ட்டின் கால்களில் இரத்தம் வழிந்திருக்கிறது. அவர் மயக்க நிலையில் இருந்திருக்கிறார். சங்கிலியை நீக்கி அவரை மாடிக்குக் கூட்டிச் சென்றுள்ளனர். அவர் நடக்க முடியாமல் படிகளில் கைகளை ஊன்றி தவழ்ந்து சென்றிருக்கிறார்.

காலை 10.30 மணியளவில் ஆய்வாளர் அங்கிருந்த போலீசாரிடம் உலக்கை வாங்கிவரும்படி கூறி, போலீஸ்நிலைய மாடியில் வைத்து உலக்கையால் வின்சென்ட்டை அடித்துள்ளனர். வின்சென்ட் வலி தாள முடியாது கதறியிருக்கிறார். சிறிது நேரத்தில் அவரது கதறல் சத்தம் நின்றுவிட்டது. மாடியிலிருந்து வின்சென்ட்டை கீழே கொண்டுவந்த போலீசார் தண்ணீரில் துணியை நனைத்து அவரது முகத்தைத் துடைத்துள்ளனர். முகம் வீங்கியுள்ளது. நெற்றியிலும், வலது மார்பிலும், இடது காரை எலும்பிலும் காயங்கள் இருந்துள்ளன. யாரையும் பார்க்க அனுமதிக்கவில்லை. சார்பு ஆய்வாளர்கள் மூன்று பேரும் வெளியே சென்றுவிட்டனர். பின்னர் மாலை நான்கு மணிக்கு வரும்படி பெண்களை அனுப்பிவிட்டனர்.

மாலை நான்கு மணிக்கு கிருஷ்ணம்மாளும், வின்சென்ட்டின் சகோதரி பூங்கனியும் சென்றபோது போலீஸ் நிலையம் பூட்டப்பட்டிருந்திருக்கிறது. இதற்கிடையில் தமிழ் பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த காசிபாண்டியனின் காரில் வைத்து வின்சென்ட்டை சாரதா மருத்துவமனைக்குக் கொண்டு சென்றுள்ளனர். அங்கு மருத்துவர் வின்சென்ட் இறந்துவிட்டதாக கூறியுள்ளார். பின் அவரை அரசு மருத்துவமனை கொண்டு சென்றுள்ளனர். இந்த காசிபாண்டியன் மீது ஏற்கெனவே பல வழக்குகள் உள்ளன. வின்சென்ட்டுக்கு மாலை 7 மணி அளவில் நெஞ்சுவலி ஏற்பட்டு மருத்துவமனை கொண்டு செல்லும்போது மரணம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அடைந்துவிட்டார் என காசி பாண்டியனுடன் சென்ற திமுகவைச் சேர்ந்த இராஜேந்திரன் என்பவர் கூறியதாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளனர். இரவு 8 மணிக்கு வின்செண்ட் மரணமடைந்தது குறித்து ஊர்த் தலைவர் ஜெயராஜ் வின்செண்ட்டின் மனைவி கிருஷ்ணம்மாளிடம் கூறியுள்ளார்.

19ம் தேதி தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் சடலக் கூறாய்வு நடந்துள்ளது. அதை ஒளி நாடாவில் பதிவு செய்துள்ளனர். அரசு இழப்பீடாக ஒரு லட்சம் ரூபாயை வின்செண்ட் குடும்பத்தினருக்கு வழங்கியுள்ளது. இறந்த வின்செண்ட்டிற்கு ஆறு மாதக் கைக்குழந்தையிருந்து பத்து வயதுக்கு உட்பட்ட ஐந்து மகன்கள் உள்ளனர்.

சார்பு ஆய்வாளர் சோமசுந்தரம் உட்பட நான்கு போலீசார் பணி இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். மாவட்ட கண்காணிப்பாளர் ராஜேஸ்தாசுக்கு நெருக்கமான சார்பு ஆய்வார்கள் ராமகிருஷ்ணன் மற்றும் ஜெயசேகரன் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

**கண்டறிந்தவையும், பரிந்துரைகளும்**

- 17–ம் தேதி இரவு தூத்துக்குடி ராஜபாளையத்தில் வின்செண்ட், முத்து ஆகிய இருவரை கைது செய்து, ஏற்கெனவே காவலில் இருந்த மரியதாஸ் சேர்த்து மூவரையும் போலீசார் உலக்கை கொண்டு அடித்து சித்திரவதை செய்துள்ளனர். மூவரது கால்களையும், சங்கிலியால் கட்டி பிணைத்து வைத்துள்ளனர். மரணமடைந்த வின்செண்ட்டின் உடலை காசி பாண்டியன் காரில் ஏற்றி மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளனர். ராஜேந்திரன் என்பவரிடம் கையெழுத்து வாங்கி பொய்யான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளனர்.
- சார்பு ஆய்வாளர் ஒருவர் மற்றும் நான்கு போலீசார் மட்டும் இடைநீக்கம் செய்திருப்பது போதாது. சம்பவத்தன்று பணியிலிருந்த ஆய்வாளர் பாட்ஷா, சார்பு ஆய்வாளர்கள் இராமகிருஷ்ணன், ஜெயசேகரன் ஆகியோர் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- சார்பு ஆய்வாளர் ராமகிருஷ்ணன் தான் கடுமையாகத் தாக்கியவர் என நேரில் கண்ட வின்செண்ட்டின் மனைவி கிருஷ்ணம்மாள் கூறியுள்ளார். ஆனால் மாவட்ட போலீஸ் கண்காணிப்பாளர் ராஜேஷ்தாசுடன் முரண்பாடு – களைக் கொண்டிருந்த காரணத்தால் மட்டுமே சார்பு ஆய்வாளர் சோமசுந்தரம் இடைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். எனவே அன்றைய தினம் போலீஸ் நிலையத்திற்கு வருகை தந்த போலீஸ் அதிகாரிகள், போலீசார் அனைவர் மீதும் மாவட்ட மனித உரிமை நீதிமன்றத்தில் வழக்குப் பதிவு செய்ய வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



- பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு கொடுத்த ஒரு லட்சம் போதாது. மேலும் வின்செண்ட்டுடன் சேர்ந்து போலீஸ் காவலில் சித்திரவதைக்கு உள்ளான முத்து, மரியதாஸ் ஆகியோருக்கும் அரசு போதிய இழப்பீடு வழங்கவேண்டும்.

## 21. திண்டிவனம் - கோவிந்தசாமி

மதுரையில் கடந்த 14.9.99 அன்று அம்பேத்கர் சிலை சேதப்படுத்தப் பட்டது. சிலை அவமதிப்பு செய்தவர்களைக் கைது செய்யக் கோரி தமிழக மெங்கும் பல இடங்களில் மறியல்களையும், ஆர்ப்பாட்டங்களையும் தலித் அமைப்புகள் நடத்தின. 20ம் தேதி திண்டிவனத்திலும் அவ்வாறு மறியல் நடத்தப்பட்டது. அங்கு 'பாதுகாப்பு' என்ற பெயரில் போலீசார் குவிக்கப்பட்டனர். மாலை 7.30 மணிக்கு திண்டிவனம் எம்.ஜி.ஆர். காலனியிலுள்ள தலித் சமூகத்தைச் சேர்ந்த மிதிவண்டித் தொழிலாளி கோவிந்தசாமியை (வயது 55) காவல்நிலையத்திற்கு அடித்து இழுத்துச் சென்றுள்ளனர். கோவிந்தசாமியின் மனைவி பவுன் (சத்துணவு திட்டத்தில் உதவியாளராக பணிபுரிபவர்) மற்றும் சிலர் இரவு 11.30 மணிக்கு காவல்நிலையத்திற்குச் சென்று விசாரித்த போது, அங்கிருந்த பெண் போலீசார் கோவிந்தசாமியைக் காலையில் விட்டு விடுவதாகக் கூறியுள்ளனர். அதனை நம்பி அவர்களும் வீட்டுக்கு வந்து விட்டனர்.

இரவு மூன்று மணியளவில் கோவிந்தசாமியின் வீட்டுக்கு வந்த போலீசார் அவரது மகன் இராஜாவைக் போலீஸ்நிலையத்திற்கு கூட்டிச் சென்று தனி அறையில் அடைத்துள்ளனர். அப்போது திண்டிவனம் போலீஸ்நிலையத்தில் இருந்தவர்கள் மத்தியில் கோவிந்தசாமியை காணப்படவில்லை. மறுநாள் காலை ஆறுமணிக்கு இராஜாவையும் அனுப்பிவிட்டனர்.

பின்னர், இரயில் தண்டவாளம் அருகே கோவிந்தசாமி பிணமாகக் கிடப்பதாக 21ம் தேதி காலை 6.30 மணிக்கு தகவல் கிடைத்துள்ளது. அதைக் கேட்டு பவுன் மற்றும் அவர்களது மகன்கள் இராஜா, ஆனந்த் ஆகியோர் சென்று பார்த்துள்ளனர். கோவிந்தசாமியின் இடது நெற்றியில் ஆழமான காயமும், முதுகில் கம்பு மற்றும் இடைவாரினால் அடித்த தடிப்புகளும், சிராய்ப்புக் காயங்களும் காணப்பட்டுள்ளன.

செங்கல்பட்டு இருப்புப் பாதை போலீசார் சந்தேக மரணம் என்று வழக்கு பதிவு செய்து, சடலக் கூறாய்வுக்காகத் திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பியுள்ளனர். சடலக்கூறாய்வு ஒளிநாடாவில் பதிவு செய்யப்படவில்லை. மாலை மூன்று மணிக்கு பிரேதத்தைக் கொடுத்துள்ளனர். மாலை ஐந்து மணிக்கு வந்த வட்டாட்சியர் பவுனிடம் இறுதிச் சடங்குகளுக்காக மூவாயிரம் ரூபாய் கொடுத்துவிட்டு, வெள்ளைத் தாள்களில் கையெழுத்து பெற்றுள்ளார். முன்னூறுக்கும் மேற்பட்ட போலீசார் உடன்வர கோவிந்தசாமியின் உடலை


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போலீசாரே முன்னின்று எரித்து விட்டனர். பவுனை நீதி கேட்க விடாமல் அவரின் மேலதிகாரியான வட்டார வளர்ச்சி அதிகாரி மூலம் போலீசார் மிரட்டி வைத்துள்ளனர்.

**கண்டறிந்தவையும், பரிந்துரைகளும்**

- 21-ம் தேதி காலை மூன்று மணிக்கு கோவிந்தசாமியின் வீட்டுக்குச் சென்ற போலீசார் அவரது மகன் ராஜாவை போலீஸ்நிலையம் கூட்டிச் சென்று எந்தத் தகவலும் கூறாமல் காலை ஆறு மணி வரை வைத்திருந்து அனுப்பியுள்ளனர். இந்நிலையில், காலை ஆறு மணிக்கு பலத்த காயங்களுடன் ரயில் பாறை அருகே கோவிந்தசாமியின் பிரேதம் கிடத்தப்பட்டிருந்தது, போலீஸ் காவலில் நடந்த மரணத்தை மறைத்து தற்கொலை எனக் காட்டியிருப்பது போலீசாரின் திட்டமிட்ட சதியாகும்.
- போலீஸ் நிலையப் பொறுப்பு அதிகாரியான சார்பு ஆய்வாளர் ரஸ்கின் உட்பட அன்று பணிக்கு வந்த அதிரடிப்படையின் அதிகாரிகள் அனைவரும் கோவிந்தசாமியின் மரணத்திற்குப் பொறுப்பாக்கப்பட்டு, கோவிந்தசாமியை அடித்து கொலை செய்து, தடயங்களை அழிக்க முயன்ற குற்றங்களுக்காக மாவட்ட மனித உரிமை நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட வேண்டும்.
- பாதிக்கப்பட்ட கோவிந்தசாமியின் குடும்பத்தினருக்கு தக்க இழப்பீடு வழங்க வேண்டும்.

## 22. வாடிப்பட்டி - முருகேசன்

திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டில் தேனீர் கடையில் பணிபுரிந்து வந்த முருகேசன் என்பவர் (வயது 42) வேலை முடிந்து சொந்த ஊரான மதுரை மாவட்டம் வாடிப்பட்டிக்கு வந்துள்ளார். அங்கு இரவு 10.45 மணியளவில் மனைவியிடம் பணம் பெற்றுக் கொண்டு, அஜந்தா ஒயின்ஸ் சென்று மது பாட்டில் வாங்கிக் கொண்டு அருகிலிருந்த உணவு விடுதியில் புரோட்டா வங்கியுள்ளார்.

பின்னர் சிறிது நேரம் கழித்து மதுக்கடையில் ரூபாய் இருபதாயிரம் காணவில்லை என்றும், கடைக்கு கடைசியாக வந்தவர்கள் யாரென கற்பகம் உணவு விடுதியில் விசாரித்து அங்கிருந்த மூன்று பேரையும் அப்போது அவ்வழியே வந்த முருகேசன் ஆகிய நால்வரையும் விசாரித்து, உடைகளைப் பரிசோதித்துள்ளனர். மதுக்கடை ஊழியர் போலீஸ் நிலையத்திற்குச் சென்று கூறியதன் பேரில் அங்கு வந்த தலைமைக் போலீஸ்காரர் சுப்பையா அந்த நான்கு பேரையும் ஒரு ஆட்டோவில் ஏற்றி போலீஸ்நிலையத்திற்கு கொண்டு சென்றுள்ளார். மதுக்கடையைச் சேர்ந்த மூவர் அவர்களை பின் தொடர்ந்து சென்றுள்ளனர். சிறிது நேரத்தில் அக்கடையின் உரிமையாளர் ராஜேந்திரனும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போலீஸ்நிலையத்திற்கு வந்துள்ளார். மதுக்கடை அருகிலேயே பெட்டிக்கடை வைத்துள்ள முருகேசனின் சகோதரி விஜயாவும், மகன் பாலுவும் முருகேசனை அடித்துக் கூட்டிச் செல்வதைப் பார்த்துள்ளனர். போலீஸ்நிலையத்தில் அடித்ததால், அவர் கத்தியதையும் கேட்டுள்ளனர். இரவு 12.30 மணியளவில் மதுக்கடை ஊழியர் சேகர், விஜயாவிடம், "முருகேசனுக்கு நெஞ்சு வலி ஏற்பட்டு மோசமாக இருக்கிறார். அவர் மனைவியிடம் தெரியப்படுத்து" எனக் கூறியுள்ளார்.

முருகேசனின் மனைவி முத்துலெட்சுமி, விஜயா ஆகியோர் இரவு ஒரு மணியளவில் அரசு மருத்துவமனைக்குச் சென்று பார்த்தபோது முருகேசன் மயக்க நிலையில் கிடத்தப்பட்டிருக்கிறார். பரிசோதித்துப் பார்த்த மருத்துவர், முருகேசன் உடல் இறந்த பிறகே கொண்டு வரப்பட்டுள்ளது எனக் கூறியுள்ளார். மனைவி முத்துலெட்சுமியை மருத்துவமனையில் இருக்கச் சொல்லிவிட்டு, புகார் கொடுப்பதற்காக விஜயா போலீஸ்நிலையம் சென்றுள்ளார். போலீஸ்நிலையத்தில் அனைத்து விளக்குகளும் அணைக்கப்பட்டு போலீசார் யாரையும் காணாததால் பயந்து போன விஜயா திரும்பி விட்டார்.

16ம் தேதி காலையில் அ.தி.மு.க மற்றும் மார்க்சிஸ்ட் கட்சிக்காரர்கள் மறியல் செய்யப் போவதாக அறிவிக்கவே, போலீசார் பிரேதத்தைக் காட்டியுள் – ளனர். முருகேசனின் ஆணுறுப்பில் காயம் இருந்துள்ளது. கன்னத்திலும், அடிவயிற்றிலும் கன்றிய காயங்கள் காணப்பட்டுள்ளன. போலீசாரின் பதிலில் திருப்தியுறாது அவர்கள் சாலை மறியல் செய்துள்ளனர். போலீஸ்துறை உயரதிகாரி –களின் தலையீட்டால் முத்துலட்சுமி கொடுத்த புகாரின் பேரில் சந்தேக மரணம் என வழக்குப் பதிவு செய்து, கோட்டாட்சியரின் விசாரணைக்கு உத்தரவிட்டுள் – ளனர். சடலக் கூறாய்வு மதுரை அரசு மருத்துவமனையில் நடைபெற்றது.

ஆய்வாளர் முனியசாமியும், தலைமை போலீஸ்காரர் சுப்பையாவும் பணியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். கோட்டாட்சியரின் விசாரணை முடிவு தெரியவில்லை. அரசு தரப்பிலிருந்து எந்த நடவடிக்கையுமில்லை.

**கண்டறிந்தவையும், பரிந்துரைகளும்**

- அஜந்தா ஒயின்ஸ் உரிமையாளர் மற்றும் ஊழியர்களின் தூண்டுதல் பேரில் காவலர்கள் அடித்ததாலேயே பலத்த காயங்கள் ஏற்பட்டு முருகேசன் இறந்துள்ளார்.
- ஆய்வாளர் முனியசாமி மற்றும் தலைமைக் போலீஸ்காரர் சுப்பையா மட்டும் இடைநீக்கம் செய்யப்பட்டது போதாது. அன்று பணியிலிருந்த பிற போலீசார், அஜந்தா ஒயின்ஸ் உரிமையாளர் ராஜேந்திரன் மற்றும் ஊழியர்கள் அனைவரும் கொலைக்குற்றத்திற்காக மாவட்ட மனித உரிமை நீதிமன்றத் – தால் விசாரிக்கப்பட வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



- விதவையாகிவிட்ட முருகேசனின் மனவி முத்துலெட்சுமிக்கு அரசு இழப்பீடு வழங்க வேண்டும்.
- இறந்த முருகேசனின் மகளுக்கு கல்விச் சலுகையும், வேலை வாய்ப்பில் முன்னுரிமையும் அளிக்கப்பட வேண்டும்.

## 23. தர்மபுரி - இராஜேந்திரன்

கடந்த 15.10.99ம் தேதி மாலை சேலம் வள்ளுவர் சிலை அருகே வாகனங்களைச் சோதனையிட்ட சார்பு ஆய்வாளர் லெட்சுமணன், பதிவு எண் இல்லாமல் மோட்டார் சைக்கிளில் வந்த கிருபாகரனை விசாரித்துள்ளனர். கிருபாகரன் கொடுத்த தகவலின்பேரில், தர்மபுரியில் தள்ளுவண்டியில் பழவியாபாரம் செய்யும் இராஜேந்திரனை (வயது 35) 16ம் தேதி அதிகாலை இரண்டு மணியளவில் அவரது வீட்டில் கைது செய்து ஜீப்பில் ஏற்றி சேலம் கொண்டு சென்றுள்ளனர்.

செல்லும் வழியில் ஜீப்பில் சார்பு ஆய்வாளர் லெட்சுமணன் மற்றும் போலீசார் மூன்று பேர் அவரை அடித்து விசாரித்துள்ளனர். தனக்கு எதுவும் தெரியாது என இராஜேந்திரன் கூறவே, அவரது வாயில் துப்பாக்கியை வைத்து உண்மையைக் கூறுமாறு மிரட்டிய சார்பு ஆய்வாளர் லெட்சுமணன் எதிர்பாராத சமயத்தில் சுட்டு விடவே, அதே இடத்தில் இராஜேந்திரன் இறந்து விட்டார். இரு தினங்களுக்கு முன் லெட்சுமணனின் மாமனாருடைய இரு சக்கர வாகனம் ஒன்று காணவில்லை என்ற ஆத்திரமும் சுட்டதற்கு ஒரு கூடுதல் காரணமாக இருக்கலாம். இந்நிலையில் சேலம் நகரை நெருங்கிய அவர்கள் மீண்டும் தர்மபுரி சாலையில் திரும்பி வந்து, ஜீப்பில் செல்லும்போது இராஜேந்திரன் கைத்துப் பாக்கியை பறிக்க முயன்றதாகவும், அப்போது தற்செயலாக இரண்டு முறை வெடித்ததில் ஒரு குண்டு இராஜேந்திரன் வாயில் புகுந்து மரணமடைந்து விட்டார் என்றும் ராஜேந்திரன் பொது ஊழியர்களை அச்சுறுத்தியதாகவும் அதியமான் கோட்டை போலீஸ்நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளனர்.

இராஜேந்திரன் சுடப்பட்ட செய்தி 16ம் தேதி செய்தித்தாட்களில் வெளி வந்ததைப் பார்த்து, அவரது மனைவி சாந்தி, சகோதரர் சிவராஜ் மற்றும் உறவினர்கள் மருத்துவமனைக்கு சென்றபோது அங்கிருந்த போலீசார் அவரது உடலைப் பார்க்க அனுமதிக்கவில்லை. போலீசார் அவர்களை கோட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கூட்டிச் சென்றுள்ளனர். அங்கிருந்த வட்டாட்சியர் ரூபாய் ஒரு லட்சத்திற்கான காசோலையைக் கொடுத்து சில வெள்ளைத்தாட்களில் கையெழுத்து வாங்கிக் கொண்டு நடந்தவற்றைப் பெரிதுபடுத்த வேண்டாம் எனக் கூறியுள்ளார். மருத்துவமனைக்கு கூட்டிச் சென்று சடலக் கூறாய்வு செய்யப்பட்ட இராஜேந்திரன் பிரேதத்தை ஒப்படைத்துள்ளனர். முகம் சிதைந்தும், உடலின் பல இடங்களில் காயங்களும் காணப்பட்டுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பின்னர் முன்னூறுக்கும் மேற்பட்ட போலீசாரின் பாதுகாப்போடு ராஜேந்திரனின் பிரேதத்தை எரிக்க முயன்றுள்ளனர். உறவினர்கள் ஆட்சேபித் – ததன் பேரில் அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது. சார்பு ஆய்வாளர் லெட்சுமணன் மீது கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார். மற்ற போலீசார் மீது எந்த நடவடிக்கையுமில்லை.

**கண்டறிந்தவையும், பரிந்துரைகளும்**

- சார்பு ஆய்வாளரோடு மேலும் மூன்று போலீசார் ஜீப்பில் இருக்கின்றபோது முதல் தகவல் அறிக்கையில் கூறியபடி விபத்தாக துப்பாக்கி வெடிக்க வாய்ப்பில்லை. அப்படி வெடித்திருப்பினும் வாயின் உட்புறமிருந்து குண்டு வெளியேறும் சாத்தியமே இல்லை.
- வீட்டிலிருந்து இராஜேந்திரனைக் கூட்டிச் சென்றவர்கள் அவர் மரணமடைந்த பிறகு, அவரது வீட்டிற்குத் தெரிவிக்க முயற்சிகள் ஏதும் எடுக்கவில்லை. செய்தித்தாள் மூலம் அறிந்தே சென்றிருக்கிறார்கள்.
- அவரது மனைவி சாந்திக்கு வழங்கப்பட்ட இழப்பீடு ஒரு லட்சம் ரூபாய் போதாது. அதனை அதிகரித்துத் தருவதுடன், அப்பணத்தை லட்சுமணனிட – மிருந்தே வசூலிக்க வேண்டும்.
- சம்பவத்தன்று சார்பு ஆய்வாளருடன் சென்ற போலீசார் வெங்கடேசன், ஜெயராமன், அல்லாவுக்கவுண்டர், ஆகியோர் மீதும் சித்திரவதை செய்ததற்காகவும், கொலைக்கு உடந்தையாக இருந்ததற்காகவும், வழக்கு பதிவு செய்து, அனைவரும் மாவட்ட மனித உரிமை நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட வேண்டும்.

## 24. கரூர் - வேலுச்சாமி

கரூர் பேருந்து நிலையத்திற்கு அருகே உள்ள நகராட்சி தினசரி சந்தையில் வேலுச்சாமியும் (வயது 44), அவரது அண்ணன் பழனிச்சாமியும் காய்கறி வியாபாரம் செய்து வருகின்றனர்.

1999ம் வருடம் அக்டோபர் மாதம் 31ம் தேதி மாலை 4.30 மணியளவில் சீருடையின்றி குடிபோதையில் அங்கு வந்த தலைமைக் போலீஸ்காரர் அப்துல்கலாம் என்பவர், "யார் பூமிநாதன்? எங்கே அவன்?", எனக் கேட்டுள்ளார். "பூமிநாதன் பழனிச்சாமியின் மகன், அவன் இங்கு இல்லை. அவர் வந்தவுடன் கூறுகிறோம்", என வேலுச்சாமி கூறியுள்ளார். அதற்கு, "என்னடா திமிறாகப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


பேசுகிறாய்", எனக் கூறி வேலுச்சாமியின் சட்டையைப் பிடித்து இழுத்து அடித்துள்ளார். அவரது மகள் ரூபாவும் மற்ற கடைக்காரர்களும் "ஏன் அடிக்கிறீர்கள் ?" என்று கேட்டதற்கு "இதோ வருகிறேன்", என்று சென்றவர் போலீஸ்நிலையத்திற்கு தொலைபேசியில் தகவல் கொடுத்துள்ளார். சிறிது நேரத்தில் போலீசார் ஜெயராஜ், பைரவன் மற்றும் ஓட்டுநர் இராஜேந்திரன் ஆகியோர் ஒரு ஜீப்பில் வந்துள்ளனர். வேலுச்சாமியை அடித்து ஜீப் நின்றிருந்த சாலைக்கு இழுத்துச் சென்று, பூட்ஸ் கால்களால் மிதித்துள்ளனர். ஜீப்பின் மீது மோதிய வேலுச்சாமியின் நெற்றியில் காயமேற்பட்டுள்ளது. அவரை ஏற்றி காவல்நிலையத்திற்கு கொண்டு சென்றுள்ளனர். அண்ணன் பழனிச்சாமி நண்பர்கள் ரவி, கேசவன் ஆகியோர் பின் தொடர்ந்து காவல்நிலையத்திற்கு சென்றுள்ளனர்.

போலீஸ் காவல்நிலையத்தில் வேலுச்சாமியின் சட்டையைக் கழற்றி நான்கு போலீசாரும் மாறி மாறி அடித்துள்ளனர். பூட்ஸ் காலால் கொண்டு வயிற்றில் மிதித்துள்ளனர். மூக்கிலும் வாயிலும் இரத்தம் வடிய மயங்கி விட்ட வேலுச்சாமியை சுவற்றில் சாய்த்து வைத்துள்ளனர். தற்காலிக பொறுப்பிலிருந்த ஆய்வாளர் இரவிச்சந்திரன் போலீஸ்நிலையம் வந்துள்ளார். அங்கு வந்த தீக்கதிர் நிருபர் முருகேசன் கூறியதன் பேரில் மருத்துவமனைக்குச் செல்ல ஜீப்பில் ஏற்றியுள்ளார். ஆய்வாளர் "அரசு மருத்துவமனைக்கு வேண்டாம். அமராவதி மருத்துவமனைக்குக் கொண்டு செல்வோம்", எனக் கூறியுள்ளார். மாலை 5.30 மணிக்கு வேலுச்சாமியை பரிசோதித்த மருத்துவர் வேலுச்சாமி இறந்துவிட்டதாகக் கூறியுள்ளார்.

உடனே பிரேதத்தை போலீஸ்நிலையத்திற்கு கொண்டு வந்தனர். போலீசார் நால்வரும் தப்பி ஓடிவிட்டனர். அதிமுக மற்றும் மார்க்சிஸ்ட் கட்சியினரும், பொதுமக்களும் போலீஸ்நிலையத்திற்கு முன்பு கூடி ஆர்ப்பாட்டம் செய்யவே மாவட்ட போலீஸ்துறை கண்காணிப்பாளர், கோட்டாட்சியர் ஆகியோர் வந்துள்ளனர். இரவு இரண்டு மணிக்கு நான்கு போலீசார் மீதும் கொலைக் குற்றத்திற்காக வழக்கு பதிவு செய்து இரண்டு பேரைக் கைது செய்தனர்.

நவம்பர் முதல் தேதி காலை கரூர் அரசு மருத்துவமனையில் நான்கு மருத்துவர்கள் சடலக் கூறாய்வு செய்துள்ளனர். கூறாய்வு ஒளிநாடாவில் பதியப்பட்டது. அதன்பின் உடலைப் பெற்று ஊர்வலமாகச் சென்று எரித்துள்ளனர்.

**கண்டறிந்தவையும், பரிந்துரைகளும்**

- பூமிநாதனைத் தேடி வந்த போலீஸ்காரர் அப்துல் சீருடையின்றி, குடிபோதையோடு வந்திருக்கிறார். அவர் தொலைபேசியில் கூறியதைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கேட்டு, ஜீப்பில் வந்த ஜெயராஜ், பைரவன், டிரைவர் ராஜேந்திரன் ஆகியோர் கடைக்கு முன்பே வேலுச்சாமியை அடித்து ஜீப்பில் ஏற்றியுள்ளனர். போலீஸ்நிலையத்தில் மிதித்ததால் தான் வேலுச்சாமி மரணமடைந்துள்ளார்.

- நிலையப் பொறுப்பு அதிகாரி என்ற முறையிலும், தனியார் மருத்துவமனைக்கு கொண்டு செல்வதன் மூலம் சட்ட நடவடிக்கைகளிலிருந்து தப்பிக்க முயன்ற –தற்காகவும் ஆய்வாளர் ரவிச்சந்திரன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- நான்கு போலீசார் மீதும் பதியப்பட்டுள்ள கொலை வழக்கை, மத்திய புலனாய்வுத்துறை போன்ற பிற அமைப்புகள் புலன் விசாரணை செய்ய வேண்டும்.
- மரணமடைந்த வேலுச்சாமியின் குடும்பத்தினருக்கு அரசு இழப்பீடு வழங்க வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## போலீஸ் காவலில் மரணங்கள் - பொதுவான பரிந்துரைகள்

- ஒருவர் காவலில் இருக்கும்போது மரணமடைந்தால் சடலக் கூறாய்வு நடத்தப்பட்டு ஒளிநாடாவில் பதிவு செய்ய வேண்டும் எனவும், போலீஸ் மரணம் ஏற்பட்ட 24 மணி நேரத்திற்குள் தேசிய மனித உரிமை ஆணையத்திற்கு அறிக்கை அளிக்க வேண்டும் எனவும் தேசிய ஆணையம் அனைத்து மாநில அரசுகளையும் கேட்டுக் கொண்டுள்ளது. எனினும் பல்வேறு நிகழ்வுகளில் இவ்வழிமுறைகள் கடைபிடிக்கப்படுவதில்லை. எனவே மேற்கண்ட வழிமுறைகள் சட்டமாக்கப்பட்டு, கடைபிடிக்கப்படுவது உறுதி செய்யப்பட வேண்டும்.

- ஒருவரைக் கைது செய்யும் போது கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள் பற்றி, உச்சநீதிமன்றம் டி.கே. பாசு எதிர் மேற்கு வங்க அரசு என்ற வழக்கில் விரிவாகக் கூறி உள்ளது. நீதிமன்ற உத்தரவுப்படி இந்த வழிமுறைகள் சில போலீஸ் நிலையங்களின் சுவர்களில் எழுதி வைக்கப்பட்டாலும் போலீஸ் காவல் குறிப்பு தருவதோ, பிற வழிகளை பின்பற்றுவதோ இல்லை. உச்ச நீதிமன்றத்தில் தீர்ப்பு சட்டமாகவே கருதப்பட வேண்டும் என்கிற அரசியலமைப்புச்சட்டத்தின் கூற்று நடைமுறையில் கடைப்பிடிக்கப்படவில்லை. உச்ச நீதிமன்றத்தின் பதினோரு கட்டளைகளும் கடைப்பிடிக்கப்படுவதை மாநில அரசுகள் உறுதி செய்ய வேண்டும். கைதியை நீதிமன்றக் காவலுக்காக நடுவர் முன் முன்னிலைப்படுத்தும்போது மேற்கண்ட வழிமுறைகள் கடைப் பிடிக்கப்பட்டுள்ளதா என சரி பார்க்க வேண்டும். சரி பார்க்கத் தவறும்போது, நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்திற்கு நடுவரும், போலீசாரும் உடந்தையாக இருக்கின்றனர் எனக்கருதி அவர்கள்மீது வழக்குத் தொடர வேண்டும். மேலும் மேற்கூறிய வழிமுறைகளை கடைப்பிடிக்காத போலீஸ் நிலையத்திற்குப் பொறுப்பாளரான மாவட்ட போலீஸ் கண்காணிப்பாளரும் சட்ட மீறலுக்கு பொறுப்பாக்கப்பட வேண்டும். தேசிய மனித உரிமை ஆணையமும், மாநில மனித உரிமை ஆணையங்களும் தாங்களாகவே (Suo motto) மனித உரிமை மீறல்கள் குறித்த சம்பவங்களை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்றும், மனித உரிமைப் பாதுகாப்புச் சட்டம் கூறுகிறது. எனினும் எந்த ஒரு வழக்கிலும் ஆணையங்கள் முன் முயற்சி எடுத்து விசாரணை மேற்கொண்ட தாகத் தெரியவில்லை. எனவே, ஆணையங்கள் தங்கள் அதிகாரத்தை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும்.

- போலீஸ்நிலையங்களிலோ, காவலிலோ உள்ள போது மரணம் ஏற்பட்டால் சந்தேக மரணம் என வழக்கு பதிந்து கோட்டாட்சியரின் விசாரணைக்கு உத்தரவிடப்படுகிறது. கோட்டாட்சியரின் விசாரணை அறிக்கையை அரசுக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மட்டும்தான் அளிக்கப்படுகிறது. பாதிக்கப்பட்டவர்களுக்கு தரப்படுவதில்லை. இந்நடைமுறைகளை மாற்றி, மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கென தனியாக புலன் விசாரணை அமைப்பு ஏற்படுத்த வேண்டும். பாதிக்கப்பட்டவர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் விசாரணையின்போது உடனிருக்க அனுமதிக்க வேண்டும். முதல் தகவல் அறிக்கை, பிரேத விசாரணை அறிக்கை, சடலக்கூறாய்வு அறிக்கை மற்றும் கோட்டாட்சியரின் அறிக்கைகள் பாதிக்கப்பட்டோருக்கு கிடைக்க வழிவகை செய்ய வேண்டும்.

- மனித உரிமை மீறல் வழக்குகளில் ஒவ்வொரு தனி நபரின் குற்றப் பொறுப்பு என்னவென்று ஆராயாமல், பணியிலிருந்த போலீசார், போலீஸ் நிலைய பொறுப்பு அதிகாரி, விசாரணைக்கு உத்தரவிட்ட போலீஸ் அதிகாரிகள் அனைவரையும் குற்றப் பொறுப்பேற்கச் செய்ய வேண்டும்.

- **முதல் நோக்கிலேயே குற்ற வழக்கு இருப்பது தெரிய வந்தால், வெறுமனே இடமாற்றம் அல்லது இடைநீக்கம் செய்வதும் கோட்டாட்சியர் விசாரணைக்கு பிறகு மீண்டும் நிர்வாக விசாரணை என காலம் கடத்தும் போக்கும் கைவிடப்பட்டு, சம்பந்தப்பட்டவர்கள் மீது மாவட்ட மனித உரிமை நீதி** மன்றத்தில் வழக்குத் தொடரவேண்டும். வழக்கு முடியும்வரை அவர்களை பணியில் அமர்த்தக்கூடாது.

- போலீஸ் இறப்பவர்களின் குடும்பத்தினருக்கு சில வழக்குகளில் மட்டுமே ரூபாய் ஒரு லட்சம் இழப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது. இத் தொகை உயர்த்தித் தரப்பட வேண்டும். போலீஸ் மரணம் ஏற்படும் அனைத்து வழக்குகளிலும் வழங்க வேண்டும். அவ்வாறு வழங்கப்படும் தொகையை தவறிழைத்த அதிகாரிகளிடமிருந்தே வசூலிக்க வேண்டும்.

- கோட்டாட்சியர் அறிக்கை மீது அரசு பரிந்துரைந்தால், (தவறிழைத்த அதிகாரிகள் மீது) கோட்டாட்சியரே நடுவர் மன்றத்தில் தனிநபர் முறையீடாக புகார் செய்கிறார். இந்நடைமுறை கைவிடப்பட்டு, மாவட்ட மனித உரிமை நீதிமன்றங்களில் விசாரிக்கப்பட வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சடலக்கூறாய்வு ஒளிநாடா

காவல் நிலையம், சிறை போன்ற இடங்களில் நிகழும் காவல் மரணங்களின்போது செய்யப்படுகின்ற சடலக்கூறாய்வு ஒளிநாடாவில் பதியப்பட வேண்டும் என தேசிய மனித உரிமை ஆணையம் ஏற்கெனவே உத்தர விட்டுள்ளது. அதன்படி தமிழக அரசும் உத்தரவு பிறப்பித்து, ஒரு சில சம்பவங்களில் ஒளிப்படமும் எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு ஒளிப்படம் எடுப்பதில் உள்ள சிக்கல்கள், குறைகள், இடர்பாடுகள் மற்றும் அவற்றை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகள் குறித்து தடய அறிவியல் வல்லுநர்கள், மனித உரிமை செயல்பாட்டாளர்கள் மற்றும் விசாரணை அதிகாரிகள் பல கருத்துக் – களையும், ஐயப்பாடுகளையும் முன் வைக்கின்றனர்.

எனவே, காவலில் மரணம், சித்திரவதை, பாலியல் வன்முறை போன்ற மனித உரிமை மீறல் வழக்குகளில் ஒளிப்படம் மற்றும் புகைப்படம் எடுப்பதில் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளை வகுப்பதற்காக 1997 டிசம்பர் 14–ம் தேதி சென்னை சமூகப்பணிக் கல்லூரியில் வட்ட மேசை கலந்தாய்வு ஒன்று நடைபெற்றது.

சென்னையிலுள்ள சட்ட மருத்துவ நிறுவனமும் (Institute of Legal Medicine) மக்கள் கண்காணிப்பகம்–தமிழ்நாடு அமைப்பும் இணைந்து ஏற்பாடு செய்த இக்கூட்டத்தில் முன்னாள் மருத்துவக் கல்வி இயக்குநர், முன்னாள் மற்றும் தற்போதைய தடய மருத்துவ நிறுவன இயக்குநர்கள், தமிழ்நாடு தடய அறிவியல் பரிசோதனைக் கூடங்களின் இயக்குநர், அரசு மருத்துவர்கள் சங்கத் தலைவர், தொடர்பு சாதனத்துறை வல்லுநர்கள், தடய அறிவியல் மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், மனித உரிமை செயல்பாட்டாளர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

குற்றம் நடந்த இடத்தை ஒளிநாடாவில் பதிவு செய்வது மக்கள் மத்தியில் நம்பிக்கையை உருவாக்கும். பல சமயங்களில் குற்றவாளிகள் கொடுக்கிற ஒப்புதல் வாக்குமூலங்களையே நம்பமுடியாததாகிவிடும் சூழலில், உண்மையை வெளிக் கொண்டு வருவது தடய அறிவியலாரின் கைகளிலேயே உள்ளது என்றார் கூட்டத்திற்கு தலைமை வகித்த முன்னாள் காவல்துறைத் தலைவர் திரு.வி.ஆர். லட்சுமி நாராயணன். சடலக்கூறாய்வுத்துறையில் மருத்துவர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்க வேண்டும் என்றும் மருத்துவமனைகளில் பிரேதப் பரிசோதனைக் கூடங்களின் தரத்தை உயர்த்த வேண்டும் என்றும் கூறினர்.

காவல் மரண சடலக்கூறாய்வின் ஒளிநாடாப் பதிவுக்கான தரவுகள் (Standards) கீழே தரப்பட்டுள்ளன:

மரணம் நடந்த இடத்தில் நடக்கும் பிரேத விசாரணையை மாவட்ட நீதிபதியே நடத்த வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சடலக்கூறாய்வு இரண்டு (அ) அதற்கு மேற்பட்ட மருத்துவ குழுவால் நடத்தப்பட வேண்டும். அவர்களும், தடய அறிவியல் மருத்துவர்களாக இருக்க வேண்டும். அக்கூறாய்வு தடய அறிவியல் ஆய்வக வசதியுள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நடத்தப்பட வேண்டும். எந்தச் சூழலிலும் இயற்கையான சூரிய ஒளியிலேயே நடத்த வேண்டும்.

உடலில் உள்ள துணிகள் மற்றும் பிற பொருட்களை ஒளிநாடாவில் பதிய வேண்டும். அவற்றில் உள்ள கறைகள், கிழிசல்கள், துணிகள் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து எடுக்க வேண்டும்.

கூறாய்வு மேசையில் கிடத்தப்பட்டிருக்கும் உடலின் முன் பகுதியையும், பின்பகுதியையும் துடைப்பதற்கு முன்னும், துடைத்த பின்னும், ஒளிநாடாவில் பதிவு செய்யப்பட வேண்டும்.

உதடு போன்ற இடங்களில் இரத்த வெடிப்புக்கு அடையாளமாக புள்ளிகள் ஏதேனும் இருந்தால் அவை ஒளிப்பதிவு செய்யப்பட வேண்டும்.

**வெளிக்காயங்கள்**

தலை, கழுத்து, குரல்வளை, உடலின் வலது, இடது, முன், பின் பகுதிகளில் காணப்படும் காயங்களை வரிசைப்படி ஒளிப்பதிவு செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு காயத்திற்கும் தனி எண் கொடுத்து, காயத்தினருகில் குறியிட வேண்டும்.

எலும்புகள் உடைந்ததாக தெரிந்தால் அதனை வெளிக்காட்டி ஒளிப்பதிவு பதிவு செய்ய வேண்டும்.

மூளையை வெளிக்காட்டுவதும், அப்படி வெளிக்காட்டி எடுப்பதும் பதிவு செய்யப்பட வேண்டும்.

மண்டைஓட்டின் உட்புறம் முதற்கொண்டு, அதில் ஏற்பட்டுள்ள முறிவுகள் தெரியுமாறு எடுக்க வேண்டும். நெஞ்சு, கழுத்து ஆகியவற்றின் உட்சுவர் வரை வெளிக்காட்டி பதிவு செய்ய வேண்டும். இவ்வாறு பல்வேறு குறிப்பான ஆலோசனைகள் வழங்க வேண்டும்.

◆◆◆



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# II. வதை

## 1. பேராசிரியர் கே.வி. இராஜேந்திரன்

சென்னை மாநிலக் கல்லூரியில் இயற்பியல் பேராசிரியராக பணிபுரிபவர் கே.வி. ராஜேந்திரன் (வயது 35). நாகை மாவட்டத்தின் தரங்கம்பாடி தாலுகாவில் மாணிக்கப்பங்கு (அஞ்சல்) பெருமாள்பேட்டை கிராமத்தில் இவரது பெற்றோர்கள் திரு.கே.வரதராஜனும், திருமதி. தனலட்சுமியும் வசித்து வருகின்றனர். ராஜேந்திரன் சென்னை ராயபுரத்திலுள்ள சகோதரி கஸ்தூரியின் இல்லத்தில் (கதவு இலக்கம் 9, திருவேங்கட நாயக்கன் தெரு, ராயபுரம், சென்னை–600 031) வசித்து வருகிறார். கௌரவமான விவசாய குடும்பத்தைச் சேர்ந்த ராஜேந்திரன் மீதோ அவரது குடும்பத்தினர் மீதோ எந்த வழக்குகளும் இல்லை. ராஜேந்திரனின் தந்தையான திரு.வரதராஜன் மாணிக்கம்பங்குவின் பஞ்சாயத்து தலைவராக மூன்று முறை பதவி வகித்தவர்.

### சம்பவம்

பெருமாள் பேட்டைக்குக் சென்று விநாயகர் சதுர்த்தியை கொண்டாடி விட்டு அங்கிருக்கும் பெற்றோர்களுடன் சில நாட்கள் தங்கிடத் திட்டமிட்டபடி ராஜேந்திரன் 1998 ஆகஸ்ட் 26ம் தேதி சென்னை–தரங்கம்பாடிக்கு அரசு போக்குவரத்துக்கழகப் பேருந்தில் பயணம் செய்தார். பெருமாள்பேட்டைக்கு இரவு 10 மணிக்கு வந்து சேர்ந்த ராஜேந்திரன் அங்கு தனது பெற்றோர் இல்லத்தில் இரவு உணவருந்தி விட்டு, பெருமாள்பேட்டையின் முதன்மைச் சாலையில் அவர்களுக்குச் சொந்தமான பலசரக்கு கடையில் தனது இளைய சகோதரர் திரு.கண்ணனுடன் சென்று படுத்துக் கொண்டார். அப்போது இரவு சுமார் 11 மணியளவில் மயிலாடுதுறை கோட்டாட்சியர் கருணாகரன் தலைமையில் 10 பேர் கடையைத் தட்டி உள்ளே வந்துள்ளனர். கடைக்குள் வந்த அவர்கள் தூங்கிக் கொண்டிருந்த ராஜேந்திரனை எழுப்பி, அருகே நின்றிருந்த ஒரு வாகனத்தில் ஏற்றிக் கொண்டு சென்றனர். அந்த வாகனத்தில் ராஜேந்திரன் அமர்வதற்கு இடமில்லாதலால், அவரை முழங்காலிடச் செய்தனர். வண்டியில் செல்லும் போது, "நீ என்ன இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆசிரியரா ?" என்று ராஜேந்திரனை கோட்டாட் – சியர் கேட்டுள்ளார். அதற்கு அவர் மறுக்கவே, "உன்னுடைய பெயர் என்ன பிரசாத்தா" என்ற கேட்டார். அதற்கும் அவர், "இல்லை" என்று பதிலளிக்கவே, மீண்டும், "தேக்குமரம் கடத்தப்பட்டது தொடர்பாக ஏதாவது தவறான தகவல் கொடுத்தாயா ?" என்று ராஜேந்திரனிடம் கேட்டு அவர் அந்த விஷயம் குறித்து தனக்கு எதுவுமே தெரியாது என்று கூறவும், வண்டிக்குள் இருந்த விளக்குகளை


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அணைத்து விட்டு, ராஜேந்திரனின் கன்னங்களில் கோட்டாட்சியர் கருணாகரன் மாறி மாறி அறைந்துள்ளார். வண்டி பெருமாள்பேட்டையிலிருந்து 7 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள தரங்கம்பாடி தாலுகா அலுவலகத்திற்கு வண்டி சென்றது.

இந்த தரங்கம்பாடி அலுவலகத்தில் ஒரே ஒரு காவலாளி மட்டுமே இருந்துள்ளார். தரங்கம்பாடி தாலுகா அலுவலத்திலிருந்த 10 மேஜைகள் இருந்த பெரிய அறை ஒன்றுக்கு ராஜேந்திரன் கூட்டிச் செல்லப்பட்டார். அறைக்குள் சென்றவுடன், "இவ்விஷயத்தை செய்தித்தாளில் வெளியிடுவாயா?" என்று கேட்க, ராஜேந்திரன் மறுக்கவும் அவரை மீண்டும் கோட்டாட்சியர் கன்னத்தில் அறைந்துள்ளார். இந்த அலுவலகத்தையொட்டியே தரங்கம்பாடி தாலுகா போலிஸ் நிலையம் உள்ளது. அந்த அலுவலக அறையில் நின்றிருந்த சீருடைய அணியாத தலைமைக் காவலர் ஒருவரைப் பார்த்து, "இவரைக் கவனியுங்கள்" என்று உத்தர விட்டுள்ளார். "இவன் தலையணையின்றி கடையிலுள்ள தரையில் தூங்குவதைப் பார்த்தால் நக்சலைட்டாக இருப்பான் போலிருக்கிறது", என்று கூறி விட்டு, "இவனை அடிக்கும் போது காயம் ஏற்படாமல் அடியுங்கள்", என்றும் உத்தர விட்டுள்ளார். உடனே தலைமைக் காவலர் காலால் எட்டி உதைத்து அடித்துள்ளார். வலி தாங்காத ராஜேந்திரன் தான் ஒரு பேராசிரியர் என்பதற்கான அடையாள அட்டையை கோட்டாட்சியரிடம் காண்பித்துள்ளார். அதை ராஜேந்திரன் கையிலிருந்து பிடுங்கி அதை காலில் போட்டு மிதித்துள்ளார். கோட்டாட்சியர் பின்னர் ராஜேந்திரனை இரு மேஜைகளுக்கு இடையில் தரையில் உட்கார வைத்து மீண்டும் கன்னத்தில் அறைந்துள்ளார்.

இதன் பிறகு, கோட்டாட்சியர் கருணாகரன், ராஜேந்திரனின் இரண்டு தோள்பட்டைகளையும் பிடித்து ராஜேந்திரன் முகத்துக்கு நேரே நின்று கொண்டு, திடீரென்று அவர் தனது கால் முட்டியைக் கொண்டு பிறப்புறுப்பை பலமாகத் தாக்க, வலி பொறுக்க முடியாமல், அலறி பின் வாங்கிக் குனிந்த ராஜேந்திரன் தலையின் பின்புறம் கோட்டாட்சியர் தனது கையிலுள்ள டார்ச் லைட்டினால் ஓங்கி பலமாக அடித்துள்ளார். இதனால் சிறிது இரத்த காயம் ஏற்பட்டதோடு தலையின் பின்புறம் வீங்கி புடைத்து விட்டது.

தொடர்ந்து விழுந்த தாக்குதல்களினால் நிலை குலைந்த ராஜேந்திரன் தன் இடது கையை மேஜையின் மீது ஊன்றியபடி நின்றுள்ளார். அப்போது கோட்டாட்சியர் ராஜேந்திரனிடம் அவர் தனக்கு தொலைபேசி செய்து தேக்கு மரம் கடத்தியது தொடர்பாக தவறான தகவலை அறிவித்ததைப் பற்றி ஒரு வெள்ளைத்தாளில் எழுதித் தருமாறு கேட்டார். ராஜேந்திரனை "பப்ளிஷ்" (Publish) என்ற ஆங்கில வார்த்தையை உச்சரிக்குமாறு கூறி, ராஜேந்திரன் "பப்ளிஷ்" ஆங்கில வார்த்தையை உச்சரித்த போது அவருடைய குரலும், உச்சரிப்பும் தனக்கு தொலைபேசியில் பேசியவரின் குரலும், ஒரேமாதிரியாக இருப்பதாகக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கோட்டாட்சியர் கூறினார். ராஜேந்திரன் கோட்டாட்சியர் கேட்ட மாதிரி எழுதித் தர மறுத்தபோது, கோட்டாட்சியர் தனது கையிலுள்ள டார்ச் லைட்டினால் மேஜையின் மீது கையை ஊன்றி நின்றிருந்த ராஜேந்திரனின் கையை ஓங்கி அடித்தார். இதனால் ராஜேந்திரனின் இடது கை விரல்கள் மூன்றிலும் பலத்த காயம் ஏற்பட்டது. வலி பொறுக்க முடியாமல் அலறிய ராஜேந்திரனிடம் எட்டு வெற்று வெள்ளைத்தாள்களில் கையெழுத்து வாங்கிக் கொண்டனர். இதனைத் தொடர்ந்து ராஜேந்திரன் கையெழுத்து போட்ட வெற்று வெள்ளைத்தாள்களை கோட்டாட்சியர் தன்னுடன் இருந்த ஒருவரிடம் கொடுத்து கார்பன்தாளையும் கொடுத்து 2 வட்டாட்சியர்களின் உதவியுடன் ராஜேந்திரன் கொடுத்ததாக வாக்குமூலங்களை தயாரிக்க கூறியுள்ளார்.

வாக்குமூலம் எழுதப்பட்டு முடிந்தவுடன், அதை ராஜேந்திரனை விட்டு சத்தமாக படிக்கக் கூறியுள்ளார். அந்த வாக்குமூலத்தில், "கோட்டாட்சியருக்கு நான் தொலைபேசி செய்தேன். அப்போது கோட்டாட்சியர் தேக்குமரம் கடத்தியது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையெனில், தான் இவ்விஷயத்தை உயரதிகாரிகளுக்கு தெரிவித்து விட்டு, செய்தித் தாளில் வெளியிடப் போகிறேன். சுங்க இலாக்கா மற்றும் போலீஸ் அதிகாரிகளுக்கும் தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். தேக்குமரம் கடத்தியவர்களிடமிருந்து போலீஸ் பணம் பெற்றதால் இவ்விஷயத்தில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இவ்விஷயத்தில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லையெனில், இந்தியன் எக்ஸ்பிரஸில் வெளியிடப் போவதாகவும், அப்பத்திரிகையின் ஆசிரியர் பிரசாத் நான்தான்" என்றும் எழுதப்பட்டிருந்தது. இதை ராஜேந்திரன் படித்து, கையெழுத்துப் போட்டதும், அவரது கையெழுத்திற்கு அடியில் கோட்டாட்சியர் இப்புகாரை போலீசாருக்கு அனுப்புவதாக கையொப்பமிட்டுள்ளார். அதன் பின்னர் போலீஸ் நிலையத்திற்கு வந்த ஓர் ஓய்வு பெற்ற துணை ஆய்வாளர் ராஜேந்திரனை சந்தித்திருக்கிறார். அருகிலிருந்த தரங்கம்பாடி போலீஸ் நிலையத்தில் ராஜேந்திரன் மிகவும் பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டிய பயங்கரமான கைதி என்று அங்கிருந்த போலீசாரிடம் கூறிவிட்டுச் சென்றுள்ளார். ராஜேந்திரன் போலீஸ் நிலையத்தினுள் கொண்டு செல்லப்பட்டதும், அவர் அணிந்திருந்த வேட்டியையும், சட்டையையும் அவிழ்க்கச் சொன்ன போலீசார் அவர் 50 ரூபாயைக் கொடுத்தவுடன் எதுவும் பேசாமல் வேட்டி சட்டையுடன் இருக்க அனுமதித்துள்ளனர். அவர் அணிந்திருந்த 18 ஆயிரம் மதிப்புள்ள தங்க மோதிரத்தை போலீசார் பிடுங்கி வைத்துக் கொண்டனர். (அது இன்றுவரை போலீசார் வசமே உள்ளது)

இதனைத் தொடர்ந்து போலீஸ் நிலையத்திலிருந்த மேஜை ஒன்றுடன் இரும்பு சங்கிலியால் ராஜேந்திரனின் இடதுகாலைப் பிணைத்து, மேஜையுடன் சேர்த்து கட்டி வைத்தனர். இவ்விலங்கின் சாவியை போலீசார் எடுத்துச் சென்று விட்டனர். சங்கிலியால் காலில் கட்டப்பட்ட ராஜேந்திரன் நீண்ட நேரம் நிற்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முடியாமல் அருகிலிருந்து பெட்டி ஒன்றில் அமர்ந்திருக்கிறார். இதனைப் பார்த்து ராஜேந்திரனைத் திட்டிய போலீஸ்காரர் ஒருவர் அவரைத் தரையில் உட்காரச் சொல்லியிருக்கிறார். அதிகாலை 3 மணியளவில் அவர் சிறுநீர் கழிக்கச் செல்லும் போது கூட, அவர் காலில் கட்டிய சங்கிலியை போலீஸ்காரர் ஒருவர் இழுத்துக் கொண்டு, நாயைப் போல அவரைக் கழிப்பிடத்திற்கு அழைத்துச் சென்றுள்ளார். மறுநாள் மதியம் 12 மணியளவில் தரங்கம்பாடி தாலுகா போலீஸ் நிலையத்தி லிருந்து மயிலாடுதுறை நடுவர் நீதிமன்றத்திற்கு ராஜேந்திரன் கொண்டு வரப் பட்டார். அங்கு அவருடன் திரு.ராஜகோபாலன் மற்றும் திரு.ராஜேந்திரன் ஆகிய இரு போலீசார்கள் உடன் வந்துள்ளனர்.

மறுநாள் மதியம் 2.30 மணிக்கு நீதிபதி முன்னர் நிறுத்தப்பட்டார். அதற்கு முன்னதாக, ராஜேந்திரன் தரங்கம்பாடி தாலுகா அலுவலகத்தில் நடந்த விஷயங்கள் எதையும் நீதிபதியிடம் கூறக் கூடாது. அப்படிக் கூறினால் இன்னும் நிலைமை மோசமாகும் என்று அந்த உடன் வந்த இரு காவலர்களும் அவரை மிரட்டினர். இதனால், அஞ்சிய ராஜேந்திரன் நீதிபதியிடம் எதையும் கூறவில்லை. நீதிபதியும் இவ்விஷயம் குறித்து எதையும் விசாரிக்கவில்லை.

பின்னர், தாலுகா அலுவலகத்தையொட்டியுள்ள பொறையாரிலுள்ள கிளைச்சிறையில் ராஜேந்திரன் அடைக்கப்பட்டார். பின்னர் 27ம் தேதி அன்று பிற்பகல் 3.30 மணியளவில் அச்சிறையின் சிறை அதிகாரி (ஜெயிலர்)யிடம் தனக்கு நேர்ந்த அனைத்து விஷயங்களையும் விரிவாக விளக்கியுள்ளார். அச்சிறையில் ராஜேந்திரனுடன் அதே அறையில் இருந்த துருவிளையாட்டம் பஞ்சாயத்து தலைவரும் அன்று இரவு பக்கத்து கட்டிடத்திலிருந்து வலி பொறுக்காத ஒருவர் அலறும் குரலைக் கேட்டதாக கூறியுள்ளார். இந்த சப்ஜெயில் தாலுகா அலுவலகத்திற்கு அடுத்ததாக உள்ளது என்பதும், கிளைச் சிறையிலிருந்தே அதைப் பார்க்க முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதனைத் தொடர்ந்து 28ம் தேதியன்று காலை 11.30 மணியளவில் தனது உதவியாளருடன் சிறைக்கு வந்த மருத்துவரை ராஜேந்திரன் சந்தித்துப் பேசியுள்ளார். மருத்துவரிடம் தனக்கு நேர்ந்த கொடுமைகளை ராஜேந்திரன் விளக்கி கூறியிருக்கிறார். இதனைக் கேட்ட அம்மருத்துவர் ராஜேந்திரனுக்கு சில மருந்துகளையும், வெளியிலுள்ள மருந்துகடையில் வாங்குவதற்கு சில மருந்துகளையும் ஒரு மருத்துவச் சீட்டில் எழுதித் தந்திருக்கிறார். ராஜேந்திரன் கூறிய விஷயங்களை சிறை அதிகாரி முறையாக பதிவு செய்துள்ளார். பின்னர் ராஜேந்திரனை அன்றே பிணையில் விடப்போவதாகவும் மருத்துவரிடம் சிறை அதிகாரி தெரிவித்திருக் கிறார். பிணையில் விடப்படவுள்ள ராஜேந்திரனை நாகையிலுள்ள அரசு மருத்துவ மனைக்கு சென்று அங்கு சிகிச்சை எடுக்க எந்த ஆலோசனையையும் அவர் கூறவில்லை. அதன் பின்னர், 28ம் தேதி 2.30 மணியளவில் பிணையில் ராஜேந்திரன் வெளியே விடப்பட்டுள்ளார். வீட்டிற்குச் சென்றவுடன், ஏற்கெனவே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தாலுகா அலுவலகத்தில் நடந்த சித்ரவதையால், அவமானமடைந்த ராஜேந்திர னிடம் பலரும் அவருக்கு நடந்த சம்பவம் குறித்து விசாரித்ததால் மேலும் வேதனையினால் கூனிக் குறுகிப் போனார். கோட்டாட்சியர் தனது கல்லூரிப் பேராசிரியர் வேலைக்கும் ஏதாவது பாதகம் விளைவித்து விடுவார் என்று அஞ்சிய ராஜேந்திரன் விரைந்து சென்னைக்குச் சென்று விட்டார். அங்கு தமிழ்நாடு அரசு க்ல்லூரி ஆசிரியர்கள் சங்கத்தின் பொதுச்செயலர் டாக்டர் பொன் காளிதாசை உடனடியாக சந்தித்து தனக்கு நேர்ந்த வதைகளை கூறியிருக்கிறார். பின், அவரின் உதவியுடன் புகார் மனு ஒன்றைத் தயாரித்து அதை தமிழக முதல்வருக்கும் மற்ற அதிகாரிகளுக்கும் அனுப்பியுள்ளார். இதனைத் தொடர்ந்து பாலவாக்கத்திலுள்ள தனது குடும்ப மருத்துவர் டாக்டர் நீலமேகத்திடம் சென்று மருத்துவச் சிகிச்சையும் பெற்றுள்ளார். டாக்டர் பொன்காளிதாஸ் கொடுத்த பத்திரிகை செய்தி இந்தியன் எக்ஸ்பிரஸில் வெளியானது.

## 2. வீரப்பனைப் பிடிப்பதற்காக அமைக்கப்பட்ட சிறப்பு அதிரடிப் படையினரால் நிகழ்த்தப்பட்ட சித்ரவதைகள்

சந்தனக் கடத்தல் வீரப்பனைப் பிடிப்பதற்காக கர்நாடக, தமிழக அரசுகள் சிறப்பு அதிரடிப்படையை 1992ல் நிறுவி, அதன் சிறப்பு முகாம்களை தமிழக–கர்நாடக எல்லையோர கிராமங்களில் அமைத்தன. தமிழ்நாட்டில் சேலம், ஈரோடு, தர்மபுரி மாவட்டங்களிலும், கர்நாடகத்தில் சாம்ராஜ் நகர் மாவட்டத்திலும், வீரப்பனைப் பிடிக்கும் பணியில் மும்முரமாக ஈடுபட்ட சிறப்பு அதிரடிப்படையினர் அப்பகுதியில் வசிக்கும் அப்பாவித் தமிழ் மக்களை சொல்லொண்ணா சித்திர வதைகளுக்கு உட்படுத்தினர்.

'தடா' என்ற கருப்புச் சட்டம் வழங்கிய பாதுகாப்புப் போர்வையில் இந்த சிறப்பு அதிரடிப்படையினர் நிராயுதபாணிகளான அப்பாவி பழங்குடியின தமிழ்மக்கள் மீது ஏவிய தாக்குதல்கள் ஒன்றல்ல, இரண்டல்ல. விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட அப்பாவித் தமிழர்கள் 'மாதேஸ்வரன் மலை' என்ற கொலைக்களத்திற்கு கொண்டு செல்லப்படும்போது திரும்ப வந்தால்தான் நிச்சயம்! திரும்பி வந்தவர்களில் பெரும்பாலோனார் நடைபிணங்களாகவே இன்றும் வாழ்கிறார்கள்.

### சித்திரவதைகள் பலவிதம்

அதிரடிப்படையினர் அப்பாவி தமிழ் மக்கள் மீது நிகழ்த்திய சித்திரவதைகள் பலவகைப்பட்டது. 70 வயது முதியவர் ஒருவர் தொடர்ந்து ஆறு மாதங்களுக்கு ஒரே இடத்தில் உட்கார்ந்தே இருக்குமாறு கட்டாயப்படுத்தப் பட்டுள்ளார். சிறுநீர் கழிப்பது, வெளியே போவது தவிர வேறு எதற்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எழுந்திருக்கக் கூடாது. அதுவும்கூட அருகிலே கிடந்த ஒரு சாக்குத் துணியில்தான் இருந்து வெளியே போட்டு விட வேண்டும்.

வதைமுறைகளில் மிகக் கொடுமையானது மின் அதிர்ச்சி கொடுப்பது. ஆண்களையும், பெண்களையும் எதிரெதிரே நிர்வாணமாக நிற்க வைத்து பெண்களின் பிறப்புறுப்புகளிலும், மார்பகங்களிலும் ஆண்களை மின் அதிர்ச்சிக்கான "கிளிப்"பினை மாட்டச் செய்வது. ஆண்களின் ஆண்குறி களிலும், நெஞ்சுகளிலும் பெண்களை கிளிப்பினைக் கொடுக்க வைத்து, ஒரு டைனமோ மூலம் மின்சாரத்தை உண்டாக்கி அதை உடம்பில் செலுத்துவது. மயக்கமடைந்து விழுவது வரையிலும், மின் அதிர்ச்சி கொடுத்தபின், இரும்பு ஆணிகள் பொருத்திய ரப்பர் தடிகளால் அடிப்பது, அதற்குப் பின்பும் மின் அதிர்வு கொடுக்கப்பட்ட நபர் உணர்வோடு இருந்தால் மீண்டும், மீண்டும் மின் அதிர்ச்சி கொடுப்பது. இது போன்று மின் அதிர்ச்சியால் பல கர்ப்பிணிப் பெண்களின் கருக்கள் கலைக்கப்பட்டு உள்ளன.

பாலியல் ரீதியாக சிறப்பு அதிரடிப்படையினால் பலாத்காரப்படுத்தப்பட்ட எண்ணற்ற பெண்களுக்கு இம்முகாம்களிலே குழந்தைகள் பிறந்துள்ளன. இதே போல நிறைமாதக் கர்ப்பிணிப் பெண் பிரசவ வலியால் துடிதுடித்துக் கொண்டிருக்கும் போது அவளை நிர்வாணமாக்கி அவள்படும் கஷ்டத்தை பார்த்து சிறப்பு அதிரடிப்படையினர் எள்ளி நகையாடியது மட்டுமல்லாமல், அவளுடைய மார்பகங்களை கசக்கி தாய்ப்பாலை சிந்திச் சிதற விட்டு விளையாண்டு ரசித்த கொடுமையும் நிகழ்ந்துள்ளது.

இந்த சிறப்பு முகாம்களில் நடந்த சித்ரவதைகள் குறித்து தகவல் அறிந்ததும் மக்கள் கண்காணிப்பகம்—தமிழ்நாடு, சோக்கோ அறக்கட்டளை—மதுரை, தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்கம் மற்றும் சிக்ரம் பெங்களூர் ஆகிய அமைப்பினரும், பெங்களூரில் உள்ள ஒரு சில வழக்கறிஞர்களும் இணைந்து உண்மை அறியும் குழு ஒன்றை அமைத்து சம்பவம் நடந்த இடங்களுக்கு நேரடியாக சென்று ஆய்வு செய்தனர். உண்மையறியும் குழுவின் அறிக்கை களிலிருந்தும் பாதிக்கப்பட்டவர்கள் அளித்த பிரமாண வாக்குமூலங்களிலிருந்தும் தொகுக்கப்பட்ட சித்ரவதை வடிவங்கள் கீழ்க்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளன.

**1. *அடிப்பது :-***

போலீசார் கையில் வைத்துள்ள லட்டியால் அது முறிந்து போகும் அளவிற்கு அடிப்பது. துப்பாக்கியின் பின்பகுதியால் அடிப்பது. லட்டியாலும், துப்பாக்கியின் பின்புறத்தாலும் உடலின் பல பாகங்களைக் குத்துவது. ஆண், பெண் வயதானவர்கள், குழந்தைகள் என்று வயது வேறுபாடு பார்க்காமல் ஆகிய அனைத்துத் தரப்பினரையும் இதே போல் அடித்துள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


**2. (அ) மின் அதிர்ச்சி :-**

(1) விசாரணைக்காக அழைத்துச் செல்லும் நபர்களை, நிர்வாணமாக்கி அவர்களின் காது, கண் புருவம், மூக்கு, தோள்பட்டைகள், மார்பு, வயிறு, கை விரல்கள், ஆண்குறி அல்லது பெண்குறி ஆகியவற்றில் கிளிப் மாட்டி பேட்டரி வைத்து மின் அதிர்ச்சி கொடுப்பது. இதற்கான மின்சாரத்திற்கு ஒரு மோட்டார் வைத்து இயக்குவது.

(2) இரண்டாவது முறையில் அந்தரத்தில் கட்டி தொங்கவிட்டு மேற்கண்டவாறு மின் அதிர்ச்சி கொடுப்பது.

**2. (ஆ) மின் அதிர்ச்சி போதுமானதா என்று பரிசோதித்தல் :**

மின் அதிர்ச்சி கொடுத்துக் கொண்டிருக்கும் போதே அவரின் அங்கங்களைத் தொட்டுப் பார்த்து போலீசார் பரிசோதிப்பது. தவிர, இப்பரி சோதனைக்கு வேறொரு முறையையும் பின்பற்றினர். ஒரு ரப்பர் டயரில் சிறு ஆணிகளை அடித்து அதைக் கொண்டு மின் அதிர்ச்சி பெறும் நபரை போலீசார் அடிப்பது. அவ்வாறு அடிக்கும் போது அந்த நபர் வலியால் துள்ளினால் இன்னும் கூடுதலான மின் அழுத்தம் தந்து மீண்டும் அதே போல் அடிப்பது. துள்ளாமல் கட்டை போல் தொங்கினால் அதோடு விட்டு விடுவது.

மூன்றாவது முறையில் ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களை நிர்வாணமாக்கி ஒருவருக்கு கிளிப் மாட்டி விட்டு அவருடைய கைகளை அடுத்தவர்களின் கைகளுடன் சேர்த்துக் கட்டி தொடர்ந்து மின்சாரத்தைப் பாய்ச்சி அனைவருக்கும் மின் அதிர்ச்சி கொடுப்பது.

**3. ராட்டை :**

ஒரு நபரின் இரு கைகளையும் முறுக்கி பின்னால் ஒரு கயிற்றால் கட்டி நீர் இழுக்கும் உருளையில் கட்டி, அந்தரத்தில் தொங்க விட்டு, ஏற்றம் இறைப்பது போல் இறக்கி, ஏற்றுவது ஒரு வகை. இரண்டாவது வகை: ஒரு நபரை நிர்வாணப்படுத்தி அவரின் முதுகுப் புறத்தில் லட்டியால் தொடர்ந்து அடிப்பது. மூன்றாவது வகை: அந்தரத்தில் நிர்வாணமாகத் தொங்கும் நபரின் கால்களில் மணல் மூட்டையைக் கட்டித் தொங்க விட்டு, அந்த நிலையில் தொடர்ந்து அடித்துக் கொண்டிருப்பது.

**4. உலக்கை உருட்டுதல் :**

ஒரு நபரை குப்புற படுக்க வைத்து அவர் மேல் உலக்கையைப் போட்டு, அந்த உலக்கையின் மேல் போலீசார் ஏறி நின்றவாறு, அவ்வுலக்கையை காலிலிருந்து தலை வரையில் உருட்டுதல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



5. இலாடம் கட்டுதல் :

(1) ஒரு நபரை மல்லாந்து படுக்க வைத்து அவர் நெஞ்சின் மேல் ஒரு போலீசார் ஏறி அமர்ந்து கொள்ள, கால்களை சேர்த்து வைத்து அதன் மேல் மற்றொரு போலீஸ் அமர்ந்து கொண்டு, பாதத்தில் லட்டி முறிந்து விழும் வரையில் அடிப்பது.

(2) ஒருவரை காலை நீட்டி உட்கார வைத்து, அவரின் தொடையின் மேல் ஒரு போலீஸ் உட்கார்ந்து கொண்டு பாதத்தில் லட்டி முறியும் வரையில் அடிப்பது.

(3) ஒருவரைக் குப்புற படுக்க வைத்து அவர் காலை பின்பக்கமாக மடக்கி அதன் மேல் போலீசார் அமர்ந்து கொண்டு லட்டி முறியும் வரையில் அடிப்பது.

(4) தண்ணீர் தொட்டிக்குள் தலைகீழாக அமுக்கி பாதத்தை மட்டும் வெளியே நீட்ட வைத்து பாதத்தில் போலீசார் அடிப்பது.

6. காலை விரித்து பிளப்பது :-

(1) ஒருவரை மல்லாக்கப் படுக்க வைத்து நெஞ்சை ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட போலீசார் அப்படியே அமுக்கிப் பிடித்துக் கொள்ள சில போலீசார் இரண்டு கால்களையும் பிடித்து இழுத்துப் பிளப்பது.

(2) ஒருவரை மல்லாக்கப் படுக்க வைத்து நெஞ்சில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட போலீசார் உட்கார்ந்து கொள்ள ஒரு காலை நகழ விடாமல் அமுக்கிப் பிடித்துக் கொண்டு, மற்றொரு காலை மட்டும் அகல விரித்து இழுத்து பிளப்பது.

(3) ஒருவரை சுவரின் எதிரே கால்களை அகல விரித்து அமர வைத்து பின்னால் இருந்து தள்ளி, இரு கால்களையும் சுவரோடு ஒட்ட வைத்துப் பிளப்பது.

7. முட்டிக்கு முட்டி அடித்தல் :-

கைகளை மடக்க வைத்து முட்டிகளில் அடிப்பது. கால்களை மடக்க வைத்து அந்த முட்டிகளிலும் அடிப்பது. இது போல் தொடர்ந்து பல மணி நேரம் அடிப்பது.

8. இரண்டு தொடைகள், உட்காருமிடம், முதுகு ஆகிய பகுதிகளை மட்டும் லட்டியால் தொடர்ந்து பல மணி நேரம் அடிப்பது.

9. முதுகில் மட்டும் லட்டியால் அது முறியும் வரையில் அடிப்பது. இந்த அடியினால் முதுகுத் தோல் உரிந்து விடும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



10. ர்வுண்டு கட்டி அடிப்பது :-

ஒருவரை மையத்தில் நிற்க வைத்து பல போலீசார் வட்டமாக நின்று கொண்டு அனைவரும் ஒரே சமயத்தில் லட்டியால் அடிப்பது.

11. சுவரைப் பார்த்தபடி எப்போதும் உட்கார வைத்திருப்பது. பக்கத்தில் உட்கார்ந்துள்ளவரைக் கூட திரும்பிப் பார்க்கக் கூடாது. லேசாகத் திரும்பினாலும் சுவரில் சாத்தி வைத்து லட்டியால் அடிப்பது.

12. **இரவில் அனைவரும்** போலீசார் இருக்கும் இடத்தைப் பார்த்தவாறுதான் **படுத்துத் தூங்க வேண்டும்.** லேசாக திரும்பினாலும் படுத்த நிலையில் வைத்தே **கடுமையாக அடித்தல்.**

13. ஒருவரை ஆடைகள் அனைத்தையும் களைந்து நாள் முழுவதும் நிர்வாணமாக வைத்திருப்பர். கூச்சப்பட்டு ஏதாவது துணியை எடுக்க முனைந்தாலும், உடனே லட்டியால் அடிப்பது.

14. ஒருவரை நிர்வாணமாக்கி தொடர்ந்து பல மணி நேரம் லட்டியால் அடிப்பது. நிர்வாணமாகவே வைத்திருப்பது.

15. உணவு கொடுத்தல் :-

(1) மூன்று வேளையும் உணவு கொடுக்காமல் பட்டினி போட்டு அடிப்பது.

(2) ஒருவேளை அல்லது இருவேளை ஒரு கரண்டி உணவு மட்டும் கொடுப்பது.

(3) பக்கத்தில் உள்ள உணவு விடுதிகளில் கீழே கொட்டும் உணவில் ஒரு கரண்டி மட்டும் ஒரு பேப்பரில் போட்டு அதை நாய் போல் பின்னால் கை கட்டிக் கொண்டு நக்கித் தின்னவிடுவது.

(4) இவ்வாறு சிறிது உணவு உண்ணும் போது கடுமையாக லட்டியால் அடிப்பது.

(5) தாகத்திற்கு நீர் கூட குடிக்கக் கொடுப்பதில்லை, அல்லது தேங்காய் சிரட்டையில் சிறுநீர் கழித்து அதை குடிக்கக் கொடுப்பது.

16. நகத்தில் ஊசியைக் குத்துவது அல்லது குறடு கொண்டு நகத்தைப் பிடுங்கி விடுவது. கால் விரல் நகங்களை பூட்ஸ் கால்களினால் மிதித்து நசுக்குவது. "காவிரி தண்ணியா வேணும். இது தான் அந்த தண்ணி" என கூறி சிறுநீரை கன்னட சிறப்பு அதிரடிப்படையினர் குடிக்கக் கொடுப்பது.

17. துப்பாக்கியின் பின் பக்கத்தால் ஆண்குறியை அடிப்பது அல்லது துப்பாக்கியின் முனையினால் பெண்குறியை குத்துவது.

18. உடலை பிளேடால் கீறி காயத்தின் மீது மிளகாய் பொடியைத் தூவி விடுவது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**19. வேலைகள் :**

- ஷிப்டு :– கிராமத்திலிருந்து ஆட்களைப் பிடித்து வந்து சிறப்பு அதிரடிப்படையினருக்கு எடுபிடி வேலைகள், * சமையல் வேலைகள் செய்ய வைப்பது. மேலும், காட்டில் வீரப்பனைத் தேடிச் செல்லும் போது இந்நபர்கள் முன்னணியில் செல்ல வேண்டும். இவர்களை மனிதக் கேடயங்களாக பயன்படுத்துவது. ஏதேனும் உடல்நலக்குறைவு அல்லது பிற காரணங்களுக்காக அவர்கள் வராமல் போனால் அவர்களைப் பிடித்து வந்து அடித்து, மேலே குறிப்பிட்ட பல சித்திரவதைகளை செய்து, இவர்கள் செய்யும் வேலைக்கு எந்த சன்மானமும், கூலியும் தருவதில்லை. இதோடுகூட இந்நபர்கள் வைத்திருக்கும் ஆடு, கோழி போன்றவற்றையும் இளநீர், பழங்கள் முதலான விவசாய விளைபொருட்களையும் தர வேண்டும். இதற்கும் கூட அவர்கள் ஏதாவது மிகச்சிறு தொகை கொடுத்தால் தான் உண்டு. பெரும்பாலான சமயங்களில் எந்தப் பணமும் கொடுப்பதில்லை.
- கட்டாய வேலை :– மேற்படி ஷிப்டில் உள்ள நபர்கள் சிறப்பு அதிரடிப்படையினர் கூப்பிட்ட நாளில் வராமல் போனால் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் யாரையாவது, பெண்ணாக இருந்தாலும் கூட, பிடித்து வந்து கட்டாய வேலை வாங்குவது. மறுத்தால் அவர்களையும் சித்திரவதை செய்து முகாம்களில் அடைத்து விடுவது.

20. லட்டியில் துணியைக் கட்டி அதில் மண்ணெண்ணெய் ஊற்றி நெருப்பைப் பற்ற வைத்து, அந்த தீபந்தத்தால் ஒருவரை பல போலீசார் சுற்றி நின்று அடிப்பது.

21. ஏரோப்ளான் முறை :– காலை மடக்கிக் கட்டி அதற்கிடையில் இரு கைகளையும் சேர்த்து உள்ளே நுழைத்து கட்டி அவரை ராட்டையில் விட்டு அந்தரத்தில் தொங்க விடுவது.

22. ஒருவரை லட்டியால் நன்கு அடித்து கைகளை பின்புறமாக இறுக்கிக் கட்டி, அவர் மேல் சர்க்கரைப் பாகைக் காய்ச்சி ஊற்றி எறும்பு உள்ள இடத்தில் போலீசார் போட்டு விடுவது. எறும்புகள் அந்நபர் மீது ஏறிக்கடிக்கும்போது, அவர் படும் சித்திரவதையைப் பார்த்து ரசிப்பது.

**பாலியல் வன்முறைகள் :-**

23. ஆண், பெண் இருவரையும் ஒரே இடத்தில் நிர்வாணமாக்கி மேற்கண்ட சித்திரவதைகளை செய்வது.

24. கணவனின் ஆண்குறி மற்றும் பிற உடல் உறுப்புகளில் மனைவியை வைத்தே கிளிப் மாட்ட வைத்து, அவரையே மோட்டாரை சுற்றி மின் அதிர்ச்சி கொடுக்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


வைப்பது. மோட்டாரை சுற்றுவதில் வேகம் குறைந்தால் அவரை லட்டியால் கொடூரமாக அடிப்பது. அதே போல மனைவிக்கு கணவனே அவரின் பிறப்புறுப்பில் கிளிப் மாட்டி மின் அதிர்ச்சி கொடுக்க வைப்பது.

25. ஓர் ஆணையும், பெண்ணையும் நிர்வாணமாக்கி அவர்களின் குறிகள் இரண்டையும் மோதவிட்டு கேலி பேசி சிரிப்பது.

26. பெண்களின் மேலாடைகளைக் களைந்து அவர்களின் ஜாக்கெட்டை கிழித்து அலங்கோலமாக்கி அசிங்கமான வார்த்தைகள் கூறி கேலி பேசுவது.

27. பெண்களை சிறு அறைக்குள் இழுத்து சென்று ஒருவர் மாற்றி ஒருவர் அல்லது கும்பலாக பாலியல் பலாத்காரம் செய்வது. தினந்தோறும் காவலுக்கு இருக்கும் போலீசார் அவர்கள் விரும்பும் பெண்களை இழுத்துச் சென்று பாலியல் பலாத்காரம் செய்வது வாடிக்கையான ஒன்றாக இருந்துள்ளது. ஒரு பெண் ஒரே இரவில் 10 முறைகள்கூட பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டதாக ஒரு சில பெண்கள் கூறினர். இதில் வயது வேறுபாடுகளும் பார்ப்பதில்லை.

- சிறுவர், சிறுமிகளை நிர்வாணப்படுத்தி அவர்களை பிறர் முன்பாக உடலுறவு செய்யச் சொல்லி வேடிக்கை பார்ப்பது. அதைக் கேலி பேசுவது. மறுத்தால் அடிப்பது.
- சிறுவர்களை ஒருவரோடு ஒருவரும், ஆணை ஆணோடும், சிறுமியரை ஒருவரோடு ஒருவரும், பெண்ணை பெண்ணோடும் உறவு கொள்ளச் செய்யக் கட்டாயப்படுத்துவது. மறுத்தால் அவர்களை அடிப்பது.

28. சிறப்பு அதிரடிப்படை ஜீப் பின்னால் ஆட்களை கட்டி இழுத்து வேகமாகச் செல்வது.

29. ஜீப்பிற்கு முன் ஆட்கள் பல்டி அடித்து உருண்டு செல்ல வற்புறுத்துவது. அவ்வாறு பல்டி அடித்துக் கொண்டு செல்வோர் பின்னை அதிரடிப்படை ஜீப் செல்லும்.

30. உயரே இருக்கும் விட்டத்தைத் தவ்வித் தொட வேண்டும். அவ்வாறு தொட முடியாத ஒவ்வொரு முறையும் லட்டியால் கடுமையாக அடிப்பது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சித்திரவதைக்குள்ளான நபர்கள் பற்றிய புள்ளி விபரங்கள்

## சட்ட விரோத காவல்

| | ஆண் 0–20 | 20–50 | 50க்கு மேல் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| A–1 ஒருநாள் | 0 | 4 | 3 | 1 | 8 |
| A21 – ஒரு வாரம் | 0 | 35 | 9 | 14 | 58 |
| 1 வாரம் முதல் 1 மாதம் வரை | 1 | 72 | 22 | 12 | 107 |
| 1 மாதம் முதல் 6 மாதம் வரை | 2 | 28 | 15 | 7 | 52 |
| 6 மாதங்கள் முதல் 1 ஆண்டு வரை | 1 | 6 | 4 | 3 | 14 |
| 1 ஆண்டு முதல் 3 வருடங்கள் வரை | — | 5 | -- | 4 | 9 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| B 1 அடிப்பது, பூட்ஸ் காலால் மிதிப்பது | 1 | 132 | 58 | 42 | 233 |
| B2 கரண்ட் ஷாக் | 0 | 87 | 34 | 28 | 149 |
| B3 – ராட்டை | 0 | 50 | 17 | 06 | 73 |
| B4 ஷாக் கொடுக்கப்பட்டதை பரிசோதித்தல் | 0 | 81 | 31 | 27 | 139 |
| B5 உலக்கை உருட்டுதல் | 0 | 18 | 06 | 01 | 25 |
| B 5A சிகரெட்டால் சுடுதல் | 0 | 01 | 0 | 0 | 01 |
| B 6 லாடம் கட்டுதல் | 0 | 07 | 01 | 0 | 08 |
| B 7 உட்கார வைத்து கால்களை விரித்தல் | 0 | 0 | 01 | 0 | 01 |
| B 8 நெஞ்சில் தொடையில் போலீசார் உட்கார்ந்து கொண்டு ஒரு காலை மட்டும் விரித்து பிளப்பது | 0 | 01 | 0 | 0 | 01 |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



| | | | | | |
|---|---|---|---|---|---|
| B 9 குப்புறப் படுக்க வைத்து காலை மடக்கி அதன்மீது போலீசார் உட்கார்ந்துகொண்டு அடிப்பது | 0 | 01 | 01 | 01 | 03 |
| B 10 கைகால் முட்டிகளை மட்டும் அடிப்பது | 0 | 09 | 01 | 01 | 11 |
| B 11 சுவரைப் பார்த்து உட்கார வைத்து அடிப்பது | 01 | 09 | 09 | 04 | 23 |
| B 11A நாள் கணக்கில் கண்ணைக் கட்டி உட்கார வைப்பது | 0 | 16 | 10 | 03 | 29 |
| B 12 ஜீப்பில் கட்டி இழுத்துச் செல்வது | 0 | 0 | 0 | 0 | 00 |
| B 13 தண்ணீர் கேட்டால் மூத்திரம் தருவது | 0 | 03 | 02 | 01 | 06 |
| B 14 பிளேடால் கீறி .... | 0 | 01 | 0 | 02 | 03 |
| B 15 எச்சில் சாப்பாடு | 0 | 03 | 05 | 00 | 08 |
| B 16 தண்ணீர் தொட்டிக்குள் .... | 0 | 02 | 00 | 0 | 02 |
| B 17 ஒருவரை மையமாக வைத்து சுற்றி நின்று அடித்தல் | 0 | 05 | 02 | 0 | 07 |
| B 18 சர்க்கரைப் பாகுவை ... | 0 | 0 | 0 | 0 | 0 |
| B19 விட்டத்தில் கட்டி ... | 0 | 05 | 02 | 01 | 08 |
| B 20 நகத்தை குறடால் | 0 | 0 | 02 | 0 | 02 |
| B21 நிர்வாணப்படுத்தி அடிப்பது | 0 | 46 | 17 | 19 | 82 |
| B 22 பட்டினி போடுதல் | 02 | 41 | 14 | 10 | 67 |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



| | | | | | |
|---|---|---|---|---|---|
| B 23 ஷிப்டு சிஸ்டம் | 0 | 14 | 05 | 0 | 19 |
| B 24 மொட்டை அடித்தல் | 0 | 02 | 02 | 0 | 04 |
| BB பாலியல் வன்முறை | | | | | |
| BB1 இரண்டு பேரையும் நிர்வாணப்படுத்துதல் | 0 | 0 | 0 | 0 | 0 |
| BB2 கணவன் மனைவிக்கும், மனைவி கணவனுக்கும் மின்சாரம் கொடுத்தல் | 0 | 03 | 0 | 09 | 12 |
| BB3 பாலியல் பலாத்காரம்–கும்பல் பலாத்காரம் | 0 | 0 | 0 | 06 | 06 |
| BB3 பாலியல் பலாத்காரத்திற்கான முயற்சி | 0 | 0 | 0 | 01 | 01 |
| BB4 ஓரின வன்புணர்ச்சி – ஆணை ஆண் மீதும், பெண்ணை பெண் மீது மோதவிட்டு ரசிப்பது | 0 | 01 | 01 | 0 | 02 |
| BB5 நிர்வாணமான நிலையில் கிள்ளிவிட்டு ரசிப்பது | 0 | 0 | 0 | 02 | 02 |
| C காணாமல் போவது | | | | | |
| C1 சட்ட விரோதமாகக் காணாமல் போவது | 01 | 05 | 0 | 0 | 06 |
| C 2 காக்கி யூனிபார்ம் அணிவித்து காட்டிற்குள் கூட்டிச்சென்று சுட்டுக்கொல்வது | 0 | 01 | 0 | 0 | 01 |
| C3 விசாரணை, சித்ரவதை, காணாமல் போவது | 0 | 0 | 0 | 0 | 0 |
| C4 சுட்டுக் கொன்றதாக மக்கள் கூறியது | 03 | 13 | 01 | 0 | 17 |
| D– "மோதல்" கொலைகள் | | | | | |
| D 1 ஓடவிட்டு சுட்டுக்கொல்லுதல் | 0 | 15 | 01 | 0 | 16 |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



D-2 பழி வாங்குவதற்காக சுட்டுக்கொல்லுதல்

| | | | | |
|---|---|---|---|---|
| 0 | 02 | 0 | 0 | 02 |

D 3 விஷம் கொடுத்து கொல்லுதல் (வீரப்பனின் தம்பி அர்ச்சுனன்)

| | | | | |
|---|---|---|---|---|
| 0 | 02 | 0 | 0 | 02 |

D4 முகாம்களில் வைத்து சுட்டுக் கொல்லுதல் அல்லது சித்தரவதையால் மரணமடைதல்

| | | | | |
|---|---|---|---|---|
| 0 | 04 | 02 | 0 | 06 |

E 1 சொத்து இழப்பு சேதம்/தொழில் பாதிப்பு/இடம்பெயர்தல்

| | | | | |
|---|---|---|---|---|
| 0 | 80 | 26 | 09 | 115 |

E 2 தீயிட்டு கொளுத்துதல்

| | | | | |
|---|---|---|---|---|
| 0 | 03 | 01 | 01 | 05 |

E 3 கோழிகள், ஆடுகள் மாடுகள் இழப்பு

| | | | | |
|---|---|---|---|---|
| 0 | 09 | 04 | 03 | 16 |

E4 வீடுகள் அழித்தல் □ நகைகள், பணம், ரேடியோ, டேப் ரிக்கார்டர், உணவு தானியங்கள் மற்றும் பொருட்களை எடுத்துச் செல்லுதல்

| | | | | |
|---|---|---|---|---|
| 0 | 09 | 06 | 02 | 17 |

F பாதிப்பு

F 1 சித்திரவதையினால் சிறிது காலம் கழித்து மரணம்/தற்கொலை

| | | | | |
|---|---|---|---|---|
| 0 | 04 | 02 | 01 | 07 |

F 2 உடல் ஊனமடைதல்/ மனநிலை பாதிப்பு

| | | | | |
|---|---|---|---|---|
| 0 | 03 | 02 | 01 | 06 |

F 3 பாதி ஊனமடைதல்

| | | | | |
|---|---|---|---|---|
| 0 | 17 | 12 | 07 | 36 |

F 4 உடலில் சிறு பாதிப்புகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 0 | 34 | 13 | 11 | 58 |

G தடா வழக்கில் சிறையிலிருப்பவர்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 0 | 25 | 14 | 12 | 51 |

G 1 பிணையில் வெளியே வந்துள்ளவர்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| - | - | - | - | 70 |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## சிறப்பு அதிரடிப்படையினரால் பாதிக்கப்பட்ட ஒரு சிலரின் சோகச்சித்திரங்கள்

**1) இலட்சுமி (40), க/பெ. இராஜேந்திரன், இந்து, படையாச்சி, லக்கம்பட்டி, மேட்டூர் வட்டம்.**

கடந்த 1993 ஆம் ஆண்டு ஒரு நாள் காலையில் கர்நாடகா சிறப்பு அதிரடிப்படை போலீசார் லட்சுமியின் வீட்டிற்கு வந்து அவர் வீரப்பனின் ஆசைநாயகியாக இருந்தவர் என்று கூறி அங்கேயே லட்டியால் அடித்து, கைகளை பின்புறமாகக் கட்டியதுடன், கண்களையும் கட்டி போலீஸ் ஜீப்பில் ஏற்றி மாதேஸ்வரன் மலை போலீஸ் நிலையத்திற்கு கொண்டு வந்து 20 நாட்கள் சட்டத்திற்குப் புறம்பாக காவலில் வைத்து சித்திரவதைகள் செய்தனர்.

அவரை நிர்வாணமாக்கி அவரது காது, மூக்கு, உதடு, மார்பு, தொப்புள், தொடை, முதுகு, பிறப்புறுப்பு முதலான உறுப்புகளில் கிளிப் மாட்டி, மின் அதிர்ச்சி கொடுத்ததில் அவருக்கு மிகுந்த இரத்தப் போக்கு ஏற்பட்டிருக்கிறது. இருப்பினும், அவரை அந்த நிர்வாண நிலையிலேயே வைத்து லட்டி முறிந்து போகும் வரையில் விடாமல் அடித்து, கால்களில் இலாடம் கட்டி உள்ளனர். மேலும், துப்பாக்கி முனையால் அவர் பிறப்புறுப்பில் பல முறை குத்தியிருக்கின்றனர். அப்போது, "நீ வீரப்பனின் வைப்பாட்டி தானே!" எனச் சொன்னதோடு, அசிங்கமான வார்த்தைகளால் கேவலமாக திட்டி கேலி பேசியிருக்கின்றனர். அவரது மார்பை கிள்ளியும், சீண்டியும் தரக்குறைவாக பேசினர். அவர் மலங்கழிக்கச் செல்லும்போதும் கூட ஒரு போலீஸ்காரர் முன்னால் நின்று கொண்டு அவரது பிறப்புறுப்பைப் பார்த்துக் கொண்டே அசிங்கமாக கேலி செய்து பேசியுள்ளார்.

மேலும், மின் அதிர்ச்சி கொடுக்கும் கிளிப்பை லட்சுமியிடம் கொடுத்து, அங்கு நின்ற ஆண்களின் ஆண்குறிகளில் மாட்டி மின் அதிர்ச்சி கொடுக்க வைத்துள்ளனர். ஏற்கெனவே நிர்வாணமாக இருந்த மற்றப் பெண்களுடன் சேர்த்து அவரையும் வட்டமாக உட்கார வைத்து ஒருவருடைய கைகளை மற்றவருடன் பிணைத்து மின் அதிர்ச்சி கொடுத்திருக்கின்றனர். அவர்கள் முன்னிலையில் 7 வயது சிறுவனையும், 10 வயது சிறுமியையும் உடலுறவு கொள்ளச் செய்து ரசித்ததோடு அவர்களது பிறப்புறுப்பிலும் மின் அதிர்ச்சி கொடுத்திருக்கின்றனர்.

இருபது நாட்கள் சட்டத்திற்குப் புறம்பாக காவலில் வைக்கப்பட்ட பின் அவரை சிறப்பு அதிரடிப்படை போலீசார்கள் வீட்டிற்கு அனுப்பி வைத்திருக்கின்றனர். இருப்பினும் கர்நாடக சிறப்பு அதிரடிப்படை போலீசார் அவரது வீட்டிற்கு அடிக்கடி வந்து மூக்காடு, பாலாறு பகுதிகளுக்குக் கொண்டு போய் வன்புணர்ச்சி மேற்கொண்டுள்ளனர். இதற்கு அவர் மறுக்கும் போது லட்டியாலும், துப்பாக்கி – யாலும் அடித்து அவர்களின் வக்கிரத்திற்கு இணங்க வைத்திருக்கின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**2) பொன்னுச்சாமி, இந்து படையாச்சி, ஆலமரத்துக்காடு, கொள்ளேகால் வட்டம், சாம்ராஜ்நகர் மாவட்டம்.**

இந்து படையாச்சி சாதியைச் சேர்ந்த விவசாயக் கூலியான பொன்னுச்சாமி என்பவரை வீரப்பன் கூட்டாளி என்று கூறி சிறப்பு அதிரடிப் படையினர் 1993ம் ஆண்டு பிடித்துச் சென்றிருக்கின்றனர். முகாமில் வைத்து சித்திரவதைகள் செய்வது, வீட்டுக்கு அனுப்புவது, மறுபடியும் பிடிப்பது என்று பலமுறை போலீசார் விசாரணை என்ற பெயரில் அழைத்துச் சென்றுள்ளனர்.

போலீசுக்கு தகவல் கொடுப்பவராக அவர் மாறவேண்டும், இல்லையென்றால் கொன்று விடுவதாக மிரட்டி காட்டுக்குள் அனுப்பி, அவரிடம் ஒரு துப்பாக்கியைக் கொடுத்து வீரப்பனை கொன்று விட்டுத்தான் திரும்ப வேண்டும் என்று சிறப்பு அதிரடிப்படை போலீசார் அவரிடம் கூறினர்.

இத்தகவலை அறிந்த வீரப்பன் காட்டிற்குள் வந்த பொன்னுச்சாமியை பிடித்து வைத்துக் கொண்டார். வேறு வழியில்லாமல் பொன்னுச்சாமி அங்கேயே இருந்துள்ளார். இதற்கிடையில் அவரைத் தேடி கர்நாடகா சிறப்பு அதிரடிப்படை போலீசார் அடிக்கடி வீட்டிற்கு வந்து, அவரது மனைவி கோவிந்தம்மாளை விசாரித்துச் சென்றதோடு ஒரு நாள் அவரையும் மாதேஸ்வரன் மலை முகாமிற்கு கூட்டிச்சென்று சித்திரவதை செய்துள்ளனர்.

முகாமில் கோவிந்தம்மாளின் கண்களைக் கட்டி, நிர்வாணப்படுத்தி போலீசார் லட்டியால் அடித்து, காது, மூக்கு, மார்பகங்கள், பிறப்புறுப்பு உள்ளிட்ட உடல் உறுப்புகளில் கிளிப் மாட்டி மின் அதிர்ச்சி கொடுத்திருக்கின்றனர். அதன் பின் அவரை மீண்டும் இழுத்துச் சென்று லட்டியால் அடித்து நொறுக்கியதில் வலது கை எலும்பு முறிந்து விட்டது. அதற்கு அவர்கள் எந்த மருத்துவ சிகிச்சையும் கொடுக்கவில்லை. அவர் கணவர் பொன்னுச்சாமியைத் தேடிப் பிடித்துக் கொடுக்க வேண்டுமென்றும், தவறினால் பிள்ளைகளை பிடித்து இதைவிட பல மடங்கு சித்திரவதைகள் செய்வதாகக் கூறி, அவரை வீட்டுக்கு அனுப்பி விட்டனர். கோவிந்தம்மாளை முகாமிலிருந்து வீட்டு அனுப்பும்போது, அவரது கணவர் பொன்னுச்சாமியை விசாரித்து தகவல்களைப் பெற்றபின், வீட்டுக்கு அவரை அனுப்பி விடுவதாகவும், அவருக்கு எந்த ஆபத்தும் வராது என்றும் போலீசார் உறுதி கூறினர்.

இச்சம்பவம் நடந்த இரு மாதத்திற்குப் பின் பொன்னுச்சாமி வீரப்பனிட –மிருந்து தப்பி வீட்டிற்கு வந்திருக்கிறார். சிறப்பு அதிரடிப்படை போலீசாரின் மிரட்டலுக்குப் பயந்து உடனே பொன்னுச்சாமியின் அண்ணன் ஆனைகவுண்டன், தம்பி அய்யண்ணன், மூன்றாவது மகன் அய்யாத்துரை ஆகியோர் நால்ரோடு சிறப்பு அதிரடிப்படை முகாமிற்குச் சென்று எஸ்.ஐ.ராமன், நாகராஜ் ஆகியோரிடம் பொன்னுச்சாமி வந்துள்ள தகவலைத் தெரிவித்திருக்கின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவர்களும் உடனே கிளம்பி வந்து பொன்னுச்சாமியை பிடித்துச் சென்று விட்டனர். அதன் பின் இரு நாட்கள் கழித்து (26.10.93 அன்று) சேலம் தினத்தந்தியில் 7 ஆம் பக்கத்தில் 24.10.93 அன்று இரவு 11.30 மணிக்கு தேவாரம் தலைமையில் கர்நாடகா சிறப்பு அதிரடிப்படை போலீசார் பெஜிலட்டி மலையினருகே அரை கிலோ மீட்டர் தொலைவில் சென்ற போது யாரோ மறைந்து செல்வது போன்ற சலசலப்பு கேட்டு சுட்டதாகவும், அதில் மூன்று பேர் இறந்ததாகவும், அதில் பொன்னுச்சாமி இறந்து விட்டதாகவும் செய்தி வெளியாகி இருந்தது. இச்செய்தியை அருகில் உள்ளவர்கள் கோவிந்தம்மாளிடம் படித்துக் காட்டியுள்ளனர். மேலும், கோவிந்தம்மாளின் மீதும் பொய் வழக்குப் போட்டு அவரை மைசூர் சிறையில் அடைத்து விட்டனர்.

**3) மஞ்சளா (23), க/பெ. அப்பையா, லிங்காயத்து, உன்றிமலை, ஈரோடு மாவட்டம்.**

கடந்த 1993 ஆம் ஆண்டு திருமணமாகி ஒரு வருடமான 16 வயதுள்ள மஞ்சளா தன் கணவர் அப்பையாவுடன், ஈரோடு மாவட்டம், உன்றிமலையில் வாழ்ந்து வந்தார். கன்னடம் பேசும் லிங்காயத்து சாதியைச் சேர்ந்த இவர் சாதாரண விவசாயக் கூலியாவார். இவருடைய பெற்றோர்கள் அந்தியூர் தேவர்மலையில் வசித்து வந்தனர்.

1993 ஆம் ஆண்டு தை மாதத்தில் ஒரு நாள் மாலை 6 மணிக்கு கர்நாடகா சிறப்பு அதிரடிப்படை போலீசார் ஒரு வாகனத்தில் அவர் வீட்டின் முன் திடீரென்று வந்து இறங்கி,"உன் அம்மாவும், அப்பாவும் எங்கே ?"என்று கேட்டனர். "தெரியாது"என்று பதில் சொல்ல அவர்களும் திரும்பச் சென்று விட்டனர்.

அடுத்த நாள் மதியம் சுமார் 1 மணிக்கு மீண்டும் அதே கர்நாடகா சிறப்பு அதிரடிப்படை போலீசார் மஞ்சளா வீட்டிற்கு வந்து அவரையும், அவர் கணவர் அப்பையாவையும் ஜீப்பில் ஏற்றி வலுக்கட்டாயமாக கோவிலூருக்குக் கூட்டிச் சென்றனர்.

போகும் வழியிலும், கோவிலூரிலும் வைத்து மஞ்சளாவையும், அப்பையாவையும் லட்டியால் அடித்துள்ளனர். கைகளால் முகத்தில் ஓங்கிக் குத்தி மஞ்சளாவின் அம்மா, அப்பா பற்றி விசாரித்தனர். தனக்குத் தெரியாது என்று சொல்லியும் அதை காதில் வாங்கிக் கொள்ளாமல், "அவங்கள எங்க ஒளிச்சு வச்சிருக்க" என்று கேட்டு, லட்டி முறிந்து விழும் வரையில் சிறப்பு அதிரடிப்படை போலீசார் அவரை அடித்து, பின்னர் வீட்டில் கொண்டு வந்து விட்டு விட்டுப் போய் விட்டனர்.

இச்சம்பவத்தினால் அவர்கள் வீட்டாரும், அக்கம்பக்கத்தில் உள்ளவர்களும் அச்சமடைந்தனர். இதற்குப் பிறகு பத்து நாட்கள் கடந்த பின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மேட்டூர் முகாமிலிருந்து தமிழ்நாடு சிறப்பு அதிரடிப்படை போலீசார் உதவி ஆய்வாளர் பழனிச்சாமி தலைமையில் மஞ்சளாவின் வீட்டிற்கு வந்து, எந்த காரணமும் கூறாமல் மஞ்சளாவையும், அப்பையாவையும் வலுக்கட்டாயமாக ஜீப்பில் ஏற்றி மேட்டூர் முகாமிற்கு கொண்டு சென்றனர்.

மஞ்சளாவின் பெற்றோர்கள் பற்றி விசாரித்து, லட்டியால் அடித்து மஞ்சளா-வையும், அப்பையாவையும் அடித்ததோடு, சட்டத்திற்குப் புறம்பாக விசாரணை என்ற பெயரில் 10 நாட்கள் சித்திரவதை முகாமிலேயே வைத்திருக்கின்றனர்.

ஒரு நாள் மஞ்சளாவிடம் ஒன்றும் கூறாமல் மேற்படி சிறப்பு அதிரடிப்படை போலீசார் அவரை மட்டும் ஜீப்பில் ஏற்றிக் கொண்டு ஈரோடு, கோவை, பவானி ஆகிய ஊர்களுக்கு ஒரு பகல், ஒரு இரவு முழுவதும் சுற்றிக் காட்டி, இந்த ஊரில் அவரது பெற்றோர் இருக்கிறார்களா எனக் கேட்டு அவரை லத்தியால் அடித்தும், பூட்ஸ் காலால் எட்டி உதைத்தும், முஷ்டியால் ஓங்கி அவர் முகத்திலும், முதுகிலும், வயிற்றிலும் குத்தி சித்திரவதை செய்திருக்கின்றனர்.

அடுத்த நாள் சிறப்பு அதிரடிப்படை போலீசார் மஞ்சளாவை, காவல்துறை கண்காணிப்பாளர் மோகன்சிங் விசாரிக்க, தனியறைக்கு கொண்டு சென்றனர். அங்கு மோகன்சிங் மஞ்சளாவை அலங்கோலப்படுத்தி, பாலியல் பலாத்காரம் செய்துள்ளார். கணவர் அப்பையாவை பக்கத்து அறையில் அடைத்து வைத்துள்ளார்கள். அடுத்த நாள் சிறப்பு அதிரடிப்படை போலீசார் மஞ்சளாவையும், அப்பையாவையும் வீட்டிற்குப் போகும்படி கூறி அனுப்பி விட்டனர்.

வீட்டிற்கு வந்த பின், மஞ்சளா பாலியல் பலாத்காரத்திற்கு ஆளானதை பிறரிடம் கூறிய, அப்பையா இனி மஞ்சளாவோடு வாழ முடியாது என்று கூற, உறவினர் அனைவரும் சேர்ந்து, "நீ தூக்குப் போட்டு செத்துப் போய்விடு", என்று சொல்லி, மிகக் கடுமையாக திட்டி, அடித்துள்ளனர்.

இக்கொடூரமான சித்திரவதை தாங்காமல் மஞ்சளா வீட்டை விட்டு ஓடி விட்டார். வேறு எங்காவது சென்றுவிட எண்ணி பஸ் நிறுத்தத்தில் வந்து நின்றிருக்கிறார். அங்கு நின்று கொண்டிருந்த ராஜேந்திரனிடம், தன்னை ஏதாவது ஒரு பஸ்ஸில் ஏற்றி விட்டு காப்பாற்றி விடும்படி மஞ்சளா கெஞ்சி அழுதிருக்கிறார். ராஜேந்திரன் மனமிரங்கி அவரை கடம்பூருக்கு பஸ்சில் ஏற்றிவிட முயற்சி எடுத்திருக்கிறார்.

அவ்வேளையில் அப்பையாவும், அவர் உறவினர்களும், கடம்பூர் போலீசாரும் அங்கு வந்து, ராஜேந்திரன் மஞ்சளாவை கூட்டிக் கொண்டு கள்ளத்தனமாக ஓடத் திட்டம் போட்டு நிற்பதாகச் சொல்ல, கடம்பூர் போலீசார் ராஜேந்திரனையும், மஞ்சளாவையும் அடித்து போலீஸ் ஜீப்பில் ஏற்றி மீண்டும் மேட்டூர் முகாமிற்குக் கொண்டு சென்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


ராஜேந்திரனது ஆடைகள் அனைத்தையும் களைந்து, நிர்வாணமாக்கி, போலீசார் மாறி, மாறி அடித்து, சித்திரவதை செய்து, மஞ்சளாவைத் திருமணம் செய்து கொள்ள வற்புறுத்தியுள்ளனர். வலியால் துடித்த ராஜேந்திரன் அதை தாங்க முடியாமல், அவரே மஞ்சளாவை திருமணம் செய்து கொள்ள ஒத்துக் கொண்டார். போலீசார் ஒரு மஞ்சள் கயிறைக் கொண்டு வந்து ராஜேந்திரனிடம் கொடுத்து, மஞ்சளாவிற்கு தாலி கட்டச் சொல்லி, திருமணம் செய்து வைத்து விட்டனர்.

போலீசாருக்குப் பயந்து ராஜேந்திரனும், மஞ்சளாவும் உன்றிமலையில் வசிக்காமல், தங்கள் உற்றார் உறவினர்கள், உடைமைகள் அனைத்தையும் விட்டு,விட்டு தற்போது இடம் பெயர்ந்து மைக்கேல்பாளையம் பழைய நகரில், செங்கல் சூளை ஒன்றில் தினக்கூலிகளாக வேலை செய்து பிழைத்து வருகின்றனர்.

**4) கிருஷ்ணன், இந்து படையாச்சி, பெரியதண்டா, மேட்டூர் வட்டம்.**

கிருஷ்ணன் பெரியதண்டா கிராமத்தில் வியாபாரம் செய்து வாழ்ந்து வந்தார். அவருக்கு மாதி என்ற மனைவியும், இரண்டு மகன்களும், ஒரு மகளும் உள்ளனர்.

கடந்த 1993 ஆம் ஆண்டு ஒரு செவ்வாய்கிழமையன்று மதியம் 12 மணிக்கு கிருஷ்ணன் கொளத்தூரில் ரேடியோ ரிப்பேர் கடையில் உட்கார்ந்திருந்தபோது, தமிழக சிறப்பு அதிரடிப்படை போலீசார் அவரைப் பிடித்துச் சென்று மேட்டூர் பள்ளிக்கூட முகாமில் 7 நாட்கள் தொடர்ந்து வைத்திருந்து, "நீ வீரப்பனுக்கு அரிசி, பருப்பு கொடுத்திருக்கிறாய்" எனக்கூறி அவரை நிர்வாணமாக்கி போலீசார் லட்டியால் வயிறு, முதுகு, கால் முட்டிகள் உள்பட உடல் முழுவதிலும் அடித்திருக்கின்றனர். அடிவயிற்றிலும், நெஞ்சிலும், பூட்ஸ்காலால் உதைத்ததோடு அவரை பட்டினியும் போட்டுள்ளனர். இதனால் அவர் உடல் நிலை மோசமாகி பேச முடியாமல் இருந்த போதும், பேசும்படி கட்டாயப்படுத்தி மேலும், மேலும் அடித்ததில் அவர் சுயநினைவு இழந்துள்ளார். இருந்தாலும், அவர் நடிப்பதாகக் கூறி போலீசார் கூராக சீவப்பட்ட மரக்கட்டையை வாயிற்குள் அடித்து நுழைத்ததில் இரத்தம் வழிந்தது.

அதன்பிறகு தீப்பந்தத்தைக் கொண்டு அவர் முகத்திலும் உடல் உறுப்புகள் அனைத்திலும் போலீசார் அடித்திருக்கின்றனர். இக்கொடுமைகளை பெரியதண்டாவைச் சேர்ந்த நான்கு பேர் பார்த்துள்ளனர். மேற்படி சித்திரவதை – களின் விளைவாக கிருஷ்ணன் மரணமடைந்துவிட்டார்.ஆனால், வீரப்பனிடமிருந்து கண்ணிவெடி வைத்தவர்களை தேவாரம் பிடிக்க முயன்ற போது ஏற்பட்ட மோதலில் மூன்று பேர் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும், அதில் கிருஷ்ணனும்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒருவர் என்று அவர் சடலத்தை புகைப்படம் போட்டு, மறுநாள் நாளிதழ்களில் செய்தி வெளியாகியிருக்கிறது. இறந்தவரின் உடலை அவரது குடும்பத்தினரிடம் ஒப்படைக்காமல் போலீசார் காட்டிலேயே வைத்து எரித்து விட்டனர்.

**5) பெலியன் (27), த/பெ. தொட்டாலியன், இந்து லிங்காயத்து, தேவர் மலை, அந்தியூர், ஈரோடு மாவட்டம்.**

கடந்த 1993 ஆம் ஆண்டு பங்குனி மாதம் ஒரு ஞாயிற்றுக்கிழமை, தேவர் மலையில் பந்தேஸ்வரன் கோயில் பண்டிகை நடந்து கொண்டிருந்தது. விவசாயக்கூலி வேலை செய்தும், ஆடு, மாடு மேய்த்தும் வாழ்க்கை நடத்தும் பெலியன்; பண்டிகையைக் கொண்டாட வழிவகையின்றி அன்றும் வேலை செய்ய செங்கலத்திற்குச் சென்றிருக்கிறார். வேலையை முடித்துக் கொண்டு ஆடுகளை மேய்த்தபடி அந்தி சாயும் நேரத்தில் திரும்பி வரும் வேளையில், பர்கூர் போலீஸ் நிலைய சப் இன்ஸ்பெக்டர் கங்கப்பனும் மற்ற போலீசாரும் அவரைச் சுற்றி வளைத்தனர். ஒன்றும் புரியாமல் விழித்த பெலியனை சப்–இன்ஸ்பெக்டர் கங்கப்பன் தன் கைத்துப்பாக்கியால் சுட்டிருக்கிறார். துப்பாக்கிக் குண்டுகள் முதுகில் பாய்ந்துவிட அவர் சுருண்டு விழுந்து துடித்து விட்டார்.

அதன்பின், போலீசார் ஒரு இராணுவ உடையை (சட்டை, பேண்ட்) எடுத்து வந்து ஒரு கல்லின் மேல் வைத்து துப்பாக்கியால் சுட்டு ஓட்டை போட்டு, அதை அவருக்கு உடுத்தி, ஒரு கயிற்றுக் கட்டிலில் படுக்க வைத்து லாரியில் ஏற்றி கோவை மருத்துவமனைக்குக் கொண்டு போய் சேர்த்து மருத்துவ சிகிச்சை கொடுத்திருக்கின்றனர்.

வீரப்பனுக்கு பெலியன் துப்பாக்கிகள் கொடுத்து உதவி வந்ததாகவும், அவ்வாறு அவர் துப்பாக்கி கொடுக்கும் சமயத்தில் போலீசாருக்கு துப்பு கிடைத்து சுற்றி வளைத்ததாகவும், அவர் தப்பிச் செல்ல எத்தனிக்கும் போது, வேறு வழியின்றி சுட்டதாகவும் ஒரு கற்பனைச் சம்பவத்தை போலீசார் கூறியுள்ளனர்.

பெலியன் அரசு மருத்துவமனையில் ஒரு மாதம் சிகிச்சை பெற்றும்கூட அவர் முதுகில் இருந்து துப்பாக்கித் தோட்டாக்கள் அனைத்தும் அகற்றப்பட வில்லை. இருப்பினும், அவரை மருத்துவமனையிலிருந்து போலீசார் வெளியேற்றி தேவர் மலைக்கு அனுப்பி விட்டனர். அவர் ஊர் திரும்பிய பிறகு இனிமேலும் அங்கு இருந்தால் ஏதேனும் தொந்தரவுகள் ஏற்படலாம் என்ற அச்சத்தோடு உயிருக்குப் பயந்து இடம் பெயர்ந்து சங்கர கவுண்டன் பாளையம் என்னும் இடத்தில் ஒரு பண்ணைக்கு சென்று அங்கேயே தங்கி வேலை செய்து கொண்டிருந்தார்.

சுமார் 6 மாதங்கள் கழித்து ஒரு நாள் தமிழ்நாடு சிறப்பு அதிரடிப்படை போலீசார் அவர் இருக்கும் இடம் தேடி வந்து அவரைப் பிடித்து, ஈரோடு மாவட்டம்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தட்டக்கரை முகாமிற்கு கொண்டு சென்று சட்டத்திற்குப் புறம்பாக ஒரு மாதம் காவலில் வைத்தனர். தவிர, மேட்டூர் முகாமிலும், ஒரு மாதம் காவலில் வைத்தனர். "வீரப்பன் எங்கேடா?" என்று கேட்டு லட்டியால் பலமாக அடித்திருக்கின்றனர். அதே கேள்வியை மீண்டும் கேட்டு அவரை குப்புற படுக்க விட்டு, முதுகில் உலக்கையை வைத்து அதன் மீது போலீசார் ஏறி நின்று பாதத்தில் இருந்து கழுத்து வரையில் பலமுறை உருட்டி சித்திரவதை செய்தனர். அவரைக் காலை நீட்டிப் படுக்க வைத்து மார்பிலும், தொடையிலும் போலீசார் அமர்ந்து கொள்ள ஒரு போலிஸ் பெலியன் காலின் உள்பாதத்தில் தொடர்ந்து லட்டியால் பலமாக பல மணி நேரங்கள் அடித்து லாடம் கட்டி கொடுமைப்படுத்தியிருக்கின்றனர்.

மேற்கண்ட சித்திரவதைகளால் அவருக்கு உடல் முழுவதும் காயங்கள் ஏற்பட்டு வலியால் வேதனையோடு துடித்தார். அவருக்கு எந்த மருத்துவ சிகிச்சையும் போலீசார் அப்போது கொடுக்கவில்லை. உறவினர்கள் யாரையும் பார்க்க அனுமதிக்கவில்லை. அதோடு அவர் மீது பொய் வழக்குப் போட்டு ஈரோடு நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தி சென்னை மத்திய சிறையில் ஒரு வருடம் அடைத்து விட்டனர். தற்போது அவர் பிணையில் வெளியே இருந்தாலும்கூட, அவரால் முன்போல வேலைகள் செய்ய முடியவில்லை. முதுகில் இன்னும் தோட்டாக்கள் அகற்றப்படாமல் இருப்பதால் அடிக்கடி அவர் சுகவீனமாகி விடுகிறார். மருத்துவச் செலவுக்காக மாதம் ஒன்றுக்கு ரூ.500 வரை செலவாகிறது.

இப்போது இடம் பெயர்ந்து மைக்கேல்பாளையத்தில் பழைய நகரில் வசித்து வருகிறார். செங்கல் சூளையில் கூலி வேலை செய்து பிழைத்து வரும் இவரால் சரிவர வேலையை செய்ய முடியவில்லை. பெலியன் புதிய நபர்கள் யாரைக் கண்டாலும், பயந்து ஓடி ஒளிகிறார். வெளியூரில் இருந்து யார் சென்று அவரைப் பார்த்தாலும், அவரால் பேச இயலாத நிலை. அந்த அளவுக்கு அவரிடம் இன்னும் பயத்தின் ரேகைகள் படர்ந்துள்ளன.

***6) அய்யன்துரை, இந்து படையாச்சி, பாலமேடு, கொள்ளேகால் வட்டம், சாம்ராஜ்நகர் மாவட்டம்.***

அய்யன்துரையும், மனைவி கமலாவும் அவர்களின் இருமகன்களும் பாலமேட்டில் வசித்து வந்தனர். விவசாயக் கூலியாக வேலை பார்த்து தங்கள் வாழ்க்கையை நடத்தி வந்தனர்.

4.6.93 அன்று இரவு சுமார் 12 மணிக்கு இரண்டு பெரிய வேன்கள், ஒரு ஜீப் ஆகிய வாகனங்களில் சுமார் 50 கர்நாடகா சிறப்பு அதிரடிப்படை போலீசார் அய்யன்துரை வீட்டிற்கு வந்து அவரின் மூத்த மகன் பழனிச்சாமி எங்கே எனக் கேட்டனர். அவர் வீட்டில் இல்லை என்பதை சிறப்பு அதிரடிப்படை போலீசிடம் சொன்னதற்கு அவர்கள் மூவரையும் அடித்து வேனில் ஏற்றி கண்களைக் கட்டி நால்ரோட்டில் உள்ள சிறப்பு அதிரடிப்படை முகாமிற்கு கொண்டு சென்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போகும் வழியில் வாகனத்திற்குள் வைத்து அவர்களை துப்பாக்கியின் பின் பக்கத்தால் போலீசார் அடித்ததில் நெற்றியில் காயம் ஏற்பட்டு, முகமும் வீங்கி விட்டது.

முகாமிற்கு போன பிறகு கமலாவை நிர்வாணமாக்கி அடித்து சித்திரவதை செய்தனர். 5.6.93 அன்று மாலை 6 மணிக்கு கமலாவை மட்டும் வீட்டுக்கு அனுப்பிவிட்ட போலீசார், அவர் கணவர் அய்யன்துரையை அடித்ததில் அவருடைய இரு முன் பற்கள் உடைந்தன. கமலா தன் கணவரையும் அவரோடு அனுப்பி விடும்படி கெஞ்சிக் கேட்டும், அவரை விடாமல் மேலும் 20 நாட்கள் சட்டத்திற்கு புறம்பாக காவலில் வைத்து மின் அதிர்ச்சி கொடுத்து சித்திரவதை செய்து விட்டு, அவரையும், மகன் முத்துமணியையும் சேர்த்து வீட்டிற்கு போலீசார் அனுப்பி விட்டனர்.

மின் அதிர்ச்சி கொடுத்ததன் விளைவாக அய்யன்துரைக்கு அடிக்கடி வலிப்பு வரத் தொடங்கியது. அவர்கள் சிகிச்சைக்கு மிகுதியாக செலவு செய்ய வேண்டியிருந்தது. இதன் பின் 20 நாட்கள் கழித்து மூத்த மகன் பழனிச்சாமியை கர்நாடக சிறப்பு அதிரடிப்படையினர் மாத்தூரில் உள்ள கல்குவாரியிலிருந்து பிடித்துச் சென்று சுட்டுக் கொன்று விட்டதாக நாளிதழ்களில் செய்தி வெளியாகி யிருந்ததை படித்ததாக பலர் கமலாவிடம் கூறியிருக்கின்றனர். ஆனால், பழனிச் சாமியின் சடலத்தை போலீசார் அவர் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கவில்லை.

***7) லட்சுமி (30), க/பெ. சித்தன், பாலபடுகை, இகலூர் பஞ்சாயத்து, தாளவாடி ஒன்றியம், சத்தி வட்டம்.***

கடந்த 1993–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17–ம் தேதி சித்தன் என்பவர் எருமை மாடு ஒன்று வாங்கியதற்கான கடனை அடைக்க வங்கிக்குச் சென்றிருக்கிறார். அப்போது வீட்டிலிருந்த அவரது மனைவி லட்சுமிக்கு தன் கணவன் சித்தன் காலை 10 மணியளவில் காவல் அதிகாரி முத்தரசன் தலைமை யிலான சிறப்பு அதிரடிப்படையினரால் அழைத்துச் செல்லப்பட்ட செய்தி கிடைத் – தது. அதன் பிறகு அவருக்கு கணவர் பற்றிய எந்த விபரமும் கிடைக்கவில்லை.

மூன்று நாட்களுக்குப் பிறகு ஆகஸ்ட் மாதம் 20–ம் தேதி காலை வேளையில் வீட்டில் இருந்த லட்சுமியிடம் வீட்டிற்கு வந்த சீருடையணிந்த மூன்று கர்நாடகா அதிரடிப்படையினர், 'நீ தான் சித்தனின் மனைவியா' என்று கேட்டனர். லட்சுமி பதிலளித்துக் கொண்டிருக்கையிலேயே உள்ளே நுழைந்த அதிரடிப்படையினர் தூங்கிக் கொண்டிருந்த 5 வயது மகளை தூக்கி வெளியே எறிந்தனர். திடீரென அவர்கள் கதவை உட்புறமாகத் தாளிடவும், 6 மாத கர்ப்பிணியான லட்சுமி மிகவும் பயந்து நடுங்கி விட்டார். அவரை அடித்துக் கீழே தள்ளி, அந்த மூவரும் லட்சுமியை பலமுறை பாலியல் பலாத்காரம் செய்தனர். லட்சமியை நிர்வாணப்படுத்தி அவரின் உடலில் பல இடங்களில் கடித்துக் காயப்படுத்தியுள்ளனர். காலை பத்து மணியிலிருந்து பிற்பகல் மூன்று மணி வரை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



லட்சுமி மயங்கி விழும் வரை அவரை மாறி, மாறி பாலியல் பலாத்காரம் செய்துள்ளனர்.

சிறிது நேரத்தில் அங்கு வந்த அவரது தாயார் முஸ்தி, மோசமான நிலையில் கிடந்த தன் மகள் லட்சுமிக்கு தண்ணீர் கொடுத்து சுயநினைவுக்கு கொண்டு வந்தார். இந்தக் கொடூரமான செயலால் மூன்று நாட்களுக்குப் பிறகு அவருக்கு கடும் வயிறு வலி ஏற்பட்டிருக்கிறது. மருத்துவப் பரிசோதனையில் அவரின் கரு சேதமடைந்தது தெரிய வரவே, கருக்கலைப்பும் செய்துள்ளனர்.

சில மாதங்களுக்குப் பிறகு மறுபடியும் அங்கு வந்த அதே மூன்று அதிரடிப்படை போலீசார் லட்சுமிக்கு குழந்தை பிறந்து விட்டதா என்ற கேட்டு, பிறந்த குழந்தை வீரப்பன் தம்பி அர்ஜுனன் மாதிரி உள்ளதா என்று பார்க்க வந்ததாகவும் கூறிச் சிரித்துள்ளனர். இவர்களைக் கண்டு மிரண்ட லட்சுமி அருகிலிருந்த காட்டிற்குள் சென்று ஒளிந்து கொண்டுள்ளார். காலையிலிருந்து இரவு ஏழு மணி வரை லட்சுமிக்காக காத்துக் கொண்டிருந்த போலீசார், லட்சுமி திரும்பி வராததால் சென்று விட்டனர்.

***8) ராமாச்சாரி (30), த/பெ. வீராச்சாரி, ஊக்கியம் கன்னைத்தொட்டி, கொள்ளேகால் வட்டம், சாம்ராஜ்நகர் மாவட்டம்.***

இரும்புப் பட்டறையில் வேலை செய்யும் ராமாச்சாரிக்கு மூன்று குழந்தைகள் உள்ளனர். உடல் நலமின்மையால் அவரது முதுகு வளைந்து இவரால் ஓடியாடி வேலை செய்ய முடியாது. எனவே, பட்டறையில் உட்கார்ந்து, காற்று துருத்தி சுற்றும் வேலை செய்து வந்தார். உடல் ஊனமுற்றோர் என்ற நிலையில் கர்நாடக அரசு 1983 ஆம் வருடத்திலிருந்து உடல் ஊனமுற்றோர் உதவித் தொகையும் அவருக்கு வழங்கி வருகிறது.

6.6.93 அன்று இரவு சுமார் 10 மணியளவில் போலீசார் டார்ச் விளக்குடன் வீட்டிற்கு வந்தனர். ராமாச்சாரியின் கைகளையும், கண்களையும் கட்டி ஜீப்பில் ஏற்றினர். அவரைப் பிடித்துச் செல்வதைக் கண்ட மனைவி, குழந்தைகள் ஜீப்பின் பின்னே கதறிக் கொண்டே ஓடிவர, போலீசார் அவர்களை அடித்து துரத்தி விட்டனர். ராமாச்சாரி மாதேஸ்வர மலை காவல்நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டார்.

காவல்நிலையத்திற்கு கொண்டு சென்ற இரண்டு நாட்களிலேயே, "வீரப்பன் துப்பாக்கியை சரிசெய்ய எத்தனை முறை வந்துள்ளான்?", என்று விசாரித்து உள்ளனர். "எந்த வீரப்பனைப் பற்றிக் கேட்கிறீர்கள்? சாமி", என்று ராமாசாரி கேட்க, ஆத்திரம் கொண்ட போலீசார் அவரைக் கன்னத்தில் அறைந்து, "தேவடியா மகனே, எந்த வீரப்பன்னா கேட்கிறாய்? வீரப்பனுக்கு துப்பாக்கி செய்து கொடுத்தாயல்லவா" என்று கேட்டனர். அதற்கு ராமாசாரி, "ஐயோ சாமி,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நான் இருக்கிற நிலைமையில நான் யாருக்கும் ஏதாவது வேலை செய்ய முடியுமா? என் முதுகு வளைந்து கர்நாடகா மாநில அரசு உதவியால் தானே உயிர் வாழ்ந்துட்டு இருக்கேன்? நான் எப்படி சாமி அப்படி செய்வேன்? " என்று சொல்லிய போதும், அவரை அடித்துத் துன்புறுத்தியுள்ளனர்.

அதன் பின் போலீசார் ராமாசாரியை சித்திரவதைக் கூடத்திற்குக் கொண்டு சென்று, அங்கு அவரது கண்கள், காது, மூக்கு, மார்பு மற்றும் மற்ற பகுதிகளில் கரண்ட் ஷாக் கொடுத்துள்ளனர். இவ்வாறாக 15 நாட்கள் போலீஸ் காவலில் வைத்தனர்.

போலீசாரின் சித்திரவதையால் ஏற்கெனவே வேலை செய்ய முடியாத நிலையிலிருந்த ராமாசாரி தற்போது நேராக நடக்க முடியாத நிலையிலும் இருக்கிறார்.

***9) வீரன், சக்கிலியர், கொக்குவரை, மாதேஸ்வரன்மலை, சாம்ராஜ்நகர் மாவட்டம்.***

வீரனின் பெற்றோர் மார்ட்டள்ளிக்கு அருகில் ஒட்டரதொட்டியில் வசித்து வந்தனர். இவரது தாயார் திடீரென சுகவீனம் அடைந்ததால், அவரைக் கண்டுவர ஒட்டரதொட்டி சென்றார்.

அவர் அங்கு வந்த மறுதினம் மாலையே சுமார் நான்கு மணியளவில் காவல் ஆய்வாளர் வெங்கிடசாமி, காவலர் சுப்பிரமணியன் மற்றும் சில காவலருடன் வந்து இவரை விசாரித்துள்ளனர். அவ்வேளையில் அங்கு வந்த கிராம பஞ்சாயத்து உறுப்பினர் ஜெபமாலைக் கவுண்டர், "வீரனை எதற்காக விசாரிக்கிறீர்கள்?" என்று கேட்டதும், "சின்ன விசாரணைதான், முடிந்ததும் அனுப்பி விடுவோம்" என்று கூறி வீரனை உடன் அழைத்துச் சென்றனர். அங்கு கூடிய கிராம மக்கள் அனைவரும் இதனைப் பார்த்துள்ளனர்.

ஜீப்பில் அழைத்துச் செல்லப்பட்ட வீரனை, நால்ரோடு முகாமிற்கு கொண்டு சென்று, "வீரப்பன் மற்றும் அவன் ஆட்களைத் தெரியுமா?", என்று விசாரித்தனர். வீரன் தனக்கு எதுவும் தெரியாது என்று கூறியுள்ளார். இதனைக் கேட்டதும் வீரனின் உடலில் இருந்த சட்டை மற்றும் வேட்டியை அவிழ்த்து விட்டு படுக்க வைத்து பூட்ஸ் காலால் உதைத்தனர். அன்று நள்ளிரவுக்குப் பிறகு வீரனை மாதேஸ்வர மலை முகாமிற்கு கொண்டு சென்றனர். அங்கு 18 நாட்கள் சட்டத்திற்குப் புறம்பாக காவலில் வைக்கப்பட்டிருந்த வீரனை இரண்டு மணி நேரம் கேள்விகள் கேட்டு விசாரிப்பது, பிறகு இரண்டு மணி நேரம் அடிப்பது, மின் அதிர்ச்சி கொடுப்பது என்று தொடர்ந்து சித்திரவதை செய்தனர். இதனால் வீரனுக்கு கண்கள், காது, மூக்கு மற்றும் பிறப்புறுப்புகளிலிருந்து இரத்தக் கசிவு ஏற்பட்டுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**10) காசி, த/பெ.சிக்கன்னக் கவுண்டர், பெத்தனபாளையம், கொள்ளேகால் வட்டம், சாம்ராஜ்நகர் மாவட்டம்.**

1993 ஆம் ஆண்டு பெத்தனபாளையத்தில் கர்நாடகா சிறப்பு அதிரடிப்படை போலீசார் முகாம் வைத்துள்ளனர். அப்போது அவர்களுக்கு எடுபிடி வேலை பார்ப்பதற்கு, அக்கிராமத்தைச் சேர்ந்தவர்களை வலுக்கட்டாயமாக 'ஷிப்டு' வேலைக்கு வைத்துள்ளனர். அவர்களுக்கு சிறப்பு அதிரடிப்படை போலீசார் எந்தக் கூலியும் கொடுப்பதில்லை.

காசி என்பவர் ஷிப்டு வேலை செய்யும்படி சிறப்பு அதிரடிப்படை போலீசாரால் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார். அவர் காவல்நேரப் பணிக்கு தாமதமாகச் சென்ற போது, அவரை நால்ரோடு முகாமிற்குக் கூட்டிச் சென்று ஒரு நாள் முழுவதும் வைத்து அடித்துத் துன்புறுத்தியுள்ளனர். மேலும், அவரை நிர்வாணமாக்கி துப்பாக்கியின் பின்புறத்தால் உடல் உறுப்புகள் அத்தனையையும் தாக்கியுள்ளனர். உதவி ஆய்வாளர் ராமண்ணா, ஆய்வாளர் நாகராஜ் ஆகியோர் குடித்து விட்டு வந்து அடித்துள்ளனர்.

பிறகு அவரை பெத்தனபாளையத்திற்கு கூட்டிச் சென்று ஊர் மக்கள் மத்தியில் நிறுத்தி கைகளை பின்புறமாகக் கட்டி துப்பாக்கியின் பின் பக்கத்தால் முதலில் அடித்து விட்டு, பின் லட்டி முறியும் வரை அடித்தனர். "நீ காங்கிரசுக்கு ஓட்டுப் போடக் கூடாது, ஜனதா தளத்திற்குத் தான் ஓட்டுப் போட வேண்டும்" என்று சொல்லியும் அடித்துள்ளனர்.

அவரிடம் இருந்த 300 ஆடுகளில் 200 ஆடுகளை பணம் தராமல் சிறப்பு அதிரடிப்படை போலீசார் கொன்று சமைத்து சாப்பிட்டு விட்டனர். அவர் மனைவியையும் அசிங்கமான வார்த்தைகளால் திட்டி அவமானப்படுத்தியுள்ளனர். இதனால், கணவன் மனைவி இருவரும் சிறப்பு அதிரடிப்படை போலீசார் தங்களை கொன்று விடுவார்களோ என்ற அச்சத்திலேயே இருக்கின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## வதைகள் - மருத்துவ விளைவுகள்

**இவ்வதைகளுக்கு உள்ளானோர் எப்படி பாதிக்கப்படுவார்கள் என இத்துறையில் தேர்ச்சி பெற்ற மருத்துவ நிபுணர்கள் திரு.டாக்டர் மதிகரன், பி.எஸ்.ஸி.,எம்.டி., பிஜிஎல் (Institute of Legal Medicine) போன்ற சிலரிடம் கருத்துக்கள் கேட்கப்பட்டன. அவர்களின் கருத்துக்கள் அப்படியே கீழே தொகுத்து தரப்படுகின்றன.**

ஒவ்வொரு சித்திரவதைக்கும் பாதிக்கப்பட்டோரின் வயது, உடல்நிலை, பாலினம், ஆளுமை பொறுத்தே விளைவுகள் ஏற்படும். இருப்பினும், ஆரோக்கிய – மான உடல்நிலை கொண்ட ஒருவர் இத்தகைய வதைகளை எதிர்கொண்டா – ரெனில் அவர் உடலில் கீழ்க்கண்ட பாதிப்புகள் ஏற்படும்:

### மேலோட்டமான காயம் (Contusions)

லத்திக் கம்பை வைத்தோ துப்பாக்கியின் பின்புறத்தாலோ,கைகளினாலோ அடித்தாலோ, பூட்ஸ் காலால் எட்டி உதைத்தாலோ இம்மேலோட்டமான காயம் ஏற்படும்.

### இரத்தக்கட்டு (Haematoma)

லாடம் கட்டுதல், லத்தியால் அடித்தல் ஆகிய வதைகளினால் தோலுக்கடியில் இரத்தம் கசிந்து இரத்தக்கட்டு ஏற்படும். சில சமயங்களில் மேற்புறத் தோல் கிழிந்து சதைப்பகுதியும் கிழிந்து உடனடியாக காயம் வெளியே தெரிவதுண்டு. ஆனால், இக்காயங்கள் பெரும்பாலும் ஆறிவிடும். ஆனால், பெரும்பாலும் வதை செய்வோருக்கு வெளிக்காயம் ஏற்படாமல் உட்காயம் ஏற்படுத்துவதே நோக்கமாகும்.

### எலும்புகள் உடைதல் அல்லது இடம் மாறுதல் (Fracture and Dislocation)

கை அல்லது கால் முட்டிகளில் தொடர்ந்து லத்தியை வைத்து அடிப்பதினால் ஏற்படும். இதற்கு சிகிச்சை அளிக்கப்படாவிடில் எலும்பு சேராத நிலைமையும் (Malunited Bone) நிரந்தர உடல் ஊனம் நிரந்தரமாக அங்கங்கள் உருச்சிதைதல் (Mutilation of Body parts) ஏற்படும். லாடம் கட்டும் வதையினால் கால் ஊன்றி நடக்க முடியாத நிலை ஏற்பட்டு விபரீதமான அல்லது வித்தியாசமான அல்லது மோசமான நடைபாணி (abnormal gait and posture) உருவாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒவ்வொரு முறையும் லாடம் கட்டி அடிக்கும் சித்திரவதை நிறுத்தப்பட்டு வதைக்குள்ளாவோரை குதிக்க வைத்து மீண்டும் லாடம் கட்டி அடித்தால் இரத்த ஓட்டம் கால் பகுதிக்கு தடைபட்டு இரத்த ஓட்டமின்றி சதை அழுகி விடும் நிலை (Muscles atrophy) ஏற்படும்.

மின் அதிர்ச்சி கொடுத்தலினால், கொடுக்கப்படும் நேரத்தை பொறுத்தும், மின்சாரத்தின் அளவைப் பொறுத்தும் தோலின் உட்புறமாக காயமோ, இரத்தக்கட்டோ ஏற்படும். பெரும்பாலும் இவ்வகை வதைகளினால் மேலோட்டமான சிராய்ப்பு (Contusions) காயங்களுடன் சில சமயங்களில் இரத்தக்கட்டும் ஏற்பட வாய்ப்புண்டு.

தலையில் மின் அதிர்ச்சி தரப்பட்டால் தீவிரமான தலைவலி, நினைவாற்றல் இழத்தல், சிந்தனையும் செயலும் ஒத்திசையாதது, பார்வைக் கோளாறுகள் போன்ற பல்வகை அசாதாரண நோய்க்குறிகளுக்கு உள்ளாகின்றன. உதைத்தல், பூட்ஸ் காலால் மிதித்து துவைக்கப்படுதல் போன்ற வதைகளினால் தீவிரமான தசைப்பிடிப்பு, மூட்டுவலி, இரத்த வாந்தி, கருநிற மலம் கழித்தல், சிறுநீரில் இரத்தம் வருதல், கைகால்கள் விரல்களை இயக்க இயலாமல் போதல், மூட்டு கழன்று விடுதல், பல்வகை நரம்புக் கோளாறுகள் போன்றவை ஏற்படும்.

## உளவியல் ரீதியான பாதிப்புகள்

வதைபடுவோர் உள்ளாகும் உளவியல் சித்திரவதைகள்தான் அவர்கள் உடல்ரீதியாக படும் வேதனைகளை மிகவும் கொடூரமானதாகும். வதைபடு – வோருக்கு உளவியல் ரீதியாக ஏற்படும் பாதிப்புகளை அறிய மனநோய் மருத்துவர்களிடம் இச்சித்திரவதைகள் குறித்து கருத்து கேட்கப்பட்டது. அவர்கள் கூறிய கருத்துக்கள் இங்கு அப்படியே தரப்படுகின்றன.

ஒருவர் திடீரென்று தான் வாழும் பகுதியிலுள்ள தனது சொந்த பந்தங்களுக்கு மத்தியில் நள்ளிரவு அல்லது அசாதாரணமான நேரத்தில் கைது செய்யப்பட்டு அவமானப்படுத்தப்பட்டு இழுத்துச் செல்லப்படும்போது அவருக்கு மிகுந்த மனஉளைச்சல் ஏற்படுகிறது.

### அழுத்தத்திற்குப் பிந்தைய நோய் (Post Traumatic Stress Disorders PSTD)

அதன்பிறகு அவர் தனது வாழ்நாளில் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத அளவில் தரக்குறைவான வார்த்தைகளினால் திட்டப்பட்டு அவர் சித்ரவதை செய்யப்படுவாரெனில், அவருக்கு மனதளவில் கடுமையான பாதிப்பு ஏற்படும். இந்த கடுமையான அதிர்ச்சியை பயங்கரமான அழுத்தத்திற்கு பிந்தைய நோய் என்பர் இந்த PSTDயானது பாதிக்கப்படுவர் மிக இளம்வயதினராக இருப்பின், மிகப்பலவீனமான, ஆளுமை கொண்டிருப்பவராக இருந்தால் அவரது வாழ்நாள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முழுவதும் நிலைத்திருக்கும். சிலர் இந்த அதிர்ச்சியின் காரணமாக பழிவாங்கும் நோக்குடன் சமூக விரோத செயல்களில் ஈடுபடத் துவங்கி கிரிமினல்களாகவோ, சமூக விரோதிகளாகவோ மாறி விடுவர்.

### தற்கொலை மனோபாவம் (Suicidal Tendencies)

பலவீனமான மனநிலை அல்லது ஆளுமை கொண்டவராக இருந்தால் இந்த வதைகள் அவரை எதைக் கண்டாலும், பெரியவர் முதல் சிறார்கள் வரை யாரைக் கண்டாலும் பயப்படும் (Phobia) நபராக மாற்றி விடும். பயம் மட்டுமின்றி, பதட்டம், நம்பிக்கையின்மை, தூக்கமின்மை (Insomania) மனதில் தெம்போ, உறுதியோ, தன்னம்பிக்கையோ இல்லாது எப்போதுமே சோர்வுள்ள துயரத்துடன் (Depression) இருப்பர். இவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பினால் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் பற்றி நம்பிக்கை இருக்காது. தன்னைப் பற்றியே அகநிலை வையப்பட்டவராக (Subjective) சிந்தித்துக் கொண்டிருப்பர். அடிக்கடி தான் தனக்கும், தனது குடும்பத்தினருக்கும், சமூகத்திற்கும் சுமையாக இருப்பதாகக் கருதிக் கொண்டு தற்கொலை முயற்சியில் ஈடுபடுவர்.

### மனச்சிதைவு (Schizophrenia)

சில சமயங்களில் அல்லது மன சமன்நிலை கடுமையாக சிதைந்து மனச்சிதைவு நோயாளி (Schizophrenia) ஆகலாம். இப்படி மனச்சிதைவுக்கு உள்ளாகும் நபர்களின் புலன் உணர்வுகள் கடுமையாக பாதிக்கப்படும். இவர்களின் காதில் சத்தம் அல்லது ஒலி கேட்பதாகவும் புறத்தூண்டுதல் (Stimuli) இல்லாதபோதே இல்லாததை இருப்பது மாதிரியும் இருக்கின்றதை இல்லாதது போன்றும் கற்பனை செய்து கொண்டு இல்லாத எதிராளி ஒருவரிடம் பேசிக் (Hallucination) கொண்டிருப்பர். வதைகளினால் இவருக்கு ஆளுமை சிதைவு (Personality Disorder) முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ ஏற்படலாம். வதைகளினால் பாதிக்கப்படுபவரின் சுயமே (Ego) கேள்விக் – குள்ளாக்கப்படுவதால் ஆளுமையின் வலிமை, பாலினம், வயது இவற்றைப் பொறுத்து அவரின் ஆளுமையில் பாதிப்புகள் ஏற்படலாம். திடீரென்று கைது, சித்திரவதை ஆகியவற்றினால் அவரது சுயம் (Ego) தரை மட்டமாக்கப்படுவதால் அவரது மென்மையான உள்ளுணர்வுகள் சிதைக்கப்படுவதால் தான் என்ற உணர்வு தன்னம்பிக்கை குலைக்கப்படுவதால் (Depersonaliation) இவர்கள் தன் நிலை மறந்து தன் உடலை, உடையை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டுமென்று எண்ணம் சிறிது கூட இல்லாமல் ஒரு கற்பனையான உலகில் வாழ்ந்து கொண்டிருப்பர். இம்மாதிரி வதைகளுக்கு உள்ளாகி பாதிக்கப்படுவர் குடும்பம், பொறுப்பு தன் நிலை மறந்து தனது இறுதி காலம் வரை தெருவிலே அலைந்து கொண்டிருப்பர். பாலியல் வதைகளில் பாதிக்கப்படுவர்களுக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நினைத்தும் பார்க்க முடியாத அளவில் பாதிக்கப்படுவர். ஒரு பெண் நிர்வாணப்படுத்தப்பட்டு பாலியல் வக்கிரங்களுக்கு ஆளாக்கப்படும்போது அவரது அந்தரங்கமே அவளது சுயமே கேள்விக்குள்ளாக்கப்பட்டு பெரும்பாலும் மனச் சிதைவுக்கு உள்ளாவார்கள். இவர்கள் சற்று தைரியசாலிகளாக இருந்தாலும், தாம்பத்தியத்தை கண்டு அஞ்சி நடுங்கி அதன் மீது ஒரு வெறுப்பை வளர்த்துக் கொள்வார்கள். ஒருவர் மிகச்சிறிய அளவில் வதைக்கப்பட்டாலும் அவரது மனநிலை ஆளுமையின் வலிமை, வயது, பாலினம் ஆகியவற்றை பொறுத்து அவருக்கு பாதிப்புகள் ஏற்படும். அவரது மன சமநிலையை இழந்து, தூக்க – மின்மைக்கு ஆட்பட்டு மனபேதலிப்புக்கு உள்ளாவார்கள்.

### குறிப்பான பரிந்துரைகள்

தமிழக மற்றும் கர்நாடக சிறப்பு அதிரடிப்படையினரின் செயல்பாடுகளை ஒருங்கிணைக்கும் வகையில் கூட்டு அதிரடிப்படை (Joint Task Force) ஒன்றை தமிழக அரசும், கர்நாடக அரசும் இணைந்தே அமைத்தன. இது தொடர்பான அனைத்துப் வேலைகளையும் இரு அரசுகளும் இணைந்தே செய்தன. எனவே, அப்பகுதியில் இக்கூட்டு அதிரடிப்படை நிகழ்த்திய மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்பேற்க வேண்டியது இரு அரசுகளையும் சார்ந்தது.

1. 121 தமிழர்கள் மீது 'தடா' வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, மைசூர் 'தடா' சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணையை எதிர்நோக்கி இருக்கிறார்கள். இவர்களில் 12 பெண்கள் உள்பட 51 பேர் கடந்த ஏழு ஆண்டுகளுக்கும் மேலாக விசாரணைக் கைதிகளாகவே தொடர்ந்து மைசூர் சிறையில் வாடுகின்றனர். இந்த 121 பேர் மீதும் தொடரப்பட்டுள்ள 'தடா' வழக்குகளை தாமதமின்றி உடனே கர்நாடக அரசு மறு ஆய்வு மேற்கொள்ளுவதற்கு தமிழக அரசு, சட்ட மற்றும் பிற வழிவகைகள் மூலம் உடனடியாகத் தலையிட வேண்டும்.

2. மேற்படி அதிரடிப்படையினரின் அத்துமீறலால் தமிழக–கர்நாடக எல்லையோரப் பகுதியில் வாழும் தமிழ் மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் ஏற்பட்ட இழப்பு குறித்து மதிப்பீடு செய்வதற்கு ஒய்வு பெற்ற நீதிபதி சதாசிவா தலைமையிலான ஒரு விசாரணைக் குழு அமைக்கப்பட்டு இந்த வழக்குகளை விசாரித்து வருகிறது. விசாரணை விரைவில் முடிக்கப்பட்டு பாதிக்கப்பட்டவர் –களுக்கு உடனடியாக நீதி கிடைக்க வழிவகை செய்யவேணடும்.

3. இவ்வளவு மிகக் கொடூரமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட சிறப்பு அதிரடிப்படைக்குப் பொறுப்பான அதிகாரிகளை சம்பந்தப்பட்ட தமிழக மாவட்ட மனித உரிமை நீதிமன்றங்களில் விசாரித்துத் தண்டனை வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# பொதுவான பரிந்துரைகள்

நம் நாட்டின் அரசியல் சாசன அடிப்படை உரிமைகள் பகுதியும், குற்றவியல் நடைமுறைச்சட்டமும், சர்வதேச சட்டங்களும் சித்திரவதையை கடுமையாக கண்டிக்கின்றன. ஒருவர் குற்றம் சாட்டப்பட்டிருந்தாலும், குற்றவாளி – யாக இருந்தாலும் அவரைச் சித்திரவதை செய்வது அடிப்படை மனித உரிமை மீறல் என்பதை திட்டவட்டமாகக் கூறுகின்றன.

சித்திரவதை என்பது மனிதனை, மனித மாண்பை இழிவுபடுத்தும், மனிதத் தன்மையற்ற செயலாகும். இந்திய அரசியல் சாசனத்தின் அடிப்படை உரிமை பிரிவு 20 (3) சித்திரவதையை தடை செய்கிறது. நாட்டில் உள்ள ஒவ்வொருவருக்கும் கண்ணியமாக வாழும் உரிமை உண்டு என்று இந்திய அரசியல் சாசனத்தின் பிரிவு 21 கூறுகிறது. போலீஸ் காவலில் இருப்பவர்களை துன்புறுத்துவது இந்தியத் தண்டனைச் சட்டம், பிரிவுகள் 330 மற்றும் 331–ன்படி தண்டனைக்குரிய குற்றங்களாகும்.

ஒருவரது குற்றம் நிரூபிக்கப்படும் வரை அவர் நிரபராதியே. இந்த உரிமை கைது செய்யப்பட்டவருக்கு உண்டு என்று இந்திய சாட்சியச் சட்டம் பிரிவு 101 தெளிவாகவே கூறுகிறது.

இந்திய போலீஸ் சட்டம் 1881 பிரிவு 29 சித்திரவதையை தடை செய்துள்ளது.

நீதித்துறையின் அதிகாரத்தை போலீசார் கையில் எடுத்துக் கொண்டு வழக்குகளில் தீர்ப்பளிக்க முனைதல் கூடாது. தனி நபர்களைப் பழிவாங்குவதோ, குற்றம் சாட்டப்பட்டவரை தண்டிப்பதோ கூடாது என்று போலீஸ் நன்னடத்தை விதி 3 கூறுகிறது.

கை விலங்கிடுதல் என்பதும் ஒரு வகை வதையே ஆகும். இது குறித்து, பிரேம் சங்கர் சுக்லா எதிர் டெல்லி நிர்வாக வழக்கில் (1980 (3) SCC526) நீதிமன்றம் அளித்த தீர்ப்பாவது :

"கை விலங்கிடுவது என்பது கொடூரமான கேவலமான, தண்டனை – யாகும். ஒருவரின் கைகளில் விலங்கிடுவது கட்டாயத் தேவையல்ல; இது வக்கிரமானது, தான்தோன்றித்தனமானது, சர்வாதிகாரமானது, அச்சுறுத்தி அவமதித்து அடி பணிய வைப்பதாகும். இந்திய அரசியல் சாசனத்தின் 19–வது பிரிவு வழங்கும் ஒரு கைதிக்குள்ள உள்ள உரிமையான குறைந்தபட்ச, நடமாட்ட சுதந்திரம் கைவிலங்கிடுவதன் மூலம் தடைபடக் கூடாது.

"அரசியல் சட்டப் பிரிவுகள் 14, 19–க்கு ஏற்ப, பாதுகாப்பை உத்திரவாதம் செய்ய வேறு பல வழிகள் இருப்பதால், கைவிலங்கிடுவதை கடைசி வழிமுறையாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மட்டுமே செய்ய வேண்டும்: சிறை அதிகாரிகள் அல்லது வெளியில் பாதுகாப்புக்கு வருபவர்களின் வசதிக்காக எந்த ஒரு கைதியையும் கைவிலங்கிடுவதோ அல்லது சங்கிலியால் பிணைப்பதோ கூடாது.

"விலங்கிடுவதைத் தவிர வேறு மாற்று வழிகளில்லை என்ற நிலையை அடைவதற்கு முன்னர் வழமையான பல்வேறு பாதுகாப்பு முறைகளையே மேற்கொள்ள வேண்டும். போக்குவரத்தின் போது கைதி, போலீஸ் பாதுகாப்பை மீறி தப்பித்து விடுவார் என்ற அபாயம் தெளிவாக இருக்கும் போது, போலீசின் எண்ணிக்கையை அதிகரிப்பது, அல்லது பிற வழிகளை கையாளுவதன் மூலமும் கட்டுப்படுத்த இயலாது என்பதற்கு உறுதியான ஆதாரம் இருக்கும் போது மட்டுமே கை விலங்கிடலாம். இதைத் தெள்ளத் தெளிவாக நிரூபிக்கின்ற பொறுப்பு விலங்கிடுபவர்க்கே உள்ளது."

"கடுமையான அல்லது பாராதூரமான குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகி இருப்பதாலோ, தப்பிக்கும் வாய்ப்பு உள்ளது அல்லது கைதி கட்டுங்கடங்காதவர் என்பதாலோ, இக்காரணங்களினால் மட்டும் ஒருவர் கைவிலங்கு இடப்படுவது கூடாது."

எனவே, ஒருவர் சிறைக்கு உள்ளே இருந்தாலும் சரி அல்லது வெளியே இருந்தாலும் சரி, இந்நாட்டில் ஒரு குடிமகன் வதைக்கப்படுவதற்கு அரசியல் சட்டப்படி வாய்ப்பு ஏதும் இல்லை என்பது தெளிவு.

இதே போன்று சர்வதேச சட்டங்களும் சித்திரவதையை கடுமையாக கண்டிப்பதோடு அவை யார் மீதும், எவ்விதத்திலும் கடைப்பிடிக்கப்படக்கூடாது என்று கூறுகின்றன.

**வதைக்கு எதிரான உலகளாவிய சட்டங்கள்**

ஐ.நா.வின். மனித உரிமை பிரகடனத்தின் பிரிவு 5 எந்த ஒரு நபரையும் சித்திரவதைக்கோ அல்லது குரூரமான மனிதத்தன்மையற்ற தண்டனைக்கோ ஆட்படுத்தக்கூடாது என்று கூறுகிறது. சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்—கான சர்வதேச பிரகடனத்தின் பிரிவு 7 சித்திரவதைக்கோ அல்லது குரூரமான, மனிதத்தன்மையற்ற அல்லது இழிவுபடுத்தும் வதைக்கு யாரையும் ஆட்படுத்தக்கூடாது. குறிப்பாக, யாரையும் அவரது சுயமான விருப்பமின்றி மருத்துவ அல்லது விஞ்ஞான பரிசோதனைக்கு உட்படுத்தக் கூடாது என்று கூறுகிறது.

சித்திரவதை மற்றும் குரூரமான மனிதத்தன்மையற்ற தண்டனைக்கு எதிராக ஐ.நா.வின். உடன்படிக்கை 1984–ல் உறுப்பு நாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, 1987–லிருந்து நடைமுறைக்கு வந்துள்ளது. இப்பிரகடனத்தின் பிரிவு 4ஆனது சித்திரவதைகள் குற்றவியல் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படக்கூடிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குற்றங்களே எனக்கூறுகிறது. பிரிவு 14 சித்திரவதையினால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு போதுமான நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும் என்பதை உறுதி செய்கிறது. பிரிவு 10 காவலில் வைக்கும் போலீசாருக்கும், மற்ற அதிகாரி – களுக்கும் சித்திரவதையை தடுப்பது குறித்த முறையான கல்வி கொடுக்கப்பட வேண்டும் என்று கூறுகிறது.

சித்திரவதைக்கு எதிராக இத்தகைய தேசிய, சர்வதேசிய அளவிலான சட்டங்கள் இருந்தும் தொடர்ந்து சித்திரவதையைப் பயன்படுத்துவது மிகுந்த வேதனைக்குரிய விஷயமாகும். சித்திரவதை என்பது அரசியல் கைதிகளுக்கு மட்டுமல்ல, கிரிமினல் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கும் பயன்படுத்துவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

பொதுவாகவே, போலீஸ் குற்றவாளிகளை அடித்து உதைத்து உண்மையை ஒப்புக் கொள்ள வைப்பது சரியானதே என்ற நம்பிக்கை பொதுமக்களிடம் குறிப்பாக படித்தவர்களிடமே காணப்படுகின்றது. உண்மையில் சமூக அளவில் ஒரு நபரை சித்திரவதை செய்வதினால் அதற்கு எதிர்மாறான விளைவுகளே ஏற்பட்டுள்ளன. குற்றங்கள் வதைகளினால் குறைந்ததில்லை மாறாக அதிகரிக்கவே செய்துள்ளன என்று சர்வதேச ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது. சர்வதேச பொதுமன்னிப்பு சபையின் வதைகளுக்கு எதிரான சர்வதேச மாநாட்டின் தீர்மானம் கூறுகிறது "குற்றம் சாட்டப்பட்ட ஒருவரை சித்திரவதை செய்வது என்பது ஒழுக்க ரீதியாக வெறுக்கத்தக்கது. முழுமையாக எந்த வடிவிலும் ஏற்றுக் கொள்ளமுடியாதது. மனிதத் தன்மையையே மறுப்பது, மக்களை ஆட்டு மந்தைகளாக மாற்றுவது, மனிதனின் ஆளுமையை, அவனது நம்பகத்தன்மையை உடைத்தெறிவது" என்று அத்தீர்மானம் கண்டனம் செய்கிறது.

அமைதியான ஒருவரை பழிவாங்கும் வெறியுடைய சமூக விரோதியாக சித்திரவதை மாற்றும். சித்திரவதை குறித்த சர்வதேச சட்டங்களை மீறினால் மீறப்படும் நாட்டின் குடிமக்கள் இன்னொரு நாட்டின் அரசினால் குறி வைத்து வேட்டையாடப்படலாம். சித்திரவதை செய்வதினால் உண்மையை வரவழைக்க முடியாது. பெரும்பாலான வழக்குகளில் வதைக்குப் பயந்து கொண்டு அப்பாவிகள் தாங்கள் குற்றத்தை செய்து கொண்டதாகவே ஒப்புக் கொண்டுள்ளனர். இதனால், பெரும் அநீதி ஏற்படவும் வாய்ப்பு ஏற்படுகிறது. (ஆதாரம் 1999ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22ம் தேதி டில்லியில் நடைபெற்ற வதைக்கு எதிரான சர்வதேச மாநாட்டில் வாசிக்கப்பட்ட ஆய்வுத்தாள்கள்)

◆ ◆ ◆



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# III. மோதல் சாவுகள்

'மோதல்கள்' என்ற பெயரில் தமிழக போலீஸ்துறை அப்பாவி மக்களையும், சட்டரீதியாகத் தண்டிக்கப்பட வேண்டிய குற்றவாளிகளையும், ஆட்சிக்கு எதிராக கருத்துக் கொண்டு போராடுபவர்களையும் சட்டத்திற்குப் புறம்பாக சுட்டுக் கொல்லுவது அல்லது சித்ரவதை செய்து கொல்வது போன்ற மனித உரிமை மீறல்கள் தமிழகத்தில் தொடர் நிகழ்வுகளாகிவிட்டன.

1998–99 ஆண்டுகளில் சென்னையில் 'கைபாம்' மோகன் என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார். 1999இல் சாத்தான்குளத்தில் பவுல், திருச்சியில் கோசிஜின், தஞ்சாவூர் சின்னதம்பி, சென்னையில் பாலகிருஷ்ணன் என்ற மிலிட்டரி குமார் போன்றவர்கள் போலீசாரால் "மோதல்" என்ற பெயரில் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர். 23.7.99ல் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு மனு கொடுக்க ஊர்வலமாய் வந்த மக்களில் 17 பேரை போலீசார் லத்தியால் அடித்து விரட்டியதால் தாமிரபரணி ஆற்றுக்குள் இறங்கி தப்பி ஓடியவர்களை கரையேற விடாமல் அடித்ததால் மரணம் அடைந்தனர். 2000–த்தின் துவக்கத்தில் தர்மபுரியில் 'நக்சலைட்' என முத்திரை குத்தி இரவீந்திரன் என்பவர் போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரைத் தொடர்ந்து நெல்லை மாவட்டம் பழவூரைச் சேர்ந்த முத்துராஜ் என்பவரும் போலீசாரால் மோதல் என்ற பெயரில் கொல்லப்பட்டார்.

1998ஆம் ஆண்டைவிட 1999ம் ஆண்டில்தான் மோதல் சாவுகள் என்ற பெயரில் போலீசாரால் கொலை செய்யப்பட்டவர்கள் எண்ணிக்கை அதிகம். இங்கு மோதல் சாவுகளில் மக்கள் கண்காணிப்பகம் மற்றும் பி.யூ.சி.எல் மேற்கொண்ட கள ஆய்வுகளும், பத்திரிக்கைகளில் வெளிவந்த செய்திகளும் சுருக்கி தரப்பட்டுள்ளன.

### 1. சென்னை

#### (அ) மோகன்

சென்னை ஆயிரம் விளக்கு குலாம் அப்பாஸ் அலிகான் 4வது தெருவை சேர்ந்த லோகநாதன் என்பவரது மகன் மோகன் (வயது 35). இவர் போலீசாரால் 'கைபாம்' மோகன் என அழைக்கப்பட்டார். இவர் தலித் இனத்தைச் சேர்ந்தவர். இவர் 1988 ஆம் ஆண்டு குண்டர் தடை சட்டத்தில் கைது செய்யப்பட்டவர். அதன்பின் தொடர்ந்து இவர் மீது போலீசார் பல வழக்குகளைப் போட்டு ஆயிரம்விளக்கு பகுதியில் இவரை பெரிய கொள்ளைக்காரனாகவும், தீவிரவாதி – யாகவும் சித்தரித்து வளர்த்து விட்டனர். மோகன் தங்கியிருந்த இடம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போலீசாருக்கு தெரிந்தும் அவரை கைது செய்யாமல் அவர் மேல் பல வழக்குகளைச் சேர்த்து கொண்டு, அவரது குடும்பத்தினரைத் தொந்தரவு செய்து கொண்டிருந்தனர். அதன்பின் மோகனை சுட்டுக் கொல்ல முடிவு பண்ணிய போலீசார் ஆயிரம் விளக்கு சார்பு ஆய்வாளர் பாலசுப்பிரமணியம் தலைமையில் போலீஸ் படையை அனுப்பி 14.10.98 அன்று மோகன் தங்கியிருந்த வீட்டைச் சுற்றி வளைத்து அவரைப் பிடித்து ஓடச் சொல்லி போலீசார் துரத்துவது போல் துரத்தி அவர் காலிலும், நெஞ்சிலும் துப்பாக்கியால் சுட்டு கொலை செய்துள்ளனர்.

ஆனால் போலீசார் மோகனை பிடிக்கச் சென்ற போது, மோகன்தான் மறைத்து வைத்திருந்த சூரிக்கத்தியையும், பட்டாக் கத்தியையும் எடுத்து சார்பு ஆய்வாளர் பாலசுப்பிரமணியனை வெட்டியதாகவும், உடனே மற்றொரு போலீஸ் – காரர் பாலசுப்பிரமணியம் என்பவர் மோகனை மடக்கிப் பிடிக்க முயன்றபோது, அவரது பின் கழுத்திலும் மோகன் வெட்டியதாகவும் இதை தடுக்க முயன்ற ஏட்டு மூர்த்தியும் வெட்டுப்பட்டதாலும் சார்பு ஆய்வாளர் பாலசுப்பிரமணியம் தன்னிடம் இருந்த கைத்துப்பாக்கியால் மோகனை நோக்கி 4 ரவுண்டு சுட்டதாகவும் வழக்குப் பதிவு செய்துள்ளனர். சார்பு ஆய்வாளர் பாலசுப்பிரமணியம் மோகனை நோக்கிச் சுடுவதை அங்கு கூடியிருந்த மக்கள் நேரடியாக பார்த்துள்ளனர். அவர்கள் மோகன் கையில் எந்தவித ஆயுதங்களும் இல்லை என்பதை தெரிவித்துள்ளனர். சென்னை ஆயிரம் விளக்கு போலீஸ் நிலையத்தில் மாமூல் கொடுக்காததினால் மோகன் மேல் அதிகமான பொய் வழக்கு போட்டு அவரை சுட்டுக் கொன்றுள்ளனர் என்று அப்பகுதி மக்கள் கூறுகின்றனர். (ஆதாரம் – மக்கள் கண்காணிப்பகத்தின் 17.10.98 தேதியிட்ட உண்மை அறியும் அறிக்கை)

**(ஆ) பாலகிருஷ்ணன்**

பாலகிருஷ்ணன் என்ற மிலிட்டரி குமார் (34) கேரள மாநிலம் கோழிக்கோடு அருகில் உள்ள புதியன்காடு என்ற ஊரைச் சேர்ந்தவர். 1984 ஆம் ஆண்டிலிருந்து 1990 வரை இராணுவத்தில் காவலராக பணியாற்றினார். சென்னையில் அண்ணா நகர் பகுதியில் உள்ள பல்வேறு வழக்குகளில் சம்மந்தப் பட்டவர். இருந்த போதிலும் அவர் போலீசாருடன் நெருக்கமாகவே இருந்து வந்தார். திருட்டு வழக்குகள் சென்னையில் அதிகமாகியதைக் கண்ட போலீஸ் உயரதிகாரிகள் சரியான நடவடிக்கை எடுக்க உத்தரவிட துணை கமிஷனர் சிவனாண்டி தலைமையில் ஆய்வாளர் கர்ணன் மற்றும் போலீசாரோடு சேர்ந்து மிலிட்டரி குமார் போன்றவர்களை சுட்டு தள்ளுவது என முடிவாகியுள்ளது. அதன் அடிப்படையில் மிலிட்டரி குமார் மேல் திடீரென்று பல வழக்குகளை அவசர அவசரமாக பதிவு செய்தனர். மிலிட்டரி குமாரை தேடிக் கொண்டிருப்பதாக நாளிதழ்களில் செய்திகளை கொடுத்து 25.10.99 அன்று ஐ.சி.எப். தொழிற்சாலை அருகே குமாரைச் சுட்டுக் கொன்றனர். போலிசார் வாக்குமூலப்படி மோட்டார் பைக்கில் கூட்டாளியுடன் மிலிட்டரி குமார் போவதாக போலீசாருக்கு தகவல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வந்ததாகவும் அதனால் அவரை துரத்திச் சென்றதாகவும், ஐ.சி.எப். ரயில்வே கேட் மூடியிருந்ததால் அவரால் அதற்கு மேல் போக முடியவில்லை என்றும் அதன்பின் 'பைக்'கை திருப்பி போலீஸ் ஜீப் மீது மோதியதாகவும் பைக் கீழே விழுந்து அவரது கூட்டாளி தப்பி விட்டதாகவும் அந்நேரத்தில் ஆய்வாளர் நந்தகுமாரை நோக்கி மிலிட்டரி குமார் பட்டாக்கத்தியை வீசவே, அக்கத்தி ஜீப் கண்ணாடியை உடைத்ததாகவும் அதன்பின் பெட்ரோல் குண்டு வீசியதாகவும் அது வெடிக்காமல் போனதாகவும் அந்நேரத்தில் ஆய்வாளர் கர்ணன் துப்பாக்கி எடுத்து சுட்டார் என்றும் வழக்கை திசை திருப்பி விட்டுள்ளனர்.

(ஆதாரம் – 26.10.1999 தேதியிட்ட தினபூமி, தினகரன், தீக்கதிர், தினமலர் நாளிதழ்கள்)

2. தூத்துக்குடி

தூத்துக்குடி மாவட்டம் உடன்குடி அருகே கடாச்சபுரத்தை ஒட்டி அமைந்துள்ள அன்பின் நகரம் என்ற ஊரைச் சேர்ந்த சத்தியநாதன் என்பவரின் மகன் பவுல் (45) இவர் குண்டர் சட்டத்தில் கைதாகி ஒரு ஆண்டு சிறையில் இருந்துள்ளார். அதன் பிறகு போலீசார் இவர் மீது பல்வேறு கொலை மற்றும் கொள்ளை வழக்குகளை போட்டு பெரிய 'ரவுடி'யாக அந்தப் பகுதியில் சித்திரித்து வளர்த்து வந்தனர். பின்னர் ஒரு கட்டத்தில் தூத்துக்குடியில் ரவுடிகள் பெருகிவிட்டனர். ரவுடிகளை ஒழிக்க கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பல பத்திரிக்கைகளிலும் எழுதப்பட்டது. இதனைத் தொடர்ந்து ரவுடிகளை ஒழிப்பதில் தீவிரமாக செயல்படுவதாக காட்ட விரும்பினர். இந்த நடவடிக்கையின் ஒரு பகுதியாக பவுலை சுட்டுக் கொல்ல முடிவு பண்ணிய போலீசார் சாத்தான்குளம் சார்பு ஆய்வாளர் குமரகுருபரன் தலைமையில் போலீசார் 9.4.99 அன்று சுட்டுக் கொலை செய்தனர்.

சாத்தான்குளத்தில் இருந்து திசையன்விளைக்கு ஒரு வழக்கு விசாரணைக்காக சார்பு ஆய்வாளர் குமரகுருபரன் தலைமையில் போலீசார் சென்றதாகவும் சாத்தான்குளத்தை கடந்து சிறப்பூர் அருகே செல்லும் போது மோட்டார் சைக்கிளில் பவுல் வந்து கொண்டிருந்ததாகவும் வண்டியை செல்வராஜ் என்ற போலீஸ்காரர் வழிமறித்த போது செல்வராஜை தள்ளி விட்டு மீண்டும் பவுல் மோட்டார் வண்டியை எடுத்த போது சார்பு ஆய்வாளர் குமரகுருபரனும் போலீஸ்காரர் இன்பராஜும் மோட்டார் சைக்கிளை செல்லவிடாமல் தடுத்ததாகவும் இதனால் பவுல் தன்னுடைய இடுப்பில் மறைத்து வைத்திருந்த பட்டாக் கத்தியை உருவி சார்பு ஆய்வாளர் குமரகுருபரனின் இடது கையை நோக்கி ஆவேசமாக சுழற்றினான். இதனால் குமரகுருபரனின் மணிக்கட்டில் வெட்டு விழுந்தது. தொடர்ந்து வீசியதால் அவரது மார்பு, கழுத்து, முகம் ஆகிய இடங்களில் ரத்தக்காயம் ஏற்பட சார்பு ஆய்வாளர் குமரகுருபரன் தன் இடுப்பில் வைத்திருந்த கைத்துப்பாக்கியை எடுத்து பவுலை நோக்கி 5 ரவுண்டுகள் சுட 3 குண்டுகள் அவரது வயிற்றிலும், பிற இரண்டு குண்டுகள் வலது விலா மற்றும் இடது மார்பு

www.tamilarangam.net



பகுதியில் பாய்ந்து மரணமடைந்ததாக வழக்குப் பதிவு செய்துள்ளனர். (ஆதாரம் – கதிரவன், 10.04.99)

**3. *திருச்சி***

திருச்சி லால்குடி பக்கத்தில் உள்ள மணக்கால் கிராமத்தைச் சேர்ந்தவர் கோசிஜின் (41) மெக்கானிகல் இன்ஜினியரிங் படிப்பில் டிப்ளமோ படித்து முடித்தவர். படித்து முடித்து வேலை இல்லாமல் திரிந்த கோசிஜின் சில ரௌடி கும்பல்களோடு தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு பணம் சம்பாதிக்க ஆரம்பித்தார். கோசிஜின் மேல் போலீசார் பல வழக்குகளை பதிவு செய்தனர். சில ரௌடிகளை பிடிக்க முடியாத போலீசார் கோசிஜினுடைய கிராமத்திற்குச் சென்று கோசிஜினை கைது செய்தனர். சட்டவிரோத காவலில் கோசிஜினை சில நாட்கள் வைத்து விட்டு 1999 ஏப்ரல் 12 ஆம் தேதி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். கோசிஜினை ஏப்ரல் 26ஆம் தேதி வரை நீதிமன்ற காவலில் வைக்க நீதித்துறை நடுவர் கலியமூர்த்தி உத்தரவிட்டார். இதற்குள் ஒரு பெரிய குற்றவாளியைப் பிடிக்க முடியாத திருச்சி போலீசார் அவர்களைப் பயமுறுத்தும் வகையில் அவர்களது கூட்டாளி ஒருவனை கொன்றுவிட முடிவு செய்து அவர்களின் திட்டத்தின்படி சுட்டுக் கொல்லப்பட்டவர்தான் கோசிஜின்.

நீதிமன்றத்தில் இருந்து திருச்சி சிறையில் கோசிஜினை அடைக்க போலீசார் ஜீப்பில் அழைத்துச் சென்ற போது சார்பு ஆய்வாளர் வெள்ளத்துரை தலைமையில் உள்ள போலீசார் முன்னரே அவர்கள் திட்டமிட்டபடி குட்ரவுட் மேம்பாலம் அருகே அவரை கீழே இறக்கி சுட்டுத்தள்ளினர். இதனை மறைக்க போலீசார் ஜீப்பில் வந்து கொண்டிருந்த போது முன்பக்க டயர் வெடித்ததாகவும், அதனால் ஜீப் நிலை தடுமாறி ரோட்டின் நடுவில் உள்ள தடுப்பில் மோதி நின்றதால் போலீசார் அனைவரும் நிலை தடுமாறினர். அந்த சமயத்தைப் பயன்படுத்திக் கொண்டு கோசிஜின், போலீஸ்காரர் ஒருவர் கையில் இருந்த 410 ரக துப்பாக்கியை எடுத்துக் கொண்டு கீழே இறங்கி ஓடியதாகவும், துப்பாக்கியின் பின்புறத்தால் போலீஸ்காரர் சில்வர்ஸ்டாரின் நெஞ்சில் குத்தி விட்டு வேகமாக ஓடியதாகவும் இந்த நேரத்தில் சார்பு ஆய்வாளர் வெள்ளத்துரை தான் வைத்தி –ருந்த துப்பாக்கியை எடுத்து கோசிஜினின் முதுகில் இரண்டு ரவுண்டுகளும், தலையில் ஒரு ரவுண்டும் சுட்டார் என்றும் படுகாயமடைந்த கோசிஜினை ஆஸ்பத்திரிக்கு கொண்டு வரும் வழியில் மரணமடைந்து விட்டதாகவும் போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர். (ஆதாரம் – 13.04.99, தினமணி, ஏப்ரல் 21, ஜூனியர் விகடன்)

**4. *தாமிரபரணி***

மாஞ்சோலை தோட்ட தொழிலாளர்கள் சம்பள உயர்வு மற்றும் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து 07.06.99 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அலுவலகம் முன்பு தர்ணா நடத்தினர். இதில் 198 பெண்கள் உள்பட 652 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களை விடுதலை செய்யக்கோரி 23-7-99 அன்று மாஞ்சோலை தோட்டத் தொழிலாளர்கள் தங்களது பிரச்சனைக்காக சில அரசியல் கட்சிகளின் ஆதரவோடு நெல்லையில் அமைதியான ஊர்வலம் ஒன்றை நடத்தினர். ஊர்வல முடிவில் தங்களது கோரிக்கை மனுவை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கொடுக்க மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் நோக்கி வந்த போது போலீசாரால் மக்களும், மக்கள் தலைவர்களும் அடித்து விரட்டப்பட்டனர். போலீசாரின் திட்டமிட்ட தாக்குதலால் 17 பேர் பலியானார்கள்.

போலீசாரின் தடியடிக்குப் பயந்து தாமிரபரணி ஆற்றில் தப்பி ஓடிய 17 பேரும் போலீசாரின் லத்தி கம்பால் அடித்து ஆற்றின் கரையேற விடாமல் கொலை செய்யப்பட்டனர். அரசு இது பற்றிய விசாரிக்க நீதிபதி மோகன் கமிஷனை அமைத்துள்ளது. பல்வேறு தன்னார்வ மனித உரிமை அமைப்புகள் ஏற்பாடு செய்ததன் பேரில் மும்பை உயர்நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி எச்.சுரேஷ் தலைமையில் அமைந்த குழு பொதுவிசாரணை ஒன்றை மேற்கொண்டு அதன் மூலம் கிடைத்த வாக்குமூலங்களின் அடிப்படையிலும் இன்னபிற களஆய்வுகள் மூலம் அந்த 17 பேர்களையும் போலீசாரின் தடியடியின் விளைவாக ஆற்றில் மூழ்கி இறந்தனர் என்பதனை உறுதி செய்துள்ளன.

***போலீசாரால் கொலை செய்யப்பட்டவர்கள்***

1. ஷா நிவாஸ் (20) த/பெ. உஸ்மான் அலி
2. முருகன் த/பெ. பால்ராஜ்
3. ஜோஸ்பின் (35) க/பெ. கோபால்
4. ராஜ்
5. ஆறுமுகம், த/பெ. பார்வதிநாதன்
6. ரத்தினம்
7. ஜெயசீலன் (35)
8. குட்டி என்ற குமார் (21) த/பெ. தங்கசாமி
9. ஜான் பூபாலராயர் (25) த/பெ. இருதயராஜ்
10. இஞ்ஞாசி மாணிக்கம்
11. ஆண்டனி
12. சஞ்சீவி (58) த/பெ. சஞ்சீவி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



13. விக்னேஸ் (ஒன்றரை வயது) த/பெ. மாரியப்பன் (இறந்து போன இரத்தினமேரியின் மகன்)
14. இரத்தினமேரி (22) க/பெ. மாரியப்பன்
15. வேலாயுதம் (40) த/பெ. முத்தையா
16. கெய்சர் (27) த/பெ. ஜமாலுதீன்
17. அப்துல்ரகுமான் (25) த/பெ. செய்யது உசேன்.

(ஆதாரம் – திருநெல்வேலியில் 17 பேரின் மரணத்திற்கு காரணமாகக் கூறப்படும் போலீசாரின் அத்துமீறல் குறித்த பொதுவிசாரணையின் அறிக்கை. இந்த அறிக்கையானது மனித உரிமைக் கல்வி மற்றும் காப்புக்களம், நெல்லை, மக்கள் கண்காணிப்பகம்–தமிழ்நாடு, சோக்கோ அறக்கட்டளை, மதுரை, ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சி சொசைட்டி, மதுரை, தலித் மனித உரிமைகளுக்கான தேசியப் பிரச்சாரம் (த.நா.பிரிவு), மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி மையம் (ஹெச்.ஆர்.எப்), சென்னை, ஆகிய அமைப்புகளின் சார்பாக வெளியிடப்பட்டுள் – ளது. மும்பை உயர்நீதிமன்றத்தின் நீதிபதி எச். சுரேஷின் தலைமையிலான இப்பொது விசாரணையில் திரு.வி.ஆர். லெட்சுமி நாராயணன், ஐ.பி.எஸ், தமிழக காவல்துறை முன்னாள் தலைவர், திரு.வி. கருப்பன், ஐ.ஏ.எஸ் (ஓய்வு) தலைவர், தலித் செயல்பாட்டு கூட்டமைப்பு, பஞ்சமி நில மீட்பு இயக்கம், முனைவர் வசந்தி தேவி, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் ஆகியோர் நீதிபதிகளாக பங்கேற்றனர்)

## 5. தர்மபுரி

இரவீந்திரன் (32) இவர் பொறியியல் பட்டதாரி ஆவார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மா–லெ) மக்கள் யுத்தக்குழு அமைப்பில் ஈடுபாடு கொண்ட இவர் தர்மபுரி மாவட்டத்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி வந்தார். 6.1.2000 அன்று இரவு சுமார் 7 மணியளவில் பெருங்காட்டு பள்ளம் என்ற கிராமத்தில் இவரும் இவரோடு இணைந்து இராமச்சந்திரன், குமார் மற்றும் சிவா ஆகிய நான்கு பேரும் கிராம மக்களிடம் பிரச்சாரம் செய்தனர். பாரதிய ஜனதா கட்சியின் 100 நாள் ஆட்சியானது அன்னிய முதலாளிகளுக்கு வரிச்சலுகைகளை வாரி வழங்குவதையும் கிராமப்புற விவசாயிகளின் மானியங்களை குறைக்கச் செய்ததையும், விலைவாசி உயர்வையும் எதிர்த்து பிரச்சாரம் செய்தனர். அன்றிரவு பெருங்காட்டு பள்ளத்தில் தங்கிவிட்டு மறுநாள் காலை 7.1.2000 அன்று ஊரின் எல்லையில் அரை கிலோ மீட்டர் தொலைவில் உள்ளஊர் கவுண்டர் வீட்டிற்கு சாப்பிடுவதற்காக வந்தனர்.

அங்கு சாப்பிட்டு விட்டு காலை 11.30 மணியளவில் வீட்டை விட்டு வெளியே வரும் போது 25 அதிரடிப்படை காவலர்கள் இவர்களைச் சுற்றி வளைத்து இரவீந்திரனை அதிரடிப்படையினர் பூட்ஸ் காலால் மிதித்துள்ளனர். பின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மதியம் 2 மணியளவில் இரவீந்திரனின் கைகளைப் பின்புறமாகக் கட்டியும், கண்களைக் கட்டியும், சந்தடி இல்லாத இடத்திற்கு இவருடன் சிவா என்பவரையும் அழைத்துச் சென்றுள்ளனர். அங்கு 7 ஆம் தேதியிலிருந்து 9ஆம் தேதி வரை ரவீந்திரன் கண்கள் கட்டப்பட்ட நிலையிலேயே வைக்கப்பட்டிருக்கிறார்.

பின்னர் 9ஆம் தேதி அவர் கண்களிலிருந்து கட்டை அவிழ்த்து விட்டு கைகளை மேலே கட்டி அடித்து உதைத்துள்ளனர். கை, கால் முட்டிகளில் துப்பாக்கியின் பின்பக்கத்தினால் குத்தியுள்ளனர். தோள்பட்டையிலும், இடுப்பிலும் துப்பாக்கிக் கட்டையால் அடித்துள்ளனர். இப்படி 2 நாட்கள் சித்ரவதை செய்து விட்டு 10 ஆம் தேதி பெருங்காட்டுப்பள்ளம் ஊர்கவுண்டர் வீட்டிற்கு அருகே பகல் 11.30 மணியளவில் கூட்டி வந்து மீண்டும் இருவரையும் கண், கைகளை கட்டி ஓடச் சொல்லியுள்ளனர். ஓட மறுத்த இரவீந்திரனை போலீசார் அங்கேயே சுட்டுக் கொன்று விட்டனர்.

ஆனால் போலீசார் நடந்த சம்பவங்களை மறைத்து கீழ்கண்டவாறு வழக்கைப் பதிந்துள்ளனர்.

10 ஆம் தேதி முன் தினம் மாரண்டஹள்ளிக்கு அருகிலுள்ள கால்திரமுட்டலு என்னும் காட்டுப்பகுதியை தாண்டி 5 கி.மீ. தூரமுள்ள பெருங்காடு என்ற மலைப்பகுதியில் உள்ள ஊர்க்கவுண்டர் மல்லன் என்பவருக்குச் சொந்தமான காட்டுக் கொட்டகையில் பேருந்து எரிப்பில் சம்பந்தப்பட்ட நான்கு மர்ம இளைஞர் தங்குவதற்காக வந்தனர்.

இவர்கள் நக்சலைட் பிரச்சார பாடல்களையும், அரசு மற்றும் போலீசாருக்கு எதிரான பாடல்களை அவர்கள் காட்டுப் பகுதியிலுள்ள கிராம மக்களுக்கு பாடி காட்டியுள்ளார்கள். இதுபற்றி பொது மக்கள் போலீசுக்கு தகவல் தெரிவிக்கவே, தர்மபுரி மாவட்ட போலீஸ் கண்காணிப்பாளர் கந்தசாமி உத்தரவின் பேரில் போலீசார் அந்தப் பகுதியை சுற்றி வளைத்தனர் என்றும், போலீசாரால் சுற்றி வளைக்கப்பட்டதை உணர்ந்த அந்த நான்கு மர்ம இளைஞர்களும் தங்களிடமிருந்த துப்பாக்கிகளால் போலிசாரை நோக்கி சரமாரியாக சுடத் தொடங்கினார்கள் என்றும், போலீசாரும் துப்பாக்கியால் பதிலுக்கு சுட்டபோது, நடந்த சண்டையில் ஒரு இளைஞர் குண்டு துளைத்து இறந்தார் என்றும், மேலும் இரண்டு இளைஞர்கள் தப்பி ஓடினார்கள் என்றும், ஒருவர் போலீசாரால் கைது செய்யப்பட்டார் என்றும் போலீசார் பொய்யான வழக்கை பதிவு செய்துள்ளனர்.

போலீசாரின் மோதல் கூற்றை அம்பலப்படுத்த அவருடன் இருந்த சிவா என்ற பார்த்திபனின் வாக்குமூலம் இங்கு அப்படியே தரப்படுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## இரவீந்திரன் பற்றி அவருடன் இருந்த சிவா தரும் வாக்குமூலம்

(வாக்குமூலம் பெற்றவர் பி.யூ.சி.எல். அமைப்பினர்)

### சென்னை உயர்நீதிமன்றம் சமூகம்

சிவா என்கிற பார்த்தீபன் —மனுதாரர்/குற்றம் சாட்டப்பட்டவர்.

—எதிராக—

காவல்துறை ஆய்வாளர்
மாரண்டள்ளி காவல் நிலையம்
தர்மபுரி மாவட்டம் —புகார்தாரர்/எதிர்மனுதாரர்

### பிரமாண வாக்குமூலம்

சிவா என்ற பார்த்தீபனாகிய நான் த/பெ. சுப்ரமணி, வயது 35, 33/16 ராணி அண்ணாநகர், கே.கே.நகர் சென்னை–78, முகவரியில் குடியிருந்து வருகிறேன். தற்சமயம் சேலம் மத்திய சிறையில் இருந்து நான் கொடுக்கும் சத்திய பிரமாண வாக்குமூலம் என்னவென்றால்,

1. நான் மற்றும் இறந்து போன இரவீந்திரன், இராமச்சந்திரன் மற்றும் குமார் ஆகியோர் 6.1.2000 அன்று இரவு சுமார் 7.00 மணியளவில் பெருங்காட்டுப்பள்ளத்தில் பிரச்சாரம் செய்தோம். பாரதிய ஜனதா கட்சியின் 100 நாள் ஆட்சியில் அன்னிய முதலாளிகளுக்கு வரிச்சலுகைகளை வாரி வழங்குவதையும், கிராமபுற விவசாயிகளின் மானியங்களை குறைக்கச் செய்வதை அம்பலப்படுத்தியும், விலைவாசி உயர்வை எதிர்த்தும் நாங்கள் பிரச்சாரம் செய்தோம்.

2. அன்றிரவு பெருங்காட்டு பள்ளத்தில் தங்கியிருந்து மக்களின் பிரச்சனைகளைக் கேட்டு அறிந்து விட்டு காலையில் செல்வதாக இருந்தோம். அதன் அடிப்படையில் அடுத்தநாள் காலையில் 7.1.2000 அன்று ஊரின் எல்லையில் அரைகிலோ மீட்டர் தொலைவில் சாப்பிடுவதற்காக ஊர் கவுண்டர் வீட்டிற்குச் சென்றோம். அங்கு சாப்பிட்டபின் வெளியில் வந்த போது சுமார் காலை 11.30 மணியிருக்கும். அப்போது எங்களை சுமார் 25 அதிரடிப்படை போலிசார் சுற்றி வளைத்தனர். அப்போது நான் முழக்கம் போட்டேன். அப்போது அவர்கள் என்னை அடித்தார்கள்; நான் திமிறினேன். அப்போது என்னுடன் இருந்த மூன்று நபர்களும் ஓடினார்கள். அவர்களில் இரவீந்திரன் என்பவரை அதிரடிப்படையினர் ஓடிச் சென்று பிடித்து வந்து இருவரையும் பூட்ஸ் காலால் மிதித்தனர். எங்களை மிதித்தவர்கள் மொத்தம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



25 பேர் இருப்பார்கள். மிதிக்கும்போது எங்களைச் சொல்லத்தகாத வார்த்தை –களால் திட்டியும், எங்களது இயக்கத்தைக் கீழ்த்தரமாக பேசியும், அடித்து உதைத்தார்கள். அதன்பின் என்னையும், இரவீந்திரனையும் கைகளைப் பின்புறமாகக் கட்டியும், கண்களைக் கட்டியும் இடம் தெரியாத இடத்திற்கு சுமார் மதியம் 2 மணியளவில் கூட்டிச் சென்றனர்.

3. அதன்பின் 07.01.2000 அன்று மாலை 09.01.2000 அன்று இரவு முழுவதும் எங்கள் இருவரையும் கண்கட்டுக்களை அவிழ்த்துவிட்டுக் கைகளை மட்டும் கட்டி அடித்து உதைத்தார்கள். காதில் மிதித்ததில் இரத்தம் வெளிவந்து விட்டது. கை, கால், முட்டிகளில் துப்பாக்கிப் பின்பக்கத்தால் குத்தினார்கள். தோள்பட்டையிலும் இடுப்பிலும் துப்பாக்கி கட்டையால் அடித்ததில் காயம் ஏற்பட்டது. இரத்தம் அதிகமாக வந்தது. அப்படி அடிக்கும்போது ஆபாசமாகத் திட்டியும், மிகக் கேவலமாகவும், சொல்லமுடியாத அளவிற்குச் சித்ரவதை செய்தனர். இந்த 2 நாட்களாக சித்ரவதை செய்தபோதும் கண்களை கட்டி வைத்து இருந்ததால் எந்த இடம் என்று சரியாக செய்யவில்லை.

4. என்னைப் போலவே இரவீந்திரனையும், சித்ரவதைக்கு உள்ளாக்கினார்கள். என் கண்களை கட்டியிருந்தாலும் அவர் வலி பொறுக்க முடியாமல் கத்திய சத்தத்தை என் காதுகளால் கேட்டேன். இந்த சித்ரவதையை செய்தது க்யூ பிராஞ்ச் போலீசார். இவர்களில் எனக்கு முக்கியமாக தெரிந்தவரின் பெயர் வேலு. அவர் என்ன பதவியில் இருக்கிறார் எனத் தெரியாது.

5. மீண்டும் 10–ம் தேதி பெருங்காட்டுப்பள்ளம் ஊர்கவுண்டர் வீட்டிற்கு அருகே கூட்டி வந்தனர். பகல் சுமார் 11.30 மணியிருக்கும். அப்போதும் கண், கைகளைக் கட்டித்தான் எங்கள் இருவரையும் கூட்டி வந்தனர். பிறகு இருவரையும் ஓடச் சொன்னார்கள். நாங்கள் ஓட மாட்டோம் என்று கூறினோம். சிறிது நேரம் கழித்து 5 முறை துப்பாக்கி சத்தம் கேட்டது. ஒருவன் செத்து விட்டான் என்று போலீசார் பேசிக் கொண்டார்கள். இவனையும் சுட்டு விடலாம் என்று அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கும் போது மேலும் சில போலீசார் வருவது போல பூட்ஸ் சத்தம் கேட்டது. பிறகு அவர்களில் ஒருவர் இவனை சுட வேண்டாம் என்று சொன்னார். அதனால் என்னை சுடவில்லை.

6. பிறகு மாலை 7 மணியளவில் என்னை கண்களைக் கட்டி அங்கேயே உட்கார வைத்துவிட்டார்கள். அப்போது கூட்டம் கூட்டமாக வந்து என்னை விசாரித்தார்கள். பேர் என்ன? உன் பெயர், வயது, உன் இயக்கம் எப்படிப் பரவியது என்பது போன்று விசாரித்தார்கள். அதன்பின் என் கண்களை அவிழ்த்து விட்டார்கள். அவிழ்த்துவிடும்போது 7 மணியிருக்கும். அதன்பின் மாரண்டஅள்ளி காவல் நிலையத்திற்குக் கூட்டிச் செல்லும்போதுதான் நான் இரவீந்திரன் நெஞ்சில் குண்டு பட்டு தூக்கி வரும்போது பார்த்தேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



7. அதன்பின் என்னை மாரண்டஹள்ளி போலீஸ் நிலையத்தில் கூட்டிச் செல்லும் போது பத்திரிக்கை நிருபர்கள் என்னை விசாரிக்க முயன்றபோது அவர்களை அனுமதிக்கவில்லை. அவர்கள் புகைப்படம் எடுக்க மட்டும் அனுமதித்தனர். அன்று (10.01.2000) இரவு முழுவதும் என்னைத் தூங்க விடாமல் டி.ஐ.ஜி ராவ், எஸ்.பி. கந்தசாமி, ஐ.பி–யிலிருந்து மூன்று நபர்கள், க்யூ. பிராஞ்சிலிருந்து 3 டீம் அனைவரும் என்னை விசாரித்தார்கள். அப்போது நான் துப்பாக்கி வைத்திருந்ததாகவும், துப்பாக்கியால் போலீசாரை சுட்டதாகவும், வெடிகுண்டு வைத்திருந்ததாகவும் மனப்பூர்வமாக ஒத்துக்கொள்ளச்சொல்லிக் கேட்டார்கள். நான் மறுத்தபோது என்னை பலவந்தப்படுத்தி கையெழுத்து போட வைத்தனர். நீ கையெழுத்து போடவில்லை என்றால் இரவீந்திரன் போல உன்னையும் சுட்டுவிடுவோம் என்று மிரட்டிக் கையெழுத்து வாங்கினார்கள். மறுநாள் மாலை (11.01.2000) அன்று 5 மணியளவில் பாலக்காடு நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள். அப்போது என் கைவிலங்கை அகற்றவில்லை. நீதிபதி முன்பு கைவிலங்கோடுதான் நின்றிருந்தேன். நீதிபதி அதுபற்றி எதுவும் கேட்கவில்லை. வாய்தா தேதி 25.01.2000 என்று மட்டும் சொன்னார். என் மேல் போடப்பட்ட வழக்கு எண் என்னவென்றும் எந்த பிரிவின் கீழ் போடப்பட்டுள்ளது என்று இதுவரை எனக்கு தெரியாது.

1. இரவீந்திரன் உள்ளூர் மக்களிடம் செல்வாக்கு பெற்ற தலைவர் என்பதால் திட்டமிட்டு கொலை செய்யப்பட்டுள்ளார். அதற்காக முறையான நீதி விசாரணை செய்ய வேண்டும்.

2. பஸ் எரிப்பை ஒட்டி எங்கள் இயக்கத்தின் மீது ஏவப்பட்ட போலீஸ் அடக்குமுறை, சித்ரவதையைக் கைவிட வேண்டும்.

எங்களுக்கும், பஸ் எரிப்புக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. என் மீது போடப்பட்டுள்ள வழக்குகள் பொய்யானவை. எனவே அவற்றை தீர விசாரித்து விடுதலை செய்ய வேண்டுகிறேன்.

எஸ்.சிவா (எ) எஸ்.பார்த்தீபன்
Attested
Sd/Superintendent of Prisons
Central Prison, Salem-7

## 6. திருநெல்வேலி

திருநெல்வேலி மாவட்டம் பழவூர் கிராமத்தைச் சேர்ந்தவர் முத்துராஜ் (26) த/பெ. சுந்தரம் தலித் இனத்தைச் சார்ந்த முத்துராஜ் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு சில இளைஞர்களின் துணையோடு தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கத்தோடு அய்க்கியமாகி அதன் மூலம் ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக, பொருளாதார பிரச்சினைகளுக்காகப் போராடி வந்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


1996 ஆம் ஆண்டு கள்ளச்சாராய பிரச்சினைக்காகக் குரல் கொடுத்த – தனால், இவர் மீது போலீசார் பொய் வழக்குப் பதிவு செய்துள்ளனர். 1996 ஆம் ஆண்டு ஏப்ரல் 6ம் தேதி அந்தப் பகுதியில் நடந்த சாதிய மோதலில் இவர் குற்றவாளியாகக் கருதப்பட்டு போலீசார் தேடி வந்தார்கள். மே மாதம் (1996) 6ம் தேதி இவரும் இவருடைய நண்பர் ஆறுமுகம் என்பவரும் கிராமத்தில் குளிக்க வந்த போது போலீசார் சுற்றி வளைக்கவே முத்துராஜ் தப்பித்திருக்கிறார். ஆறுமுகம் கைது செய்யப்பட்டு காவலில் சித்திரவதை செய்யப்பட்டிருக்கிறார். இதையெல்லாம் கேள்விப்பட்ட முத்துராஜ் உறவினர் ஒருவரிடம் ரூ.2,000–ம் வாங்கிக் கொண்டு, 'இங்கே இருந்தால் போலீசார் அடித்து சித்ரவதை செய்வார்கள், எனவே வெளியூர் சென்று வேலை செய்யலாம்' என்று கருதி புறப்பட்டிருக்கிறார். கடைசியாகக் கந்தன்விளையில் நடந்த அம்பேத்கர் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு திரும்பியபோது இரவு 10 மணியளவில் பேருந்து நிலையத்தில் நின்று கொண்டிருக்கும் போது கைது செய்யப்பட்டார். பின்னர் திசையன்விளை போலீஸ்நிலையத்தில் வைத்து போலீசாரின் சித்திரவதையால் அவருடைய கால்கள் முறிக்கப்படுகின்றன. இதில் பொய் வழக்கு பதிவு செய்து 29.1.96ல் குண்டர் சட்டத்தில் போடப்பட்டு ஒரு வருடம் பாளையங்கோட்டை மதுரை சிறையில் இருந்தார்.

இப்படி பல்வேறு நிலைகளில் இருந்த முத்துராஜ் பழவூரில் இரவில் தங்கிக் கொள்வதும், பகலில் போலீசாரின் கண்களுக்குப்படாமல் எங்காவது தங்கிக் கொள்வதுமாக இருந்துள்ளார். வழக்கமாக அதிகாலை 4.00 மணிக்கே ஊரைவிட்டு கிளம்பும் முத்துராஜ் 17.1.2000 அன்று தூக்கம் காரணமாகத் தாமதமாக காலை 5.30 மணிக்குத் தம் நண்பர்களான மனோ (22) த/பெ. செல்லையா, ராஜன் த/பெ.பாண்டியன்பால்ராஜ் (ஊர் தெரியவில்லை) என்பவர்களுடன் அவசரமாக ஊரைவிட்டு வெளியேறி சாலைக்கு வந்துள்ளனர். பேருந்து நிலையத்தில் மூவரும் நிற்கும் போது போலீஸ் ட்ராக் (ஜீப்) வடக்கு நோக்கி (நெல்லை) சென்றுள்ளது. மூவரும் போலீஸ் வாகனத்தைப் பார்த்தவுடன் பேருந்து நிலையத்தில் உள்ள ஒரு கடையில் மறைந்துகொண்டுள்ளனர். சிறிது நேரத்திற்குப் பின் வடக்கு நோக்கி நிசான் டெம்போ ஒன்று வந்துள்ளது (டிஎன்74–3547) அதை நிறுத்தி தங்களை ஏற்றிக்கொள்ளுமாறு கேட்டுள்ளனர். ஓட்டுநர் மூவரையும் பின்புறம் ஏறிக்கொள்ள அனுமதித்துள்ளார். டெம்போ வடக்கு நோக்கிச் சென்றுள்ளது. காவல்கிணறு அருகில் உள்ள ரயில்வே கேட்டிற்குத் தென் பகுதியில் உள்ள குமாரபுரம் விலக்கில் போலீசாரால் மேற்படி டெம்போ நிறுத்தப்பட்டுள்ளது. திருநாவுக்கரசு என்ற போலீஸ்காரர் வேனின் பின்புறும் எட்டிப் பார்க்கையில் முத்துராஜூவைக் கண்டுள்ளார். முத்தராஜூ என்று கூறி அவரின் கையைப் பிடித்துக் கீழே இழுத்து டார்ச் லைட்டால் தலையின் பின்புறத்தில் அடித்துள்ளார். இதனைக் கண்டதும் ராஜன் மற்றும் மனோ இருவரும்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


டெம்போவில் இருந்து குதித்து ஓடியுள்ளனர். முத்துராஜ் போலீசாரால் தாக்கப்பட்டு போலீஸ் ட்ரக்கில் வள்ளியூர் நோக்கி கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

பழவூர் காவல்நிலையத்தில் துப்பரவு பணி செய்யும் ஒரு பெண் அன்றைய தினம் வழக்கம்போல் தன் பணிக்குச் சென்றிருந்தபோது, அங்கு முத்துராஜ் போலீசாரால் பிடிக்கப்பட்டிருப்பதைப் பார்த்துள்ளார். உடனே ஒரு அவசர வேலையாக வீட்டிற்குச் செல்லவேண்டும் என்று கூறி அங்கிருந்த போலீசாரிடம் அனுமதி வாங்கிக்கொண்டு ஊருக்குள் வந்து, முத்துராஜு போலீசாரால் பிடிக்கப்பட்ட செய்தியை மக்களிடம் கூறிவிட்டு, மீண்டும் அப்பெண் போலீஸ் நிலையம் சென்றபோது, அங்கு போலீசாரையும், முத்துராஜுவையும் காணவில்லை.

17.1.2000 அன்று மதியம் பழவூருக்கு வந்த முத்துராஜின் தாயார் தனது மகனை போலீசாரால் பிடித்துச் சென்ற தகவலை பழவூரில் ஒரு பெண் மூலமாகவும், பின்பு முத்துராஜ் போலீசாரால் கொல்லப்பட்டதை வக்கீல் செல்லப்பா மூலமாகவும் தெரிந்துகொண்டார். அதற்குப் பிறகு பழவூரிலிருந்து தெரிசனந் – தோப்பிற்குச் சென்ற முத்துராஜின் தாயார் அங்கிருந்து பாளைக்கு வாடகைக் கார் மூலம் செல்ல முற்படுகையில், அங்கு வந்த பழவூர் போலீசார், முத்துராஜுவுடைய தாயாரிடம் உங்களை போலீஸ் கண்காணிப்பாளர் (எஸ்.பி.) அழைக்கிறார் என்று கூறி வலுக்கட்டாயமாகப் போலீஸ் வேனில் ஏற்றி, இரவு 10 மணியளவில் அங்கிருந்து புறப்பட்டு, இரவு சுமார் 1 மணியளவில் முத்துராஜுவின் தாயாரை பாளையங்கோட்டை அனைத்து மகளிர் போலீஸ்நிலையத்தில் உள்ள லாக்கப்பில் அடைத்து வைத்துள்ளனர். பின்னர் மறுநாள் அவரை (18.01.2000) செவ்வாய்க் கிழமை மாலை 4 மணிக்கு விடுவித்து, பாளையங்கோட்டை ஹைகிரவுண்ட் மருத்துவமனைக்கு முத்துராஜுவின் உடலைப் பார்ப்பதற்கு அழைத்துச் சென்றுள்ளனர். அங்கு ஏற்கனவே முத்துராஜுவின் தந்தை மற்றும் உறவினர்கள் மருத்துவமனை வாசலில் இருந்திருக்கின்றனர். பிறகு முத்துராஜுவுடைய பிரேதப் பரிசோதனை முடிந்துவிட்டதாகக்கூறி முத்துராஜுவின் பெற்றோர் மற்றும் உறவினர்களிடம் பிரேதத்தைப் பார்க்க போலீசார் அனுமதித்துள்ளனர். பெற்றோர்கள் முத்துராஜுவின் பிரேதத்தைப் பார்க்கும்போது இரண்டு கைகளின் முட்டிகளுக்கு மேல் எலும்பு உடைக்கப்பட்டது போல் திருகியிருந்ததையும், தலை தவிர உடலில் மூடியிருந்த துணியை விலக்கிப் பார்க்கையில் இரண்டு கைகளிலும் பிளேடால் சதையை அறுத்துள்ள காயத்தையும் பெற்றோர்கள் பார்த்துள்ளனர். இரண்டு உள்ளங்கையிலும் தீயினால் சுட்டதுபோல் கருப்பாக இருந்ததையும் அவர்கள் கண்டுள்ளனர்.

அதன்பின்னர் பிரேதத்தைப் பழவூரில் அடக்கம் செய்யவேண்டும் என்று முத்துராஜின் பெற்றோர்கள் கூறியதற்கு, பழவூர்காரர்கள் முத்துராஜுவுடைய பிரேதம் எங்கள் ஊரில் புதைக்கப்பட்டால் பெரும் கலவரம் வரும் என்று கூறியிருக்கிறார்கள், ஆகவே அங்கு போகக்கூடாது என்று போலீசார் கூறி வகைச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கட்டாயமாகப் பாளை சமாதானபுரத்திற்கு அருகே உள்ள வெள்ளகோவில் இடுகாட்டிற்குக் போலீசார் கொண்டு சென்றுள்ளனர். அங்கு பிரேதத்தை எரித்து விட காவலர்கள் முத்துராஜின் தாயாரை நிர்பந்தம் செய்துள்ளனர். ஆனால் முத்துராஜின் தாயார் "எங்கள் மத வழக்கப்படி சவப்பெட்டியில் வைத்துத்தான் புதைப்போம், அப்படிச் செய்யாவிட்டால் உங்கள் விருப்பப்படி செய்து கொள்ளுங்கள்'', என்று கூற, ஒருவழியாக சவப்பெட்டி கொண்டுவரப்பட்டு, இறுதிச் சடங்குகளையும் முடித்து உள்ளனர்.

## பிரமாண வாக்குமூலம்

(முத்துராஜ் தாயாரிடமிருந்து மக்கள் கண்காணிப்பகம்–தமிழ்நாடு பெற்றது)

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், சுசீந்திரம் அஞ்சல், கற்காடு கிராமத்தில் வசிக்கும், போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்ட முத்துராஜின் தாயாகிய வெள்ளையம்மாள் (50), க.பெ. சுந்தரம், அளிக்கும் வாக்குமூலம்.

"நான், என் கணவர் சுந்தரம், மகள் வகிதா ஆகிய மூவரும் மேற்படி முகவரியில் வசித்து வருகிறோம். எனது மூத்தமகன் பெயர் முத்துராஜ். 10ம் வகுப்பு படித்தவர். போலீஸ் தொந்தரவால் அவர் வீட்டிற்கு வந்து ஒரு ஆண்டாகிறது. இந்நிலையில் 17.01.2000 அன்று நான் எனது அக்கா தாயம்மாள் க/பெ.செல்லையாவைப் பார்ப்பதற்காகப் பழவூர் சென்றேன். அங்கு எனது மகன் முத்துராஜ் போலீசாரிடம் பிடிபட்ட செய்தியை அறிந்தேன். வக்கீலைப் பார்த்து மகனை வெளியே எடுக்க முயற்சிக்கலாம் என்று உடனடியாக நான் நாகர்கோவில் சென்று, அங்கு வக்கீல் செல்லப்பாவைச் சந்தித்து விபரத்தைக் கூறினேன். அப்போது மாலை 4 மணி இருக்கும். வக்கீல் செல்லப்பா உடனடியாக பழவூர் போலீஸ்நிலையத்தை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, "நீங்கள் முத்துராஜை பிடித்ததைப் பற்றி அறிந்தேன். உடனடியாக முத்துராஜை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துங்கள்" என்று கூறினார். பதிலொன்றும் சொல்லாமல் அவர்கள் தொலைபேசி தொடர்பை துண்டித்ததால் மறுபடியும் தொலைபேசியில் அவர்களை அழைத்து "நீங்கள் சட்ட ரீதியாக செய்ய வேண்டியதைச் செய்யுங்கள். உடனே நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துங்கள்" என்று வலியுறுத்திய பின்னர்தான், போலீசார் முத்துராஜ் மரணமடைந்த செய்தியை அவருக்கு தெரியப்படுத்தினர். இதனையடுத்து வக்கீல் என்னை அடுத்து ஆக வேண்டிய வேலைகளைச் செய்யச் சொன்னதும், நான் ஒரு டாக்ஸியில் இறைச்சிகுளத்திற்கு சென்று அம்பேத்கர் இயக்கத்தைச் சேர்ந்த சுகுமாரன் செல்வியைச் சந்தித்தேன். விபரத்தைக் கூறியதும் அவர் என்னிடம் இது தொடர்பான பிற வேலைகளைச் செய்வதாகக் கூறினார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உடனடியாக மாலை சுமார் 7 மணியளவில் தற்போது நாங்கள் தற்காலிகமாக தங்கியிருக்கும் முடங்காவிளைக்குச் வாடகைக் காரிலேயே சென்றேன். வீட்டின் அருகே போலீசார் குவிந்திருந்தனர். என்னைக் கண்டதும் பக்கத்து வீட்டில் இருந்த எனது மகள் ஓடிவரவே அவளிடம் மகன் இறந்த விபரத்தைக் கூறினேன். அதற்குள் அருகிலிருந்த போலீசார் என்னையும், என் மகளையும் இன்ஸ்பெக்டர் அழைப்பதாகக் கூறினர். "வரமுடியாது எனக்கு எனது மகன் இறந்த விபரம் தெரியும். காலையில் வந்து மற்ற காரியங்களைப் பார்க்கிறோம்" என்று கூறினேன்.

நாங்கள் இரண்டு அடி நடந்ததும் ஆய்வாளர் அருகே வந்து "வாங்கம்மா பாடியைப் பார்க்கலாம்" என்று கூறினார். அதற்குள் நான் வந்திருந்த வாடகைக் காரையும் காவலர்கள் அனுப்ப முயன்றனர். "அனுப்பாதீர்கள், நான் எனது மற்ற உறவினர்களையும் அழைத்துக் கொண்டு அதில் தான் வருவேன்" என்றேன். போலீசார் வாடகைக் காரை அனுப்பச் சொல்லி வற்புறுத்தினர். வாடகைக்கார் நிற்கும் இடத்திற்கு நானும் எனது மகளும் நடந்து வரவும் (ஊருக்குள் டாக்ஸி செல்லும் வசதி இல்லாததால் ஊரின் எல்லையில்தான் வண்டி நிறுத்தப் பட்டிருந்தது) போலீசார் எனது மகளை, "நீ வேணாம்மா நாங்க உங்க அம்மாவை மட்டும் கூட்டிட்டுப் போறோம்", என்று வற்புறுத்தித் திருப்பி அனுப்பி வைத்தனர். போலீஸ் வேனில் என்னை மட்டும் ஏற்றி தரிசனந்தோப்பு எனும் இடத்தில் உள்ள பேருந்து நிலையத்தில் இரவு 10.30 மணி வரை நிறுத்தி வைத்தனர். நாகர்கோவிலிருந்து இரு பெண் போலீசார் வந்ததும் என்னை வேறு வேனில் ஏற்றி சுமார் ஒரு மணியளவில் திருநெல்வேலி போலீஸ் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு கொண்டு வந்தனர். சிறிது நேரத்தில் என்னை அனைத்து மகளிர் போலீஸ்நிலையத்திற்கு கொண்டு சென்று செல்லினுள்ளே அடைத்து வைத்தனர். "ஏன் அடைக்கிறீர்கள்?", என்றதற்கு "ஒன்றுமில்லை சும்மாதான். உள்ளே இருங்கள்", என்று கூறினர். பிறகு சாதாரணமாகப் பேசுவதுபோல் என் மகனைப் பற்றி விசாரித்தனர்.

சிறிது நேரத்திற்குப் பிறகு எனது அக்காளையும், உடன் முருகன் என்பவரையும் அங்கு கொண்டு வந்தனர். எனது அக்காவிடம், "நீ ஏன் வந்தாய்?" என்று நான் சத்தம் போட்டபோது, அதற்கு என் அக்கா, 'நான் பிரேதத்தின் அருகில் தனியே இருப்பதாகவும், நானே அழைத்து வரச்சொல்லியதாகவும்' சொல்லி போலீசார் அழைத்து வந்ததாகவும் கூறினார். இதனால் நான் கோபமுற்று, "என் மகனையும் கொன்று விட்டு எங்களையும் ஏன் இப்படிச் சித்திரவதை பண்ணுகிறீர்கள்?", என்றதற்கு சரியான பதிலேதும் சொல்லாமல் ஏதேதோ பேசி தட்டிக் கழித்தனர். இறுதிவரை நாங்கள் கோபத்தில் என்ன பேசினாலும் அவர்கள் அதற்கு எந்தவொரு பிரதிபலிப்பும் காட்டாமல் அமைதியாக இருந்தனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிறகு விடிந்ததும் இப்படி எங்களை சிறையில் அடைத்து விட்டு மகனை எங்கே அனாதைபோல ஒலைப்பாயில் வைத்து புதைத்து விடுவார்களோ என்று பயந்து நான் இதைப்பற்றி கேட்டதற்கு "அதெல்லாம் இல்லையம்மா", என்று கூறினர். எங்களுக்கு உணவு எதுவும் போலீசார் கொடுக்கவில்லை. இரவிலும் பட்டினியாக இருந்து விட்டு, காலையிலும் உணவு கொடுக்காததால், நாங்கள் எங்களிடம் இருந்த சிறிது பணத்தில் இட்லி வாங்கி சாப்பிட்டோம். மதியம் ஒன்றும் சாப்பிடவில்லை. மதியம் 2 மணி போல் எனது கணவர், மகள், மருமகன் உறவினர்கள் உடன் செல்வி சுகுமாரனும் வந்தனர். வந்ததும் எனது மகனின் உடலைப்பற்றி விசாரித்தோம். இப்படியாக மறுபடியும் மறுபடியும் மகனின் உடலைப்பற்றி விசாரித்துக் கொண்டேயிருந்தோம்.

பிற்பகல் 3 மணியளவில் மாவட்ட போலீஸ் கண்காணிப்பாளர் என்னைக் கூப்பிட்டு, "கொள்ளையடித்த பணத்தை உன் மகன் உன்னிடம் கொடுக்கலையா?" என்று கேட்டார். "என் கிழிந்த சேலையைப் பார்த்தால் தெரியவில்லையா ஐயா? இப்படிக் கேட்கிறீங்க?" என்றேன். பிறகு எனது மகன் உடலைத் தரும்படி கேட்டதற்கு, "உங்களிடம் கொடுக்க முடியாதும்மா" என்று கூறினார். "சரி போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்டையாவது தாருங்கள்" என்றதற்கு "எல்லா காரியங்களும் முடியட்டும். நானே தர்றேன்" என்றார். திரும்பவும் நான் மகளிர் போலீஸ் நிலையத்திற்கே அழைத்து வரப்பட்டேன். வழியில் நின்றிருந்த போலீஸ் துணை கண்காணிப்பாளர் என்னிடம் எனது மகன் பற்றிக் கேட்க, எல்லா விபரங்களையும் கூறி, மகனின் உடலைத் தரும்படி அவரிடமும் கேட்டேன். "தர முடியாதும்மா, இவ்வளவு தொலைவில் கொண்டு போனால் வழி நெடுக செக்போஸ்ட் போன்றவற்றில் ரெளடி பய பாடி என்று சொல்லி சீரழித்து விடுவார்கள். ஊரிலும் எதிர்ப்பு உள்ளது. எனவே இங்கேயே நல்ல முறையில் அடக்கம் பண்ணலாம்" என்றார்.

மகளிர் போலீஸ் நிலைய ஆய்வாளர், போலீஸ் துணைக் கண்காணிப்பாளரிடம் "இந்தம்மா மகனின் உடலைப் பெட்டியில் வைத்து அடக்கம் பண்ணுங்கள்" என்று கூறிவிட்டு, ஆட்கள் எல்லாம் வரவும் பாடியை கேட்குது", என்று கோபமாகக் கூறினார். பிறகு எங்கள் அனைவரையும் அங்கிருந்து போஸ்ட்மார்ட்டம் நடந்த ஹைகிரளண்டு ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். அங்கே எனது கணவரிடம் எதுவும் கூறாமல் கையெழுத்துப் போடக் கூறினர். அவர் கையெழுத்துப் போட்ட உடனே எனது மகனின் உடலைப் பார்க்க எங்களை 4.30–5 மணியளவில் அனுமதித்தனர். மேசையில் கிடத்தப்பட்டிருந்த உடலில் இடுப்பில் மட்டும் துணி போர்த்தியிருந்தது. கைகள் திருகிக் கிடந்தன. உடல் சுத்தமாகத் துடைக்கப்பட்டிருந்தது. கைகளில் பிளேடால் கீறிய காயங்களும், உள்ளங்கையில் கருகியது போன்ற அடையாளங்களும் இருந்தன. சில நிமிடங்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மட்டுமே பார்க்க அனுமதித்துவிட்டு உடனே "போங்க, போங்க" என்று விரட்டினர். அவசரத்திலும், பதட்டத்திலும் அழுதபடியே வேறு எதையும் கவனிக்காமல் வெளியே வந்துவிட்டேன்.

பிறகு சவப்பெட்டி, புதுத்துணி, மாலை அனைத்திற்கும் ஏற்பாடு செய்தோம். இதனிடையில் எனது கணவர் தான் ஊராரிடம் மகனின் உடலை ஊருக்குக் கொண்டு செல்லக் கேட்டதாகவும், ஊரார் போலீசாரின் மிரட்டுதலால் முடியாது என்று கூறியதையும் எங்களிடம் கூறினார். போலீசார் ஊராரிடம் "இவ்வளவு பெரிய ரௌடியாக இருக்கிறான். ஊரில் புதைத்தால் அவன் ஆட்கள் வரலாம். இதனால் பிரச்சனைகள் வரலாம். அப்படி புதைத்து நினைவிடம் கட்டினால் வருடா வருடம் அவர்கள் அங்கு வந்து ஊரையே நாசம் செய்து விடுவர். இதனால் ஊராரின் பாதுகாப்பிற்கேப் பிரச்சனையாகிவிடும்" என்று கூறி மிரட்டியுள்ளனர். இதனாலேயே ஊராரும் உடலை எடுத்துச் செல்ல திட்டவட்டமாக மறுத்துவிட்டனர் என்று எனது கணவர் கூறினார். பிறகு, மாலை 6 மணியளவில் வெள்ளக்கோவில் பகுதிக்கு இரு பெரிய வண்டிகளில் போலீசார் சூழச் சென்றோம். அங்கும் போலீசார் குவிக்கப்பட்டிருந்தனர்.

மாலை சுமார் 6.30 மணியளவில் உடலைப் புதைத்தோம். மறுபடியும் வண்டியில் அனைவரையும் ஏற்றி போலீஸ் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு கூட்டிச் சென்றனர். அங்கு வைத்து உடன் வந்தவர்கள் அனைவரையும் பற்றிய தகவலைச் சேகரித்துக் கொண்டனர். பிறகு 7 மணியளவில் போலீஸ் வாகனத்திலேயே அனைவரையும் ஏற்றி, எங்கெங்கோ கூட்டிச் சென்று, இரவு 10 மணியளவில் அவரவர் வீட்டிலேயே கொண்டு இறக்கி விட்டனர்.

மறுநாள் காலை 7 மணியளவில் பழவூர் போலீஸ் நிலையத்திலிருந்து சார்பு ஆய்வாளர் முத்துகிருஷ்ணன், போலீஸ்காரர் திருநாவுக்கரசு உட்பட 7–8 பேர் வந்து, "சத்தம் போடக்கூடாது, அழக்கூடாது. பிரச்சனை செய்யக்கூடாது. ஏதாவது உங்களைப் பற்றி விபரம் அறிய வந்தால் எல்லோரையும் பிடித்து அடைத்து விடுவோம்" என்று மிரட்டலாகக் கூறிவிட்டுச் சென்றனர். இன்று வரை எங்கள் வீட்டிற்கு வருகிறவர், போகிறவர் பற்றிய விபரங்களை அறிய சுற்றிலும் போலீசார்துறை இருந்து கொண்டேயிருக்கின்றனர்.

எனது மகனை சுட்டுக் கொன்றதுடன், எங்களை தொடர்ந்து அச்சுறுத்திக் கொண்டு இருக்கின்ற போலீசார் மீது கொலைக் குற்றத்தின் கீழ் சட்டப்படி நடவடிக்கை எடுக்கும்படியும், எங்களுக்கு போலீசாரிடமிருந்து பாதுகாப்புத் தரும்படியும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

சத்தியப் பிரமாணம் செய்பவர்
வெள்ளையம்மாள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## 7. கர்நாடக அதிரடிப்படையினரால் சுட்டுக் கொலை செய்யப்பட்டவர்கள்

1992 ஆம் ஆண்டிலிருந்து வீரப்பனைத் தேடுவதற்காக அமைக்கப்பட்ட அதிரடிப்படையினர் அப்பாவி கிராம மக்கள் பலரை சித்ரவதை செய்து சுட்டுக் கொன்றதை தேசிய மனித உரிமை ஆணையம் கண்டித்ததின் பேரில் இப்போது 2000த்தில் நீதிபதி சதாசிவா கமிட்டியை உருவாக்கி அதன் மூலம் விசாரித்து வருகின்றது. போலீசாரால் பதிவு செய்யப்பட்ட 2 பேரின் மரணம் பற்றிய குறிப்பு பின்வருமாறு.

1) சிவகாமி (வயது 25)யின் கணவர் முருகன் பெரியதண்டா கிராமத்தில் விவசாயக் கூலி வேலை செய்து வந்தார். 7 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் காலை சுமார் 6 மணியளவில் சிவகாமியின் வீட்டிற்கு வந்த கர்நாடக அதிரடிப்படையினர் போலீஸ் உயரதிகாரி அழைப்பதாகக் கூறி முருகனை அழைத்துச் சென்றுள்ளனர். ஐயாவின் விசாரணைக்குப் பிறகு விட்டு விடுவதாகவும் கவலைப்பட வேண்டாம் என்றும் சிவகாமியிடம் கூறிவிட்டுச் சென்றுள்ளனர். ஆனால், முருகன் வீடு திரும்பாத காரணத்தால் முருகனின் உறவினர்கள் போலீசாரிடம் சென்று விசாரித்துள்ளனர். அவர்கள் போலீசாரை அணுகிய போதெல்லாம் அந்தப்பக்கம் வந்தால் கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று கூறி விரட்டப்பட்டுள்ளனர். முருகன் அழைத்துச் செல்லப்பட்டு ஒரு வருடம் கழிந்த நிலையில் போலீசார் தங்களால் கொல்லப்பட்டவர்கள் பட்டியல் மற்றும் புகைப்படங்களைக் காண்பித்துள்ளனர். அதில் முருகன் புகைப்படம் இருந்ததைக் கண்டபிறகே உறவினர்கள் முருகனின் மரணம் பற்றி அவரது உறவினர்கள் அறிந்துள்ளனர். சிவகாமிக்கும், முருகனுக்கும் அப்போதுதான் திருமணமாகி இரு மாதங்கள் ஆகியிருந்தன. சிவகாமி உட்பட உறவினர்கள் அறிய அழைத்துச் செல்லப்பட்ட முருகன் அதிரடிப்படையினரின் கூற்றுப்படி 24.5.1993ம் ஆண்டு நடந்த கர்நாடக அதிரடிப்படையினருக்கும், வீரப்பன் கூட்டாளிகளுக்கும் நடந்த "மோதலில்" சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இச்சம்பவமானது மாதேஸ்வர மலை போலீஸ் நிலையத்தில் குற்ற எண்.12/93ன் கீழ் பதியப்பட்டுள்ளது.

2) அங்கப்பன் ஆசாரி (வயது 45) தேவர் மலை பவானி தாலுகாவைச் சேர்ந்தவர். தேனீர் கடை நடத்தி வந்த இவருக்கு 8 பிள்ளைகள். மூத்த மகன் சுப்பிரமணியன் தேவர்மலையிலேயே தையற்கடை நடத்தி வந்தார். 7 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு நாள் கர்நாடக அதிரடிப்படையினரால் பிடித்துச் செல்லப்பட்ட சுப்பிரமணியன் பற்றி எந்தத் தகவலும் இல்லை. இந்நிலையில் தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்கம் இப்பகுதியில் இதே போல் அதிரடிப்படையினரால் பிடித்துச் செல்லப்பட்டு வீடு திரும்பாதவர்கள் பலரின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெயர் விபரங்கள் எழுதி தேசிய மனித உரிமை ஆணையத்திற்குப் புகாராகக் கொடுத்துள்ளது. அதற்கு கர்நாடக போலீஸ் டி.ஜி.பி. அளித்த பதிலில் சுப்பிரமணியன் கடந்த 1.7.98 அன்று நடந்த வீரப்பன் கும்பலுடன் நடந்த மோதலில் கொல்லப்பட்டதாக தெரிய வந்துள்ளது. இச்சம்பவம் மாதேஸ்வர மலை போலீஸ்நிலையத்தில் குற்ற எண்.14/93–ன் கீழ் இ.த.ச. 143, 147, 148, 447, 353 இந்திய ஆயுதச் சட்டம் மற்றும் இந்திய வெடிமருந்துச் சட்டம் பிரிவுகள் 3 மற்றும் 5ன் கீழ் வழக்காகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதிரடிப்படையினரால் மோதல் என்ற பெயரில் சுட்டுக் கொல்லப் பட்டவர்களில் இரு நபர்களின் மரணம்தான் போலீசாரால் பதிவு செய்யப் பட்டுள்ளது. இதன் மூலம் 2 நபர்களை மட்டும்தான் அதிரடிப்படையினர் சுட்டுக் கொன்றனர் என்ற முடிவுக்கு வர வேண்டியதில்லை. ஏனெனில் அதிரடிப்படையினரால் அழைத்துச் செல்லப்பட்டு இதுவரை திரும்பி வராதவர்கள் 52 பேர் பற்றி எந்தவித விபரமும் உண்மையறியும் குழுவினருக்கு கிடைக்கவில்லை.

(ஆதாரம் – 1999–ம் ஆண்டு மார்ச் 17 மற்றும் 21, மார்ச் 30 முதல் ஏப்ரல் 2–ம் தேதி வரை கர்நாடக பி.யூ.சி.எல், தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்கம், சோக்கோ அறக்கட்டளை–மதுரை, மக்கள் கண்காணிப்பகம்–தமிழ்நாடு, மதுரை ஆகிய அமைப்புகள் இணைந்து சம்பவம் நடந்த இடங்களுக்குச் சென்று திரட்டிய தகவல்கள்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## மோதல் சாவுகளில் இறந்தவர்கள் பட்டியல்

| எண் | இறந்து போனவர்கள் பெயர் | சம்பவம் நடந்த தேதி | சம்பவம் நடந்த மாவட்டங்களின் பெயர் |
|---|---|---|---|
| 1. | கைபாம் மோகன் (35) | 14.10.98 | சென்னை |
| 2. | பவுல் (45) | 9.4.99 | சாத்தான்குளம் |
| 3. | கோசிஜின் (24) | 12.4.99 | திருச்சி |
| 4. | சின்னதம்பி | 12.6.99 | தஞ்சாவூர் |
| 5. | ஷா நிவாஸ் | 23.7.99 | திருநெல்வேலி |
| 6. | முருகன் | 23.7.99 | திருநெல்வேலி |
| 7. | ஜோஸ்பின் | 23.7.99 | திருநெல்வேலி |
| 8. | ராசு | 23.7.99 | திருநெல்வேலி |
| 9. | ஆறுமுகம் | 23.7.99 | திருநெல்வேலி |
| 10. | இரத்தினம் | 23.7.99 | திருநெல்வேலி |
| 11. | ஜெயசீலன் | 23.7.99 | திருநெல்வேலி |
| 12. | குட்டி என்ற குன்னார் | 23.7.99 | திருநெல்வேலி |
| 13. | ஜான்பூபாலராயன் | 23.7.99 | திருநெல்வேலி |
| 14. | இஞ்ஞாசி மாணிக்கம் | 23.7.99 | திருநெல்வேலி |
| 15. | அந்தோணி | 23.7.99 | திருநெல்வேலி |
| 16. | சஞ்சீவி | 23.7.99 | திருநெல்வேலி |
| 17. | விக்னேஷ் (இரத்தினமேரி குழந்தை) | 23.7.99 | திருநெல்வேலி |
| 18. | இரத்தினமேரி (விக்னேஷ் அம்மா) | 23.7.99 | திருநெல்வேலி |
| 19. | வேலாயுதம் | 23.7.99 | திருநெல்வேலி |
| 20. | கெய்சர் | 23.7.99 | திருநெல்வேலி |
| 21. | அப்துல் ரகுமான் | 23.7.99 | திருநெல்வேலி |
| 22. | பாலகிருஷ்ணன் என்ற மில்டரி குமார் | 25.10.99 | சென்னை |
| 23. | இரவீந்திரன் | 10.1.2000 | தர்மபுரி |
| 24. | முத்துராஜ், த/பெ. சுந்தரம் (26) | 17.1.2000 | திருநெல்வேலி |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பொதுவான பரிந்துரைகள்

சமூக மாற்றத்திற்காக உழைக்கின்ற மக்கள் நல வாதிகள், மனித உரிமை ஆர்வலர்கள் வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் ஆகியோரை சட்டத்திற்குப் புறம்பாக "மோதல்" என்ற பெயரில் அவர்களை தீர்த்துக் கட்டும் நோக்கில் செயல்படும் போலீசாரின் அத்துமீறலை எந்தவொரு சூழலிலும் ஏற்றுக் கொள்ள முடியாது. போலீசாரின் கேள்வி கேட்பாரற்ற இந்த வகை அத்து மீறல்கள், அராஜகங்கள், உடனடியாகத் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். குற்றம் சாட்டப்பட்டவர், அவர் யாராக இருந்தாலும், போலீசார் சுட்டுக் கொல்வதற்கு, அவரின் உயிரைப் பறிப்பதற்கு எந்தவித அதிகாரமும் எப்போதும் வழங்கப்பட்ட தில்லை. இது குறித்து தேசிய மனித உரிமைகள் ஆணையம் முக்கியமான சில பார்வைகளையும் பரிந்துரைகளையும் அரசின் முன் வைத்துள்ளது.

1) எல்லா மோதல் சாவுகளையும் இந்திய தண்டனைச் சட்டத்தின் கொலைக் குற்றப் பிரிவின் கீழ் (302) பதிவு செய்து சம்மந்தப்பட்ட போலீஸ் அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று தேசிய மனித உரிமை ஆணையம் ஆணை பிறப்பித்துள்ளது. இந்த ஆணையை அரசு தீவிரமாக தமிழகத்தில் பின்பற்ற வேண்டும்.

2) அகில உலக மனித உரிமைப் பிரகடனம் பிரிவு 10ல் ஒருவருக்குரிய உரிமைகளையும், கடமைகளையும் தீர்மானிக்கின்ற போதும் அவருக்கு எதிராக ஏற்கெனவே குற்றவியல் குற்றச்சாட்டு இருந்தாலும், அதனை நிரூபிக்க நடுநிலை தவறாத நடுவர் மன்றத்தின் மூலம் நியாயமான வெளிப் படையான விசாரணை கோருவதற்கான உரிமை ஒவ்வொரு குடிமகனுக்கும் உண்டு. இந்த உரிமையை மதிக்காமல், இரக்கமின்றி கொலை செய்த போலிசார் மீது உரிய நடவடிக்கை எடுக்க அரசு ஆவண செய்ய வேண்டும்.

3) சட்ட ரீதியாக ஒருவரை கைது செய்யாமல் சட்டத்திற்குப் புறம்பாக மோதல் சாவுகள் என்கிற பெயரில் ஜனநாயகவாதிகளை கொலை செய்யும் போலீஸ் அதிகாரிகள் மற்றும் போலீசார் மீது அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4) யாரையும் சித்திரவதை செய்யக்கூடாது, கொடூரமாக, மனிதத் தன்மையற்று கேவலமாக நடத்தக் கூடாது, கொடூரமான, மனித தன்மையற்ற, கேவலமான தண்டனைக்கு உட்படுத்தக் கூடாது என்று அகில உலக மனித உரிமைப் பிரகடனம் பிரிவு 5–ல் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பிரகடனத்தை தவறாக பயன்படுத்துகிற அரசு அதிகாரிகளை சட்ட மீறல்களுக்கு காரணமானவர் –களாகக் கருதி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

5) மோதல் சாவுகளால் இறந்தவர்களுக்காக இரங்கல் கூட்டம் நடத்துபவர்கள், மக்கள் அமைப்புகளைச் சார்ந்தவர்கள், இறந்தவர்களின் உறவினர்கள், நண்பர்கள், ஊர்க்காரர்கள் போன்றோர் மீது விசாரணை என்ற பெயரால் சோதனை செய்வதும் உடல், மனரீதியாக சித்திரவதை செய்வது போன்ற போலீசாரின் நடவடிக்கைகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



6) மோதல் சாவுக்குப் பின்னர் இறந்து போனவரை குற்றம் சாட்டப்பட்டவராகக் காட்டுதல், இந்திய தண்டனைச் சட்டம் 307ஆவது பிரிவின் கீழ் அவருக்கெதிராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தல், குற்றம் சாட்டப்பட்டவர் இறந்து போனதால் வழக்கினை முடிவு கட்டுதல் ஆகியவை சட்ட வழிமுறைகளுக்கு முரணானதாகும்.

7) மோதல் கொலை வழக்கு ஒவ்வொன்றுக்கும் போலீஸ் நிலையத்தின் பொறுப்பு அலுவலரின் முறையான விசாரணை, குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவுகள் 154, 170, 173 மற்றும் 190களின் கீழ் பதிவு செய்வது அத்தியாவசியமானதாகும்.

8) ஒவ்வொரு மோதல் கொலையும் இந்திய சாட்சி சட்டத்தின் பிரிவு 105–இன்படி தனிப்பட்ட பாதுகாப்புக்கான உரிமை என்பது நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட வேண்டும்.

9) ஒவ்வொரு கொலையும், தற்காப்புக்காக நேர்ந்தாலும்கூட குற்றஞ்சாட்டுவதற்–குரியதே, விசாரிக்கப்பட வேண்டியதே. ஒவ்வொரு மோதல் சாவிலும், மாநில சி.ஐ.டி. அல்லது தனி புலனாய்வு பிரிவினர் மூலம் விசாரணை செய்வதற்கென பொது உத்தரவு ஒன்றினை மாநில அரசாங்கம் வெளியிட வேண்டுமென்று ஆணையத்தால் பரிந்துரைக்கப்படுகிறது.

10) எந்த ஒரு குடிமகனின் உயிரையும் பறிக்கும் குற்றம் புரியும்படி எந்த ஒரு சட்டத்தின் கீழும் போலீசுக்கு அனுமதி தரப்படவில்லை. இது போன்ற மனித உயிரைப் பறிக்கும் செயலில் ஈடுபடும் போலீசார் கொலை புரிந்தவராகவே கருதப்படுவர். போலீசார் தனது தனிப்பட்ட பாதுகாப்பிற்காக செய்யும் கொலைகள் கூட இந்தியாவின் குற்றவியல் சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு குற்றவியல் சட்டப்பிரிவு 46–ன்படி இது போன்ற கொலைகளை போலீசார் சரியென நிரூபிப்பதற்கான வாய்ப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. அல்லாவிடில், அவர்கள் கைது செய்யப்பட்டு குற்றம் நிரூபிக்கப்பட்டு மரணதண்டனையோ ஆயுள் தண்டனையோ வழங்கப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. பிரிவு 46–இன் கீழுள்ள அதிகாரத்தின்படி சாவுகள் நேர்வது ஏற்றுக் கொள்ளக்கூடியதே. சட்டப்படியான தனிப்பட்ட பாதுகாப்பு காரணங்களுக்கல்லாமல் இது போன்ற கொலைகள் "மோதல்" என்ற பெயரைக் கொண்டு செய்யப்படுமானால் அது மனிதத் தன்மையற்ற குற்றமாகவே கருதப்பட்டு குற்றவியல் சட்டம் பிரிவு 46–ன் கீழ் இத்தகையவற்றில் ஈடுபட்ட போலீசார் கைது செய்யப்பட வேண்டும். இத்தகைய மோதலில் கொலை நிகழும் பட்சம் முறையாக புலனாய்வு செய்யப்பட்டு மேற்கண்ட 2 நிபந்தனைகளில் ஏதேனும் ஒன்றின் கீழ்கொண்டு வரப்பட வேண்டும்.

11) மனித உரிமை பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் மாநில மனித உரிமை ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் (பிரிவு 12 (1)) பயன்படுத்தித் தானாகவே (Suo motto) மோதல் சாவுகளை விசாரிக்க வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# IV. சிறை வன்முறை

## 1. சென்னை

சென்னை மத்திய சிறையில் கடந்த ஆண்டு நவம்பர் 17ம் தேதி அன்று தமிழகத்தையே அதிர்ச்சியடைய வைத்த பெருங்கலவரம் ஒன்று நடந்தது. இக்கலவரத்தில் சிறைக்கைதிகள் 11 பேரும், சிறை அதிகாரி ஒருவரும் வார்டர் ஒருவரும் மரணமடைந்தனர். 175 பேர் (95 கைதிகள் 80 சிறைக் காவலர்கள்) காயமடைந்தனர். இச்சம்பவம் குறித்து மக்கள் சிவில் உரிமைக் கழகத்தின் (பி.யூ.சி.எல்) உண்மையறியும் குழு நேரடியாக ஆய்வு செய்து தனது அறிக்கையை வெளியிட்டது. இந்த அறிக்கையின் சுருக்கம் இங்கே தரப்படுகிறது.

சென்னை காசிமேடு பகுதியைச் சேர்ந்த பாக்ஸர் வடிவேலு குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் சென்னை மத்திய சிறையில் கடந்த 10 மாதகாலமாக அடைக்கப்பட்டிருந்தார். நவம்பர் 17ம்தேதி திடீரென்று இவர் மர்மமான முறையில் இறந்து போன செய்தியே கைதிகள் கலவரத்தில் இறங்கக் காரணமாகும்.

பாக்ஸர் வடிவேலு சிறை அதிகாரிகளின் கடுமையான தாக்குதல்களினாலும், சித்ரவதைகளினாலும்தான் மரணமடைந்துள்ளார் என்று கருதிய கைதிகள் அவர் வயிற்றுப் போக்கினால்தான் மரணமடைந்து விட்டார் என்று சிறை அதிகாரிகள் கூறியதை நம்ப மறுத்து உண்மையான காரணத்தை அறிய சிறைக்குள் மறியலில் ஈடுபட்டனர். இவர்கள் மீது தடியடி செய்து கலைக்கும்படி சிறை அதிகாரி (ஜெயிலர்) ஜெயக்குமார் புதிதாகப் பயிற்சி பெற்ற 28 வார்டன்களிடம் உத்தரவிட்டிருக்கிறார். இந்த உத்தரவின்படி வார்டன்கள் இரும்பு ராடுகள், லத்தி போன்ற ஆயுதங்களால் சரமாரியாக கைதிகளை தாக்கியிருக்கிறார்கள். முதலில் அடி வாங்கிய கைதிகள் பின்னர் வார்டன்களை திருப்பித் தாக்கத் தொடங்கியுள்ளனர். கற்கள், இரும்பு ராடுகள் ஆகியவற்றைக் கொண்டு கைதிகள் தாக்குதலில் எதிர் ஈடுபட்டுள்ளனர். நிலைமை சற்றுத் தணிந்து சுமூகமான நிலை ஏற்படுகின்ற தருணத்தில் அதிரடிப்படையினரும் போலீசாரும் பெருமளவில் சிறையைச் சுற்றிலும், சிறைக்குள்ளும் குவிக்கப்பட்டனர். கண்ணீர் புகைக்குண்டுகள் வீசப்பட்டு சிறைக்குள் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டிருக்கின்றது. இதனால் முதலில் 9 பேர் தளத்திலேயே மரணமடைந்துள்ளனர். பின்னர், மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அங்கு கைதிகள் 2 பேர் உயிரிழந்துள்ளனர். இதற்கிடையில், கைதிகளில் ஒரு பிரிவினர் சிறை அதிகாரி ஜெயக்குமாரைத் தாக்கி ஆவண அறையில் தள்ளி அங்கிருந்த நாற்காலியில் கட்டிப் போட்டு அவரை உயிருடன் எரித்துள்ளனர். இந்தக் கும்பலிடமிருந்து ஜெயக்குமாரை மீட்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வந்த வார்டன்கள் திரு. நடராஜன் மற்றும் தேவராஜன் ஆகிய இருவரும் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர். நடராஜனின் கண்ணைக் குத்தூசியால் குத்தப்பட்டிருந்ததைத் தொடர்ந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த அவர் அங்கு சிகிச்சை பலனின்றி இறந்து போனார்.

கைதிகளின் கலவரத்தை அடக்க சிறைக்கு வெளியே இரயில்வேயை ஒட்டிய மதிற்சுவர் மற்றும் பூங்கா நகர் நிலையத்தின் மேம்பாலம் ஆகிய இடங்களின் மேல் இருந்து கொண்டு போலீசார் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர். சிறைக்குள் நடந்த துப்பாக்கிச் சூட்டில் கடுமையாகக் காயம்பட்ட கைதிகள் தப்பிக்க வழியின்றி அங்கும் இங்குமாக சிதறி ஓடியுள்ளனர். இதில் போலீசார் மீது எந்தவித தாக்குதலும் தொடுக்காமல் ஒதுங்கியிருந்த ஊனமுற்ற கைதி ஒருவரும் (ஜெயபால்) போலீசாரால் மிக அருகில் வைத்து சுடப்பட்டுள்ளார்.

ஜெயக்குமார் கைதிகளால் கொல்லப்பட்டதற்காகப் பழிவாங்கும் நோக்கத் –துடனே பெரிய அளவில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகத் தெரிகிறது. ஜெயக் குமார் எவ்வளவுதான் கோரமான முறையில் படுகொலை செய்யப்பட்டிருந்தாலும், அதை வைத்துக் கைதிகள் மீது தொடுக்கப்பட்ட இக்கொடூரமான அடக்கு முறையை நியாயப்படுத்த முடியாது. இந்தக் கலவரங்களின் பின்னணிக்கு காரணமாக பாக்ஸர் வடிவேலின் மரணம் என்றாலும் அதைவிட முக்கியமான பல காரணங்கள் இருக்கின்றன என்று நேரிடையான விசாரணை மூலம் தெரிய வருகிறது.

- அளவுக்கு மீறிய கைதிகளை அடைத்து வைத்தல் (1200 கைதிகளுக்கு மட்டுமே வைத்திருக்கக்கூடிய அளவில் வசதி செய்யப்பட்ட மத்திய சிறையில் 2177 பேரை அடைத்து வைத்திருக்கிறார்கள். இந்த உண்மையை தமிழக முதல்வர் கருணாநிதியே ஒப்புக் கொண்டுள்ளார்.)
- சிறை ஊழியர்களுக்கும், கைதிகளுக்கும் இடையே சட்ட விரோதமான கூட்டணி.
- சிறை அதிகாரிகளின் பாரபட்சமான நடவடிக்கைகள்.
- தேவையான அளவு சிறை அலுவலர்கள் இல்லாமை.
- திரு. ஜெயக்குமார் போன்ற நேர்மையான சிறை அதிகாரிகள் கைதிகளிடம் ஒழுக்கத்தை அமல்படுத்துவது என்ற பெயரில் மனிதாபிமானமற்ற முறையில் நடந்து கொள்ளுதல் போன்ற காரணங்களாகும்.

இச்சம்பவம் நடந்து இரண்டொரு மணி நேரத்தில் மக்கள் கண்காணிப்பகம்–தமிழ்நாடு அமைப்பின் இயக்குநர் ஹென்றி டிபேன் இச்சம்பவம் குறித்து உடனடியாக விசாரிக்க வேண்டும் என்று தேசிய மனித உரிமை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


ஆணையத்திற்குப் புகார் ஒன்றை அனுப்பினார். இப்புகாரின் அடிப்படையில் 24 மணி நேரத்தில் அரசு இது குறித்து தனக்கு விளக்கமளிக்க வேண்டும் என்று தேசிய மனித உரிமை ஆணையம் தமிழக அரசுக்குக் கெடு விதித்தது. ஆனால், தமிழக அரசோ உயர்நீதிமன்ற அமர்வு நீதிபதி ஐ.டேவிட் கிருஷ்டியன் தலைமையிலான ஒரு நபர் விசாரணைக் கமிஷன் அமைத்தது. இது போன்ற பல சம்பவங்களில் மனித உரிமை ஆணையம் தலையிடும் போதெல்லாம் இது போன்ற விசாரணைக் கமிஷன்களை அமைக்கப்படுவதால் தேசிய மனித உரிமை ஆணையத்தின் விசாரணைகள் முடக்கப்படுகின்றன. ஏனெனில் மனித உரிமைச் சட்டத்தின்படி இப்படிப்பட்ட சம்பவங்களில் அரசு விசாரணைக் கமிஷன் அமைத்தால் மனித உரிமை ஆணையங்கள் தலையிட முடியாது. இதனால் பாக்ஸர் வடிவேலுவின் மரணத்தை மட்டுமே தனது விசாரணைக்கு எடுத்துக் கொள்ளும் நிலைக்குத் தேசிய மனித உரிமை ஆணையம் தள்ளப்பட்டுள்ளது.

இவ்விஷயத்தில் தமிழக மனித உரிமை ஆணையம் நடந்து கொண்ட முறையும் கேள்விக்குரியது. மக்களின் வரிப்பணத்தில் 4 இலட்சம் வரை செலவிடப்பட்டு சென்னையில் தனது தலைமை அலுவலகத்தைக் கொண்டிருக்கும் மாநில மனித உரிமை ஆணையம் சென்னை சிறைக்கலவரம் குறித்து ஒரு துரும்பைக்கூட எடுத்துப் போடவில்லை என்பது கண்டனத்துக்குரியதாகும்.

படுகாயம்பட்ட கைதிகளை எந்தவித வசதிகளும் இல்லாத அரசு மருத்துவமனைக்கு அனுப்பப்பட்ட கைதிகள் மிகவேகமாக சிகிச்சை முடிவுறாத நிலையிலேயே சிறைக்குத் திருப்பி அழைக்கப்பட்டனர். இதற்குக் காரணம் குறைவான நபர்களே காயம் அடைந்தனர் என்று அரசு காண்பிக்க விரும்பியதே. இதற்காகப் பலருக்கு சிகிச்சை கூட அளிக்கவில்லை. இதை எதிர்த்து மக்கள் கண்காணிப்பகம் சென்னை உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தது. மனுவை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம் காயம்பட்ட கைதிகளுக்கு உடனடியாக முறையான போதுமான சிகிச்சை அளிக்க உத்தர விட்டது. மேலும் இப்பிரச்சினையைத் தமிழக அரசால் அமைக்கப்பட்டுள்ள விசாரணைக் கமிஷன் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

## 2. மதுரை

- "மதுரை மத்திய சிறையில் 15 தீவிரவாதிகள், குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதான 100 பேர் உள்பட 1500க்கும் மேற்பட்டோர் காவலில் உள்ளனர். தீவிரவாதிகளைப் பார்க்க வருவோரை சோதனை என்ற பெயரில் சிறை அதிகாரிகள் அவமதித்து வந்தனர். மேலும், சிறையில் உள்ள தீவிரவாதி களிடமும் பயங்கர ஆயுதங்கள் இருப்பதாக தகவல் வந்துள்ளது என்று கூறி போலீசார் 40 பேர் சிறைக்குள் சனிக்கிழமை சென்று திடீர் சோதனை


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நடத்தினர். இதனால் கைதிகளுக்கும் சிறை ஊழியர்களுக்கும் இடையே வெள்ளிக்கிழமை மோதல் ஏற்படும். சூழ்நிலை உருவானது. சனிக்கிழமையும் சோதனை நடத்தப்பட்டது. பின்னர் ஞாயிற்றுக்கிழமையும் மீண்டும் சோதனை நடைபெறவே கைதிகளுக்கும், வார்டன்களுக்கும் மோதல் ஏற்பட்டது.

இச்சம்பவத்தில் செந்தில், நாகேந்திரன், சண்முகவேல், ரமேஷ், ரவி, ராஜாங்கம், தெய்வேந்திரன், அந்தோணியார் அடிமை, ராமச்சந்திரன், சரவணன், கோபால கிருஷ்ணன், ரவீந்திரன் ஆகிய 12 கைதிகள் காயமடைந்தனர். சிறை வார்டன்கள் சந்திரன், புனித அரசு இருவருக்கும் பலத்த காயம் ஏற்பட்டது. அனைவரும் அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டனர்". (தினமணி 28.9.99)

- மதுரை மத்திய சிறையில் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதாகி மத்திய சிறையில் இருப்பவர் நீதிமோகன். அங்குள்ள மற்றொரு கைதி முனுசாமி. இவர்களிடையே ஏற்பட்ட தகராறில் நீதிமோகனை முனுசாமி தகரத்துண்டால் குத்தினார். இதில் நீதிமோகன் பலத்த காயமடைந்தார். முனிசாமிக்கும் காயம் ஏற்பட்டது. இருவரும் மதுரை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். கரிமேடு போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தினர். (தினமணி 8.1.99)

- தமிழகத்திலேயே மிக மோசமான சிறைச்சாலைகளில் மதுரை சிறைச்சாலை முதலிடத்தை வகிக்கிறது என்பது கைதிகள் முதல் பார்வையாளர் வரை அனைவரும் சொல்லக்கூடிய குற்றமாகும். மதுரை சிறைச்சாலையில் அடிக்கடி கைதிகள் அதிகாரிகளிடையே மோதல் ஏற்பட்டு அதன் எதிரொலியாக உயிர்பலியும் நடந்து வருகிறது. கைதிகள்–அதிகாரிகள் மோதலுக்கு காரணம் அதிகாரிகளின் லஞ்ச லாவண்யமே. உள்ளே வரும் குற்றவாளி – களிடம் பணத்தைப் பெற்றுக் கொண்டு அதிகாரிகள் அவர்களுக்கு எல்லா சௌகரியங்களையும் செய்து தருவதும், பணம் தராத கைதிகளைக் கொடுமைப்படுத்துவதுமே மோதலுக்கு முக்கிய காரணமாக உள்ளது. கைதிகளில் சிலர் அதிகாரிகளின் லஞ்ச லாவண்யத்தைத் தட்டிக் கேட்டதால் மோதல் ஏற்பட்டுள்ளது. (தினபூமி 12.10.98)

- மாமூல் கேட்டு மிரட்டி பணம் வசூலித்ததாகக் கைது செய்யப்பட்டு மதுரை மத்திய சிறையில் இருப்பவர் முனிச் (எ) முனியசாமி. இவருக்கும் மற்றும் நான்கு கைதிகளுக்கும் (ராமகிருஷ்ணன், அர்ச்சுனன், சரவணன், மாரியப்பன்) இடையே தகராறு ஏற்பட்டது. இந்த நான்கு கைதிகளும் சேர்ந்து முனிசியை பிளேடால் கிழித்திருக்கின்றனர். ரத்த காயமடைந்த முனிசியை மதுரை பெரிய ஆஸ்பத்திரியில் சேர்த்திருக்கின்றனர். இது குறித்து கரிமேடு போலீசார் வழக்குப் பதிவு செய்து மேற்குறிப்பிட்ட நான்கு பேரையும் கைது செய்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விசாரணை நடத்தி வருகின்றனர். முன் விரோதம் காரணமாக இந்த மோதல் நடந்துள்ளது. (தினத்தந்தி 26.3.98)

### 3. கோவை

- கோவை மத்திய சிறையில் சாப்பாட்டில் கல், பீங்கான் துாள்கள் கிடந்ததால் கைதிகள் இதைப்பற்றி வார்டன்களிடம் முறையிட்டனர். இதனால் சிறை வார்டன்களுக்கும் கைதிகளுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. இந்த வாக்குவாதம் முற்றி கைகலப்பு நடந்து 20 கைதிகள் 5 வார்டன்கள் காயமடைந்தனர். இதனைக் கண்டித்து கைதிகள் உண்ணாவிரதம் இருந்தனர். சிறை அதிகாரிகளின் சமாதான பேச்சுவார்த்தையால் கைதிகள் உண்ணாவிரதத்தை கைவிட்டனர். (தினபூமி 20.6.98)

- கோவை குண்டு வெடிப்பைத் தொடர்ந்து ஆர்.எஸ்.எஸ். முஸ்லீம் கைதிகளிடையே கலவரம் மூண்டது. இவர்கள் இருபிரினரும் தனித்தனியாக அடைக்கப்பட்டு இருந்தாலும், தண்ணீர் தொட்டி, பாத்ரூம் போன்றவை ஒன்றாக உள்ளன. இவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்து கிண்டல் செய்தது – னால் இருபிரிவினரிடையே மோதல் ஏற்பட்டு கற்களால் தாக்கிக்கொண்டனர். இதன் விளைவாக, அமீது (28), ராஜா (எ) முகமது (24) அருள் ரசீக் (25), ஒறன் அலி (34) ஆகிய 4 கைதிகளும் காயமடைந்தனர். (தினமலர் 18.2.98)

- கோவை மத்திய சிறையில் 16.2.98ம் தேதியன்று (16.2.98) கைதிகளுக்கிடையே திடீரென்று மோதல் ஏற்பட்டது. கைதிகள் 2 கோஷ்டிகளாகப் பிரிந்து ஒருவரை ஒருவர் மாறி மாறித் தாக்கிக் கொண்டனர். இந்த மோதலினால் திருட்டு வழக்கில் கைது செய்யப்பட்ட கோவை வரதராஜபுரத்தைச் சேர்ந்த நயினார் முகமது மகன் ராஜா என்ற இப்ராகிம் (24) மற்றும் கொலை வழக்கில் ஜெயிலில் அடைக்கப்பட்ட பாலக்காடு அணையாபுரம் அகூனு (23) ஆகியோர் படுகாயம் அடைந்தார்கள். இதனைத் தொடர்ந்து கோவை அரசு ஆஸ்பத்திரியில் தீவிர சிகிச்சை அளித்தும் பலனில்லாமல் இப்ராகிம் இறந்து போனார். அமீதுக்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. கோவையில் நடந்த வெடிகுண்டு சம்பவத்தைக் கைதிகளின் உறவினர்கள் கைதிகளுக்குத் தெரிவித்ததால் இந்தக் கலவரம் ஏற்பட்டது. (தினத்தந்தி 17.2.98)

கோவை சிறையில் 3.3.99ம் தேதியன்று தீவிரவாதிகள் தப்பிக்க முயன்று அது தோல்வி அடைந்ததினால் கலவரத்தில் ஈடுபட்டனர். அதற்காக, தீவிரவாதிகள் மீது தடியடி நடந்தது. சிறைவளாகத்தில் இருந்த அனைத்து வார்டன்களும் மற்றும் அதிகாரிகள் ஒரே இடத்தில் குவிக்கப்பட்டு அதிரடி நடவடிக்கை மேற்கொண்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அப்போது தீவிரவாதிகள், வார்டன்களை எதிர்த்து தாக்க துவங்கினர். உடனே சிறை காவலர்கள் தீவிரவாதிகள் மீது மீண்டும் தடியடி நடத்தினர். இச்சம்பவத்தில் காயமடைந்த வார்டன் செந்தில்குமார் கோவை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். கைதிகள் எத்தனை பேர் காயமடைந்தனர் என்பது தெரியவில்லை.

மேற்கண்ட சம்பவத்தை ஒட்டி கோவை மத்திய சிறை அதிகாரிகளுக்கும், கைதிகளுக்கும் இடையே நடந்த மோதல் காரணமாக ஏற்பட்ட பதட்டநிலை குறித்து சி.ஞானசேகரன் (த.மா.க.) சுப்பராயன் (வ.கம்யூ) திருநாவுக்கரசு (எம்.ஜி.ஆர். அதிமுக) தீரன் (தமிழ்.பா.ம.க.) வேலாயுதம் (பா.ஜ.) டாக்டர் கிருஷ்ணசாமி (புதிய தமிழகம்) கணேசன் (பா.ம.க.) ஆகிய சட்டமன்ற உறுப்பினர்கள் சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்தனர்.

இதற்குப் பதிலளித்துப் பேசிய தமிழக சட்ட அமைச்சர் ஆலடி அருணா, "தமிழகத்தில் உள்ள 8 மத்திய சிறையில் 303 முஸ்லீம் தீவிரவாதிகள் கைதிகளாக உள்ளனர். இவர்களை சோதனையிட்ட போது ஆணிகள், பிவிசி பைப்புகள், சிறிய மரக்கட்டை, துருப்பிடித்த தகரங்கள், நசுக்கப்பட்ட கூர்மையாக்கப்பட்ட அலுமினிய தகடுகள், சேவிங் பிளேடுகள், ஸ்குரு டிரைவர்கள் மற்றும் ரொக்கப்பணமாக ரூ.3860 ஆகியவை சோதனையிட்டபோது கிடைத்தன. வேறு ஆபத்தான ஆயுதங்கள், போதை பொருட்கள் ஆகியவை கைப்பற்றப் – படவில்லை. செல்போன், பயங்கர ஆயுதங்கள், கத்தி ஆகியவை இருந்தன என்பது உண்மைக்கு புறம்பானது" என்று பதில் கூறினார். (24.3.99 கதிரவன்)

### 4. பாளையங்கோட்டை

- பாளையங்கோட்டை மத்திய சிறையில் 7.5.98–ம்தேதி அன்று இரு கோஷ்டிகளைச் சேர்ந்த கைதிகளுக்கிடையே மோதல் ஏற்பட்டது. சிறை வளாகத்திலிருந்து நாட்டு வெடிகுண்டு ஒன்று கைப்பற்றப்பட்டது. கூர்மையான அலுமினிய பிளேட்டால் குத்தப்பட்டதில் கைதி ஒருவர் பலத்த காயமடைந்தார். திருநெல்வேலி மாவட்டம், கீழப்புகர் பகுதியைச் சேர்ந்த வெள்ளப்பாண்டியன் மகன் முத்துப்பாண்டி (32) கொலை முயற்சி, கள்ளச்சாராயம் விற்பனை உள்ளிட்ட சில வழக்குகள் தொடர்பாக கைது செய்யப்பட்ட இவர் பாளையங்கோட்டை சிறையில் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.
- ஒரு வழக்கில் வியாழக்கிழமை மாலை செங்கோட்டை நீதிமன்றத்தில் முத்துப்பாண்டி ஆஜர்படுத்தப்பட்டார். அதன்பிறகு இரவு 8 மணியளவில் மீண்டும் பாளையங்கோட்டை சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். ஒரு குறிப்பிட்ட கோஷ்டியைச் சேர்ந்த முத்துப்பாண்டியை வேறொரு கோஷ்டி இருக்கக்கூடிய அறையில் அடைத்ததனால் எதிர் கோஷ்டியினர் முத்துப் பாண்டியை தாக்கியிருக்கிறார்கள். 7.5.98 அன்று சிறை அறையிலிருந்து


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வெளியே வந்த முத்துப்பாண்டி தன்னுடைய கோஷ்டியைச் சேர்ந்த கைதிகளிடம் சென்று எதிர்தரப்பினர் தன்னை தாக்கியதாகக் கூறினார். இதனால் இந்த மோதல் ஏற்பட்டிருக்கிறது. இந்த சம்பவத்தில் 8 கைதிகளுக்கு கடுமையான காயங்கள் ஏற்பட்டுள்ளன. ( 09.09.98, தினமணி மற்றும் 20.09.98 தமிழன் எக்ஸ்பிரஸ்)

- சிறையில் உணவு வாங்கும் போது காஜா என்ற கைதியை பாண்டி என்ற கைதி இடித்து விட்டார். இதனால் இவர்கள் இருவருக்கும் வாய்த்தகராறு ஏற்பட்டு கொண்டிருக்கும்போது பாண்டிக்கு ஆதரவாக இரு கைதிகள் பேசியிருக்கின்றனர். பின்னர் அவர்கள் மூவருமாக சேர்ந்து காஜாவை தாக்கியிருக்கிறார்கள். அலுமினியத் தட்டை கூர்மையாக்கி, அதனால் காஜாவைப் பாண்டி பலமாக குத்தியுள்ளார். சிறைக்காவலர்கள் பாண்டியை பிடிக்க முயற்சிக்க அப்போது தன்னைத்தானே பாண்டி வயிற்றில் கிழித்துக் கொண்டிருக்கிறார். இதனால் சிறையில் தீவிரவாதிகள் அடைத்து வைக்கப் – பட்டிருந்த அறையில் திடீர் சோதனை நடத்தப்பட்டது. (09.04.99– கதிரவன்)

- பாளை மத்திய சிறையில் 1500 கைதிகள் உள்ளனர். ஆனால் இங்கு 1100 கைதிகளை வைத்திருப்பதற்குதான் வசதிகள் உள்ளன. குண்டர் சட்டத்தின் கீழ் அடைக்கப்பட்டுள்ள மாரியப்பன் (எ) குண்டு மாரியப்பன், மும்ஜான் (எ) முகமது உசேன் மற்றும் விசாரணை கைதிகள் தங்கதுரை, வடிவேல் ஆகியோரை பாளையங்கோட்டை (ஜே.எம்.5) நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்த பாளையங்கோட்டை ஆயுதப்படை போலீசார் ராமன், குருநாதன் ஆகியோர் வந்து அழைத்துச் சென்றனர். நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப் –பட்ட அவர்கள் நால்வரும் பின்னர் சிறை வளாகத்திற்கு வரும்போது மாரியப்பனை போலீசார் மரியாதைக் குறைவாக பேசியதால், இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது.

ஆனால் ஆத்திரமடைந்த **போலீசார்,** மாரியப்பனின் பின்பகுதியில் துப்பாக்கியால் தாக்கியுள்ளனர். இதனால் **மாரியப்பனுக்குக்** காயம் ஏற்பட்டது. சிறை வளாகத்திற்குள் நடந்த இச்சம்பவத்தை **அப்போது** கைதிகளைப் பார்க்க வந்த உறவினர்களும் பார்த்துள்ளனர். இதற்கு **எதிர்ப்பு** காட்டும் அடையாளமாகக் கைதிகள் அங்கு மரத்தின் மீது ஏறி போலீசாரைப் நோக்கி கற்களை வீசினர்.

சிறை அதிகாரிகள் சமாதானப் பேச்சு வார்த்தை நடத்திய பின்னர் மாரியப்பன் மற்றும் நான்கு கைதிகள் இச்சம்பவம் சம்மந்தமாக சிறை அதிகாரிகளிடம் தங்களைத் தாக்கிய போலீசார் மீது புகார் தெரிவித்தனர்.

(ஆதாரம் – 08.06.99 – தினமலர்)


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



### சிறைக்குள் உண்ணாவிரதங்கள்

- உறவினர்களிடம் பேசும் போது இடையில் இருக்கும் தடுப்பு கம்பியை அகற்ற வேண்டும், சிறைக்கு ஜாமீன் உத்தரவு வந்தவுடன் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும், சினிமா படம் வாரந்தோறும் காட்ட வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன் வைத்து பாளை மத்திய சிறையில் 4000 கைதிகள் உண்ணாவிரதம் இருந்தனர். (கதிரவன் 20.7.99)

- நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்படும் போது போலீசார் தங்களைத் தாக்குவதைக் கண்டித்தும், உறவினர்களை பார்க்க அனுமதிக்காததைக் கண்டித்தும் திருச்சி மத்திய சிறையில் 850 கைதிகள் உண்ணாவிரதம் இருந்தனர். (12.8.99 – தினமலர்)

- திருச்சி சிறையில் ஒரு குறிப்பிட்ட செல்லில் இருக்கும் 500 கைதிகளுக்கு 10 கழிப்பிடங்கள் மட்டுமே இருக்கின்றன. அந்தக் கழிப்பிடங்களில் கைதிகள் பயன்படுத்துவதற்கு போதிய தண்ணீர் வசதி இல்லை, சிறையில் வழங்கப் – படும் சாப்பாடு அளவு நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. சிறையில் இருக்கும் உள்நோயாளிகளுக்கு மருத்துவ வசதிகளும், உயிர்காக்கும் மருந்துகளும் இல்லை. கைதிகள் வேறு இடங்களுக்கு மாற்றம் செய்ய விரும்ப மனு கொடுத்தால் சிறை அதிகாரிகள் அரசுக்கு மனுக்களை அனுப்பி வைக்காமல் காலதாமதப்படுத்துகின்றனர். சிறையில் கைதிகளை பாரபட்சமாக நடத்துகின்றனர் என்பது போன்ற பிரச்சினைகளை முன் வைத்து 85 கைதிகள் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை துவக்கினர். பின்னர் சிறை அதிகாரிகளின் சமாதான பேச்சுவார்த்தையால் கைதிகள் உண்ணாவிரதத்தை கைவிட்டனர். (தினமலர் 12.5.98)

### சிறைகளின் நிலைமை

- 900 பேர் வைக்கக்கூடிய பாளையங்கோட்டை மத்திய சிறையில் இன்று 1330 பேர் அடைக்கப்பட்டிருக்கின்றனர்.
- சில மாதங்களுக்கு முன்பு நடந்த தகராறில் சுமார் 13 பேர் வரை ரத்தக் காயங்களுடன் (அலுமினிய தட்டை ஆயுதமாக்கி அதனால் குத்துப்பட்டவர்கள்) மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

- அதனால் சிறையில் ஒன்பது பிளாக்குகளைத் தனித்தனி பிரிவுகளாகத் தற்போது பிரித்து வைத்துள்ளனர்.

- வெளியில் கிலோ ஒன்றுக்கு 2500ரூபாய்க்கு விற்கப்படும் கஞ்சாவை, சிறைத் தொடர்புடையவர்கள் உள்ளே பாதுகாப்பாகக் கொண்டு வந்து சேர்த்தால் அதற்கான கூலியாக இரண்டாயிரம் ரூபாய் கொடுக்கப்படுகிறது. (ஆதாரம் ஜூனியர் விகடன் 2.8.99)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



- இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 75–ன் கீழ் கைதாகும் குற்றவாளிகள் மீண்டும் அதே வகையான குற்றங்களை செய்யும் போது, இவர்களை குற்றம் இழைத்து விட்டு வழக்கமாக வரும் கைதிகள் (ஹேபிச்சுவல் பிரிஸ்னர்) என்று அழைப்பர். தமிழகம் முழுவதும் இவ்வகையான தண்டனைகளைப் பெறும் கைதிகள் அனைவருமே கொண்டு வந்து சேர்க்கப்படுவது சேலம் மத்திய சிறைச்சாலையில்தான்.

- சேலம் சிறையில் உள்ள கைதிகள், பகலில் சிறை அறைக்கு வெளியே உள்ள கழிப்பிடத்தை உபயோகித்துக் கொள்ளலாம். இரவில் அவர்களுடைய செல்லில் கழிப்பிடம் கிடையாது. நாலைந்து போர்களுக்கு ஒரேயொரு மண் சட்டிதான். காலையில் அதை ஏந்திக் கொண்டு வெளியே வந்து அவர்களே சுத்தம் செய்து கொண்டு வந்து பத்திரமாக வைத்துக் கொள்ள வேண்டும். இதே நிலைதான் பாளையங்கோட்டை சிறையிலும்.

- சேலம் மத்திய சிறையில் சீட்டுக்கட்டு, ஆடு புலி ஆட்டம் எல்லாம் தாராளமாக பணம் கட்டி ஆடலாம். கஞ்சாவும் தட்டுப்பாடு இன்றித் தாராளமாகக் கிடைக்கிறது.

- சிறை வார்டன்கள் 100க்கு பத்து ரூபாயிலிருந்து இருபது வரை கைதிகளுக்கு வட்டிக்கு விடுகிறார்கள்.

- இன்றைய தேதிக்குக் கோவைச் சிறையில் கவனித்து உடனடியாக சரி செய்யப்பட வேண்டியது ஊழல்களே. சிறைக் கைதிகளுக்குக் கொடுக்கும் உணவில்தான் பெருமளவு ஊழல் நடக்கிறது. இங்கு 2000 கைதிகளுக்கு மேல் உள்ளனர். தரவேண்டிய உணவில் பாதி அளவுதான் தரப்படுவதாகவும் உணவுப் பொருள் மிச்சப்படுத்தப்பட்டு சிறை அதிகாரிகளால் பங்கு போட்டு கொள்ளப்படுவதாகவும் தங்களை சந்திக்க வரும் உறவினர்களிடம் சொல்லிக் குமுறுகிறார்கள் கைதிகள்.

- குறிப்பிட்ட சில கைதிகளுக்கு உடல் நிலையைப் பொறுத்து சிறப்பாக பால், முட்டை, இறைச்சி, சப்பாத்தி என்று கொடுக்க சொல்கிறது சிறை விதிமுறை. ஆனால், இதெல்லாம் சிறிய அளவு மட்டும்தான் கொடுக்கப்படும் அல்லது சுத்தமாக கொடுக்கப்படாமலே கொடுத்ததாகக் கணக்கு காட்டப்படும்.

- சிறைக் கைதிகளை பார்க்க வரும் உறவினர்களிடம் ஐந்தும் பத்துமாகப் பிடுங்கி எடுத்தே ஒரு சில சிறை அதிகாரிகள் வாரத்துக்கு பத்தாயிரம் ரூபாய் வரை சம்பாதிக்கிறார்கள்.

இதைப் போன்ற நிலையில்தான் பிற மத்திய சிறைச்சாலைகளும் உள்ளன.

(டிசம்பர் 2–19, 1999, ஜூனியர் விகடன்)


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பொதுவான பரிந்துரைகள்

சிறைச்சாலைகள் உருவாக்கப்பட்டமைக்கான நோக்கமே குற்றவாளிகளை சீர்திருத்த வேண்டும் என்பதுதான். சிறைச்சாலைகள் சீர்திருத்த பள்ளிகளாகச் செயல்படுவதற்கு அடிப்படையாக சிறைக்கைதிகள் அனைத்து மனித உரிமைகளோடும் நடத்தப்பட வேண்டும். இதையே ஐ.நா.வின் 1966ம் ஆண்டில் டிசம்பர் 6ம் தேதியன்று இயற்றப்பட்ட சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான உலகளாவிய உடன்பாடு தெளிவாக வரையறுத்து கூறுகிறது.

விதி 10ல் (1) சிறையிலடைக்கப்பட்டு சுதந்திரம் பறிக்கப்பட்டவர் மரியாதையுடனும், மனிதாபிமானத்துடனும் மனிதர்களுக்கான கண்ணியத்துடன் நடத்தப்பட வேண்டும் என்றும்,

விதி 2ல் (அ)ஆனது குற்றம் சாட்டப்பட்டவர்கள் தண்டனை அளிக்கப்பட்டவர்களிடமிருந்து பிரிக்கப்பட்டு அவர்கள் குற்றம் சாட்டப்பட்டவர்கள் என்ற அந்தஸ்துக்கேற்றவாறு நடத்தப்பட வேண்டும் என்றும்,

விதி 2ல்(ஆ) ஆனது குற்றம் சாட்டப்பட்ட இளம் சிறார் (Juveniles) வயது வந்தவர்களிடமிருந்து பிரிக்கப்பட்டு அவர்களின் வழக்குகள் விரைவில் முடிக்கப்பட வேண்டும் என்றும்

விதி 3 ஆனது சிறைக்கைதிகள் திருந்துவதற்கும் அவர்கள் சமூக மறுவாழ்வு அளிக்கப்படுவதற்கும் ஏதுவான முறையில் சிறைத்தண்டனை முறையை அமைப்பதே அதன் முக்கிய குறிக்கோளாக இருக்க வேண்டும் என்றும் கூறுகிறது.

இந்நோக்கத்தைக் கருத்தில் கொண்டே பிரிட்டிஷ் காலந்தொட்டு சிறை சீர்திருத்தங்கள் துவங்கின. இந்தியத் தண்டனைச் சட்டத்தை உருவாக்கிய மெக்காலே தலைமையில் சிறை சீரமைப்பு துவங்கினாலும், அவை குற்றவாளிகளை தண்டிப்பதற்கும் சிறையின் பாதுகாப்பிற்குமே அதிக முக்கியத்துவம் அளித்தன. 1919–1920ல் உருவாக்கப்பட்ட இந்திய சிறைக் கமிட்டியே நவீன சிறை சீர்திருத்தங்கள் குறித்தும் முதன் முதலாக, கைதிகளை சீர்திருத்துவது அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது என்ற கருத்துக்களை முன் வைத்தது. பின்னர், வரிசையாகப் பல கமிட்டிகள் அமைக்கப்பட்டன. 1947 சுதந்திரத்திற்கு பின்னர் மாநிலங்கள் வாரியாக சிறை சீர்திருத்தக் கமிட்டிகள் (கிழக்கு பஞ்சாப், ஒரிசா, கேரளா, உத்திரப்பிரதேசம், மகாராஷ்டிரா) அமைக்கப்பட்டன. சென்னையில் சிறை சீர்திருத்தக் கமிட்டி 1950–51ல் அமைக்கப்பட்டது. இக்கமிட்டிகள் சிறை சீர்திருத்தங்களில் மிகுந்த அக்கறை காட்டின. சுதந்திரப் போராட்ட வீரர்களாக நாட்டின் தலைவர்கள் அனுபவித்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிரிட்டிஷ் காலத்து சிறைக் கொடுமைகள் இவ்வாறு அவர்களை சிறை சீர்திருத்தங்களில் அக்கறை காட்ட வைத்தன. சீர்திருத்தங்களில் இருந்த இந்த முனைப்பின் காரணமாக இந்திய அரசு கேட்டுக் கொண்டதற்கிணங்க ஐ.நா.சபையின் சீர்திருத்த பணி நிபுணர் (Expert on Correctional Social Work ) முனைவர். டபிள்யூ. சி. ரெக்லஸ் இந்திய சிறைகளுக்கு வருகை தந்து ஆய்வு செய்து அறிக்கை ஒன்றை அளித்தார். இந்த அறிக்கைதான் இந்திய சிறை சீர்திருத்த வரலாற்றில் முக்கிய மைல் கல்லாக விளங்குகிறது. ரெக்லசின் அறிக்கையானது குற்றவாளிகளை சீர்திருத்தும் கோட்பாட்டு அடிப்படையில் கீழ்க்கண்ட முக்கிய பரிந்துரைகளை முன் வைத்தது:

- சிறைச்சாலைகள் சீர்திருத்த மையங்களாக மாற்றப்பட வேண்டும்,
- புதிய சிறைச்சாலைகள் (இடநெருக்கடியைத் தவிர்க்க) உருவாக்கப்பட வேண்டும்.
- இளங்குற்றவாளிகள் வயது வந்த குற்றவாளிகள் போன்று நடத்தப்படக் கூடாது.
- முறையாக, தொழில்ரீதியான சீர்திருத்த (Correctional Service) சேவையில் பயிற்சி பெற்றவரே சிறை நிர்வாகியாக நியமிக்கப்பட வேண்டும்.
- சிறை சீர்திருத்தக் கண்ணோட்டத்தின் அடிப்படையில் புதிய சிறைப்பேரேடு (Jail Manual) உருவாக்கப்பட வேண்டும்.
- சிறைத்தண்டனை அனுபவித்தவர்களுக்கு மறுவாழ்வுதரும் அமைப்பு ஒன்றும், நன்னடத்தைக் காரணமாக சிறைக் கைதிகள் தண்டனைக் காலத்திற்கு முன்பே விடுதலை செய்யப்படுவதை பரிந்துரைக்கும் அமைப்பு ஒன்றும் ஏற்படுத்த வேண்டும் என்றும்,

மிக முக்கியமான பரிந்துரைகளை முன் வைத்தது. (ஆதாரம்: Jail Administration of India, prepared for the Govt. of India, by Dr. Walter C. Reckless, expert appointed by the Technial Assistance Administration of the United Nations.)

இந்த ரெக்லஸ் அறிக்கையின் அடிப்படையில் அமைக்கப்பட்ட சிறைப் பேரேட்டுக்கான கமிட்டி சிறை சீர்திருத்தங்களுக்கான பல பரிந்துரைகளைக் கொண்ட மாதிரி சிறைப்பேரேடு ஒன்றை 1960 அரசுக்கு சமர்ப்பித்தது. மிக சிறப்பான சீர்திருத்தங்களை கூறிய அந்த அறிக்கை வெளிவந்த பின்னரும் சிறைக் கொடுமைகள் தொடர்ந்தன. 70களின் இறுதியில், (அவசர நிலை காலகட்டம்) சர்வதேச பொது மன்னிப்பு சபை, மனித உரிமை அமைப்புகள் சிறையில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள் மீது கடுமையான கண்டனங்களை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தெரிவித்தன. உச்ச நீதிமன்றம் பல எண்ணற்ற தீர்ப்புகளில், முக்கியமாக நீதியரசர் திரு.வி.ஆர் கிருஷ்ணய்யர் தலைமையிலான அமர்வுகள் சிறை அமைப்பு மனித உரிமைகளை நசுக்குவதை மிக வன்மையாக கண்டித்தன. "சட்டத்தின் ஆட்சியே சிறையில் நடைபெற வேண்டும். கைதிகளின் அடிப்படை உரிமைகள் சிறையில் அவசியம் பேணப்பட வேண்டும்" என்றும் உச்ச நீதிமன்றத்தின் மூலம் உத்தரவிடப் -பட்டது. (ஆதாரம்: Report of the All India on Jail Reforms 1980-83 vol. I page.16)

**இதற்குப் பின்னரும் நிலைமைகள்** சிறிதளவே மாறியுள்ளன. சிறை உண்மையான சீர்திருத்தப் பள்ளியாக மாறி சிறைக் கைதிகளின் மனித உரிமைகள் பேணப்பட அனைத்திந்திய சிறை சீர்திருத்தக் கமிட்டிகளின் பரிந்துரைகளும் மற்றும் தமிழகத்தில் பாட்னா உயர்நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி திரு.ஆர்.எல் நரசிம்மன், ஐ.சி.எஸ்., தலைமையிலும் திரு.எஸ்.எம்.டயேஸ், ஐ.பி.எஸ்., டாக்டர்.அ. வெங்கோபராவ், எம்.டி.பி.எச்.டி. மனநல மருத்துவத்துறையின் முன்னர் தலைமை மருத்துவர், ராஜாஜி அரசு மருத்துவமனை மதுரை ஆகியோரை உறுப்பினராகக் கொண்டு அமைக்கப்பட்ட "தமிழ்நாடு சிறை சீர்திருத்த ஆணையத்தின்" (1978) பரிந்துரைகளும் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும். இங்கு மேற்கண்ட இரு அமைப்புகளின் பரிந்துரைகளில் முக்கியமானவை மட்டும் சுருக்கித் தரப்பட்டுள்ளன:

- சிறையிலடைக்கப்பட்டு சுதந்திரம் பறிக்கப்பட்டவர் மரியாதையுடனும், மனிதாபிமானத்துடனும் மனிதர்களுக்கான கண்ணியத்துடன் நடத்தப்பட வேண்டும். குற்றம் சாட்டப்பட்டவர்கள் தண்டனை அளிக்கப்பட்டவர் களிடமிருந்து பிரிக்கப்பட்டு அவர்கள் குற்றம் சாட்டப்பட்டவர்கள் என்ற அந்தஸ்துக்கேற்றவாறு நடத்தப்பட வேண்டும்.

- குற்றம் சாட்டப்பட்ட இளம் சிறார் (Accused Juveniles) வயது வந்தவர்களிடமிருந்து பிரிக்கப்பட்டு அவர்களின் வழக்குகள் விரைவில் முடிக்கப்பட வேண்டும்.

- சிறைக்கைதிகள் திருந்துவதற்கும் அவர்கள் சமூக மறுவாழ்வு அளிக்கப்படு -வதற்கும் ஏதுவான முறையில் சிறைத்தண்டனை முறையை அமைப்பதே அதன் முக்கிய குறிக்கோளாக இருக்க வேண்டும். இளம் குற்றவாளிகள் (Convicted Juveniles) வயது வந்தவர்களிடமிருந்து பிரிக்கப்பட்டு அவர்களின் வயதுக்கும் சட்ட அந்தஸ்துக்கும் ஏற்ற வகையில் தண்டனை அளிக்கப்பட வேண்டும்.

- சிறையின் கொள்ளவுக்கு மேல் எக்காரணம் கொண்டும் கைதிகள் அடைக்கப்படக் கூடாது.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



- காசநோய் உள்ள கைதிகளுக்கென்று தாம்பரம் டி.பி. சானடோரியம் மற்றும் மதுரை ஆஸ்டின்பட்டி டி.பி.மருத்துவமனையில் சில குறிப்பிட்ட படுக்கைகள் ஒதுக்கப்பட வேண்டும்.
- ஒவ்வொரு மாவட்ட தலைமையகத்திலும் ஒரு கிளைச் சிறைச்சாலை அல்லது சிறப்பு சிறைச்சாலை அமைக்கப்பட வேண்டும்.
- நீதிமன்றத்திலிருந்து கிளைச் சிறைச்சாலை மற்றும் சிறப்பு சிறைச்சாலை களுக்கு சிறைத்துறையினரே அழைத்துச் செல்ல வேண்டும். இதில் போலீசார் ஈடுபடுத்தப்படக் கூடாது. அதே போல் மாநிலத்திலுள்ள அனைத்து கிளைச்சிறைச்சாலைகளும் நிலவருவாய் துறையிடமிருந்து சிறைத்துறைக்கு மாற்ற வேண்டும்.
- சிறைக் கைதிகளுக்கு அசைவ உணவுகளான கறி அல்லது மீன் போன்றவை வாரம் ஒரு முறை வழங்க வேண்டும். சைவ உணவு உண்பவர்களுக்கு அசைவ உணவிற்கு பதிலாக இனிப்பு மற்றும் தயிர் வழங்கலாம்.
- ஒவ்வொரு மத்திய சிறையிலும் வெளியில் கிராமங்களில் செயல்படும் பஞ்சாயத்து முறை போன்று அறிமுகப்படுத்தப்பட்டால் கைதிகளை ஒருமுகப்படுத்தி அவர்கள் இதன் மூலம் ஒத்துழைப்பை பெற்று அவர்களுக்குள்ளாகவே ஒரு அமைப்பை ஏற்படுத்தலாம்.
- சிறைச்சாலையினரின் தினசரி நடவடிக்கைகள் மாற்றி அமைக்கப்பட வேண்டும். சிறைக் கைதிகளை வெளியே விடும் நேரம் மற்றும் உள்ளே அடைக்கும் நேரத்தை 9 மணியாக மாற்றலாம். அவர்களுக்கு மாலை நேரத்தில் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யலாம்.
- நார் அல்லது வைக்கோல் அடைக்கப்பட்ட தலையணைகளை ஒவ்வொரு கைதிக்கும் வழங்கலாம்.
- கண்காணிப்புப் பணியில் ஈடுபடும் பணியாளர்களின் பணியைச் சற்று மேம்படுத்தலாம்.
- கைதிகளின் மறுவாழ்வுக்கு தொழிற்பயிற்சிகள், சிறுவணிகம் மற்றும் கைத்தொழில் செய்முறை பயிற்சி போன்றவை சரியான வகையில் அளிக்கப்பட வேண்டும்.
- கைதிகளின் அறையில் சுத்தமான நீர் வைக்கப்பட வேண்டும். அதே போல அவர்கள் வார்டர்களின் துணையின்றி அவர்களாகவே தாகத்தை தீர்த்துக் கொள்ளும்படி நீர் வைக்கப்பட வேண்டும்.
- சிறை வளாகம் முழுவதும் முக்கியமாக கழிப்பறைகள் குளியலறைகள் சுகாதாரத்துடன் பேணப்பட வேண்டும். இதற்கு ஒவ்வொரு கைதிகளுக்கு தரமான சோப்பும், பல்துலக்கும் பொடியும் வழங்கப்பட வேண்டும்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



- குறைந்த கால தண்டனை பெறும் கைதிகளுக்கும் உபயோகமான வேலைகளை வழங்கலாம். அதற்கேற்ப அவர்களுக்கு ஊதியமும் அளிக்கலாம்
- முதன்மை நீதிமன்ற நீதிபதி முழு கவனம் செலுத்தி அரசின் ஆணைகள் சரியான வகையில் சிறைகளில் நிறைவேற்றப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க வேண்டும்.
- வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது கைதாகி சிறையில் அடைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு பொருத்தமான வேலைகளை வழங்கலாம். அவர்களுக்கு அதற்கேற்ப ஊதியத்தை எந்தவித பிடித்தமும் இன்றி அளிக்க வேண்டும்.

இப்பரிந்துரைகள் நிறைவேற்றப்படும் போதே சிறைக் கலவரங்களுக்கு முற்றுப்புள்ளி ஏற்படும்; சிறையானது உண்மையான சீர்திருத்தப்பள்ளியாகத் திகழும்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# V. பெண்கள் மீதான வன்முறைகள்

சமூகத்தின் நலிந்த பிரிவினருள் பெரும் பகுதியினராகிய பெண்களின் மீது நடத்தப் பெறும் வன்முறைகள் நம் நாட்டில் காலங்காலமாக நடந்து வருபவையே. அரசியல், பொருளாதாரத்தில் ஓரங்கட்டப்பட்டு, கலாச்சார நிலையில் ஒடுக்கப்படுதலை நியாயப்படுத்தி வரும் நம் ஆணாதிக்க சமூக அமைப்பில், பெண்கள் அமைப்பு ரீதியாக திரண்டு தங்கள் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு பெற்று வருகின்றனர். இந்திய அரசியல் அமைப்பும், அகில உலக மனித உரிமை சாசனங்களும் பெண்ணுரிமை பற்றி நிறையவே பேசுகின்றன. உரிமை பற்றிய கண்ணோட்டம் பெண்களிடையே வளர்ந்திருந்தாலும், பெண்கள் அமைப்பாகத் திரண்டிருந்தாலும், பெண்கள் மீதான வன்முறைகள் நிகழ்கின்ற போதெல்லாம், ஆங்காங்கே எதிர்ப்புக் குரல்கள் எழுந்தாலும், வருந்தத்தக்க செய்தியென்ன வெனில், நாளும் இப்பெண்கள் மீது நடத்தப்பெறும் வன்முறைகளை முறையாகத் தொகுக்கும் பணியை எந்த அமைப்பும் இதுவரை செய்யவில்லை என்பதுதான்.

பெண்கள் மீதான வன்முறைகளை மட்டுமே தொகுத்து ஆவணமாக்கி கண்காணிப்பு பணியில் ஈடுபடுவது என்பது மக்கள் கண்காணிப்பகத்தின் பணி வரம்பிற்குட்பட்டதன்று; அது முடியாததும்கூட. பெண்ணுரிமை மீறல்களை ஆண்டறிக்கைக்காகத் தொகுக்க முயன்ற போதுதான், இந்த வெற்றிடம் தெரிய வந்தது. மக்கள் தொகையின் பெரும் பகுதியாக உள்ள பெண்கள் மீதான வன்முறைகளைத் தொகுத்தறியாமல், இப்பணி முழுமை பெறாது என்பதால், பத்திரிகைகளில் கிடைத்த ஆதாரங்களைக் கொண்டு, தொகுக்க முயன்றிருக் – கிறோம். எனவே, இத்தொகுப்பு முழுமையானதல்ல. முழுக்க முழுக்க பத்திரிகைச் செய்திகளை ஆதாரமாகக் கொண்டது. அதே வேளை இத்தொகுப்பு முழுமையான –தல்லவெனினும், கிடைத்த ஆதாரங்கள் மூலம் தமிழகத்தில் பெண்களின் நிலை உணருவதற்கு இவை அடிப்படையாக அமைகின்றன என்பதற்கு எந்தவிதச் சந்தேகமும் இல்லை.

தமிழகச் சூழலில், 1999ஆம் ஆண்டு நடந்த பெண்ணுரிமை மீறல்கள் பல பரிமாணங்களைக் கொண்டவை. வெவ்வேறு வடிவங்களில் நிகழ்த்தப் பெறும் இவ்வன்முறைகள், தனித்தனிப் பெயர்களைப் பெற்றாலும் ஒன்றோடொன்று தொடர்புடையன. எடுத்துக்காட்டாக, பாலியல் பலாத்காரம், கேலி பேசுதல், மானபங்கப்படுத்துதல் எனும் வடிவங்கள் கொலையில் முடியலாம், அல்லது தற்கொலையில் முடியலாம். இன்னொரு முக்கிய செய்தி என்னவெனில், வரதட்சணைக் கொடுமை என்ற தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ள வடிவங்களின் எண்ணிக்கையோடு, வரதட்சணைக் கொடுமை எண்ணிக்கை முடிந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விடுவதில்லை. இத்தொகுப்பில், மொத்தம் 582 வன்முறைகள் தொகுக்கப்பட்டுள்ளன. இந்த வன்முறைகளுள் 191 வன்முறைகள் வரதட்சணை சம்பந்தப்பட்டவை. வரதட்சணைக் கொடுமையுள், தற்கொலை, கொலை, சித்திரவதை, காணாமற் போதல் போன்ற அனைத்து வடிவங்களும் உள்ளன. வரதட்சணை ஒழிப்புச் சட்டம் நிறைவேறிய பின்பும், ஓரளவு கல்வியறிவு பெற்ற தமிழகத்தில், சுயமரியாதை இயக்கம் தோன்றிய தமிழகத்தில் இவ்வன்முறை இன்னும் தீரவில்லை என்பதையும் அது நமது ஆணாதிக்க சமூகத்தின் அடிப்படைக் கட்டமைப்பிலேயே ஆழமாக வேரூன்றியுள்ளது என்பதையும் பெண்ணுரிமை இயக்கங்கள் கணக்கில் கொள்ள வேண்டும்.

வரதட்சணைக் கொடுமைகளுக்கு அடுத்து, பாலியல் பலாத்காரம் என்ற பொதுத் தலைப்பில் 68 நிகழ்வுகள் பத்திரிகைகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன. நிச்சயமாக, எண்ணிலடங்கா, பதிவு செய்யப்பெறா நிகழ்வுகள் இருக்கலாம். இவற்றை யார் தொகுப்பது ? எப்படி தடுப்பது ? கொத்தடிமைப் பெண்கள், தலித் பெண்கள், பெண் குழந்தைகள் பலாத்காரத்திற்குள்ளாக்கப்படுவது ஆசிரியர், மாணவியை பலாத்காரப்படுத்திய நிகழ்வுகள், பணியிடங்களில் பெண்கள் படும் பாடு, போலீசாரால் சித்திரவதைகள், கடத்திச் சென்று கொலை செய்வது, கும்பலாகப் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்துதல் என இப்பட்டியல் முடிவே இல்லாமல் நீளுகின்றது. இவை ஆங்காங்கே நிகழும் தனித்த நிகழ்வுகளல்ல. ஆணாதிக்க சமூகம் பெண்ணினத்தின் மீது செலுத்தும் அனைத்து அடக்கு முறைகளும் இன்று தமிழகத்தில் காணப் பெறுகின்றன.

இத்தொகுப்பில், காணப்பெறும் வன்முறைகள் பெரும்பாலும் ஒரு சில வன்முறைகள் தவிர அனைத்தும் சமூகத்தில் பொருளாதார நிலையில் தாழ்த்தப் பெற்ற பெண்கள் மீது நிகழ்த்தப் பெற்ற வன்முறைகளாகவே பதிவு பெற்றுள்ளன. இதன்மூலம் சமூகத்தின் உயர்தட்டுப் பெண்கள் மீது வன்முறைகளை நிகழவில்லை என்ற முடிவுக்கு வரவேண்டிய அவசியமில்லை. அதே போன்று பெண்களின் மீதான உளவியல் வன்முறைகளையும் எம்மால் தொகுக்க முடியவில்லை. எமது வரம்புகளுக்குட்பட்டு எம்மால் இது மிகவும் கடுமையான பணி என்பதால் இங்கே ஒரு சில உளவியல் வடிவங்களிலுள்ள வன்முறைகள் தவிர்த்து (கேலி செய்தல் போன்றவை) பெரும்பாலும் உடல்ரீதியான வன்முறைகளே தொகுக்கப்பட்டுள்ளன. நம் சமூகத்தில் பெண்கள் மீது வன்முறைகள் பல வடிவங்களில் நிகழ்ந்தாலும், பலவேளை வன்முறைக்குட்பட்ட பெண்கள் பற்றிய செய்தி வெளிவருவதே, பெண்களின் மாண்புக்குரியதல்ல என்ற பிற்போக்கான மதிப்பீடு ஆழமாக இருப்பதால், வெளிவராமலிருந்திருக்கலாம். இதனையும் பெண்கள் அமைப்பு கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். இறுதியாக, இவை வெறும் புள்ளி விபரங்கள் அல்ல. "ஒரு மரணம்தான் சோகமானது ஆயிரம் மரணங்கள் என்றால் அது புள்ளிவிபரமாகி விடுகிறது"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


என்கின்ற ரீதியில், ஒரு ஆணின் பார்வையில் எழுதப்பட்ட புள்ளிவிபரங்களாக இதை யாரும் கருதிவிட வேண்டாம்.

ஒரு பெண்ணின் மீதான பாலியல் வன்முறை என்பது அவளது உடலளவில் மட்டும் அல்ல மனதளவிலும் ஆறாத காயத்தையும் ஏற்படுத்தி விடும். ஆளுமையை சேதப்படுத்தி அழித்துவிடும் தன்மை கொண்டவை என்பதை **அனைவரும் உணர வேண்டும் என்ற நோக்கில்தான் இங்கு வன்முறைகள்** தொகுத்து தரப்படுகின்றன.

இனியாகிலும், பெண்கள் மீது செலுத்தப்படும் இத்தகைய வன்முறையின் பரிமாணங்களை, தொகுக்கின்ற பணி தமிழகத்தில் தொடங்க வேண்டும் என்பதே எம் அவா.

## பெண்களின் மீதான வன்முறைகளின் தொகுப்பு

| மாதம் (1999) | திற்கொலை | கொலை | பாலியல் பலாத்காரம் | மான பங்கப் படுத்துதல் | வரதட்சணை கொடுமை | கேலி செய்தல் | இதர சம்பவங்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 9 | 6 | 5 | 1 | — | 3 | 2 |
| பிப்ரவரி | 14 | 6 | 5 | – – – | 4 | 3 | 3 |
| மார்ச் | 19 | 11 | 7 | 1 | 7 | 1 | 7 |
| ஏப்ரல் | 25 | 16 | 5 | – – – | 11 | 1 | 2 |
| மே | 12 | 12 | 2 | 1 | 4 | — | — |
| ஜூன் | 26 | 11 | — | — | 6 | 1 | 2 |
| ஜூலை | 23 | 11 | 3 | – | 8 | 1 | 2 |
| ஆகஸ்ட் | 34 | 12 | –– | 1 | 2 | 1 | 1 |
| செப்டம்பர் | 30 | 20 | 12 | 5 | 4 | 1 | 1 |
| அக்டோபர் | 19 | 12 | 12 | — | 7 | –– | 3 |
| நவம்பர் | 26 | 13 | 5 | 1 | 1 | – | 2 |
| டிசம்பர் | 21 | 15 | 9 | –– | 7 | 2 | — |
| **மொத்தம்** | **258** | **145** | **65** | **10** | **61** | **14** | **25** |


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## 1.0. வன்முறைகளின் வடிவங்கள்

### 1.1 பாலியல் பலாத்காரம்

| எண் | பாலியல் பலாத்காரம் (பலாத்காரத்தின் வடிவங்கள்) | வயது | | | | திருமணம் | | இடம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 15-25 | 26-35 | 36-45 | 45-க்கு மேல் | ஆனவர் | ஆகாதவர் | கிராமம் | நகரம் |
| 1. | கடத்திச் சென்று /வழிமறைத்து | 22 | 3 | 2 | — | 7 | 20 | 18 | 9 |
| 2. | திருமணம் செய்வதாக/ காதல் விவகாரம் | 15 | 1 | — | — | 1 | 15 | 15 | 1 |
| 3. | கத்திமுனையில் மிரட்டி/ மயக்கமருந்து கொடுத்து | 4 | — | — | — | — | 4 | 2 | 2 |
| 4. | போலீஸ் நிலையத்தில்/ பள்ளியில் /ஆசிரமத்தில் | — | 1 | — | — | 1 | — | 1 | — |
| 5. | குடும்பத்தகராறு / முன்விரோதம் | 3 | — | 1 | — | 3 | 1 | 3 | 1 |
| 6. | நடத்தையில் சந்தேகம் | 1 | — | — | — | — | 1 | 1 | — |
| 7. | தாழ்த்தப்பட்ட சாதி | 1 | — | — | — | — | 1 | 1 | — |
| 8. | பிற காரணங்கள் | 8 | 3 | — | — | 6 | 5 | 6 | 5 |
| | மொத்தம் (65) | 54 | 8 | 3 | -- | 18 | 47 | 47 | 18 |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## 1.2 தற்கொலை

| எண் | தற்கொலை காரணங்கள் | வயது | | | | திருமணம் | | தற்கொலை செய்த முறை | | | | | இடம் | | உடன் இறந்தவர்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 15-25 | 26-35 | 36-45 | 45-க்கு மேல் | ஆனவர் | ஆகாதவர் | தீக்குளிப்பு | விஷம் | தூக்கு | கிணற்றில் | ரயிலில் விழுந்து | கிராமம் | நகரம் | |
| 1. | வறுமை, கடன் | – | 4 | 2 | – | 6 | – | 3 | 1 | – | 2 | – | 3 | 3 | 1 |
| 2. | பெற்றோர் /ஆசிரியர் திட்டியதால் | 11 | – | – | – | – | 11 | 3 | 5 | 1 | 2 | – | 6 | 5 | – |
| 3. | கணவரின் குடிப்பழக்கம் | 4 | 1 | – | – | 5 | – | 3 | 1 | – | 1 | – | 5 | – | 2 |
| 4. | வரதட்சணை | 35 | 9 | – | – | 44 | – | 25 | 7 | 10 | 2 | – | 25 | 19 | 2 |
| 5. | குடும்பதகராறு | 41 | 34 | 6 | 1 | 81 | 1 | 40 | 14 | 17 | 9 | 2 | 50 | 32 | 14 |
| 6. | காதல் | 10 | – | – | – | – | 10 | 1 | 5 | 1 | 3 | – | 7 | 3 | – |
| 7. | வன்புணர்ச்சி | 1 | – | – | – | 1 | – | – | 1 | – | – | – | 1 | – | – |
| 8. | மாமனார், மாமியார் கொடுமை | 8 | – | – | – | 8 | – | 4 | – | 4 | – | – | 3 | 5 | 1 |
| 9. | தீராத நோய் | 15 | 3 | 1 | 2 | 14 | 7 | 11 | 9 | 1 | – | – | 14 | 7 | 1 |
| 10. | மனநிலை பாதிப்பு | 2 | 1 | 1 | – | 3 | 1 | 3 | 1 | – | – | – | 2 | 2 | – |
| 11. | கணவரின் கள்ளத்தொடர்பு | 5 | 5 | – | – | 10 | – | 6 | 1 | 3 | – | – | 5 | 5 | – |
| 12. | மனைவியின் மீது சந்தேகம் | 5 | 4 | – | – | 9 | – | 5 | 2 | 1 | 1 | – | 5 | 4 | 1 |
| 13. | மற்றவை | 32 | 11 | 3 | 1 | 30 | 17 | 32 | 8 | 9 | – | 1 | 27 | 20 | 3 |
| | மொத்தம் (258) | 169 | 72 | 13 | 4 | 211 | 47 | 134 | 54 | 47 | 20 | 3 | 153 | 105 | 25 |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## 1.3. கொலை

| எண் | கொலை காரணங்கள் | வயது | | | | திருமணம் | | இடம் | | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 15–25 | 26–35 | 36–45 | 45–க்கு மேல் | ஆனவர் | ஆகாத–வர் | கிராமம் | நகரம் | |
| 1. | பாலியல் பலாத்காரம் | 6 | 9 | 2 | 2 | 17 | 2 | 13 | 6 | – |
| 2. | குடும்பத் தகராறு | 10 | 8 | 5 | – | 22 | 1 | 19 | 4 | 1 |
| 3. | காதல் விவகாரம் | 11 | 1 | 1 | – | 4 | 9 | 11 | 2 | – |
| 4. | வரதட்சணை கொடுமை | 19 | 5 | 1 | – | 25 | – | 19 | 6 | – |
| 5. | மனைவி நடத்தையில் சந்தேகம் | 5 | 4 | 1 | – | 10 | – | 10 | – | – |
| 6. | கணவரின் நம்பிக்கை துரோகம் | 2 | – | – | – | 2 | – | 2 | – | – |
| 7. | குடிபோதை | 1 | 3 | 2 | – | 6 | – | 6 | – | – |
| 8. | கணவரின் நடத்தையில் சந்தேகம் | 1 | 4 | – | – | 5 | – | 5 | – | – |
| 9. | பழிவாங்கும் செயல்/முன்விரோதம் | 2 | 3 | – | – | 4 | 1 | 5 | – | – |
| 10. | கொள்ளை | 1 | 1 | 1 | – | 2 | 1 | – | 3 | – |
| 11. | நரபலி | 2 | – | – | – | 2 | – | – | 2 | – |
| 12. | அரசியல் காரணமாக | 2 | – | – | – | 2 | – | – | 2 | – |
| 13. | பிற காரணங்கள் | 24 | 8 | 1 | – | 25 | 8 | 23 | 10 | – |
| | மொத்தம் (148) | 86 | 46 | 14 | 2 | 126 | 22 | 113 | 35 | 1 |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


## 1.4 வரதட்சணை

| வ. எண் | வரதட்சணைக் கொடுமைகள் | வயது | | | | திருமணம் | | இடம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 15-25 | 26-35 | 36-45 | 45க்கு மேல் | ஆனவர்கள் | ஆகாதவர்கள் | கிராமம் | நகரம் |
| 1. | எரிக்க முயன்றதாக/கத்தியால் கொலை முயற்சி | 5 | 2 | | 1 | 8 | — | 3 | 5 |
| 2. | சிகரெட் தீயால் சுட்டு சித்திரவதை | 2 | — | — | — | 2 | — | 1 | 1 |
| 3. | தலைமுடியை பிடித்து சுவரில் மோதுதல் | 2 | — | — | — | 2 | — | — | 2 |
| 4. | குடித்து விட்டு வந்து துன்புறுத்துவது | 1 | — | — | — | 1 | — | 1 | — |
| 5. | சேலையை கிழித்து அடித்து துன்புறுத்துவது | 1 | — | — | — | 1 | — | 1 | — |
| 6. | தாலியை அறுத்து சித்ரவதை | 1 | — | — | — | 1 | — | 1 | — |
| 7. | பெற்றோர் வீட்டுக்கு விரட்டுதல் | 1 | 2 | — | — | 3 | — | 2 | 1 |
| 8. | கணவரை மாமனார் மாமியார் மறைத்து வைத்துக் கொண்டு சித்ரவதை | 2 | — | — | — | 2 | — | 1 | 1 |
| 9. | தூங்கும் போது தண்ணீரை/ கொதிக்கும் குழம்பை ஊற்றுவது/ சூடு வைத்து சித்ரவதை | 2 | — | — | — | 2 | — | — | 2 |
| 10. | கணவர் மற்றும் அவர் குடும்பத்தார் பெண்ணை நிர்வாணமாக்கி சித்ரவதை | 1 | — | — | — | 1 | — | 1 | — |
| 11. | கர்ப்பத்தை கலைத்து சித்ரவதை | 1 | 1 | — | — | 2 | — | 1 | 1 |
| 12. | தரக்குறைவாக பேசி அடித்து/ உதைத்து கொடுமை | 24 | 9 | 2 | — | 35 | — | 24 | 11 |
| 13. | இதர கொடுமைகள் | 1 | — | — | — | 1 | — | 1 | — |
| | மொத்தம் | 44 | 14 | 2 | 1 | 61 | — | 37 | 24 |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## 1.5 மானபங்கப்படுத்துதல்

| வ. எண் | மானபங்கப்படுத்துதல் | வயது 15-25 | 26-35 | 36-45 | 45க்கு மேல் | திருமணம் ஆனவர்கள் | ஆகாதவர்கள் | இடம் கிராமம் | நகரம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | போலீசாரால் மானபங்கப் படுத்துதல் | 1 | | | | | 1 | 1 | – |
| 2. | வாலிபர்களின் வக்கிரச் செயல்கள் | 4 | 1 | | | 2 | 3 | 5 | – |
| 3. | தேர்தல் அலுவலரால் தேர்தல் களத்தில் மானபங்கப்படுத்துதல் | | 1 | | | | 1 | 1 | – |
| 4. | ரவுடி கும்பல் ☆ சென்னை | 2 | | | | | 2 | 1 | 1 |
| 5. | ஊர்க் கட்டுப்பாட்டை மீறியதால் | | 1 | | | | 1 | 1 | |
| 6. | மனநிலை சரியில்லாத பெண்ணை மானபங்கப்படுத்துதல் | | 1 | | | 1 | | 1 | |
| | மொத்தம் | 7 | 4 | | | 3 | 8 | 10 | 1 |

☆ சென்னை ரங்கநாதன் தெருவைச் சேர்ந்த பெண்கள் மானபங்கப்படுத்துதல்

## 1.6 குறும்பு செய்தல் (Eve-Teasing)

| வ. எண் | குறும்பு செய்தல் | வயது 15-25 | 26-35 | 36-45 | 45க்கு மேல் | திருமணம் ஆனவர்கள் | ஆகாதவர்கள் | இடம் கிராமம் | நகரம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | ஆபாச வார்த்தையால் மற்றும் கேலி செய்தல் | 1 | 2 | | | 1 | 2 | 1 | 2 |
| 2. | உடல்ரீதியான செயல்கள் | 1 | | | | 1 | | 1 | |
| 3. | பொது இடங்களில் இடிப்பது / வக்கிரச் செயல்களில் ஈடுபடுவது ☆ (சென்னை) | 1 | | | | 2 | | 1 | 1 |
| 4. | ஈவ்டீசிங் மரணத்திற்கு காரணமாக இருப்பது | 5 | 1 | | | 5 | 1 | 3 | 3 |
| 5. | ஈவ் டீசிங்கினால் பலத்த காயமடைதல் | 1 | | | | 1 | | 1 | |
| | மொத்தம் | 9 | 4 | | .. | 10 | 3 | 7 | 6 |

☆ கல்லூரி ஆண்டு விழா மலரில் ஆபாசக் கவிதைகள் எழுதுவது, இரட்டை அர்த்தத்துடன் பேசுவது போன்ற செயல்களில் ஈடுபடும் மாணவர்கள்

www.tamilarangam.net



## 1.7 இதர நிகழ்வுகள்

| எண் | விபரம் | வயது | | | | திருமணம் | | இடம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 15-25 | 26-35 | 36-45 | 45-க்கு மேல் | ஆனவர் | ஆகாதவர் | கிராமம் | நகரம் |
| 1. | கைவிடப்பட்ட பெண்கள் ☆ (விழுப்புரம்) | 3 | 2 | – – | –– | 4 | 1 | 2 | 3 |
| 2. | கடத்தல் ◆(பாண்டிச்சேரி) | 6 | – | – | – | 5 | 1 | 3 | 3 |
| 3. | கொலை முயற்சி | 1 | – | – | – | 1 | – | 1 | – |
| 4. | காணாமல் போன பெண்கள் | 2 | 1 | | | 2 | 1 | 2 | 1 |
| 5. | தாயை சந்தேகப்பட்டு குழந்தைகள் கொலை செய்தல் | – | – | 1 | – | – | 1 | 1 | – |
| 6. | நிர்வாணமாக்கி பெண்ணை ஓடவிட்டனர் | – | 1 | – | – | 1 | – | 1 | – |
| 7. | வெளிநாட்டில் சித்ரவதை செய்யப்பட்ட பெண்கள் மீட்பு (22 பெண்கள்) | – | – | – | – | – | – | – | –– |
| 8. | போலீஸ் தவறாக நடக்க முயற்சி | 1 | 1 | – | – | – | 2 | 2 | – |
| 9. | பணியிடங்களில் பாலியல் வன்முறை ❖ (விருதுநகர்) ▪ (தஞ்சாவூர்) | – | 3 | – | – | 1 | 2 | 3 | – |
| 10. | மர்மமான முறையில் மரணம் ♉ (சேலம்) | – | – | – | 1 | – | 1 | – | 1 |
| 11. | நகைக்காக 50–க்கும் மேற்பட்ட பெண்கள் கொலை ♣ பெரம்பலூர் | – | – | – | – | – | – | – | |
| 12. | வீட்டு வேலை செய்யும் பெண்கள் சித்ரவதை | 1 | – | – | – | 1 | – | – | 1 |
| 13. | மருத்துவ வசதி இல்லாததால் மரணம் | 1 | – | – | – | – | 1 | 1 | – |
| 14. | சமூக சேவையில் ஈடுபடும் பெண்ணை ரவுடிகள் தாக்குதல் | – | 1 | – | – | – | 1 | – | 1 |
| | **மொத்தம்** | 15 | 9 | 1 | 1 | 15 | 11 | 16 | 10 |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



- விழுப்புரம் மாவட்டம் வீரங்கிபுரம் கிராமத்தைச் சேர்ந்த பல பெண்கள் காதல் என்கின்ற பெயரில் ஏமாற்றப்பட்டு பாதிக்கப்பட்டுள்ளனர்.
- பாண்டிச்சேரியில் காதல் என்ற பெயரில் வீட்டை விட்டு வெளியே வரும் பல பெண்களை கடத்தி, விற்கவும், விபச்சாரத்தில் ஈடுபடுத்தியும் அல்லது நீலப்படத்தில் நடிக்க வைத்தும் சித்ரவதை செய்துள்ளனர்.
- விருதுநகர் கிராமங்களில் உள்ள நூற்றுக்கணக்கான அங்கன்வாடி பணியாளர்களை மீது ஆண் அதிகாரிகள் பாலியல் வன்முறை
- தஞ்சாவூர் மேற்கு சர்வோதயபட்டு சங்கத்தின் சர்வோதய கேந்திரத்தில் வேலை பார்க்கும் கூலிப் பெண்கள்
- சேலம் காக்காபாளையம் கருணாநிதி நகரில் கழிப்பிட வசதி இல்லாததால் காட்டுப்பகுதியில் ஒதுங்கும் பல பெண்கள் மர்மமான முறையில் மரணம்.
- பெரம்பலூர் திருச்சி மாவட்ட கிராமங்களில் நகைக்காக பெண்களை செஞ்சேரி மருதமுத்து கொலை செய்துள்ளான்

**வரதட்சணை கொடுமைகளின் வடிவங்கள் (செய்திகளிலிருந்து கொடுக்கப்பட்டவை)**

1. எரிக்க முயன்றதாக
2. சிகரெட் தீயால் சுட்டு சித்திரவதை
3. தலை முடியைப் பிடித்து சுவரில் மோதுவது.
4. குடித்துவிட்டு வந்து துன்புறுத்துவது
5. சேலையை கிழித்து, அடித்து துன்புறுத்துவது
6. தாலியை அறுத்து சித்திரவதை
7. பெற்றோர் வீட்டுக்கு விரட்டுதல்
8. கணவரை மாமனார்–மாமியார் மறைத்து வைத்துக் கொண்டு சித்திரவதை
9. தூங்கும்போது தண்ணீரை முகத்தில் ஊத்துவது, குழந்தை பெற்ற சில நாட்களுக்குள்ளேயே இடுப்புக்குக் கீழே சூடு வைத்து சித்திரவதை
10. கணவர் மற்றும் அவர் குடும்பத்தார் பெண்ணை நிர்வாணமாக்கி சித்திரவதை
11. கொதிக்கும் குழம்பை ஊற்றி சித்திரவதை
12. கொடூர குளிர்பானம் கொடுத்து கர்ப்பத்தை கலைத்து சித்திரவதை
13. பெண்ணை தரக்குறைவாக பேசி, அடித்து கொடுமைப்படுத்துவது.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## இதர நிகழ்வுகள்

1. அரசு மருத்துவமனையில் பிரசவத்திற்கு மருத்துவ உதவி இல்லாததால் தாயும், குழந்தையும் சாவு.
2. தன் மனைவியைக் காணவில்லை என்று கணவர் புகார்.
3. திருச்சி பெண் அகதியிடம் போலீஸ் ஆய்வாளர் தவறாக நடக்க முயற்சி
4. ஏரியில் குளிக்கச் சென்ற பெண்ணை கடத்திச் சென்றனர்.
5. வீட்டில் தனியாக இருந்த இளம்பெண்ணை கடத்திச் சென்றனர்.
6. ஆசைக்கு இணங்காத பெண்ணின் மீது ஆசிட்டை ஊற்றினார்கள்.
7. வேலைக்கு சென்ற பெண் வீடு திரும்பவில்லை.
8. குவைத் நாட்டில் சித்ரவதை செய்யப்பட்ட 22 இந்திய பெண்கள் மீட்கப்பட்டு சென்னை வந்தனர்.
9. போலீஸ் நிலையத்தில் நிறைமாத கர்ப்பிணியை பூட்ஸ் கால்களால் தாக்குவது.
10. காதல் என்ற பெயரிலும், கொடுமை தாங்காமல் வீட்டைவிட்டு ஓடிவரும் பெண்களையும் கடத்தி விற்கவும், விபச்சாரத்தில் ஈடுபடவும் அல்லது நீலப்படத்தில் நடிக்கவும் நிர்பந்திப்பது.
11. போதைப் பொடியை இளம்பெண்ணின் முகத்தில் தூவி கடத்திச் சென்றனர்.
12. விராலிமலை பகுதியில் விபச்சார தொழிலில் ஈடுபட்டு வரும் பெண்கள் எண்ணிக்கை திடீரென உயர்ந்துள்ளது.
13. மந்திரவாதி சிறப்பு பூஜை செய்வதாக கூறி பெண்களை கடத்திச் செல்கிறார்கள்.
14. முன்விரோத காரணமாக பெண்களை கடத்திச் செல்கிறார்கள்.
15. கர்ப்பமாக்கிவிட்டு கருகலைப்பு செய்ய வற்புறுத்துதல்.
16. பணியிடங்களில் பாலியல் வன்முறை
17. இளம் பெண்கள் கழிப்பிட வசதி இல்லாததால் ஊரை ஒட்டியுள்ள காடுகளில் ஒதுங்கும்போது மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டு கிணற்றில் தள்ளப்படுகிறார்கள்.
18. ஈவு இரக்கம் இல்லாமல் நகைகளுக்காக பெண்களை கொலை செய்கிறார்கள்.
19. வயிற்றுப்பிழைப்புக்காக வீட்டில் வேலை செய்யும் பெண்களை சித்ரவதை செய்கிறார்கள்.
20. காதலித்து கர்ப்பமாக்கி திருமணம் செய்ய மறுப்பது.
21. மனைவியை மற்றொரு ஆணுடன் படுக்க வற்புறுத்துவது.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பரிந்துரைகள்

- தமிழகத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் குறிப்பாக பாலியல் வன்முறைகள் ஆண்டுதோறும் அதிகரித்து வருகின்றன என்பதற்கு மேலே கண்ட புள்ளிவிவரங்களே சாட்சிகளாகும். தமிழகத்தில் கடந்த 1998–ம் ஆண்டில் மட்டும் 283 பாலியல் பலாத்காரங்கள் நடந்துள்ளன. அதே ஆண்டில் 373 வரதட்சணைக் கொடுமைகளும் 153 வரதட்சணைக் கொலைகளும் நடந்துள்ளதாக தேசிய மகளிர் ஆணையம் தெரிவித்துள்ளது. (ஆதாரம்: தேசிய மகளிர் ஆணையத்தின் அதிகார பூர்வ பத்திரிகையான ராஷ்டிரா மகிளாவின் செய்தி, பிப்ரவரி 1999, பக்கம் 2) இப்போக்கு குறித்து கவலை கொண்ட தமிழக அரசு இத்தகைய வழக்குகளின் புலனாய்வை மேற்பார்வையிடவும் போலீஸ் துறையினருக்கும் வருவாய்த் துறையினருக்கும் பாலியல் கண்ணோட்டம் குறித்து பயிற்சி பெறுவதற்கான நிகழ்ச்சிகளை (Gender Sensitization Exposure Programmes) நடத்துவதற்கும் சி.பி.சி.ஐ.டியினருக்கு சில அதிகாரங்களை வழங்கியது. இது தவிர, பெண்கள் மீதான வன்முறைகள் சம்பந்தப்பட்ட வழக்குகளின் விரைவில் விசாரித்து முடிப்பதற்கு சிறப்பு நீதிமன்றம் ஒன்றை அமைப்பது குறித்து பரிசீலித்து வருகிறது. இது உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

- பெண்களின் மீதான வன்முறைகள் மற்றும் குற்றங்களில் நடைபெறும் புலனாய்வைத் துரிதப்படுத்துவதைப் பொறுத்தவரை தமிழக அரசு இரண்டு விஷயங்களில் குறிப்பான கவனம் செலுத்த வேண்டும். ஒரு பெண்ணின் மரணம் (திருமணமாகி 7 ஆண்டுகளுக்குள் அப்பெண் மரணமடைந்திருந்தால் மட்டுமே) அல்லது அவர் பாலியல் பலாத்காரத்திற்குள்ளாக்கப்படுதல் போன்றவற்றை புலனாய்வு செய்யும் கோட்டாட்சியருக்கும் துணைப் போலீஸ் கண்காணிப்பாளருக்கும் இத்தகைய வழக்குகளை கையாளும் போது அவற்றை சரியான பாலியல் கண்ணோட்டத்துடன் அணுக முறையான பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும். ஏனெனில், இந்த வழக்குகளை விசாரிக்கும் பெரும்பாலான போலீஸ் அதிகாரிகள் மரணம் அல்லது பாலியல் பலாத்காரம் நடந்த இடங்களுக்குத் தாமதமாகவே வருவதால் வழக்கின் முக்கிய தடயங்க்ள் அழிக்கப்பட்டு குற்றவாளிகள் தப்பி விடுகின்றனர்.

- குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவுகள் 154 மற்றும் 155ன்படி போலீஸ் நிலையத்தில் புகார் கூறுபவர்களின் கூற்றை முழுமையாக பதிவு செய்ய வேண்டும். ஆனால் நடைமுறையில் மேற்படி சம்பவங்கள் குறித்தோ அல்லது கணவன் மனைவியை அடிப்பது குறித்தோ புகார் கூறுபவர்கள் கூறுவதை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போலீசார் அலட்சியமாக எடுத்துக் கொள்வதுடன் மனைவி கணவனிடம் அடிவாங்குவது சகஜம் என்று ஆலோசனையும் கூறுகின்றனர். பெரும்பாலான மகளிர் காவல்நிலையங்களில் கூட இதே நடைமுறைதான் காணப்படுகின்றது. இதற்கு காரணம் இவர்களிடம் பாலியல் கண்ணோட்டம் இல்லாததே. எனவே, அரசே அனைத்து மட்டங்களிலும் உள்ள போலீசாருக்குப் பாலியல் கண்ணோட்டம் மற்றும் பெண்களின் உரிமைகள் குறித்தும் முறையான பயிற்சிகள் திட்டமிட்டு நடத்த வேண்டும். இம்முயற்சியில் பெண்களின் அமைப்புகளும் அரசு சாரா நிறுவனங்களும் ஈடுபடுத்தப்பட அரசே ஆவண செய்ய வேண்டும்.

- பெண்களின் மீதான வன்முறை என்பது அவர்கள் கருவில் இருக்கும்போதே துவங்கி விடுகிறது. கருக்கொலை மற்றும் சிசுக்கொலை குறித்து இங்கே புள்ளிவிபரங்கள் தரப்படவில்லையெனினும் மேற்படி வாழ்வுரிமை பறிக்கும் இரு வன்முறைகளும் தமிழகத்தில் இல்லை என்று முடிவுக்கு வர இயலாது என்பது நாம் அறிந்ததே. பரவி வரும் இவ்வன்முறை குறித்தும் அதற்கான தீர்வுகள் குறித்து தெளிவு பெறுவதற்காகவே கருக்கொலை மற்றும் சிசுக்கொலைகளைத் தடுப்பதற்கான பரிந்துரைகள் தரப்படுகின்றன.

- பிறக்கப் போவது ஆணா, பெண்ணா என்பதை தொழில் நுட்பங்களின் மூலம் கண்டறிந்து பெண் குழந்தையாக இருந்தால் கருவிலேயே கொலை செய்துவிடும் போக்கு அதிகரித்து வருகிறது. கருக்கொலைக்கு (Foeticide) உடந்தையாக ஸ்கேன் மையங்களும் செயல்பட்டு வருகின்றன. இவை பகிரங்கமாகவே ஆண் குழந்தை வேண்டுமா? பெண் குழந்தை வேண்டுமா என்று விளம்பரங்களும் செய்கின்றனர். இதனால், பெண் குழந்தைகளின் பிறக்கும் உரிமையையே சுருக்கமாகச் சொன்னால் அவர்களது வாழ்வுரிமையே பறிக்கப்பட்டு வருகிறது. கருக்கொலையைத் தடுத்திட மத்திய அரசு பிறக்கப் போகும் குழந்தைகளின் குறைபாடுகளைக் கண்டறிய உதவும் தொழில் நுட்பம் (முறைப்படுத்துதலும், தவறாக உபயோகப்படுத்துவதைத் தடுத்தலும்) சட்டம் 1994ஐ (Pre-Natal Diagnostic Techniques Regulation & Prevention of Misuse Act) நிறைவேற்றியது. இச்சட்டத்தின்படி அனைத்து ஸ்கேன் மையங்களும் பதிவு செய்யப்பட வேண்டும். ஆனால், சட்டம் இயற்றப்பட்டு 5 ஆண்டுகளுக்கு மேலாகியும் பதிவு செய்வது என்பது மிகவும் மந்தமாகவே இருந்து வருகிறது. மக்கள் இயக்கங்களின் பல்வேறு நிர்ப்பந்தங்களுக்குப் பின்னர் ஸ்கேன் மையங்களை மே 31, 1999க்குள் பதிவு செய்யும்படி தமிழக அரசு அறிவித்திருந்தது. தமிழகத்திலுள்ள 5000 ஸ்கேன் மையங்களில் 318 நிலையங்கள் மட்டுமே பதிவு செய்துள்ளன. 706 பதிவுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இதுவரை பதிவு செய்யாமல் இருக்கும் 3500க்கும் மேற்பட்ட மரபணுகூடங்கள், ஸ்கேன் மையங்கள் தடை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செய்யப்பட வேண்டும். (ஆதாரம்: பெண் கருக்கொலைக்கு எதிரான பிரச்சார அமைப்பின் துண்டறிக்கை–தமிழ்நாடு)

- **அனைத்து தனியார் மருத்துவமனை**களும், அரசுக்கும், பொது மக்களுக்கும் **பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கை** மற்றும் அவற்றின் பாலினம் குறித்த **தகவல்களையும் கருக்கலைப்புகள்** மற்றும் அவற்றின் பாலினம் குறித்த தகவல்களையும் மாத வாரியாக, அரசு அறிவிக்கை (Notification ) வெளியிட வேண்டும்.

- பெண் கருக்கொலை சட்டத்தினை மீறும் மருத்துவர்கள் மற்றும் தொழில் நுட்ப வல்லுநர்களின் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

- ஆண்குழந்தை பிறப்பதற்கு முன்னுரிமை அளிக்கும் ஊடகச் சாதனங்களின் பிரச்சாரங்கள் தடுத்து நிறுத்தப்பட்டுப் பிறக்கும் அனைத்து குழந்தைகளின் மனித மதிப்பை ஏற்றுக் கொள்ளும்படியாக அரசு தொடர்ந்து பிரச்சாரத்தை மேற்கொள்ள வேண்டும்.

- இதற்கு அடுத்தபடியாக பெண்களின் வாழ்வுரிமை பறிக்கும் இன்னொரு கொடூரமாக சிசுக்கொலை (Infanticide) தமிழகத்தில் சில மாவட்டங்களிலும், கிராமங்களிலும் பரவி வருகிறது. இக்கொடூரத்தை நிறுத்த சிசுக்கொலை சட்டத்தை முறையாக அமல்படுத்த வேண்டும். இக்கொலையில் ஈடுபடும் குற்றவாளிகளைத் தண்டிக்கும் போது இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 302–ம் பயன்படுத்தப்படுகிறது. அப்படி சட்டத்தை பயன்படுத்தி தண்டிக்கும் போது கொலையாளியைவிட சிசுக்கொலைக்குத் தூண்டுதலாக இருந்தவர் –களையே (Abettors) தண்டிப்பதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். ஏனெனில், சிசுக் கொலையில் ஈடுபடும் (அதாவது பெண் குழந்தை பெற்ற தாயார்கள்) பெண்கள் ஒரு போதும் தாங்களாகவே இக்கொடூரத்திற்கு உடன்படுவதில்லை. கணவன் மற்றும் குடும்பத்தினரின் தூண்டுதல்களி –னாலேயே இக்கொடூரத்தைப் புரியும்படி நிர்ப்பந்திக்கப் படுகிறார்கள் என்பதைக் கவனத்தில் கொண்டு சட்டப்படியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

- பெண்கள் மீதான வன்முறையில், கருக்கொலைக்கும் சிசுக்கொலைக்கும் முக்கிய காரணமாகவும் தூண்டுதலாகவும் இருப்பது வரதட்சிணை என்ற சமூக நோய்தான். வரதட்சணையைத் தடுக்க, வரதட்சணை தடுப்புச் சட்டம் 1961 போடப்பட்டு 40 ஆண்டுகள் ஆகியும் இதுவரை வரதட்சணைக் குற்றங்களும் வரதட்சணை வாங்குவதும் குறையவில்லை. இதற்குச் சமூகம்தான் அடிப்படைக் காரணமாக இருப்பினும் இச்சட்டம் வலிமை இல்லாமல் இருப்பது வரதட்சணைக் கொடுமை மேலும் வலிமை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெறுவதற்கான சாத்தியக் கூறுகளை உருவாக்கி வருகிறது. ஆனால், இதே போன்று மற்ற பிரச்சினைகளுக்கென்று போடப்பட்ட சட்டங்களான உணவில் கலப்படத் தடுப்புச்சட்டம், லஞ்ச ஒழிப்புச் சட்டம் போன்றவற்றுக்கெல்லாம் சட்டத்தை அமல்படுத்துவதற்கென்று தனித்தனியே அதற்கென துறைவாரி – யான அரசு அதிகாரிகள் செயல்படுகின்றனர். மேலும், இக்குற்றங்கள் அரசுக்கு எதிராக கருதப்படுகின்றன. ஆனால் வரதட்சணைக் குற்றங்களோ தனியான ஒரு பெண்ணுக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்களாகவே கருதப்படுகின்றன. இச்சட்டத்தை அமலாக்குவதற்கு தனித்துறையும் இல்லை. போலீசாரும் அதிக அக்கறையும் காட்டுவதில்லை. எனவே, வரதட்சணை தடுப்புச் சட்டத்தைத் திருத்தும் போது இக்குற்றங்கள் அரசுக்கு எதிரான குற்றங்களாகப் பாவிக்கப்பட்டுப் பிரிவு 3 மற்றும் 4 ஆனது இச்சட்டத் – திலிருந்து எடுக்கப்பட்டு இந்திய தண்டனைச் சட்டத்திலும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்திலும் முறையான இடங்களில் சேர்க்கப்பட வேண்டும். சட்டத்தின் பிரிவு 2 மற்றும் 8 இந்திய தண்டனைச் சட்டத்திலும், குற்றவியல் நடைமுறைச் சட்டத்திலும் சேர்க்கப்பட வேண்டும். பிரிவு8 (அ) ஆனது இந்திய சாட்சிய சட்டத்தில் முறையான இடத்தில் சேர்க்கப்பட வேண்டும்.

- இச்சட்டத்தின்படி வரதட்சிணை வாங்குவதும் கொடுப்பதும் தண்டனைக்குரிய –தாகும். வரதட்சிணை கொடுப்பவர் சமூகத்தின் நிர்பந்தத்தினாலும், கட்டாயத்தினாலுமே கொடுக்கிறார். இவரையும் தண்டிப்பது நீதியாகாது. இவரையும் குற்றமிழைத்தவர்களாகச் சட்டத்தில் இணைந்திருப்பதும் சட்டத்தின் தோல்விக்கான காரணங்களின் ஒன்று. எனவே, இச்சட்டத்தின் உபபிரிவு (3) ஐ சட்டத்திலிருந்து விலக்கு பெறும் பாதிக்கப்பட்ட நபர்களை விவரிக்கும் பிரிவான 7ல் சேர்க்க வேண்டும்.

- வரதட்சிணை வாங்குவதற்காகப் பேரம் பேசுவதும், அப்படிப்பட்ட பேரங்களில் பங்கேற்பதும் வரதட்சிணை கேட்பது அல்லது வாங்குவதற்கு சமமாகவே பாவிக்கப்பட வேண்டும். இக்குற்றமானது பிடியாணை வேண்டாக் குற்றமாக மாற்றப்பட வேண்டும்.

- ஒரு திருமணமான பெண்ணை (மனைவியை) வரதட்சிணைக் கேட்டு குரூரமான சித்ரவதை செய்யும் கணவனுக்கோ அல்லது கணவரது உறவினருக்கோ 3 ஆண்டுகளிலிருந்து 7 ஆண்டுகள் வரை தண்டனை அளிக்கும்படி இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 498ஆனது திருத்தப்பட வேண்டும்.

- இச்சட்டத்தின் கீழ் கூறப்படும் குற்றமானது பிடியாணை வேண்டாக் குற்றமாக மாற்றப்பட வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


- வரதட்சிணை குற்றங்கள் அல்லது வாங்குவது குறித்த தகவல் அளிப்பது பொதுமக்களின் கடமை என்கின்ற ரீதியில் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 39 ஆனது திருத்தப்பட வேண்டும்.
- இப்போது வரதட்சிணை தடுப்புச் சட்டத்தின் பிரிவு 3 குறைந்த தண்டனையை அளிப்பதால் இந்தியத் தண்டனைச் சட்டத்தின் பிரிவு 498(ஆ)ஐ இதில் சேர்த்து அதிகபட்ச தண்டனையாக 10 ஆண்டுகள் அளிக்கப்பட உள்ளது. இந்தியத் தண்டனைச் சட்டத்தின் பிரிவு 53–ன்படி ஆயுள் தண்டனை என்பது சில குறிப்பிட்ட காலத்திற்கு சிறைத்தண்டனை அளிப்பதிலிருந்து மாறுபட்டது என்று கூறுகிறது. அதற்கேற்றாற்போல் பிரிவு 304ஐ இந்தியத் தண்டனைச் சட்டத்தின் கீழ் வரதட்சிணை மரணங்கள் என்ற புதிய பிரிவு சேர்க்கப்பட்டுள்ளது. எனினும், இப்பிரிவின் (2)ல் வரதட்சிணை தடுப்புச் சட்டத்துடன் இணைந்து அமல்படுத்தப்படும் போது குற்றமிழைப் – பவருக்குத் தண்டனை அளிப்பது ஆயுள்தண்டனை அல்லது 7 ஆண்டுகளிலிருந்து பத்து ஆண்டுகள் வரை என்று திருத்தப்பட வேண்டும்.
- பெண்ணுக்கு இழைக்கப்படும் வன்முறையின் தன்மையைப் பொறுத்து 3 ஆண்டுகளிலிருந்து 7 ஆண்டுகள் வரை அதிகபட்ச தண்டனை அளிக்க வேண்டும்.
- இப்போதுள்ள நடைமுறை போலன்றி, இந்து திருமணச் சட்டத்தின் 1955 கீழ் நடைபெறும் திருமணங்கள் அவசியம் பதிவு செய்யப்படுவதற்கேற்ப இச்சட்டமானது திருத்தப்பட வேண்டும்.
- மணப்பெண்ணின் பெற்றோர்கள் அல்லது காப்பாளர்களின் ஆண்டு வருமானத்தின் 20 விழுக்காட்டைவிட கூடுதலாக எக்காரணம் கொண்டும் திருமணச் செலவுகள் இருக்கக் கூடாது.
- இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 498 (ஆ)ன் கீழ் வரதட்சிணைக் குற்றங்களில் நிரூபிக்கும் கடமையானது குற்றம் சாட்டப்பட்டவர் மீது சுமத்தப்படும்படி இந்திய சாட்சியச் சட்டம் 1872 திருத்தப்பட வேண்டும்.
- திருமணத்தின் போது பெற்றோர்கள், உறவினர்கள் அல்லது நண்பர்களால் கொடுக்கப்படும் அன்பளிப்புகளானது பட்டியலிடப்பட்டுப் பதிவு செய்யப்பட்டு அவற்றுக்கு வரி விலக்கு அளிக்கப்பட வேண்டும். ஏனெனில், பெற்றோர்களின் சொத்துக்களில் சமபங்கு பெண்களுக்கு அளிக்கப்பட்டாலும் அவர்கள் தாங்கள் அளித்த பெரும் தொகையான வரதட்சிணை மற்றும் சீதனத்தைக் காட்டி சொத்தில் சமபங்கு தர மறுக்கின்றனர். இதிலும் பெண்கள்தான் பாதிக்கப்படுகின்றனர். ஏனெனில், வரதட்சிணையையும், சீதனத்தையும் அனுபவிப்பது அவளது கணவனும் அவரது குடும்பத்தாருமே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


இதில் அவன் எந்தவிதத்திலும் பயனடைவதில்லை. மேலும், திருமண வாழ்க்கை முறிந்து போனால் இருவரும் விவாகரத்து செய்து கொண்டால் பெண்ணுக்கு எந்தவித அன்பளிப்பும் திரும்பிக் கொடுக்கப்படுவதில்லை. எனவேதான், கொடுக்கப்படும் அன்பளிப்புகள் பட்டியலிடப்பட்டுப் பதிவு செய்யப்படுவது திரும்பப் பெறுவதற்கான சாத்தியக் கூறுகளை உருவாக்கும்.

- **வரதட்சிணை தடுப்புச் சட்டத்தின் பிரிவு 8 (ஆ)வின்** விதிகள் கடுமையாக அமல்படுத்தப்பட வேண்டும். அதற்காக ஆலோசனை வாரியங்களுக்கு பொறுப்பானவர்களாக முழுநேர வரதட்சிணை தடுப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும்.

- வரதட்சிணை மரணங்களுக்கு பின்னர் அந்த வழக்கில் சம்பந்தப்பட்ட மரணமடைந்த பெண்ணின் கணவன் அல்லது அவரது பெற்றோர்களின் சொத்துக்களானது பறிமுதல் செய்யப்படுவதற்கு ஏதுவாக வரதட்சிணை தடுப்புச் சட்டத்திலும், இந்திய தண்டனைச் சட்டத்திலும், குற்றவியல் நடைமுறைச் சட்டத்திலும் புதிய பிரிவு ஒன்று சேர்க்கப்பட வேண்டும்.

***பாலியல் பலாத்காரத்திற்கு எதிரான சட்டப்பிரிவுகள்***

- பாலியல் பலாத்காரம் செய்த குற்றவாளிகள் மீது இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 375 பயன்படுத்தப்பட்டு வருகிறது. இச்சட்டத்தைப் பொறுத்தவரை எவ்விதப் பாலியல் கண்ணோட்டமும் இன்றி அபத்தமாகவும் பலவிதங்களில் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு எதிராகவும் உள்ளது. ஏனெனில், பாலியல் பலாத்காரத்திற்குள்ளான பெண்ணே குற்றத்தை நிரூபிக்க வேண்டியவராக உள்ளார். இது மாற்றப்பட்டு, தேசிய மகளிர் ஆணையத்தின் பரிந்துரையின்படி குற்றம் சாட்டப்பட்டவரே தான் குற்றவாளி இல்லை என்று நிரூபிக்க வேண்டிய பொறுப்பை (Onus of Proof) அவர் மீது சுமத்த வேண்டும்.

- இரண்டாவது பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டவரின் உடலில் 24 மணி நேரத்திற்குள் விந்து பரிசோதனை (Semon Test) மேற்கொள்ளப்படுகிறது. பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட பெண்ணின் உடல்மீதோ அல்லது அவரின் உடைகள் மீதோ தெரித்துள்ள விந்து அல்லது இரத்தக்காயங்கள் அல்லது அந்தரங்க உறுப்பில் காயம் போன்றவை உள்ளனவா என்பதை அறிய இப்பரிசோதனை நடத்தப்பட்டு வருகிறது. இது அபத்தமானதும் முட்டாள் தனமானதாகும். ஏனெனில், பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு அதிர்ச்சியிலுள்ள பாதிக்கப்பட்ட பெண் 24 மணி நேரமும் அவர் எப்படி பாதிக்கப்படுகிறாரோ, அதே நிலையில் குளிக்காமலும் உடைகளைக் கூட மாற்றாமலும் இருந்து போலீசாருக்கு புகார் அளிக்க வேண்டும். அப்படி அவர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


24 மணி நேரத்திற்குள் போலீசாருக்குப் புகார் அளிக்கவில்லையெனில், இத்தடயங்கள் அழிந்து விடும். குற்றவாளிகள் தப்பிக்கவும் வாய்ப்புண்டு. இது மிகவும் கொடுமையான நிபந்தனை ஆகும். எனவே, இத்தகைய முறைகள் மாற்றப்பட்டு பாதிக்கப்பட்டவர் எத்தனைநாள் கழித்துப் புகார் செய்தாலும் அப்புகாரின் மேல் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இதிலும் குற்றம் சாட்டப்பட்டவர் மீதே நிரூபிக்கும் பொறுப்பைச் சுமத்த வேண்டும்.

- இச்சட்டத்தில் இதைவிட அபத்தமான பிரிவாக பாலியல் பலாத்காரம் குறித்த வரையறை (Definition) உள்ளது. இந்த வரையறை ஆணுறுப்பு, பெண்ணுறுப்பில் நுழைவதை (Penetration) மட்டுமே பலாத்காரமாக அங்கீகரிக்கிறது. மற்றபடி பெண்ணின் உடலில் ஆண் செலுத்தும் தொடுதல் என்ற பெயரில் துவங்கி அனைத்து வகைகளிலும் நடத்தும் கீழ்த்தரமான, வக்கிரமான இம்சைகள் இந்த வரையறைக்குள் அடங்காது. ஆனால், இவை மானபங்கப்படுத்துதல் (Molestation) என்று சட்டத்தில் கூறப்படுகிறது. அது மட்டுமின்றி, மானபங்கப்படுத்துதல் என்பது லேசான குற்றமாகக் கருதப்பட்டு 3 ஆண்டுகள் வரைதான் தண்டனை அளிக்கப்படுகிறது. அதே சமயம் பேருந்தில் ஒரு பெண் செல்லும் போது பின் இருக்கையிலிருந்து ஆண் ஒருவன் வக்கிரமாகத் தீண்டினால்கூட அது மானபங்கம் ஆகாது என்ற ரீதியில் நீதிமன்ற தீர்ப்புகளும் அளிக்கப்பட்டுள்ளன. (குஜராத் அரசு எதிர் ஜெயந்தி இராணி பண்டா 1984, கிரிமினல் சட்ட இதழ் 1535)

இந்த ஆணாதிக்கச் சமூகத்தில் பெண்ணின் உடல் மீது ஆண் கொண்டிருக்கும் அனைத்து வகையிலான கட்டுப்பாட்டையே இச்சட்டப்பிரிவு பிரதிபலிக்கிறது. எனவே, இச்சட்டப்பிரிவு முற்றிலுமாக மாற்றப்பட்டு தேசிய மகளிர் ஆணையத்தின் பரிந்துரைகள் சட்டமாக்கப்பட வேண்டும்.

### தேசிய மகளிர் ஆணையத்தின் பரிந்துரைகள்

இந்தியத் தண்டனைச் சட்டத்தின் பிரிவு 375இல் உள்ள மேற்கண்ட குறைபாடுகளை களையும் வண்ணமாக, தேசிய மகளிர் ஆணையம் 1993ம் ஆண்டில் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறை மற்றும் குழந்தைகள் சட்டமுன் வடிவைக் கொண்டு வந்தது. அம்மசோதாவில் கூறப்பட்டுள்ளவை:

- வன்முறைப் புணர்ச்சி அல்லது பாலியல் பலாத்காரம் பற்றிய சட்டப்பிரிவின் வரையறையில் வெறுமனே பெண்ணுறுப்பில் ஆணுறுப்பை நுழைப்பது (Penetration) என்பது மட்டுமின்றி எந்தவித பொருட்களையோ வைத்து மேற்படி வக்கிரத்தை செய்தாலும், பெண்ணை தகாத முறையில் தீண்டி – னாலும், அதற்கான சைகை காண்பித்தாலும் அவை மேற்படி தன்மையுடைய குற்றங்களாக சேர்க்கப்பட வேண்டும்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


- பதவியில் அல்லது அதிகாரத்தில் இருப்பவர்கள் பெண்கள் மீது தொடுக்கும் பாலியல் வன்முறைகள் கொடுமையான குற்றங்களாகப் பாவிக்கப்பட்டு இந்தியத் தண்டனைச் சட்டத்தில் புதிய பிரிவு 375 (அ) என்று உருவாக்கப்பட்டு அதில் சேர்க்கப்பட வேண்டும். மேலும், இதில் சிறார்களின் மீது தொடுக்கப்படும் பாலியல் வன்முறைகளும், உடல் ஊனமுற்றவர்கள் மற்றும் மனரீதியாக ஊனமுற்றவர்கள் மீது தொடுக்கப்படும் பாலியல் வன்முறைகளும் சேர்க்கப்பட வேண்டும். பாலியல் வன்முறையில் உடல் ரீதியாகக் கடுமையான காயத்தை ஏற்படுத்துதல், தொடர்ந்து பாலியல் வன்முறையில் ஈடுபடுதல் ஆகியவை ஒரு குடும்பத்தில் பொருளாதார ரீதியாக, தாக்குதல் தொடுப்பவர்களை சார்ந்திருக்கும் பலவீனமான நபர்களை (உதாரணமாக, பெண் குழந்தைகளையும் மற்றும் வயதுக்கு வராத பெண்களையும் குடும்பத்தில் அதிகாரத்தில் உள்ள பெரியவர்கள் தகாத முறையில் பாலியல் வன்முறைக்குள்ளாக்குவது (Child Abuse and Incest) பாதிக்கப்படுபவர்களாக இப்புதிய பிரிவில் சேர்க்க வேண்டும்.
- பாலியல் பலாத்காரத்தின் போது இசைவு தெரிவித்திருந்தாலும், தெரிவிக்கா விட்டாலும் பாதிக்கப்பட்டவர் 16 வயதிற்குட்பட்டவராக இருந்தால் அக்குற்றத்தை பாலியல் பலாத்காரமாகவே பிரிவு 375 கருதுகிறது. இதில் பெண்ணின் வயதானது 18 வயதாக மாற்றப்பட வேண்டும்.
- 12 வயதிற்குட்பட்ட சிறுமிகள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டாலோ அல்லது தொடர்ச்சியான பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டாலோ அக்குற்றத்திற் – கான தண்டனையாக ஆயுள் தண்டனை அளிக்க வேண்டும்.
- பாலியல் பலாத்கார வழக்குகளின் விசாரணைகளில் மிக முக்கிய பரிந்துரைகளாகக் கீழ்க்கண்ட மாற்றங்கள் செய்யப்பட வேண்டும்.

(அ) பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட பெண்ணின் வாக்குமூலம் அல்லது சாட்சியமானது அவர் கடந்தகால பாலியல் நடத்தையைக் காரணம்காட்டி மறுக்கப்படுகிறது. இந்திய சாட்சியச் சட்டத்தின் பிரிவு 155(அ) ஆனது இதற்காகப் பயன்படுத்தப்படுகிறது. இப்பிரிவே நீக்கப்பட வேண்டும்.

(ஆ) பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு கொலை செய்யப்பட்ட பெண்ணின் உறவினர்கள் மரணம் அல்லது பலாத்காரம் நடந்த இடத்தை நேரில் சென்று பார்க்க அனுமதிக்க வேண்டும். எந்த ஒரு அதிகாரியும் என்ன காரணத்திற்காகவும் மேற்படி கோரிக்கையை நிராகரிக்கக் கூடாது.

(இ) ஒரு பெண் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டார் எனும் போது அவரை பெண் மருத்துவரே பரிசோதிக்க வேண்டும். அப்பெண் மருத்துவர் யார் எனத் தீர்மானிப்பதில் அப்பகுதிப் பெண்கள் அமைப்பு மற்றும் மனித உரிமை அமைப்புகளின் ஆலோசனையைப் பெற வேண்டும்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



- பாதிக்கப்பட்டவர் 12 வயதிற்குட்பட்டவராக இருந்தால் அவருக்கு நடத்தப்படும் மருத்துவப் பரிசோதனையை அவர் வீட்டிலோ அல்லது அவர் விரும்பும் இடத்திலோ உறவினர் அல்லது நண்பர் முன்னிலையில் பெண் அதிகாரி அல்லது சமூகப் பணியாளர் ஒருவரால் பதிவு செய்ய வேண்டும். இம்முறையை மீறுபவர்களுக்கு ஒரு ஆண்டு காலமாவது சிறைத்தண்டனை விதிக்க வேண்டும். இதே போன்று பாலியல் வன்முறையை மருத்துவரீதியாக பதிவு செய்யாத பதிவு பெற்ற மருத்துவருக்கும் தண்டனையை அளிக்க வேண்டும்.

- பதிவு பெற்ற மருத்துவர் ஒருவரால் உடனடியாக பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்டவர் பரிசோதனை செய்யப்பட வேண்டும். அவருடைய அறிக்கையில் அவர் வந்தடைந்த முடிவுகளுக்கு தெளிவான காரணமும் பாதிக்கப்பட்டவரின் முகவரியும் அவரை கொண்டு வந்தவரின் முகவரியும் எழுதப்பட வேண்டும். இப்பரிசோதனையை ரகசியமாக (in Camera) மேற்கொள்ள வேண்டும்.

### பெண்களிடம் குறும்பு செய்வதை தடை செய்யும் சட்டம்

1998ம் ஆண்டு தமிழ்நாடு பெண்களிடம் குறும்பு செய்வதைத் (Eve-Teasing) தடை செய்தல் அவசரச் சட்டமானது ஆளுநரால் பிறப்பிக்கப்பட்டு, அது 1998ம் ஆண்டு ஜூலை திங்கள் 30ம் தேதியிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின்படி எந்த இடத்திலும் பெண்களிடம் குறும்பு செய்வது தடை செய்யப்படுகிறது.

கல்வி நிலையம், திருக்கோயில் அல்லது பிற வழிப்பாட்டிடம், பேருந்து நிலையம், சாலை, இரயில் நிலையம், திரையரங்கு பூங்கா, கடற்கரை, திருவிழா நடைபெறும் இடம், பொதுப்பணி ஊர்தி அல்லது பிற இடம் எதிலும் அல்லது அதன் வட்டாரத்திற்குள் பெண்களிடம் குறும்பு செய்கிற அல்லது அச்செயலில் பங்கு பெறுகிற அல்லது அச்செயலுக்கு உடந்தையாய் இருக்கிற எவரொருவரும் ஓராண்டுக்கால அளவு வரையிலான சிறைத்தண்டனையுடனோ அல்லது, 'பத்தாயிரம் ரூபாய் வரையிலான பணத்தண்டனையுடனோ' அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுவர்.

பெண்களிடம் குறும்பு செய்வதில் ஊர்தி எதுவும் பயன்படுத்தப்பட்டால், அத்தகைய ஊர்தியின் ஓட்டுநர், பெண்களிடம் குறும்பு செய்தல் எனும் அக்குற்றச்செயலுக்கு உடந்தையாயிருந்ததாகக் கொள்ளப்பட்டு அவரையும் மேற்சொன்னவாறு தண்டிக்கப்படுதல் வேண்டும். மேலும் அந்த ஊர்தியானது,


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமக்குத் தெரியாமல், பெண்களிடம் குறும்பு செய்வதில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று அத்தகைய ஊர்தியின் உரிமையாளர், மெய்ப்பித்தாலன்றி, அவ்வூர்தியானது பறிமுதல் செய்யப்படும்.

இச்சட்டத்திற்கு முன்னால் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 509ன் படி (பொது இடங்களில் பெண்களை கேலி செய்து, அவமரியாதை செய்தல்) போன்ற குற்றங்களின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்தது. இந்த பிரிவின்படி குற்றவாளிகளுக்கு அதிகபட்சமாக ஒரு ஆண்டு கடுங்காவல் சிறை அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்ந்த தண்டனை விதிக்க முடியும். இந்த சட்ட விதியின்படி அபராதம் எவ்வளவு என்பது நிர்ணயிக்கப்படவில்லை. குற்றத்தின் தன்மையை பொறுத்தும், விசாரிக்கும் நீதிமன்றத்தைப் பொறுத்தும் அபராதம் வேறுபடும். இதனால் அதிகபட்ச தண்டனை விதிக்கும் வாய்ப்பு இருந்தது.

ஆனால், அரசு கொண்டு வந்துள்ள புதிய சட்டத்தின்படி அதிகபட்ச தண்டனையாக ஒரு ஆண்டு கடுங்காவல் சிறை அல்லது 10 ஆயிரம் ரூபாய் அபராதம் அல்லது இரண்டும் சேர்த்துதான் விதிக்க முடியும். புதிய சட்டத்தில் அபராதம் என்பது 10 ஆயிரம் ரூபாய் என்று வரையறுக்கப்பட்டுள்ளது. ஆனால், பழைய சட்டத்தில் அபராதம் வரையறுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய தண்டனை சட்டத்தின் ஒவ்வொரு பிரிவுக்கும், அந்த பிரிவின் கீழ் வரும் குற்றங்களில் கைது செய்யலாமா? பிணையில் விடலாமா? என்பது தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி பழைய சட்டத்தில் குறும்பு செய்தல் குற்றம் பிணையில் விடக்கூடிய குற்றமாக வரையறுக்கப்பட்டுள்ளது. ஆனால், புதிய சட்டத்தின்படி குற்றவாளியை போலீசாரால் நெருங்கவே முடியாது. கைது செய்வதற்கு நீதிமன்றத்தின் அனுமதியை போலீசார் பெற வேண்டியுள்ளது. இதனால் போலீசார் அனைவரும் இந்திய தண்டனை சட்டத்தின் 509ம் பிரிவின் படிதான் (பழைய சட்டத்தின்படி தான்) ஈவ்–டீசிங் குற்றவாளிகளை கைது செய்து வழக்கு தொடர்கின்றனர்.

தமிழகத்தில் ஈவ்–டீசிங் தடைச்சட்டம் கொண்டு வரப்பட்டு இரண்டு ஆண்டுகள் ஆன நிலையில் இதன்படி வழக்கு தொடரப்பட்டவர்களின் எண்ணிக்கையை விரல் விட்டு எண்ணி விடலாம். ஒரு சில இடங்களில் இந்த பிரிவின்படி வழக்கு தொடர்ந்தாலும் அதை நீதிமன்றம் ஏற்றுக் கொள்வதில்லை என்றும் போலீசார் கூறுகின்றனர். பழைய சட்டத்தைவிட கடுமையான தண்டனை அளிப்பதாக புதிய சட்டம் இருக்கும் பட்சத்தில் நீதிமன்றத்தில் அனுமதி பெற்று குற்றவாளியை கைது செய்யலாம். ஆனால், இரண்டுக்கும் பெரிதாக எந்த வித்தியாசமும் இல்லை என்ற நிலையில், நீதிமன்றத்தில் சென்று அனுமதி பெறுவது அர்த்தமற்றதாகி விடுகிறது என்று போலீசார் கூறுகின்றனர்.

எனவே, ஈவ்–டீசிங் தடைச்சட்டம் மாற்றியமைக்கப்பட்டு தண்டனை கடுமையாக்கப் பட்டால் மட்டுமே இக்கொடுமைக்கு உள்ளாகி சரிகா ஷா, துர்கா,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



லட்சுமி பிரியா போன்ற மதிப்புள்ள மனித உயிர்கள் மலிவாக மடிந்து போவது முற்றுப் பெறும்.

**குடும்ப வன்முறைக்கு (Domestic Violence) எதிராக மேற்கொள்ளப்பட வேண்டிய சட்டத் திருத்தங்கள்:**

இதற்காக, தேசிய மகளிர் ஆணையம் பெண்கள் மீதான குடும்ப வன்முறை (தடுப்பு) சட்ட முன்வடிவு ஒன்றைக் கொண்டு வரவேண்டும் என்று கூறியுள்ளது. இச்சட்ட முன்வடிவுக்கேற்றபடி, இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 498 திருத்தப்பட்டு புதிய பிரிவாக 498–(ஆ) சேர்க்கப்படவேண்டும். இம்மசோதா பெண்கள் மீதான அனைத்துக் குடும்ப வன்முறைகளையும் உள்ளடக்கியதாக இருக்கவேண்டும். குடும்பங்களில் பெண்கள் மீது தொடுக்கப்படும் உடல்ரீதியான மற்றும் உளவியல்ரீதியான வன்முறைகளுக்கு எதிராக எந்தச் சட்டமும் தற்போது இல்லை. முக்கியமாகக் குடும்பத்தில் ஒரு பெண் தான் உணர்வுரீதியாக சார்ந்திருக்கும் ஒருவர் தொடுக்கும் வன்முறைகளை எதிர்கொள்வதற்கு எந்தச் சட்டமும் இல்லை.

- பொதுவாக கணவன் மனைவியை அடிப்பதும், அப்படி அடிப்பது கணவனின் உரிமை என்று இந்த ஆணாதிக்க சமூகத்தில் சர்வசாதாரணமாகவே எடுத்துக் கொள்ளப்படுகிறது. மேலும், அடிக்கும் கணவன் மீது புகார் கொடுக்க போலீஸ் நிலையம் செல்லும் மனைவியானவள் மோசமானவளாகவே கருதப்படுகிறாள். அதையும் பொருட்படுத்தாமல் போலீஸ் நிலையம் சென்று புகார் கொடுத்தால் அடிபடும் மனைவியிடம் கணவரிடம் சுமூகமாகப் போகும்படி போலீசாரால் அறிவுரையும் கூறப்படுகிறது. கணவன் அடித்து மனைவிக்கு கடுமையான காயம் ஏற்பட்டாலும் அக்குற்றம் இந்தியத் தண்டனைச் சட்டத்தின் பிரிவுகள் 323, 324க்குள் அடங்கினாலும் கணவன் மீது இத்தகைய வழக்குகள் தொடரப்படுவதில்லை. இப்படிப்பட்ட சூழலில் பெண்கள் மீதான குடும்ப வன்முறை (தடுப்புச்) சட்டம் தேவையே. இதில் முக்கியமாகக் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய விஷயம். இச்சட்டமுன் வடிவானது வரதட்சிணைக்காக பெண்கள் மீது நடத்தப்படும் குற்றங்களை விசாரிப்பதோடு சுருங்கிவிடக் கூடாது. வரதட்சிணைக் குற்றங்களுக்கு அப்பாற்பட்டு குடும்பத்தில் பெண்களுக்கு நிகழும் வன்முறைகளையே இச்சட்டமுன்வடிவு கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.
- ஊடகச் சாதனங்களில் பெண்கள் தரக்குறைவாகச் சித்தரிக்கப்படும் விதமே பாலியல் வன்முறைக்கு தூண்டுகோலாக உள்ளது. இதனைத் தடுக்கும் விதத்தில் பெண்களைத் தரக்குறைவாக சித்தரிக்கும் (தடுப்பு) சட்ட முன்வடிவு 1995 ஒன்றை மத்திய அரசு திருத்தங்களுடன் அமல்படுத்த உள்ளது. இச்சட்டத்தின் பிரிவு 6 ஆனது திருத்தப்பட்டு இக்குற்றத்தில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஈடுபடுபவர்களுக்கு அதிகபட்ச தண்டனை அளிப்பதாக மாற்றப்பட வேண்டும். இச்சட்டத்தில் இக்குற்றத்தில் ஈடுபடும் தனியார் தொலைக்காட்சிகளும் சேர்க்கப்பட வேண்டும்.

***சிடாவும் இந்திய அரசின் நிலையும்***

- ஐ.நா.வின் பெண்களுக்கு எதிரான அனைத்து வடிவங்களிலுமான பாகுபாட்டு ஒழிப்பு உடன்பாட்டில் இந்திய அரசு 1993 ஜூலை மாதம் கையெழுத்திட்டது. (United Nations Convention on the Elimination of all forms of Discrimination Against Women-Cedaw) இதன்படி இந்த உடன்பாட்டிற்கு எதிரான நடவடிக்கைகளையும் சட்டங்களையும் பெண்களுக்கு எதிரான பாகுபாடான நடவடிக்கைகளை இந்தியா முடிவுக்கு கொண்டு வர வேண்டும். இந்த உடன்பாட்டில் பிரிவு 5 (அ) 16 (1) மற்றும் 16 (2)களை இந்தியா ஏற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்துவதாக பிரகடனப்படுத்தியது. சிடாவை அமல்படுத்திய விதம் குறித்து கடந்த ஜனவரி மாதம் இந்தியா தனது அறிக்கையை ஐ.நா.வில் சமர்ப்பித்தது. இதற்கு மாற்றான அறிக்கையையும் அரசு சாரா நிறுவனங்கள் சமர்ப்பித்தன. அரசு சாரா நிறுவனங்களின் சிடா மாற்று அறிக்கை இந்திய அரசு இந்த உடன்பாட்டில் கையெழுத்திட்டு 7 ஆண்டுகளுக்கு மேலாகியும் நாட்டில் 7 நிமிடங்களுக்கு ஒரு முறை பெண்களுக்கு எதிரான குற்றமும் 26 நிமிடங்களுக்கொருமுறை ஒரு பெண் மானபங்கப்படுத்துதலும் 56 நிமிடங்களுக்கு ஒரு முறை ஒரு பாலியல் பலாத்காரமும் 102 நிமிடங்களுக்கொருமுறை ஒரு வரதட்சிணை மரணமும் நிகழ்ந்து கொண்டேயுள்ளன என்பதை அம்பலப்படுத்துகிறது.
- 1998ம் ஆண்டில் அரசு சாரா அமைப்பு ஒன்றின் ஆய்வுப்படி பெண்களில் 76 விழுக்காட்டினர், ஏதாவது ஒரு விதத்தில், குடும்பத்தில் பாலியல் ரீதியான தகாத உறவுக்குள்ளாகின்றனர். இதில் 40 விழுக்காட்டினர் கூட்டுக் குடும்பத்தில் ஆண் உறுப்பினர்களால் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப் – படுகின்றனர். (ஆதாரம்: அரசு சாரா அமைப்பின் மாற்று சிடா அறிக்கை).

பெண்களுக்கு எதிரான பாகுபாடுகள், வன்முறைகள் அதிகரித்து வருவதே அரசு கையெழுத்திட்டதை நடைமுறைப்படுத்தவில்லை என்பதைக் காட்டுகிறது. இந்தியச் சமூகத்தில் வர்க்கம் சாதி மற்றும் ஆணாதிக்க சமூக உறவுகளில் பாலியல் சார்ந்த வன்முறை இன்னும் தொடர்ந்து உற்பத்தியாகிக் கொண்டேயிருக்கிறது என்று கூறுகிறது மாற்று சிடா அறிக்கை.

இந்த உறவுகளை மாற்றி பாலியல் சமத்துவத்திற்கான முயற்சிகளை மேற்கொள்ளத் துவங்காமல் அவ்வளவு ஏன், இந்த ஆணாதிக்க உறவுகளில் ஒரு சிறிய சலனத்தைக் கூட ஏற்படுத்தாமல் பெண்களுக்கெதிரான பாகுபாடுகள்,


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வன்முறைகள் முற்றுப் பெறும் என்று நம்புவது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதே. இந்திய அரசு இதற்கான எந்தவித முயற்சியிலும் ஈடுபடவில்லை என்பதே மாற்று சிடா அறிக்கை விமர்சனத்தின் சாரம்சமாகும்.

மாற்று சிடா அறிக்கையின்படி இந்திய அரசு இன்னும் குடும்ப வன்முறையை மனித உரிமை மீறலாக அங்கீகரிக்கவில்லை. டெல்லியிலுள்ள மனநல மருத்துவமனை நடத்திய "பெண்களும், மனநலமும்" என்ற மாநாட்டில் வெளியிட்ட அறிக்கையின்படி நாட்டின் அனைத்து மனநோய் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள 60 விழுக்காடு பெண்கள் மனநோய் உள்ளவர்கள் அல்ல அவர்கள் கணவன்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரால் பாதிக்கப்பட்ட – வர்களே என்று கூறுகிறது. ஆனால், பெண்கள் மீதான வன்முறைகளுக்கு பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் தண்டனை பெற்றவர்கள் மிகவும் குறைவு என்பதையும் ஆய்வுகளின் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. 1996ல் பெண்கள் மீதான வன்முறைகளில் 195436 நபர்கள் மீது 3,38,387 வழக்குகள் பதிவு செய்ப்பட்டு 32,362 பேருக்கு மட்டுமே தண்டனை கிடைத்துள்ளது. (ஆதாரம்– அரசு சாரா அமைப்பின் மாற்று சிடா அறிக்கை) எனவே, இந்திய அரசு கையெழுத்திட்டு ஏற்றுக்கொண்ட சிடா அறிக்கையை உணர்வுபூர்வமாக நடைமுறைப்படுத்த உடனடி முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

இது தவிர, பெண்கள் மீதான வன்முறைகளைத் தடுக்க தேசிய மகளிர் ஆணையத்தின் முக்கியமான பரிந்துரைகள் இங்கு தரப்படுகின்றன.

(1) மாவட்டவாரியாக, பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் கண்காணிக்க அமைக்கப்பட்டுள்ள அமைப்புகளுக்கு மேலும் வலுவூட்டும் வகையில் அதிகாரங்களும் உரிய அந்தஸ்தும் நிதி மற்றும் ஊழியர்களும் அளிக்கப்பட வேண்டும். இத்தகைய மாவட்ட அமைப்புகளில்லாத மாநிலங்களில் உடனடியாக இத்தகைய அமைப்புகளை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(2) பெண்கள் மீதான வன்முறைகளைக் கையிலெடுத்துப் போராடும் அரசு சாரா நிறுவனங்களுக்கு நிதி அளித்து உதவிட மத்திய அரசு சிறப்புத் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்த வேண்டும்.

(3) பெருநகரங்களில் மட்டுமே மகளிர் காவல்நிலையங்கள் உள்ளன. இந்நிலை மாற்றப்பட்டு, மக்கள் தொகை 1 லட்சம் கொண்டிருந்தாலே அங்கு மகளிர் காவல்நிலையங்கள் போதுமான அதிகாரங்களுடனும் நிதி மற்றும் ஊழியர்களுடனும் அமைக்கப்பட வேண்டும்.

(4) போலீசாருக்கு மட்டுமல்ல, அரசு வழக்கறிஞர்களுக்கும் நீதிமன்ற நடுவர்களுக்கும், நீதிபதிகளுக்கும் கைரேகை நிபுணர்களுக்கும் மற்றும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


சட்டத்துறை மருத்துவத்துறையோருக்கும் பாலியல் கண்ணோட்டப் பயிற்சிகளை அளித்தல் வேண்டும்.

(5) உரிய முதன்மை முக்கியத்துவம் அளித்து சிறப்பு அதிகாரங்களைக் கொண்ட அலுவலகத்தோடு பெண்கள் உரிமைகளுக்கான ஆணையர் (Women's Rights Commissioner ) ஒருவர் நியமிக்கப்பட வேண்டும்.

(6) பெண்கள் மற்றும் குழந்தைகள் நலவாழ்வுத் துறை உள்ள ஒவ்வொரு மாநிலத்திலும் அரசு தலைமைச் செயலரின் மேற்பார்வையில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் மற்றும் வன்கொடுமைகளைக் கண்காணிக்க தனிப்பிரிவு ஒன்று துவக்கப்பட வேண்டும்.

(7) ஊடகச் சாதனங்களே பாலியல் வன்முறைகளுக்கு முக்கிய காரணமாக இருப்பதால் வன்முறை மற்றும் ஆபாசத்தை தடுக்கும் வகையில் தேசிய ஊடகக் கொள்கை ஒன்றை உருவாக்க வேண்டும்.

(8) இதற்காக, ஆபாசமாகவும் பெண்கள் மீது வன்முறையைத் தூண்டும் நிகழ்ச்சிகளை நடத்துவோர் மற்றும் திரைப்படங்களைக் காட்டுவோர் மீது நடவடிக்கை எடுப்பதற்கான முன்முயற்சி கொண்டவர்கள் கொண்ட தேசிய குடிமக்கள் பேரவை ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

(9) பெண்கள் மீதான வன்முறைகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் பங்கேற்கும் பெண்கள் தணிக்கை வாரியங்களில் உறுப்பினர்களாக்கப்பட வேண்டும்.

(10) பஞ்சாயத்து மற்றும் கோட்டமளவில் (Block Level) பெண்கள் மீதான வன்முறைகளை போலீஸ் மற்றும் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்து வழக்கு பதிவு செய்யவும் பாதிக்கப்பட்டவர்கள் மறுவாழ்வு பெறுவதற்கும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை செய்ய அதிகார – மளிக்கப்பட்ட சமூக செயல்பாட்டாளர் குழுக்கள் (Social Action Groups) உருவாக்கப்பட வேண்டும்.

(11) வரதட்சிணை கொடுக்காமலோ, வாங்காமலோ திருமணம் புரியும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் தகுந்த ஊக்கத் தொகைகள், வசதிகள் மற்றும் பொறுப்புகள் தந்து அவர்களுக்குச் சமூக அங்கீகாரம் அளிக்க வேண்டும்.

(12) பள்ளிகள் மற்றும் கல்லூரிகளின் பாடத்திட்டங்களில் பாலியல் கண்ணோட்டமளிக்கும் முக்கிய பாடங்களுடன் பெண்ணுக்கு எதிரான குற்றங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சட்டங்களும் மற்றும் அரசியல் சாசனப் பிரிவுகளும் சேர்க்கப்பட வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



(13) ஒரு திருமணமான பெண் மரணமடைந்தால் அவளது மரணட இயற்கையானதுதான் என்பதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு அவளது கணவன் மற்றும் அவரது குடும்பத்தாரையே சாரும் என்ற வகையில் அனைத்துச் சட்டங்களும் மாற்றப்பட வேண்டும்.

(14) இறுதியாகப் பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு பெரிது தூண்டுகோலாக இருப்பது மதுவே. அரசின் மதுவிலக்கு கொள்கை அடிக்கடி மாற்றப்படாமல் இருக்கும் போதே இப்பிரச்சினைக்கு ஒரு முடிவ ஏற்படும். இதன் முதற்படியாக, ஒரே நேரத்தில் சுங்கவரித்துறையும் மதுவிலக்குத் துறையும் அமைக்கும் அரசின் இரட்டைக் கொள்கை முறை (Dual Policy) உடனடியாகக் கைவிடப்பட வேண்டும். பூரண மதுவிலக்கை நோக்கி பிரச்சாரம் செய்ய ஊடகச் சாதனங்கள் முடுக்கி விடப்பட வேண்டும். கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களை எதிர்க்கவும் கண்காணிக்க - வும் பெண்கள் குழுக்கள் மாவட்ட வாரியாகவும், பகுதி வாரியாகவும் அமைக்கப்பட வேண்டும்.

மேற்படி பரிந்துரைகள் நிறைவேற்றப்படும்போதே பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு முடிவு ஏற்படும்.

◆◆◆



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# VI. சாதீய வன்முறைகள்

சமூகத்தில் புரையோடிப் போன சாதியமும், சாதி வெறியும் பல்வேறு கிராமங்களையும், பல உயிர்களையும் அழித்து வருகின்றது. உயர் சாதியினரும், அரசும் தாழ்த்தப்பட்ட மக்கள் மேல் நிகழ்த்தும் கொடுமைகள் அன்றாடம் அதிகரித்து கொண்டேயிருக்கின்றன. உயர் சாதியினரும், சட்டரீதியாக செயல்பட வேண்டிய அரசும் சட்டத்திற்கு புறம்பாக தாழ்த்தப்பட்ட மக்கள் மீது நடத்துகின்ற வன்முறைகள் யாவும் மனித உரிமை மீறல்களே.

1998, 1999 ஆம் ஆண்டுகளிலும் 2000த்தின் துவக்கத்திலும் தாழ்த்தப் – பட்ட மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட வன்முறைக் கொடுமைகளை மனித உரிமை மீறலாகப் பாவித்து மக்கள் கண்காணிப்பகம்–தமிழ்நாடு மேற்கொண்ட கள ஆய்வின் அடிப்படையில் இவ்வறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தில் நிகழ்ந்த அனைத்து வன்முறைகளும் இதில் அடங்கவில்லை என்றாலும், மக்கள் கண்காணிப்பகத்தின் கவனத்திற்கு வந்து கள ஆய்வில் கண்டறிந்த உண்மைகள் இங்கு தொகுத்து வழங்கப் பெறுகிறது. சிலவற்றைச் செய்தியாக மட்டுமே தரப்பெறுகிறது. கடந்த இரு ஆண்டுகளில் நடைபெற்ற சாதிய மோதல்களில் பெரும்பாலும் பாதிக்கப்பட்டவர்கள் தலித் மக்களே என்பது குறிப்பிடத்தக்கது.

### சாதிய ஒடுக்குமுறை:-

### 1. செட்டிக்குளம்

செட்டிக்குளம் என்பது பெரம்பலூர் மாவட்டம் குன்னம் வட்டத்தில் உள்ள ஒரு கிராமம். இக்கிராமத்தில் ஏறத்தாழ 2500 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இவர்களில் 1000 ஊராளி கவுண்டர் குடும்பங்கள், 750 முதலியார் குடும்பங்கள், 200 தேவேந்திர வேளாளர் குடும்பங்கள், 100 பறையர் குடும்பங்கள், 100 மண் ஒட்டர் குடும்பங்கள், 20 நாயுடு குடும்புங்கள் ஆகும். இவர்களோடு மற்ற சில சாதிகளைச் சேர்ந்த குடும்பத்தினரும் வசித்து வருகின்றனர்.

1990 பிப்ரவரி 19ம் தேதியன்று செட்டிகுளம் கிராமத்தில் பள்ளர் சமுதாயத்தைச் சேர்ந்த மாரிக்கண்ணு (வயது 23) த/பெ. பெரியசாமி என்ற இளைஞரும், அதே கிராமத்தைச் சேர்ந்த திலகவதி (வயது 21) த/பெ. ராமநாயுடு என்ற பெண்ணும் சாதிக்கட்டுப்பாட்டை மீறி ஊருக்குத் தெரியாமல் திருணம் செய்து கொண்டனர்.

இதைக் கேள்விப்பட்ட உயர் சாதி இந்துக்கள் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் மேல் கோபம் கொண்டனர். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த பதினொன்றாம் வகுப்புப் படிக்கும் சேகர், மாரிக்கண்ணுவின் நண்பர்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஞானசேகர், முருகேசன், சேகர் ஆகியோரைப் பிடித்து இழுத்து சென்று தனித்தனி அறைகளில் ஒவ்வொருவரையும் அடைத்து வைத்து எங்கே மாரிக்கண்ணு? என கேட்டு கையையும், காலையும் கட்டி அங்குள்ள மின் விசிறியில் தலைகீழாகக் கட்டித் தொங்கவிட்டு கொடுமைப்படுத்தியுள்ளனர். "உங்களுக்கெல்லாம் நாயுடு பெண் கேட்குதா? உங்க உயிர் நிலையை அறுத்தாத்தான் சரிப்படுவீங்க" என்று மிரட்டி அடித்திருக்கிறார்கள். குடிக்க தண்ணீர் கேட்டதற்குச் சிறுநீர் கழித்து முகத்தில் ஊற்றி இருக்கிறார்கள். ஒரு நாள் முழுவதும் தொடர்ந்து அடித்த பின்னர் அடுத்த நாள் காலையில் அறையிலிருந்து வெளியே கொண்டு வந்து உயர் சாதியினர் வசிக்கும் வடக்குச் சாவடியில் உள்ள தூணில் கட்டி வைத்துக் கொலை வெறியோடு தாக்கியுள்ளனர்.

அதே நாளன்று காலை 500 பேர் கொண்ட உயர் சாதி கும்பல் பள்ளர் வசிக்கும் இருப்பிடங்களுக்குள் புகுந்து அங்கிருந்தவர்களை எல்லாம் அடித்து விரட்ட ஆரம்பித்துள்ளனர். "எங்க சாதிப் பெண்ணை உங்க சாதிக்காரப் பையன் இழுத்துக்கொண்டு ஓடிப்பிட்டான்" என்று சொல்லி பள்ளிக்கூட மாணவிகள் சுமதி, வைக்கமதி, மணிமேகலை, பாக்கியலட்சுமி ஆகிய நான்கு பெண்களை முடியைப் பிடித்து இழுத்து சென்று வடக்குச் சாவடி தூணில் கட்டிப் போட்டு, 'உங்களை இந்த இடத்துலேயே கெடுத்தாத்தான் உங்க சாதிக்காரனுக்குப் பயம் வரும்' என்று கூறிக் கொண்டே பெண்களின் பாவாடையைத் தூக்கிப் பிடிச்சி உயிர்நிலையில் எட்டி உதைத்துள்ளனர்.

ஜெயக்கொடி என்ற பெண்ணைச் சேலையை அவிழ்த்து ஜாக்கெட்டைக் கிழித்து அவமானப்படுத்தியுள்ளனர். இவ்வாறு அங்கிருந்த அனைத்துப் பெண்களையும் மானபங்கப்படுத்தியுள்ளனர்.

பாடலூர் காவல்நிலையத்தில் பாதிக்கப்பட்ட பெண்களான ஜெயக்கொடி, சுமதி, வைக்கமதி, பாக்கியலட்சுமி மற்றும் மணிமேகலை மற்றும் ஏற்கனவே தாக்கப்பட்ட 5 இளைஞர்களும் தாக்கியவர்கள் மீது புகார் கொடுத்துள்ளனர். போலீசார் புகார்களைப் பெற்று விட்டு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

பிப்ரவரி 28 ஆம் தேதி உயர்சாதியினர் ஊர்க்கூட்டம் போட்டு பள்ளர் இனமக்களை ஒதுக்கி வைப்பது என முடிவெடித்தனர். இதனடிப்படையில் பள்ளர் சாதியினருக்கு எந்தக் கடைக்காரரும் எந்தப் பொருளும் விற்கக் கூடாது, எந்த மருத்துவரும் அவர்களுக்குச் சிகிச்சை அளிக்கக்கூடாது. சலூனில் அவர்களுக்கு முடிவெட்டக் கூடாது. ஊர் தியேட்டரில் சினிமா பார்க்க அனுமதிக்கக்கூடாது. விவசாய வேலைக்கு அவர்கள் யாரையும் கூப்பிடக் கூடாது, பஞ்சாயத்துக் குடிநீரை அவர்களுக்குத் தரக் கூடாது. இதை மீறுபவர்களுக்கு அவர்களுக்கு இரண்டாயிரம் அபராதம் விதிக்கப்படும் என்று அறிவித்தனர்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இதன் பயனாக 'தியேட்டரில் வேலை செய்யும் பள்ளர் சமூகத்தினர் ஐந்து பேர் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர்.' பள்ளர் இனத்தைச் சார்ந்த வெளியூர் மருத்துவர் ஒருவர் கிளினிக் வைத்திருந்தார். அவரைக் காலி பண்ணிக் கொண்டு போகும்படி மேல் சாதியினர் கூறிவிட்டனர்.

அப்போது மத்திய சுகாதார இணையமைச்சராக இருந்த திரு. தலித் எழில்மலை அவர்கள் செட்டிக்குளம் கிராமத்திற்கு வந்து பாதிக்கப்பட்ட பள்ளர் சமுதாய மக்களைச் சந்தித்து ஆறுதல் கூறினார்.

600 தேவேந்திர குல குடும்பத்தினரை ஊரை விட்டு விலக்கி வைத்துள்ளனர். அந்தக் குலத்தைச் சேர்ந்த பையனையும்., பெண்ணையும் ஒன்றாகப் கட்டிப் போட்டு மானபங்கப்படுத்தி உள்ளனர். இந்தச் சம்பவம் குறித்தெல்லாம் போலீசுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் புகார் கொடுத்து எந்தப் பயனும் இல்லை. ஊரை விட்டு ஒதுக்கி வைத்ததால் மருந்து, அரிசி, மண்ணெண்ணை கூட வாங்க முடியாமல் அவதிப்படுகின்றனர். இந்த விஷயத்தில் தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என திரு. தலித் எழில்மலை வேதனைப்பட்டுள்ளார்.

உயர்சாதி இந்துக்கள் தங்கள் அதிகாரத்தைக் கொண்டு மாரிக்கண்ணு, திலகவதி தங்கியிருந்த இடத்தை கண்டு பிடித்து மாரிக்கண்ணுவிடம் இருந்து திலகவதியை பிரித்து திலகவதியை வேறு இடத்தில் திருமணம் செய்து கொடுத்து விட்டனர்.

***அரசு செய்யத் தவறியவை:***

- கொலை வெறித்தாக்குதல் நடத்திய சாதி இந்துக்கள் மீது வன்கொடுமை தடுப்புச் சட்டம் 3 (1) (11), 3 (1) (9) மற்றும் கொலை முயற்சி வழக்கு 307 போன்றவை பதிவு செய்து உடனே குற்றவாளிகளை கைது செய்யவில்லை.
- தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கவில்லை.
- மானபங்கம் செய்யப்பட்ட மாணவிகளுக்கு பாதுகாப்பு கொடுக்க நிவாரணம் கொடுக்க அரசு முன்வரவில்லை.
- அத்தியாவசிய பொருட்கள் மீது ஏற்படுத்தப்பட்டுள்ள தடையை உடனே நீக்க அரசு முன்வரவில்லை.

**2. கே.அய்யம்பாளையம்**

கோவை மாவட்டம் பல்லடம் வட்டத்தில் கே.அய்யம்பாளையம் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராம அருந்ததியர் மேல் அங்குள்ள கவுண்டர்கள் தொடர்ந்து சாதிய ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1998 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் தேதியன்று ஆறுக்குட்டிக் கவுண்டர் மகன்கள் ராமசாமி, மோகன்ராஜ் ஆகிய இருவரும் அருந்ததியர் குடியிருப்புப் பகுதிக்குள் காலை 8 மணி அளவில் நுழைந்து மக்காச்சோள மூட்டைகளை கரியாம்பாளையத்தில் இறக்கி வைக்க 8 கூலி ஆட்கள் வேண்டும் என்று அழைத்துள்ளனர். ஆறுக்குட்டிக் கவுண்டரும், அவருடைய மகன்களும் சரியான கூலி கொடுக்க மாட்டார்கள் என்பதால் அருந்ததியர்கள் இவ்வேலையை ஏற்றுக் கொள்ள மறுத்துள்ளனர். கோபம் அடைந்த கவுண்டர்கள் கந்தன் (40), த/பெ. சுப்பன், பட்டான் (35)த/பெ. சுப்பன், வெள்ளியங்கிரி (32) த/பெ. சுப்பன், ஆர். பட்டான் (37) த/பெ.ரங்கன், பழனிசாமி (30) த/பெ. நாச்சி, விஸ்வநாதன் (28) த/பெ. பழனிசாமி ஆகிய ஆறு நபர்களை வலுக்கட்டாயமாக வேலை செய்யும்படி கூறி டி.என்.47/1389 என்ற எண்ணுள்ள டெம்போவில் ஏற்றிச் சென்றுள்ளனர்.

செஞ்சேரி மலைக்கு அருகில் உள்ள கரியாம்பாளையத்திற்கு இவர்கள் 6 பேரையும் கொண்டு சென்று சாதி பெயரைச் சொல்லித் திட்டி மக்காச்சோள மூட்டைகளை ஏற்றக் கட்டாயப்படுத்தியுள்ளனர். 145 மூட்டைகளை ஏற்றி இறக்கியுள்ளனர். ஒரு மூட்டைக்கு ரூ.6 வீதம் இவர்களுக்கு வந்து சேர வேண்டிய மொத்தக் கூலி ரூ.870 ஆகும். ஆனால் ஆறுக்குட்டிக் கவுண்டரின் மகன்கள் கூலி எதுவும் கொடுக்காமல் திட்டி அன்று இரவு 10 மணிக்கு ரூ.850–ஐ கூலியாகக் கொடுத்துள்ளனர். மீதித் தொகை ரூ.20–ஐ கேட்ட போது கந்தன் என்பவரை அடித்து குரல் வளையைப் பிடித்து நெறித்துள்ளனர். 'ஏன் இப்படி அடிக்கிறீர்கள்?' என்று கேட்ட பட்டான் என்பவரைக் கன்னத்தில் அறைந்து சுவற்றில் தலையைப் பிடித்து இழுத்து பலமாகத் தாக்கியுள்ளனர். இதனால் அவருடைய காது சவ்வு கிழிந்து விட்டது. இங்கு நடந்த சம்பவத்தைப் பற்றி வெளியில் சொன்னால் கோழிகளைத் திருடியதாக உங்க 6 பேர் மீதும் பொய்ப்புகார் கொடுத்து விடுவேன் எனக் கூறி மிரட்டி அனுப்பியுள்ளனர். இவர்கள் ஊரில் வந்து அனைவரிடமும் சொல்லியுள்ளனர். இதை கேள்விப்பட்ட ஆறுகுட்டிக் கவுண்டர் போலீஸ்நிலையத்திற்குச் சென்று தனது டெம்போ ஓட்டுனரை கந்தனும் அவர் சகாக்களும் அடித்து விட்டனர் என பொய்ப்புகார் கொடுத்துள்ளனர். அப்புகாரின் அடிப்படையில் போலீசார் கந்தன் உள்ளிட்ட அடிபட்ட ஆறு நபர்களையும் அடுத்த நாள் காலை 8 மணிக்குக் கைது செய்து பல்லடம் காவல்நிலையம் கொண்டு சென்று அங்கு காவலில் மாலை 3 மணி வரை வைத்திருந்து விட்டு வெள்ளைத் தாளில் அவர்களின் கையெழுத்துகளைப் பெற்றுக் கொண்டு வெளியே அனுப்பியுள்ளனர்.

அதன்பின் தமிழ்நாடு அருந்ததியர் ஜனநாயக முன்னணி ஆறுக்குட்டி கவுண்டரையும் அவரது மகன்கள் ராமசாமி, மோகன்ராஜ்–ஐ எதிர்த்து போராட்டம் நடத்தியதைத் தொடர்ந்து பல்லடம் போலீஸ்நிலையத்தில் 1.4.98 அன்று குற்ற எண்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


223/98 கீழ் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

புகார் பதிவு செய்யப்பட்டதை அறிந்த ஊர்கவுண்டர்கள் அனைவரும் ஒன்றுகூடி அருந்ததியர் மேல் 'சமூகப் புறக்கணிப்பு' செய்ய வேண்டும் என முடிவு செய்தனர். அதன்படி அருந்ததியர் மக்களுக்குக் கடைகளில் எந்தப் பொருளும் விற்கக் கூடாது. அவர்களுக்கு எந்த வேலையும் கொடுக்கக் கூடாது. பால் விற்கக் கூடாது. நிலங்களில் ஆடு, மாடுகள் மேய்க்கக் கூடாது, குடிநீர் குழாய்களில் தண்ணீர் எடுக்கக் கூடாது போன்ற நிபந்தனைகளை விதித்தனர்.

கடந்த சில ஆண்டுகளாக இப்பகுதி தலித் மக்கள் மீது நடந்து வரும் மனித உரிமை மீறல்களுக்கு ஆறுக்குட்டிக் கவுண்டரும் அவரது மகன்களுமே முக்கியக் காரணமாக இருந்துள்ளனர். அவர்களுக்குக் பிற கவுண்டர் குடும்பங்களும் ஆதரவாக இருந்து வருகின்றனர். கடன் மூலம் அருந்ததியர்களை கொத்தடிமைப்படுத்தும் வழக்கம் இங்கு உள்ளது. ஒன்று மறியா அப்பாவி அருந்ததியர்களைத் தாக்கி விட்டு அவர்கள் மேல் பொய்ப்புகார் கொடுத்து போலீசாரை வைத்து கைது செய்கின்றனர். குற்றவாளிகளுக்கு எந்த தண்டனையும் இதுவரை வழங்கவில்லை. போலீசாரிடம் புகார் மனு கொடுத்ததற்–காகவே அருந்ததியர்கள் மீது சமூகப் புறக்கணிப்பு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

### 3. மாஞ்சோலை - திருநெல்வேலி

மாஞ்சோலை தேயிலைத் தோட்டம் திருநெல்வேலி மாவட்டம், அம்பா சமுத்திரம், மணிமுத்தாறு அணைக்கட்டிற்கு மேற்கில் உள்ள மலைத் தொடரில் அமைந்துள்ளது. இத்தேயிலைத் தோட்டம் மாஞ்சோலை, காக்காச்சி, நாலுமுக்கு, ஊத்து, குதிரைவெட்டி ஆகிய 5 பகுதிகளை உள்ளடக்கியது. இத்தேயிலைத் தோட்டத்தில் 6000 தொழிலாளர்கள் தங்கி வேலை பார்க்கின்றனர்.

பம்பாய் பர்மா டிரேடிங் கார்ப்பரேஷன் நிறுவனம் இம்மாஞ்சோலை தோட்டத்தை சிங்கம்பட்டி ஜமீனிடமிருந்து 99 ஆண்டுகள் குத்தகையாக 1908 ஆம் ஆண்டில் பெற்றது. இத்தேயிலைத் தோட்டம் 5 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதில் நிறுவனத்திற்கென மூன்று நிர்வாக அலுவலகங்களும், தேயிலைத் தூள் உற்பத்திச் செய்யும் மூன்று தொழிற்சாலைகளும் உள்ளன. ஒவ்வொரு பிரிவையும் நிர்வகிக்க ஒரு மேலாளர் உள்ளார். அவருடைய கட்டுப்பாட்டின் கீழ் கள அதிகாரிகள் உள்ளனர். இவர்கள் தொழிலாளர்களை நேரடியாக மேற்பார்வை இடுபவர்கள்.

இங்கு பணிபுரியும் 6000 தொழிலாளர்களில் எழுபத்தைந்து சதவீதத்திற்கும் மேலானோர் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். தோட்டத் தொழிலாளர்கள் நலச்சட்டம் 1951–ன் படி தொழிலாளர்கள் தங்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குடியிருப்பில் வீட்டுத் தோட்டம் போட்டுக் கொள்ளவும், கால்நடைகள் வளர்க்கவும் வகை செய்யப்பட்டிருந்தது. இதன் அடிப்படையில் மாஞ்சோலை தேயிலைத் தோட்ட தொழிலாளர்கள் தங்கள் வீடுகளில் வீட்டுத் தோட்டம் போட்டுக் கொள்ள இரண்டு முதல் 10 சென்டு வரை நிலங்கள் அளிக்கப்பட்டன. இதில் தொழிலாளர்கள் சொந்தமாகக் கால்நடைகளை வளர்த்து பராமரித்து வந்தனர்.

தற்போது நிர்வாகம் வீட்டுத்தோட்டம் போட அனுமதி மறுத்ததுடன் அவற்றை எஸ்டேட் நிலங்களாகக் கையகப்படுத்தி அதில் தேயிலையைப் பயிரிட்டுள்ளது. கால்நடைகள் தேயிலையை மேய்ந்து விடுகின்றன எனக் காரணம் கூறி கால்நடைகள் வளர்ப்பதையும் தடை செய்துள்ளது. தொழிலாளர்களின் வேலைப் பளுவை இருமடங்காக்கி உள்ளனர். முன்பு ஒருவர் ஒரு நாளுக்கு 150 கிலோ மருந்தடித்தால் இப்போது 300 கிலோ மருந்தடிக்க வேண்டும் எனக் கட்டாயப்படுத்துகின்றனர். அதை மறுத்தால் அவர்களை வேலையை விட்டு வெளியேற்றி விடுகின்றனர். உடல்நலக் குறைவு காரணமாகவோ அல்லது பிற காரணங்களுக்காகவோ தொழிலாளர் விடுப்பு எடுத்தால் அந்த நாட்களுக்கான ஊதியத்தைப் பிடித்து விடுகின்றனர். தேயிலை கொழுந்து கிள்ளும் வேலையைப் பெரும்பாலும் பெண்கள்தான் செய்து வருகின்றனர். மழைக்காலத்தில்கூட அவர்கள் நனைந்து கொண்டே நிர்ணயித்த அளவிற்கு கொழுந்து கிள்ள வேண்டும். இப்போது தாய்மார்கள் வேலையின் போது குழந்தைகளுக்கு பாலூட்டக் கூடாது என நிர்வாகம் கெடுபிடி செய்துள்ளது.

இப்பிரச்சனையைக் கையிலெடுத்துக்கொண்ட புதிய தமிழகம் கட்சி நிர்வாகத்தின் முன்பாக கீழ்க்கண்ட கோரிக்கைகளை முன் வைத்தது.

- குத்தகை காலத்தை ரத்து செய்து மாஞ்சோலை தோட்ட நிர்வாகத்தை அரசே எடுத்து நடத்த முன்வரவேண்டும்.
- தொழிலாளர்களுக்கு ரூ.150 கூலியாக வழங்கப்பட வேண்டும். கூடுதலான ஒவ்வொரு கிலோ தேயிலைக்கும் ரூ.5 கூடுதலாக உயர்த்தித் தர வேண்டும்.
- தொழிலாளர்களுக்கென விலைப்புள்ளியை நிர்ணயம் செய்யும் போது திருநெல்வேலியை மையப்படுத்த வேண்டும்.
- 240 நாள் வேலை பார்த்தவர்களை உறுதிப்படுத்த வேண்டும்.
- நிர்வாகம் தொழிலாளர் மயமாக்கப்பட வேண்டும்.
- தோட்டத் தொழிலாளர்கள் சட்டம் 1951 திருத்தப்பட வேண்டும்.
- தியாகராசன் ஒரு நபர் கமிட்டி கூறியபடி ஒரு ஏக்கருக்கு ஒன்றரை ஆள் என்பதை நடைமுறைப்படுத்த வேண்டும்.
- டேனியல், அன்புக்கரசி ஆகிய இருவரையும் காக்காச்சி எஸ்டேட்டிலிருந்து மீண்டும் மாஞ்சோலைக்கு மாற்ற வேண்டும்.

www.tamilarangam.net



- திருமதி. ரூபவதி என்ற தேயிலைத் தோட்டத் தொழிலாளரை சாதியின் பெயர் சொல்லி திட்டிய வாகித் நர்வி மற்றும் 28 பேர் மீது தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் 1909ன் கீழ் பிணை விடுப்பில் வெளியே வர இயலாத பிரிவுகளால் வழக்குப் பதிவு செய்து போலீஸ் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- தோட்டத் தொழிலாளர்களாக உள்ள தாழ்த்தப்பட்ட மக்களைக் கொத்தடிமை –களாக நடத்தப்படுவதை நிறுத்த வேண்டும்.
- மின்சாரப்படி, மருத்துவச்செலவு போன்றவற்றைத் தோட்டத் தொழிலாளர் –களுக்கு வழங்க வேண்டும்.
- கல்வி வசதிகள் ஏற்படுத்தித் தரவேண்டும்.
- பால்பாண்டியன் வேலை நீக்கத்தை திரும்பப் பெற வேண்டும்.

போன்ற கோரிக்கைகளை முன் வைத்து டாக்டர் கிருஷ்ணசாமி தலைமையில் போராட்டங்கள் நடத்தினர். அப்போது நடத்தப்பட்ட பேச்சு – வார்த்தைகள் எந்தவித பலனும் அளிக்கவில்லை.

பேச்சுவார்த்தைகள் எந்தவித திருப்தியும் அளிக்காததினால் 20.8.98லிருந்து வேலை நிறுத்தம் செய்ய ஆரம்பித்தனர். 2.9.98 அன்று லாரிகளில் வெளியூர் ஆட்களை வேலைக்கு கொண்டு வந்தது நிர்வாகம். இதை அறிந்த தொழிலாளர்கள் 3.9.98 அன்று வெளியூரில் இருந்து ஆட்களை ஏற்றி வந்த லாரிகளை பிடித்து வைத்துள்ளனர். அப்போது அங்கிருந்த காவல்துறை கண்காணிப்பாளர் திரு.கரண்சின்கா தொழிலாளர்களை அணுகி லாரியை விடுவிக்குமாறு கேட்டிருக்கிறார். இதில் எந்த உடன்பாடும் ஏற்படவில்லை. அதன்பின் தாசில்தார் பேச்சுவார்த்தை நடத்தி ஒரு சுமுகமான ஒப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளார்.

தாசில்தார் பேச்சுவார்த்தை நடத்தி ஏற்படுத்திய ஒப்பந்தத்தை விரும்பாத போலீசார் தொழிலாளர்கள் முன்னிலையில் ஒப்பந்தநகலை கிழித்தெறிந்து உள்ளனர். இதனால் தொழிலாளர்கள் ஆத்திரமடைந்துள்ளனர். இச்சூழ்நிலையைப் பயன்படுத்தி கண்ணீர்ப்புகை, தடியடி நடத்தியுள்ளனர். 12 வேன்களில் போலீசார் கொண்டு வரப்பட்டு மக்களைச் சூழந்துகொண்டு தடியடி நடத்தியுள்ளனர். இச்சம்பவத்தினால் 500க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர். 140 நபர்களை கைது செய்துள்ளனர். பார்வதி (20) க/பெ. முருகேசன் என்பவரது கழுத்தில் கிடந்த தங்க நகையை போலீசார் பறித்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் 4 நபர்கள் மட்டும் பாளையங்கோட்டை சிறையிலும், 136 பேர் திருச்சி சிறையிலும் அடைக்கப்பட்டனர்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



### வன்கொடுமைகள்

தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் போது இரகசியமாகத் தேயிலையை ஏற்றிச் செல்ல நிர்வாகம் முயன்றுள்ளது. இதுவே பிரச்சனை சூடாக முக்கியக் காரணமாய் அமைந்துள்ளது. நிர்வாகத்திற்கு உடந்தையாக போலீஸ் செயல்பட்டுள்ளது. ஏற்கெனவே தயார்நிலையில் போலீசார் 12 வேன்களில் வந்து நின்றிருப்பதை பார்க்கும் பொழுது போலீசார் திட்டமிட்டுச் சட்டம் ஒழுங்கைச் சீர்குலைத்து விட்டுப் பொய்ப்பிரச்சாரம் செய்துள்ளன. பெண்களை இழிவுபடுத்தியதும் அவர்களின் நகையை அபகரித்ததும் போலீசாரின் அராஜகத்தை காட்டுகிறது. 3.9.98 அன்று செய்த ஒப்பந்தத்தை போலீசார் கிழித்து எறிந்தது அவர்கள் கலவரத்தை தூண்ட ஆயத்தமாக இருந்துள்ளார்கள் என்பது தெரிகிறது.

### 4. தூத்துக்குடி

1970 ஆம் ஆண்டு சிறிமாவோ ஒப்பந்தப்படி இலங்கையிலிருந்து ஆறேகால் லட்சம் தமிழர்கள் இந்தியா வந்தனர். இவ்வாறு தாயகம் திரும்பிய தமிழர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் வகையில் இந்திய அரசு ஒரு திட்டத்தை அறிவித்தது. இத்திட்டத்தின்படி இத்தமிழர்களின் குடும்பத்தில் ஒருவருக்கு நிரந்தர வேலையைத் தரும் நிறுவனத்திற்கு அரசு 80 ஆயிரம் ரூபாய் வழங்கும் என அறிவித்தது. இத்தொகையைப் பெறும் வகையில் தூத்துக்குடி ஸ்பின்னிங் மில், 1977ல், மண்டபம் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் உள்ள முகாம்களிலிருந்து சுமார் 240 குடும்பங்களை வேலை தருவதாகக் கூறி தூத்துக்குடிக்கு அழைத்து வந்தனர். மில்லில் குடும்பத்தில் ஒருவருக்கு வேலை தருவதாகவும், அவர்கள் வேலையை விடும் சமயத்தில் அவர்களுடைய வாரிசுக்கு வேலை தருவதாகவும், இரண்டு வருடத்தில் முழுச்சம்பளம் தருவதாகவும், இவ்வாறு வேலையில் அமர்த்தப்படும் குடும்பங்களுக்கு வீடு கட்டித்தருவதோடு வேண்டிய வசதிகளைச் செய்து தருவதாகவும் நிர்வாகம் கூறி வேலையில் அமர்த்தியது. இதை அரசிடமும் எடுத்துக்கூறிய மில் நிர்வாகம் ஒன்றேகால் கோடி ரூபாய் பெற்றுக் கொண்டது.

மில்லுக்கு பின்புறம் உள்ள சுடுகாட்டுப் புறம்போக்கு நிலத்தில் 2 ஏக்கர் பரப்பில் இவர்களுக்கு வீடு கட்டித் தருவதாக அரசிடம் கேட்டு பட்டாவோடு நிலத்தையும் பெற்றுக் கொண்டது. வேலைக்கு அமர்த்தப்பட்ட 240 குடும்பங்களில் 100 குடும்பங்கள் வீடு கட்டிக் கொண்டு போய் விட்டார்கள். மீதமுள்ள 140 குடும்பங்கள் இச்சுடுகாட்டில் குடியிருப்பை தாங்களே அமைத்துக் கொண்டு ஏறத்தாழ 20 ஆண்டுகளாக வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் பெரும்பான்மை –யினர் தாழ்த்தப்பட்ட சமூகத்தை சார்ந்தவர்கள். இப்பகுதி சின்னமணி நகர் சிலோன்காலனி என அழைக்கப்பட்டது.

www.tamilarangam.net



சின்னமணி நகர் சிலோன் காலனி மக்களை எப்படியாவது துரத்தி விட்டு அந்த இடத்தை அபகரித்துக் கொள்ள வேண்டும் என்ற உள்நோக்கத்துடன் மில் நிர்வாகம் செயல்படத் தொடங்கியது. 1997 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பொங்கல் தினத்தன்று சிலோன் காலனியில் உள்ள குடிசைகளுக்கு தனது கைக்கூலிகள் மூலம் தீ வைத்தது. குற்றவாளிகள் தண்டனை பெற முடியாதபடி போலீசாருக்கு மில் நிர்வாகம் பணம் கொடுத்தது. மக்களைப் பாதுகாக்க வேண்டிய போலீசார் நிர்வாகத்திற்கு துணை போனதோடு அப்பாவி மக்கள் மீது பொய் வழக்குகள் போட்டு அவர்களைப் பிடித்துச் சென்று கொடுமைப்படுத்தினர்.

சின்னமணி நகர் சிலோன் காலனியில் 120 பேர் குடிசைகள் போட்டு ஆக்கிரமிப்பு செய்திருப்பதாக நிர்வாகம் தூத்துக்குடி மாவட்ட உதவி ஆட்சியர் சுதீப் ஜெயினுக்கு புகார் கொடுக்க இப்புகாரின் மீது நடவடிக்கை எடுப்பதாக காரணம் காட்டி 13.6.98 அன்று காலை 9.30 மணியளவில் மாவட்ட உதவி ஆட்சியர் சுதீப் ஜெயின், போலீஸ் இணை கண்காணிப்பாளர் மகேஸ் அகர்வால், தாசில்தார் நம்பிராஜன் ஆகியோர் போலீஸ் படையோடு ஆக்ரமிப்புகளை இடிக்கும் பணி செய்வோர் என்ற போர்வையில் குண்டர்களையும் அழைத்துக் கொண்டு சிலோன் காலனி வந்துள்ளனர்.

அவர்கள் வந்த சமயத்தில் ஆண்கள் பலரும் வேலைக்கு சென்று விட்டதினால் பெரும்பாலும் பெண்களும், குழந்தைகளுமே வீட்டில் இருந்துள்ளனர். அங்கு வந்த மாவட்ட உதவி ஆட்சியர் வீடுகளை இடிக்கப்போவதாகக் கூறியுள்ளார். அப்பகுதியின் தலைவராக இருக்கும் திரு. செல்வராஜ் அவரை அணுகி எந்த முன்னறிவிப்பும் இன்றி வீடுகளை இடிப்பது நியாயமல்ல என்று எடுத்துக் கூறியுள்ளார். அதைப் பொருட்படுத்தாது மாவட்ட உதவி ஆட்சியர் சுதீப் ஜெயின் வீடுகளை இடிக்கும்படி குண்டர்களிடம் கூற 27 வீடுகள் இடித்து தள்ளப்பட்டுள்ளன.

பிரகாசம் என்பவரின் வீட்டை இடித்த போது அவரின் மகள் விஜயவர்த்தினி (13) தடுக்க முயற்சி செய்திருக்கிறாள். அச்சிறுமியின் கால்கட்டை விரலை குண்டர்கள் கடப்பாரையால் குத்தி காயப்படுத்தியுள்ளனர்.

மகேந்திரன் என்பவரது வீட்டை இடித்தபோது அவரது மனைவி சந்திரமலர் (29) அதை தடுக்க முயற்சித்துள்ளார். ஆத்திரம் கொண்ட குண்டர்கள் அவரது சேலையைப் பிடித்து இழுத்து உருவி மானபங்கப்படுத்தியதோடு கர்ப்பிணிப் பெண்ணான அவரை கீழே தள்ளி விட்டுள்ளனர். இதனால் அவர் கழுத்திலும், வயிற்றிலும் காயம்பட்டுள்ளது.

திரு.வீரபத்திரன் (23) என்ற இளைஞர் அரசு அதிகாரிகள் மற்றும் மாவட்ட உதவி ஆட்சித் தலைவர் முன்னிலையிலேயே தங்கள் வீடுகள் இடிக்கப்படுவதைக் கண்டித்து மண்ணெண்ணையை ஊற்றிக் கொண்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தீக்குளிக்க முயன்றுள்ளார். இதைத் தொடர்ந்து வீடுகள் இடிக்கப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தைப் பற்றிய புகார் மனு ஒன்றை சிலோன் காலனியின் தலைவர் செல்வராஜ் தூத்துக்குடி தென்பாகம் போலீஸ்நிலையத்தில் பதிவு செய்ய சென்றபோது அப்புகாரை படித்துப் பார்த்த போலீஸ் நிலைய உதவி ஆய்வாளர் அப்புகாரை வாங்க மறுத்துவிட்டார்.

### 5. சாத்தூர் கலவரம்

இராமநாதபுரத்தில் புதிய தமிழகம் கட்சி 1998 ஆம் ஆண்டு செப்டம்பர் 11, 12 ஆம் தேதிகளில் மாநில மாநாடு நடத்த திட்டமிட்டிருந்தது. இம்மாநாட்டிற்கு உறுப்பினர்களைத் தயார் செய்யும் வகையில் விருதுநகர் மாவட்டத்தில் பல இடங்களில் டாக்டர்.கிருஷ்ணசாமி தலைமையில் மாநாட்டு விளக்கக் கூட்டமும், கொடியேற்று விழாவும் நடந்துள்ளன. 5.9.98 அன்று இரவு 9 மணிக்கு சாத்தூரில் உள்ள மதுரை பஸ்நிலையம் அருகில் கொடியேற்றி வைத்து விட்டு சாத்தூரில் இருந்து 10.கி.மீ. தூரத்தில் உள்ள ஒத்தையால் கிராமத்திற்கு இரவு சுமார் 9.40 மணி அளவில் தேவர் சமூக மக்கள் நிறைந்துள்ள ஓ.மேட்டுப்பட்டி வழியாக டாக்டர் கிருஷ்ணசாமியும் அவரது கட்சி வாகனங்களும் சென்றுள்ளன. டாக்டர் கிருஷ்ணசாமியின் பின்னால் இரு சக்கர வாகனங்களில் வந்த புதிய தமிழகம் கட்சியைச் சேர்ந்த இளைஞர்கள் ஓ.மேட்டுப்பட்டி அருகே செல்லும் போது "இந்தப்படை போதுமா? இன்னும் கொஞ்சம் வேண்டுமா? தேவர்களின் பொண்டாட்டி எங்களுக்கு வப்பாட்டி" என பெண்களைப் பார்த்து சத்தம் போட்டு சென்றதாகக் கூறப்படுகிறது.

இதை பார்த்த தேவர் இன மக்கள் சாலையில் மாட்டுவண்டி, மற்றும் மரங்களைப் போட்டு தடையை ஏற்படுத்தியுள்ளன. அப்போது அங்கு வந்த சாத்தூர் போலீஸ் நிலைய சார்பு ஆய்வாளர் ஆர். கருணாகரன் ஓ. மேட்டுப்பட்டி பொது மக்களிடம் பேச்சு வார்த்தை நடத்தி, தவறாகக் கோஷமிட்டு சென்றவர்களை டாக்டர். கிருஷ்ணசாமியிடம் கூறி திரும்பி வரும்போது உங்க – ளிடம் மன்னிப்பு கேட்கச் செய்கிறேன் எனக்கூறி தடைகளை அகற்றியுள்ளனர்.

அதே நேரத்தில் ஒத்தையால் கிராமத்தில் டாக்டர்.கிருஷ்ணசாமி பேசிக் கொண்டிருந்த பொழுது வாழவந்தான்புரத்தை சேர்ந்த குமார் (23) என்பவர் தலையில் ரத்தக் காயத்தோடு மேடைக்கு ஓடி வந்துள்ளார். ஓ.மேட்டுப்பட்டியைச் சேர்ந்தவர்கள் தன்னை அடித்து விட்டதாக டாக்டரிடம் கூறியுள்ளார். இதைப் பார்த்த ஒத்தையால் கிராம மக்கள் ஆத்திரம் அடைந்துள்ளனர்.

இரவு 10.15 மணியளவில் ஏழாயிரம் பண்ணையில் இருந்து சாத்தூருக்கு வந்த அரசு பேருந்து (என்.டி.எண்.559 எண்.0552) ஒத்தையால் பேருந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


நிறுத்தத்திற்கு வந்துள்ளது. ஆத்திரத்தில் இருந்த புதிய தமிழகத்தினர் அந்த பஸ்ஸை அடித்து சேதப்படுத்தியுள்ளனர்.

சாத்தூரிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில் அமீர்பாளையம் ராஜாத் தேவர் மகன் முத்து பாண்டி ஹோட்டலை இரவு 11 மணியளவில் புதிய தமிழகத்தினர் அடித்து நொறுக்கியுள்ளனர்.

சாத்தூர் இரயில்வே பீடர் ரோட்டில் உள்ள பாப்பாபேட்டையில் விருதுநகர் மாவட்ட முன்னாள் தா.மா.கா. செயலாளர் எல்.பி. லட்சுமணன் என்பவருக்குச் சொந்தமான எல்.பி.எல். தீப்பெட்டி குடோன் உள்ளது. அங்கு லாரிகளில் தீப்பெட்டி பண்டல்களை ஏற்றிக் கொண்டிருந்துள்ளனர். அங்கு வந்த கும்பல் குடோனை பூட்டி நெருப்பு வைத்துள்ளனர். இதில் நாமக்கலைச் சேர்ந்த கரிகாலன், லாரி டிரைவர் ராமசாமி ஆகியோர் தீயில் கருகி இறந்துள்ளனர்.

டாக்டர் கிருஷ்ணசாமி ஒ.மேட்டுப்பட்டி வழியாக திரும்பிவர ஒ.மேட்டுப்பட்டி மக்களுக்கும் அவருடன் வந்த புதிய தமிழக தொண்டர்களுக்கும் சண்டை மூண்டுள்ளது. சோடா பாட்டில், கற்கள் வீசப்பட்டுள்ளன. ஒ.மேட்டுப்பட்டி மக்கள் ஒத்தையாலைச் சேர்ந்த இரண்டு இளைஞர்களை பிடித்து கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

அன்று இரவு கடையம்பட்டி முக்கு ரோடு எஸ்.ஆர் நாயுடு கல்லூரி பஸ் நிறுத்தம் அருகில் உள்ள ராஜாத் தேவர் மகன் செல்லத்துறைக்கு சொந்தமான ஹோட்டல், கடையம்பட்டி கோனார் வகுப்பைச் சேர்ந்த எஸ்.எஸ். முத்து என்பவரின் மிட்டாய் கடை, இசக்கி முத்து என்பவரின் டீக்கடை நாராயணன் என்பவரின் ஹோட்டல் போன்றவை தீ வைக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து குருசாமித் தேவர் மகன் முத்துராஜ் (25) சாத்தூர் பஸ்நிலையத்தில் வெள்ளரி பிஞ்சு வாங்கிக் கொண்டிருக்கும் போது வெட்டிக் கொலை செய்யப்பட்டார். அதைக் கண்டு பயந்து ஓடிய சுப்பையா என்பவரை பேருந்து நிறுத்தத்திற்குள்ளேயே நிறுத்தி அவரது வலது பக்க தோள்பட்டை, கை, கன்னம் ஆகிய பகுதிகளில் வெட்டிக் கொலை செய்துள்ளனர்.

17.9.98 அன்று காலை ஏழே கால் மணியளவில் சமையல் கூலி வேலை செய்து விட்டு வெள்ளக்கரை சாலை வழியாக வந்து கொண்டிருந்த தாண்டவன் என்பவரை தாழ்த்தப்பட்டவர் என்று எண்ணிய தேவர் சமூகத்தினர் அவரது தலையின் பின்பக்கம் வெட்டி கொலை செய்துள்ளனர்.

**கண்டறிந்தவை**

- புதிய தமிழகம் கட்சியினர் பல இடங்களில் வன்முறையில் ஈடுபட்டு தீ வைத்தல், வாகனங்களை நொறுக்குதல், கொலை செய்தல் போன்ற வன்முறைகளில் ஈடுபட்டுள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



- போதிய அளவு போலீஸ் பாதுகாப்பு, டாக்டர் கிருஷ்ணசாமிக்குக் கொடுக்கப்படவில்லை.
- கலவரத்திற்குச் சம்பந்தம் இல்லாத அப்பாவி மக்கள் 4 பேர் இக்கலவரத்தில் பலியாகியுள்ளனர்.

## 6. இராமநாதபுரம்

1.10.98 அன்று ரங்கசத்திரம் என்ற இடத்தில் தேவர் சமுதாயத்தைச் சேர்ந்த சண்முகையா பாண்டியன் என்பவரின் மாநாட்டிற்கான சுவர் விளம்பரம் எழுதப்பட்டிருக்கிறது. 'அதில் முக்குலத்தோர் சிங்கங்களே வருக! வருக!' என்றும், 'கடவுளை யாரும் கண்டதில்லை, தேவரை யாரும் வென்றதில்லை' என்றும் வாசகங்கள் எழுதப்பட்டிருந்ததுடன் அவ்வாசகங்களுக்குக் கீழ் இரண்டு அரிவாள் படம் போட்டு அதிலிருந்து ரத்தம் சொட்டு சொட்டாக வடிவது போல் வரையப்பட்டிருக்கிறது. இவ்விளம்பரத்திற்குத் திருப்புல்லாணியில் ஆட்டோ ஓட்டும் பொக்கனரேந்தல் கிராமத்தைச் சேர்ந்த பள்ளர் சாதியைச் சேர்ந்த ஓட்டுனர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். பள்ளர் சமுதாயத்தினர் கொடுத்த புகாரை ஏற்று உதவி ஆய்வாளர் காளிமுத்து முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளனர். இதைக் கேள்விப்பட்ட முக்குலத்தோர் திருப்புல்லானி போலீஸ் நிலையத்திற்கு வெளியே கும்பலாகக் கூடி உதவி ஆய்வாளர் காளிமுத்துவிடம் தகராறு செய்துள்ளனர். அங்கிருந்து வெளியேறிய முக்குலத்தோர் பள்ளர்கள் மேல் கல் எறிந்துள்ளனர். இதில் கந்தவேல் (பள்ளர்) தலையில் காயம்பட்டு அவர் மருத்துவமனை கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

மறுநாள் 2.10.98 அன்று காலை பொக்கனரேந்தல் கிராமத்தில் திருப்புல்லாணியைச் சுற்றியிருந்த பள்ளர்கள் ஊர் கூட்டம் போட்டு பேசி இருக்கின்றனர். காலை 10 மணியளவில் திருப்புல்லானி போலீஸ்நிலையத்திற்குள் நுழைந்து 1.10.98 அன்று கொடுத்த புகார் மனு மீது போலீஸ் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? என்று கேட்டிருக்கின்றனர். சரியான பதில் இல்லாததினால் பள்ளர் சமூகத்தினர் போலீஸ்நிலையத்தின் மீது கற்களை எறிந்திருக்கின்றனர்.

போலீஸ் நிலையத்தைப் பள்ளர் சமூகத்தினர் சூழ்ந்தவுடன் இத்தகவல் போலீஸ் டி.ஐ.ஜிக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. காலை 11.30 திருப்புல்லானிக்கு டி.ஐ.ஜி. வந்து கூட்டத்தைக் கலைந்து செல்லும்படி கூறியுள்ளார். யாரும் கலையவில்லை, கோவில் ஸ்டாப் என்னும் இடத்தில் பள்ளர் சமூகத்தினர் அமர்ந்து சாலை மறியல் போராட்டம் நடத்தியிருக்கின்றனர். மீண்டும் அவர்களைக் கலைந்து செல்லும்படி டி.ஐ.ஜி. கூறியும் அவர்கள் ஏற்காமல் போராட்டத்தைத் தொடர்ந்துள்ளனர். சுமார் பகல் 12.50 மணியளவில் போலீசார் வானை நோக்கி 5


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ரவுண்டுகள் சுடவும், கூட்டம் கலைந்து சென்றுள்ளது. கூட்டம் கலைந்து செல்லும் போது அந்த வழியாக வந்த அரசு பேருந்துகளை அடித்து நொறுக்கியுள்ளனர்.

3.10.98 அன்று இரவு மின்சாரம் திருப்புல்லானியில் தடை செய்யப்பட்டிருக்கிறது. பள்ளர் இனமக்கள் ஆயுதங்கள், பெட்ரோல் குண்டுகளுடன் திருப்புல்லானி கண்மாய் வழியாக வந்து கொண்டிருக்கின்றனர் என முக்குலத்தோர் டி.ஐ.ஜியிடம் சொல்ல, இரவு 10 மணியளவில் டி.ஐ.ஜி. சோமசுந்தரம், வட்டாட்சியர், வருவாய்த்துறை ஆய்வாளர் சிறப்பு போலீஸ் படையினர் ஆகியோர் திருப்புல்லானிக்கு வந்து கூட்டத்தை கலைந்து செல்லும்படி கூறியுள்ளனர். கூட்டம் கலைந்து செல்லாமல் நிற்க 10.10 மணியளவில் கூட்டத்தின் மீது போலீசார் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர். இதில் முனியம்மாள், ஆறுமுகம் ஆகிய இருவர் மரணமடைந்துள்ளனர். கோவிந்தன் என்பவர் படுகாயம் அடைந்துள்ளார். பொக்கனரேந்தல், பள்ளபச்சேரியை சேர்ந்த கிராம மக்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

4.10.98 அன்று சண்முகையாப் பாண்டியன் அவர்களது மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டிற்காக இராமநாதபுரத்தில் ஊர்வலமும் நடத்தப்பட்டது. ஊர்வலத்தின் போது சம்மந்தமில்லாமல் முஸ்லீம்களின் கடைகள் அடித்து நொறுக்கப்பட்டன; சூறையாடப்பட்டன; தீயிலிடப்பட்டன.

இம்மாநாட்டில் கலந்து கொள்ள முக்குலத்தோர் மக்கள் வாகனங்களில் வந்திருக்கின்றனர். அவ்வாகனங்களை பார்த்திபனூரிலும், இராமநாதபுரத்தின் தென்பகுதியிலும் சோதனைச் சாவடிகள் வைத்து போலீசார் சோதனை செய்து ஆயுதங்களைக் கைப்பற்றியுள்ளனர்.

4.10.98 அன்று மதியம் 1.30 மணியளவில் கும்பல் ஒன்று கே.கே. நகருக்குள் நுழைந்துள்ளது. அங்கிருந்து தாழ்த்தப்பட்ட மக்களின் வீடுகளை அடித்து நொறுக்கித் தீயிட்டு கொளுத்தியுள்ளனர். இங்கு எம்.ஜெயராமன், கே.பாலசுப்பிரமணியன், என்.ஜெகதீசன், சாத்தையா, இராஜேந்திரன், ஜி.கண்ணம்மா, ஹபீயா பீவி ஆகியோரது வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

4.10.98 அன்று மாலை 3 மணியளவில் பெரிய கடை வீதிக்குள் புகுந்து 1,64,45,000 மதிப்புள்ள பொருட்களைச் (இராமநாதபுரம் வர்த்தகர் சங்கம் கொடுத்துள்ள சேதமதிப்பீட்டின்படி) சேதமாக்கியுள்ளனர். 66 கடைகள் சேதமாகி உள்ளன. மூன்று கடைகள் முழுவதுமாக எரிக்கப்பட்டிருக்கின்றன. இதன் மொத்த மதிப்பு ரூ.15,80,000 ஆகும். 4 கடைகள் முழுவதும் கொள்ளையடிக்கப் பட்டிருக்கின்றன. கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களின் மொத்த மதிப்பு 17,26,000 ஆகும். மம்மி டாடி என்ற கடையில் 17,08,655 ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டிருக்கின்றன. பிஸ்மி பிரெட் என்ற உணவுப் பொருள் விற்பனைக்கடை முழுவதுமாக எரிக்கப்பட்டிருக்கிறது. இதன் மதிப்பு ரூ.3,22,000


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


ஆகும். அலாவுதீன் லாரி பொருட்கள் முழுவதும் கொள்ளையடிக்கப்பட்டிருக்கின்றன. இதன் மதிப்பு ரூ.28,800 ஆகும். பி.கணேஷ்பாபு என்பவரின் கட்டிடம் இடித்து நொறுக்கப்பட்டுள்ளது, இதன் சேதமதிப்பீடு 25 லட்ச ரூபாய் ஆகும்.

இராமநாதபுரத்திலிருந்து நயினார் கோவில் செல்ல திரும்பும் சாலையில் உள்ள வடக்கு தெருவில் 4.10.98 அன்று மாலை 5 மணியளவில் போலீசார் கூட்டத்தை அடக்க துப்பாக்கி சூடு நடத்தியுள்ளனர். இதில் 4 பேர் இறந்துள்ளனர்.

**பரமக்குடி**

பரமக்குடி சரஸ்வதி நகரில் ஊர்வலத்திற்கு வந்த கும்பல் ஒன்று பள்ளர் வசிக்கும் பகுதிக்குள் நுழைந்துள்ளது. ஊர்வலத்தில் ஒலிபெருக்கி கட்டியிருந்த ஒரு வாகனத்தில் ஒருவர் நின்று கொண்டு, "தேவன் அடிக்கப் பிறந்தவன், பள்ளன் அடிவாங்கிவிட்டு ஓட பிறந்தவன்" எனக் கூறிக்கொண்டு முன்னே செல்ல ஊருக்குள் சென்ற கும்பல் ஆயுதங்களால் கண்ணில்பட்டவர்கள் அனைவரையும் அடித்துள்ளனர். வீடுகளை அடித்து நொறுக்கியுள்ளனர். வீட்டில் இருந்த பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். சகுந்தலா, இந்திராணி என்ற இரண்டு பெண்கள் ஒரு வீட்டுக்குள் ஒளிய முயற்சித்தபோது அதைப் பார்த்த வன்முறை கும்பல் ஓடுகளை பிரித்து வீட்டிற்குள் இறங்கி அவர்கள் அணிந்திருந்த தங்கச் செயினையும், தாலியையும் பிடுங்கிச் சென்றுள்ளனர். இக்கிராமத்தில் மட்டும் 28 பேர் காயம் அடைந்துள்ளனர்.

வசந்தபுரம், வணங்கானேந்தல் ஆகிய பகுதியிலும் வீடுகளை அடித்து நொறுக்கியுள்ளனர். வணங்கானேந்தலில் 5 லட்சம் ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளன.

சத்திரக்குடியில் 4.10.98 அன்று மாலை 6 மணிக்கு வாகனங்களில் வந்த கும்பல் ஊருக்குள் நுழைந்து பள்ளர்களின் 26 வீடுகளை தீ வைத்து எரித்துள்ளனர். 30 வீடுகளில் கொள்ளையடித்து சென்றுள்ளனர். இங்கு பள்ளர் சமுதாயத்தைச் சேர்ந்த பேச்சியம்மாள் (60) என்பவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டிருக்கிறார். சிந்தாய் (40) என்பவர் கழுத்தில் வெட்டுப்பட்டிருக்கிறார். இராஜதாம் என்பவரின் (12) காலில் ஆழமான அரிவாள் வெட்டு விழுந்துள்ளது

பரமக்குடியிலிருந்து இராமநாதபுரம் செல்லும் சாலையில் முகமதியாபுரம் உள்ளது. இங்கு 45 இஸ்லாமிய குடும்பங்கள் உள்ளன. 4.10.98 அன்று மாலை 6.30 மணியளவில் மாநாட்டிற்கு வந்த முக்குலத்தோர் முகமதியாபுரத்தை தாக்கி 45 வீடுகளில் கொள்ளையடித்துள்ளனர். 10 வீடுகள் எரிக்கப்பட்டிருக்கின்றன. 8 சைக்கிள்களைத் தூக்கிச் சென்றுள்ளனர். மொத்தம் 30 லட்சத்திற்கும் மேல் பொருள் சேதம் ஏற்பட்டுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


### இலாந்தை

இலாந்தை சத்திரக்குடியில் இருந்து இராமநாதபுரம் செல்லும் வழியில் உள்ளது. இங்கு பள்ளர்கள் மட்டும் வசிக்கின்றனர். இராமநாதபுரம் நகரைச் சுற்றிலும் உள்ள பள்ளர் கிராமங்கள் தாக்கப்பட்டுள்ளன என்ற செய்தியை இலாந்தை மக்கள் அறிந்ததும் 4 ஆம் தேதி இரவு மாநாடு முடிந்து சென்ற வாகனங்களை மடக்கி பள்ளர்கள் தாக்கியுள்ளனர். இதில் பலர் காயமடைந்துள்ளனர். தேவர் சமுதாயத்தைச் சார்ந்த ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

### குறிப்பான பரிந்துரைகள்

- டாக்டர். கிருஷ்ணசாமி செப்டம்பர் 11, 12 ஆகிய தேதிகளில் இராமநாதபுரத்தில் நடத்திய மாநாட்டையொட்டி வன்முறை நடந்து அதன் வடுக்கள் ஆறாதிருக்கும்போதே உடனே அடுத்த மாதம் பொழுது 4.10.98 அன்று சண்முகையா பாண்டியன் மாநாட்டிற்கு அரசு அனுமதி அளித்திருக்கக்கூடாது.
- 1.10.98 அன்று திருப்புல்லாணியில் சுவர் விளம்பரம் குறித்து புகார் ஒன்று போலீஸ்நிலையத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன் மீது போலீசார் உரிய நடவடிக்கை எடுத்து முன்னெச்சரிக்கை கைதுகள் செய்திருந்தால் 3.10.98 அன்று துப்பாக்கி சூட்டை தடுத்திருக்கலாம்.
- மாநாட்டிற்காக வாகனங்கள் சென்ற பாதையில் ஒன்றிரண்டு போலீசார் மட்டும் பாதுகாப்பிற்காக நிறுத்தப்பட்டிருந்தனர். கூடுதலான அளவில் போலீசார் பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டிருக்க வேண்டும்.
- திருப்புல்லானி, இராமநாதபுரத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடுகளில் சட்டவிதிகள் பின்பற்றப்படவில்லை.
- சாதியின் பெயரால் பள்ளர்கள் தாக்கப்பட்டதுடன் அவர்களது உடமைக்கும் குடியிருப்புகளுக்கும் சேதம் ஏற்பட்டிருக்கின்றன. ஆயினும் போலீஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட புகார்களில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பெரும்பாலும் பயன்படுத்தப்படவில்லை.
- மக்கள் மாநாடு என்ற பெயரால் கொள்ளையடிப்பதை பொது சொத்துக்களை நாசப்படுத்துவதை, கொலை செய்வதை சாதியத் தலைவர்கள் ஊக்கப்படுத்தாமல் அவர்களைக் கண்டிக்க முன்வர வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## 7. தொண்டி

17.7.97 அன்று தேவேந்திர குல வேளாளர் முன்னேற்றச் சங்கத்தில் திருவாடனை ஒன்றியச் செயலாளராக இருந்த பாண்டித்துரை (27) த/பெ. பாலு என்பவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.

தொண்டியில் உள்ள தினசரிச் சந்தையைப் பல ஆண்டுகளாக அகமுடையார்கள் ஏலத்தில் எடுத்து வந்தனர். 1997 ஆம் ஆண்டு மார்ச் மாதம் பாண்டித்துரை என்பவரின் முயற்சியால் பள்ளர் சமூகத்தினர் ஏலத்தில் எடுத்து உள்ளனர். இது அகமுடையார் சமூகத்தைச் சார்ந்த சிலருக்குக் கோபத்தை விளைவித்துள்ளது. மற்றும் பாண்டித்துரை அப்பகுதியில் மக்கள் செல்வாக்கு மிக்க தலைவராய் வளர்ந்து வருவதையும் பிடிக்காத அகமுடையார் சமூகத்தைச் சேர்ந்த சிலர் அவரை வெட்டிக் கொன்றுள்ளார்.

இச்சம்பவம் தொண்டி போலீஸ் நிலையத்தில் குற்ற எண்.232/97 இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 302ன் கீழ் புகாராகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இக்கொலையின் தொடர்பாக சுந்தர், கைலாசம், காமாட்சி, பாண்டி ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வழக்கு தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழும் பதிவு செய்யப்பட்ட வேண்டும் என பள்ளர் சமூகத்தினர் போராடி வந்தனர்.

12.10.98 அன்று பகல் 1.30 மணியளவில் பாண்டித்துரை கொலை வழக்கில் தொடர்புடைய சுந்தரம், தொண்டி பழைய பேருந்து நிலையத்தில் இறங்கி டீ குடித்து விட்டுப் பெருமானேந்தில் உள்ள அவர் வீட்டிற்கு நடந்து சென்றிருக்கிறார். அச்சமயத்தில் கையில் அரிவாள், உருட்டுக்கட்டை போன்ற ஆயுதங்களுடன் வந்த கும்பல் சுந்தரத்தை வெட்டிக் கொன்றுள்ளது. இச்சம்பவம் தொண்டி போலீஸ் நிலையத்தில் 322/98 குற்ற எண் கீழ் கொலை வழக்காக பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் பள்ளர் சமூகத்தைச் சேர்ந்த 45 பேர் குற்றவாளிகளாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

டி.புதுக்குடி காலனி கிராமம் திருவாடனையில் இருந்து சுமார் 10 கி.மீ. தொலைவில் தொண்டிக்குச் செல்லும் சாலையில் அமைந்துள்ளது. இங்கு பள்ளர், பறையர் சமூகத்தினர் வசிக்கும் பகுதிக்குள் டி.புதுக்குடி மற்றும் பெருமானேந்தல் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த உயர்சாதி கும்பல் கையில் அரிவாள், உருட்டுக்கட்டை போன்ற ஆயுதங்களை கொண்டு காளிமுத்து, த/பெ.மாரி, பாலு த/பெ. மாரி ஆகிய இரண்டு பேரின் வீடுகளை அடித்து சேதப்படுத்தியுள்ளனர். இரண்டு வைக்கோல் படப்புகளுக்கும் தீ வைத்து கொளுத்தியுள்ளனர். 13.10.98 அன்று மரணமடைந்த சுந்தரத்தை அடக்கம் செய்து விட்டு செருமானேந்தலை சேர்ந்தவர்கள் புடனவாயில் கிராமத்திற்குள் நுழைந்து அங்கு இருந்த நெல்லுப்பட்டறையை எரித்து விட்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


12.10.98 அன்று சுந்தரம் கொலை செய்யப்பட்ட அன்று இரவு 1 மணிக்கு தொண்டியிலிருந்து அரைக்கிலோ மீட்டர் தொலைவில் உள்ள தெற்குத் தோப்பிற்கு ஒரு லாரி, ஒரு வேன் மற்றும் 3 ஜீப்புகளில் போலீசார் வந்து அங்குள்ள 80 பள்ளர் வீட்டு கதவுகளை தட்டி மக்களை எழுப்பியுள்ளனர். கதவை திறக்காத வீட்டில் ஜன்னல் கதவுகளை அடித்து உடைத்துள்ளனர். அதன்பின் அங்கிருந்த மக்களை தடி கம்பால் அடித்து மு.ஜெயபால் த/பெ.முருகன், துரைராஜ், காளிமுத்து, வின்சென்ட், ரமேஷ், த/பெ. ஜெயபால், சுந்தரம், பொன்ராஜ், கண்ணன் த/பெ. நாச்சியப்பன், குமார், முனியாண்டி ஆகியோரைக் கைது செய்துள்ளனர்.

***சின்னத்தொண்டி***

இக்கிராமம் தொண்டியில் இருந்து 2 கி.மீ. தொலைவில் உள்ளது. இக்கிராமத்தில் சின்னத் தொண்டி, காந்தி நகர் ஆகிய இரண்டு பகுதியிலும் சுமார் 100 பள்ளர் குடும்பங்கள் வசித்து வருகின்றனர். 12.10.98 அன்று இரவு 2 மணிக்கு சுமார் 100 போலீசார் வாகனங்களில் வந்து வீடுகளின் கதவுகளை தட்டி சாதிப் பெயரைச் சொல்லி திட்டியுள்ளனர். பீதியடைந்த ஆண்கள் வீட்டை விட்டு வெளியேறி ஓடியுள்ளனர். அவர்களை துரத்திச் சென்று போலீசார் அடித்துள்ளனர்.

பிச்சைமுத்து, த/பெ. சந்தனம், சக்தி த/பெ. காளிமுத்து, சண்முகம் த/பெ. ஆரான் ஆகியோர் போலீசார் அடித்ததில் பெருங்காயம் அடைந்தனர். இங்கிருந்து கதிரேசன் த/பெ. சந்தனம், நேரு, த/பெ. காளிமுத்து, சேகர், த/பெ. காளிமுத்து ஆகியோரை கைது செய்துள்ளவர். விளக்கானேந்தல் அருகில் உள்ள வி.செட்டியர் தோட்டி கிராமம் உள்ளது. இங்கு 12 பள்ளர் குடும்பங்கள் உள்ளன. இங்கு 13.10.98 அன்று அதிகாலை 3 மணிக்கு போலீசார் வீடுகளைத் தட்டி தேடுதல் வேட்டை நடத்தியுள்ளனர்.

நரிக்குடி என்ற கிராமம் டி.புதுக்குடிக் காலனியில் இருந்து தொண்டி செல்லும் சாலையில் உள்ளது. இங்கு 55 பள்ளர் குடும்பங்கள் வசிக்கின்றனர். இங்கு 13 ஆம் தேதி அதிகாலை 3.30 மணிக்கு போலீசார் வீடுகளைத் தாக்கி திவ்யநாதன், ஜான் ஆகிய இருவரையும் கைது செய்துள்ளனர். சந்தனம், அந்தோணி, கபிரியேல், வேளரணி ஆகியோர் வீடுகளை அடித்து நொறுக்கி - யுள்ளனர். இருதயராஜ், பாத்திமா மேரி த/பெ. இருதயம் ஆகியோரை போலீசார் தாக்கியதில் அவர்களுக்குக் காலில் காயங்கள் ஏற்பட்டுள்ளன.

**8. புதுக்கோட்டை**

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள இலுப்பூர் வட்டத்தில் உள்ளது தென்னலூர் கிராமம். பள்ளர் சமூகத்தைச் சேர்ந்த பாலு (26) த/பெ. ராஜ் என்ற


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இளைஞர் சங்கராப்பட்டியைச் சேர்ந்த பண்டார சமூகத்தைச் சேர்ந்த பெண்ணான செல்வி (20) த/பெ. மாரிமுத்து என்ற இருவரும் 16.11.98 மணப்பாறையில் உள்ள கோயிலொன்றுக்கு சென்று அங்கு காதல் திருமணம் செய்து கொண்டனர்.

18.11.98 அன்று மாலை 4 மணியளவில் தெற்குக் குளத்தைச் சேர்ந்த மாரிக்கண்ணு, திருநள்ளூரைச் சேர்ந்த சின்னதுரை, சேதுராப்பட்டியைச் சேர்ந்த ராஜேந்திரன், கருப்பன் ஆகிய நான்கு பேரும் பாலு, செல்வியைத் தேடி பாலு தங்கியிருந்த வீட்டிற்கு வந்து அவர்கள் இருவரையும் ஊருக்கு அழைத்துச் சென்றுள்ளனர். இவர்கள் நான்கு பேரும் கள்ளர் சமுதாயத்தை சேர்ந்தவர்கள்.

பாலுவை தி.நல்லூர் நாடகக் கொட்டம் அருகே கொண்டு சென்று கருவேலிக் கம்புகளைக் கொண்டு அடித்து அவரது உடலைக் காயப்படுத்தி ஆடைகளைக் கழட்டி ஜட்டியுடன் ஒரு கம்பத்தில் கட்டி வைத்து விட்டனர். பின் இரவு 11 மணியளவில் பாலுவை ஜட்டியைக் கழட்டி நிர்வாணத்துடன் தண்ணீர்த் தொட்டியில் இறக்கி விட்டு, 'நண்டு திங்கிற பள்ளப் பயலுக்கு உயர்சாதிப் பெண் கேட்குதா ?' என்று கேட்டு அவரை காலை 4 மணி வரை, மயக்கம் அடையும் வரை அடித்துள்ளனர்.

உயர்சாதியினரான சேதுராப்பட்டி, எழில்ராசு, துரை, மாரிக்கண்ணு, திருநள்ளூரைச் சேர்ந்த பழனியப்பன், கருப்பன் அச்சநாயக்கன்பட்டியை சேர்ந்த தங்கராசுக்கோனார், மூக்கையா, தெற்குக் குளத்தைச் சேர்ந்த பொன்னையா, முனி ஆகியோர் சேர்ந்து 19.11.98 அன்று காலை 8 மணியளவில் கூடி பள்ளர்கள் இனி உயர்சாதிப் பெண்ணை தொடாமல் இருப்பதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும் என்று பேசியுள்ளனர்.

ஐந்தாண்டுகளுக்கு முன் கலப்புத் திருமணம் செய்து கொண்ட அச்சநாயக்கன்பட்டியைச் சேர்ந்தவர் ஆறுமுகம் (30) என்பவர். இவருக்கு அழகுமணி என்ற மனைவியும், மூன்று குழந்தைகளும் உள்ளனர். மூன்றாண்டுகளுக்கு முன் கலப்புத் திருமணம் செய்த கட்டகுடியைச் சேர்ந்தவர் சுப்பிரமணி (27) என்பவர். இவருக்கு லட்சுமி என்ற மனைவியும், ஒரு குழந்தையும் உள்ளனர். இவர்கள் இருவரையும் அடித்து இழுத்து வந்து திருவள்ளூரில் உள்ள பாலுவோடு சேர்த்து ஆடைகளை அவிழ்த்து நிர்வாணப்படுத்திப் பலமாக அடித்துள்ளனர். பிறகு பஞ்சாயத்து முடிவின்படி பாலுவுக்கு 2101 ரூபாய் அபராதமும், செல்வியின் அப்பாவான மாரிமுத்துவுக்கு 2001 ரூபாய் அபராதமும் விதித்துள்ளனர். மேலும் பாலு, ஆறுமுகம், சுப்பிரமணி இவர்கள் மூவரையும் பஞ்சாயத்து முடிவுப்படி இவர்கள் மூவரையும் நிர்வாணப்படுத்தி மொட்டையடித்து கரும்புள்ளி, செம்புள்ளி குத்தியுள்ளனர். கழுதை கிடைக்காததால், கழுதை மீது ஏற்றுவதை விட்டு விட்டனர்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## 9. மதுரை

### (அ). பந்தல்குடி

கடலூரில் விடுதலை சிறுத்தைகள் அமைப்பு செப்டம்பர் 28ல் பேரணி நடத்துவதாக அறிவித்திருந்தனர். அப்பேரணிக்கு அரசு தடை விதித்தது. அம்பேத்கர் நினைவு நாளாக டிசம்பர் 6 ஆம் தேதி தடையை மீறி ஊர்வலம் நடத்துவதாக விடுதலை சிறுத்தைகள் அறிவித்துள்ளனர். இதனைத் தொடர்ந்து தமிழகமெங்கும் முன் எச்சரிக்கை நடவடிக்கை என்ற பெயரில் விடுதலை சிறுத்தைகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மதுரை பந்தல்குடியில் விடுதலை சிறுத்தைகள் அமைப்பினர் அம்பேத்கர் மாளிகை எதிரில் பந்தல் போட்டு போஸ்டர் ஒட்டி மைக் செட் வைத்து டிசம்பர் 6 அம்பேத்கர் நினைவு நாளை கொண்டாடிக் கொண்டிருந்தனர். மதியம் 2 மணியளவில் தல்லாகுளம் போலீஸ் நிலைய ஆய்வாளர் மணிவண்ணன், சார்பாய்வாளர் விஸ்வேஸ்வரய்யா போன்றோர் ஜீப்பில் வந்து நீங்கள் அனுமதியில்லாமல் பந்தல் போட்டுள்ளீர்கள் என்று கூறி அம்பேத்கர் படத்தையும் இயக்க சுவரொட்டிகளையும் கிழித்துள்ளனர். மக்கள் கூட்டமாக கூட அங்கு வந்த போலீஸ்துறை இணை ஆய்வாளர் சங்கர் ஜுவால் மக்கள் மேல் வந்து தடியடி நடத்தச் சொல்லியுள்ளார். மக்களை அடித்து விரட்டியதோடு வீடுகளில் இருந்தவர்களையும் பூட்டியிருந்த வீட்டைத் தட்டி அங்கிருந்தவர்களையும் அடித்துள்ளனர். 15 வீடுகளில் ஓடுகளை அடித்து உடைத்துள்ளனர். பெண்களை கெட்ட வார்த்தைகளால் சாதி பெயரைச் சொல்லி திட்டியுள்ளனர். மாலி, நிர்மலா, தனிக்கொடி, முருகேஸ்வரி, மகேஸ்வரி, ராஜ், ஜோதி, ராஜலெட்சுமி, பால்பாண்டி, இளங்கோ, இந்திரா, கமலாச்சி, மாரியம்மாள், மருதீஸ்வரி, பரமேஸ்வரி, பாண்டி மற்றும் ஒன்றரை வயது குழந்தை தமிழ்ச்செல்வன், இழுப்பு நோய் உடைய இந்திரா காந்தி இவர்களை எல்லாம் போலீசார் துப்பாக்கியின் பின்பக்கக் கட்டையாலும், லத்தியாலும் அடித்து காயப்படுத்தியுள்ளனர். 9 பேரைக் கைது செய்துள்ளனர்.

### 9 (ஆ). உசிலம்பட்டி

மதுரை மாவட்டத்திலுள்ள உசிலம்பட்டி வட்டம் குப்பணம்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவர்கள் நீலமேகம், குருசாமி மற்றும் மகாலிங்கம் அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்த மூவரும் நெருங்கிய உறவினர்கள் இம்மூவரும் தலையாரிகள். தண்ணீர் பிடிப்பது தொடர்பாக இவர்களுக்குள் பிரச்சனையாகிக் கோட்டாட்சியர் வரை சென்றும் நிலமை சுமூகமாகாததால் போலீஸ் நிலையத்திற்குச் சென்றிருக்கிறார்கள்.

மகாலிங்கம் கொடுத்த புகாரின் அடிப்படையில் உசிலம்பட்டி போலீசார் குருசாமியை 12.5.99 அன்று விசாரணைக்காக அழைத்துச் சென்றுள்ளனர். மாலை நேரமாகியும் வராததாலும் குருசாமி, 'நீலமேகம் கொடுத்த புகாரை வாபஸ் பெற

www.tamilarangam.net


எண்ணி நீலமேகத்தின் மனைவி பேச்சி மற்றும் குருசாமி மனைவி பாண்டியம்மாள் ஆகியோர் மாலை சுமார் 5 மணியளவில் உசிலம்பட்டி போலீஸ்நிலையம் சென்றுள்ளனர். சார்பு ஆய்வாளர் பிலிக்ஸ் சுரேஷ் பீட்டரிடம் குருசாமி தவறு எதும் செய்யவில்லை என்றும் தாங்களே தங்களது பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வதாகவும் கூறி புகாரை வாபஸ் செய்ய விண்ணப்பத்திருக்கின்றனர்.

அதற்கு சார்பு ஆய்வாளர் அவர்களைப் பார்த்து நாலு சாத்தினால்தான் சரிப்படுவீர்கள் என்று கூறிக் கொண்டே இரு தம்பதியரையும் மாறி மாறி காதைப் பிடித்துக் கொண்டு தோப்புக்கரணம் போடும்படி கூறியுள்ளார். தயங்கியபடியே தோப்புகரணம் போட்டவர்களை 'சக்கிலியக் கழுதைகளே ஒழுங்காப் போடுங்க', என்று கண்டபடி பேசியுள்ளனர். புடவையைச் சரிசெய்ய குனிந்த பேச்சியையும், பாண்டியம்மாளையும் சிரிப்பதாக நினைத்துக் கொண்டு அருகிலிருந்த இரும்புப் பிடிபோட்ட லத்திக் கம்பால் கண்மூக்குத் தெரியாமல் அடித்துள்ளனர். பூட்ஸ் காலால் ஓங்கி நெஞ்சிலும், முதுகிலும் மாறி மாறி மிதித்துள்ளார். பாண்டியம்மாளின் நிலை மோசமானதும் பேச்சி சார்பு ஆய்வாளரைத் தடுத்துள்ளார். அதற்கு பேச்சியையும் சார்பு ஆய்வாளர் தாக்கியுள்ளார்.

பிறகு பாண்டியம்மாள் மயங்கி விழுந்ததை அறிந்த சார்பு ஆய்வாளர் பிலிக்ஸ் சுரேஸ் பீட்டர் பாண்டியம்மாளை உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் சேர்த்துள்ளார். மருத்துவமனை பதிவேட்டில் கணவர் குருசாமி மருத்துவமனையில் அனுமதித்ததாக பதிவு செய்யுமாறு கூறியுள்ளார்.

***குறிப்பான பரிந்துரைகள்***

- உசிலம்பட்டி போலீஸ்நிலைய சார்பு ஆய்வாளர் பெலிக்ஸ் சுரேஷ் பீட்டர் அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்து சாதி பெயர் சொல்லி திட்டியதற்காகத் தண்டனை வழங்கினால்தான் அரசு அதிகாரிகள் இதுபோன்ற குற்றங்களை செய்யாமல் இருப்பதை தடுக்க முடியும்.
- மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பாண்டியம்மாளுக்கும் காயமுற்ற அனைவருக்கும் இவரது சொந்த செலவில் சிகிச்சை வழங்க அரசு உத்தரவிட வேண்டும்.

## 9 (இ). கோடாங்கிப்பட்டி

கோடாங்கிப்பட்டி கிராமமானது மதுரை மாவட்டத்திலுள்ள வாடிப்பட்டி, பாலமேடு காவல்நிலைய சரகத்திற்குட்பட்ட எல்லையோர கிராமமாகும். இக்கிராமத்தில் ஏறத்தாழ 500–க்கும் மேலான குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இவர்களில் கல்வேலிக்கவுண்டர்களும், மூப்பனார்களும் மற்றும் பறையர்களும் அதிகமாக உள்ளனர்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


**சம்பவம் - 1**

1990 ஆம் ஆண்டு முதலே இக்கிராமத்தில் உள்ள பறையர் சமூக மக்களுக்கும் அங்குள்ள உயர்சாதி மக்களுக்கும் சிறு சிறு தகராறுகள் இருந்துள்ளன. இவ்வாறு எழும் சிறு பிரச்சனைகள் முடிவடைந்து விட்டாலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், உயர்சாதி மக்களுக்கும் பூசல்கள் இருந்து வந்துள்ளன. பறையர்கள் வாழும் பகுதியான காலனியின் நிலத்தை உயர்சாதியினர் ஆக்கிரமித்துக் கொண்டு அதில் கடைகளைக் கட்டியிருப்பதாக தாழ்த்தப்பட்ட மக்கள் நான்கு, ஐந்து ஆண்டுகளுக்கு முன்பே வட்டாட்சியரிடம் புகார் செய்ய மேற்படி நிலம் விசாரணையில் உள்ளதாகவும், மேலும் அப்பகுதியில் இனி உயர்சாதியினர் கடைகள் எதுவும் வைக்கக் கூடாது எனவும் அவர் கூறியிருக்கிறார்.

இவ்வாறிருக்கும் சூழலில் கடந்த 4.6.99 அன்று நள்ளிரவு இரண்டு மணியளவில் காலனிப் பகுதியில் இருந்த தங்கராஜ், த/பெ. பெரியண்ணக் கவுண்டர், இளங்கோவன் த/பெ. சாமியப்ப கவுண்டர், இராசம்மாள் க/பெ. வாத்திக் கவுண்டர், மனோகரன் த/பெ. சாமியப்பன், பெரியசாமி த/பெ. சடையன் ஆகியோரது கடைகள் எரிந்து நாசமாகியுள்ளன. இதற்கு பறையர் சமூகத்தைச் சார்ந்த 3 இளைஞர்கள்தான் காரணம் என்று பாலமேடு காவல்நிலையத்தில் புகார் செய்யப்பட்டு 3 பேர் கைது செய்யப்பட்டனர்.

**சம்பவம் - 2**

19.06.99 அன்று இரவு இரண்டு மணியளவில் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் இராமசாமித்தேவர் அவர்களின் இரண்டு வைக்கோல் போருக்குத் தீ வைக்கப்பட்டுள்ளது. இதை பறையர்கள்தான் செய்திருப்பார்கள் என்று எண்ணிய அவ்வூர் உயர்சாதியினர் அன்று இரவே ஒன்று திரண்டு பறையர் சமூகத்தினர் வாழும் வீடுகளையெல்லாம் அடித்து நொறுக்கியுள்ளனர். இதில் ஏராளமான வீடுகளும் அவற்றிலுள்ள பொருட்களும் நாசமாகியுள்ளன. இதனால் இங்கிருந்த 34 குடும்பங்களும் உயிருக்குப் பயந்து ஊரை விட்டு முதுவார்பட்டியில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

அம்பேத்கர், த/பெ. பழனி, பாலசுப்பிரமணியன், த/பெ. பரமன், லட்சுமணன் த/பெ. திருமாள், ஐயங்காளை த/பெ. அம்மாசி, பூச்சி, த/பெ. பழனியாண்டி, பிச்சை த/பெ. பழனியாண்டி ஆகியோரது வீடுகள் மற்றும் உபயோக பொருட்கள் முற்றிலும் சேதமடைந்துள்ளன. குற்ற எண்.171/99ன் கீழ் சட்டப்பிரிவு 147, 148, 427, 448, 379, 506 மற்றும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வன்கொடுமைத் தடுப்புச் சட்டப்பிரிவு 3 (1) (X), 3 (1) (XI) ஆகிய பிரிவின் கீழ் 33 நபர்கள் மேல் வழக்குகள் பதியப்பட்டுள்ளன..

தாழ்த்தப்பட்ட அப்பாவி மக்களின் வீடுகள் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டதோடு வீட்டிலுள்ள பொருட்களும் சூறையாடப்பட்டுள்ளன. தாழ்த்தப்பட்ட மக்களின் குழந்தைகள், பள்ளி செல்லும் சிறார்களின் அன்றாட வாழ்க்கை மிகவும் பாதிப்புள்ளாகி உள்ளது. மக்கள் அகதிகள் போன்று முதுவார்பட்டியில் தஞ்சம் புகுந்து இருப்பிடம் இன்றி வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

## 10. கடலூர் - புலியூர் காலனி

### சம்பவம் 1

புலியூர் கிராமம் கடலூரிலிருந்து நெய்வேலி செல்லும் சாலையில் சுமார் 32 கி.மீ. தொலைவில் உள்ள ஓர் சிற்றூர். இக்கிராமத்தில் 450 தாழ்த்தப்பட்ட பறையர் சமூக மக்களும் 200 வன்னியர் சமூகத்தினரும் வசித்து வருகின்றனர்.

புலியூரில் வன்னியர் வாழும் பகுதியில் அவர்களுக்கென்று முடிவெட்டும் தொழிலை செய்து வந்த பரிபேலி சேகர், அன்பழகன் இருவரும் அருகில் உள்ள சிறுநகரமான குள்ளஞ்சாவடியில் புதியதாக சேகர் பார்பர் ஷாப் என்ற புதிய கடை ஆரம்பித்திருக்கின்றனர். இக்கடைக்குப் புலியூர் காலனியில் இருந்து பள்ளியில் படிக்கும் இரு மாணவர்கள் சென்று 'எங்களுக்கு முடிவெட்டு', என்று கூறியுள்ளனர். 'உங்களுக்கு நாங்கள் முடிவெட்டுவதில்லை', என்று சேகர் சொல்ல, 'புலியூரில் தான் எங்களுக்கு முடிவெட்ட மாட்டாய், இங்கு நீ எங்களுக்கு வெட்டித்தான் ஆக வேண்டும்' என்று கூறி சேகரும், அன்பழகனும் ஊரில் வந்து சொல்ல, அதன்பின் சோக் பார்பர் ஷாப் குள்ளஞ்சாவடியில் இருந்து இழுத்து மூடப்பட்டுள்ளது. இது வன்னியர்களுக்குப் பறையர் மேல் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

### சம்பவம் 2

12.12.98 அன்று மாலை 6 மணியளவில் புலியூர் தலித் காலனி அருகில் உள்ள தாழ்த்தப்பட்ட பறையருக்கு சொந்தமான பெட்டிக்கடையில் குடிபோதையுடன் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த மதியழகனும், நன்னேறி மற்றும் ஜெயபாலும் இருந்திருக்கிறார்கள். அப்போது ஜெயபால் தீப்பெட்டியில் நெருப்பு பற்ற வைத்து மதியழகன் வாயிலிருந்த பீடியைப் பற்ற வைத்துள்ளான். அப்போது அங்கிருந்த வன்னியரான சிவபிரகாசம் (55) 'பறப்பயலுக்கு என்ன திமிறா?' என்று கேட்டு தான் அணிந்திருந்த செருப்பால் அவர்கள் இருவரையும் தலையில் அடித்திருக்கிறார். இது காலனி மக்களுக்கு கோபத்தை உருவாக்கியுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



***சம்பவம் - 3***

15.12.99 அன்று புலியூர் தாழ்த்தப்பட்ட பறையர்கள் வாழும் காலனியில் வைத்தியலிங்கம் (55) என்பவர் இறந்துவிட அன்று மாலை 6 மணியளவில் அவரது உடலை அங்குள்ள மக்கள் இறுதி ஊர்வலத்திற்காகத் தூக்கிக் கொண்டு **தாழ்த்தப்பட்டோர் தெருவில் சென்றுள்ளனர். அப்பொழுது எதிரே சாலையில்** ஹீரோ ஹோண்டா மோட்டார் பைக்கில் வந்த சிவபிரகாசம் நடுரோட்டில் வண்டியை நிறுத்திக் கொண்டு ஹாரன் அடித்துள்ளார். அப்பொழுது செருப்பால் அடிபட்ட இளைஞர்களான மதியழகனும், ஜெயபாலும் அந்த ஊர்வலத்தில் வந்துள்ளனர். ஏற்கெனவே சிவப்பிரகாசத்தின் மீது இருந்த கோபத்தினால் அவரைச் செருப்பால் தலையில் அடித்து கீழே தள்ளியுள்ளனர். அடிப்பட்ட சிவப்பிரகாசம் உடனடியாக குள்ளஞ்சாவடி போலீஸ் நிலையத்தில் புகார் செய்ய போலீசார் 913/98ல் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 294, 341, 323, 355ன் கீழ் வழக்குப் பதிவு செய்து மதியழகனையும், ஜெயபாலையும் கைது செய்துள்ளனர். நிலைமை பதட்டமா இருக்கவே இரவு 9 மணியிலிருந்து ஆய்வாளர் மற்றும் சார்பாய்வாளர் தலைமையில் போலீசார் 5 பேர் துப்பாக்கியுடன் காவலுக்கு நின்றுள்ளனர்.

16.12.98 அன்று காலை 5.30 மணியளவில் புலியூர் காலனியை சுற்றியுள்ள சிற்றூர்களான காட்டுச்சாலை, சம்பட்டிகுப்பம், பெத்தனாங்குப்பம், புதுத்தெரு மற்றும் புலியூர் ஆகிய பகுதியிலிருந்து வன்னிய இளைஞர்கள் சுமார் 500க்கும் மேற்பட்டோர் திரண்டு தாழ்த்தப்பட்ட மக்களின் வீடுகளையும் மக்களையும் அடிக்க ஆரம்பித்தனர். அப்போது காவலுக்கு நின்றிருந்த போலீசார் கூட்டத்தை கலைக்க வானத்தை நோக்கிச்சுட அதன்பின் கூட்டம் கலைந்துள்ளது.

இதனால் மண்ணாங்கட்டி, மாணிக்கம், காசி, சுப்பிரமணியன், அரசன், இராமச்சந்திரன், சுப்பிரமணியன், பிச்சகாசி ஆகியோருக்கு கை, கால் முறிவு ஏற்பட்டுப் பலத்த காயம் அடைந்துள்ளனர். வன்னியர்களின் தாக்குதலால் 150க்கும் மேற்பட்ட வீடுகள் பெருமளவில் சேதமடைந்துள்ளன. போலீசார் 150 பேர் மீது குற்ற எண் 914/98ல் இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழும் வழக்கைப் பதிவு செய்துள்ளனர்.

## 11. *ராஜபாளையம்*

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் வட்டத்தைச் சேர்ந்த தேவதானம், சுந்தரராஜபுரம், கிருஷ்ணாபுரம், கிறிஸ்துராஜபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த ஆறுபேர், நாடார்–பள்ளர் சமூகங்களுக்கிடையிலான மோதலின் விளைவாக 17.01.99 முதல் 30.01.99 வரை வெட்டிக் கொல்லப்பட்டனர்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



***சம்பவம் - 1***

16.1.99 அன்று மாலை 4 மணியளவில் இராசபாளையம் வட்டம் தேவதானத்தில் பள்ளர் சமூகத்தினர் மாட்டுப்பொங்கல் கொண்டாட்டத்தையொட்டி ஜல்லிகட்டு நடத்தப்பட்டுள்ளது. ஜல்லிகட்டை நாடார்கள் தடுத்ததால் அது சாதிய மோதலாக விசுவரூபமாகியது. இதில் பள்ளர் சமூகத்தைச் சேர்ந்த பிள்ளையார் த/பெ. கிருஷ்ணன் என்பவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.

***சம்பவம் - 2***

20.1.99 அன்று காலை 9 மணிக்கு இராசபாளையம் காய்கறி கமிசன் மார்க்கெட்டில் தங்கமாயாண்டி என்பவர் மீது நாடார் ஒருவரின் தள்ளுவண்டி இடித்து விட்டது. இதனால் நாடார்களுக்கும், பள்ளர்களுக்கும் இடையில் வாய்த்தகராறு ஏற்பட்டு மற்றவர்கள் தலையீட்டால் சமாதானமாகியிருக்கிறது.

இச்சம்பவத்திலிருந்து நாடார்கள் பள்ளர் மேல் பகையாய் இருந்தனர். சுந்தரராஜபுரத்தைச் சேர்ந்த மக்கள் காலை 7 மணியிலிருந்து 10.30 மணி வரையில் தங்கள் இரு சக்கர வாகனங்களில் காய்கறிகளை ஏற்றிக் கொண்டு ராஜபாளையம் கமிசன் மண்டிக்குச் செல்வது வழக்கம். 28.9.99 அன்று காலை 8.25 மணிக்கு அண்ணன் தம்பிகளான பரமனும், காளியும் டி.என்.57 பி 968 எண் கொண்ட டி.வி.எஸ்.50ல் காய்கறிகளைச் சாக்கில் எடுத்துக் கொண்டு இராசபாளையம் தரகு மண்டிக்குப் புறப்பட்டு சென்றிருக்கின்றனர். ராஜவூத்துக்குக் கீழ் உள்ள சாலையில் சென்று கொண்டிருந்த போது 20 முதல் 23 வயது மதிக்கத்தக்க இளைஞர்கள் 6 பேர் வண்டியை மறித்துள்ளனர். பின்சீட்டில் அன்ர்ந்திருந்த காளியை அவர்களில் சிலர் தலையைப் பார்த்து வெட்டியிருக்கின்றனர். அவர் சாய்ந்ததால் தோள், கழுத்து ஆகிய இடங்களில் ஆழமான வெட்டு விழுந்ததில் அவர் மயக்கமுற்றிருக்கிறார். கொலைகாரக் கும்பலைக்கண்டு பரமன் தப்பித்துக் கொள்வதற்காகக் கண்மாயை நோக்கி ஓடியிருக்கிறார். அவரை இக்கும்பல் துரத்திச்சென்று வெட்டிக் **கொலை** செய்திருக்கின்றன. குற்ற எண் 30/99 இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு **302,** தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் பிரிவு **3(2)** (5)ன் கீழ் புகார் பதிவாகியுள்ளது.

இக்கொலையின் தொடர்ச்சியாக 28.1.99 அன்று நாடார் சமூகத்தைச் சேர்ந்த நம்பிராஜன் (50), பந்தல் மாரியப்பன் (45) பவுன்ராஜ் (50) ஆகியோர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டனர்.

கிருஷ்ணாபுரத்தைச் சேர்ந்த நம்பிராஜன் சுந்தரராஜபுரத்திற்கு அருகேயுள்ள சேத்தனேரி கண்மாய் கால்வாயில் மருந்தடிக்க சென்றபோது வெட்டிக் கொலை செய்யப்பட்டார். இவரது வழக்கு குற்ற எண்.31/99 இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 302ன் கீழ் பதிவாகியுள்ளது.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மாங்குடியைச் சேர்ந்த பவுன்ராஜ் நாடார் ஐஸ் விற்றுக் கொண்டிருக்கும் போது வெட்டிக் கொலை செய்யப்பட்டார். குற்ற எண்.32/99ன் கீழ் வழக்கு பதிவாகியுள்ளது.

கிறிஸ்துராஜபுரத்தை சேர்ந்த லூர்துராஜ் (41) பள்ளர் சமூகத்தைச் சேர்ந்த இவர் மில் வேலையை முடித்து விட்டு மாலை 3 மணியளவில் சைக்கிளில் கருகன்குளம் பாறையில் வரும்போது வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.

### 12. கோயமுத்தூர் - மணியக்காரன் பாளையம்

கோயமுத்தூர் சின்னவேடம்பட்டி பஞ்சாயத்திற்குச் சொந்தமான மணியக்காரன் பாளையத்தில் மாணிக்கவாசகம் நகர் உள்ளது. இக்காலனியில் ஏறத்தாழ 150 அருந்ததியர் குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இக்குடும்பத்தினர் 1998ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் சீனிவாச பெருமாள் கோயிலுக்குச் சொந்தமான 7 ஏக்கர் நிலத்தில் சில குடிசைகள் போட்டுள்ளனர். அதற்கு டாக்டர் கிருஷ்ணசாமி நகர் என்றும் பெயர் வைத்துள்ளனர். இதையறிந்த அக்கோயிலின் அறங்காவலர்களும் மற்றும் அறநிலையத்துறை அதிகாரிகளும் உடனடியாக விரைந்து போலீசாரின் அனுமதியுடன் ஆக்கிரமிப்பை அகற்றியுள்ளனர். மீண்டும் சிலர் குடிசைகளை அமைத்துள்ளனர். இந்த குடிசைகளை அகற்றக் கூடாது என்று நீதிமன்றத்தில் தடை உத்திரவும் பெற்றுள்ளனர். வழக்கு எண். 1814/98. வழக்கு விசாரணையில் உள்ளது. இப்படியிருக்கும் சூழ்நிலையில் 1999 பிப்ரவரி மாதம் இரண்டாம் வாரத்தில் மாணிக்கவாசகம் நகர் பகுதியில் வாழ்ந்த மக்களும் மற்றும் சுற்றியுள்ள அருந்ததியர் மக்களும் அந்நிலத்தில் 1000க்கும் மேற்பட்ட குடிசைகளைப் போட்டுள்ளனர். இதையறிந்த அறநிலையத் துறையினர் போலீசார் புகார் செய்ய 24.2.99 அன்று சகி, கலையரசன் மற்றும் ஏழு பேரை காவல்துறையினர் கைது செய்தனர். (குற்ற எண்.97/99) 25 ஆம் தேதி சுமார் 1500 பேர் கோவை மாவட்ட ஆட்சித்தலைவரின் அலுவலகத்திற்கு முன் கைது செய்தவர்களை விடுதலை செய்யக் கோரி போராட்டம் நடத்தியுள்ளனர். அப்போது போலீசார் போராட்டத்தில் ஈடுபட்டவர்களைக் கைது செய்துள்ளனர்.

27.2.99 அன்று காலை 9 மணியளவில் புதிதாக போட்டப்பட்டுள்ள குடிசைப் பகுதிகளுக்கு 10க்கும் மேற்புட்ட வாகனங்களில் போலீஸ் துணை ஆய்வாளர் தலைமையில் சீருடையணிந்த 500க்கும் மேற்பட்ட ஆண், பெண், போலீசார் வந்துள்ளனர். அவர்களுடன் அறநிலையத்துறை ஊழியர்களும் வந்துள்ளனர். போலீசார் புல்டோசர் கொண்டு ஆக்கிரமிப்புகளை அகற்ற முற்படவே அவர்களைக் குடிசைப்பகுதி மக்கள் தடுத்துள்ளனர். போலீசார் உடனே அங்கு குடியிருந்த மக்களை அடித்துள்ளனர். கடைகள் யாவும் தீ வைக்கப் பட்டுள்ளன. பாப்பாத்தி, க/பெ. செல்வராஜ், ராஜாத்தி க/பெ. ஆனந்த குமார்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


மாரியம்மாள் க/பெ. கருப்பசாமி, முருகம்மாள் க/பெ. பாலன், விஜயலெட்சுமி க/பெ. ராமசாமி ஆகிய பெண்கள் போலீசாரால் கொடுமையாக தாக்கப்பட்டு காயமடைந்துள்ளனர். வீடுகள், வீட்டு பொருட்கள், ஆவணங்கள் யாவும் எரிந்து சாம்பலாகியுள்ளன. போலீசார் திட்டமிட்டே இச்சம்பவத்தை இங்கு நடத்தியுள்ளனர்.

### 13. *பெரம்பலூர் மாவட்டம் - அனுக்கூர்*

அனுக்கூர் கிராமமானது பெரம்பலூரிலிருந்து சுமார் 20 கி.மீ. தொலைவிலுள்ள கிராமம் ஆகும். இங்கு வன்னியர்கள் 750 குடும்பங்களும் சுமார் 150க்கும் மேற்பட்ட பறையர் குடும்பங்களும் இக்காலனியில் வசித்து வருகின்றனர்.

அனுக்கூரில் செல்லியம்மன் கோவில் உள்ளது. இக்கோயிலில் இங்கு வாழும் பறையர்களும், கவுண்டர்களும் சாமி கும்பிட்டு பூஜை செய்து வருவது வழக்கம். இவ்வாறிருக்கையில், வன்னியர் சமூகத்தினர் செல்லியம்மன் கோவில் திருவிழாவின்போது எங்களுக்கும் வழிபட பங்கு கொடுக்க வேண்டும் எனக் கேட்டுள்ளனர். இதனை அக்கிராமத்திலுள்ள பறையர்கள் மறுத்துள்ளனர். இது வன்னியர்களுக்குப் பெரும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

***சம்பவம் - 1***

29.3.99 அன்று காலை 10.30 மணியளவில் திருமதி. செல்லம் அனுக்கூர் காலனிக்கு 200 மீட்டர் தொலைவிலுள்ள தனது கடலைத் தோட்டத்திற்கு நீர் பாய்ச்சிக் கொண்டிருந்துள்ளார். அப்பொழுது வன்னியர் சமூகத்தைச் சேர்ந்த 4 பேர் மது அருந்தி விட்டுக் கடலை தோட்டத்தின் நடுவே கடலைச் செடிகளை மிதித்துக் கொண்டு வந்துள்ளனர். அப்போது செல்லம், 'ஏன் இப்படி நடந்து கொண்டு கடலையை நாசம் செய்கிறீர்கள்? நீங்கள் இந்த வழியில் செல்லக்கூடாது' என்று சொல்லவே அவர்கள் ஜாதியைச் சொல்லி அசிங்கமான வார்த்தைகளால் திட்டி பெண் என்றும் பாராமல் செல்வத்தை 4 பேரும் சேர்ந்து அடித்துள்ளனர். செல்லம் பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் சேர்ந்து புகார் செய்துள்ளனர். குற்ற எண்.177/99ல் வழக்கு பதிவாகியுள்ளது. இந்நிலையில் அனுக்கூர் கிராமத்தில் உள்ள காலனி இளைஞர்கள் செல்லத்தை அடித்த நால்வரையும் போய் அடித்துள்ளனர். இதில் முருகேசன் என்பவர் பலத்த அடிபட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (குற்ற எண்.177/99) அதனால் அனுக்கூர் காலனி இளைஞர்கள் மீதும் வழக்கு பதிவாகியுள்ளது.

***சம்பவம் - 2***

30.3.99 அன்று அனுக்கூர் காலனியில் இருந்து 6 பேர் வன்னியர்கள் வாழும் தெருவில் உள்ள அரசு பால்பண்ணைக்கு பால் ஊற்றச் சென்றுள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


அவர்களை அங்குள்ள வன்னியர்கள் தாக்கி மரத்தில் கட்டி வைத்துள்ளனர். இதையறிந்த போலீசார் அவர்களை மீட்டு பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். இந்தச் சம்பவம் அனுக்கூருக்கு அருகில் உள்ள கிராமங் – களுக்கும் பரவவே எசனையில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் பெரம்பலூரிலிருந்து எசனை வழியாக அனுக்கூருக்கு செல்லும் வன்னியர்களைப் பேருந்திலிருந்து இறக்கி விட்டு மிரட்டியுள்ளனர். இதனால் வன்னியர்கள் கோபம் கொண்டுள்ளனர்.

*சம்பவம் - 3*

31.3.99 அன்று காலையில் நெய்குப்பையில் இருந்து அனுக்கூரை நோக்கி வந்த தலித் இளைஞர்களை நெய்குப்பையிலிருந்து வந்த வன்னியர் கும்பல் வெட்டியுள்ளது. தலித் இளைஞர்களும் அவர்களை வெட்டியுள்ளனர். இதனால் அனுக்கூரில் உள்ள வன்னியர்கள் கவுன்சிலர் கதிர்மணி தலைமையில் அரிவாள் கம்புகளுடன் சென்று தலித் காலனியில் உள்ள வீட்டின் ஓடுகளையெல்லாம் உடைத்து அங்குள்ள குடிசைகளுக்கு தீ வைத்துள்ளனர். இதனால் 57க்கும் மேற்பட்ட வீடுகள் எரிந்து நாசமாகின. அதன்பின் தீயணைப்புத் துறையினர் வந்து தீயை அணைத்துள்ளனர்.

## 14. ஆரணி

ஆரணிக்கு அருகிலுள்ள லாடபுரம் என்ற கிராமத்தைச் சேர்ந்த இராஜேந்திரன் (28) என்பவர் பறையர் சமூகத்தைச் சேர்ந்தவர். இவரும் மாமல்லபுரம் அருகிலுள்ள எச்சூர் கிராமத்தைச் சேர்ந்த இஷ்டப்ப நாயக்கன் மகள் இந்திராணியும் (23) லாடபுரத்தில் காதல் திருமணம் செய்து கொண்டனர். இந்திராணி 3 மாத கர்ப்பிணியாக இருக்கும் போது இந்திராணியின் தாயார் தன் மகளை ஊருக்கு வரும்படி சொல்லியுள்ளார். அதன்படி இந்திராணி ஒரு சில முறை தன் தாயாரை காலையில் சென்று சந்தித்து விட்டு மாலையில் திரும்பி வருவார். இந்திராணியின் தந்தைக்கு இது தெரிய அவர் திட்டியுள்ளார். அதிலிருந்து இந்திராணி அவர்கள் வீட்டிற்குச் செல்வதில்லை.

திடீரென்று இந்திராணியின் தந்தை தன் மகளுக்கு கடிதம் எழுதி ஊருக்கு வரச் சொல்லியுள்ளளார். இதனால் இந்திராணி மே மாதம் 3 ஆம் தேதி தனது தந்தை வீட்டிற்குச் சென்றுள்ளார். சென்றவர் 3 நாட்களாகியும் திரும்பி வராததால் இராஜேந்திரன் தன் மனைவியைத் தேடி எச்சூருக்குச் சென்றுள்ளார். அங்கு இந்திராணியின் அண்ணனும், இந்திராணியின் தந்தையும் சேர்ந்து இராஜேந்திரனை சவுக்கு கட்டையால் அடித்துக் கொன்றுள்ளனர். இதனால் வருத்தமுற்ற இந்திராணியும் விஷமருந்து குடித்து இறந்திருக்கிறார். இவர்கள் இருவரையும் இந்திராணியின் அண்ணன் வேணு, தேவராஜ் மற்றும் குடும்பத்தினர் சேர்ந்து சுடுகாட்டிற்கு கொண்டு சென்று பிணங்களை எரித்துள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மாமல்லபுரம் போலீஸ் நிலையத்தில் 277/99–ன் கீழ் இந்திய தண்டனைச் சட்டப்பிரிவு 147, 148, 302, 201 ஆகியவற்றின் கீழ் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

## 15. தஞ்சை - அகரமாங்குடி

தஞ்சை மாவட்டம் பாபநாசம் வட்டம் அய்யம்பேட்டையிலிருந்து சுமார் 4 கி.மீ. தொலைவில் அகரமாங்குடி கிராமமும், 5 கி.மீ. தொலைவில் செருமாத்த நல்லூர் கிராமமும் உள்ளன. தஞ்சையிலிருந்து தினமும் காலையில் 8 மணியளவில் செருமாத்தநல்லூரிலிருந்தும் அருகிலுள்ள அகரமாங்குடியிலிருந்தும் பள்ளி மாணவ, மாணவிகளையும் பயணிகளையும் ஏற்றிக் கொண்டு ஐயம்பேட்டை வழியாக தஞ்சாவூருக்கு வரும் பேருந்தானது வழக்கமாக இயங்கிக் கொண்டிருக்–கிறது. காலை செருமாத்தநல்லூரில் புறப்பட்டு பயணிகளை ஏற்றிக் கொண்டு அடுத்து அகரமாங்குடி வரும்பொழுது அகரமாங்குடி காலனியில் அதிகமான பள்ளி மாணவிகள் ஏறுவதால் ஏற்கெனவே செருமாத்தநல்லூரிலிருந்து வரும் பயணிகள் இவர்கள் மீது கோபத்தையும், இவர்கள் பேருந்தில் ஏறுவதைத் தடை செய்யும் நோக்கோடு படிக்கட்டுகளில் நிற்பது வழக்கமாகவும் இருந்திருக்கின்றது. இதன் காரணமாக அகரமாங்குடியில் உள்ள காலனியிலிருந்து பள்ளிக்குச் செல்லும் மாணவர்களுக்கும் அங்கிருந்து வரும் கள்ளர் சமூக மாணவர்களுக்கும் ஏற்கெனவே தகராறுகள் நடந்துள்ளன.

### *சம்பவம் - 1*

5.8.99 அன்று பள்ளிக்குச் செல்லும் காலனி மாணவிகளைச் செருமாத்தநல்லூரைச் சேர்ந்த கள்ளர் சமூக இளைஞர்கள் பேருந்தில் ஏறவிடாதபடி தடுக்க படியிலேயே நின்று கொண்டிருந்தனர். அப்போது அங்கிருந்த காலனி மாணவர்கள் செருமாத்தநல்லூர் பெண்களிடம் தகராறு செய்துள்ளனர்.

6.6.99 அன்று அகரமாங்குடி மாணவர்களுக்கும், செருமாத்தநல்லூர் மாணவர்களுக்கும் அதே பேருந்தில் தகராறு ஏற்பட்டு அது அடிதடியாக மாறி பேருந்தின் கண்ணாடிகள் அடித்து நொறுக்கப்பட்டுள்ளன. இது சம்பந்தமாக ஐயம்பேட்டை போலீஸ்நிலையத்தில் புகார் செய்யப்பட்டு குற்றஎண்.258/99–ன்படி செருமாத்தநல்லூர் இளைஞர்கள் 9பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனால் கோபமுற்ற கள்ளர் சமூகத்தினர் ஐயம்பேட்டையில் உள்ள தலித் கடைகளை அடித்து நொறுக்கியுள்ளனர். செருமாத்தநல்லூரைச் சேர்ந்த கள்ளர்களும் மற்ற இனத்தவர்களும் சேர்ந்து 300 பேர் கொண்ட கும்பல் அகரமாங்குடியைச் சார்ந்த தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் காலனிக்குள் புகுந்து அங்கிருந்த சில வீடுகளை உடைத்தும் அங்கிருந்த கடைக்குத் தீ வைத்துக் கொளுத்தியும் உள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


இது சம்மந்தமாக குற்ற எண்.258/99, 259/99, 260/99, 263/99ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளன.

இங்கு எந்த வழக்கும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவு பண்ணப்படவில்லை.

### 16. திண்டுக்கல் - வெறியப்ப நாயக்கன்பட்டி

திண்டுக்கல் மாவட்டம், வத்தலக்குண்டு அருகேயுள்ள வெறியப்ப நாயக்கன்பட்டி கிராமத்தில் 120 பள்ளர்கள் மற்றும் சக்கிலியர் குடும்பங்களும், 100 கவுண்டர் குடும்பங்களும், மற்றும் தேவர், நாடார், சேர்வை குடும்பங்களும் வசித்து வருகின்றனர்.

16.7.99 அன்று வெறியப்ப நாயக்கன்பட்டி பேருந்து நிறுத்தமான பிள்ளையார் கோவிலுக்கு எதிரில் புதிய தமிழகத்தைச் சார்ந்த சிலர் அக்கட்சிக் கொடியை நட்டு வைத்திருக்கின்றனர். ஏற்கெனவே திமுக, அதிமுக, கம்யூனிஸ்ட் கட்சிக் கொடிகளும் அங்கு உள்ளன. பள்ளர்கள் எப்படி ஊரில் கொடி ஏற்றலாம்? கொடி ஏற்ற வேண்டும் என்றால் அவர்களது சேரியில் ஏற்ற வேண்டியதுதானே என உயர்சாதியினர் அதிருப்தி தெரிவித்துள்ளனர். இந்நேரத்தில் 17.7.99 அன்று புதிய தமிழகம் கட்சி கொடியை நட்டு வைத்த இடத்தில் ஒலிபெருக்கி வைத்துத் தீண்டாமை கொடுமைகளைப் பற்றி பேசியிருக்கிறார்கள். இத்தகைய பேச்சுக்கள் வெறியப்பநாயக்கன்பட்டி உயர்சாதியினர் அனைவரையும் கோபப்படுத்தியதால் நமது ஊரில் எந்தக் கட்சிக் கொடியும் இருக்கக்கூடாது என்று ஒரு முடிவு எடுத்து அதன் அடிப்படையில் பெண்கள் அனைவரும் ஒன்றுகூடி புதிய தமிழகம் கட்சிக் கொடி உட்பட திமுக, அதிமுக கம்யூனிஸ்ட் கட்சி கொடிகளை வெட்டிச் சாய்த்திருக்கிறார்கள்.

5.8.99 அன்று அதிகாலை 4 மணியளவில் பகவதி அம்மன் கோவில் அருகே குடியிருக்கும் பள்ளர் சமூகத்தைச் சார்ந்த ராமனின் மாட்டுக் கொட்டகையும், வைக்கோல் படப்பும் தீயிட்டு கொளுத்தப்பட்டு இருக்கின்றன. இதனால் இருதரப்பினருக்கிடையே வாய்த்தகராறு ஏற்பட்டுள்ளது. இந்த நேரத்தில் தேவர் சமூகத்தைச் சேர்ந்த ராமன் என்பவர் பள்ளர் சமூக இளைஞரால் தாக்கப் பட்டுள்ளார். இதனையொட்டி கல்லெறிதல், தீ வைத்தல் போன்ற சம்பவங்களில் இருவரும் ஈடுபட்டுள்ளனர். சுமார் 7.30 மணியளவில் போலீசார் அங்கு வந்துள்ளனர். இருவரும் சமாதானமாகப் போகாததினால் கூட்டத்தைக் கலைக்க போலீசார் வானத்தை நோக்கிச் சுடவே அதன்பின் மக்கள் கலைந்துள்ளனர். இரண்டு தரப்பிலும் வீடுகள், பொருட்கள் சேதம் அடைந்துள்ளன.

இதுவரை இத்தனை கொடிக்கம்பங்கள் இருக்க தாழ்த்தப்பட்டவர்கள் கொடியேற்றும் போது மட்டும் உயர்சாதியினரால் பொறுக்க முடியவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தாழ்த்தப்பட்ட மக்கள் அரசியலில் ஒரு அணியாக ஆவதை உயர்ந்த சாதியினர் விரும்புவதில்லை என்பது இச்சம்பவத்திலிருந்து தெரிய வருகிறது.

## 17. ஈரோடு - மணக்கடவு

ஈரோடு மாவட்டம், தாராபுரம் வட்டத்தில் அலங்கியம் போலீஸ்நிலைய சரகத்திற்குட்பட்ட மணக்கடவு கிராமம் தாராபுரம் – பழனி சாலையில் அமைந்துள்ளது. இக்கிராமத்தில் சுமார் 250 கவுண்டர் சாதி குடும்பங்களும், சுமார் 200 ஆதிதிராவிடர் அருந்ததியர் குடும்பங்களும், சுமார் 100 பிற சாதி குடும்பங்களும் வசித்து வருகின்றன.

காலங்காலமாகச் சமூக அளவிலும் பொருளாதார நிலையிலும் உயர்ந்த நிலையிலிருக்கும் கவுண்டர்களைச் சார்ந்தே அருந்ததியர் வாழ்ந்து வந்தனர். கவுண்டர்களின் நிலங்களில் பணி புரிந்ததைத் தவிர அருந்ததியருக்கு அனைத்து உரிமைகளும் மறுக்கப்பட்டு வந்துள்ளன. ஆனால், கடந்த சில வருடங்களில் கல்வி மற்றும் வெளியுலகத் தொடர்பால் தாழ்த்தப்பட்டோருக்கான உரிமைகளைப் பற்றி அறிய வந்திருக்கும் அருந்ததியர் அதிலும் குறிப்பாக படித்த இளைஞர்கள் அரசுக்கு புகார் அனுப்புவது, மனு அனுப்புவது மற்றும் ஊருக்குள் சிறு சிறு எதிர்ப்புகளைக் காட்டுவதன் மூலம் தங்களது நிலையை மாற்ற முயன்றுள்ளனர். அதில் வெற்றியும் கண்டுள்ளனர். இப்போது அருந்ததியரும் கடைகளில் பொருட்கள் வாங்கிக் கொள்ளலாம், தேநீர் அருந்தலாம். தெருக்களில் நடக்கலாம். சைக்கிளில் செல்லலாம். மற்றவர்கள் வந்தால் தெருவில் ஒதுங்கித்தான் போக வேண்டும். பொருட்கள் வாங்கும் போது ஒதுங்கிக் காத்திருந்து விட்டு பின் தான் வாங்க வேண்டும். இது வெளிப்படையாகச் சொல்லப்படாவிட்டாலும் பெரும்பான்மையான உயர்சாதி இருந்துக்களால் இதுவே விரும்பப்பட்டு கடைப் – பிடிக்கப்பட்டது. அதனால் அருந்ததியரில் பலரும் வீண் வம்பு எதற்கு என்று நினைத்து அப்படியே ஏற்றுக் கொண்டாலும் அவர்களில் சிலர் அவ்வப்போது இவற்றை எதிர்த்துக் கேட்டது அவர்களுக்கு கோபத்தை உருவாக்கியுள்ளது.

***சம்பவம் - 1***

31.8.99 அன்று அருந்ததியர் வகுப்பை சேர்ந்த நாச்சிமுத்து, வீரன் அவரது மனைவி நாச்சம்மாள் மற்றும் வேளாங்கண்ணி த/பெ. முருகன் ஆகியோர் தாராபுரம் பழனி பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்தனர். அப்போது அதே பேருந்தில் பக்கத்துக் கிராமமான அப்பணத்துவைச் சேர்ந்த செல்வராஜ் (27) த/பெ. கருப்பசாமி, கோவிந்தராஜ் த/பெ. பழனிச்சாமி கவுண்டர் மற்றும் மற்றொரு செல்வராஜ் த/பெ. முத்துச்சாமிக் கவுண்டர் ஆகியோரும் நன்றாகக் குடித்திருந்த நிலையில் பயணம் செய்தனர். திடீரென்று அருந்ததியரின் கை அவர்கள் மேல்பட்டுவிட்டதாகக் கேவலமாக பேசினர். எதிர்த்துக் கேட்டவுடன் சாதியைச்

www.tamilarangam.net



சொல்லியபடியே திட்டி இவர்கள் அனைவரையும் தாக்கியுள்ளனர். பிரச்சனை பெரிதாவதைக் கண்ட பேருந்து ஓட்டுனர் பேருந்தை தாராபுரம் போலீஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்றுள்ளார். அருந்ததியர் புகார் கொடுக்க குற்ற எண்.353/93 இந்திய தண்டனைச் சட்டப்பிரிவு 323-னில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் r/w 3 (1) (X) பேருந்தில் பயணம் செய்த கவுண்டர்கள் அனைவரையும் கைது செய்துள்ளனர்.

இந்நிலையில் கவுண்டர்களை கைது செய்ததை எதிர்த்து உள்ளூரிலும், சுற்றுவட்டார கிராமங்களிலும் கவுண்டர்களைத் திரட்டி சாலை மறியல் மற்றும் போராட்டம் நடத்தும் முயற்சியில் மணக்கடவைச் சேர்ந்த ஊராட்சித் தலைவர் வெங்கிடுசாமி மற்றும் சிலர் ஈடுபட்டிருக்கின்றனர். அதனைத் தொடர்ந்த வாரத்தில் பாராளுமன்ற தேர்தல் நடக்கவிருந்ததால் மணக்கடவிலும் அதனைச் சுற்றிலும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. கவுண்டர்கள் திட்டமிட்டபடி 8.9.99 அன்று கைது செய்யப்பட்ட 3 பேரையும் விடுவிக்க வேண்டுமென்று சாலை மறியலுக்கு முயன்றுள்ளனர். ஆனால் அதிகாரிகளின் எச்சரிக்கையாலும், அம்மூவரையும் ஜாமீனில் வெளியே எடுக்க முயற்சிக்கலாம் என்ற அறிவுறுத்தலாலும் கலைந்து போயுள்ளனர். 11.9.99 அன்று தேர்தல் என்பதாலும் அதைத் தொடர்ந்து 2 தினங்கள் விடுமுறை ஆனதாலும் ஜாமீனில் வெளியே எடுக்க முடியாது என்பதை அறிந்த கவுண்டர்கள் மணக்கடவு மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் தேர்தலை புறக்கணிப்பு செய்துள்ளனர்.

இதனையொட்டி கவுண்டர்கள் மற்றும் அருந்ததியர் மீது குற்ற எண்.77/99, 78/99, 79/99, 81/99, 82/99, 83/99, 84/99 ஆகியவற்றின் கீழ் வழக்குகள் பதிவாகியுள்ளன. காவல்துறை கவுண்டர்கள் மற்றும் அருந்ததியர் பலரையும் கைது செய்துள்ளனர்.

மணக்கடவு கிராமத்தில் நெடுங்காலமாகத் தீண்டாமை பின்பற்றப்பட்டு வந்துள்ளது. அருந்ததியரின் பல்வேறு எதிர்ப்புகளினால் இரட்டை தம்ளர் முறை ஒழிக்கப்பட்டாலும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு எதிராகக் கொடுமைகளும் சாதீய உணர்வும் இன்னும் அகன்று விடவில்லை. அதற்கு அரசும் சரியான முயற்சியை மேற்கொள்ளவில்லை.

## தேர்தல் வன்முறைகள்

### 18. சிதம்பரம்

**சிதம்பரம் நாடாளுமன்றத் தொகுதியில் 5.9.99** அன்று நடந்த நாடாளு**மன்றத் தேர்தலில் விடுதலைச் சிறுத்தைகள்** அமைப்பின் சார்பில் அதன் மாநில **அமைப்பாளர் இரா.திருமாவளவனும், பாட்டா**ளி மக்கள் கட்சி சார்பில் மாநில பொதுச்செயலாளர் பேரா.பொன்னுசாமியும் தேர்தலில் போட்டியிட்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



### அம்பாள்புரம் கிராமம்

கடலூர் மாவட்டம் புவனகிரி போலீஸ் நிலைய எல்லைக்குட்பட்ட அம்பாள்புரம் கிராமத்தில் வன்னியர் இனத்தவர்களின் 300 வீடுகளும், தலித் சமூகத்தினரின் 100 வீடுகளும் உள்ளன. வன்னியர் பகுதியுள்ள பஞ்சாயத்து ஒன்றியப் பள்ளியில்தான் வாக்குச்சாவடி அமைத்திருந்தனர். 5.9.99 அன்று காலை 11 மணிக்கு தலித் சமூகத்தைச் சேர்ந்த செல்வராஜ், அவரது மனைவி தாமரைச்செல்வியும் வாக்குச் சாவடிக்குச் சென்ற போது ஒட்டுக்களை ஏற்கெனவே வேறு யாரோ போட்டு விட்டதாகக் கூறப்படுகிறது. அதனால் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பினர் 'யார் ஒட்டுப் போட்டது?' எனக்கேட்க, வன்னியர்கள் தாக்குதலில் இறங்கி விட்டனர். தலித் மக்களை சாவடிக்குள் – ளிருந்து விரட்டி விட்டு வாக்குச்சாவடியை மூடிவிட்டனர். மறுபடியும் போலீசார் வந்தபின் வாக்குச்சாவடி திறக்கப்பட்டு ஓட்டுப் போட்டுள்ளனர். வன்னியர் கும்பலாக வந்து 6 ஆம் தேதி காலனிக்குள் வந்து தலித் மக்களை அடித்து வீடுகளை சூறையாடியுள்ளனர்.

### கிளாங்காடு கிராமம்

சேத்தியாதோப்பு போலீஸ்நிலைய எல்லைக்குட்பட்ட கிளாங்காடு கிராமத்தில் வன்னியர்களும் தலித் மக்களும் உள்ளனர். 5.9.99 அன்று வாக்குச்சாவடியில் பிற்பகல் நேரத்தில் இதுவரை வாக்கு போடாதவர்களுடைய வாக்குகளைப் போடவேண்டும் என்று கூறி வன்னியர்கள் கூட்டமாக வந்துள்ள – னர். வேட்பாளர் திருமாவளவனின் வாக்குச்சாவடி முகவரான செல்வம் மற்றும் மதியழகன் ஆகியோர் அவர்கள் ஒட்டுப்போடுவதை தடுக்க முயற்சித்துள்ளனர். உடனே, அது மோதலாக மாறி செல்வத்தின் வயிற்றில் அரிவாளால் வெட்டியுள்ளனர். சாவடிக்கு வெளியே மதியழகனின் காலை வெட்டியுள்ளனர்.

கிளாங்காடு தலித் மக்கள் கள்ள ஓட்டுப் போடுவது குறித்து போலீசுக்கு புகார் கொடுத்ததினால் 5 ஆம் தேதி இரவு 500 வன்னியர்கள் அரிவாள், பெட்ரோல் குண்டுகள், பெட்ரோல் மற்றும் மண்ணெண்ணையுடன் கிராமத்திற்குள் நுழைந்து மூன்று வீடுகளை தீ வைத்தனர். 6 ஆம் தேதி முதல் கிளாங்காடு வன்னியர்களுக்குச் சொந்தமான தேநீர் விடுதிகளிலும் பலசரக்கு கடைகளிலும் தலித் மக்களுக்கு பொருள்தர மறுத்து விட்டனர்.

### தெற்கு மாங்குடி கிராமம்

குமராச்சி காவல்நிலைய எல்லைக்குட்பட்ட தெற்குமாங்குடி கிராமத்தில் 120 தலித் குடும்பங்கள் உள்ளனர். இக்கிராமங்களைச் சுற்றி கத்திரிமேடு, வடக்கு மாங்குடி, கருப்பூர் ஆகிய கிராமங்களில் வன்னியர்கள் வசித்து வருகின்றனர்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தேர்தல் அன்று மதியம் 12.15 மணி வரை வாக்குப்பதிவு அமைதியாக நடந்து கொண்டிருந்தது. வடக்கு மாங்குடியை வன்னியர்கள் 30 பேர் கருப்பூர் வாக்குசாவடிக்கு வந்து தாங்கள் ஓட்டுப்போட வேண்டும் என பதட்டத்தை உருவாக்கினர். இதனால் வாக்குச்சாவடி இழுத்து மூடப்பட்டுள்ளது. மீண்டும் அவர்கள் மாலை 4 மணிக்கு கையில் கத்தி, டியூப் லைட், ஆகியவற்றை வைத்துக் கொண்டு தேர்தல் அலுவலர்களை மிரட்டியதால் வாக்குச்சாவடி திறக்கப்பட்டது. அங்கிருந்தவர்களை தாக்கிவிட்டு வந்த கும்பல் உள்ளே சென்று வாக்களித்துச் சென்றுள்ளனர்.

### நொச்சி மேடு

5 ஆம் தேதி மாலை நொச்சிமேட்டில் மூன்று தலித் வீடுகள் தீ வைத்து கொளுத்தப்பட்டன. 6.9.99 இரவு 10.30 மணியளவில் தெற்கு மாங்குடி ஊருக்குள் புகுந்த வன்னியர்கள் 150 தலித் வீடுகளை அடித்து நொறுக்கி, பாத்திரங்களையும், நகைகளையும் கொள்ளையடித்துச் சென்றுவிட்டனர்.

### பி.முட்லூர்

6 ஆம் தேதி காலை தலித் குழந்தைகள் பி.முட்லூரிலுள்ள பள்ளிக்குச் சென்ற போது அந்த ஊரைச் சேர்ந்த வன்னியர்கள் மிரட்டி அனுப்பியுள்ளனர். 6 ஆம் தேதி காலை 11 மணியளவில் தீர்த்தாம்பாளையம் தலித் மக்கள் பி.முட்லூர் கிராமத்தில் சாலை மறியலுக்காக திரண்டுள்ளனர். அப்போது போலீசார் அவர்கள்மீது தடியடி நடத்தி, வானத்தை பார்த்து துப்பாக்கிச் சூடு நடத்தி 17 பேரை கைது செய்துள்ளனர்.

இவ்வாறு சிதம்பரம் தொகுதி முழுவதும் வன்னியர்களுக்கும் தலித் – களுக்குமிடையே கலவரங்கள் நடந்துள்ளன. இதனால் பல கிராமங்களிலுள்ள எண்ணற்ற தலித் மக்கள் தாக்கப்பட்டதோடு கை, கால் முறிவு ஏற்பட்டு உடல் ஊனமடைந்துள்ளனர். வன்னியர்கள் திட்டமிட்டே கள்ள ஓட்டு போட்டுள்ளனர். அரசு தகுந்த பாதுகாப்பு தலித் கிராமங்களுக்கும், தலித் மக்களுக்கும் கொடுக்கத் தவறியதால் தலித் மக்களுக்கு அதிகமான பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

### மருதன்குடி - பஞ்சாயத்து தேர்தல்

மருதன்குடி மதுரை மாவட்டம் திருமங்கலம் வட்டம், கள்ளிக்குடி ஒன்றியத்திற்குட்பட்ட பஞ்சாயத்தில் உள்ளது. இங்கு அகமுடையார் சமூகத்தை சேர்ந்த சுமார் 200 குடும்பத்தினரும் பள்ளர் சமூகத்தைச் சேர்ந்த சராசரி 30 குடும்பங்களும், அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்த 20 குடும்பங்களும் வசித்து வருகின்றனர்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


1996 ஆம் ஆண்டு இப்பஞ்சாயத்து ஆதி திராவிடர்களுக்கென ஒதுக்கப்பட்டது. படித்த இளைஞரான மருதுபாண்டி, த.பெ. ராமன் என்பவர் ஆதிதிராவிட மக்களை ஒன்றிணைத்து தேர்தலில் போட்டியிடத் தயாரானார். அவர் தேர்தலில் போட்டியிடக்கூடாதென தேவர்கள் தீர்மானம் போட்டு ஊர்க்கட்டுப்பாடு விதித்தனர். கட்டுப்பாட்டை மீறி மனு தாக்கல் செய்யச்சென்ற மருதுபாண்டி 10.9.96 அன்று உயர்சாதியினரால் தாக்கப்பட்டார். இது தொடர்பாக கள்ளிக்குடி போலீஸ்நிலையத்தில் புகார் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதன்பின் தேர்தல் அறிவிக்கப்பட்ட போது, தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த அழகு, மருதமணி அழகு, பாக்கியம் என்பவர்கள் வேட்புமனு தாக்கல் செய்து, உயர்சாதியினரின் அச்சுறுத்தலுக்குப் பயந்து மனுவைத் திரும்பப் பெற்றனர். இவ்வாறு ஐந்து முறை தேர்தல் தள்ளி வைக்கப்பட்டது.

ஆறாவது முறையாக தேர்தல் 1999 மே மாதம் 26ம் தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. தேவரின மக்கள் தங்களுக்குச் சாதகமாக நாகர் என்ற அருந்ததியர் இளைஞரை தேர்தலில் நிறுத்தினர். இம்முறை நாகரை எதிர்த்து பள்ளர் சமூகத்தைச் சேர்ந்த மருதுபாண்டி நின்றார். மருதுபாண்டிக்கு 48 வாக்குகளும் நாகருக்கு 467 வாக்குகள் கிடைத்து நாகர் வெற்றி பெற்றார். மருதுபாண்டிக்கு 40 வாக்குகளே கிடைத்தன. நாகர் பதவி ஏற்ற மறுதினமே அவரது பெயரால் பத்திரிக்கையில் உயர்சாதியினர் அறிக்கை ஒன்றை வெளியிட்டனர். அந்த அறிக்கையில் மருதங்குடி பஞ்சாயத்து மக்களின் விருப்பப் படி இப்பஞ்சாயத்தை ஆதி திராவிடருக்கு ஒதுக்காமல் பொதுப்பஞ்சாயத்தாக அறிவிக்க வேண்டுமெனக் கேட்டு பஞ்சாயத்தில் தீர்மானம் நிறைவேற்றியதாக அதனடிப்படையில் தலைவரும், உறுப்பினர்களும் பதவி விலகுவதாகக் கூறப்பட்டிருந்தது. இந்தப் பத்திரிக்கைச் செய்தி மூலம் மறுதினமே நாகரை பதவி விலக வைத்தனர்.

### தலித் வேட்பாளருக்கு நேர்ந்த கதி

முன்னதாக, கடந்த 1996ம் ஆண்டுத் தேர்தலில், நூறு பேர் சேர்ந்து கொண்டு மருதங்குடி பஞ்சாயத்துத் தலைவர் பதவி பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பதற்கு நாங்கள் ஒருமனதாகச் சம்மதிக்கிறோம் என்று எழுதி தாழ்த்தப்பட்ட சமூக மக்கள் அனைவரிடமும் மிரட்டி கையெழுத்து வாங்கினர். அதில் கையெழுத்திட மறுத்த மருதுபாண்டியரை 31.8.96 அன்று அடித்து, கயிற்றால் கட்டித் தெருக்களின் வழியே இழுத்துச் சென்று மரத்தில் கட்டி வைத்து அவரது குடும்பத்தினரையும் சித்ரவதை செய்து அவருக்குச் சொந்தமான 1.30 ஏக்கர் நிலத்தை உக்கிரபாண்டித்தேவருக்கு ரூ.25,000–க்கு கிரையம் செய்வதாக எழுதி வாங்கிக் கொண்டு அவரை 1.9.96 அன்று ஊரை விட்டு துரத்தி விட்டனர். பின்னர், 10.9.96 அன்று வேட்பு மனு தாக்கல் செய்ய கள்ளிக்குடி ஆணையர்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


அலுவலகத்திற்கு சென்ற போது தேவரின மக்கள் மருதுபாண்டியரைத் தாக்கி காட்டுக்குள் தூக்கிச் சென்றனர். கள்ளிக்குடி போலீசார்தான் அவரைக் காப்பாற்றினார்கள்.

இரண்டாவது முறை தேர்தல் அறிவித்தபோது கிராமக் கூட்டம் போட்டு அவரை தேர்தலில் போட்டியிடக்கூடாது என எச்சரித்தனர்.

மூன்றாவது முறையாகத் தேர்தல் அறிவிக்கப்பட்ட வேளையில் மனுத்தாக்கல் செய்ய சென்ற போதும் நேரம் முடிந்து விட்டது எனக்கூறி அவரது வேட்புமனுவை நிராகரித்து விட்டார்கள்.

நான்காவது முறை தேர்தல் அறிவித்த போது அழகு, மருதமணி அழகு, பாக்கியம் ஆகிய மூவரும் மனுத்தாக்கல் செய்தனர். அவர்களை மிரட்டியதன் பேரில் மனுக்களைத் திரும்பப் பெற்றனர்.

ஐந்தாவது முறை அறிவிக்கப்பட்ட போது உயர்சாதியினரின் மிரட்டலுக்குப் பயந்து யாரும் வேட்புமனுத் தாக்கல் செய்யவில்லை.

ஆறாவது முறையாக தேர்தல் அறிவிக்கப்பட்ட சமயத்தில் 7.5.99 அன்று ஊரில் கூட்டம் போட்டு தேவர்கள் சார்பாக அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்த நாகரை வேட்பாளராக நிறுத்துவதென தீர்மானித்து வேட்புமனுத்தாக்கல் செய்தனர். 14.5.99 மருதுபாண்டியரும் வேட்பு மனுத்தாக்கல் செய்தார். இதனையறிந்து தொடர்ந்து ஊரில் கூட்டம் போட்டு, தாழ்த்தப்பட்டோர் யாரும் வாக்குச் சாவடிக்குச் செல்லக்கூடாது. மீறினால் மருதுபாண்டியைப் போல எல்லோரையும் ஊரை விட்டு விரட்டி விடுவோம் என அச்சுறுத்தியுள்ளனர்.

உயர்சாதியினருக்குப் பயந்து மருதுபாண்டி குடும்பத்தினரும், பாலகிருஷ்ணன் த.பெ. குருசாமி, குடும்பத்தினரும், ஆறுமுகம், த.பெ. குருசாமி, குடும்பத்தினரும், வேலு, த.பெ. சுப்பிரமணி, குடும்பத்தினரும், வேடசாமி, த.பெ. சின்னசாமி குடும்பத்தினரும், ராமர், த.பெ. கிருஷ்ணன் குடும்பத்தினரும், சுப்பு, த.பெ. சுப்பிரமணியன், குடும்பத்தினரும் ஊரை விட்டு வெளியேறியுள்ளனர்.

## 19. கண்டதேவி

சிவகங்கை மாவட்டத்திலுள்ள தேவகோட்டை வட்டத்தில் உள்ளது கண்டதேவி கிராமம். கண்டதேவியின் கீழ் உஞ்சனை நாடு, செம்பொன் மாரிநாடு, ஏரகசேரிநாடு, தென்னாலி நாடு ஆகிய நான்கு நாடுகளும், இந்த நான்கு நாடுகளும் 14 நாடுகளாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளன உஞ்சனை நாட்டிற்கு ராமசாமி அம்பலமும், செம்பொன் மாரி நாட்டிற்கு சூ.பா.ராமசாமி அம்பலமும், ஏரகசேரி நாட்டிற்கு பெரிய கருப்பன் அம்பலமும், தென்னாலி நாட்டிற்கு ரமேஷ் தென்னீர்வயலும் தலைவர்களாக உள்ளனர்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கண்டதேவியில் சொர்ணமூர்த்தி ஈஸ்வரர் கோவில் உள்ளது. இது சுமார் 100 ஆண்டுகளுக்கு மேலான பழமை வாய்ந்த கோவிலாகும். சிவகங்கை ராஜாவின் கட்டுப்பாட்டில் இக்கோவில் இருந்தது. சிவகங்கை ராஜா தன்னுடைய சாசனத்தில் (1)கள்ளர், மறவர், அகமுடியர், முத்திரையார், பள்ளர், பறையர், அருந்ததியர், செட்டியார் மற்றும் பிற சாதியினர் அனைவரும் உள்ளிட்ட நான்கு நாட்டாரிடமும் வசூலித்து விழா நடத்த வேண்டும் என்றும் (2) தேரில் உள்ள நான்கு வடங்களில் ஒவ்வொரு வடமும் ஒவ்வொரு நாட்டாருக்கும் இழுக்கும் உரிமை உள்ளது என்றும், (3) பள்ளர் தேரை மிதிமரம் போட்டு வெள்ளை வீசி ஆரம்பித்து வைக்க வேண்டும் என்றும் (4) வெள்ளை வீசிய பிறகு முக்குலத்தோராகிய நான்கு நாட்டாரும் வடத்தைப் பிடித்து தேரை இழுத்து செல்ல வேண்டும் என எழுதப்பட்டுள்ளது.

சாசனத்தில் இவை எழுதப்பட்டாலும் முக்குலத்தோர் சொல்வதுதான் சட்டமாக இருந்தது. கடந்த 48 ஆண்டுகளாக தலித் மக்களிடம் வரி வசூலிக்காமலேயே திருவிழா நடத்தி வந்தனர். தலித் மக்களும் தங்களுக்கு சட்டை போடக்கூட அனுமதிக்காதவர்களோடு விழாவில் எதற்கு பங்கெடுக்க வேண்டும் என ஒதுங்கிக் கொண்டனர். பணபலம், ஆட்பலம் கொண்ட முக்குலத்தோரை கண்டு பயத்திலே பெரும்பான்மையினர் இருந்தனர்.

இந்நிலையில் மாறி வரும் அரசியல் விழிப்புணர்ச்சியால் 7.7.98ம் தேதி திருவிழாவின் போது புதிய தமிழகத்தின் தலைவர் டாக்டர். கிருஷ்ணசாமி தலைமையில் வடம் பிடித்து இழுக்கப் போவதாக பத்திரிக்கை வாயிலாக செய்திகள் வர ஆரம்பித்தன. இதைக் கண்டு கோபமுற்ற தேவர்கள் மே மாதம் கண்டதேவி சிவகங்கை ராஜா சத்திரத்தில் கூடி, பழைய நடைமுறையைக் கடைப்பிடிப்போம் என ஒருவரித் தீர்மானத்தைப் போட்டு கலைந்துச் சென்றுள்ளனர். பின்னர் 7.7.99 அன்று 144 தடை உத்தரவு போடப்பட்டதால் கோவில் தேர்த்திருவிழா நடைபெறவில்லை.

கண்டதேவி சொர்ணமூர்த்தீஸ்வரர் கோவில் தேர் விழாவின் போது இருபிரிவினருக்கிடையே வடம் இழுப்பதில் ஏற்பட்ட பிரச்சினையினைத் தொடர்ந்து தேர் இழுப்பது தடை செய்யப்பட்டு 144 தடையுத்தரவு பிறப்பிக்கப் பட்டது. தடை செய்யப்பட்ட சொர்ணமூர்த்தீஸ்வரர் தேரை ஓட்ட அனுமதி கோாி தேவர் பேரவை சார்பாக நான்கு நாட்டாரும் டாக்டர் சேதுராமன் தலைமையில் 24.7.99 அன்று பேரணி நடத்தி கோட்டாட்சியரிடம் கோரிக்கை மனுவினை கொடுத்தனர்.

இப்பிரச்சனையின் காரணமாக கண்டதேவி தேர் இன்னும் இழுக்கப்படாமலே உள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## 20. பெரம்பலூர்

மரவனூர் கிராமம் அரியலூரில் இருந்து திருச்சி தஞ்சை செல்லும் சாலையில் 10 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள போக்குவரத்து வசதியில்லாத குக்கிராமமாகும். இக்கிராமத்தில் 350க்கும் மேற்பட்ட குடும்பங்கள் உள்ளன. இதில் உடையார், படையாச்சி மற்றும் பறையர் குடும்பங்கள் அதிகமாக வாழ்ந்து வருகின்றனர். காலனியில் வசித்து வந்த இராஜமாணிக்கம் என்பவரின் மகள் மாலா (வயது 7)வும் அவருடன் சஞ்சை காந்தியும் மற்றும் அவனது தம்பி தர்மாவும் தாங்கள் செய்த வேலைக்கு கூலி வாங்கிவர பழனிவேலு கவுண்டர் (45) தோட்டத்திற்கு 1.1.99 அன்று காலை 10 மணியளவில் சென்றுள்ளனர்.

பழனிவேலு கவுண்டர் அவர்களைத் தோட்டத்தில் பூ பறிக்குமாறு கூறியுள்ளார். நண்பகல் 12 மணி வரை பூ பறித்துள்ளனர். பிறகு அங்கிருந்த மற்றவர்களை வேறு வேலைக்கு அனுப்பி விட்டு சிறுமி மாலாவை பிடித்து வன்புணர்ச்சியில் ஈடுபட்டுள்ளார். இதனால் அச்சிறுமியின் இடது நெஞ்சினில் நகக்கீறல்களும், பிறப்புறுப்பில் உள்காயங்களும் ஏற்பட்டுள்ளன. இதன் காரணமாக உடல்வலி தாங்காத மாலா அழுது கொண்டே மாலை 3 மணியளவில் வீடு திரும்பியுள்ளார்.

2.1.99 அன்று கீழப்பழுவூர் போலீஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்ட மாலாவின் தந்தை புகார் செய்ய போலீசார் 'இதையெல்லாம் பெரிதுபடுத்தாதே ஊரில் உள்ள பஞ்சாயத்தாரிடம் பேசி முடிவு பண்ணு', என்று சொல்லி அனுப்பி விட்டனர்.

மாலாவின் பெற்றோர் பஞ்சாயத்தாரிடம் முறையிட பஞ்சாயத்தார் 5 ஆயிரம் பழனிவேலுக்கு அபராதம் விதித்தும், மாலாவின் மருத்துவச் செலவுக்கு 500 ரூபாயும் கொடுக்கவும் உத்தரவிட்டுள்ளனர்.

2.1.99 அன்று காலையில் மாலாவை அரியலூர் அரசு மருத்துவமனைக்கு அவளது தாய் கூட்டிச் செல்லவே அங்கிருந்த மருத்துவர்கள் மாலாவை பரிசோதித்தபின்னர் போலீசார் குற்ற எண் 7/99 இந்தியத் தண்டனைச் சட்டம் பிரிவு 376–ன் கீழ் வழக்கு பதிவு செய்து 3.1.99 அன்று பழனிவேலு கவுண்டரை கைது செய்துள்ளனர். பிறகு அப்பகுதியைச் சேர்ந்த சமூக அமைப்புகள் தலையீட்டின் பேரில் கூடுதலாக அவரின் மீது தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச்சட்டம் பிரிவு 3 (1) (XII) வழக்கையும் பதிவு செய்துள்ளனர்.

## 21. கோ.ஆதனூர்

கடலூர் மாவட்டத்திலுள்ள விருத்தாச்சலம் வட்டத்தின் கம்மாபுரம் போலீஸ் நிலைய சரகத்திற்குட்பட்ட பகுதியில் கோ.ஆதனூர் கிராமம் உள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இக்கிராமத்தில் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த பறையர்களும், இந்து படையாச்சிகளும் அதிகமாக வாழ்ந்து வருகின்றனர்.

பறையர் சமூகத்தைச் சேர்ந்த பெருமாள் என்பவரின் மகளான பொன்னருவி (21)யை அதே ஊரைச் சேர்ந்த தனராஜ் படையாச்சி மகன் இராஜசேகரன் கடந்த 1 ஆண்டு காலமாகக் காதலித்து வந்தார். இவர்கள் நெருக்கத்தைப் பார்த்த காலனி மக்கள் இராஜசேகரிடம் இந்த பெண்ணைத்தான் திருமணம் செய்து கொள்வேன் என்று எழுதி வாங்கியுள்ளனர். பொன்னருவி மூன்று மாத கர்ப்பிணியாகியுள்ளார். இராஜசேகர் தலித் பெண் பொன்னருவியை மணந்து கொள்வதாக எழுதிக் கொடுத்த விபரம் அவரது தந்தை தன்ராஜ் படையாச்சிக்குத் தெரிய வரவே காலனிக்குச் சென்று அந்த பத்திரத்தை வாங்கி கிழித்துப் போட்டுள்ளார்.

28.1.99 அன்று இரவு 10 மணியளவில் பொன்னருவி அவளது தங்கை பரிமளாவிடம், 'இராஜசேகர் என்னை வரச்சொல்லியிருக்கிறார். நான் போய் பார்த்துவிட்டு வந்து விடுகிறேன்' என்று சொல்லி வெளியே சென்றுள்ளார். மறுநாள் 29.1.99 காலை விடிந்தும் பொன்னருவி வராததினால் அவரது தங்கை பரிமளா இராஜசேகரிடம் போய், 'என் அக்கா எங்கே?' என்று கேட்டுள்ளார். அதற்கு இராஜசேகர் 'உன் அக்கா நெய்வேலி சென்று விட்டாள்', என்று சொல்லியுள்ளார். பிறகு பிற்பகல் 1 மணியளவில் 'நீ தான் என் அக்காவைக் கூட்டி வரவேண்டும்' என்று பரிமளா இராஜசேகரிடம் சொல்லவே அதற்கு, 'உன் அக்கா கோவில் மரத்தடியில் உட்கார்ந்திருக்கிறாள்', என்று சொல்லியிருக்கிறார். அவர் எல்லா கோவிலும் போய் தேடியுள்ளார். அங்குள்ள நல்லதங்காள் கோவிலுக்கருகில் உள்ள வன்னி மரத்தடியில் பொன்னருவி நிர்வாணமாக ஆக்கப்பட்டு, கொல்லப்பட்டு உட்கார்ந்த நிலையில் வைக்கப்பட்டிருக்கிறார். இதைக்கண்ட பரிமளா பொன்னருவின் அருகில் கிடந்த உடைகளை அவர் மீது போட்டு விட்டு வீட்டிற்கு வந்து பெற்றோர்களிடம் சொல்லியுள்ளார்.

அதன் பிறகு கிராமத்து ஊர் மக்கள் அனைவரும் சென்று உடலைப் பார்த்துள்ளனர். பொன்னருவியின் உடல் முழுவதும் காயங்கள் இருந்துள்ளன. குறிப்பாக, பொன்னருவியின் இடது கன்னத்திலும், இடது காதிலும் பற்கடிக் காயங்கள் காணப்பட்டுள்ள நிலையிலும் அடி வயிற்றுப் பகுதியிலும் காயங்களும், இரு பின் புட்டத்தில் சிராய்ப்புகளும் மற்றும் பிறப்புறுப்பு கிழிக்கப்பட்ட நிலையிலும் இருந்துள்ளன. மேலும் பொன்னருவியின் கழுத்துப் பக்கத்திலும் வீக்கம் காணப்பட்டுள்ளது. மேற்கண்ட நிலையில், பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டதாக பொன்னருவியின் கொலை குறித்து கம்மாபுரம் போலீஸ் நிலையத்தில் அவரது அண்ணன் பெ.நல்லதம்பி புகார் கொடுத்துள்ளார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


போலீசார் குற்ற எண்.26/99—ல் இந்திய குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 174 (3)—ன் கீழ் வழக்குப் பதிவு செய்து பொன்னருவியின் உடலை பிரேதப் பரிசோதனைக்காக விருத்தாச்சலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பியுள்ளனர்.

பொன்னருவி ராஜசேகரை திருமணம் செய்யச் சொல்லி கட்டாயப்படுத்தியதன் விளைவாக இக்கொலை நடந்திருக்கிறது. பொன்னருவி ஒரு திடகாத்திரமான பெண் என்பதால் அவளை ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் கூடி இக்கொலையை செய்துள்ளனர். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்ததற்காக ராஜசேகரின் குடும்பத்தினர் திட்டமிட்டு பாலியல் பலாத்காரம் செய்து பொன்னருவியைக் கொடூரமாக கொலை செய்துள்ளனர்.

இந்த வழக்கின் விசாரணை முடிந்து கடலூர் குற்றவியல் நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டது. இத்தீர்ப்பை வழங்கிய நீதிபதி அசோக்குமார், பொன்னருவியை ராஜசேகரன் உட்பட ஐந்து பேர் இணைந்து பாலியல் பலாத்காரம் செய்த குற்றத்திற்காக 736 (2). (ஜி), இந்திய தண்டனைச் சட்டப் பிரிவின் கீழ் ஆயுள் தண்டனையும், தாழ்த்தப்பட்டோர் வன்கொடுமை குற்றத்திற்காக 3(2), (5) பிரிவின் கீழ் மற்றொரு ஆயுள் தண்டனையும், 5 பேரும் சேர்ந்து பொன்னருவியை கொலை செய்த குற்றத்திற்காக இந்திய தண்டனைச் சட்டம் 302 பிரிவின் கீழ் தூக்குத் தண்டனையும் வழங்கி தீர்ப்பு கூறினார்.

## II. தீண்டாமைக் கொடுமையின் பன்முக வடிவங்கள்

'சாதி'யத்தின் பெயரால் உயர்சாதி, தாழ்த்தப்பட்ட சாதி என்ற கருத்தியலை உள்வாங்கி கொண்டு தாழ்த்தப்பட்ட மக்கள் மீது உயர்த்தப்பட்ட சாதியினர் எனச் சொல்லிக் கொள்பவர்கள் மேற்கொள்ளும் தீண்டாமைக் கொடுமைகள் ஏராளமானவை. தமிழகத்தில் உள்ள பெரும்பான்மையான கிராமப்புறங்களில் தீண்டாமைப் பழக்கம் இன்னும் நீடித்து வருகிறது. மக்கள் கண்காணிப்பகம்—தமிழ்நாடு கள ஆய்வு செய்த ஒரு சில மாவட்டங்களில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் தீண்டாமை வடிவங்கள் மட்டுமே இங்கு தரப்படுகின்றன. இதன் மூலம் தமிழகத்தின் மற்ற பகுதிகளில் தீண்டாமைக் கொடுமைகள் இல்லை என்ற முடிவுக்கு வரவேண்டியதில்லை.

### மேலநீலித நல்லூர் - திருநெல்வேலி மாவட்டம்

திருநெல்வேலி மாவட்டம் சங்கரன் கோவில் வட்டம், மேலநீலிதநல்லூர் ஒன்றியத்தில் உள்ள சொக்கநாச்சியார்புரம், கண்டங்குறிச்சி, பன்னீர்ஊத்து, வடக்கு அச்சம்பட்டி, மேல இலந்தைக்குளம், மூவிருந்தாளி, ஜமீன் இலந்தைக்குளம், மேலநீலிதநல்லூர், குருக்கள்பட்டி, பெரிய கோவிலான்குளம், நடுவக்குறிச்சி, மாயம்பாறை, பூவிலிங்கபுரம், பெரியசாமியாபுரம், கோ.மருதப்பபுரம்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆகிய கிராமங்களை மக்கள் கண்காணிப்பகம் ஆய்வு செய்த போது இக்கிராமங்களில் வெவ்வேறு வடிவங்களில் தீண்டாமை பழக்கம் கையாளப்படுவதை பார்க்க முடிந்தது.

**தீண்டாமை வடிவங்கள்**

**தனிக்குவளை**

- டீக்கடைகளில் தனிக்குவளைப் பயன்படுத்தப்படுகிறது. தேநீர் குடிக்க வரும் தாழ்த்தப்பட்ட மக்கள் தேநீர் குடித்தபின் குவளையை அவர்களே கழுவி அதற்கென்று ஒதுக்கப்பட்ட இடத்தில் குவளையை வைக்க வேண்டும். சில கடைகளில் தேங்காய் சிரட்டையும் பயன்படுத்தப்படுகிறது.
- டீக்கடையில் உயர்சாதியினரோடு ஒன்றாக உட்கார்ந்து சாப்பிட முடியாது.
- தாழ்த்தப்பட்ட மக்கள் டீக்கடைகளில் தரையில் தான் உட்கார வேண்டும். கடைத்திண்டில் உட்காரக் கூடாது.
- பள்ளர், பறையர், சக்கிலியர் என மூன்று சாதியினருக்கும் தேநீர்க்கடைகளில் தனித்தனிக் குவளைகள் பயன்படுத்தப்படுகின்றன.
- இங்குள்ள கள்ள சாராயக் கடையிலும்கூட தனிக்குவளைப் பழக்கம்தான் உள்ளது.

**பஞ்சாயத்து**

ஊர்க்கூட்டம் நடக்கும் போது தாழ்த்தப்பட்டோர் தலையில் துண்டு கட்டக் கூடாது. கையில்தான் துண்டு போட்டிருக்க வேண்டும். வேட்டியை மடித்துக் கட்டியிருக்கக் கூடாது. ஊர்ப்பஞ்சாயத்தை உயர்சாதியினர்தான் நடத்துவர். தாழ்த்தப்பட்டவருக்கு ஏதேனும் தண்டனை வழங்கி அதற்குரிய அபராதம் கட்ட முடியவில்லை என்றால் உயர்சாதி தலைவர் காலில் விழுந்து கும்பிட வேண்டும். தலித் மக்கள் பஞ்சாயத்தைத் தீர்ப்பதும் உயர்சாதியினர்தான்.

**குடிநீர்**

- தாழ்த்தப்பட்ட சாதியினர் உயர்சாதியினரின் கிணற்றில் தண்ணீர் எடுக்கக்கூடாது. உயர்சாதியினர் வீட்டில் அடிமை வேலை செய்பவர்கள் மட்டும் அவர்கள் தண்ணீர் எடுக்கும் போது தாழ்த்தப்பட்டோர் தண்ணீர் கேட்டு வந்தால் அவர்களுக்கு குடத்தில் தண்ணீர் மோந்து ஊற்றுவர்.
- தாழ்த்தப்பட்ட மக்களுக்கென்று போடப்பட்டுள்ள அடிகுழாயில் மேல் சாதியினர் தண்ணீர் எடுக்க வந்தால் உடனே விட்டுக் - கொடுத்துவிட வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


- பொதுக்கிணற்றில் தண்ணீர் எடுக்க முடியாது.
- தாழ்த்தப்பட்டோர் தண்ணீர் எடுக்கும் குழாயில் உள்ள தண்ணீர் உயர்சாதியினர் மேல் பட்டு விட்டால் தாழ்த்தப்பட்டோரின் குடத்தில் உள்ள தண்ணீரை உடனே உயர்சாதியினர் கீழே கொட்டி விடுவார்கள்.

**மரியாதை**

- உயர்சாதியினர் **தாழ்த்தப்பட்டோர் வயதில்** மூத்தவராக இருந்தாலும் "வா, போ" என்ற ஒருமையில்தான் பேசுவர். தாழ்த்தப்பட்டோர் உயர்சாதியைச் சார்ந்த வயதில் சிறியவர்களைக் கூட வாங்க, போங்க என்று மரியாதையாகத்தான் பேச வேண்டும்.

**பள்ளிக்கூடம்**

- பள்ளிக்கூடத்தில் தாழ்த்தப்பட்ட குழந்தைகளுக்குச் சத்துணவு கொடுத்து விட்டு அக்குழந்தைகளுக்குக் குடிக்கத் தண்ணீர் கொடுக்க மாட்டார்கள்.
- தலித் மக்கள் வாழும் பகுதியில் உள்ள பள்ளிக்கூடங்களுக்கு சரியான கட்டிடமே கிடையாது.

**கோவிலில் அனுமதியில்லை**

உயர்சாதியினர் கோவிலுக்குள் தலித் மக்கள் நுழைந்து சாமி கும்பிட முடியாது. வெளியே நின்றுதான் கும்பிட வேண்டும்.

**அடிமை வேலை**

- உயர்சாதி இந்துக்கள் இறந்தால் தாழ்த்தப்பட்ட மக்கள்தான் ஊர்களுக்கு இழவுச் செய்தி சொல்ல வேண்டும்.
- தாழ்த்தப்பட்ட மக்கள் தான் பிணக்குழி தோண்டுவது, பிணத்தின் மீது விறகு அடுக்குதல், பிணம் எரிப்பது, புதைப்பது போன்ற வேலைகளைச் செய்ய வேண்டும்.
- செத்த மாடுகளை அப்புறப்படுத்த வேண்டும்.
- மேல்சாதியினர் யாராவது இறந்தால் அவர் வீட்டில் வேலை செய்யும் தாழ்த்தப்பட்டவர் மொட்டை போட வேண்டும். கூலி வாங்காமல் 16 நாட்கள் அந்த வீட்டைத் துப்புரவு செய்ய வேண்டும்.
- உயர்சாதியினரின் மாட்டுத் தொழுத்தைச் சுத்தம் செய்ய வேண்டும். மாட்டுச் சாணியைத் தாழ்த்தப்பட்டவர் தலையில் தூக்கித்தான் கொண்டு சென்று குப்பையில் கொட்ட வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



- உயர்சாதியினரின் வீட்டில் வேலை பார்க்கும் பொழுது அவர்கள் வீட்டுப் பாத்திரங்களைத் தொடக் கூடாது. தண்ணீர் தேவையென்றால் கையைக் கூப்பி வாங்கிக் குடிக்க வேண்டும்.

### கட்டுப்பாடுகள்

- உயர்சாதியினர் தெருவுக்குள் மிதிவண்டியில் ஏறிச் செல்லக் கூடாது. இறங்கித்தான் செல்ல வேண்டும்.
- ஊரில் முடி வெட்டக் கூடாது, ஊரில் உள்ள நாவிதர் உயர்சாதியினருக்கு மட்டும்தான் முடி வெட்டுவார்.
- ஊரில் துணி வெளுக்கக் கூடாது. ஊரில் உள்ள வண்ணார்கள் உயர்சாதியினருக்கு மட்டும்தான் துணிவெளுப்பார்கள்.
- உயர்சாதி இந்துக்கள் தாழ்த்தப்பட்டோர் வீட்டில் சாப்பிட மாட்டார்கள். தாழ்த்தப்பட்டவர்கள் பாத்திரத்தில் சமைத்த எதையும் உயர்சாதியினர் உண்ண மாட்டார்கள். தண்ணீர்கூடக் குடிக்க மாட்டார்கள்.
- ஊர் பேருந்து நிறுத்தத்தில் உள்ள இருக்கையில் தாழ்த்தப்பட்டோர் உட்காரக் கூடாது.
- தாழ்த்தப்பட்டோர் சுடுகாட்டுக்குப் பாதை கிடையாது. உயர்சாதியினர் தெரு வழியாகப் பிணத்தை எடுத்துச் செல்லவும் கூடாது.
- பலசரக்குக் கடைகளில் உயர்சாதியினருக்கு இடம் விட்டு ஒதுங்கி நின்றுதான் பொருள் வாங்க வேண்டும்.
- உயர்சாதியினர் தெருவுக்குள் செருப்புப் போட்டு நடக்கக்கூடாது. செருப்பைக் கையில் தூக்கிக் கொண்டுதான் செல்ல வேண்டும்.
- அழகாக முடிவெட்டிக் கொண்டு போகக் கூடாது.
- நல்ல துணி அணிந்து செல்லக் கூடாது.

### பெண்

- பெண்கள் அடுப்படியில் இருக்கும்போது உயர்சாதி ஆண்கள் அந்த அடுப்பில் வந்து பீடி பற்ற வைப்பார்கள். அப்பெண்கள் எப்போதுமே உயர்சாதி ஆண்களின் வக்கிர இம்சைகளுக்கு ஆளாவார்கள்.

இக்கிராமங்களில் நடப்பது போன்றுதான் தமிழகத்தின் பல்வேறு கிராமங்களிலும் தீண்டாமைக் கொடுமைகள் நடந்து வருகின்றன. ஈரோடு


தமிழரங்கம் நூலகம்

www.tamilarangam.net



மாவட்டம், பல்லடம், அவினாசி ஆகிய இரண்டு தாலுகாக்களில் உள்ள ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறிய தறிக்கம்பெனிகளில் தாழ்த்தப்பட்டோருக்கு என்று தனிக்குவளை பயன்படுத்துகின்றார்கள்.

அதிகமான தாழ்த்தப்பட்ட கிராமங்களில் சுடுகாட்டுக்கு தனிப் பாதையில்லை.

பேருந்தில் பயணம் செய்யும் போது உயர்சாதியினர் நின்றால் தாழ்த்தப்பட்டோர் தன்னுடைய இருக்கையில் இருந்து எழுந்து உடனே இடம் கொடுத்து விடுகின்றனர். அவ்வாறு இடம் கொடுக்கவில்லை என்றால் ஊருக்குள் வந்து தாழ்த்தப்பட்டோர் மீது தாக்குதல் நடத்துகின்றனர்.

தாழ்த்தப்பட்டோர், உயர்சாதியினர் இடையே காதல் உருவாகினால் இருவரையும் உயர்சாதியினர் எரித்துக் கொள்வது அல்லது தாழ்த்தப்பட்ட சமூக பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்து கொல்வது போன்ற சம்பவங்களும் தமிழகத்தில் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றன.

### சமத்துவபுரத்திலும் தீண்டாமை

அண்மையில் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள அரசனூர் சமத்துவ புரத்திலும் தீண்டாமை கொடுமைகள் நிகழ்ந்துள்ளன. கிராமமக்கள் சமத்துவ புரத்தை விட்டே வெளியேறியுள்ளனர். இவ்வாறு தீண்டாமை பழக்க வழக்கங்கள் தமிழகத்தில் அதிகரித்துக் கொண்டேயிருக்கின்றன. தனிக்குவளை பயன்படுத்து வதை கண்டித்து புகார் செய்ததால் குவளை இல்லாமல் பிளாஸ்டிக் கப் பயன்படுத்தி அதற்கு இதுதான் விடை என்கின்றனர். சில இடங்களில் தாழ்த்தப்பட்ட சாதியினர் பயன்படுத்திய பிளாஸ்டிக் கப் காற்றில் பறந்து பக்கத்து கடைக்கு சென்றதினால் அதனாலும் தகராறுகள் நிகழ்ந்துள்ளன.

### கரூர் மாவட்டம்

கரூர் மாவட்டம் தெத்துப்பட்டி பஞ்சாயத்திற்குள்ளான தெத்துப்பட்டி, கஞ்சமானம்பட்டி, வேலன் செட்டியூர், ஆலமரத்துப்பட்டி பஞ்சாயத்திற்குள்ளான ஆண்டிபட்டி கோட்டை, எருமார்பட்டி பஞ்சாயத்திற்குள்ளான எருமார்பட்டி, பண்ணைப்பட்டி, ஈசநத்தம் பஞ்சாயத்திற்குள்ளான குன்னம்பட்டி, அரவக்குறிச்சி பஞ்சாயத்திற்குள்ளான தலையூர், கொத்துப்பாளையம், புங்கம்பாடி மேல் பஞ்சாயத்திற்குள்ளான பெ.வளையம்பட்டி, கணக்கன் வேலம்பட்டி, ஆரியூர், உத்திராசப்பட்டி, புங்கம்பாடி கீழ் பஞ்சாயத்திற்குள்ளான வெஞ்சமான் கூடலூர், நந்தனூர் பஞ்சாயத்திற்குள்ளான பாதநத்தம், நாகம்பள்ளி, கொடையூர் பஞ்சாயத்திற்குள்ளான ஊத்துக்கரைப்பட்டி, ஐந்து ரோடு, மணல்மேடு, புதூர் ஆகிய கிராமங்களில் தனிக்குவளை முறை உள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



- சாதி இந்துக்கள் உள்ள தெருவில் போகும் போது செருப்பு மற்றும் சட்டை போடக்கூடாது. சவ ஊர்வலத்திற்கு கண்டிப்பாக தப்பு அடித்து வரவேண்டும். சட்டை போடாமல் தப்பு அடிக்க வேண்டும். வீதி கூட்ட வேண்டும். இந்த வேலைகளுக்கு சம்பளம் கிடையாது. சோறுதான் போடுவார்கள். 'சாமீ, எஜமான்' என்றுதான் உயர்சாதியினரைக் கூப்பிட வேண்டும்.

- வீதியோரத்தில் உள்ள தங்கள் வீட்டின் முன்பு அனைவரும் பார்க்கும்படி கட்டில் போட்டு உட்காரக்கூடாது.

- இங்குள்ள அருந்ததியர்கள் தங்கள் குடும்பத்தில் இறந்தவர்களை அலங்காரம் செய்யக் கூடாது. அவர்களின் சவ ஊர்வலத்தில் தப்பு அடிக்கக் கூடாது. மரணமடைந்தவர் வீட்டிற்கு உயர்சாதியினர் வந்தால் அவரின் காலைத் தொட்டு கும்பிட்டு ஒப்பாரி வைத்து அழவேண்டும்.

- அருந்ததியர்கள் தங்கள் வீட்டில் உணவு அருந்தி இருந்தால்கூட உயர்சாதியினர் போடும் உணவை கண்டிப்பாக வாங்கிக் கொள்ள வேண்டும். மறுத்தால் தண்டம் கட்ட வேண்டும்.

## பொதுவான பரிந்துரைகள்

1. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்புச்) சட்டம் (1997) பிரகடனப்படுத்தப்பட்டு 10 ஆண்டுகளுக்கு மேல் ஆகியும் தாழ்த்தப்பட்டவர்கள் மீதான வன்முறைகளும், தீண்டாமைக் கொடுமைகளும் குற்றச் சம்பவங்களும் குறையாமல் அதிகரித்தே வருகின்றன. மத்திய அரசும் மாநில அரசும் இச்சட்டத்தை அமல்படுத்து – வதற்குப் போதிய முக்கியத்துவம் அளிப்பதில்லை என்பதையே இது காட்டுகிறது. நாட்டின் மக்கள் தொகையில் பாதிக்கும் மேலான தாழ்த்தப்பட்ட மக்களிடம் உயர்சாதியினராரும், சில சமயங்களில் அரசு நிறுவனங்களாலும் கடைப்பிடிக்கப்படும் தீண்டாமையானது இனப் பாகுபாட்டிற்கு (Racial Discrimination) எந்த வகையிலும் குறைந்தது அல்ல. எனவே சாதியத் தீண்டாமையானது இனப்பாகுபாடு குறித்த அகில உலகப் பிரகடனத்தில் இணைக்கப்பட வேண்டும். ஏற்கனவே ஐ.நா–வின் 49–வது அமர்வில் கொண்டு வரபட்ட இனப்பாகுபாட்டிற்கு எதிரான பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

2. இந்திய நாட்டின் முக்கியமாக தமிழகத்தின் கோடிக்கணக்கான தலித் மக்களின் உயிர் வாழ்தலையே தீண்டாமையானது நேரடியாக பாதிக்கக் கூடியது என்பதால் இதை ஒரு தீவிர இனப்பாகுபாடாகவும் தீண்டாமை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கடைப்பிடித்தலை, "இன ஒதுக்கம்" என்று கருதும் அளவிற்கு பாவித்து அரசு தீவிர நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் அதற்கான முதற்கட்ட நடவடிக்கைகளாக,

அ) தலித்துகளின் மீதான வன்முறைகள் பற்றிய உண்மை (வெள்ளை) அறிக்கையொன்றை மத்திய அரசும், தமிழக அரசும் வெளியிட வேண்டும்.

ஆ) தேசிய, தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் மற்றும் மலம் அகற்றும் தொழிலாளர்கள் ஆணையங்களின் ஆண்டறிக்கைகளை நாடாளுமன்றத்திலும் மாநில சட்டமன்றங்களிலும் விவாதிப்பதை கட்டாயமாக்க வேண்டும்.

இ) தாழ்த்தப்பட்டோர் வன்கொடுமை தடுப்பு விதிகளின் படி (1995) தலித் மக்கள் மற்றும் அவர்கள் உடமை பாதுகாப்பிற்கு உத்தரவாதம் தரும் வகையிலும் உயர்சாதியினரின் தாக்குதல்களிலிருந்து தம்மைக் காத்துக் கொள்ளவும் ஆயுதங்களை வைத்திருப்பதற்கான உரிமங்களை தலித் மக்களுக்கு வழங்க வேண்டும்

ஈ) இதற்காக கிராமங்கள் தொடங்கி அனைத்துப் பகுதிகளிலும் தலித்துகள் பாதுகாப்புக் குழுக்கள் அமைப்பது கட்டாயமாக்கப்பட வேண்டும்.

3. தாழ்த்தப்பட்டோர் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை எழுத்திலும், உணர்விலும் அமலாக்கப்பட வேண்டும்.

அ. தலித்கள் மீது நடத்தப்பெறும் வன்முறைகளுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்காத போலீஸ் அதிகாரிகள் மீது கிரிமினல் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

ஆ. தலித் மீது நடத்தப்பெறும் வன்முறைகள் நடைபெறும்போது உரிய நேரத்தில் உரிய நடவடிக்கை எடுக்காத போலீஸ் அதிகாரிகளை இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு பொறுப்பாளியாக்க வேண்டும்.

இ. சட்டத்தை அமலாக்கும் பொறுப்பிலுள்ள அரசு அதிகாரிகளுக்கு மனித உரிமைகள் பற்றி குறிப்பாக தலித் மனித உரிமைகள் பற்றிய பயிற்சிகளை முறையாக அளிக்கப்பட வேண்டும்.

4. தனது கடமையை செய்யத் தவறும் அரசு ஊழியரை இந்தச் சட்டத்தின் பிரிவு 4இன் கீழ் தண்டிக்க வகை செய்யப்பட்டுள்ளது. ஆனால், தலித் மக்கள் புகார் கொடுக்கச் சென்றால் அதைப் பதிவு செய்யாத போலீஸ் அதிகாரிகள் மீது இதுவரை ஒரு இடத்தில் கூட இந்தச் சட்டப்பிரிவு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


பயன்படுத்தப்படவில்லை. எனவே, இப்பிரிவை முறையாகப் பயன்படுத்த வேண்டும்.

5. தலித் மக்கள் புகார் செய்யும் போது அவர்களை சாதி வெறியர்களோடு சமாதானமாகப் போகும்படி காவல்துறையினர் வற்புறுத்துகின்றனர். இப்படி செய்யும் காவல்துறை அதிகாரிகள் மீது, எஸ்.சி./எஸ்.டி. வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் பிரிவு 4இன் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

6. சாதி வன்முறைக்கு ஆளான கிராமங்களிலிருந்து சாதிக் கலவரத்தில் அடிக்கடி ஈடுபடுபவர்களை நிரந்தரமாக வெளியேற்ற இந்தச் சட்டத்தில் இடமுள்ளது. அதை முறையாகப் பயன்படுத்த வேண்டும்.

7. தலித் மக்களைத் துன்புறுத்தும் போலீசார் மீது இந்த சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

8. சாதிய வன்முறையால் பாதிக்கப்படும் தலித் மக்களுக்கு மறுவாழ்வு அளிக்க இச்சட்டத்தில் உள்ள பிரிவுகள் பயன்படுத்தப்பட வேண்டும்.

9. தலித் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் 22 பிரிவுகளாக இச்சட்டத்தில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஆனால், பிரிவு 3 (1) (X) இன் கீழ் மட்டும் தான் காவல்துறை வழக்கு பதிவு செய்கிறது. சாதிப் பெயரைச் சொல்லி இழிவுபடுத்துதல் என்ற சாதாரண குற்றம் பற்றிய பிரிவு இது. எனவே, இந்திய அரசு தலித் மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் இந்த சட்டத்தின் மற்ற பிரிவுகள் குறித்து அனைவரும் அறியும்படி பிரச்சாரம் செய்ய வேண்டும்.

10. இந்தச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள நீதிமன்றங்கள், குற்றங்களைப் பதிவு செய்யும் அதிகாரம் கொண்ட நீதிமன்றங்கள் அல்ல என்று (Not a court of original jurisdication) உச்சநீதிமன்றம் அண்மையில் தீர்ப்பளித்துள் – ளது. இதனால் காலதாமதம் ஏற்படும். எனவே, இச்சட்டத்தின் கீழ் அமைக்கப்படும் நீதிமன்றங்கள் குற்றங்களைப் பதிவு செய்யும் அதிகாரம் கொண்ட நீதிமன்றங்களாக, பதிவு செய்யும் அதிகாரம் கொண்ட நீதிமன்றங்களாக, அமையும்படி இந்த சட்டத்தின் பிரிவுகள் திருத்தப்படவேண்டும்.

11. உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றங்களுக்கு இணையாக, தீண்டாமை பற்றி விசாரிக்க தனி நீதிமன்றங்களை அமைத்து அவை குறிப்பிட்ட காலத்திற்குள் நீதி வழங்க ஏற்பாடு செய்யவும் வேண்டும்.

12. தலித் மக்களின் மீதான உயர்சாதியினரின் வன்முறைக்கு போலீஸ் துறை – யினரும் துணை போவதைத் தடுக்க தலித் மக்களின் எண்ணிக்கைக்கு


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஏற்ப, போலீஸ்துறையில் தலித் மக்களின் பிரதிநிதித்துவமானது மத்திய, மாநில அளவில் உயர்த்தப்பட வேண்டும்.

13. மனித குலத்தின் நாகரீகத்தை வேரோடு புதைக்கும் 'கையால் மலம் அள்ளும் துப்புரவுத் தொழிலாளர் முறை'-யை ரத்து செய்ய வேண்டும். இதற்காகக் கையால் மலம் அகற்றுவோரை வேலைக்கமர்த்தல் மற்றும் வசதியற்ற பாதாள சாக்கடை கழிப்பறைகள் (தடைச்) சட்டம் 1993-ஐ முழு வீச்சுடன் அமல் செய்ய வேண்டும்.

14. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்புச்) சட்டம் சரியாகச் செயல்படுவதை கண்காணிக்க மாநில அளவில் கண்காணிப்புக் குழு ஒன்றை ஏற்படுத்த வேண்டும்.

15. பத்திரிக்கை, தொலைக்காட்சி போன்ற ஊடகச் சாதனங்கள் மூலம் அரசே சட்டபூர்வமாக தீண்டாமை தடைசெய்யப்பட்டது குறித்தும், தலித் மீதான வன்முறைக்கு எதிரான பிரச்சாரங்களையும் மேற்கொள்ள வேண்டும்.

16. தலித் மக்கள் மீது வன்முறையைத் தூண்டும் சாதி அமைப்பின் தலைவர்கள் மீது கடும் கிரிமினல் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

17. சாதிய வகுப்பு வாதத்தை வளர்க்கும் வகையில் செயற்படும் சாதீயக் கட்சிகளைத் தடை செய்யும் வகையில் தேர்தல் சட்டங்களைத் திருத்த வேண்டும்.

18. சாதிய ஆதிக்கம் கோலோச்சுகின்ற பஞ்சாயத்துகள் கலைக்கப்பட வேண்டும். சாதி, தீண்டாமையை அமல்படுத்தும் பஞ்சாயத்துகள் மற்றும் அதன் தலைவர்கள் மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

19. தலித் மக்கள் அங்கம் வகிக்கும்/தலைவர்களாக இருக்கும் பஞ்சாயத்து களுக்கு அரசு சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும். அதன் உறுப்பினர் - களுக்கு சிறப்பு பாதுகாப்பு படை அளிப்பது உள்ளிட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அப்போதே மேலவளவு போன்ற படுகொலைகள், தலித் மக்கள் பஞ்சாயத்துத் தேர்தலில் போட்டியிடுவதை தடுப்பது போன்றவை தடுக்கப்படும்.

20. பல ஆயிரம் ஆண்டுகளாக சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், மிகவும் பின்தங்கியுள்ள ஒவ்வொரு குடிமகனும், தரமான வாழ்வினைப் பெறுவதற்குரிய சுகாதார வசதி, உணவு, உடை, மருத்துவ வசதி பெறுவதற்கு உரிமை உண்டு என்று அகில உலக மனித உரிமைப் பிரகடனத்தின் பிரிவு 25-ல் கூறப்பட்டுள்ளதை நடைமுறைப்படுத்த, அரசானது தலித் மக்களின் கல்வி பொருளாதார வசதி, பெறும் வகையில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தனிக்கவனம் செலுத்த வேண்டும் இந்திய அரசியல் சாசனம், (அரசின் கொள்கைக்கான வழிகாட்டுதல்கள் பிரிவு 46 ஆனது) இதையே உறுதி செய்துள்ளது.

21. இதுவரை மத்திய அரசும், மாநில அரசுகளும் இட ஒதுக்கீட்டை அமல்படுத்திய நிலை குறித்து உண்மையறிக்கை ஒன்றை கொண்டு வந்து பொதுமக்களின் விவாதத்திற்காக நாடாளுமன்றம் மற்றும் சட்டப் பேரவைகளில் வைக்க வேண்டும்.

22. ஒவ்வொரு தலித் மீதான வன்முறையின்போது முதலில் பாதிக்கப்படுவது தலித் பெண்களே. தலித் பெண்கள் அவர்கள் எவ்வயது உடையவராக இருப்பினும் அவர்கள்மீது கோரமான பாலியல் வன்முறையே கட்டவிழ்த்து விடப்படுகிறது. எனவே இந்நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்க,

அ) பெண்கள் என்ற பொதுவான வகைப்படுத்தலின் தலித் பெண்களை இணைக்காமல் அவர்களை தனியான ஒரு சமூகக் குழுவாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.

ஆ) திட்டம் தீட்டும்போதும், நிதி ஒதுக்கீடு செய்யும்போதும் கல்வி மற்றும் வேலைகளில் இட ஒதுக்கீடு வசதிகளை பகிர்ந்தளிக்கும் போதும் தலித் பெண்களுக்கென சிறப்பு மற்றும் தனிப்பட்ட இடமளிக்க வேண்டும்.

இ) தேசிய பெண்கள் ஆணையம், தேசிய மனித உரிமை ஆணையம், தேசிய தலித்–பழங்குடி மக்களுக்கான ஆணையம், கையில் மலம் அள்ளுவோர் துப்புரவுத் தொழிலாளர்களுக்கான ஆணையம் (சபாய் கரம்சாரிஸ் ஆணையம்) ஆகியவற்றிற்கு சிறப்பாக தலித் பெண்களின் பிரச்சனைகளை கவனிப்பதற்கு அதிகாரமளிக்க வேண்டும்.

ஈ) தலித் பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகளைக் கண்காணிக்க தேசிய மற்றும் மாநில அளவிலான சட்டபூர்வ அமைப்பை ஏற்படுத்த வேண்டும்.

உ) தலித் பெண்களின் நிலைமை மற்றும் அவர்கள் மீது இழைக்கப்படும் வன்முறைகள் குறித்து நாடாளுமன்றத்திலும் சட்டப் பேரவைகளிலும் முறையான காலங்களில் வெள்ளை அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

ஊ) தலித் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்கள், வன் கொடுமைகள் ஆகியவற்றுக்கு போலீஸ் அதிகாரிகளைப் பொறுப்பாக்க வேண்டும். அவர்களின் கடமை தவறிய குற்றத்திற்காகக் கடுமையான தண்டனை நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# VII. குழந்தை உரிமைகள்

மனித வாழ்க்கையில் குழந்தைப் பருவம் என்பது மிகவும் உன்னதமான பருவம் ஆகும். மனித குலம் இந்த உன்னதமான கிடைத்தற்குரிய பருவத்தை ஆரோக்யமான முறையில் கடக்கும் போதே சிறந்த எதிர்காலத் தலைமுறை உருவாகிறது. பிறக்கின்ற ஒவ்வொரு குழந்தைக்கும் சரியான போதுமான சத்துணவைப் பெற, பெற்றோர்களின் அரவணைப்பையும் ஆதரவையும் பெற, ஆரோக்யமான சூழலில் அமைந்த உறைவிடத்தைப் பெற, சிறந்த கல்வியைப் பெற, விளையாட்டு மற்றும் பொழுது போக்குகளில் ஈடுபட, கருத்துக்களை பேசவும், எழுதவும், வெளிப்படுத்தவும் பாலியல் உள்ளிட்ட பல்வகைச் சுரண்டல் – களிலிருந்து தன்னை தற்காத்துக் கொள்வது உள்ளிட்ட அனைத்துவகை மனித உரிமைகளும் உண்டு என்று ஐ.நா.சபையின் குழந்தைகள் உரிமைகள் குறித்த உடன்பாடு பிரகடனப்படுத்துகிறது.

இந்தியாவின் அரசியல் சாசனத்திலும் குழந்தை உரிமைகள் உறுதி செய்யப்பட்டு குழந்தை தொழிலாளர் முறை தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால் மற்ற நாடுகளை ஒப்பிடும் போது இந்தியாவில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் குழந்தைகளின் நிலைமை மிகவும் வேதனை அளிப்பதாகவே உள்ளது.

உலக அளவில் மொத்தம் 25 கோடி குழந்தைகள் தொழிலாளர்களாகத் துயருற்று கொண்டிருக்கின்றனர். இவர்கள் உடல்ரீதியாகவும், உளவியல் ரீதியாகவுமம் கடுமையாக சுரண்டப்பட்டு வருபவர்கள். இவர்களின் குழந்தைப் பருவம் புதைக்கப்பட்டு விட்டது மட்டுமின்றி கல்வி, உணவு, விளையாட்டு, பெற்றோர்களின் அரவணைப்பு சமூக பாதுகாப்பு ஆகியவை இவர்களுக்கு மறுக்கப்பட்டு விட்டன. மொத்த மக்கள் தொகையில் 10 கோடி குழந்தைகள் உள்ள இந்தியாவில் 50 லட்சத்திற்கும் அதிகமானோர் குழந்தைத் தொழிலாளர் – களாக உள்ளனர். (ஆதாரம்: தினபூமி 25.11.99) தமிழகத்தில் 11.50 லட்சம் குழந்தைத் தொழிலாளர்கள் உள்ளனர். (தினமலர்–29.9.99)

சமீபத்திய ஆய்வு ஒன்றில் தமிழ்நாட்டில் தீப்பெட்டி தொழிலில் 45,000 குழந்தைகளும் பின்னலாடை தொழிலில் 8,000 குழந்தைகளும் ஈடுபடுத்தப் – படுகிறார்கள் என்று கணக்கிடப்பட்டுள்ளது. (ஆதாரம்: கதிரவன் 8.7.99)

மதுரையில் மட்டும் 30 ஆயிரம் குழந்தைத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இதில் 10 ஆயிரம் பெண் குழந்தைகள். 10 ஆயிரம் பெண் குழந்தைகளில் 5 ஆயிரம் பெண் குழந்தைகள் கைத்தறி நெசவு தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். மதுரை வண்டியூர், தீர்த்தக்காடு பகுதிகளில், பழைய பாட்டில்களை அமிலத்தில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஊற வைத்து பாட்டில் கழுவும் தொழிலில் பெருவாரியான பெண் குழந்தைகள் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். (24.07.99 தினமலர்)

1991–ன் கணக்கின்படி தமிழ்நாட்டில் 5,78,889 குழந்தைத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள் என்று ஆய்வு தெரிவித்தாலும் என்.எஸ்.எஸ். கணக்கின்படி 11,44,589 பேர் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. 1991–ன் கணக்கின்படி தமிழ்நாட்டில் உள்ள குழந்தைத் தொழிலாளர்கள் சேலம் மாவட்டத் –திலும், விருதுநகர் மாவட்டத்திலும் 9 சதவீதத்தினர் என்று கணக்கிடப்பட்டு உள்ளது. கடலூர் மாவட்டத்தில் 8.9 சதவீதமும், தர்மபுரியில் 8.08 சதவீதமும், திருச்சியில் 7.06 சதவீதமும், மதுரையில் 6.54 சதவீதமும், கோயமுத்தூரில் 6.44 சதவீதமும், காஞ்சிபுரத்தில் 6.43 சதவீதமும், ஈரோட்டில் 6.27 சதவீதம் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. (ஆதாரம்: தினமலர் 27.6.99)

கோவை வீதிகளில் ஆதரவற்ற 25,000 சிறார்கள் உள்ளதாக டான்பாஸ்கோ நிறுவனத்தின் ஆய்வு தெரிவிக்கிறது. (ஆதாரம்:தினமணி 29.11.98)

இப்படி பல்வேறு மாவட்டங்களில் பல்வேறு தொழில்களில் குழந்தைத் தொழிலாளர்கள் பற்றி புள்ளி விபரங்கள் கணக்கிடப்பட்டாலும் குறிப்பாக கீழ்க் கண்ட 9 வகையான தொழில் அமைப்புகளில் இவர்கள் ஈடுபடுத்தப்படுகிறார்கள் என்று கண்டறியப்பட்டுள்ளது. (1) சாகுபடி (2) விவசாயத் தொழில் (3) காடு வளர்ப்பு மற்றும் மீன்பிடிப்பு (4) சுரங்கம் மற்றும் கல்லுடைத்தல் (5) உற்பத்தி மட்டும் பழுது நீக்கம் செய்தல் (6) கட்டுமானம் (7) போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு (8) பண்டக சாலை (9) பிற வேலைகள்

ஆக மொத்தத்தில், இந்திய மக்கள் தொகைப் பெருக்கத்தில் ஆண்டுதோறும் 2 சதவீத அளவிற்கு குழந்தைத் தொழிலாளர்கள் உருவாக்கப் பட்டு வருகின்றனர் என்று இதிலிருந்து முடிவுக்கு வரலாம். இது அரசின் அடிப்படையே கேள்விக்குள்ளாக்குகிறது. இந்திய மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் 60 விழுக்காடு வயதான நோயாளிகள் அனைவரும் சிறுவயதில் குழந்தைத் தொழிலாளர்களாக இருந்தவர்கள் என்று சமூகம் சார்ந்த மருத்துவ அறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது. (ஆதாரம்: இணையத் தகவல் –Social Medicine வெப்.இதழ்) இந்தியாவில் 37 விழுக்காடு நகரத்து மக்களும், 39 விழுக்காடு கிராமத்து மக்களும் வறுமையில் இருப்பதாக 1999ம் ஆண்டு சர்வதேச தொழிலாளர் அமைப்பின் ஆய்வு சுட்டிக் காட்டுகிறது. இந்த மக்களின் குடும்ப பின்னணியில் குழந்தைத் தொழிலாளர்களின் உழைப்பும் பின்னிப் பிணைந்திருக்கும் என்பதை இங்கு குறிப்பிடத் தேவையில்லை.

ஒரு குழந்தைத் தொழிலாளர் உருவாகுவதற்கு எத்தனையோ காரணங்கள் இருப்பினும் வறுமைதான் தீர்மானகரமான காரணமாக உள்ளது. இது

www.tamilarangam.net



தவிர, பெற்றோர்களின் இயலாமை, ஏற்றத்தாழ்வான (பணம் படைத்தவர்களுக்கும், ஏழைக்கும் தனித்தனியே கல்வி முறைகள்) கல்வி முறைகள்/கல்விக் கொள்கை –கள், முதலாளிகளின் சுரண்டல் சமூகப் பொறுப்பின்மை போன்ற காரணங்களால் தான் குழந்தைத் தொழிலாளர்கள் உருவாக்கப்படுகின்றனர் என்று சமூக ஆய்வாளர்களும் அறிஞர்களும் தெரிவிக்கின்றனர். சமீபத்திய யூனிசெப் அமைப்பின் ஆய்வானது குழந்தைகள் தொழிலாளர்களாக வேலைக்குச் செல்வதனால் அவர்களது வறுமை தீர்க்கப்படவில்லை. மாறாக, நிரந்தரமாக்கப்படு –கின்றது என்ற உண்மையை வெட்ட வெளிச்சமாக்குகிறது. எனவே, குழந்தைத் தொழிலாளர் பிரச்சினை என்பது ஒரு தனிப்பட்ட குழந்தையின் அல்லது குடும்பத்தின் பிரச்சினை அல்ல. மாறாக, சமூகத்தின் ஒட்டு மொத்த சமூகப் பிரச்சினையாகும்.

ஒரு நாட்டில் குழந்தைத் தொழிலாளியின் உழைப்பு நியாயப்படுத்தப் பட்டாலோ அல்லது மறைக்கப்பட்டாலோ அந்நாட்டின் எதிர்காலமே தொலைந்து போகிறது. இதற்கு சிறந்த உதாரணம் தான் குட்டி ஜப்பான் என்றழைக்கப்படும் சிவகாசியில் நடந்து வரும் கொடுமைகள். 1990களின் மத்தியில் சிவகாசியிலுள்ள பெரும்பாலான பட்டாசுத் தொழிற்சாலைகளில் ஏராளமான குழந்தைத் தொழிலாளர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். 1994–95ல் தமிழக அரசு யுனிசெப்பின் உதவியுடன் ஆர்.வித்யாசாகர் மேற்கொண்ட ஆய்வின்படி 33 ஆயிரம் குழந்தைத் தொழிலாளர்கள் சிவகாசியில் உள்ளனர். இதில் 30 ஆயிரம் பேர் தீப்பெட்டித் தொழிற்சாலைகளிலும் 3 ஆயிரம் பேர் பட்டாசுத் தொழிற்சாலை –களிலும் உள்ளனர். 1996ல் உச்சநீதிமன்றம் குழந்தைத் தொழிலாளர் (தடை மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம் 1986ஐ தீவிரமாக நடைமுறைப்படுத்தப் படும்படி உத்திரவிட்டது. இந்த உத்தரவினைத் தொடர்ந்து உச்சநீதிமன்ற வழக்கறிஞர் எம்.சி.மேத்தா பொதுநல வழக்கு ஒன்றை உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்ததினால் நாடு முழுவதும் குழந்தை தொழிலாளர்கள் குறித்த கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. இந்த கணக்கெடுப்பினால் ஏதோ ஒரு விதத்தில் பாதிப்புக்குள்ளான தமிழக பட்டாசுத் தொழிற்சாலைகள் மற்றும் வெடிமருந்து பொருட்களின் உற்பத்தியாளர் சங்கம் 1999ம் ஆண்டு அக்டோபர் மாதம் விளம்பரம் ஒன்றை நாளிதழ்களில் வெளியிட்டது. அதில் தன் சங்கத்தின் கீழுள்ள 152 தொழிற்சாலைகளில் எதிலுமே குழந்தைத் தொழிலாளர்கள் எந்தப் பணிக்கும் அமர்த்தப்படுவதில்லை. அப்படி யாராவது ஒருவர் மேற்படி 152 தொழிற்சாலை களில் குழந்தைத் தொழிலாளர்கள் பணியில் இருப்பதைக் காட்ட முடியுமா? என்று சவால் விட்டிருந்தது. இந்த விளம்பரத்தின் சவாலை ஏற்றுக்கொண்டு குழந்தைத் தொழிலாளர் (முறை)களுக்கு எதிரான பிரச்சார இயக்கம் (Campaign Against Child Labour - CACL ) சிவகாசிக்கு அக்டோபர் 26–27, 1999 தேதிகளில் நேரடியாக சென்று ஆய்வு செய்து அறிக்கை ஒன்றை சமர்ப்பித்தது.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அந்த அறிக்கையில் சிவகாசியில் குழந்தைத் தொழிலாளர்கள் எப்படி – யெல்லாம் சட்ட விரோதமானமுறையில் அபாயகரமான பட்டாசு தயாரிக்கும் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றனர் என்பதைக் குறிப்பிட்டது. சட்டத்தினை ஏமாற்றுவதற்காக 10 அறைகள் கொண்ட பட்டாசுத் தொழிலின் உற்பத்தி முறையே மாற்றப்பட்டுள்ளது. ஒருவர் ஒரு தொழிற்சாலையின் அலகுக்கு (யூனிட்) நடத்துவதற்கு மட்டும் உரிமம் பெற்றுக் கொண்டு மீதி உள்ள 9 அறைகளை அறை ஒன்றுக்கு தலா 25 ஆயிரம் ரூபாய்க்கு குத்தகைக்கு விட்டு விடுகிறார். இக்குத்தகைக்காரர்கள் தனியே உற்பத்தி செய்கிறார்கள் அல்லது அவர்கள் காண்டிராக்டர்களுக்கு பட்டாசு உற்பத்தியின் கீழ் உள்ள சில வேலைகளை விட்டு விடுகிறார்கள். இக்காண்டிராக்டர்கள் குழந்தைகள் உள்ள வீட்டிற்கு சென்று அங்கேயே இருந்து வேலை செய்யும்படி சரக்கைக் கொடுத்துவிட்டு விடுகிறார்கள். வீட்டிலிருந்தே உற்பத்தியில் ஈடுபடும் குழந்தைத் தொழிலாளருக்கு வேலைக்கு ஏற்றபடி கூலி கொடுக்கப்படுகிறது. இந்த ஆய்வின்படி குழந்தை தொழிலாளர் – களில் 30 விழுக்காட்டினர் காண்டிராக்டர்களினாலும், சப்–காண்டிராக்டர்களினாலும் வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள்.50 விழுக்காட்டினர் வீட்டிலிருந்தே உற்பத்தியில் ஈடுபடுகின்றனர். இந்த ஆய்வறிக்கையின் உண்மைகளை பிரான்ட்லைன் என்ற ஆங்கில மாதமிருமுறை இதழும் (12.5.2000 இதழ் எண்.9) உறுதிப்படுத்தியுள்ளது. விருதுநகர் மாவட்டத்திலுள்ள திருத்தங்கல், அம்மாப்பட்டி, ஆலமரத்துப்பட்டி, தாயல்பட்டி, எஸ்.ஆணைக்குட்டம், டி.இராமலிங்கபுரம், கோட்டையூர், டி.துரைசாமி புரம், விஸ்வநாதம், மீனாட்சிபுரம், சங்கரலிங்கபுரம் மற்றும் மீனாம்பட்டி கிராமங்களிலுள்ள குழந்தைகள் வீடுகளிலிருந்தே பட்டாசு தொழில் உற்பத்தியில் ஈடுபடுகின்றனர் என்பதை ஆதாரப்பூர்வமாக பிரான்ட்லைன் நிறுவியுள்ளது.

கல்வி, குழந்தை பருவம் உள்ளிட்ட பல விஷயங்கள் மட்டுமின்றி ஒரு குழந்தைத் தொழிலாளருக்கு சமூகத்தின் நல்ல அம்சங்களும் பிடிபடாமல் போகின்றன. சமூகத்தில் நடக்கக்கூடிய அனைத்துப் பாதகமான தீய நிகழ்வு – களுக்கும் இந்தக் குழந்தைத் தொழிலாளர்கள் எளிதில் வசப்படுகிறார்கள். முதலாளியின் உதாசீனப் பேச்சு, அவரின் பாசாங்குத்தனமான நடவடிக்கை, நிறுவனத்தில் வேலை செய்யும் மற்ற தொழிலாளர்களின் சுரண்டல் மோசடிகள் போன்ற சூழ்நிலைகளிலேயே இவர்கள் வாழ்வதால், இக்கொடுமைகளை தங்க – ளுக்கு இழைக்கும் சமூகத்தின் மீது இளம் வயதிலேயே இவர்கள் மனதில் கோபம் அரும்பத் தொடங்கி, அது அவர்கள் வளரும் போது வெஞ்சினமாக வளர்ந்து அவர்களை வன்முறையாளர்களாகவும் சமூக விரோதிகளாகவும் மாற்றி விடுகிறது.

மேற்கண்ட விபரங்கள் குழந்தைத் தொழிலாளர் முறையே அடிப்படையில் ஒரு மனித உரிமை மீறல் என்பதை தெளிவுபடுத்தும். குழந்தைத் தொழிலாளர்கள் நிறுவனங்களில் மட்டுமல்ல நாம் அன்றாடம் செல்லும் சாலைகளிலும், வீதிகளிலும் வாழ்கிறார்கள். இதோ அவர்களைப் பற்றி:



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**சாலை வாழ் சிறார்**

தமிழகத்தில் குழந்தைத் தொழிலாளர்கள் நீங்கலாக, ஒவ்வொரு மாவட்டத்திலும் 5–லிருந்து 18 வயது வரையிலான எந்தவிதத்திலும் ஆதரவற்ற சாலை வாழ் சிறார் உள்ளனர். இதில் சென்னைதான் முதலிடம் வகிக்கிறது. சென்னை மாநகரின் முக்கிய சாலை மற்றும் தெருக்களில் 1.5 லட்சம் சிறுவர் சிறுமியர்கள் வாழ்கின்றனர். (ஆதாரம் தி இந்து, 31.08.98) இவர்களில் பெரும்பகுதியினர் வட சென்னையில்தான் வாழ்கின்றனர். கோவையில் 25 ஆயிரம் சிறார் வசிக்கின்றனர். இவர்கள் குப்பை பொறுக்குவது, தெருவோரக் கடையில் எடுபிடி வேலை செய்வது, துப்புரவுப் பணி, சுமை தூக்குவது, ரிக்ஷா இழுப்பது, தபால் போடுவது, கார் மற்றும் இருசக்கர வாகனங்கள் துடைப்பது, விபச்சாரத் தரகர்களாக பணிபுரிவது, பிக்பாக்கெட் அடிப்பது, திருடுவது போன்ற வேலைகளைச் செய்கின்றனர். அன்றாடம் கிடைக்கும் அற்ப கூலிக்கும், போதாக்குறை உணவிற்குமான நிச்சயமற்ற கூலி வேலைகள் செய்வது, போன்ற பலதரப்பட்ட பணிகளை இவர்கள் செய்கின்றனர்.

கல்வி, சுகாதாரம், உணவு உள்ளிட்ட சமூக பாதுகாப்பு அனைத்துமே இவர்களுக்கு மறுக்கப்படுவது மட்டுமின்றி இவை எப்போதுமே இவர்களுக்கு எட்டாக்கனிகளாகும். இவர்களில் இரண்டு வகையினர் உண்டு, அவர்கள் "சாலை வாழ் சிறார்" என்றும் "சாலையில் பணிபுரிபவர்கள்" என்றும் அழைக்கப் – படுகின்றனர். இவர்களில், முதலாவது தரப்பினர் எப்பணிபுரிந்தாலும் சாலை ஓரத்திலேயே நடைபாதைகளில் வசிக்கின்றனர். இரண்டாவது தரப்பினர் சாலை மற்றும் தெருக்களில் பல வகைப் பணிகள் புரிந்துவிட்டு இரவில் சேரிகளில் உள்ள தங்களது குடிசைக்குத் திரும்பி விடுவர். இவர்கள் அன்றாடம் உழைத்து சம்பாதிக்கும் அற்பக் கூலியை தங்களது ஏழைப் பெற்றோர்களிடம் தந்து விடுவர். தங்களின் அன்றாட உணவுக்காக இச்சிறார் நபர் ஒன்றுக்கு 6–லிருந்து 16 மணி நேரம் வரை வெயிலில் காய்கின்றனர்; மழையில் நனைகின்றனர். இவர்களுக்கு எந்தவித பாதுகாப்பும், உத்திரவாதமும் இன்மையால் அன்றாடம் ரவுடிகள், கிரிமினல்கள், விபத்துக்கள் மற்றும் போலீஸ் தொல்லை உள்ளிட்ட பல கடுமையான சவால்களை எதிர் கொண்டே போராட்டத்துடனான வாழ்க்கையை மேற்கொள்கின்றனர். இவர்கள் உடல் மற்றும் உளவியல் திறனுக்கும் அப்பாற்பட்ட செய்ய முடியாத வேலைகளை வாழ்வை நடத்த அன்றாடம் செய்ய நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். செய்யாத சிறு குற்றங்களுக்குப் போலீசாரால் கைது உள்ளிட்ட பல தொல்லைகளுக்கு ஆட்படுகின்றனர். சில சமயங்களில் தங்களது தேவைக்கு மேல் சம்பாதித்து, சம்பாதிக்கும் பணத்தை செலவளிக்க பல தவறான வழிகளில் ஈடுபடுவதாலும் இதற்கு மேல் பெற்றோர்களின் அரவணைப்பும் கண்டிப்பும் இல்லாததாலும் தங்கள் விருப்பம் போலவே செயல்படுகின்றனர். அன்றாடம் தங்களை அல்லல்படுத்தும் சமூகத்தின் மீதான கோபம் அவர்களை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சமூக விரோதிகளாகவும், குற்றவாளிகளாகவும், ஊதாரிகளாகவும் உருவாக்கு –கின்றது. இத்துடன் பெற்றோர்களின் அரவணைப்புக்கு ஏங்குவது, கல்விக்கு ஏங்குவது போன்ற ஏக்கங்கள் விரக்தியாகி இவர்களிடம் நிரந்தர ஆளுமைச் சிதைவையும் உருவாக்குகின்றன.

சாலை வாழ் சிறார் எதிர்கொள்ளும் இத்தகைய வன்முறையுடன் புதிதாக உருவெடுத்துள்ள குழந்தைகள் மீதான பாலியல் சுரண்டல் இன்னும் கொடூரமானது. மனித சமூகத்தின் மனசாட்சியையே உலுக்குவதாக உள்ளது.

### குழந்தைகள் மீதான பாலியல் சுரண்டல்கள்

குழந்தைகள் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டு வருவதை "குழந்தை விபச்சாரம்" என்று அழைக்கிறார்கள். முதலில் இது அபத்தமான பதம். இப்படி அழைப்பதே மிகப்பெரிய வன்முறையாகும். ஏனெனில், விபச்சாரத்தில் பெரும் –பான்மையான பெண்கள் ஈடுபடுவதற்கான அடிப்படை காரணம் வறுமையாகும். விதிவிலக்காக ஒரு சில பெண்கள் விருப்பத்தின் அடிப்படையிலும் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதற்கான காரணத்திற்காகவும் இத்தொழிலில் ஈடுபடுகிறார் –கள். ஆனால், குழந்தைகளைப் பொறுத்தவரையில் இக்காரணங்கள் சாத்திய மில்லை. ஏனெனில், மேற்கண்ட காரணங்களால் குழந்தைகள் விபச்சாரத்தை விரும்பவும் இல்லை. ஈடுபடுவதும் இல்லை. ஆகவே, "குழந்தை விபச்சாரம்" என்று அழைப்பது நம்முடைய எதிர்காலத் தலைமுறையை நாமே கொலை செய்வதற்கு சமமாகும். ஒரு சமூக கொடூரத்தை மறைப்பதற்கு உடந்தையாகவே இவ்வார்த்தை பயன்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் குழந்தைகள் மீதான பாலியல் சுரண்டல்கள், அவர்களை பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்படுவது குறித்து, இதுவரை எந்த ஆய்வுகளும் செய்யப்படவில்லை. இப்பிரச்சனையை கையிலெடுத்துக் கொண்டு எந்த அரசியல் அமைப்புகளோ அரசு சாரா நிறுவனங்கள் செயல்படவில்லை என்பது வேதனைக்குரிய விஷயமே. ஆனால், இந்தக் காரணத்தாலேயே இப்பிரச்சனை தமிழகத்தில் இல்லை என்ற முடிவுக்கு வர முடியாது. மற்ற மாநிலங்களில் குறிப்பாக, கர்நாடகா, ஆந்திரா போன்ற மாநிலங்களில் இப்பிரச்சனை வெளிப்படும் விதம், பிரச்சினையின் தன்மை ஆகியவற்றை ஆய்வு செய்து அம்மாநிலங்களில் செயல்படும் அமைப்புகள் கொடுத்த அறிக்கைகளை ஆதாரமாகக் கொண்டு இந்த அறிக்கை தொகுக்கப் பட்டுள்ளது. இன்று உலகமயமாதல் திட்டத்தின் ஒரு பகுதியாக சுற்றுலாத்துறை விபச்சாரத்தில் சிறார் பலியாக்கப்பட்டு வருவது கண்கூடு. இதன் மூலம் குழந்தை களின் மீது தொடுக்கப்படும் வன்முறைகள் புதிய வக்கிரமான வடிவங்களை எடுத்துள்ளன. குழந்தைகள் மீதான புதிய வன்முறைகளை வெளிச்சத்திற்கு கொண்டுவரும் நோக்கிலேதான் இக்கட்டுரை இங்கு தொகுக்கப்பட்டுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குழந்தைத் தன்மைகளை எல்லா வகைகளிலும் சிதைக்கும் பாலியல் சுரண்டல் தொழிலில் இந்தியாவில் மட்டும் 5,00,000 குழந்தைகள் பலவந்தமாக ஈடுபடுத்தப்படுகின்றனர். தமிழகத்தில் எத்தனை குழந்தைகள் இத்தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்பது குறித்த ஆய்வு இதுவரை மேற்கொள்ளப்படாத – தால் இத்தகவல்கள் கிடைக்கவில்லை. எனினும், 5 இலட்சம் குழந்தைகளில் தமிழகமும் அடங்கும் என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. இவர்களில் பெரும்பாலானோர் பின்தங்கிய கிராமப்புறத்தை சேர்ந்த பொருளாதார ரீதியாகவும், சாதீய ரீதியாகவும் நசுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்தவர்கள்.

உலகமயமாதல் திட்டம் அமல்படுத்தப்பட்ட பின்னர், குழந்தைகள் மீதான இத்தகைய பாலியல் வன்முறை, கொடூரம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. ஏனெனில், வெளிநாட்டிலிருந்து வருகின்ற உல்லாசப் பயணிகள் தங்களுடைய 'வக்கிர உணர்வுகளை' தீர்த்துக் கொள்வதற்காக குழந்தைகளையே பெரும்பாலும் நாடுகிறார்கள். உள்நாட்டில் இருப்பவர்களும் தங்களது மிருகவெறிக்கு குழந்தைகளையே பலி கொடுக்கிறார்கள். 1999ம் ஆண்டு யுனிசெப் அறிக்கையில் உலகெங்கும் 2 மில்லியன் குழந்தைகள் பாலியல் சுரண்டல் தொழிலில் ஈடுபடுத்தப்படுகின்றனர். இந்தியாவில் 5,00,000 குழந்தைகள் பாலியல் சுரண்டல் தொழிலில் ஈடுபடுத்தப்படுவதாக கூறுகிறது. இதனை ஐ.எல்.ஓ.வும் தனது அறிக்கையில் குறிப்பிட்டு உறுதிபடுத்துகின்றது. (ஆதாரம்: மாதியம்–அரசு சாரா அமைப்பின் அறிக்கை, கர்நாடகா)

குழந்தைகள் மீதான பாலியல் சுரண்டல் தொழிலின் பின்னணியில் வருகின்ற குழந்தைகள் பாரம்பரிய தொழிலாகவே தங்களது வாழ்க்கையை இப்படி அமைத்துக் கொள்வதுதான் பரிதாபம். விலைமாதர் குழந்தைகள், தெருவில் வாழும் குழந்தைகள், ஊனமுற்றோர் குழந்தைகள், பிச்சையெடுக்கும் குழந்தைகள், பிச்சைக்காரர்களின் குழந்தைகள், புயல், வெள்ளம் போன்ற இயற்கை சீற்றத்தால், கலவரங்களினால், போர்களினால், இன ஒடுக்குமுறைகளினால் குடும்ப சிதைவுகளினால் நிராதரவாக விடப்படும் குழந்தைகள், பெற்றோர்களிடமிருந்து பிரிந்து தனியே வாழ கட்டாயப்படுத்தப்பட்ட குழந்தைகள் இது போன்ற சூழ்நிலைகளினால் குழந்தைகள் இத்தொழிலில் ஈடுபட கட்டாயப்படுத்தப்படு கின்றனர். பெரும்பாலும் குடும்பத்தின் வறுமை சூழ்நிலையே இத்தகைய நிலைகளுக்கு முக்கியக் காரணம். விலைமாதர்களின் பெண் குழந்தைகள்தாம் இத்தகைய செயல்பாடுகளில் முதன்மையாக ஈடுபடுத்தப்படுகிறார்கள். ஒரு விலைமாதருக்குக் குழந்தை பிறந்தவுடனேயே ஆணா, பெண்ணா என்பதன் அடிப்படையில் அச்சமூகத்தில் சில மதிப்பீடுகள் முன் வைக்கப்படுகின்றன. அவருக்குப் பெண் குழந்தை பிறந்தால் அக்குழந்தை எதிர்காலத்தில் ஒரு விலை மாதராக் மாறுவதற்கு கட்டாயப்படுத்தப்பட்ட சூழல், அன்றாடம் உருவாக்கப் –


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



படுகின்றது. மாலை நேரத்திலிருந்தே இக்குழந்தைகள் தங்கள் தாயிடமிருந்து பிரித்து வைக்கப்படுகின்றன. இவ்வாறு பிரிக்கப்பட்ட குழந்தைகள் தெருவோரமோ, கடையின் வாசலிலோ அல்லது சாக்கடையின் அருகிலோ படுத்து உறங்கு - கின்றன. சில சமயங்களில் இத்தகைய இடங்கள் கிடைக்காத குழந்தைகள் தங்கள் .தாயாரின் படுக்கையின் கீழே படுக்க வைக்கப்படுகின்றன. தாயார் வாடிக்கையாளரின் தேவையை கட்டிலின் மேலே பூர்த்தி செய்து கொண்டிருக்க, குழந்தையானது கட்டிலின் கீழே மெல்ல மெல்ல விழித்துக் கொண்டிருக்கும். இந்த நிகழ்வுகளினால் குழந்தைகள் மனதளவில் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகின்றனர். பெரும்பாலான சமயங்களில் இக்குழந்தைகள் தங்களது தாயார் வாடிக்கையாளரின் தேவையை பூர்த்தி செய்து கொண்டிருக்கும் வேளையில் பசி எடுத்து அழும் என்பதால் இக்குழந்தைகளுக்கு போதை மருந்துகள் கொடுக்கப்படுகின்றன. சிகப்பு விளக்குப் பகுதிகளில் வாழ்கின்ற குழந்தை - களிடையே நடத்தப்பட்ட ஆய்வில் நீண்ட காலமாகவே குழந்தைகள் போதை மருந்துக்கு அடிமைப்பட்டு கிடப்பது கண்டறியப்பட்டது. பல குழந்தைகளுக்கு தங்களின் தாயாரின் மூலமாக ஹைச்.ஐ.வி. கிருமிகள் பரவியிருப்பதை இந்த ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன. (ஆதாரம்: மாதியம்-அரசு சாரா அமைப்பின் அறிக்கை, கர்நாடகா)

சிகப்பு விளக்கு பகுதிகளில் வாழும் ஆண் குழந்தைகளுக்கோ வேறு விதமான பரிதாப நிலைகள். தங்களது தாயார் ஒரு வாடிக்கையாளரின் தேவையை பூர்த்தி செய்து கொண்டிருக்கும் போது இக்குழந்தைகள் தேநீர் வாங்கவோ, மது பானங்கள் வாங்கவோ எடுபிடிகளாக பயன்படுத்தப்பட்டு வருகின்றனர். இவர்களின் எதிர்கால முன்மாதிரிகள் இத்தொழிலில் உள்ள தரகர்களும், விபச்சார விடுதி நடத்துபவர்களும், அடியாட்களும்தான் என்பது குறிப்பிடத்தக்கது. சிகப்பு விளக்கு பகுதிகளில் வாழ்ந்து வரும் ஆண் குழந்தைகள் தரகராகவோ, அடியாளாகவோ, விபச்சார விடுதி நடத்துபவராகவோ மாறியாக வேண்டும் என்பது கட்டாயமான சூழ்நிலை. ஏனெனில், ஆண் குழந்தைகளுக்கு சிகப்பு விளக்கு பகுதிகளில் எந்தவிதமான வரவேற்போ, அங்கீகாரமோ, மதிப்போ கிடையாது.

பெண் குழந்தை தனது 13 வயதில் பூப்பெய்த பின்னரோ அல்லது பூப்பெய்வதற்கு முன்னரோ வாடிக்கையாளரை கவனிக்க வேண்டிய சூழ்நிலைகளுக்கு கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். 13 வயதிற்கு மேல் எந்த பெண் குழந்தையும் விலைமாதராக இல்லாமல் இருக்க முடியாது.

ஐ.நா.வின் பொதுச்சபை 1994ம் ஆண்டில் 'சதைச் சந்தை' (Trafficking in Flesh Trade) குறித்து தெளிவான வரையறை கொடுத்துள்ளது. "சட்ட விரோதமாகவோ, இரகசியமாகவோ, தேச எல்லைகளை கடந்து வளரும் நாடுகளிலிருந்தும், பொருளாதார ரீதியாக மாற்றம் அடைந்து கொண்டிருக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நாடுகளிலிருந்தும் பெண்களையும், பெண் குழந்தைகளையும் லாபத்திற்காக விபச்சாரத் தொழிலில் ஈடுபடுத்தி பாலியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், ஒடுக்குமுறைகளை திணிப்பது மேற்கண்ட தொழிலில் கட்டாயப்படுத்தி வேலை வாங்குவது, பொய்யான திருமணங்கள், இரகசியமான வேலைகள் செய்வது, பொய்யாக தத்தெடுப்பது போன்றவற்றை மேற்கொள்வது சதை சந்தை உருவாக்குவதாகும்."

குழந்தை மீதான பாலியல் ரீதியான வன்முறை என்பது இந்தியாவை பொறுத்தவரையில் புதிய விஷயமில்லை. இந்தியாவில் தொன்று தொட்டு தேவதாசி, குடிகாரி,. போகம், வந்துரை, தேவடியாள், மூரணி போன்ற வழக்கங்கள் மூலம் குழந்தைகளை பாலியல் சுரண்டலுக்கு உட்படுத்துவது நடந்து வந்துள்ளது. (உ.ம்.) தேவதாசி முறை. பெண் குழந்தைகளை அவர்கள் பூப்பெய்வதற்கு முன்னரே கடவுளுக்கு அர்ப்பணிப்பது என்பதன் பெயரில் முதலில் பூசாரியோ (அ) அப்பகுதியில் வாழும் செல்வந்தர்களோ தங்கள் காமவெறிக்கு பெண் குழந்தைகளை பலியாக்குவார்கள்.

- சமூக அங்கீகாரத்துடனான இந்த விபச்சாரமானது பெரும்பாலும் தீண்டத் தகாத சாதியினர் மீது உயர்சாதியினர் திணிக்கும் விஷயமாகவே இருந்து வருவதாகவே ஆய்வுகளில் தெரிவிக்கப்படுகிறது. இதில் கடவுளுக்கு அர்ப்பணிப்பது என்பது தாழ்த்தப்பட்ட சாதி பெண்கள் மீது உயர்சாதியினர் செலுத்தும் பாலியல் வன்முறையை பூசி மெழுகி மறைக்கவே பயன்படுத்தப்படுகின்றது.
- இப்போது தேவதாசி முறை கடுமையான கண்டனத்துக்கு உள்ளாக்கப் - பட்டுள்ளதால் மறைமுகமாக இந்த முறை கடைபிடிக்கப்பட்டு வருகிறது. திடீரென்று கர்நாடகத்தில் தேவதாசி முறை இருந்து வந்த பல பகுதிகளில் விலைமாதர்களின் எண்ணிக்கை கூடி வருகிறது. நீடித்து வரும் மறைமுகமான தேவதாசி முறையை இது உறுதிப்படுத்துகிறது.

### சுற்றுலாத்துறை விபச்சாரம் (Sex -Tourism)

- சமீபகாலமாக சர்வதேச ரீதியில் சுற்றுலாத்துறை பிரமாண்டமான வளர்ச்சியை பெற்று வருகிறது. ஏராளமான அந்நிய செலவாணிக்கான திறவுகோலாக விளங்கும் சுற்றுலா உலக மயமாதல் திட்டத்திற்கு பின்னர் தன் கதவுகளை அகல திறந்து விடுகிறது. சுற்றுலா என்பது குழந்தைகளை விபச்சாரத்தில் ஈடுபடுத்துவதற்கான அடிப்படைக் காரணமாக அமையவில்லை என்றாலும் பலவீனமான ஏழ்மை நிலையிலுள்ள குழந்தைகளை பாலியல் ரீதியாக சுரண்ட இது ஒரு கருவியாக அமைந்து விடுகிறது.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



- வெளிநாட்டிலிருந்து ஒரு நாட்டிற்கு வரும் சுற்றுலா பயணிக்கு அவர் தனது சொந்த நாட்டில் எதிர்கொள்வது போன்ற சமூக சட்ட ரீதியான பிரச்சினைகளை அந்நாட்டின் குழந்தைகளை தனது பாலியல் வக்ரத்துக்கு வடிகாலாக ஆக்கும் போது, அந்நாட்டில் எதிர் கொள்வதில்லை. இன்னொரு நாட்டின் குழந்தைகளை தனது மிருக வெறிக்கு உட்படுத்தப்படும்போது தனது சொந்த நாட்டைப் போல அவரது கௌரவத்துக்கு எந்தவித கேடுகளும் வருவதில்லை. இதை ஒரு ஜப்பானிய பழமொழி – "ஒரு பயணி எந்தவித வெட்கத்தையும் அடைவதுமில்லை" என்று தெளிவாகவே உணர்த்துகிறது. நான் எனது சொந்த ஊரை விட்டு எவ்வளவு தூரம் உலகில் செல்கிறேனோ அவ்வளவு தூரம் நான் ஒழுக்கத்தோடு உள்ளவனாக கருதப்படுகிறேன்" என்று இன்னொரு ஐரோப்பிய பழமொழி இந்த மிருகத்தனத்தை நியாயப்படுத்துகிறது. இவ்வாறு ஒரு சுற்றுலா பயணி சொந்த நாட்டில் சமூக ரீதியாக ஏற்றுக் கொள்ள முடியாத பாலியல் வக்கிரங்களையும் விபரீதமான உணர்வுகளையும் பரிசோதனை செய்வதற்கான தளமாக ஒரு நாட்டை சுற்றுலாத்துறை அவருக்கு வடிவமைத்து கொடுக்கிறது. அதே சமயத்தில் சுற்றுலாப் பயணி ஒருவர் தனது நிறவெறி, இனவெறியை நியாயப்படுத்துவதற்கான தளத்தையும் சுற்றுலாத் துறை வடிவமைத்துக் கொடுக்கிறது. ஏனெனில், அவர் தன் நாட்டைவிட கீழான நிலையில் உள்ள நாட்டின் குழந்தைகளிடமே இந்த வக்கிரங்களை அவர் பரிசோதித்து பார்க்கிறார். சமீபத்தில் ஆசிய நாடுகளில் உள்ள இளம்பெண் குழந்தை – களையும், சிறுவர்களையும் பாலியல் வக்கிரங்களுக்காக ஐரோப்பிய சுற்றுலா பயணிகள் பலியாக்கியதை பல அரசு சாரா அமைப்புகள் கண்டனம் தெரிவித்தது அனைவருக்கும் நினைவிருக்கலாம்.

ஒரு குழந்தையை பாலியல் வன்முறையில் ஈடுபடுத்தி, அக்குழந்தை – களின் தன்மையையும், ஆளுமையையும் முளைவிடும் போதே சிதைத்து விடும் இந்தப் போக்கைவிட கொடூரமானது உலகில் உண்டா?

- சுற்றுலாப் பயணிகள் ஏராளமான டாலர்களை கொண்டு வருகிறார்கள். டாலர்கள் ஒரு நாட்டின் அந்நிய செலவாணியைப் பெருக்கி அந்நாட்டின் வளர்ச்சியை மேம்படுத்துகிறது என்ற கோட்பாடு எப்போதுமே இத்தகைய கொடூரங்களை மறைக்க முன் வைக்கப்படுகின்றது. இதன் மூலம் சுற்றுலாப் பயணிகள் தரும் டாலர்களுக்காக அந்த நாடு அவருக்கு சிறிய சேவையாக ஒரு குழந்தையை பலி கொடுப்பதற்கு ஏற்பாடு செய்கிறதா சுற்றுலாத்துறை? சுற்றுலாத்துறை விபச்சாரத்தை அதன் மூலம் பலவிதங்களில் நலன்களை அடைந்து வரும் அரசியல்வாதிகள், அதிகாரிகள் வளர்ச்சித்துறை நிர்வாகிகள், பெரும் வியாபாரிகள்தான் ஆதரிக்கிறார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



- சுற்றுலாத் துறையில் அதிகரித்து வரும் சிறுவர், சிறுமியர் மீதான பாலியல் சுரண்டல்கள் குறித்து விபரங்களையோ ஆதாரங்களையோ காட்டுவது என்பது மிகமிக கடினமான ஒன்றாகவே இருக்கிறது. ஏனெனில், தனியார் சுற்றுலா விடுதிகளின் முதலாளிகள் அப்பகுதிகளில் எம்.எல்.ஏ அல்லது எம்.பி, உயர் காவல்அதிகாரிகள் மற்றும் அரசின் ஏகோபித்த எந்த ஒரு புனித **கூட்டின் மூலமாகவே இந்த கொடூர தொழில்** தங்கு தடையின்றி நடந்து கொண்டிருக்கிறது. எனினும், ஆங்காங்கே கசிந்துவரும் அறிக்கைகளிலும், சுரண்டல்களினாலும் நமக்கு உண்மை தெரிய வருகிறது.

- ஆசிய நாடுகளில் மட்டும் 5,00,000க்கும் மேலான (18 வயதிற்கு உட்பட்டவர்கள்) பெண் குழந்தைகள் விபச்சாரத்தில் தள்ளப்பட்டுள்ளனர்.

- தேசிய பெண்கள் ஆணையம், பம்பாயில் மட்டும் 40,000 பெண் குழந்தைகள் (10–16 வயதிற்கு) இந்த நரகத்தில் தள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கிறது. மேலும், ஆங்காங்கே கிடக்கும் புள்ளி விபரங்களின் மூலம் தெற்காசியாவில் மட்டும் 10,00,000 குழந்தைகள் (16 வயதிற்கு உட்பட்டவர்கள்) விபச்சாரத்தில் தள்ளப்பட்டுள்ளதாக தெரிகிறது.

- நாடுகளுக்கிடையேயான கடுமையான ஏற்றத் தாழ்வு நிலைமைகளும் ஏழ்மை நாடுகளில் நிலவும் வறுமையுமே இப்பிரச்சினைக்கான மூலக்காரணம். இது தவிர சமூகத்தில் நிலவி வரும் ஆணாதிக்கம் சார்ந்த பாலுறவு சம்மந்தமான மூட நம்பிக்கைகளும் இதற்கு காரணமாக உள்ளன. (எய்ட்ஸ் நோய் உள்ளவர்கள் சிறுமிகளிடம் தகாத உறவு மேற்கொண்டால் நோய் குணமாகி விடும், ஆயுள் நீடிக்க சிறு வயது பெண்களிடம் உறவு கொள்ளவேண்டும் போன்ற மூட நம்பிக்கைகள்.)

தமிழகத்தில் குழந்தைகள் எத்தகைய வன்முறைகளுக்குள்ளாக்கப் படுகின்றனர் என்பதற்கு ஒரு மாதிரியாக, நாளிதழ்களிலும், வார இதழ்களிலும் வெளிவந்தவற்றை இங்கு தொகுத்தளிக்கிறோம்.

### குழந்தைகள் மீதான வன்முறைகள்

### குழந்தையின் கண்ணில் திராவகம் வீச்சு

- சின்ன சேலம் அருகே மேல்நாரியப்பனர் கிராமத்தைச் சார்ந்த பெரிய தம்பிக்கு(38) இரண்டு மனைவிகள். (1) பாஞ்சாலை (2) மருதாம்பாள். மருதாம்பாளுக்கு ஆண்குழந்தை பிறந்ததால், ஆத்திரம் அடைந்த பாஞ்சாலை 4மாத குழந்தையின் கண்களில் திராவகம் ஊற்றினார். (06.01.99 தினமலர்)

- பாளையங்கோட்டையில் உள்ள ஒரு பள்ளிக்கூடத்தில் 2 ஆசிரியைகள் மூன்றாம் வகுப்பு மாணவியை அறைக்குள் பூட்டி, கட்டி வைத்து அடித்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உதைத்தனர். இதனால் மாணவி மயங்கி விழுந்தார். உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். வகுப்பறையில் ரூ.3000–ம் காணாமல் போனதை அடுத்து மாணவி மீது சந்தேகம் கொண்டு இத்தாக்குதல் நடைபெற்றது. (கதிரவன் 28.3.99)

- கோவை பீளமேடு எடக்காடு பகுதியைச் சேர்ந்தவர் கந்தசாமி. இவர் தினமும் குடித்து விட்டுப் பிள்ளைகளை துன்புறுத்தியதால் இவரது மகள்கள் மேகலா (16), சவுமியா (13), மகன் சந்திர சேகர் (12) மூவரும் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொண்டனர். (தினமலர் 3.3.99)
- குமரி மாவட்டம் அழகப்பபுரத்தைச் சேர்ந்த அருள்மணிக்குத் திருமணமாகி, மனைவி இறந்து விட்டார். பின்னர் இரண்டாவதாக சண்முகத்தாய் என்ற பெண்ணை திருமணம் செய்தார். இரண்டாவது மனைவி பிரச்சனையால் கணவரை விட்டுப் பிரியவே ஆத்திரத்தில் முதல் மனைவியின் குழந்தைகளை மனோ (12) மகேஷ் (10) அனிதா (7) ஆகியோரை அருள்மணி கழுத்தை அறுத்துப் படுகொலை செய்தார். (கதிரவன் 26.3.99)

### *சிறுவன் சித்ரவதை*

- தாய், தந்தை இழந்த ஐந்து வயது சிறுவனை உடல் முழுவதும் சூடு வைத்தும், பெல்ட்டால் அடித்தும், கட்டை விரல் நகத்தைப் பெயர்த்தும் கொடூரமான முறையில் சித்திரவதைகள் செய்த குடிகார தாய்மாமனிடம் இருந்து சிறுவனை உதவும் கரங்கள் அமைப்பினர் மீட்டனர். (19.07.99 தினமலர்)
- விழுப்புரம் கச்சிராப்பாளையம் போலீஸ் சரகம் க.அலம்பலம் கிராமத்தைச் சேர்ந்த கோபால் (32)பட்டதாரி. இவருக்கு பத்மலதா என்ற மனைவியும் பாஸ்கரன் (2) அகல்யா (2) என்ற இரண்டு இரட்டை குழந்தைகளும் இருந்தனர். மனைவியின் நடத்தையில் சந்தேகம் ஏற்பட்டதால் ஆத்திரம் அடைந்த கோபால் தன்னுடைய இரண்டு குழந்தைகள் மீதும் பீரோவை தள்ளி கொலை செய்தார். (தினமலர் 16.06.99)

### *பெண் குழந்தை கொலை*

- வேலூர் மாவட்டம், வாலாஜா பேட்டை அடுத்த வி.சி. மோட்டூர் கிராமத்தை சேர்ந்தவர் ராஜா (30) டீக்கடைத் தொழிலாளி. இவரது மனைவி விமலா. இவருக்குத் திருமணமாகி 3 வருடமாகி, தீபா என்கிற ஒன்றரை வயது பெண் குழந்தை இருந்தது. இந்த குழந்தை பிறந்த தினத்திலிருந்து ராசியில்லை என்று கருதி வந்த ராஜா ஒன்றரை வயது குழந்தையை திண்ணையில் மோத வைத்துக் கொலை செய்துள்ளார். (23.6.99 தினமலர்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


### நிர்வாணமாக்கிச் சித்ரவதை

- பாளையங்கோட்டை சமாதானபுரத்தில் ஒரு டயர் புதுப்பிக்கும் கடை உள்ளது. இந்தக் கடையில் ஆன்ட்ரூஸ் என்கிற எட்டு வயது சிறுவன் வேலை பார்த்து வந்தான். கவனக்குறைவாக அந்த சிறுவன் தவறு செய்து விட்டதற்காக அந்தக் கடை முதலாளி சிறுவனை நிர்வாணமாக்கி உடலெங்கும் அடித்து உதைத்தார். பின்னர் கடுமையான வெயிலில் முழங்கால் போட்டு நிறுத்தி வைத்துள்ளார். (மலையாள மனோரமா இதழ் 26.07.99) (05.08.99 கதிரவன்)

### குழந்தைக்கு விஷம் கொடுத்து கொன்ற தாய்

- தர்மபுரி மாவட்டம் – ஊத்தங்கரையை அடுத்த சிங்காரப்பேட்டை ஜொள்ளன் கொட்டாய் பகுதியில் வசித்து வருபவர் முருகேசன் (27) விவசாயி. இவருக்கு பரிமளா என்ற மனைவியும், 5 மாத ஆண் குழந்தையும் உள்ளது. இந்த குழந்தை இடது கை சூப்பியதால் குடும்பத்திற்கு ஆகாது என்று கருதி, பாலில் விஷத்தை ஊற்றி பரிமளா குழந்தையைக் கொலை செய்தார்.

### கொத்தடிமை சிறார் மீட்பு

- அருப்புக்கோட்டை மற்றும் மதுரையிலிருந்து வீட்டை விட்டு ஓடிப்போய் ஒரிசாவில் மிட்டாய் கம்பெனியில் சித்ரவதைகளை அனுபவித்து வந்த 6 சிறுவர்களை அருப்புக்கோட்டை போலீசார் மீட்டனர். (25.9.99 தினமலர்)

### 20 கொத்தடிமைகள் மீட்பு

- லத்தேரி அருகே 10 சிறுவர்கள் உள்பட 20 பேர் கொத்தடிமைகளாகப் பீடி தொழிலில் ஈடுபட்டது கண்டுபிடிக்கப்பட்டு பீடி உரிமையாளர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. (16.10.99 – தினமலர்)

### சிறுவன் கொலை

- நெய்வேலி என்.எல்.சி. இன்ஜினியர் குணசேகரன் – கோவிந்தம்மாள் தம்பதியருக்கு ஆனந்தகுமார், கிருஷ்ணகுமார் (7) என இரண்டு மகன்கள் உள்ளனர். நவம்பர் 27ம் தேதி கோவிந்தம்மாள் தனது மகன் கிருஷ்ண குமாரை என்.எல்.சி. மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றிருக்கிறார். அங்கு கூட்டம் அதிகமானதால் கோவிந்தம்மாள் வரிசையில் நின்று கொண்டு கிருஷ்ணகுமாரை வெளியே அனுப்பி மொபைட்டை பார்த்து வருமாறு அனுப்பினார். வெளியே சென்ற கிருஷ்ணகுமார் வெகுநேரம் ஆகியும் திரும்பவில்லை. பின்பு பல இடங்களில் கிருஷ்ணகுமாரை தேடியிருக்கிறார். இந்நிலையில் நவம்பர் 29ம் தேதி என்.எல்.சி. மருத்துவமனையில் பிரேதப்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பரிசோதனைக் கூடத்தில் கிருஷ்ணகுமார் பிணமாக கிடந்தான். விஷ ஊசி போடப்பட்டு கிருஷ்ணகுமார் கொல்லப்பட்டதாக போலீசாரால் சந்தேகிக்கப் – படுகிறது. (தினமலர் – 11.10.99)

**2 குழந்தைகள் கொலை**

- சிவபெருமாள்–பார்வதி தம்பதியினருக்கு இசக்கிநாதன் (4) என்ற மகனும், கனகலெட்சுமி (2) என்ற பெண் குழந்தையும் உள்ளனர். தம்பதியினர் இருவருக்கும் கருத்து வேறுபாடு இருந்து வந்தது. இதனால் ஆத்திரமடைந்த சிவபெருமாள் தனது இரு குழந்தைகளையும் குளத்தில் மூழ்கடித்து கொலை செய்திருக்கிறார். (14.9.99 கதிரவன்)

**கொத்தடிமைச் சிறுமி தற்கொலை**

- கள்ளக்குறிச்சி அருகே பரிகம் காலனியை சேர்ந்தவர் கருப்பன். இவருடைய மகள் தாலாயி (வயது 14). அருகிலுள்ள கிராமத்தைச் சேர்ந்த சண்முகம் என்பவரிடம் வீட்டு வேலை செய்வதற்காக தாலாயியை கொத்தடிமையாக விட்டு பணம் வாங்கியிருக்கிறார்.

வேலை செய்யக்கூடிய காலக்கெடு முடிந்து விட்டது. ஏறத்தாழ 6 வருடம் தாலாயி கொத்தடிமை வேலை செய்ததாகக் கூறப்படுகிறது. இருப்பினும், வறுமையினால் கருப்பன் மறுபடியும் தன் மகளை அதே வீட்டில் வேலைக்கு அமர்த்தினார். இதனால் மனம் உடைந்த தாலாயி தற்கொலை செய்து கொண்டார். (ஆகஸ்ட் 27, 99 தினத்தந்தி)

**சிறுமி மானபங்கம்**

- பல்லடம் அருகேயுள்ள அறிவொளி நகரில் கூலி வேலை செய்து வரும் பாப்பாத்தியின் மகள் (13) இதே பகுதியை சேர்ந்த அதிபர் (21) லியாகத் அலி (21) ஆகிய இரு நபர்களும் சுசிலாவை தூக்கிச்சென்று பக்கத்தில் உள்ள ஒரு குடிசையில் வைத்து மானபங்கம் செய்துள்ளனர். (19.9.99 – தினமணி)

**போலீஸ் நிலையத்தில் சித்ரவதை**

- சென்னை மயிலாப்பூரைச் சேர்ந்தவர் கபாலி இவரது மகன் சதீஷ்குமார் (13) இவன் லஸ்சில் உள்ள ஒரு கடையில் வேலை பார்த்து வந்தார். இவர் மீது திருட்டு புகாரின் பேரில் இந்த சிறுவனை மயிலாப்பூர் போலீசார் விசாரிப்பதற்காக போலீஸ்நிலையம் அழைத்துச் சென்றனர். மகனைப் பார்த்து வந்த அவனது தந்தை கபாலியிடம் ரூ.2,000–ம் கொடுத்தால் பையனை


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விட்டு விடுகிறோம் என்று போலீசார் கூற, பணத்தை திரட்டுவதற்காக வீட்டிற்கு வந்து விட்டார் கபாலி. இரண்டு நாட்கள் சித்ரவதை செய்த சதீஷ்குமாரை, கபாலி வீட்டு முன்பு போலீசார்கள் போட்டுவிட்டு போனார்கள். இராயப்பேட்டை மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளித்தும் சிறுவன் சதீஷ்குமார் இறந்து விட்டான்.

சம்பவம் நடந்த தேதி 10.06.94. குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாததால் 4 போலீசாரும் விடுதலை செய்யப்பட்டார்கள். (14.9.98 தினத்தந்தி)

***சிறுமி பலாத்காரம்***

- கோவை கணபதியை அடுத்த உங்களூர்பள்ளம் செல்லும் சாலையில் மாநகராட்சி ஆரம்பபள்ளி உள்ளது. இப்பள்ளியில் வாட்ச்மேனாக பணிபுரிபவர் இப்ராகீம் இசா (60). அந்தப் பள்ளியில் படிக்கும் 6 வயது சிறுமியை அழைத்துச் சென்று பாலியல் பலாத்காரம் செய்தார்.

பின்னர் விஷயம் தெரிய வர காமக்கொடூரன் இப்ராகீம் இசா தற்போது சிறையிலுள்ளார். (13.11.99 – தினமலர்)

***மனவளர்ச்சி குன்றிய சிறுமி பலாத்காரம்***

- சென்னையை அடுத்த பூந்தமல்லியில் உள்ள குமணன் காலனியில் வசித்து வரும் பதுரீன் மகள் ஷகினாபானு (7) மனவளர்ச்சி குன்றியவர், இவர் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டார். (06.11.98 தினபூமி.)

***சிறுமி பலாத்காரம்***

- சென்னை சூளை பகுதியில் தட்டாங்குளம் சந்தியபாட்சர் தெருவில் வசித்து வருபவர் ரமணி. இவர் தனது தங்கை மகள் சுதாவை (10) தனது பாதுகாப்பில் வளர்த்து வருகிறார். 9.4.99 அன்று ரமணி வேலைக்குச் சென்றிருந்த போது, அதே பகுதியைச் சேர்ந்த கபீர் (25) என்பவர் சுதாவை பாலியல் பலாத்காரம் செய்தார்.

மாதர் சங்கத்தின் தலையீட்டால் குற்றவாளி கபீர் மற்றும் அவனது சகோதரரும் ஏப்ரல் 10ம் தேதி கைது செய்யப்பட்டனர். 376வது பிரிவின் கீழ் போலீசார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். (14.04.99 – தீக்கதிர்)

***சிறுமி பலாத்காரம்-கொலை***

மேலூர் தாலுகா ஏ.வள்ளாலபட்டியைச் சேர்ந்த சாத்தக்கருப்பன் மகள் நாச்சி (13). இவரை இதே ஊரைச் சேர்ந்த 5 நபர்கள் பலவந்தப்படுத்திப் பாலியல் பலாத்காரம் செய்து, கொலை செய்து உடலைக் கிணற்றில் போட்டுள்ளனர். (03.03.99 – தீக்கதிர்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**பள்ளி மாணவி பலாத்காரம்**

மணப்பாறை அருகேயுள்ள களத்துப்பட்டியைச் சேர்ந்த வீராச்சாமி மகள் கோகிலா (12) 6ம் வகுப்பு படித்து வந்தாள். இம்மாணவியை கடந்த 20.2.99 அன்று இதே ஊரைச் சேர்ந்த வெள்ளைச்சாமி மகன் சின்னத்துரை என்பவர் பாலியல் பலாத்கார்ரம் செய்துள்ளார். (24.02.99 – தினகரன்)

**சிறுமி பாலியல் பலாத்காரம்**

சேலம் மாவட்டம், தென்செட்டியார்கார் கிராமத்தைச் சேர்ந்தவர் தங்கராஜ். இவருக்கு அருள் (13) சிவகாமி (11) ஆகிய இரு மகள்கள் இருக்கின்றனர். தமிழக போலீஸ்துறையில் மாநில குற்றப்பிரிவில் அலுவலகக் கண்காணிப்பாளராக வேலை பார்த்து வரும் சக்ரபாணி, சென்னை ஜே.ஜே.நகரில் ஒரு வீடு கட்டி வருகிறார். இந்த வீட்டிற்கு தங்கராஜ் அண்ணன் பாபு வாட்ச்மேனாக இருந்து வருகிறார். பாபுக்கு சாப்பாடு கொண்டு சென்ற அருளை (13) சக்ரபாணி பாலியல் பலாத்காரம் செய்தார். (06.02.99 தினபூமி)

**சிறுமி பலாத்காரம்**

பெரம்பலூர் மாவட்டம் பாண்டகபாசு கிராமத்தைச் சேர்ந்த பெரியண்ணன் மகள் கீதாவை (13) அதே கிராமத்தைச் சேர்ந்த முத்து (40) ஆசைத்தம்பி (30) உள்பட நால்வர் பாலியல் பலாத்காரம் செய்தனர். (30.01.99 தினமணி)

**பணியிடத்தில் சிறுமி மரணம்**

திருப்பூர் சாமுண்டிபுரத்தில் வசித்து வருபவர் ஈசுவரன். இவரது மகள் பானு (14) பானு திருப்பூர் பெருமாநல்லூர் ரோட்டில் உள்ள ஒரு பனியன் கம்பெனியில் வேலை செய்து கொண்டிருந்த போது, பாவாடை பனியன் எந்திரத்தில் சிக்கி, உடலும் எந்திரத்தில் மாட்டிக் கொண்டது. உடல் நசுங்கிய நிலையில் கோவை அரசு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனளிக்காமல் பானு பரிதாபமாக இறந்தாள். (24.06.98 தினத்தந்தி)

**விடுதி மாணவிகள் சித்ரவதை**

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரத்தில் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் படிக்கும் மாணவிகளில் பிற்படுத்தப்பட்டோர் பிரிவினருக்கு அரசு விடுதி உள்ளது. இங்குள்ள மாணவி காளீஸ்வரி வைத்திருந்த 70 ரூபாய் காணாமல் போனது. இந்த பணத்தை எடுத்தவர்களை கண்டுபிடிப்பதற்காக இங்கு பணிபுரியும் தமிழரசி, பணிப்பெண் ஜெயமணி ஆகியோர் மாணவிகளின் கையில் சூடத்தை கொளுத்தி விசாரணை செய்தனர்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இதனால் 7ம் வகுப்பு படிக்கும் மாணவிகள் கலாராணி, சூர்யகலா, முருகமணி, சுதா ஆகியோரின் கையில் கடுமையான தீக்காயம் ஏற்பட்டது. (1.8.99 தினகரன்)

### ஒரிசாவில் கொத்தடிமை சிறார் மீட்பு

அருப்புக்கோட்டை முஸ்லீம் தெருவைச் சார்ந்த மைதீன் பாட்சா (14) கச்சி முகமது (12), சேக் உதுமான் (12), மற்றும் மதுரை நெல்பேட்டையைச் சேர்ந்த சக்திவேல் (15), வாடிப்பட்டி அருகிலுள்ள குட்லாடம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த சீனிவாசன் (15) கம்பம் அருகிலுள்ள புதுப்பட்டி கிராமத்தை சேர்ந்த பாலமுருகன் (18) மதுரை காக்காதோப்பு பகுதியை சேர்ந்த ராஜ்குமார் (15) ஆகிய 7 சிறுவர்களும் கடந்த ஆண்டு வீட்டை விட்டு ஓடி மதுரை நகரில் சுற்றிக் கொண்டிருந்தனர். அப்போது கருப்பையா என்பவர் இந்த் சிறுவர்களை வெளிமாநிலத்தில் வேலை வாங்கித் தருவதாக கூறி அழைத்துச் சென்றார். சிறுவர்களை அழைத்துச் சென்ற கருப்பையா ஒரிசா மாநிலத்தில் கலகண்டி மாவட்டத்திலுள்ள பாலாபட்டினம் என்ற நகரில் உள்ள மிட்டாய் கம்பெனிகளில் வேலைக்கு சேர்த்து விட்டார்.

அங்கு கடந்த ஒரு ஆண்டாக இந்த சிறுவர்கள் வேலை பார்த்து வந்தனர். ஆனால், அங்கு அவர்கள் கடும் சித்ரவதைகளுக்கு ஆளாயினர். அங்கு நடக்கும் அடி, உதைகளை தாங்க முடியாமல் பலமுறை தப்பி ஓட முயன்ற போதும் அவர்களால் முடியவில்லை. ஆனால், ராஜ்குமார் என்ற சிறுவன் மட்டும் அங்கிருந்து தப்பி சில மாதங்களுக்கு முன்பு தனது வீட்டிற்கு வந்து சேர்ந்தான். அவன் தகவல் கூறியதன் அடிப்படையில், அங்கு அருப்புக்கோட்டை மற்றும் மதுரை நகரைச் சேர்ந்த பல சிறுவர்கள் இருப்பது தெரிய வந்தது.

இதைத் தொடர்ந்து அருப்புக்கோட்டை நகர போலீஸ் சப்–இன்ஸ்பெக்டர் ரங்கராஜன் தலைமையில் போலீசார் சென்று அந்த ஆறு சிறுவர்களை மீட்டு வந்தனர். (25.09.99 தினமலர்)

மேலே கண்ட தகவல்கள் அனைத்துமே கடந்த இரு ஆண்டுகளாக தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு நாளிதழ்களில் வெளி வந்தவை. இங்கு அனைத்து நாளிதழ்களிலிருந்தும், தகவல் திரட்டப்படவில்லையெனினும் இருக்கின்ற விபரங்களே குழந்தைகள் மீது எத்தகைய வன்முறைகள், மனித உரிமை மீறல்கள் நடந்துள்ளன என்பதைக் காட்டுகின்றன. இவை குழந்தைகள் எத்தகைய முறையில் சமூகத்தில் நடத்தப்படுகின்றன என்பதற்கான அதிர்ச்சிகரமான அத்தாட்சிகளாகும்.

குழந்தைகளின் மனித உரிமை மீறல்கள், குழந்தை தொழிலாளர் முறை குறித்து நாட்டின் சட்டங்கள் என்ன சொல்கின்றன ?


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பொதுவான பரிந்துரைகள்

குழந்தையானது தனது ஆளுமையின் முழுமையான இயைந்த வளர்ச்சிக்கு மகிழ்ச்சியும், அன்பும் பெறக்கூடியச் சூழலில், குடும்பச் சூழலில் வளர வேண்டியது அவசியம் என்ற உண்மையை உணர்ந்தே குழந்தைகளின் உரிமைகள் மீதான பிரகடனம் (ஜெனீவா பிரகடனம், 1924) உருவாக்கப்பட்டது.

குழந்தைக்கு அதன் உடல் மற்றும் மனரீதியான முதிர்ச்சியின்மை காரணமாக சிறப்பான பாதுகாப்பு மற்றும் கவனிப்பு தேவையாக இருக்கிறது. இவற்றை முழுமையாக உணர்ந்து, ஒவ்வொரு நாட்டிலுள்ள குழந்தைகளின் குறிப்பாக வளர்ந்துவரும் நாடுகளிலுள்ள குழந்தைகளின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதில் உலக நாடுகளின் கூட்டுறவை, கூட்டுப் பணியின் அத்தியா – வசியத்தை உணர்த்துவதாய் ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் உரிமைகள் மீதான உடன்படிக்கை 1989–ம் ஆண்டு நவம்பர் 20–ம் நாள் ஐ.நா சபையின் பொதுக்குழுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்த உடன்படிக்கையில் இந்தியாவும் 1992–ம் ஆண்டு நவம்பர் மாதம் கையெழுத்திட்டது. குழந்தையின் மிகச் சிறந்த நலன் கருதி இந்தியா ஏற்றுக் கொண்ட இந்த உடன்படிக்கையின் மிக முக்கிய விதிகள் கீழே தரப்படுகின்றன.

☆ ***உயிர் வாழ்வதற்கான உரிமை (விதி -6)***

ஒவ்வொரு குழந்தைக்கும் அடிப்படையிலேயே உள்ளார்ந்த உயிர் வாழும் உரிமை உண்டு.

குழந்தையின் உயிர்வாழ்வு மற்றும் வளர்ச்சிக்கான உச்சபட்ச சாத்தியக்கூறுகள் உறுதி செய்யப்பட வேண்டும்.

☆ ***ஆரோக்கியத்திற்கான உரிமை (விதி - 24)***

ஒவ்வொரு குழந்தையும் அதிகபட்ச ஆரோக்கியமான உடல் நலத்தை அனுபவித்திட உரிமை உண்டு. அதிகபட்ச ஆரோக்கியமான உடல் நலம் என்பது சத்தான உணவையும் தூய்மையான குடிநீரையும் உள்ளடக்கியது.

சிசு மற்றும் குழந்தைகள் இறப்பு விகிதத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். ஊட்டச்சத்து குறைவையும் நோய்களையும் எதிர்த்திட போதுமான சத்தான உணவையும், தூய்மையான குடிநீரையும் வழங்கிட அந்தந்த நாடுகள் உறுதி செய்திட வேண்டும்.

மேலும் நோய்த்தடுப்பு, தேகநலப் பராமரிப்பு, சத்தான உணவு ஆகியவற்றின் அவசியத்தையும் குறித்த அடிப்படையான அறிவை அனைத்து தரப்பினருக்கும் வழங்கிட வேண்டியது அரசின் கடமையாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



### ☆ குடியிருப்புக்கான உரிமை (விதி - 27)

ஒவ்வொரு குழந்தைக்கும் பாதுகாப்போடும், மாண்போடும் வாழ்வதற்கான போதுமான குடியிருப்புக்கான உரிமை உண்டு.

குழந்தையின் உடல் ரீதியான, மனரீதியான, ஆன்மீக ரீதியான, ஒழுக்கவியல் ரீதியான மற்றும் சமூக ரீதியான வளர்ச்சிக்குத் தேவையான வாழ்க்கைத் தரத்தை அடையும் உரிமை ஒவ்வொரு குழந்தைக்கும் இருக்கிறது.

தேவைகளின் அடிப்படையில், குறிப்பாக ஊட்டச்சத்து, உடை மற்றும் உறைவிட வசதிகளைப் பொருத்தமட்டில், பொருள் மற்றும் பண்ட உதவி, துணை நடவடிக்கைகள் முதலிய உதவிகளை வழங்க வேண்டியது அவசியம்.

மேலும் பொருளாதார ரீதியாய் குழந்தையை பாதுகாக்கும் பொறுப்பிலுள்ள பெற்றோர் அல்லது பாதுகாவலர்களுக்கு தேவையான உதவியை செய்திட அனைத்து நடவடிக்கைகளும் உறுப்பு நாடுகள் மேற்கொள்ள வேண்டும்.

### ☆ கல்விக்கான உரிமை (விதி 28, 29)

ஒவ்வொரு குழந்தைக்கும் சம வாய்ப்பின் அடிப்படையில் ஆக்கபூர்வமான, முன்னேற்றகரமான முறையில், கட்டாய, இலவச, தரமான கல்விக்கான உரிமையுண்டு.

எந்தவொரு குழந்தைக்கும் பல்வேறு வகையான தொழிற்கல்வி உள்ளிட்ட உயர்நிலைக் கல்விக்கான வாய்ப்புகள் எளிதில் கிட்டக்கூடியதாய் இருக்கும் படி செய்தல் மற்றும் தேவைப்பட்டோருக்குக் கல்வி பயில்வதில் நிதியுதவி அளித்திடவும் வேண்டும்.

குழந்தையின் கல்வி **என்பது குழந்தையின்** தனிமனித ஆளுமை, திறமைகள், உடல் மற்றும் **மனரீதியான திறமைகள்** அவற்றின் முழு வீச்சும் வெளிப்படும் அளவிற்கு **வளர்த்தெடுக்கப்பட வேண்டும்.** விஞ்ஞான, தொழில் நுட்ப மற்றும் நவீன கற்பித்தல் முறைகளை பெற்றிட வாய்ப்புகள் உருவாக்கித் தரப்பட வேண்டும்.

### ☆ விளையாட்டு, பொழுதுபோக்கு, ஓய்விற்கான உரிமை (விதி - 31)

அனைத்துக் குழந்தைகளுக்கும், ஓய்வெடுக்கவும், இளைப்பாறவும், அதன் வயதிற்குத் தகுந்த விளையாட்டு மற்றும் பொழுது போக்குச் செயல்பாடுகளில் ஈடுபடவும், கலாச்சார வாழ்க்கை மற்றும் கலைகளில் சுதந்திரமாகப் பங்கெடுக்கவும் உரிமை உண்டு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கலாச்சார நடவடிக்கைகள், கலையார்வம், பொழுதுபோக்கு மற்றும் ஓய்வுச் செயல்பாடுகளில் குழந்தைகளுக்குத் தகுந்த மற்றும் சம அளவான வாய்ப்புகள் கிடைப்பதற்குரிய வழிவகைகள், வாய்ப்புகளை உருவாக்க வேண்டும்.

☆ **பொருளாதாரச் சுரண்டல்களிலிருந்து பாதுகாக்கப்படுவதற்கான உரிமை (விதி - 32)**

பொருளாதார ரீதியான சுரண்டல்கள், ஒடுக்குமுறைகளிலிருந்து பாதுகாக்கப்படவும் அபாயகரமான அல்லது குழந்தையின் கல்வியில் குறுக்கிடுவதற்கான அல்லது குழந்தையின் தேக நலத்திற்குத் தீங்கு விளைவிப்பதான அல்லது குழந்தையின் உடல், மன, ஆன்ம, ஒழுக்க மற்றும் சமூக மேம்பாட்டிற்கு ஊறு விளைவிக்கக் கூடிய எந்தவொரு வேலையைச் செய்வதிலிருந்து பாதுகாக்கப்படவும் குழந்தைகளுக்கு உரிமை உண்டு.

குழந்தை உழைப்பு குழந்தைப் பருவத்தை அழிக்கிறது. ஆகையால் குழந்தைகளின் நலன் தொடர்பான எந்தவொரு அம்சத்திற்கும் தீங்கு விளைவிக்கும் அனைத்து சுரண்டல்களிலிருந்தும் பாதுகாக்க தேவையான சட்ட ரீதியான, நிர்வாக ரீதியான, சமூக மற்றும் கல்வி ரீதியான நடவடிக்கை –கள் அனைத்தும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

☆ **கருத்துச் சுதந்திரத்திற்கான உரிமை (விதி 13, 17)**

எந்தவொரு குழந்தைக்கும் கருத்துச் சுதந்திரத்திற்கான உரிமையுண்டு. குழந்தை விரும்பும் எந்தவொரு தொடர்புச்சாதனம் வழியாகவும், அனைத்து வகை விவரங்கள், கருத்துக்கள், பிற விஷயங்களை தேடியறியவும், பெற்றுக் கொள்ளவுமான அனைத்து வகையான உரிமைகளும் உள்ளன.

குழந்தைகளுக்கு பல்வேறு விதமான தேசிய, சர்வ தேசிய வழிகளிலிருந்து விபரங்கள், மற்றும் தேவையான ஆக்கப் பொருட்கூறுகள் முதலானவற்றை பரவலாகக் கிடைக்கும்படி வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் வழியாக அளிப்பதற்கான உத்திரவாதம் செய்யப்பட வேண்டும்.

சிறுபான்மையினத்தைச் சேர்ந்த அல்லது பழங்குடியினத்தைச் சார்ந்த குழந்தைகளின் மொழி ரீதியான தேவைகளுக்கு வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் சிறப்பு முக்கியத்துவம் பெறும்படி ஊக்குவிக்கப்பட வேண்டும்.

☆ **குழுவாதலுக்கான சுதந்திரத்திற்கான உரிமை (விதி - 15)**

அமைதியான ஒருங்கிணைப்பிற்கும், குழுவாதலுக்கும், பிறரோடு தொடர்பு கொள்வதற்கும் அனைத்துக் குழந்தைகளுக்கும் உரிமை உண்டு. சில குறிப்பிட்ட வரையறைகளைத் தவிர (தேசிய பாதுகாப்பு, பொதுச் சொத்து பாதுகாப்பு, பொது இட ஒழுங்கு முறை, சமூக ஆரோக்கியம் போன்றவை)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வேறெந்த வரையறைகளும் குழந்தைகளின் ஒருங்கிணைப்புக்கு எதிராக விதிக்கப்படக்கூடாது.

☆ **உடல் மற்றும் மனரீதியான சித்திரவதைக்கு எதிரான உரிமை (விதி-19)**

எந்தவொரு குழந்தையும், உடல்ரீதியான மற்றும் மனரீதியான வன்முறை, இழிவுபடுத்தப்படடல், புறக்கணிப்பு அல்லது அலட்சியமாக நடத்தப்படுதல் போன்றவற்றிலிருந்து பாதுகாக்கப்பட உரிமை உண்டு.

இவ்விதமான அனைத்து வகை வன்முறைகளுக்கும் குழந்தைகள் ஆளாகாமல் தடுக்க தேவையான சட்டரீதியான, நிர்வாக ரீதியான, சமூக ரீதி யான, கல்வி ரீதியான எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மேலும் குழந்தைகள் மீதான வன்முறை மற்றும் அத்துமீறல்கள் குறித்த தொடர் கண்காணிப்பும், தேவையான இடங்களில் சட்டரீதியான நடவடிக்கைகளும் எடுக்க வழிவகைகளில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

☆ **பாலியல் வன்முறைக்கு எதிரான உரிமை (விதி - 34)**

எல்லாவகையான பாலியல் ரீதியான சுரண்டல்கள், கொடுமைகளி – லிருந்தும் குழந்தைகள் பாதுகாக்கப்பட உரிமை உண்டு.

விபச்சாரம் மற்றும் பிறவேறு சட்டத்திற்குப் புறம்பான பாலியல் நடவடிக்கைகளில் குழந்தைகளைப் பயமுறுத்தியோ, பலவந்தப்படுத்தியோ ஆசை காட்டியோ ஈடுபடுத்துவதை தடுக்கும் அனைத்து வகையான நடவடிக்கைளை அந்தந்த நாடுகள் மேற்கொள்ள வேண்டும்.

☆ **சட்டத்தை மீறியதாய் குற்றஞ்சாட்டப்பட்ட குழந்தைகளுக்கான உரிமை (விதி - 40)**

சட்டத்தை மீறியதாய் குற்றஞ்சாட்டப்பட்ட குழந்தைகள் நடத்தப்படும் விதம், பிறரின் அடிப்படை சுதந்திரங்களைப் பற்றிய விழிப்புணர்வை மேம்படுத்தும் வகையிலும், சமூகத்தோடு அவர்களை திரும்ப இணைப்பது குறித்தும், அக்குழந்தைகள் சமூகத்தில் ஆக்கப்பூர்வமான பங்கேற்பில் ஈடுபடுவதற்கான ஆர்வங்களின் அடிப்படையிலும் அமைய வேண்டும்.

குற்றத்தை ஒப்புக்கொள்ளும்படியாய் வாக்குமூலம் கொடுக்கும்படி குழந்தைகள் நிர்பந்திக்கப்படாமலும், இக்குழந்தைகளுக்கு எதிராயுள்ள சாட்சிகள் விசாரணை செய்யப்படவும் உரிமையுண்டு. அவ்விதம் சட்டத்தை மீறியதாக கருதப்பட்டால் அத்தகு முடிவு அல்லது தீர்ப்பையும், மேற்படி நடவடிக்கைகளையும், சுயேச்சையான, சார்பற்ற அதிகாரி அல்லது சட்டப் படியான நீதியமைப்பால் மறுபரிசீலனைக்கு உட்படுத்துவதற்கான உத்திரவாதம் அளிக்கப்பட வேண்டும்.


தமிழ்த் தேசிய ஆவண சுவடிகள்

www.tamilarangam.net



மேலும் தேவைப்பட்ட சாத்தியமான இடங்களிலெல்லாம் சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல், குழந்தைகளை கையாளும் வழிவகை –கள் பின்பற்றப்பட வேண்டியதும், அவ்விதமான நடத்துமுறைகளில் மனித உரிமைகள் மற்றும் சட்ட ரீதியான பாதுகாப்பு முழுமையாக மதிக்கப் பெறுதல் இன்றியமையாதது.

இந்த உடன்படிக்கையில் கையெழுத்திட்டு 8 ஆண்டுகளுக்கு மேலாகியும் இந்திய அரசு இவ்விதிகளை நடைமுறைப்படுத்த என்ன செய்துள்ளது என்பது கேள்விக்குறியாக உள்ளது. ஏனெனில் விதி 6 மற்றும் 24ற்கு முற்றிலும் முரண்பாடாகவே இங்கு நடைமுறை உள்ளது. இங்கு குழந்தை உயிர்வாழ்வதற்கான உரிமையே பாலியல் அடிப்படையிலான தெரிவு சாதனங்களால் மறுக்கப் –படுகின்றது. ஆணா பெண்ணா என்பதை கருவிலிருக்கும்போது முன்கூட்டியே கண்டறிந்து கருவிலிருப்பது பெண் குழந்தையாக இருப்பின் கருக்கொலை செய்துவிடுவது அதிகரித்து வருகிறது. இதற்கான கருக்கொலை தடைச்சட்டம் (Prenatal Diagnostic Techniques (Prevention and Regulation) Act 1996) போடப்பட்டிருப்பினும் பெண் கருக்கொலை மையங்களாக ஸ்கேன் மையங்களும், கிளினிக்குகளும் அதிகரித்தே வருகின்றன.

☆ விதி 24ஐ பொறுத்தவரை என்ன நடைமுறை உள்ளது? தமிழகத்தில் கிராமப்புறங்களில் 90 விழுக்காட்டினரும், நகரங்களில் 60 விழுக்காட்டினருமே கழிப்பிட வசதிகளைப் பெற்றுள்ளனர். கிராமப்புறங்களில் உள்ள மக்களில் 16 விழுக்காட்டினர் மட்டுமே சுகாதார வசதிகளைப் பெற்றுள்ளனர். இந்தியாவில் பிறக்கும் குழந்தைகளில் 30 விழுக்காட்டினர் குறைந்த எடையுடன் பிறக்கின்றனர். தமிழகத்தில் குழந்தை இறப்பு விகிதமானது 1000–ற்கு 57 ஆக உள்ளது. மேலும் இங்கு 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளில் 70 விழுக்காட்டினர் சத்துணவின்றி மிகக்கடுமையான அளவில் பாதிக்கப்பட்டுள் –ளனர். தமிழகத்தில் 35 விழுக்காட்டினரும் தமிழக மக்களில் அதுவும் இதில் தலித் மற்றும் பழங்குடியினரில் 31 விழுக்காட்டினர் மட்டுமே பாதுகாப்பான குடிநீர் வசதிகளைப் பெற்றுள்ளனர்.

☆ சாலைவாழ் சிறார் எண்ணிக்கை அதிகரித்து வருவதே குழந்தைகளின் குடியிருப்புக்கான உரிமையை (விதி 27) இந்திய அரசு எந்த அளவுக்கு மதிக்கிறது என்பதைக் காட்டுகிறது. கல்விக்கான உரிமையை விதியை (28, 29) பொறுத்தவரை இந்திய நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியிலிருந்து 3.9 விழுக்காடே கல்விக்காக செலவளிக்கப்படுகிறது. தமிழகத்தில் ஆரம்பப் பள்ளியில் சேரும் மாணவ மாணவிகளில் ஐந்தாம் வகுப்பு வரை தொடர்ந்து படிப்பவர்கள் 52 விழுக்காட்டினரே. இதில் 37 விழுக்காட்டினர் 8 ஆம் வகுப்புவரை கல்வியை தொடருகின்றனர். இதில் பெரும்பாலும் பெண் குழந்தைகளே கல்வியை நிறுத்தி விடுகின்றனர். 1991 கணக்கெடுப்பின்படி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்தியாவில் 320 மில்லியன் மக்கள் படிப்பறிவு அற்றவர்களே. இதில் 62 விழுக்காட்டினர் பெண்களாகும். இப்புள்ளி விபரங்கள் எல்லாம் இந்திய அரசு எவ்வளவு தூரம் குழந்தைகள் உரிமைகள் மீதான உடன்படிக்கைக்கு உண்மையாக உள்ளது என்பதற்கான அத்தாட்சிகளாகும்.

குழந்தை தொழிலாளரை தடை செய்வது பொறுத்தவரை, குழந்தைத் தொழிலாளர் முறை தொடர்பான சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (International Labour Organisation – ILO) உடன்பாடுகள் 18–ல் இந்திய அரசு கையெழுத்திட்டு ஏற்றுக் கொண்டுள்ளது 16தான். குழந்தைத் தொழிலாளர் முறையை தடை செய்வது குறித்து அரசியல் சாசனத்தின் பிரிவு 24 ஆனது 14 வயதுக்குட்பட்ட குழந்தைகள் எந்த தொழிற்சாலையிலோ அல்லது அரசாங்கத்திலோ அல்லது தீங்கு பயக்கும் எந்த வேலைகளிலுமோ அமர்த்தக்கூடாது என்று தெளிவுபடுத்திக் கூறுகிறது.

இந்திய அரசியல் சாசனத்தின் வழிகாட்டும் நெறிமுறைகள் பிரிவு 39 (இ), (ஏ) 45, மற்றும் 51 (இ) ஆகியவையும் இதையே அரசின் கடமையாக வலியுறுத்துகின்றன. அரசியல் சாசனத்தின் பிரிவு 24 எந்த வேலையாக இருப்பினும் அது குழந்தைகளின் உடல், உளவியல் மற்றும் ஒழுக்க வளர்ச்சியை பாதித்தால் அது தீங்கு பயக்கும் வேலை என்றே விளக்கப் – படுத்துகிறது. ஆனால், குழந்தை தொழிலாளர் முறையை ஒழிக்க முடியாது. அப்படி ஒழித்தால் வறுமையில் வாடும் குடும்பங்களுக்கு வேலையின்றி நிர்கதியாகி விடுவர் என்று கூறி அதை முறைப்படுத்த வேண்டும் என்றெல்லாம் சிலர் கூறி வருகின்றனர். குழந்தைத் தொழிலாளர் முறையே அடிப்படையில் மனித உரிமை மீறலாகும். குழந்தையின் ஆளுமை வளர்ச்சியை சிதைத்து நாட்டின் எதிர்காலத்தை குழி தோண்டி புதைப்பதாகும். இதில் எந்தவித சமரசத்திற்கும் இடமிருக்க முடியாது. ஆனால், குழந்தை தொழிலாளர் (தடை மற்றும் முறைப்படுத்துதல்) சட்டமோ 1986 14 வயதுக்குட்பட்ட குழந்தைகள் தீங்கு பயக்கும் சில குறிப்பிட்ட தொழில்களில் மட்டும் ஈடுபடுத்தக்கூடாது என்றே கூறுகிறது. குழந்தை தொழிலாளர் முறையே குழந்தைகளின் உடல், உளவியல் உள்ளிட்ட அனைத்துப் பரிமாணங்களுடைய ஆளுமை வளர்ச்சியை முற்றிலும் சிதைப்பதாகும். இப்படி இருக்க சில தொழில்களில் மட்டும் குழந்தைகள் அமர்த்தக்கூடாது. மற்றவற்றில் அமர்த்தலாம் என்று கூறுவது, அரசியல் சாசனத்திற்கே முரணானதாகும். இதை உணர்ந்த மத்திய அரசு குழந்தை தொழிலாளர் (வேலைக்கு அமர்த்துவதிலிருந்து விடுவித்தல்) சட்டம் 1988 இயற்றியது. ஆனாலும் சட்ட நிலையில் சிறிதளவே முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. ஏனெனில் இச்சட்டத்திலும் குழந்தைத் தொழிலாளர் முறையைத் தடை செய்வதில் செயலாற்றும் அரசு அமைப்புகளுக்கு சில அதிகாரப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பரவல்களையே (Decentralization) செய்யப்பட்டுள்ளது. குழந்தை தொழிலாளர் முறையை முற்றிலும் தடை செய்யவில்லை. தீங்கு பயக்காத சில தொழில்களில் குழந்தைகள் தொழிலாளர்கள் அமர்த்தப்படுவதை இது அனுமதிக்கிறது.

☆ இது தவிர பல்வேறு சட்டங்கள் குழந்தை தொழிலாளர்கள் அமர்த்தப்படுவதை தடை செய்கின்றன. குழந்தைகள் (உழைப்பு அடமானம்) சட்டம் 1933 15 வயதுக்குட்பட்ட குழந்தைகள் அடமானம் வைக்கப்படுவதை தடை செய்கிறது.

☆ குழந்தைகளைப் பணிக்கு அமர்த்தும் சட்டம் – 1938, 15 வயதுக்குட்பட்ட குழந்தைகள் சில குறிப்பிட்ட தீங்கு விளைவிக்கும் பணிகளில் அமர்த்துவதை தடை செய்வதோடு 17 வயதுக்குட்பட்ட குழந்தைகள் இரவு பணியில் 15 வயதிலிருந்து 18 வயது வரை உள்ள குழந்தைகள் அமர்த்தப்படுவதை தடை செய்கிறது. இவை தவிர, குறைந்த கூலி சட்டம் 1948, கொத்தடிமை முறை ஒழிப்புச் சட்டம் 1976, சுரங்கம் (திருத்தச்) சட்டம் 1983, கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம் 1961 தொழில் பழகுநர் சட்டம் 1961, பீடி மற்றும் சிகரெட் தொழிலாளர் சட்டம் (வேலைக்கு அமர்த்துவது குறித்த நிபந்தனைகள்) போன்றவை குழந்தை தொழிலாளர் அமர்த்தப்படுவதை தடை செய்கின்றன.

☆ குழந்தை தொழிலாளர் தடை செய்ய இத்தனை சட்டங்கள் இருப்பினும் மேலே கண்ட சட்டங்கள் நடைமுறைப்படுத்துவது மிகவும் மந்தமாகவே உள்ளது என்பது வெளிப்படை. எனவே இச்சட்டங்கள் தீவிரமாக அன்ல்படுத்தப் – படுவதை கண்காணிக்க குழந்தை தொழிலாளர் முறையை முற்றிலும் ஒழிப்பதை நோக்கி நடைமுறைகள் முன்னேற, குழந்தை உரிமைகள் ஆணையம் (Children Rights Commission – CRC) ஒன்று உண்மையான அதிகாரங்களுடன் உருவாக்கப்பட வேண்டும்.

☆ குழந்தைகள் பாலியல் சுரண்டலைத் தடுக்க இருக்கின்ற சட்டங்கள் போதாது. தனியான தண்டனைச்சட்டம் ஒன்று இயற்றப்பட்டு கடுமையான தண்டனை – கள் (கடுங்காவலிலிருந்து ஆயுள் தண்டனை வரை) வழங்கப்பட வேண்டும்.

☆ குழந்தைகள் கல்வியை ஒரு அடிப்படை உரிமையாக்குவதற்கான அரசியல – மைப்புச் சட்ட திருத்த மசோதா 83 பொருத்தமானதொன்றாக தோன்றுகிறது. ஆனால் இது சட்டரீதியாக அதிகாரம் கொண்டதாக்கப் படவில்லை. இது ஏனெனில் ஜெ.பி. உன்னிகிருஷ்ணன் எதிர் ஆந்திரப் பிரதேச அரசு வழக்கில், உச்சநீதிமன்றமானது 1993–ல் தனது தீர்ப்பில் ஏற்கனவே கல்வி உரிமையை அடிப்படை உரிமையாக ஏற்படுத்தியுள்ளது. நீதிமன்ற அமர்வு (பெஞ்ச்) தனது தீர்ப்பில் "நாட்டின் ஒவ்வொரு குழந்தையும் ஒவ்வொரு குடிமகனும் 14 வயது பூர்த்தியாகும் வரையில் இலவசமாக கல்வி பெறுவதற்கான உரிமையை பெற்று இருக்கின்றனர். இதன் அர்த்தம் என்னவெனில் 14 வயது வரைக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இலவச கல்வியை அனைவருக்கும் அளிப்பதையும் அதை உறுதிப்படுத்தவும் அரசுக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் சட்டப்பூர்வ கடமை உள்ளது. இதுவே ஷரத்து 21–ஐ விரிவுபடுத்தும், ஷரத்து 45ஐ உண்மையாக்கும் யதார்த்தத்தில் நடைமுறைப்படுத்தும் நாட்டின் சட்டமாகும்" என்று கூறியுள்ளது.

☆ இலவச மற்றும் கட்டாயக் கல்விக்கான மாதிரிச் சட்டத்தை (Model Act) மாநில அரசுகள், அரசு சாரா தன்னார்வத் நிறுவனங்கள், கல்வியாளர்கள் மற்றும் கல்வித் திட்டவல்லுநர்கள் ஆகியோருடன் கலந்தாலோசித்து, இந்திய அரசு உருவாக்க வேண்டும். இம்மாதிரிச் சட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு மாநிலங்கள் சட்டத்தினை இயற்ற வேண்டும்.

☆ இலவச மற்றும் கட்டாயக் கல்வியை அளிப்பதற்கான வசதி வாய்ப்புக்களை உருவாக்கும் பொருட்டு மாநில அரசுகளின் கடமை மற்றும் பொறுப்புகளை சட்டம் குறிப்பிட வேண்டும்.

☆ பள்ளி செல்லும் வயதுள்ள அனைத்துக் குழந்தைகளையும் பள்ளிகளில் சேர்ப்பதையும் அவர்களை பள்ளிகளில் தக்க வைத்துக் கொள்வதையும் உறுதிப்படுத்தும் கடமையும் பொறுப்பும் பஞ்சாயத்துக்களுக்கு இருக்க வேண்டும்.

☆ உள்ளூர் கல்வி அவை (Local Education Council) அல்லது கிராம கல்விக் குழுக்கள் (Village Education Committees) அமைத்தல் மற்றும் அவற்றின் பணிகளை இச்சட்டம் வகுத்துரைக்க வேண்டும்.

☆ எட்டாம் வகுப்பு வரையிலான அனைத்துப் பள்ளிகளிலும் கல்வி இலவசமாக வழங்கப்பட வேண்டும். அப்பள்ளிகள் அரசாங்க பள்ளிக்கூடங்களாக இருந்தாலும் சரி அல்லது தனியாரால் நிர்வகிக்கப்படுபவை அல்லது உள்ளாட்சி அமைப்புகளால் நிர்வகிக்கப்படுபவையாக இருந்தாலும் சரி, அவை சிறுபான்மையினருக்கான பள்ளியாக இருந்தாலும் அல்லது இல்லாமலிருந்தாலும் சரி, கல்வி இலவசமாக வழங்கப்பட வேண்டும்.

☆ அருகாமையிலுள்ள பள்ளிக் கொள்கையே அமலாக்கப்படவேண்டும். எனவே எந்தவொரு குழந்தைக்கும் அருகாமையிலுள்ள பள்ளிக்கூடத்தில் சேரும் வாய்ப்பு மறுக்கப்படக் கூடாது. புதிய பள்ளிக் கூடங்கள் ஏற்படுத்தப்படும் பொழுது பள்ளிகள் இல்லாத பகுதிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

☆ கல்வி முறையானது பாகுபாடு அற்றதாக இருக்க வேண்டும். கல்வி அளிக்கும் பாணியானது (Pattern) சீரானதாக இரக்க வேண்டும். மேல்தட்டு மக்களுக்கென்று சிறப்புக் கொள்கைகள் அனுமதிக்கப்படக்கூடாது. தற்போது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செயல்பட்டுக் கொண்டிருக்கும் அனைத்துப் பள்ளிகளும் ஒரே முறையான கல்வி அமைப்பிற்குள் கொண்டுவரப்பட வேண்டும். சாதி, மதம், பாலினம் மற்றும் மொழி அடிப்படையில் எந்தவித பாகுபாடும் அனுமதிக்கப்படக் கூடாது. மதக்கோட்பாடுகள், சாதி அடிப்படையில் நிதி பெறும் அமைப்புகள், பள்ளிகளை அமைக்க அனுமதி அளிக்கக்கூடாது அல்லது புதிய பள்ளிகள் தங்களது பெயர்களில் சாதி அல்லது மத அடையாளத்தை வைத்துக் கொள்ளக்கூடாது.

இப்பரிந்துரைகள் நிறைவேற்றப்படும்போதே குழந்தைகளின் உரிமைகள் மதிக்கப்பெறும்.

(ஆதாரம்: மனித உரிமைகளுக்கான குழந்தைகளின் குரல் 1, 1997 2, 3, 4 மற்றும் 5 1998, வெளியிடு. மனித உரிமைகள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் – Human Rights Advocacy and Research Foundation-HRF, சென்னை மற்றும் CACL அமைப்பினரின் வெளியீடுகள்)

◆◆◆

www.tamilarangam.net



# VIII. சிறுபான்மையோர் உரிமைகள்

இந்திய அரசியல் சாசனம், இந்தியக் குடிமகனுக்கு ஒரு குறிப்பிட்ட சமயத்தை ஏற்கவும், கடைபிடிக்கவும், பிரச்சாரம் செய்யவும் உரிமையளித்துள்ளது. அது மட்டுமல்ல, அரசியல் சாசனம் சிறுபான்மைச் சமயத்தினர் தாம் விரும்பிய வண்ணம் நிறுவனங்களை நிறுவவும், நிர்வகிக்கவும் உரிமை வழங்கியுள்ளது. பன்முகச் சமயங்களை உள்ளடக்கிய நமது நாட்டில், எந்தச் சமயமும் அரசின் சமயமாக ஏற்கப்படவில்லை. எல்லாச் சமயங்களும் சமமாக மதிக்கப்பட வேண்டும் என்னும் அடிப்படையில் சமயச் சார்பின்மை (Secularism) அரசியல் சாசனத்தின் முக்கிய கோட்பாடாக விளங்குகிறது. சமய நிறுவனங்களுக்கான சட்டம் சமயத்தை அரசியல் காரணங்களுக்காகப் பயன்படுத்துவதை தண்டனைக்குரிய குற்றம் என்கிறது. மத மாற்றத்தைத் தேசிய சட்டங்கள் தடை செய்யவில்லை. சிறுபான்மைச் சமயத்தாருக்குச் சட்ட ரீதியான பாதுகாப்பு கொடுக்கப்பட்டு வருகிறது.

எனினும், பெரும்பான்மை சமய அடிப்படையில், மக்களை ஒருங்கிணைத்து அரசியல் ஆதாயம் காணும் வகையில் வளர்ந்து வரும் பெரும்பான்மை வகுப்புவாதம், மதச் சிறுபான்மையினரை எதிரிகளாக்கி அரசியல் நடத்தி வருவது அண்மைக் கால நிகழ்வுகளாகும். எங்கோ ஒரு சில இடங்களில், ஒரு சிலரால் ஏற்கப்பட்டு வந்த பெரும்பான்மை சமய வகுப்புவாதம், இன்று வகுப்புவாதம் பேசுகின்ற கட்சி ஆட்சியேறுகின்ற அளவுக்கு வளர்ந்துள்ளது. இசுலாமியரும், கிறிஸ்தவரும் மக்கள் எதிரிகளாகக் காட்டப்பெறுகின்றனர். சிறிய சிறிய பூசல்கள் மதப்பூசல்களாகக் காட்டப்பட்டு, மக்களைப் பிளவுபடுத்தி, வன்முறை கட்டவிழ்த்து விடப்படுகிறது. சென்ற ஆண்டு, பாரதீய சனதா கட்சி ஆளும் குசராத் மாநில டாங்க்ஸ் மாவட்டத்தில், கிறிஸ்தவப் பழங்குடியினரின் ஆலயங்கள் எரிக்கப்பட்டன. பள்ளிகள் தகர்க்கப்பட்டன. மத மாற்றம் என்ற பெயரில் கிறிஸ்தவர்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுகின்றன. ஒரிசாவில், தொழுநோய் மருத்துவர் கிரகாம் ஸ்டெயின்ஸ் அவர் இரு குழந்தைகளோடு எரிக்கப்பட்டார். தந்தை அருள்தாஸ் கொல்லப்பட்டார். இன்று சிறுபான்மையினர்க்கெதிரான வன்முறைகள் தொடரும் நிகழ்வுகளாகி விட்டன.

தமிழகம், மதக்கலவரங்களால் பெரிதும் பாதிக்கப்பெறா மாநிலம் என்பர். 70–களின் பின் நடந்த மீனாட்சிபுரம் மதமாற்ற நிகழ்வுகள் தொடர்ந்து நடத்தப்பெற்ற மண்டைக்காடு கலவரம் – இந்து மதவாத வளர்ச்சிக்குத் துணை போயின. திராவிட கலாச்சாரத்திற்குச் சற்றும் பொருந்தாத ஆர்.எஸ்.எஸ். (வேணுகோபால் கமிஷன் அறிக்கை) அமைப்பின் வளர்ச்சி, இதன் துணை அமைப்புகளான விசுவ இந்து பரிஷத், இந்து முன்னணி போன்ற அமைப்புகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எதிர்பார்ப்புக்கும் மேலாக, திராவிட இயக்கம் வளர்ந்த தமிழகத்தில் வளர்ந்து வருகின்றன. இவ்வியக்கங்களின் வளர்ச்சிக்கு அண்மைக்காலங்களில் மிக முக்கிய காரணங்களாக இரண்டினை கூற முடியும். ஒன்று அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், 1998–ல் பாரதீய சனதாவோடு கொண்ட கூட்டு; 1999–ல் இக்கட்சியோடு திராவிட முன்னேற்றக் கழகம் கொண்ட கூட்டு, மதவாதக் கட்சிகளுக்கு ஒரு அங்கீகாரத்தை வழங்கியது. இவ்வங்கீகாரமும், நாடெங்கும் எழுப்பப்பட்டு வரும் சிறுபான்மையினர்க்கு எதிரான வன்முறைகளும், தமிழகத்தில் ஆங்காங்கே தலைதூக்கியுள்ளன.

1998–ல் கோவையில் நடத்தப் பெற்ற கலவரம், தொடர்ந்த குண்டு வெடிப்பு, ஒரு நாளில் நடந்த தனித்த நிகழ்வல்ல. பலவாண்டுகளாகத் திட்டமிட்டு சிறுபான்மையினர்க்கு எதிரான பிரச்சாரத்தின் விளைவு என்பதை பி.யு.சி.எல் அறிக்கை நிரூபிக்கிறது. கோவைக் கலவரத்தினால், கிடைக்கும் அதிர்ச்சி தரும் செய்தி என்னவெனில், மக்களிடம் மட்டுமல்ல, போலீசாரிடமும் வகுப்புவாதக் கருத்துக்கள் ஊடுறுவியுள்ளன என்பதுதான். இக்கலவரம் தேர்தல் முடிவுகளை மாற்றியதோடு, தமிழகத்தில் முதன்முறையாக பாரதீய சனதா சார்பில் நாடாளுமன்றத்திற்கு உறுப்பினர்கள் தேர்வும் செய்யப்பட்டனர்.

1999–ல் தேர்தலுக்குப் பின் பாரதிய சனதாவில் தேசிய சனநாயக கூட்டணி ஆட்சியேற்ற பின், ஏற்கெனவே வட மாநிலங்களில் கிறிஸ்தவ சிறுபான்மையினருக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்டிருந்த சூழலைப் போலவே, தமிழகத்தில் கிறிஸ்தவ ஆலயங்கள் எரிந்தன. இவை எரிக்கப்பட்டனவா என்ற கேள்வி எழுந்தபோது, தற்செயலாக நிகழ்ந்தவை. வகுப்புவாத சாயம் வேண்டாம் என்றெல்லாம் முதலமைச்சரும், அரசதிகாரிகளும் கூறினாலும் இந்நாள் வரை நிகழாத இந்நிகழ்வுகள் திடீரென நிகழக் காரணம் என்ன? ஏன் கிறிஸ்தவ ஆலயங்கள் மட்டும் எரிகின்றன? ஆலயங்களை நிறுவி வழிபடும் உரிமை சட்டரீதியானதாக இருக்கின்றபோது, கிறிஸ்தவ ஆலயங்கள் ஏன் குறி வைக்கப்படுகின்றன? தேசிய சனநாயக முன்னணி ஆட்சியின் முதல் மாதத்தில் மட்டும் 4 ஆலயங்கள் எரிந்தன.

சமய சார்பற்ற நாட்டில் சமயம் சார்ந்த அரசு உருவாகும்போது, சமயச் சிறுபான்மையினருக்கு என்ன நிகழுமோ அப்போக்கு தமிழகத்திலும் தலைதூக்குகிறது.

சிறுபான்மையோர் உரிமை மீறல்கள் குறித்த இந்தத் தொகுப்பு முழுமையானதல்ல. இவர்களின் உரிமை மீறல்கள் பற்றிய செய்திகளைத் தொகுக்கும் பணியினை எந்த அமைப்பும் முறையாக இதுவரை செய்யவில்லை. பத்திரிக்கைகளில் வெளிவந்த செய்திகளின் அடிப்படையில், சில நிகழ்வுகள் தரப்பட்டுள்ளன. சிறுபான்மையினரை மையப்படுத்திய அரசியல் நடத்தப்பெறும் இக்கால கட்டத்தில், சிறுபான்மையினர் உரிமை மீறல்கள் எல்லாப் பகுதிகளிலும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தொடர்ந்து நடைபெறுகின்றன. பல்வேறு சமயக் குழுக்களிடையே பதட்டமும், பதட்டம் கலவரமாகின்ற சூழலும் நிலவுகின்றது. நாட்டில் நடக்கும் அனைத்து வன்முறைகளுக்கும் சிறுபான்மையினருள் ஒரு குறிப்பிட்ட சமயஞ்சார்ந்தோரை காரணமாக்குவதைப் பார்க்கிறோம். அரசியல் தலைவர்கள் குறிப்பாக மத்திய அமைச்சர்கள் தமிழகத்திற்குப் பயணம் செய்கின்றபோது இசுலாமிய, இளைஞர்கள் முன்னெச்சரிக்கையாக கைது செய்யப்படுகின்றனர். டிசம்பர் 6ம் நாள் கலவரம் வருமோ என்று எதிர்பார்த்து இச்சமயத்தினர் அச்சுறுத்தப்படுகின்றனர். கைது செய்யப்படுகின்றனர். நாடு முழுவதும் இச்சமயத்தினரே கலகம் செய்வர் என்ற கருத்து உருவாக்கப்படுகிறது. வகுப்புவாதக் கலவரங்கள், ஒரே நாளில் உருவாவதல்ல. பல ஆண்டுகள் திட்டமிட்டு நடத்தப் பெறுவது. அப்படிப் பார்க்கின்ற போது, வகுப்புவாதத்தையும், அதன் விளைவுகளையும் தமிழகம் சந்திக்கும் நாட்கள் வெகு தொலைவில் இல்லை.

### 1. கோவை கலவரம் (மக்கள் சிவில் உரிமைக் கழக அறிக்கை)

கோவை கலவரத்தை ஆராய்வதற்காக மக்கள் சிவில் உரிமைக் கழகத்தின் (பி.யூ.சி.எல்) உண்மையறியும் குழு கோவைக்குச் சென்றது. அதிகாரிகள், அரசியல்வாதிகள், கோவை பிரமுகர்கள், பொதுமக்கள் ஆகியோரைச் சந்தித்து, நடந்த வன்முறை குறித்து தீர விசாரித்தனர். அந்த உண்மையறியும் குழுவில் கீழ்க்கண்ட நபர்கள் இடம் பெற்றிருந்தனர்.

1. எஸ். கலாவதி, அறிவியலாளர், தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி பி.யூ.சி.எல் அமைப்பின் பொருளாளர்
2. பி. சந்திரன், வங்கி அதிகாரி, பி.யூ.சி.எல், சென்னை.
3. டி.வி. நடராசன், அறிவியலாளர், கல்பாக்கம் பி.யூ.சி.எல், சென்னை.
4. ஆர். வெங்கடேசு, சட்டமாணவர், பி.யூ.சி.எல், சென்னை.
5. வி.சிறீதர், அறிவியலாளர், கல்பாக்கம், பி.யூ.சி.எல், சென்னை.
6. இர்பான் எஞ்சினியர், இயக்குநர், சமூகம் மற்றும் மதசார்பின்னை ஆய்வு மையம், மும்பை.
7. சந்தியா மாத்ரே, ஆராய்ச்சியாளர், மும்பை
8. பி.ஏ. பௌரான், வழக்கறிஞர், பொதுச் செயலாளர், பி.யூ.சி.எல், கேரளா
9. வேணு வினாயுடி, சமூக செயல்வீரர், கேரளா,
10. சு. கோபால், அறிவியலாளர், கல்பாக்கம், பி.யூ.சி.எல், சென்னை
11. குறிஞ்சி, கல்வியாளர், ஈரோடு, பொருளாளர், பி.யூ.சி.எல், ஈரோடு
12. சுகுமாரன், பொதுச் செயலாளர், பி.யூ.சி.எல், பாண்டிச்சேரி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பன்னிரெண்டு பேர் கொண்ட இக்குழு, நடுநிலைமையுடன் விசாரித்து அளித்துள்ள அறிக்கையில் முஸ்லீம்களுக்கெதிராக நீண்டநாட்களாக திட்ட மிட்டுத் தூண்டப்பட்டு வந்த வகுப்புவாதமும், முஸ்லீம்களை அழித்தொழிக்கும் சங்பரிவாரின் துல்லியமான திட்டங்கள் பற்றியும் மிகத் தெளிவாக விளக்கப் பெற்றுள்ளன. மேலும், அரசு மற்றும் போலீஸ் அதிகாரிகளின் முஸ்லிம் விரோதப் போக்கு, இவர்களிடமிருந்து முஸ்லிம்களை காக்கத் தவறிய, முந்தைய மற்றும் தற்போதைய அரசுகளின் போக்கு ஆகியவை குறித்து மிகவும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. இனி அச்சமின்றி முஸ்லிம்கள் வாழ்வதற்கு அரசாங்கம் காண வேண்டிய வழிமுறைகளும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கையின் முக்கிய குறிப்புகள்

- இந்து முன்னணியின் தலைவர் திரு. ராமகோபாலன் கோவைக்கு பலமுறை வருகை தந்து, பொதுக்கூட்டங்களில் முஸ்லீம்களை பற்றியும் இஸ்லாம் குறித்தும் இழிவுபடுத்தி கோபத்தை தூண்டும் வகையில் பேசியுள்ளார்.
- சில வருடங்களுக்கு முன் ஆர்.எஸ்.எஸ் அலுவலகத்தில் நடைபெற்ற குண்டு வெடிப்பைத் தொடர்ந்து கோட்டைமேடு பகுதியில் போலீசார் நுழைந்து முஸ்லிம் மக்கள் மீது வன்முறையை ஏவியுள்ளனர். அவர்களின் வீடுகளைச் சேதப்படுத்தியுள்ளனர். ஒட்டுமொத்தமாக அனைத்து முஸ்லீம் இளைஞர் களையும், சிறுவர்களையும் பொய்க் காரணங்களின் அடிப்படையில் கைது செய்து சிறைக்காவலில் வைத்து கொடூரமாக தாக்கியுள்ளனர். இந்த நடவடிக்கைகள் முஸ்லீம் இளைஞர்கள், சிறுவர்களின் மனதில் போலீசார் மீது வெறுப்பை உருவாக்கியுள்ளது. வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போன்று கோட்டைமேடு பகுதிக்குச் செல்வதற்கான மூன்று நுழைவாயில்களில் போலீஸ்துறை சோதனை நிலையங்கள் அமைக்கப்பட்டும், கோட்டை மேட்டிற்குள்ளாகவே, நான்கு இடங்களில் போலீசாரும் குவிக்கப்பட்டு, கோட்டை மேடையே ஒரு தனித் தீவாக போலீசார் மாற்றிவிட்டனர். இந்நடவடிக்கைகளினால் முஸ்லீம் இளைஞர்களும், சிறுவர்களும் தாங்கள் நாள் முழுமைக்கும் குற்றவாளிகள் போன்று நடத்தப்படுவது போன்ற மனநிலையை அடைந்தனர்.
- கோட்டைமேடு பகுதியில் கிட்டத்தட்ட 80 சதவிகிதத்தினர் முஸ்லீம்கள் ஆவார்கள். மீதமுள்ளவர்கள் இந்துக்களும் மற்றவர்களுமாவர். மேலே குறிப்பிடப்பட்ட மோசமான காலக் கட்டங்களில் கூட இங்குள்ளவர்கள் அமைதியாகவே வாழ்ந்து வந்துள்ளனர்.
- கோட்டைமேடு, உக்கடம், பெரிய கடைவீதி போன்ற இடங்களில் ஏறக்குறைய 1200 நடைபாதைக்கடைகள் உள்ளன. பெரும்பான்மையான கடைகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முஸ்லீம்களுக்கு உடைமையானதாகும்.ஒவ்வொரு கடைக்கும் நாளொன்றுக்கு ரூ.25 வீதம் போலீசார் மாமூல் பெற்று வந்துள்ளனர்.

- மத்திய ரிசர்வ் பாதுகாப்புப் படையினர் மற்றும் அதிரடிப்படையினர் முகாமிட்டிருந்தும்கூட முஸ்லீம்களின் கடைகள், வீட்டுப் பொருட்கள் முன்கூட்டியே திட்டமிடப்பட்டு, எரிக்கப்பட்டது, கொள்ளையடிக்கப்பட்டது. போலீசார் இதைக் கட்டுப்படுத்தாததுடன் அவர்களும் இச்செயலில் பங்கேற்றனர். மத்திய ரிசர்வ் படையினரும், அதிரடிப்படையினரும் வேண்டு மென்றே, கலவரம், கொள்ளை நடைபெறும் தெருக்களை விட்டுவிட்டு மற்ற தெருக்களுக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள் என்ற செய்தியை பல பார்வையாளர்கள் இக்குழுவிடம் தெரிவித்தார்கள். இந்து அடிப்படைவாதிகள், குற்றவாளிகளை துணைக்கழைத்துக் கொண்டும், போலீசாரின் உதவியுடனும் குறிப்பாக முஸ்லீம்களின் கடைகள், வீடுகளைத் தெரிந்தெடுத்து தீயிட்டுக் கொள்ளையடித்தார்கள். இந்த நிகழ்ச்சிகள் 29–ம் தேதி இரவு தொடங்கி, டிசம்பர் ஒன்றாம் தேதி வரை நடந்துள்ளது.

- முஸ்லீம்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இப்படுகொலை, கொள்ளை போன்ற செயல்கள் யாவும் மிகவும் துல்லியமாகத் திட்டமிடப்பட்டு, செயல்படுத்தப் பட்டுள்ளன என்று குறிப்பிடும் அளவுக்கு சான்றுகள் உள்ளன.

- காவலர் செல்வராஜ் கொலை செய்யப்பட்ட நிகழ்ச்சியானது, இத்தகைய படுகொலை, கொள்ளை ஆகியவற்றை நடத்த தந்திரமாகவே பயன்படுத்தப் பட்டது. இச்சம்பவத்தின் போது, அங்கு நேரில் இருக்க நேர்ந்த சுக்ரவார் பேட்டையைச் சார்ந்த, மூத்த விஞ்ஞானியின் கூற்றுப்படி, செல்வராஜ், கொலை நடந்திராவிடினும் வேறு ஏதேனும் காரணங்காட்டி இத்தகைய வன்முறைத் தாக்குதல் முஸ்லீம் சமூகத்தினரின் மீது நடத்தப்பட்டிருக்கும் என்று திட்டவட்டமாகக் கூறினார்.

- அழித்தொழிப்புகள் யாவும் மிகவும் துல்லியமாகச் செய்யப்பட்டுள்ளன. இரு முஸ்லீம் கடைகளுக்கு இடைப்பட்ட இந்து ஒருவருக்குச் சொந்தமான கடை இருப்பின், முஸ்லீம் கடைகள் அழித்தொழிக்கப்பட்டு, தடைமட்டமாக்கப்பட்டு எரிக்கப்பட்டபோதிலும், இந்து கடைக்கு எந்த சேதமும் இல்லை.

- பழமுதிர்ச்சோலை, டாப் நாட்ச், சோடியாக், பாப்புலர் ஆட்டோ மொபைல்ஸ் போன்ற கடைகள் தடைமட்டமாக்கப்பட்ட பின்னரே, பெரும்பாலான கோயம்புத் –தூர் வாசிகளுக்கே அவை முஸ்லீம்களுக்குச் சொந்தமானவை என்று தெரியவந்தது. இதிலிருந்து கோவை நிகழ்ச்சி, வெறும் போலீசாரின் மரணத் திற்கான வேதனையில் வெளிப்பாடல்ல என்பது தெளிவு. உண்மையில் இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து, நிகழ்த்தியவர்களின் நீண்ட காலத் திட்டத்தை அது வெட்டவெளிச்சமாக்குகிறது. அது மட்டுமின்றி, இந்து அடிப்படைவாத



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சக்திகளுக்கும், போலீஸ்துறை மற்றும் அரசுத்துறை அதிகாரிகளுக்கும் இடையிலான மறைமுக உறவினை இது வெளிக்காட்டுகிறது.

- முஸ்லீம் சமூகத்தினர் மீதான இத்தகைய தாக்குதல் அவர்களுக்குத் தேவையான ஒன்றுதான் என்று கருதும் போக்கே இந்துக்களிடம் காணப்படு–கிறது. ஆனால் இவர்களுடன் தொடர்ந்து விவாதிக்கும் போது அவர்களது மேற்சொன்ன உணர்வுகளை நியாயப்படுத்தும் வகையில் எந்த ஒரு நேரடி அனுபவமோ மற்ற தகவல்களோ அவர்களிடம் இல்லை என்று தெரிய வருகிறது. கட்டவிழ்த்து விடப்பட்ட கோரமான வன்முறையின் புகைப்பட சாட்சியங்களைக் கண்ணுற்ற போது அவர்கள் பெரிதும் நிலை குலைந்து போயினர். பல ஆண்டுகளாகத் திட்டமிட்டு, முஸ்லீம்கள் குறித்து வளர்த்தெடுக்கப்பட்ட புனைவுகள் இதன்மூலம் தெளிவாக வெளிப்பட்டது.
- இந்து முன்னணி, வி.ஹெச்.பி., ஆர்.எஸ்.எஸ் போன்ற சங்பரிவாரங்களால் தொடர்ந்து ஊதிப் பெருக்கப்படும் இந்து மதவெறி உணர்வின் விளைவுதான் ஒரு சில முஸ்லீம் அமைப்புகளின் சீற்றம் கொண்ட எதிர்வினைகளாகும்.
- போலீசாரில் ஒரு பகுதியினரிடம், எவரும் அறியக்கூடிய வகையில் வளர்ந்துள்ள முஸ்லீம் மக்களுக்கு எதிரான மனோநிலைதான், முஸ்லீம் மக்களுக்கு எதிரான இவர்களின் நியாயமற்ற ஒருதலைபட்சமான அதிகாரச் செயல்பாட்டுக்கு காரணமாகும்.
- கோவை பி.1 போலீஸ்நிலையத்திலும், ஆய்வாளரின் அறையிலும்கூட பி.யூ.சி.எல் குழுவினரால் இந்து மதக் கடவுளர்களின் படங்களை மட்டுமே காண முடிந்தது.
- இந்து–முஸ்லீம் பிரச்சனைகள் குறித்த செய்தி தொடர்பு சாதனங்களின் முழுமையற்ற, ஒரு தலைப்பட்சமான செய்தி வெளியிட்ட முறை.
- பெரும்பாலும் உண்மைக்குப் புறம்பான, ஆதாரமான தகவல்கள் ஏதுமின்றி, இந்து மத அறிவுஜீவிகள் பரப்பிவரும், திட்டமிட்ட பகை உணர்வைத் தூண்டக்கூடிய பிரச்சாரங்களை எந்தவகையிலும் எதிர்கொள்ளாத அரசியல் கட்சிகளின் வெறுமை, இத்தகைய் பொய் பிரச்சாரங்களை எத்தகையப் பரிசீலனைக்கும் உட்படுத்தாமல், அவற்றை அப்படியே ஏற்றுக் கொள்ளும் பொதுமக்களின் சோம்பல் மனோநிலை, இப்பிரச்சாரங்கள் மேலும் பரவுவதற்கான மற்றொரு இரண்டாம் களமாகியுள்ளது.
- போலீஸ்காரர் செல்வராசின் கொலைக்குக் காரணமாக செல்வராசின் தரப்பிலிருந்து தேவையற்ற ஆத்திரமூட்டக்கூடிய செயல்பாடுகள் இருந்தன என்பதற்கான ஆதாரங்களையோ, இதேபோல் கொலை செய்தவர்களின் தரப்பிலிருந்து திட்டமிட்டு, முன் விரோதம் காரணமாக செல்வராசைக் கொன்றார்கள் என்பதற்கான ஆதாரங்களையோ பி.யூ.சி.எல் காணவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



- மௌன அஞ்சலியாக முடிந்திருக்க வேண்டிய ஒரு நிகழ்வை ஈவு இரக்கமற்று, மனித நேயமற்று முஸ்லீம்களின் மீது நடத்தப்பட்ட படுகொலையாகவும், முஸ்லீம்களின் பொருளாதார சுயசார்பையும், அவர்களது தொழில்களையும், அழித்தொழிக்கும் செயலாகவும் மாற்றியுள்ளது. இத்தகைய வன்முறை நிகழ்வுகள் உள்ளூர் போலீசாருக்கும், இந்துமத அடிப்படைவாதச் சக்தி – களுக்கும் இடையே இருந்து வந்துள்ள கேடான உறவையும், தொடர்பையும் வெளிப்படுத்துகின்றன.

- இந்து முன்னணி, ஆர்.எஸ்.எஸ், வி.ஹெச்.பி போன்ற சங்பரிவாரங்களின் தொண்டர்களும், ஆதரவாளர்களும் வேகமாகப் பண்பாடற்ற, நாகரீகமற்ற, உதிரிக்கூட்டமாக மாறிவருகின்றனர் என்பது அரசாங்க மருத்துவமனை வளாகத்திலும், அதன் மைதானத்திலும் நடந்தேறிய மிகக் கொடூரமான நிகழ்வுகளின் மூலம் தெளிவாகத் தெரிய வருகிறது. குண்டடி பட்டும், தாக்குதலுக்கு உள்ளாகியும் மிக ஆபத்தான நிலையில் இருந்த முஸ்லீம்களை மருத்துவமனைக்கு கூட்டி வந்த அப்பாவி முஸ்லீம்களை உயிருடன் எரித்தல், முஸ்லீம்களை இனம் காண கையாண்ட முறைகள், பின்பு அவர்களை 'ஜெய் காளி, ஓம் காளி' என்று மந்திரம் சொல்லி குத்தி, வெட்டிக் கொன்ற முறைகள் காட்டுமிராண்டித்தனத்தின் எல்லையையே தொட்டுள்ளது என்பதே அவர்களின் செயல்பாடு குறித்த குறைந்தபட்ச விமர்சனமாக இருக்க முடியும்.

- இந்த முறையில் கோவையில் முஸ்லீம் மதத்தைச் சார்ந்தவர்கள் என்பதற்காகவே. அவர்களை வரம்பு முறையற்ற வகையில் சுட்டுத் தள்ளியுள்ளனர். இங்கு போலீசார் ஒரு சமூக மக்களை வரம்பு முறையற்ற வகையில் சுட்டுக் கொல்வதில் 'உச்சத்தை' எட்டியுள்ளனர்.

- முஸ்லீம் மக்களைத் தாக்கி, படுகொலை செய்ய மற்றும் கொள்ளையடிக்க எளியவர்களும், வறியவர்களுமான தலித் மக்களை, ஏவி விடுகின்ற, பயன்படுத்துகின்ற புதிய முறையை சங்பரிவார்களும், போலீசாரும் கோவை – யில் அரங்கேற்றியுள்ளனர். சங்பரிவார்கள் மற்றும் போலீசார் அவர்களது முஸ்லிம்களை அழித்தொழிக்கும் புனிதப் போரில் தலித் மக்களை தங்களுக் கான படைவீரர்களாகவும், கேடயமாகவும் பயன்படுத்தியுள்ளனர் இதன்மூலம் அவர்களுக்குத் தேவை ஏற்பட்டால் தலித் மக்களை 'கிரிமினல்கள்' என்று கூறி ஒதுக்கிவிடவும் முடியும்.

- இத்தகைய நயவஞ்சப்போக்குகளைத் தடுக்காவிட்டால் இது தலித் மக்களி டையே கொடூரமான, பண்பற்ற மனோநிலையை உருவாக்குவதுடன் சமூகத் தின் ஒரு பிரிவினரை கிரிமினல்களாகவும் மாற்றுகின்ற சூழலும் ஏற்படும்.

- பி.யூ.சி.எல் குழு பெண்களிடம் பேசியதிலிருந்து சில புதிய தகவல்களைப் பெற்றது. போலீசாருக்கும், இந்து மதவாதிகளுக்கும், மற்றும் முஸ்லீம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மதவாதிகளுக்கும் இடையே நடைபெறும் எத்தகைய சண்டையிலும், உடனடியாகவும், நேரடியாகவும் இளம்பெண்களின் கல்விதான் பாதிக்கப் படுகிறது. வெளியே செல்வதே பாதுகாப்பற்றதாக மாறும் பொழுது பெற்றோர்கள் முதலில் பெண்களின் கல்வியைத்தான் நிறுத்திவிடுகிறார்கள்.

**பரிந்துரைகள்**

- கோயம்புத்தூர் போன்று இந்து–முஸ்லீம் பிரச்சினைகள் உருவாக வாய்ப்புடைய இடங்களில் முஸ்லீம்களுக்குக் காவல்துறையின் அனைத்த படிநிலைகளிலும் சம அளவில் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும்.
- முஸ்லீம்களுக்கு, அவர்களின் மக்கள் தொகை விகிதாச்சார அடிப்படையில் கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும்.
- மாசானமுத்து போன்ற ஒருதலைப்பட்சமாகச் செயல்படுகின்ற பழிவாங்கும் போக்கு கொண்ட போலீஸ் அதிகாரிகள், மற்றும் போலீசார் மீதும் குற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படவும் வேண்டும்.
- நம்நாட்டு விடுதலைப்போராட்டத்திலும், நாட்டின் வளர்ச்சியிலும் முஸ்லீம் களின் பங்களிப்பு பற்றிய தவறான கருத்துக்களைப் பள்ளிக்கூட பாடநூல் முதற்கொண்டு உடனடியாக நீக்குவதுடன், அதைச் சரி செய்வதற்கான நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ள வேண்டும். மேலும் இந்திய வரலாற்றில் முஸ்லீம்களின் பங்கு பற்றிய சரியான வரலாற்றுக் கண்ணோட்டத்தைத் தர வேண்டும்.

## 2.0 கிறிஸ்தவ தேவாலயங்கள் எரிப்பு

### 2.1 மேலகிருஷ்ணன் புதூர் - கன்னியாகுமரி மாவட்டம்

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் அருகேயுள்ள மேலகிருஷ்ணன் புதூரில் அமைக்கப்பட்டிருந்த தென்னிந்திய திருச்சபை (கூரைக் கொட்டகையால் வேயப்பட்ட) தேவாலயம் 30.09.99 அன்று விடியற்காலை 2 மணியளவில் கொளுத்தப்பட்டது. தேவாலயம் எரிந்து கொண்டிருக்கும்போதே சுற்றியிருந்த மக்கள் தீயை அணைக்க முயற்சி செய்தும், எந்தவித பலனும் இல்லை. தீயணைப்புத்துறையினர் எரிந்த சாம்பல் மீது தண்ணீர் ஊற்றி அணைத்துவிட்டுச் சென்றனர். இது சம்மந்தமான வழக்கு சுசீந்திரம் போலீஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டது. யாரோ அடையாளம் தெரியாத நபர்களால் கொளுத்தப்பட்டது என்று வழக்குப் பதிவு செய்யப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவரின் உத்தரவின் பேரில் புதிய தேவால்யம் கட்டப்பட்டது. (தீக்கதிர் – 01.10.99)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## 2.2 நிலக்கோட்டை திரவியம் நகர் - திண்டுக்கல் மாவட்டம்

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டையிலிருந்து அணைப்பட்டிக்குச் செல்லும் வழியில் சுமார் 2 கி.மீ தொலைவில் இருக்கிறது திரவியம் நகர். இந்நகரில் மதுரை – அமலவை துறவற சபையினரால் தமியான் தொழுநோய் மருத்துவமனை செயல்பட்டு வருகிறது.

இந்நிறுவனத்திற்குச் சொந்தமான சாலையை பல ஆண்டுகளாக ஆண்டிப்பட்டி, முத்துகாமன்பட்டி, மிளகாய்பட்டி ஆகிய கிராமத்து மக்கள் பயன்படுத்தி வந்தனர். இந்நிலையில் சாலை தமியான் நிறுவனத்திற்கு சொந்தமா? கிராமத்திற்கு சொந்தமா? என நிலக்கோட்டை வழக்கு மன்றத்தில் தனித்தனியாக வழக்கு நடந்து வந்தது. இறுதியாக 2000–ம் ஆண்டு ஜனவரி 28–ம் தேதி நிறுவனத்திற்கு சாதகமாக வழக்கு மன்றம் தீர்ப்பளித்தது. (திண்டுக்கல் சார்பு நீதிமன்ற அ.வ.எண் 339/95) இந்த தீர்ப்பை அடுத்து மேல்முறையீடு செய்ய கிராம மக்கள் முடிவு செய்திருந்தனர். தீர்ப்பை அடுத்து 20 நாட்களுக்குப்பின் பிப்ரவரி மாதம் 17–ம் தேதி (2000) இரவு போலீசார் பாதுகாப்புடன் வேலி அமைக்கப்பட்டது. ஆத்திரமடைந்த கிராம மக்கள் (அணைப்பட்டி, முத்துகாமன் பட்டி, மிளகாய்ப்பட்டி ஆகிய ஊர்களைச் சேர்ந்தவர்கள்) சுமார் 500 பேர் பிப்ரவரி 18–ம் தேதி அதிகாலையில் கடப்பாறை, மண்வெட்டி போன்ற ஆயுதங்களுடன் வந்து கான்வென்ட் முன்னிருந்த மாதா சிலையை உடைத்தனர். கார்கள், ஜன்னல் கண்ணாடிகள், நாற்காலிகள் போன்றவையும் அடித்து நொறுக்கப்பட்டன. சோபியா மருத்துவமனையின் உள்ளேயிருந்த விலை உயர்ந்த உயிர்காக்கும் மருந்துகள், சோதனைக் கருவிகள் உட்பட சுமார் 1,50,000 மதிப்புள்ள பொருட்களை அழித்து சேதப்படுத்தியுள்ளனர். சேதப்படுத்தப்பட்ட அனைத்து சேதாரங்களின் ஒட்டு மொத்த மதிப்பு சுமார் ரூ. 5,50,000 ஆகும். தகவலறிந்த டி.எஸ்.பி கோவிந்தராஜ் விசாரணை செய்ய சம்பவ இடத்திற்கு வந்தபோது அவரது ஜீப்பும் தாக்கப்பட்டது. இது சம்மந்தமான வழக்கு நிலக்கோட்டை போலீஸ்நிலையத்தில் பதிவு செய்யப்பட்டது.

(கத்தோலிக்க சேவை – பிப்ரவரி, 2000)

## 2.3 (அ) சென்னை - சாந்தோம்

சென்னை சாந்தோம், அருளானந்தம் தெருவில் 1989–ம் ஆண்டு முதல் சமாதானப் பிரபு சபையின் அலுவலகமும் ஆராதனையும் நடந்து வருகிறது. கீழ்த்தளத்தில அலுவலகமும் முதல் மாடியில் ஆராதனையும் நடைபெற்று வந்தது. நாளடைவில் இடப்பற்றாக்குறையால் மேல் மாடிக்கும் கூரை அமைத்து அதிலும் ஆராதனை நடந்தி வந்திருக்கிறார்கள். இந்நிலையில் கடந்த நவம்பர் மாதம் (1999) 9–ம் தேதி காலை 9.30 மணியளவில் மேல் மாடியில் அமைக்கப்பட்டிருந்த ஆராதனை கூரை கொட்டகை தீப்பிடித்து எரிந்தது. அப்பகுதி மக்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உடனடியாகத் தீயணைப்புத்துறைக்குத் தகவலைத் தெரிவித்திருக்கின்றனர். அருகில இருந்த மக்களும், தீயணைப்புத் துறையினரும் தீயை அணைத்திருக் கின்றனர். அதற்குள் கூரையின் பெரும்பகுதி எரிந்துவிட்டது.

போலீஸ் இணை கமிஷனர் பாலச்சந்திரன் துணை கமிஷனர் குணசீலன் ஆகியோர் உடனடியாக சம்மந்தப்பட்ட இடத்திற்குச் சென்று பார்வையிட்டிருக் கிறார்கள். பட்டாசு வெடித்ததால் ஏற்பட்ட விபத்தா? திட்டமிட்ட சதியா? என்பது தெரியவில்லை. இச்சம்பவம் குறித்து போலீசார் விசாரித்து வருகிறார்கள்.

(இந்தியன் எக்ஸ்பிரஸ் – 10.11.99)

## 2.3 (ஆ) சென்னை - முகப்பேர்

1999–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31–ந்தேதி அதிகாலையில் முகப்பேர் மேற்கு சி.எஸ்.ஐ செயின்ட் பால் ஆலயம் தீக்கிரையாக்கப்பட்டது. விடியற்காலை 2.30 மணியளவில் தேவாலயம் எரிந்து கொண்டிருந்த சமயத்தில் கேள்வியுற்ற பாஸ்டர் விரைந்து சென்றிருக்கிறார். அந்தத் தேவாலயத்தின் மேற்பகுதியும், மற்றும் மரச்சாமான்கள், மின்சாரக் கருவிகள், பொருட்கள் உட்பட அனைத்தும் முழுவதுமாக எரிந்துள்ளன.

இந்தத் தேவாலயம் எம்.சி.எஸ். கேபிள் வயரில் நெருப்பு கசிந்ததால் எரிந்திருக்கிறது என்பதை மின்சார வாரிய பொறியாளர் மறுத்திருக்கிறார். இவர் பாதிக்கப்பட்ட இடத்திற்கு சென்று பார்வையிட்டபிறகு இது குறித்து விளக்கமளித்திருக்கிறார்.

மின்சார வொயரில் மற்றும் மின்சார கோளாறுகள்தான் இந்த தீ விபத்து ஏற்படக் காரணம் என்று கூறப்பட்டதை தேவாலய நிர்வாகம் மறுத்து அதற்கான காரணத்தையும் விளக்குகிறது.

1. உள்ளே அமைக்கப்பட்ட மின்சார வயர் எவ்விதத்திலும் பாதிப்பு ஏற்படுத்தாத வகையில் அமைக்கப்பட்டிருக்கிறது.
2. மின்சாரம் பாயக்கூடிய தன்மையில்லாமல் மின்சார அமைப்பு அமைக்கப்பட்டிருக்கிறது.
3. வெளியில் அமைக்கப்பட்டிருக்க கூடிய வயர் முழுவதும் மின்சாரப் பாதுகாப்புடன் அமைக்கப்பட்டிருக்கிறது.
4. மீட்டர் பெட்டி, பீஸ் கேரியர் உள்பட மின்சாரப் பொருட்களும் நன்கு பாதுகாப்புடன் இருக்கிறது என்பதை தமிழ்நாடு மின்சார வாரியம் ஏற்கனவே உறுதியளித்திருக்கிறது.

தேவாலய நிர்வாகம் இது சமூக விரோத சக்திகளின் வேலைதான் என்று அழுத்தமாக நம்புகிறது. இது திட்டமிட்ட சதி வேலையா? பின்னணியில் யார் இருக்கிறார்கள்? என்பதை பற்றி இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தீக்கிரையாக்கப்பட்ட முகப்பேர் தேவாலயத்தின் இழப்பு ரூ. 3,98,000 என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. (இந்தியன் எக்ஸ்பிரஸ் – (01.11.99)

### 2.3 (இ) சென்னை - திருமங்கலம்

சென்னை திருமங்கலத்தில் மகிழ்ச்சி சபை ஆலயம் 1983–ம் ஆண்டு சொசைட்டி சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதாகும்.

ஒன்றரை கிரவுண்டு நிலத்தில் கட்டப்பட்டுள்ள இவ்வாலயத்தின் கீழ்த்தளத்தில் டாக்டர். ஜீவானந்தம் (சபை போதகர்) குடும்பத்துடன் வசித்து வருகிறார். மேல்தளம் 2400 சதுர அடி பரப்பளவில் கூரையாலானது, இப்பகுதியின் ஜெப வீடாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் 1999 அக்டோபர் மாதம் 7–ம் தேதி இரவு 7.40 மணியளவில் ஆலயத்தின் வலது பக்க ஓலை தீயில் கருகும் வாசனை வந்திருக்கிறது. அப்போது அந்த ஆலயத்தில் 79 பெண்கள் உள்பட 120 பேர் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தனர். ஆலயம் தீயில் எரிவதைக் கண்டு அனைவரும் வெளியே வந்திருக்கின்றனர். இதற்கிடையில் தீயணைப்பு படைக்குத் தகவல் அனுப்பப்பட்டிருக்கிறது. தீயணைப்புத் துறையினர் வருவதற்குள் அனைத்தும் எரிந்து விட்டது. தேவாலயத்தைத் தடய அறிவியல் நிபுணர் குழுவினர் பார்வையிட்டுள்ளனர். எரிந்து போன பகுதியில் இருந்து 3 ராக்கெட் ரக பட்டாசின் பகுதிகள் கண்டெடுக்கப்பட்டன.

இது தொடர்பாக சேகர் (36), சோலை (29) ஆகிய இருவரையும் போலீசார் கைது செய்தனர். திருமங்கலம் போலீஸ் நிலையத்தில் குற்ற எண் 1564/99–ன் கீழ் விபத்தாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. (தி ஹிண்டு – 09.11.99)

### 3. மேலப்பாளையம் (மக்கள் கண்காணிப்பகத்தின் அறிக்கை)

மேலப்பாளையத்தில் முஸ்லீம் மக்கள், 'விசாரணை' என்ற பெயரில் போலீசாரால் பொய் வழக்குகள் உள்ளிட்ட சித்ரவதைகளுக்கு உள்ளாக்கப் பட்டனர். இது குறித்து 13.08.99–ம் தேதி அன்று நேரடியாக ஆய்வு செய்த மக்கள் கண்காணிப்பகத்தின் உண்மையறிக்கை இங்கு சுருக்கித் தரப்படுகிறது.

திருச்சியில் 1996–ம் ஆண்டு பாரதீய சனதா தலைவர் டாக்டர் ஸ்ரீதர் கொலை செய்யப்பட்டார். இக்கொலைக்கு முக்கிய காரணமாகக் கருதப்பட்ட அல்–உம்மா இயக்கத்தைச் சேர்ந்த கிச்சான் புகாரி கைது செய்யப்பட்டார். கிச்சான் புகாரியுடன் தொடர்புடைய அல்.உம்மா இயக்கத்தைச் சார்ந்தவர்கள் மற்றும் நட்பு ரீதியாக பழகியவர்கள் என பல்வேறு முஸ்லீம் நபர்கள் திருநெல்வேலி – மேலப்பாளையத்தில் வசித்து வந்தனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இவர்களை விசாரணை செய்கிறோம் என்கிற பெயரில் போலீசார் அடக்கு முறைகளையும் சித்ரவதைகளையும் இம்மக்கள் மீதும் இவர்களின் குடும்பத்தினர்கள் மீதும் செய்யத் தொடங்கினர். இரவு நேரங்களில் வருவது, பெண்களை கேவலமாக பேசுவது, அடிப்பது, இஸ்லாமிய மதத்தை இழிவாக விமர்சிப்பது, குடும்பத்தில் உள்ளவர்களைக் போலீஸ்நிலையத்திற்கு அழைத்துச் செல்வது, பொய் வழக்குகள் பதிவு செய்வது, தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் சிறையில் அடைப்பது, பொது சொத்துக்குத் தீங்கு விளைவித்ததாக வழக்கு பதிவு செய்வது, வெவ்வேறு ஊர்களில் சிறுசிறு வேலைகளை பார்த்து வந்த இஸ்லாமிய இளைஞர்களை அவ்வூர் போலீசாரைக் கொண்டு மிரட்டுவது, சித்திரவதை செய்வது, வெளிநாட்டில் வேலை பார்க்கும் இளைஞர்களின் குடும்பத்தினர்களை கூறி வரவழைத்து அவர்கள் மீதும் விசாரணை நடத்துவது, போலீஸ்நிலையத்தில் விசாரணை செய்யாமல் போலீஸ் நிலைய வண்டியில் வைத்து அடிப்பது, ஊருக்கு ஒதுக்குப்புறமான இடத்திற்கு அழைத்துச் சென்று லாடம்கட்டுவது என்று பல்வேறு கொடுமைகளை போலீசார் செய்தனர். இவர்களுடைய சித்திரவதை கொடுமை களுக்கு பெரும்பாலும் 16–18 வயதுடைய இளைஞர்கள் உட்படுத்தப்பட்டுள்ளனர்.

- 18 வயதுடைய அகமது பசீர் (த.பெ. என்.எஸ். கமால்) என்ற நண்டு 9–ம் வகுப்பு வரை படித்துவிட்டுத் தன் தந்தைக்கு துணையாக செங்கல் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தார். இவரை மேலப்பாளையம் போலீஸ்நிலைய குற்ற எண் 251/97 சம்பந்தப்பட்ட வழக்கில் பொய்யாக வழக்கு பதிவு செய்து தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் 07.05.99 அன்று அடைத்துவிட்டனர். இவர் கைது செய்யப்படும்போது வயது 16.

- திருச்செந்தூர் பாசன்ஜர் இரயில் வண்டியைக் கவிழ்த்த இலந்தைகுளம் இரயில்வே பாலத்தில் ஜெலட்டின் குச்சி, வெடி மருந்து பொருட்களோடு நின்று கொண்டிருந்ததாக டி.எஸ்.கே. அப்துல் கபூர் (1() த.பெ. காஜா முகைதீன் கைது செய்யப்பட்டார்.

- திருச்செந்தூர் பாசன்ஜர் இரயிலை கவிழ்க்க முயன்றதாக முகமது பாஷா (18) த.பெ. முகமது மைதீன் கைது செய்யப்பட்டார்.

- திருநெல்வேலி–மதுரை செல்லும் ரயில்பாதையில் 1705 என்ற எண் கொண்ட சிறிய பாலத்தின் மேல் உள்ள இரயில்வே தண்டவாளத்தில் வெடிமருந்து கொண்டு தண்டவாளத்தைத் தகர்த்து ரயிலை கவிழ்க்க எண்ணி தண்டவாள சிமெண்ட் சிலிப்பரை நெம்பிக் கொண்டிருந்தபோது பிடித்ததாக தச்சநல்லூர் போலீஸ்நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு காஜா மைதீன் (17) த.பெ. டி.எம்.அலி கைது செய்யப்பட்டார்.

- 10.11.97 அன்று தி.மு.க–வை சேர்ந்த வின்செண்ட் அபுபக்கர் என்பவர் திருநெல்வேலி பஜாரில் கொலை செய்யப்பட்டார். அதற்கு காரணமாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இருந்ததாக முஹம்மது ஞானியார் (19) த.பெ. ரகுமான் என்பவரை கைது செய்து அடித்து சித்திரவதை செய்தனர்.

இப்படிப் பல்வேறு நபர்கள் வெவ்வேறு குற்றங்களில் ஈடுபட்டதாக வழக்கு பதிவு செய்யப்பட்டது. இன்ஸ்பெக்டர் சித்ரஞ்சன் இவர்களை கொடூர சித்திரவதைக்கு உட்படுத்தியுள்ளார்.

## பொதுவான பரிந்துரைகள்

- தமிழ்நாட்டில் தலை தூக்கி வரும் சிறுபான்மை பகை அரசியல், பெரிதாக வளரும் முன்னர் தடுத்து நிறுத்திட வேண்டிய கடமை அரசுக்கு உண்டு. வகுப்புவாத பகை கருத்தியலை முறியடிக்கும் முயற்சி நடைபெறுகின்ற போதே, வகுப்புவாதக் கருத்தியலின் அரசியல் பரிமாணத்தையும் புரிந்து கொண்டு, சமய சார்பற்ற அரசியலின் முக்கியத்துவத்தை புரிந்து கொள்ளும் வண்ணம், மக்களுக்கு விழிப்புணர்வு கொடுப்பது மிக முக்கியமாகும். பள்ளிப் பாடப்புத்தகங்களில், தொடர்பு சாதனங்களில், வகுப்புவாத சாயல் துளிகூட நுழைய விடாது தடுக்கின்ற பணி இன்றைய தலையாய பணியாகும்.

- மாநில சிறுபான்மை ஆணையம் அமைக்கப் பெற்றுள்ள மாநிலங்களுள் தமிழகமும் ஒன்றாகும். இவ்வாணையம், வெறும் அலங்கார ஆணையமாக செயற்படாமல், சிறுபான்மை மக்களின் நம்பிக்கை தரும் ஆணையமாகச் செயற்பட வேண்டும். நம்பிக்கை தரும் வகையில் செயற்பட கட்சி சார்பற்ற சிறுபான்மையினர் உரிமை பற்றிய கண்ணோட்டமுடையவர்களை உறுப்பினர் –களாகக்கொள்ளவேண்டும். இரண்டாவது, இவ்வாணையத்திற்கும் சட்டபூர்வ அதிகாரம் (Statuary Power) வழங்கப் பெறல் வேண்டும்.

- சிறுபான்மை ஆணையம், தமிழகத்தில் நடக்கும் சிறுபான்மை உரிமை மீறல்களை ஆவணப்படுத்துதல் வேண்டும். ஓராண்டில் இவ்வாணையம் என்ன சாதித்துள்ளது? என்பது பற்றிய அறிக்கையை அரசுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

சிறுபான்மையினர் தாக்கப்படல், ஆலயங்கள் அழிக்கப்படல், கிறிஸ்தவர்கள் கட்டாயமாக இந்துக்களாக மதம் மாற்றப்படல், போன்ற நிகழ்வுகளெல்லாம் உள்நாட்டுச் சட்டங்களை, அகில உலக சட்டங்களை, உடன்படிக்கைகளை, அகில உலக மனித உரிமைச் சாசனங்களை, அரசியல் சாசன விதிகளை மீறுவதாகும். இச்சட்டங்களைப் பாதுகாப்பதன் மூலம், இந்திய அரசு சிறுபான்மை மக்களின் அடிப்படை உரிமைகளை உத்தரவாதப்படுத்த முயல வேண்டும். வகுப்புவாத கலவரங்களைத் தூண்டி விடுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். பாரபட்சமாக நடக்கும் அதிகாரிகளைத் தண்டிக்க வேண்டும். வன்முறைகளைத் தடுக்கும் அதிகாரங்களைப் பயன்படுத்த வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


இந்திய அரசியலமைப்பின் முகப்புரையோ, இந்நாட்டை, இறையாண்மை யோடு கூடிய சோசலிச சமய சார்பற்ற சனநாயக குடியரசு என்றும். இது இந்நாட்டின் குடிமகனுக்கு, சிந்திக்கும் உரிமை, பேச்சுரிமை, நம்பிக்கை, விசுவாசம், வழிபாட்டு உரிமைகளை உத்திரவாதப்படுத்தியுள்ளது. இந்தியச் சமுதாயம் சமயச் சார்பின்மை எனும் கோட்பாட்டின் அர்த்தத்தை இன்னும் பெரிதாக விவாதித்துக் கொண்டிருந்தாலும், இன்றைய இந்தியச் சூழலில், சமவுரிமை, சமய உரிமை, சகிப்புத் தன்மை, சமய அடிப்படையில் பாகுபாடு காட்டாமை என்பனவே இதன் பொருளாகும். இதனை நடைமுறைப்படுத்துவதற் காகவே அரசியல் சாசனத்தில் பிரிவுகள் 14, 15 மற்றும் 16 ஆகியவை சேர்க்கப்பட்டுள்ளன.. இப்பிரிவுகள் மூன்றும் சமய அடிப்படையில் காட்டப்பெறும் பாகுபாடுகளை மறுக்கிறது. சட்டத்தின் மூலம் சமமாக நடத்தப்படுவதற்கும், சம பாதுகாப்பு பெறுதற்கும் உத்தரவாதம் அளிக்கிறது. இதே போன்று, விதி 25 ஒரு சமயத்தைத் தழுவ, கடைபிடிக்க, பரப்ப போதிய உரிமையைத் தருகிறது. மேலும், விதிகள் 26, 28 மற்றும் 30 சமய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், சில நிறுவனங்களில் சமய போதனைகளில், வழிபாடுகளில் கலந்து கொள்ளவும், சமயச் சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களை நிறுவவும், நடத்தவும் உரிமை அளிக்கிறது. இவை உணர்வுபூர்வ நடைமுறைப்படுத்தப்பட மத்திய அரசும், மாநில அரசும் உரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

இந்தியக் குற்றவியல் சட்டத்தின்படி சமய அடிப்படையில் செய்யப் பெறும் வன்முறை அல்லது பாகுபாடு தண்டனைக்குரிய குற்றமாகும். அவைகளாவன,

- சமயம், இனம், பிறப்பிடம் அல்லது **மொழி** அடிப்படையில் இவைகளைச் சார்ந்தோர் மீது வன்முறையைத் தூண்டுவது (பகுதி 153)
- குறிப்பிட்ட சமயத்தை இழிவுபடுத்தும் **நோக்கில்** வழிபாட்டுத்தலங்களை இடிப்பது அல்லது அவமானப்படுத்துவது ( **பகுதி 295)**
- ஒரு சமயத்தையோ, சமய நம்பிக்கைகளையோ இழிவு செய்யும் வகையில் ஒரு சமயஞ்சார்ந்தோரின் உணர்வுகளைத் திட்டமிட்டு, வஞ்சகத்தோடு புண்படுத்துவது (பகுதி 295 அ)
- சமயக் கூட்டங்களைக் குலைப்பது (பகுதி 296)
- குறிப்பிட்ட சமயஞ்சார்ந்தோரின் உணர்வுகளைப் புண்படுத்தும் வகையில், அவர்களின் வழிபாட்டுத் தலங்களில் ஊடுருவுவது, மரணச் சடங்குகளைக் குலைப்பது (பகுதி 297)
- சமயம், இனம், பிறப்பிடம், வாழிடம், மொழி, சாதி அல்லது சமூகம் என்பனவற்றின் அடிப்படையில், இக்குழுக்களிடையே பகையைத் தூண்டுவது (பகுதி 505 (2), இக்குற்றத்தை வழிபாட்டுத் தலங்களுக்குள்ளும் செய்வது (பகுதி 505 (3).


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


மேலும், மூன்று சட்டங்கள் சமயச் சிறுபான்மையினருக்கு பாதுகாப்புக் கொடுக்க வேண்டும் என்கிற வகையில் சமய நிறுவனங்கள் சட்டம் 1988, வழிபாட்டுத் தலங்களை அரசியல், கிரிமினல் நடவடிக்கைகளுக்கும் பயன் – படுத்துதலை தடை செய்கிறது. சமய நிறுவனங்கள், சமூக நல்லிணக்கத்தைக் கெடுக்கும் வகையில் பகைமையை வளர்க்க பயன்படுத்தப்படுவதைத் தடுக்கிறது. இச்சட்டத்தை மீறுவோருக்கு ஐந்தாண்டு கடுங்காவல் தண்டனையும், பத்தாயிரம் அபராதமும் விதிக்க முடியும்.

வழிபாட்டுத் தலங்கள் சட்டம் 1991, ஆகஸ்ட் 15, 1947–ல் ஒரு குறிப்பிட்ட வழிபாட்டுத் தலம் எந்த சமயஞ்சார்ந்தோரின் ஆளுகையில் இருந்ததோ அதை மாற்றி வேறு சமயத்தினர் கை கொள்வதையோ மாற்றுவதையோ தடை செய்கிறது. இச்சட்டத்தை மீறுவோருக்கு மூன்றாண்டுகள் சிறைத்தண்டனையும், அபராதமும் விதிக்கப்படும். இவ்விதியை மீறியமைக்காக தண்டிக்கப்பட்டவர்கள், நாடாளுமன்றம், சட்டமன்றம் (இரு சபைகளிலும்) உறுப்பினர்களாகும் தகுதியை இழக்கின்றனர். மேலும், மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் 1951–ன் படி தேர்தலின் சமயத்தையோ, சமய அடையாளங்களையோ பயன்படுத்துவதும் சட்டப்படி குற்ற – மாகும். இச்சட்டங்களின்படி இதுவரை பதிவு செய்யப்பட்ட வழக்குகளை விரல் விட்டு எண்ணிவிடலாம். எனவே, அரசியல் சாசனத்தின் ஆழ்ந்த அர்த்தமுள்ள இப்பிரிவுகள் நடைமுறைப்படுத்தப்படவும், இந்திய நாட்டின் சமயச் சார்பின்மை காக்கப்படவும் இதற்காக மத்திய அளவிலும், மாநில அளவிலும் அமைக்கப்பட்ட சிறுபான்மையினர் ஆணையங்களுக்கு தகுந்த அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்.

### அகில உலக அளவிலான சட்டப் பாதுகாப்புகள்

உள்நாட்டில் இந்திய அரசு நிறைவேற்றிய வேண்டிய கடமைகளோடு, அகில உலக அளவிலும் மனித உரிமைகளைக் காக்கும் வகையில், உருவாக்கப் –பட்ட பல உடன்படிக்கைகளில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது. அகில உலக சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான உடன்படிக்கையின் 18ஆவது பிரிவு சிந்தனையுரிமை, கருத்துரிமை, சமய உரிமைகளுக்கு உத்தரவாதம் அளித்துள்ளது. இப்பிரிவு

1. சிந்திக்கும் உரிமை, கருத்துரிமை, சமயவுரிமை அனைவருக்கும் உண்டு. ஒரு சமயத்தைத் தழுவ, விரும்பிய நம்பிக்கையை ஏற்க உரிமையுண்டு. இவ்வுரிமை –களைத் தனி மனிதனாகவோ, ஒரு சமயமாகவோ, தனியிடங்களிலோ, பொதுவிடங்களிலோ கடைபிடித்தல் போதித்தல் போன்றன மூலம் வெளிப்படுத்த உரிமையுண்டு.
2. விரும்பிய வகையில் சமயத்தையோ நம்பிக்கையையோ ஏற்கும் வகையிலான சுதந்திரத்தை கட்டுப்படுத்தும் வகையில் யாரையும் கட்டாயப்படுத்தக் கூடாது.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



3. தாம் ஏற்ற நம்பிக்கைகளையும், சமயத்தையும் வெளிப்படுத்துகின்ற போது., பொது அமைதிக்கும், பாதுகாப்பிற்கும், ஆரோக்கியத்திற்கும், ஒழுக்கத்திற்கும், அடிப்படை உரிமைகளுக்கும், பிறரின் சுதந்திரத்திற்கும் பங்கம் ஏற்படுத்த யாருக்கும் உரிமை இல்லை.

விதிகள் 2 மற்றும் 26 சமய அடிப்படையிலான பாகுபாட்டை (Discrimination) தடை செய்கிறது. அதே வேளை விதி 27–ல் குறிப்பிட்ட தேசத்தில் வாழும் தேசிய இன, சமய, மொழிச் சிறுபான்மையினரின் சமூகத்தோடு இணைந்து வாழும் உரிமைகள், அவர்களின் சொந்த கலாச்சாரத்தை அனுபவிக்கும் உரிமைகள், தாங்கள் ஏற்றுக் கொண்ட சமயத்தை தழுவ, கடைபிடிக்க மற்றும் தாய்மொழியை பேசுகின்ற உரிமைகள் பாதுகாக்கப் பெற வேண்டும் என்கிறது.

சமய உரிமையும், சமய அடிப்படையிலான பாகுபாட்டுத் தடைகளும், அனைத்து வடிவங்களிலான சகிப்பற்ற தன்மைக்கும், சமய நம்பிக்கையின் அடிப்படையிலான பாகுபாட்டிற்கு எதிரான பிரகடனமும் (Declaration of all forms of intolerance and discrimination based on Religion or belief) விரிவாகத் தருகின்றன. அய்க்கிய நாட்டுப் பொதுச் சபையின் இப்பிரகடனம் (1981) அய்க்கிய நாட்டு சபை உறுப்பினர் நாடுகளுக்கு, சகிப்பற்றத் தன்மையையும், பாகுபாட்டையும் போக்கும் வழிமுறைகளையும் கூறுகிறது.

இப்பிரகடனத்தின் விதி 4, அனைத்து அரசுகளும் சமயம் மற்றும் நம்பிக்கை அடிப்படையிலான பாகுபாட்டைப் போக்கவும் உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்கிற இவ்வுரிமைகள், இம்மக்கள் முழுமையாக மனித உரிமைகளை அனுபவிக்கவும், சிவில் பொருளாதாரம், அரசியல், கலாச்சார வாழ்வில் அடிப்படை சுதந்திரத்தை அனுபவிக்கவும் வகை செய்தல் வேண்டும். மத்திய, மாநில அரசுகள், இவ்வுரிமைகளைக் காக்கும் வகையில் உரிய சட்டங்களை இயற்றி, சமய அடிப்படையிலான சகிப்பற்ற போக்குகளையும், பாகுபாட்டையும் போக்குவதற்கான போதிய முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

❖ ❖ ❖



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# IX. அகதிகளின் உரிமைகள்

ஒரு நாட்டின் கடுமையான பஞ்சம் அல்லது உள்நாட்டுப்போர் அல்லது இனக்கலவரம் அல்லது சர்வாதிகார அரசின் ஒடுக்குமுறை ஆகியவற்றிலிருந்து தப்பி இன்னொரு நாட்டில் தஞ்சம் புகுபவர்களை அகதிகள் என்கிறோம். ஒரு நாட்டில் பிறந்த ஒருவர் வீடிழந்து, தனது உறவுகளை இழந்து, சொந்த மண்ணிலிருந்து உயிர் பிழைக்க இன்னொரு நாட்டில் நிராதரவாகத் தஞ்சம் புகுபவர்களின் வேதனையை வார்த்தைகளில் அடக்க முடியாது.

## தமிழகத்தில் அகதிகள் நிலை

நம் நாட்டில் குறிப்பாகத், தமிழ்நாட்டில் தஞ்சம் புகுந்த அகதிகளின் நிலைமை மிக மோசமாகவே இருந்து வருகிறது. தமிழகத்தில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்துள்ளவர்களை அவர்களாகவே தங்கள் சொந்த நாட்டிற்குத் திரும்பிப் போவதற்கான சூழ்நிலைகளை அரசே ஏற்படுத்தி வருகிறது. தமிழகத்தில் அகதிகளாக ஈழத்தமிழர்களையே மிக அதிகமான அளவில் காண்கிறோம். நேபாளம், பூட்டான், போன்ற நெருங்கிய அண்டை நாடுகளிலிருந்து அக்திகளாக மிகச் சிலரே இங்கு உள்ளனர். இவர்களைப் பற்றிய அதிகாரப்பூர்வமான தகவல்கள் கிடைக்கவில்லை. ஈழத்தமிழர்கள் இலங்கையிலிரந்து 3 கட்டங்களாக இந்தியாவிற்கு குறிப்பாக தமிழகத்திற்கு வந்துள்ளனர். முதற்கட்டத்தில் இலங்கையில் கடந்த 1983–ம் ஆண்டில் இனப்படுகொலையைத் தொடர்ந்து இலங்கைக்குள்ளேயே அகதிகளாக்கப்பட்ட 1,20,000 ஈழத்தமிழர்களில் 40 ஆயிரம் மக்கள் வடகிழக்கை நோக்கி வந்தனர். 1983–ம் ஆண்டில் ஜூலை 24–ம் தேதி முதல் 1987–ம் ஆண்டில் ஜூலை 29–ம் தேதி வரை 1,34,053 பேர் ஈழத் தமிழர்கள் அகதிகளாக தமிழகத்திற்கு வந்தனர். இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட இந்திய இலங்கை ஒப்பந்தத்திற்கு பின்னர் 1987–ம் ஆண்டில் டிசம்பர் 24–ம் தேதி முதல் 1989–ம் ஆண்டில் ஆகஸ்ட் 31–ம் தேதி வரை 25, 585 பேர் சிறப்புக் கப்பல்கள் மூலம் இலங்கைக்கே திரும்பி அனுப்பி விட்டனர். இக்கட்டத்தில் தான் ஈழத்தமிழர்கள் ஐரோப்பிய நாடுகளுக்களும் கனடாவிற்கும், பெருமளவில் குடி பெயர்ந்தனர்.

1990 ஜூனில் துவங்கிய இரண்டாம் கட்டப்போரில் அதாவது குறிப்பாக 1989–ம் ஆண்டில் ஆகஸ்ட் 25–ம் தேதிக்கு பின்னர் 1,22,000 பேர் அகதிகள் தமிழகத்திற்கு வந்தனர். இவர்களில் 1,15,680 பேர் தங்களது சொந்தங்களையும், உடமைகளையும், இழந்து நிராதரவாக இருந்ததினால் அகதி முகாம்களில் வைக்கப்பட்டனர். 1992–ம் ஆண்டில் ஜனவரி 20–ம் தேதிக்குப் பின்னர் சிறப்புக் கப்பல்கள் மற்றும் விமானங்கள் மூலமாக 54,188 அகதிகள் (ஐ.நா.வின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அகதிகளுக்கான உயர் ஆணையத்தின் கணக்குப்படி) சொந்த நாட்டிற்கு திரும்பினர். இதனைத் தொடர்ந்து மூன்றாவது கட்ட ஈழத்திற்கான யுத்தத்தில் (1995–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் துவங்கியது) ஆண்டுகளாக அதாவது 1996–ம் ஆண்டின் ஆகஸ்ட் மாதத்திலிருந்து 2000–ம் ஆண்டு கடந்த மே மாதம் 31–ம் தேதி வரை 21,267 அகதிகள் தமிழகத்திற்கு வந்துள்ளனர். 1999–ம் ஆண்டு இவர்கள் 129 முகாம்களில் (சிறப்பு முகாம்கள் உட்பட) தமிழகத்தில் வைக்கப் – பட்டுள்ளனர். இப்போது நடைபெறும் உக்கிரமான யுத்தத்தினைத் தொடர்ந்து 300 பேர் அகதிகளாக தமிழகத்திற்கு வந்துள்ளனர். இப்போதைய (1999) நிலவரப்படி இந்த எண்ணிக்கை 66464ஆக குறைந்துள்ளது. இதற்கு காரணம் தமிழக அரசு கடைபிடித்து வரும் அகதிகளை "விருப்பப்பூர்வமாக" வெளியேற்றும் நடைமுறை – தான். இதுவே அடிப்படையில் மிகப்பெரிய மனித உரிமை மீறலாகும்.

தமிழ்நாட்டில் தஞ்சம் புகுந்துள்ள அகதிகள் 80களில் வரவேற்கப்பட்டு ஆதரவளித்த நிலை 1990களில் ராஜீவ் கொலை நிகழ்ச்சிக்கு பின்னர் முற்றிலும் தலைகீழாய் மாறியது. ஈழத் தமிழ் அகதிகள் வரத்துவங்கியதிலிருந்தே அவர்களுக்குப் பெயரளவிலான அகதி என்ற அங்கீகாரம் மட்டும் வழங்கப்பட்டது. தமிழ்நாட்டிலோ, இந்தியாவின் வேறு பகுதிகளிலோ வாழும் தமிழீழ மக்களுக்கு அகதி என்ற அந்தஸ்தோ அல்லது வேறு சட்டரீதியான அந்தஸ்தோ மத்திய, மாநில அரசுகளால் வழங்கப்படவில்லை. இதனால் தமிழீழ மக்கள் தமக்கு இழைக்கப்படும் அநீதிகள், உரிமை மீறல்கள், அடக்குமுறைகள் குறித்தோ, சர்வதேசிய அகதிகள் உரிமை பற்றிய சாசனத்தை இந்திய அரசு மீறுவது பற்றியோ, புகார் கூற முடியாவண்ணம் தாங்கள் அகதி என்ற அந்தஸ்தே இன்றி இருக்க வைக்கப்பட்டுள்ளனர். தமிழ்நாட்டிலுள்ள தமிழீழ மக்கள் அய்.நா. அகதிகளின் உயர் ஆணையரின் (U.N High Commissioner for Refugees) உதவியையோ, வேறு சர்வதேச அமைப்புகளின் உதவியையோ, இந்திய அரசின் அனுமதியின்றி பெற முடியாது. இதனால் நாடு கடத்தப்படும் அகதிகளில், இந்திய அரசு அனுமதிக்கும் மக்களை மட்டுமே, நேரடியாக சந்தித்து ஐ.நா.வின் அகதிகளின் உயர் ஆணையம் திருப்திபட்டுக் கொள்கிறது. ஆனால், இந்த நிலைமையில் குறிப்பிட்ட மிகச்சிறிய அளவிலான உரிமைகள் ஈழத்தமிழ் அகதிகளுக்குக் கிடைத்து வந்தன. அவை பணக்கொடை மற்றும் மலிவு விலை தானியங்கள், வசிப்பதற்கு ஒரு வீடு, தாய்மொழியில் கற்பதற்கு கல்வி வசதி. இது பட்டப்படிப்பு அனைத்தினையும் உள்ளடக்கும். (இட ஒதுக்கீடு: மருத்துவம் – 20 இடங்கள், பொறியியல் – 30, விவசாயப் பட்டம் 10, பாலிடெக்னிக் – 20, சட்டத்துறை – 5)

ராஜீவ் கொலைக்கு பின்னர், குறிப்பாக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அரசு இந்தச் சலுகைகள் எல்லாவற்றையும் பறித்தது. அத்தோடு மட்டுமின்றி ஈழத்தமிழ் அகதிகளை குற்றவாளிகளாக சித்தரித்து அவர்கள் தங்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெயர்களை அருகிலுள்ள காவல்நிலையங்களில் பதிவு செய்ய வேண்டும் என்றும் முகாமிலிருந்து வெளியே அனுமதியுடன் வேலைக்குச் செல்பவர்கள் காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணி வரை தான் அனுமதிக்கப்படுவார்கள் என்றும், அவர்களின் நடமாட்டத்திற்கே கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. ஆட்சி மாறியதும் நிலைமை சற்றுத் தளர்ந்தாலும், பறிக்கப்பட்ட உரிமைகள் மீண்டும் ஈழ அகதிகளுக்கு அளிக்கப்பட்டாலும் நிலைமை பெரிய அளவில் முன்னேற்றமடைய வில்லை. இங்கு அவர்கள் சிறப்பு முகாம்களிலும் சாதாரண முகாம்களிலும் அனுபவிக்கும் மனித உரிமை மீறல்கள் வரிசைப்படுத்தப்படுகின்றன.

***சிறப்பு முகாம்***

ஈழத்தமிழர்கள் மீது தமிழக அரசினால் இழைக்கப்படும் கொடுமைகளில் மிகக் கொடுமையானதும், வெளி உலகிற்கு அதிகம் தெரியாததுமான இன்னொன்று 'சிறப்பு முகாம்' என்பதாகும். சிறப்பு முகாம் எனும் பெயரில் சிறையை விட கொடிய சித்திரவதை முகாம்களாக தமிழகத்தில் பல பகுதிகளில் உள்ள கிளைச்சிறைகளில் (சப்–ஜெயில்) நூற்றுக்கணக்கான அகதிகள் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். சிறையில் கைதிகளுக்குள்ள உரிமைகள் கூட அகதிக –ளுக்குக் கிடையாது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அடிப்படை வசதிகள் ஏதுமில்லாத நிலையில், மனித உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் வருடக் கணக்கில் எவ்வித விசாரணையுமின்றி இவ்வகதிகள் வைக்கப்பட்டிருக்கின்றனர். போராளிக் குழுக்களுடன் சம்பந்தப்பட்டிருப்பதாகக் கூறி வேலூரிலுள்ள வேலூர் கோட்டையான திப்பு மஹாலிலும், செங்கல்பட்டிலும், மேலூரிலும் ஆக 3 சிறப்பு முகாம்களில் இவர்கள் அடைக்கப்பட்டுள்ளனர்.

மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்வாகத்தின் கீழ்தான் சிறப்பு முகாம் இருக்கும் என்று தெரிவித்தாலும், நடைமுறையில் க்யூ பிரான்ஞ் போலீசு அதிகாரிகளே சிறப்பு முகாம் பொறுப்பாளராக இருக்கின்றனர். இதனால் இங்கு அடிப்படை வசதிகள் மட்டுமல்ல, மனித உரிமைகளும் மறுக்கப்பட்ட நிலையே காணப்படுகிறது. 1997 ஆம் ஆண்டு வெளிநாட்டவர்கான சட்டப்படியே (Foreigners Act) தமிழ் அகதிகள் சிறப்பு முகாம்களில் காவலில் வைக்கப்பட்டுள் ளனர். ராஜீவின் மரணத்திற்குப் பின்னர், இவ்வாறான ஒரு சட்டத்தைக் கண்டுபிடித்து தமிழ் அகதிகளை முதன் முதலில் சிறப்பு முகாமில் அடைத்த பெருமை முதல்வர் திரு. கருணாநிதி அவர்களையே சேரும். தனது ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்வதற்காக அப்பாவி அகதிகளைப் பிடித்து சிறப்பு முகாமில் அடைத்து விட்டு புலிகளை அடைத்து விட்டதாக மத்திய அரசுக்கு கணக்கு காட்டினார். எதிர்கட்சித் தலைவியான திருமிகு.ஜெயலலிதா, 'பிடிக்கப்பட்டவர்கள் புலிகளல்லர், அவர்கள் அப்பாவி அகதிகள் என்றும், தான் பதவிக்கு வந்தால் அவர்களை உடனடியாக விடுதலை செய்வதாகக்'கூறினார். ஆனால், ஜெயலலிதா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பதவிக்கு வந்து இவர்களை விடுதலை செய்திருந்தாலும் பரவாயில்லை. அவர் மேலும் பல சிறப்பு முகாம்களைத் திறந்து அதில் நூற்றுக்கணக்கான அகதிகளை அடைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சிறப்பு முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் அகதிகள் எவ்வளவு கொடுமையை அனுபவிக்கின்றனர் என்பதை விளக்க சில உதாரணங்களைக் கீழே குறிப்பிடலாம்.

1) விசாரணைக் கைதிகளைக் கூட நீண்ட நாட்கள் அடைத்து வைக்கக் கூடாது எனக்கூறப்படும் கிளைச்சிறைச்சாலைகளிலேயே வருடக் கணக்காக சிறப்பு முகாம் எனும் பெயரில் தமிழ் அகதிகள் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். இவற்றில் இவர்கள் நடமாடக்கூட வசதிகள் இல்லை.

2) பல சிறப்பு முகாம்களில் பாதுகாப்பைக் காரணங்காட்டி 24 மணி நேரமும் அறைகளிலேயே (செல்) அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். அச்சிறிய அறைக்–குள்ளேயே உண்ண வேண்டும். காற்றோட்டமற்ற, சுகாதாரமற்ற அச்சிறிய அறைகளில் எவ்வித பொழுது போக்குமின்றி, தனிமையில் வைக்கப்பட்டிருப்–பதால் அகதிகளுக்கு மனநோய் ஏற்படும் அபாயம் உள்ளது.

3) தமக்கிழைக்கப்பட்டிருக்கும் கொடுமைகள் குறித்து நிவாரணம் கோரி சம்பந்தப்பட்ட அகதிகள் எவ்வளவோ மனுக்கள் அனுப்பியும் போராட்டங்கள் நடத்தியும் இதுவரை எவ்வித பயனும் கிடைக்கவில்லை. விரக்தியடைந்த அகதிகள் சிலர் தற்கொலை முயற்சியில் கூட ஈடுபட்டுள்ளதாக அறிய வருகிறது.

4) சிறப்பு முகாமில் ஒரு அகதிக்கு நாளொன்றுக்கு 5 ரூபாய் வீதம் பணம் வழங்கப்படுகிறது. அரிசியைத் தவிர வேறு எந்தப் பொருளும் ரேசனில் கொடுப்பதில்லை. சமையலுக்கு விறகு மட்டுமே அனுமதிக்கப்படுகிறது. ஒரு கட்டு விறகே 3 ரூபாய் விற்கும் போது 5 ரூபாயால் அனைத்துப் பொருட்களும் வாங்கி எப்படிச் சமாளிக்க முடியும்? இதனைச் சுட்டிக் காட்டி பணத்தைக் கூட்டிக் கொடுங்கள் அல்லது ஏதாவது வேலை வழங்குங்கள் அல்லது வெளியில் இருக்கும் உறவினர்களுடன் தொடர்பு கொண்டு உதவி பெற அனுமதியுங்கள் என சம்பந்தப்பட்ட ஈழ அகதிகள் கோரிக்கை வைத்தனர். ஆனால், இவை எதையுமே அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால், விரக்தியடைந்து வேறு வழியின்றி தங்க வேலாயுதம் என்ற அகதியும் அவரது மனைவியும் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டனர். இச்சம்பவம் 10.4.93 அன்று வேலூர் சிறப்பு முகாமில் நடைபெற்றது.

5) சிறப்பு முகாம்களில் மருத்துவ வசதிகள் எதுவுமே கிடையாது. யாருக்காவது உடல்நிலை சரியில்லையெனில் வட்டாட்சியர் தொடங்கி க்யூ பிராஞ்ச் போலீஸ் அதிகாரிகள் வரை அனைவருக்கும் மனுக் கொடுத்து அனுமதி பெற்றால்தான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போலீஸ் காவலுடன் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள். யாருக்காவது இரவிலோ அல்லது திடீரென்று ஆபத்தான நிலை ஏற்பட்டாலோ உடனே மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்படுவதற்கு எந்த வசதியும் கிடையாது. இதனால் சிறப்பு முகாமில் பிறந்த ஒரு குழந்தை இறக்க நேரிட்டது. இதன் பின்னருங்கூட அரசு எவ்வித முன்னேற்பாடும் செய்யாதது வேதனையாக உள்ளது. அத்துடன் அகதிகள் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறவும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

6) சிறப்பு முகாம்களில் பொழுதுபோக்கு வசதிகள் கிடையாது. அத்துடன் வெளித்தொடர்புகளும் துண்டிக்கப்பட்டுள்ளன. பத்திரிகை, டி.வி., ரேடியோ எதுவுமே கிடையாது. அகதிகள் யாராவது தமது சொந்தச் செலவில் இவற்றை வாங்க விரும்பினாலும் அதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. அத்துடன் இவர்களைப் பார்வையிட நெருங்கிய உறவினர்களுக்கு மட்டுமே அனுமதி – யளிக்கப்படுகிறது. வேறு எவரும் பார்வையிட அனுமதியில்லை. நெருங்கிய உறவினர்களும் இவர்களைப் பார்வையிடுவதற்காகத் தமது புகைப்படம் ஒட்டித் வட்டாட்சியர் மற்றும் க்யூ பிராஞ்ச் போலீஸ் அதிகாரிகளிடம் அனுமதி பெற வேண்டும். அப்போது அந்த நெருங்கிய உறவினர்களிடம் அதிகாரிகள் நீண்ட விசாரணை நடத்துவர். இத்தகைய கெடுபிடிகளினால் ஒரு முறை பார்க்க வந்தவர் அடுத்தமுறை வருவதற்கு அஞ்சும் நிலை ஏற்படுகிறது. சிறைச்சாலைகளில் கூட வழக்கில் கைது செய்யப்பட்டவர்களை யாரும் பார்க்கலாம் என்று உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கும் போது, சிறப்பு முகாம்களில் இவ்வாறு கடுமையான சட்டங்களைக் கடைப்பிடிப்பது எந்த விதத்தில் நியாயம் என்று புரிந்து கொள்ள முடியவில்லை.

7) இவ்வாறான அடக்குமுறையினால் விரக்தியடைந்த அகதிகள் தங்களைத் திருப்பி நாட்டிற்கே அனுப்பி வைக்கும்படி கேட்டுள்ளனர். இன்னும் சிலர் தமது சொந்த செலவிலேயே நாடு திரும்ப தயாராக இருப்பதாகவும் அதற்கு அனுமதியளிக்கும் படியும் தமிழக அரசைக் கேட்டுள்ளனர். ஆனால் அரசு அவை எதற்கும் இணங்கவில்லை. அதே வேளை சிறப்பு முகாமில் உள்ள சில அகதிகள் மீது வழக்குகள் உள்ளன. இவர்களை நீதிமன்றம் ஜாமீனில் விடுதலை செய்தும் வெளியில் விடாமல் கொண்டு வந்து மீண்டும் சிறப்பு முகாம்களிலேயே வைத்துள்ளனர். இவர்களை வழக்கு வாய்தாக்களுக்கு, நீதிமன்றத்திற்கு அனுப்புவதில்லை. இதனால் இவர்கள் மீது 'வாரண்ட்' பிறப்பிக்கப்பட்டு மீண்டும் மீண்டும் சிறையில் அடைக்கும் நிலை ஏற்படுகிறது. அதிகாரிகள் செய்யும் இத்தவறினால் இவ்வகதிகள் சிறையில் வாடும் நிலை ஏற்பட்டுள்ளது. கொடைக்கானல் 'டி.வி. டவர்' வெடிகுண்டு வழக்குத் தொடர்பாகக் கைது செய்யப்பட்டு மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்ட பாலசந்திரன் என்பவருக்கு 20.6.92 அன்று உயர்நீதிமன்றம் ஜாமீன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வழங்கியது. ஆனால், அரசு அவரை விடுதலை செய்யாமல் வேலூர் சிறப்பு முகாமில் காவலில் வைத்துள்ளது. அங்கிருந்து அவர் கொடைக்கானல் நீதிமன்றத்திற்கு வாய்தாவிற்கு அனுப்பப்படாததால் நீதிமன்றம் இவருக்கு 'வாரண்ட்' பிறப்பித்ததை அடுத்து இவரை மீண்டும் மதுரை மத்திய சிறையில் அடைத்தனர். இவ்வாறு அடைக்கப்பட்டது தவறு என்று சிறப்பு முகாமுக்குத் திருப்பி அனுப்பும்படியும் உயர்நீதி மன்றம் 6.11.93 அன்று உத்தரவு இட்டும் அவ்வுத்தரவு இன்னும் நிறைவேற்றப்படாமல் வைக்கப்பட்டுள்ளது.

8) சிறப்பு முகாமில் வைக்கப்பட்டிருக்கும் குடும்பத்தவர்களைப் பிரித்தே அடைத்து வைத்திருக்கின்றனர். கணவன், மனைவி ஒருவரை ஒருவர் பார்த்து பேசுவதற்கு 15 நாட்களுக்கு ஒரு முறையே அனுமதி வழங்கப்படுகிறது. வேலூர் சிறப்பு முகாமில் அவ்வாறு பிரித்து வைக்கப்பட்ட 8 குடும்பங்கள் தங்களை ஒன்றாக வைக்கும்படி கூறி சாகும்வரை உண்ணாவிரதம் மேற் – கொண்டும் அவர்களின் கோரிக்கையை அரசு இதுவரை நிறைவேற்றவில்லை.

பொதுவாகச் சிறைச்சாலைகளிலேயே உணவுடன், சோப்பு, எண்ணெய், சீயக்காயத்தூள், தபால்கார்டு, உடை என்பன வழங்கப்படுகின்றன. அத்துடன் நாளிதழ்கள், வார, மாத இதழ்கள் ரேடியோ, டி.வி., சினிமா வசதிகளும் உண்டு. மேலும், முடிவெட்ட, துணி துவைத்து தேய்க்க டீ குடிக்க, கேன்டீன் வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. அதுமட்டுமல்ல வாரம் ஒரு தடவை உயர் அதிகாரிகள், மருத்துவ அதிகாரிகள், பார்வையிட்டு குறை தீர்க்கும் முறை உண்டு. அதைவிட நியாயம் பெற இலவச சட்ட உதவியும் உண்டு. ஆனால், சிறப்பு முகாம்களில் அடைக்கப்பட்டிருக்கும் ஈழ அகதிகளுக்கு இவ்வசதிகள் எதுவுமே வழங்கப்படாததுடன் இவற்றைத் தமது சொந்த செலவில் பெற்றுக் கொள்வதற்கும் அகதிகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

### *திப்பு மஹால் சிறப்பு முகாம்*

திப்பு மஹாலிலுள்ள சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டுள்ள அகதிகளின் நிலைமையை அறிய மக்கள் சிவில் உரிமைக் கழகமானது (பி.யு.சி.எல்.), பியூசிஎல்லின் தேசிய இணைத் தலைவரும் எழுத்தாளருமான திரு.கே. மனோகரனையும், தமிழகம் மற்றும் பாண்டிச்சேரி மாநிலங்களின் வழக்கறிஞரும் பி.யு.சி.எல். தலைவருமான திருமிகு. சுதா ராமலிங்கத்தையும், வழக்கறிஞரும் தமிழகம் மற்றும் பாண்டிச்சேரி மாநிலங்களின் பி.யு.சி.எல். பொதுச் செயலாளரு – மான் முனைவர். திரு. வி.சுரேசையும், வழக்கறிஞரும் தமிழகம் பாண்டிச்சேரி பி.யு.சி.எல். உறுப்பினர்களான **திருமிகு.டி.நாகசைலாவையும்**, திரு.ஆர்.வெங்க – டேசையும் **உறுப்பினர்களாகக்கொண்ட** உண்மை அறியும் குழு ஒன்றை அமைத்தது. அக்குழு திப்பு மஹாலுக்கு 7.7.99 தேதியன்று நேரடியாகச் சென்று உண்மையை அறிந்து வெளியிட்ட அறிக்கையின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வேலூர் கோட்டைக்குள் திப்பு மஹால் மற்றும் ஹைதர் மஹால் என்ற பெயர்களில் உள்ள இரு கட்டிடங்களிலும் 14.12.90 தேதியன்று இரு சிறப்பு அகதி முகாம்கள் அமைக்கப்பட்டன. துவக்கத்தில் திப்பு மஹாலில் 163 ஈழத் தமிழர்களும் ஹைதர் மஹாலில் 491 அகதிகளும் வைக்கப்பட்டிருந்தனர். பின்னர், ஹைதர் மஹால் மூடப்பட்டுவிட்டது. இப்போது திப்பு மஹாலில் 56 அகதிகள் வைக்கப் – பட்டுள்ளனர். ஒவ்வொரு மஹாலில் மூன்று இரும்புக் கதவுகள் அடுத்தடுத்து உள்ளன. இந்தக் கதவுகளை தவிர்த்து உள்ளே சென்று வருவதற்கு எந்த வழியும் இல்லை. ஹாலைச் சுற்றியுள்ள சுவருக்கு மேல் 6 அடி உயரத்தில் முள் கம்பி சுற்றப்பட்டுள்ளது. இதற்கு அடுத்தபடியாக 6 அடி சுவரும் அதனை அடுத்து தண்ணீர் நிரம்பிய சிறு கால்வாயும் உள்ளது. இதுதவிர மிகக் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கடந்த 1995ம் ஆண்டு திப்பு மஹாலிலிருந்து 43 அகதிகள் தப்பி ஓடிய சம்பவம் குறித்து விசாரித்த நீதிபதி டி.என்.சிங்காரவேலு தலைமையிலான ஒரு நபர் விசாரணை ஆணையத்தின் அறிக்கையில் உள்ள சாட்சியங்களின் கூற்றுப் படி 24 மணி நேரமும் திப்பு மஹாலின் முதன்மை வாசலில் எந்திர துப்பாக்கிகளை ஏந்தியபடி போலீசார் நிறுத்தப்பட்டுள்ளனர். 3 கதவுகளிலும் 3 மணிக்கூண்டு – களிலும் 24 மணி நேரமும் சுழற்சி முறையில் 3 மணி நேரத்திற்கு ஒரு முறை போலீசார் மாற்றப்படுகின்றனர். இதுதவிர, போலீஸ் ஆய்வாளர்கள், போலீஸ் இணைக்கண்காணிப்பாளர், கண்காணிப்பாளர்கள் அதிரடி வருகை தந்து முகாமின் பாதுகாப்பை உறுதி செய்கின்றனர்.

இவ்விசாரணை ஆணையத்தின் அறிக்கைபடியே, முகாமை விட்டு வெளியே செல்ல அகதிகளுக்கு அனுமதி இல்லை. ஆணையத்தின் கூற்றுப்படி அவர்கள் கடுமையான முறையில் சிறப்பு முகாமில் காவலில் வைக்கப்பட்டுள்ளனர் (Rigorous Confinement). இப்படிப்பட்ட நீண்ட கடுங்காவலில் வைக்கப்படுவதால் அகதிகள் விரக்தியடைந்த நிலையில் உள்ளனர். சிறப்பு முகாம் என்பது சிறையோ அல்லது கிளைச்சிறையோ அல்ல என்பதால் சட்டப்படியே சிறைப்பேரேட்டின் (Jail Manual) விதிகள் இங்கு பொருந்தாது என்று தமிழக அரசு கூறுகிறது. இதனால் சிறைக் கைதிகளுக்கு நீதிமன்ற அனுமதியுடன் சிறையிலிருந்து வெளியே சென்று வரும் வசதி (Parole System) பிணையில் வெளிவருதல் ஆகியவை இந்த அகதிகளுக்கு மறுக்கப்பட்டுள்ளன என்பது மிகவும் கொடுமையானதாகும்.

இந்த முகாமிலுள்ள வயது வந்த நபர் ஒருவருக்கு 20 ரூபாயும் (நபர் ஒன்றுக்கு) ஒவ்வொரு குழந்தைக்கு 14 ரூபாயும் அரசு உணவுக்கென்று அளிக்கிறது. ஆனால், இந்தப் பணமானது நேரடியாக அவர்களுக்குக் கொடுக்கப் –படுவதில்லை. காண்டிராக்டர்களுக்கு கொடுக்கப்பட்டு அவர்களே அகதிகளுக் – கான உணவை சமைக்கிறார்கள். அகதிகள் சமைப்பதற்கு அனுமதி இல்லை. செங்கல்பட்டிலுள்ள சிறப்பு முகாமில் மட்டும் அங்கு சமையல் செய்ய சரியான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



காண்டிராக்டர்கள் கிடைக்காததால் அகதிகளே சமையல் செய்ய அனுமதிக்கப் – படுகின்றன. இங்கு குடும்பத்துடன் இருக்க அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஆனால், 5 வயதிற்குட்பட்ட 2 குழந்தைகள் மட்டுமே முகாமில் தங்க அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

முகாமிலுள்ளவர்களை உறவினர்கள் சந்திப்பது என்பது கடுமையாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. சிறப்பு முகாமிலுள்ளவர்களைப் பார்க்க வருபவர்களை ஒழுங்குபடுத்த வேண்டுமென்றோ, கட்டுப்படுத்த வேண்டுமென்றோ எந்த சட்டமோ, விதிகளோ இல்லை. இதற்கு மாறாக, இந்தியச் சிறைச்சாலைகளிலுள்ள கைதிகளுக்குத் தங்களது உறவினர்களையும், நண்பர்களையும் சந்தித்து பேச உரிமைகள் உள்ளன. சிறைக்கைதிகள் தங்களது உறவினர்களுடனும், நண்பர் – களுடனும் தொடர்ச்சியான தொடர்பில் இருக்கும்போதே சிறைத்தண்டனை முடிந்து அவர்கள் சாதாரண வாழ்க்கைக்குத் திரும்பும் போது எந்தவிதப் பிரச்சினையும் ஏற்படாது என்று உச்சநீதிமன்றமே தனது பல்வேறு தீர்ப்புகளில் இந்த உரிமையை உறுதிப்படுத்தியுள்ளது. ஆனால், இந்த உரிமை முகாமிலுள்ள எந்தவிதக் குற்றமும் செய்யாத அகதிகளுக்கு கிடையாது என்பது வேதனைக்குரிய ஒன்று.

திப்புமஹாலில் சிறப்பு முகாமிலுள்ள கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகளே உறவினர்கள் வருவதற்குப் பெரும் இடையூறு ஏற்படுத்துகிறது. இவற்றை பொருட்படுத்தாமல் வரவேண்டுமெனில் அவர் பல தடைகளை எதிர்கொள்ள வேண்டும். முதலாவது முகாமிலிருந்து பல கிலோ மீட்டர் தொலைவிலுள்ள சிறப்பு வட்டாட்சியரிடம் அனுமதி கோரி மனு கொடுக்க வேண்டும். சிறப்பு வட்டாட்சியர் போலீஸ் கண்காணிப்பாளரிடம் அந்த மனுவை அனுப்பி அனுமதி கொடுப்பது குறித்து கருத்து கேட்ட பின்னரே அனுமதி அளிக்கப்படுகிறது. இவ்வாறு ஒரு அதிகாரியிடமிருந்து இன்னொரு அதிகாரிக்கு மனு நகர்வதற்கு பல நாட்கள், வாரங்கள் ஆகும். இதே சமயத்தில் ஒரு முகாமிலுள்ள ஒருவர் மற்றொரு முகாமிலுள்ள உறவினரையும் பார்ப்பதற்கு மிகவும் சிரமப்படவேண்டும். ஏனெனில், அவர் முகாமை விட்டு வெளியே போவதற்கும் இன்னொரு சிறப்பு முகாமிற்கு செல்வதற்கும் தனித்தனியே அதிகாரிகளிடம் அனுமதி பெற வேண்டும்.

உண்மையறியும் குழுவினரே இத்தகைய அனுபவங்களுக்குள்ளானார்கள். உண்மை அறியும் குழுவானது சிறப்பு முகாமுக்கு செல்வதற்கு போலீஸ் கண்காணிப்பாளரிடம் அனுமதி பெற்ற பின்னர் க்யூ பிராஞ்ச் போலீசார் அனுமதி பெற வேண்டியிருந்தது. அவர்களிடம் அனுமதி பெற்ற குழுவினர் முகாமின் வாசலுக்கு பின்னர் பாதுகாப்புக்கு நின்ற போலீசாரால் நீண்ட நேரம் பரிசோதிக்கப்பட்டனர். இதற்காக முகாமின் வாயிலுக்கு வெளியே 2 மணி நேரம் குழுவினர் காத்திருக்க வேண்டியதாயிற்று. இதில் பெண்களென்றால் பெண் போலீசார்தான் பரிசோதிப்பார்கள். சிறப்பு முகாமில் பெண் போலீசார் இல்லை என்ற காரணத்தால் வேலூரிலிருந்து பெண் போலீசார் வரவழைக்கப்படுவார்கள்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பல சமயங்களில் பெண் உறவினர்கள் ஒரு நாள் முழுவதும் முகாமின் வாசலிலேயே காத்துக்கிடக்க நேரிடுவதுண்டு.

சட்டப்படி சிறப்பு முகாமிலுள்ள இந்த அகதிகள் கைதிகள் இல்லை. ஆனால் இவர்கள் ஆயுள்தண்டனை பெற்ற சிறைக்கைதிகளை விட மோசமான நிலையில் உள்ளனர். பல ஆண்டுகள் முகாமிலுள்ள இவர்களுக்கு தாம் எப்போது விடுதலை செய்யப்படுவோம் என்பதே தெரியாத நிலையில் விரக்தியடைந்து உளவியல் ரீதியாக பயங்கரமான அனுபவங்களிலேயே உறைந்து வாழ்கின்றனர். இச்சிறப்பு முகாமிலிருந்து 43 அகதிகள் தப்பித்ததாகக் கூறப்படும் சம்பவத்தை விசாரிக்க நியமிக்கப்பட்ட நீதிபதி சிங்காரவேலு விசாரணை ஆணையமே, "ஐந்து அல்லது ஆறு ஆண்டுகள் இந்த அகதிகள் தொடர்ந்து கடுமையான காவலில் வைக்கப்பட்டிருந்ததை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். இலங்கைக்கு திரும்பி அனுப்ப மத்திய அரசினால் அதிகபட்சமான எந்தவித நடவடிக்கையும் மேற்கொள் –ளப்படவில்லை. இதனால் இந்த அகதிகள் விரக்தியடைந்து அவ்வப்போது ஏதாவது ஒரு வழியில் முகாமை விட்டு வெளியேறிச் செல்ல முயற்சிப்பதும் வெளிப்படையானது" என்று குறிப்பிட்டுள்ளது.

இதுவரை, மத்திய அரசு முகாம்களில் வைக்கப்பட்டுள்ள அகதிகள் குறித்து எந்த கொள்கை முடிவும் எடுக்கவில்லை. இம்முகாமில் உள்ள பலர் 10 ஆண்டுகளுக்கும் மேலாக உள்ளனர். இவர்கள் தாம் எப்போது விடுதலை அடைவோம், எப்போது தமது குடும்பத்தினருடன் இணைந்து நல்ல வாழ்க்கைக்கு திரும்புவோம் என்ற நிச்சயமற்ற நிலையில் மிகுந்த மனவேதனையுடன் இருப்பதே முற்றிலும் மனிதாபிமானமற்றதாகும். இது அடிப்படையிலேயே அவர்களின் வாழ்வுரிமையைப் பறிப்பதாகும்.

வெளிநாட்டவர் சட்டத்தின் (The Foreigners Act, 1946) பிரிவு 3ல் (2)ன்படியே இவர்கள் சிறப்பு முகாம்களில் வைக்கப்பட்டுள்ளனர். இச்சட்டத்தின் விதிகளின்படியே மத்திய அரசோ அல்லது மாநில அரசோ வெளிநாட்டவர் ஒருவரை குறிப்பிட்ட இடத்தில் தங்க வைத்து அவருடைய நடமாட்டத்திற்கு கட்டுபாடுகள் விதிக்க உத்தரவிடலாம். அரசின் கூற்றுப்படி முகாம்களில் இவர் –களை தங்க வைப்பது என்பது தேவையான ஒன்றாகும். ஆனால் அவர்களுடைய சுதந்திரங்களை மறுப்பது என்பது அவர்களுடைய நடமாட்டங்களுக்கு கட்டுப்–பாடுகள் விதிப்பதாகும். வெளிநாட்டவர் சட்டத்தின்படி இவர்களை முகாம்களில் வைத்திருப்பதை எதிர்த்து ராஜு என்ற கலாபதி சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில் (ராஜு என்ற கலாபதி எதிர் தமிழ்நாடு அரசு 1995 (2) கிரிமனல் சட்ட வார இதழ் 690) உயர்நீதிமன்றமானது முகாம்களில் இவர்களை வைப்பது என்பது காவலில் வைப்பது ஆகாது. ஒரு வெளிநாட்டவரை ஒரு குறிப்பிட்ட இடத்தில் தங்க வைப்பதாகும் என்றும், தங்க வைப்பதற்கு குறிப்பிட்ட காலம் குறிப்பிடாமலிருப்பது என்பது சட்ட விரோதமாகாது. ஏனெனில், சிறப்பு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முகாம்களில் தங்க வைப்பது என்பது காவலில் வைப்பதாகாது என்பதால் இது அவருடைய நடமாட்டச் சுதந்திரத்திற்கு விதிக்கப்படும் நியாயமான கட்டுப்பாடே ஆகும் என்று கூறியது. உயர்நீதிமன்றத்தில் இப்படி தீர்ப்பு அளித்திருந்திருந்தாலும் பல நீதிமன்றங்கள் (Trial Courts) இந்த அகதிகள் சிலரின் மீதான வழக்குகளின் விசாரணையின் முடிவில் அளித்த தீர்ப்புகளில் இந்த அகதிகள் அவர்கள் முகாம்களில் வைக்கப்பட்டிருந்த காலத்திலிருந்து தண்டனை காலத்தை கழித்து உள்ளனர். இதன்மூலம் முகாமில் வைக்கப்படுவது என்பது சிறைத்தண்டனைக்கு ஈடான தாகும் என்று நீதித்துறையே அங்கீகரித்துள்ளது.

இதில் கொடுமையானது என்னவெனில் இந்த முகாம்களில் வைக்கப் - படும் குழந்தைகளின் பரிதாபநிலைதான். செங்கல்பட்டு முகாமில் வைக்கப்பட் - டுள்ள சில குடும்பங்களுடன் 5 வயதிற்குட்பட்ட இரு குழந்தைகள் வெளி உலகுடன் எந்தவிதத் தொடர்புமில்லாமலும், எந்தவிதக் கல்வியறிவும் பெறாமலும், சமூகத்துடன் எந்தவிதத் தொடர்புமுமின்றியும் வளர்ந்து வருகின்றனர்.

உண்மை அறியும் குழுவினர் சிறப்பு முகாம்களிலுள்ள மாறன் (30 வயதிற்குட்பட்டவர்) கனகசபாபதி (77வயது) ஆகிய இரு நபர்களை சந்தித்தபோது அவர்கள் இம்முகாமிலுள்ளவர்களில் பெரும்பாலோனோர் உடல் ஊனமுற்றவர்களே என்று கூறினர். நீதிபதி டி.என்.சிங்காரவேலு விசாரணை ஆணையத்தின் அறிக்கையில் அதிகாரிகள் அளித்த சாட்சியங்களும் (ஆதாரம்: ஆணையத்தின் அறிக்கை பக்கம் 3 பத்தி 8) இத்தகவலை உறுதிப்படுத்துகின்றன.

உண்மையறியும் குழுவானது முகாமில் வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட ஊனமுற்றவர்கள் பற்றி தகவல் திரட்ட முடிந்தது.

1. அன்சார்: துப்பாக்கியால் சுட்டதினால் வலது பாதத்தில் ஊனமுற்றவர்
2. முகிலன்: முழுவதும் பார்வையிழந்தவர்
3. ரெங்கா: மணிக்கட்டுக்கு கீழே இரு கரங்களையும், இடது கண்ணின் பார்வையையும் இடது காதின் கேட்கும் சக்தியையும் இழந்தவர்.
4. மாஸ்கோ: மணிக்கட்டிற்கு கீழே வலது கையும், இடது கையில் பெருவிரலையும் இழந்தவர்.
5. இட்லர்: மணிக்கட்டிற்கு கீழே இரு கரங்களையும் இரு கண்களின் பார்வையையும் இழந்தவர்.
6. ஜெர்ரி: வலது கால் ஊனமாகியுள்ளது.
7. அஜந்தன்: தலையில் துப்பாக்கி குண்டு பாய்ந்ததன் விளைவாக வலது காலும் வலது கரமும், இடதுகாதின் கேட்கும் சக்தியையும் இழந்தவர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



8. யோகன்: துப்பாக்கிச் சூட்டினால் இடதுகால் ஊனமடைந்தவர்.
9. ஜீவன்: வலதுகால் இல்லை.
10. இராதா: வலது கண்ணின் பார்வையை இழந்தவர்.
11. நிமிலன்: இடது கண்ணின் பார்வையை இழந்தவர்.
12. சிவா: இடதுபாதம் இல்லை.

இம்முகாமிலுள்ள அகதிகளின் மீது எந்த கிரிமினல் வழக்குகளும் இல்லை அல்லது அப்படி ஒரு வழக்கு நடந்து தண்டனை அளிக்கப்பட்டிருந்தாலும் அவர்கள் இதுவரை தண்டனையை அனுபவித்திருப்பார்கள். இவர்கள் தங்களது குடும்பத்தினருடன் இணைந்து வாழ மிகவும் விருப்பமாக உள்ளனர். இருப்பினும், இது தொடர்பான ஆவணங்களையும், மனுக்களையும் அனுப்புவதற்கு அவர்கள் அரசு நிறுவனங்களையே சார்ந்துள்ளனர்.

சமீபகாலமாக வெளிநாடுகளிலுள்ள தங்களது உறவினர்களிடமிருந்து தொலைபேசி வந்தால்கூட இவர்கள் பேசுவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. இவர்களது குடும்பங்கள் இவர்களை தங்கள் இருக்கும் இடத்திற்கு வரவழைக்க உதவினாலும்கூட அப்படி புறப்படும் சிலரை அரசு அனுமதித்தாலும்கூட இவர்களிடம் பயணம் செய்வதற்கான முறையான ஆவணங்கள் இல்லை. இவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க சென்னையிலுள்ள அகதிகளின் உயர் ஆணையரை உண்மை அறியும் குழுவினர் சந்தித்து (திரு.கே.மனோகரன் மற்றும் திருமிகு.சுதா ராமலிங்கம்) இப்பிரச்சினையில் தலையிடுமாறு கேட்டதற்கு ஆணையர் 'இந்தியா அகதிகள் தொடர்பான உடன்பாட்டின் (1951) கையெழுத்திட –வில்லையென்பதால் அகதிகளின் உயர் ஆணையமானது மிகவும் குறைந்த அளவே இப்பிரச்சனையில் தலையிட முடியும். திப்புமஹால் போன்ற முகாம்களை தான் அணுக முடியாது' என்று கூறியுள்ளார். இருப்பினும், அகதிகளுக்கு பயணம் செய்வதற்கான ஆவணங்களை பெறுவதற்கு தான் உதவுவதாகக் கூறியுள்ளார்.

**குழுவின் முடிவுகளும், பரிந்துரைகளும்:**

1. இந்த சிறப்பு முகாமில் இருப்பவர்களில் குற்றம் நிரூபிக்கப்பட்டு தண்டனையை ஏற்கெனவே அனுபவித்தவர்களையும், நிரபராதி என்று விடுதலை செய்யப்பட்டவர்களையும், தொடர்ந்து சிறப்பு முகாம்களில் வைத்திருப்பது அநீதியானதாகும். திப்பு மஹாலின் சிறப்பு முகாமிலுள்ளவர்களில் சிலரைத்தவிர, பலர் இலங்கைக்கு திரும்பிப் போவதற்கு விருப்பமில்லாதவர்கள். ஏனெனில், அவர்கள் அங்கு சென்றால் தாம் திரும்பவும் இலங்கைப் போலீசாரினால் கைது, காவல் மற்றும் சித்ரவதைக்கு உள்ளாகலாம் என்று இவர்கள் அஞ்சுகின்றனர். எனவே, தமிழக அரசு இவர்கள் விரும்பும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நாட்டிற்குச் செல்வதற்கான அனுமதி வழங்குவதற்கு உத்திரவிட வேண்டும்.

2. அகதிகளுக்கு வெளிநாட்டிலுள்ள அவர்களின் உறவினர்களிட மிருந்து தொலைபேசி வந்தால் பேசுவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும்.

3. உடல் ஊனமுற்றவர்கள் அனைவரும் உடனடியாக விடுதலை செய்யப்பட்டு அவர்கள் தங்களது குடும்பத்தினரிடமோ அல்லது நண்பர்களிடமோ அல்லது அவர்களது நலம் நாடுபவர்களிடமோ இணைவதற்கு அனுமதி அளிக்கப்பட வேண்டும்.

4. முகாமிலுள்ளவர்கள் சிறைக்கைதிகளுக்கு அளிக்கப்படுவதுபோன்று, ஒரு குறிப்பிட்ட காலங்களில் தாங்கள் விரும்பும் இடத்திற்கு செல்வதற்கு ஏற்ற வகையில் (Parole System) வசதிகள் அளிக்க வேண்டும்.

5. முகாமிலுள்ளவர்கள் கைதிகள் அல்ல. அவர்கள் அகதிகளாகும். எனவே, அவர்கள் அகதிகளைப் போன்று நடத்தப்பட வேண்டும். அவர்களுடன் அவர்களது உறவினர்களையும், குடும்பத்தினரையும் தங்க அனுமதித்து அவர்களது உணவை அவர்களே சமைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும். இதை விடுத்து, அவர்களை நீண்டகாலமாக முகாமில் வைத்திருப்பது அடிப்படையிலேயே மனித உரிமை மீறலாகும்.

6. தேசிய மனித உரிமைகள் ஆணையமும், மாநில மனித உரிமைகள் ஆணையமும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை இம்முகாம் களுக்கு சென்று அங்கு மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

7. முகாமிலுள்ளவர்கள் வெளியுலகத்துடன் தொடர்பு கொள்ள அனுமதி அளிப்பதோடு அவர்களது கடிதங்களைத் தணிக்கைக்குள்ளாக்கக் கூடாது.

8. உறவினர்களின் உதவி மற்றும் ஆதரவுடன், வெளிநாடு செல்வதற்கு தயாராக இருக்கும் அகதிகளுக்கு உதவிட அகதிகளுக்கான உயர் ஆணையருடன் இணைந்து தமிழக அரசு சாதகமான நடவடிக்கை – களை கண்டறிய வேண்டும்.

(ஆதாரம்: வேலூரிலுள்ள திப்பு மஹாலின் சிறப்பு முகாமில் வைக்கப்பட்டுள்ள அகதிகளின் நிலை குறித்த மக்கள் சிவில் உரிமைக் கழகத்தின் அறிக்கை.)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## சாதாரண முகாம்கள்

### உதவித்தொகை வழங்கல்

1. வீட்டின் தலைவருக்கு ரூ.5ம் பிற உறுப்பினர்களுக்கு வயது எல்லைப்படி ரூ.4 தொடங்கி ரூ.3 வரை குறைந்த உதவித்தொகை வழங்கப்படுகிறது. மேலும் இங்கு வழங்கப்படும் ரேசன் அரிசி மிகவும் கீழ்த்தரமானதும், சுத்தமற்றதும் ஆகும்.

இங்கு குறிப்பிட வேண்டியது என்னவென்றால் வழங்கப்படுகின்ற உதவித் தொகையும் சரி, அரிசியும் சரி, அதில் எந்த மாற்றமுமில்லாது வழங்குவதுதான் பெருங்கொடுமை. அகதியாக வரும்போது பதியப்பட்ட பெயர் மற்றும் வயது இதில் வயது மட்டும் மாறாமல் தொடர்ந்து வருடங்களைக் கடந்து வருகிறது. அரிசி வழங்கும் ரேசன் அட்டையிலும் உதவித்தொகை கொடுக்கும் பதிவு புத்தகத்திலும் வயது 4 வருடம் முடிகிற நிலையிலும் மாற்றப்படாமல் மக்களுக்கான உதவித் தொகையும், ரேசன் அரிசியும் கொள்ளை அடிக்கப்பட்டே வருகிறது. மனுப் போட்டும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் விளக்கம் கேட்டும் தங்களுக்கு மேலிடத்திலிருந்து ஆணை வரவில்லை என்று சாக்கு போக்கு சொல்கின்றனர்.

மேலும், இன்றைய இந்திய நாட்டின் பொருட்களின் விலையேற்றத்தின்படி தினம் கொடுக்கின்ற ரூபாய் ரூ.4, ரூ.5ஐ வைத்து யாராவது வாழ்வை நடத்த முடியுமா?

2) சாதாரண முகாமில் மக்கள் முகாமை விட்டு வெளியே செல்வதானால் காலையில் 6 மணிக்கு மேல், முகாம் பதிவுப் புத்தகத்தில் கையெழுத்திட்டு விட்டு மாலை 6 மணிக்குள் வந்து கையெழுத்திட வேண்டும். மறந்தால் கொடுக்கப்படும் உதவித் தொகையும் நிறுத்தப்படும். தொடர்ந்து எழுதாமல் சென்றால் காவல் துறையினரும் க்யூ பிராஞ்ச் போலீஸ் துறையினரும் விசாரணை என்ற பெயரில் பெரும் தொல்லைகளைக் கொடுக்கின்றனர். உதவித் தொகை வழங்கும் நாட்களில், யாரும் எங்கும் செல்லக்கூடாது. பிறந்த குழந்தை முதல் 90 வயது பாட்டி வரை நடந்து சென்று அதிகாரிகளுக்கு முகம் காட்ட வேண்டும். உதவித் தொகை வழங்கப்படாத நாட்களிலும் இந்தத் தொல்லை தொடர்கிறது. வருவாய் ஆய்வாளர் தொடங்கி, வட்டாட்சியர் வரையும், சாதாரண போலீஸ் தொடங்கி உயர்அதிகாரிகள் வரை அனைவருமே லஞ்சம் வாங்கியே எதையும் செய்வதால் அகதிகள் கடுமையாகவே பாதிப்புக்குள்ளாகின்றனர்.

3) மேலும், இம்முகாம்களில் சுகாதார வசதிகள் பெரும் வேதனைக்குரிய –தாகவே உள்ளது. இதுவரை ஈழ அகதிகளில் சிலர் முகாம்களில்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



காலரா, மூளைக்காய்ச்சல், மலேரியா போன்ற நோய்களில் இறந்துள்ளனர். தமிழகத்திலுள்ள அனைவரும் தடுப்பூசி போட்ட பின்னர் இறுதியில்தான் ஈழ அகதிகளுக்கு தடுப்பூசி போட வருகிறார்கள். தடுப்பூசியானாலும் சரி, வேறு நோய்களுக்குப் போடுகின்ற ஊசியானாலும் சரி, ஒரே ஊசி மூலமும், கொதிக்காத நீரில் கழுவிய ஊசி மூலமே மருந்து ஏற்றப்படுகிறது. மேலும் சாதாரண முகாம்களில் வாழும் தொழிலாளர் அகதிகள் வறுமை மற்றும் பணம் இன்மை காரணங்களால் அரசு மருத்துவமனையை விட்டால் அவர்கள் சிகிச்சை பெறுவதற்கு வேறுவழியில்லை. மேலும் முகாம்களைச் சுற்றி உள்ள பகுதிகள் யாவும் கழிவுநீர்ச் சாக்கடை - களினாலும், அழுகிய குப்பைகளினாலும் நிரம்பி வழிகின்றன.

4) அகதி மாணவர்கள் தங்கள் கல்வியைத் தொடரும் போது ஏற்படும் பாதிப்புகள் கண்டு மனம் நொந்து நடைபிணங்களாக மாறி வருகின் றனர். முகாம்களை ஆளும் அரசும் ஓரிடத்திலிருந்து வேறிடத்திற்கு அடிக்கடி மாற்றுவதால் மாறும் இடத்திலிருந்து மாற்றப்படும் இடத்திற்கு பள்ளி நிர்வாகத்தின் மாற்றுச் சான்றிதழ் கிடைக்காமல் பள்ளியில் சேர முடியாமல் தமிழக அரசு மாணவர்களைத் தண்டித்து வருகின்றது. அகதி மாணவர்களுக்கு ஆரம்பம் முதல் உயர்கல்வி வரை வழங்கி வந்த சலுகைகள், ஆதரவு (+2) பன்னிரண்டாம் வகுப்புடன் நிறுத்தப்பட்டுள்ளது. பள்ளிகளில் சேருவதற்கு அனுமதி வழங்கியுள்ள போதிலும் தமிழ்நாட்டின் பள்ளி அதிகாரிகளின் பொறுப்பற்ற தன்மையால் சேர்க்க முடியாமல் ஏங்கும் மாணவர்களின் பெற்றோர் நிலை மிகவும் பரிதாபமாக உள்ளது. பெரும்பான்மையான தொழிலாளர் அகதிகளின் மாணவர்கள் பெரும் பணத்தட்டுப்பாட்டின் மத்தியில் படிக்க வைக்க முடியாமல் உள்ளனர். இதனால் பெரும்பான்மையான சிறுவயது மாணவர்கள் மதுக் கடைகளுக்கும் மற்றும் லாட்டரி கடைகளுக்கும் குறைந்த கூலியில் வேலைக்குச் செல்கின்றனர். தமிழக அரசின் லாட்டரி மயக்கத்தில் இருக்கும் பெற்றோர்களையும் அதை விற்றுக் கொண்டு திரிகின்ற ஈழத்தமிழ் மாணவர்களின் நிலையும் வேதனை தருவதாகவுள்ளது.

மேலும் பன்னிரண்டாவது படித்த மாணவர்களுக்கு உயர்கல்வி கற்க வசதியில்லை. பணம் இருந்தால் உயர்கல்வி, இல்லையேல் பாதியிலேயே கண்ணைக் கட்டி காட்டில் விட்ட கதையாகவே உள்ளனர். கல்லூரிகளில் உதவிக் கரமின்றியிருக்கும் தொழிலாளர் மாணவர்கள் நிலை மிக மோசமான நிலையில் உள்ளது. இப்படி பார்க்கும் போது 1000 மாணவர்களுக்கு ஒரு மாணவன் மட்டுமே உயர்கல்வி கற்கக்கூடிய வாய்ப்புள்ளது. ஈழத்தமிழரின் கல்வி இங்கும் மறுக்கப்படு வதால் படிக்கும் மாணவர்களின் சதவிகிதமும் குறைந்து கொண்டே வருகிறது.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



5) அகதி முகாம்களில் பெண்கள் பிரச்சனை மிகவும் அவல நிலையிலுள்ளது. ஆண் துணையின்றி வந்த பெண்கள் தங்கள் குடும்பத்தை நடத்த முடியாமல் கூலி வேலைக்குச் செல்ல வேண்டியுள்ளது. அங்கு முதலாளிகளின் கட்டுப்பாட்டுக்குள் அடிமையான கோலத்தோடு அவர்களின் இச்சைகளுக்கும், வக்கிரப் பார்வையின் பிடிக்குள்ளும் மாட்டித் தவித்துக் கொண்டிருக்கிறார் கள். இந்தியத் தொழிலாளர்களுக்கும், ஈழத் தொழிலாளர்களுக்கும் கூலி வழங்களிலும் ஏற்றத் தாழ்வு காணப்படுகிறது. அதிலும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் கூலி வரலாறு அறிந்த காலந்தொட்டு குறைந்த வீதத்திலேயே வழங்கப்பட்டு வருகிறது. அதில் ஈழத் தொழிலாள பெண்களும் விதி விலக்கல்ல. குறைந்த கூலியில் வாழ்வை ஓட்ட முடியாத நிலை. இந்த நிலையில் சிறார் விபச்சாரத் தொழிலுக்கு நிர்பந்திக்கப்படும் அவலமும் உண்டு.

6) முகாம்களில் போலீஸ் மற்றும் அரசு அதிகாரிகளால் பாலியல் பலாத்காரத்திற்குட்படுவதுமுண்டு. எதிர்த்தால் அல்லது யாரேனும் மறுத்தால் அவளுடைய தந்தையானாலும் சரி, கணவன் ஆனாலும் சரி, அதை எதிர்த்த சமூக சேவகனாக இருந்தாலும் சரி, சிறப்பு முகாமுக்குள் தண்டனையை வாழ்நாள் முழுக்க அனுபவிக்கும் சூழ்நிலை ஏற்படுத்தப்படுகிறது.

வேலூர் சிறப்பு முகாமில் ஹைதர் மகாலில் காவலுக்கு நின்ற ஒரு போலீஸ் அங்கு அடைத்து வைக்கப்பட்ட ஒரு அகதிப் பெண்ணை பாலியல் நடவடிக்கைக்கு கட்டாயப்படுத்தினார். ஆனால், அப்பெண் அதற்கு இணங்காத – தால் அப்பெண்ணின் மீது கஞ்சா வழக்கு பதிவு செய்யப்பட்டு வேலூர் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார். இவ்வாறு பொய் வழக்குகள் போடப்பட்டு சிறையில் அடைக்கப்படுவதற்கு அஞ்சி அகதிப் பெண்கள் வேறுவழியின்றி போலீசாரின் காம வெறிக்குப் பலியாகின்றனர்.

மணப்பாறை என்னுமிடத்தில் உள்ள அகதி முகாமில் தங்கியிருந்த இளம்பெண் ஒருவரை அம்முகாம் பொறுப்பதிகாரியான வட்டாட்சியர் ஒருவர் அடிக்கடி அழைத்துச் சென்று லாட்ஜில் தங்க வைத்து தனது வக்கிரத்துக்குப் பலியாக்குவதாக சொல்லப்படுகிறது. இதைக் கண்டித்த 85 வயது கந்தையா என்ற அகதியை புலி எனக் குற்றம் சுமத்தி சிறப்பு முகாமில் அடைத்துள்ளனர். (ஆதாரம்: புலம் பெயர்ந்த தமிழர் நல மாநாடு டிசம்பர் 1994 திருச்சி, சிறப்பு மலர்)

வேதனை தரும் இந்நிகழ்வுகள் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன. இது குறித்து இவ்வப்பாவி அகதிகளுக்கு நியாயம் பெற்றுக் கொடுக்க எந்த அரசியல் கட்சிகளும் இதுவரை முன்வராதது ஆச்சரியத்திலும் ஆச்சரியமாகவேயுள்ளது.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**அகதிகள் சட்டத்தின் நிலை:**

மேற்கண்ட மனித உரிமை மீறல்களின் கடுமையான வடிவத்தை எதிர்கொள்ளும் அகதிகளுக்கு சட்டம் என்ன பதில் கூறுகிறது. அகதிகளுக்கு அனைத்து உரிமைகளுமுண்டு என்று சர்வதேச சட்டங்கள் தெளிவாகவே கூறுகின்றன. பாதிக்கப்பட்ட எந்த ஒரு மனிதனுக்கும் பிற நாட்டில் புலம் பெயர்வதற்கும் தஞ்சம் கோருவதற்கும் அந்த அடிப்படையிலான பிற உரிமைகளைப் பெறுவதற்கும் உரிமையுண்டு என்பதை உலகளாவிய மனித உரிமைப் பிரகடனமே ஏற்றுக் கொள்கிறது. ஆனால், அகதிகளின் மனித உரிமைகளைப் பொறுத்தவரை அனைத்து நாடுகளும் மௌனமே சாதிக்கின்றன.

அகதிகள் பற்றிய சட்டங்களை அரசுகள் உருவாக்கிக் கொள்வதற்கான வழிமுறைகளை வகுப்பதற்கு பயன்படுகிற சர்வதேச சட்டக் கருவிகள் 2 உள்ளன.

1) அகதிகள் நிலை தொடர்பான சர்வதேச நகல் உடன்பாடு (1961)

2) அகதிகள் நிலை தொடர்பான விருப்ப ஒப்பந்தம் (1967)

இவை இரண்டுமே இரண்டாம் உலகப் போரை ஒட்டி இடம் பெயர்ந்த அய்ரோப்பிய அகதிகளைக் கணக்கில் கொண்டு உருவாக்கப்பட்டவை. அகதிகள் பற்றிய தெளிவான வரையறைகளோ, அகதிகள் உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்கான கறாரான நெறி முறைகளோ இவற்றில் இல்லை. கடந்த இருபதாண்டுகளில் அய்ரோப்பாவிலிருந்து அல்லது அய்ரோப்பாவிற்குள்ளேயே புலம் பெயர்தல் என்பதைக் காட்டிலும் வெளியிலிருந்து குறிப்பாக ஆசிய ஆப்பிரிக்க நாடுகளிலி – ருந்து அய்ரோப்பாவை நோக்கிப் புலம் பெயர்தல் என்பதுதான் எதார்த்தமாக உள்ளது. மிகச் சமீபமான காலகட்டத்தில் கிழக்கு அய்ரோப்பாவிலிருந்து அகதிகள் வரும் நிலை ஏற்பட்டுள்ளது. இசுலாமியர்களும், கருப்பர்களும் (ஆசியர்களும் கருப்பர்களும்தான்) இன்று அதிக அளவில் அகதிகளாக இடம் பெயர்கிற நிலை உள்ளதால் அகதிகள் தொடர்பான சர்வதேசச் சட்டக் கருவிகளை உரியமுறையில் திருத்துவதற்கான முயற்சிகளை சர்வதேச நிறுவனங்கள் மேற்கொள்வதில்லை.

மேற்குறித்த இரு ஒப்பந்தங்களிலும் கூட எல்லா நாடுகளும் **கையெழுத்திடவில்லை. ஏதேனும் ஒன்றிலோ** அல்லது இரண்டிலுமோ கையெழுத் **–திட்டுள்ள நாடுகளின் எண்ணிக்கை 106** மட்டுமே. இந்தியா உள்பட பல ஆசிய **நாடுகள் இவற்றில் கையெழுத்திடவில்லை.** எனவே, மேற்குறித்த பிரகடனங்கள் அளிக்கும் ஒரு சில உரிமைகளையும் கூட இந்தியாவிற்குள் தஞ்சம் புகுந்துள்ள அகதி ஒருவர் சட்ட பூர்வமாக கோர இயலாது. 1951ம் ஆண்டு உடன்பாடு, அகதியைக் கீழ்கண்டவாறு வரையறுக்கிறது. (பிரிவு 1 ஏ (2) ).

1951ம் ஆண்டு ஜனவரி 1ம் தேதிக்கு முன்னதாக நடைபெற்ற சம்பவங்களின் விளைவாகவும் ஏதேனும் ஒரு மரபினம் அல்லது மதம் அல்லது தேசிய இனம் அல்லது ஒரு சமூகக் குழு, அரசியல் கருத்தின் காரணமாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



துன்புறுத்தப்படுவார் என்பதற்கான வலுவான ஆதாரங்களின் அடிப்படையிலான அச்சத்தின் விளைவாகவும் அல்லது இத்தகைய அச்சத்தின் விளைவாக அந்த அரசின் பாதுகாப்பைப் பெற இயலாதபோதும் சொந்த நாட்டிலிருந்து இடம் பெயர்ந்துள்ள போதும் அவர் அகதியாகக் கருதப்படுவார் என்று கூறுகிறது.

1. ஆனால், 1951ம் ஆண்டுக்கு முந்திய சம்பவங்கள் என ஒரு கால எல்லை விதிக்கப்படுகிறது. எனவே, 1951ம் ஆண்டுக்குப் பிந்திய சம்பவங்களின் விளைவாக பாதிக்கப்பட்ட ஒருவர் இந்த வரை – யறையில் அடங்காமல் போகலாம். எனினும், பிரேசில் இத்தாலி, மடகாஸ்கர், மால்டா, மோனாகோ, பரகுவே, துருக்கி ஆகிய ஏழு நாடுகள் தவிர கையெழுத்திட்ட பிற நாடுகள் எதுவும் இந்தக் கால எல்லையை வற்புறுத்துவதில்லை என்பது ஒரு ஆறுதலான அம்சம்.

2. மேற்கண்ட வரையறை உள்நாட்டுப் போர் மற்றும் பொதுப்படையான வன்முறை ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களை உள்ளடக்கு வதில்லை. இந்த அடிப்படையில் பல அய்ரோப்பிய நாடுகள் ஈழத்– திலிருந்து புலம் பெயர்ந்தவர்களுக்கு 'அகதி' நிலை அளிப்பதில்லை. சர்வதேச ஒப்பந்தத்திலில்லாத இந்த உரிமை வேறு சில பிராந்திய அளவிலான ஒப்பந்தங்களில் சேர்க்கப்பட்டுள்ளது இங்கே குறிப்படத் தக்கது. எடுத்துக்காட்டாக, ஆப்பிரிக்க அகதிகள் பிரச்சினை தொடர் –பான ஆப்பிரிக்க ஒற்றுமை அமைப்பின் (AOU) நகல் உடன்படிக்கை உள்நாட்டுப் போராலும், பொதுப்படையான வன்முறைகளாலும் பாதிக்கப்பட்டவர்களையும் அகதிகளாக ஏற்றுக் கொள்கிறது.

3. மேற்கண்ட வரையறை தனிநபர் அடிப்படையில் அகதியை வரையறுக்கிறது. தனிப்பட்ட முறையில் பாதிக்கப்பட்டவர், வரையறை –யில் குறிப்பிட்ட ஏதேனும் ஒரு காரணத்திற்காக அகதி எனக் கருதப்படத்தக்கவர் என நிறுவ வேண்டும். பாதிக்கப்படத்தக்க ஒரு பிரிவைச் சேர்ந்தவர் என்கிற முறையில் யாரொருவரும் அகதி நிலையைக் கோர முடியாது. இலங்கையில் இன்று தமிழராக உள்ள யாருக்குமே பாதுகாப்பற்ற நிலையுள்ளது. 30 வயதிற்கு உட்பட்ட தமிழ் இளைஞர்களையும், பெண்களையும் புலிகள் எனக் கருதித் துன்புறுத்துவதற்கோ அல்லது ஒரு இயக்கத்தவர் எனக் கருதி இன்னொரு இயக்கத்தவர் துன்புறுத்துவதற்கோ வாய்ப்பிருக்கிறது. எனவே, முப்பது வயதுக்கும் கீழான தமிழராக உள்ளவர் என்பத – னாலேயே இலங்கைக்குச் செல்ல இயலாது என அகதி உரிமை கோருவதன் நியாயத்தை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். ஆனால், பல அய்ரோப்பிய நாடுகள் – அமெரிக்காவும் ஈழத்தமிழர் என்கிற பொதுவான அடிப்படையில் அகதி உரிமை கோருவதை மறுக்கின்றன. அய்க்கிய நாடுகள் அவையின் அகதிகளுக்கான உயர் ஆணையம் (UNHCR) உள்நாட்டுப் போர், பொதுப்படையான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வன்முறை ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர் களையும் அகதிகள் எனக் கருத வேண்டும் என்கிற கருத்தை ஏற்றுக் கொள்கிறது.

4. ''வலுவான ஆதாரங்களினடிப்படையிலான'' துன்புறுத்தப்படுதல் பற்றிய அச்சம் என்பது சரியாக வரையறுக்கப்படவில்லை. எனவே, **'வலுவான ஆதாரங்கள்' என எவற்றைக் கருதலாம் என்பதில் நாட்டுக்கு நாடு வேறுபாடுகள் உள்ளன.ரெஜினா மற்றும் 6 தமிழர்கள் வழக்கில் பிரிட்டிஷ் அரசு துன்புறுத்தப்படுதல் பற்றிய அச்சம் வலுவான ஆதாரங்களின் அடிப்படையில் இல்லை எனச்சொல்லி (1988) அவர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்பியது. சர்வதேச பொதுமன்னிப்பு சபை, அய்க்கிய நாடுகள் அவையின் அகதிகளுக் – கான உயர் ஆணையம் முதலியவற்றின் வேண்டுகோளையும் அரசு புறக்கணித்து அவர்களை திருப்பி அனுப்பியது.**

5. ''துன்புறுத்தப்படுதல்'' (Persecution) என்பதும் சரியாக வரையறுக்கப் –படவில்லை. துன்புறுத்துபவர்களுக்கும், துன்புறுத்தப்படுபவர்– களுக்குமான ஏதோ சில வேறுபாடுகளின் விளைவாக ஒரு அரசு அல்லது ஒரு வலிமையான குழு ஒன்றினால் ஒரு தனிநபர் அல்லது ஒரு குழுவின் மீது கடுமையான தொல்லை (Harm) ஏற்படும் வாய்ப்பு அல்லது அத்தகைய **மிரட்டல் இருப்பது 'துன்புறுத்தப்படுதல்'** எனப் பொதுவாகச் சொல்லப்**படுகிறது. உயிருக்கும், சுதந்திர** இருப்பிற்கு – மான மிரட்டல் தவிர **அடிப்படை மனித கண்ணியத்திற்கு** ஊறு விளைவதென்பதையே 'துன்புறுத்தப்படுதலாகக்' கருதவேண்டிய அவசியத்தை வரையறை உள்ளடக்கவில்லை.

**6. இக்குறைபாடுகள் உடனடியாகக் களையப்பட்டு இன்றைய மாறிவரும் உலக சூழ்நிலைகளுக்கேற்ப அகதிகள் நிலை தொடர்பான சர்வதேச நகல் உடன்பாடு (1961) திருத்தப்பட வேண்டும். இதற்கான முன் முயற்சியாக நடைபெறும் விவாதக் கூட்டங்களில் அரசு சாரா நிறுவ –னங்களின் பிரதிநிதிகள் பங்கேற்கப்பட அனுமதிக்கப்பட வேண்டும்.**

7. இந்திய அரசு அதிகள் நிலை தொடர்பான உடன்பாட்டில் அவசியம் கையெழுத்திட்டு அதை நடைமுறைப்படுத்த வேண்டும்.

அகதிகள் அகதிகளாக நடத்தப்பட வேண்டும். அதன்றி சிறைக் கைதிகளுக்குள்ள உரிமைகள் கூட இவர்களுக்கு மறுப்பது அப்பட்டமான வாழ்வுரிமை பறிப்பாகும். எனவே, இப்படிப்பட்ட நிலைமைகளை உருவாக்கிடுவதற்கு அடிப்படையான வெளிநாட்டவர் சட்டத்தை (Foreigners Act) அகதிகளுக்கு பாவிப்பதை உடனடியாக கைவிட வேண்டும்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# X. சுற்றுச்சூழல் உரிமைகள்

## I. கடற்கரைச் சுற்றுச்சூழல்

### I. 1. கிழக்குக் கடற்கரைச் சாலை

தொழில்வளர்ச்சி என்ற பெயரில் இயற்கைச் சுற்றுச் சூழலையும் விளை நிலங்களையும் அழித்து பிரம்மாண்டமான தொழிற்சாலைகளையும், அதற்கான சாலைகளை அமைப்பதும் இந்தியாவில் காலங்காலமாக நடந்து வருகிறது. தமிழகத்தில் கிழக்குக் கடற்கரைச் சாலை (East Coast Road – ECR) என்ற பெயரில் சென்னை முதல் கன்னியாகுமரி வரை இப்பகுதியிலுள்ள தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்காக சாலை அமைக்க தமிழக அரசு திட்டமிட்டது. இத்திட்டம் மூன்றுப் கட்டங்களாக பிரிக்கப்பட்டு அமுல்படுத்தப்படவுள்ளது. இம்மொத்த திட்டமும் உலக வங்கியின் நிதி உதவியினால் நடைமுறைப்படுத்தப் – படவுள்ளது. இதில் முதல் கட்டப்பணி சென்னை முதல் கடலூர் (160 கி.மி) வரை முடிவடைந்தது. இரண்டாவது கட்டச் சாலையானது கடலூரிலிருந்து தூத்துக்குடி வரை போடப்படுகிறது. முதற்கட்ட சாலை அமைக்கப்படும்போது 5 ஆயிரத்திற்கும் மேலான மரங்கள் வெட்டி வேரோடு சாய்க்கப்பட்டன. இதில் 150 ஆண்டு வயதுடைய மரங்களும் உள்ளடங்கும். (ஆதாரம் 23.08.98–ம் தேதியிட்ட ஜூனியர் விகடன் மற்றும் கடலூரிலிருந்து தூத்துக்குடி வரையிலான நெடுஞ்சாலை போடுவதற்கான தமிழகச் சாலை மேம்பாட்டுத் திட்டம் சாலை முதல் தடத்திற்காக கடலூர் மாவட்ட வளர்ச்சிக்குழு அலுவலகத்தில் 27.02.99–ம் தேதியன்று நடைபெற்ற பொதுவிசாரணை கூட்டத்தின் அறிக்கை). ஆயிரக்கணக்கான மக்களின் வீடுகள் இடித்து தரைமட்டமாக்கப்பட்டன. இத்திட்டத்திற்கு எதிராக எழுந்த கடுமையான எதிர்ப்பின் காரணமாக கிழக்கு கடற்கரை சாலையின் முதல் கட்டப் பணியை செயல்படுத்தும் போது சென்னை உயர்நீதிமன்றம் தமிழக அரசிற்கு கீழ்கண்ட சில நிபந்தனைகளை விதித்தது.

* சாலை 7 மீட்டர் தார்பகுதியையும் 2 மீட்டர் இரு பக்கத் தளமும் கொண்டதாக அமைய வேண்டும்.
* மிகவும் வயதுடைய மரங்கள் எதுவும் வெட்டப்படக்கூடாது.
* சாலையின் கனஅளவு 50 செ.மீ கொண்டதாக இருக்க வேண்டும்.
* சாலை அமைப்பதற்காக மக்கள் யாரையும் அப்புறப்படுத்தக்கூடாது.
* ஏற்கனவே அப்புறப்படுத்தப்பட்ட மக்களுக்கு மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.
* சாலையிலிருந்து கிழக்குப் பக்கமாக கடற்கரை வரை உள்ள பகுதியில் எந்தவித தொழிற்சாலைகளும், சுற்றுலா மையங்களும் வரக்கூடாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அரசும் முதல் கட்டப் பணி மேற்கொண்ட போது சில தவறுகள் நிகழ்ந்ததாக ஒப்புக் கொண்டு இந்த நிபந்தனைகளை அமல்படுத்தப்போவதாகக் கூறியது. ஆனால் இந்நிபந்தனைகள் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. மேலும் முதற்கட்ட சாலை அமைக்கப்பட்டதினால் ஏற்பட்ட விளைவுகளை ஏற்கனவே ஏற்றுக் கொண்டபடி அரசு இதுவரை ஆய்வறிக்கையாக வெளிக்கொணரவு மில்லை. மக்களின் கவனத்தை திசை திருப்புவதற்காக 'கிழக்குக் கடற்கரைச் சாலை இரண்டாம் கட்டம்' என்ற இத்திட்டத்தின் பெயர் "தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் – சாலை தடம் 1" என்று மாற்றப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டத்திற்கு போடப்படும் சாலைக்காகத் தேசிய நெடுஞ்சாலைத் துறையினரால் 3500 கி.மீ ஆய்வு (Survey) செய்யப்பட்டு 1500 கி.மீட்டர் மட்டும் திட்டத்திற்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. இதற்கான பணியில் நியமிக்கப்பட்டுள்ள ஆஸ்திரேலிய நிபுணர்களால் கடலூரிலிருந்து தூத்துக்குடி வரையிலான 375 கி.மீ சாலை அமைப்பதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது. அமைக்கப்படவுள்ள இந்த சாலை – யானது கடலூரிலிருந்து துவங்கி, நாகை, திருவாரூர், தஞ்சை, புதுக்கோட்டை, இராமநாதபுரம், மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களைக் கடந்து செல்கிறது.

இந்த சாலை அமைப்பதற்காக சாலையின் இருமருங்கிலும் மரங்கள் மின்சாரக் கம்பங்கள் ஆகியவற்றை அகற்றும் பணியை நெடுஞ்சாலைத்துறையும் சாலை போடுவதை மத்திய தரைவழிப் போக்குவரத்து அமைச்சகமும் மேற்கொள் –கின்றன. இச்சாலைப்பணி BOOT (Built-Operate-Transfer)என்ற அடிப்படையில் நடைபெறுகிறது. இதன்படி இதுவரை ஆயிரத்திற்கு மேலான மரங்கள் வெட்டப்பட்டுவிட்டன. அரசே வெளியிட்டுள்ள சாலை மேம்பாட்டுத் திட்டம் கட்டம் 1–ஏ திட்ட அறிக்கையின்படி பகுதி வாழ் மக்கள் 28,200 பேர் வெளியேற்றப்பட – வுள்ளனர். ஏற்கனவே முதற்கட்டச் சாலை அமைப்பதினால் வெளியேற்றப்பட்ட மக்களுக்கே போதுமான நஷ்டஈடோ நிவாரண உதவியோ வழங்கிடாத நிலையில் இப்போது இரண்டாம் கட்டத்தில் மேலும் மக்கள் வெளியேற்றப்படவுள்ளனர். இச்சாலை 30 ஆயிரம் மக்களின் உறைவிட உரிமையை பறிப்பதோடு, நாகை, திருவாரூர் மற்றும் தஞ்சை மாவட்டங்களில் காவிரி படுகை வழியே சாலை செல்கிறது. இப்பகுதியானது உலகின் பல பகுதிகளிலிருந்து வரும் பறவைகளுக்கு சரணாலயமாகவும் முகத்துவாரமாகவும் உள்ளது. அலையாத்திக் காடுகள், உப்பளங்கள் மற்றும் கழிமுகங்கள் ஆகியவற்றைக் கொண்டு சுற்றுச்சூழல் முக்கியத்துவம் வாய்ந்ததும் மென்மையானதுமான பகுதியாகும். இன்னும் குறிப்பாகச் சொல்லப்போனால், 9 இடங்களில் சாலை பாதுகாக்கப்பட்ட காடுகள், புகழ்பெற்ற பிச்சாவரத்தின் அலையாத்திக்காடுகள், முத்துப்பேட்டை கொடியக்காடு பறவைகள் சரணாலயம் ஆகியவற்றின் குறுக்காகவே செல்கிறது. அரசே இச்சாலை அமைப்பதினால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் தாக்க மதிப்பீட்டு அறிக்கையில் இதை ஒப்புக்கொள்கிறது. இந்த அறிக்கையில் இத்திட்டம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கடலோரப்பகுதி முறைப்படுத்துதல் சட்டத்திற்குட்பட்ட சாலைகளை மேம்படுத்து – வதையும் உள்ளடக்கும் என்றும், கடலோரத்திலிருந்து 80 கி.மீ வரை உள்ள பகுதிகளையும், உள்ளடக்கும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஆதாரம்– சுற்றுச் சூழல் பாதிப்பு குறித்த அறிக்கை, சுற்றுச்சூழல் அனுமதிக்கான மனு, டிசம்பர் 1998, தமிழக சாலை மேம்பாட்டு திட்டம் சாலை–தடம் 1 (கடலூரிலிருந்து தூத்துக்குடி வரை) பக்கம் 1–17 அட்டவணை 1.6)

கடலோரப்பகுதி முறைப்படுத்துதல் சட்டத்திற்குட்பட்ட பகுதியானது கடல் உயர்மட்டத்திலிருந்து (High Tide Line) 200 மீட்டராகும். அப்படியிருக்கையில் இச்சட்டத்தை மீறி இத்திட்டத்தை அமல்படுத்துவதினால் என்ன நியாயம் உள்ளது? பாதுகாக்கப்பட்ட மென்மையான கடற்கரையோர பகுதியின் சுற்றுச் சூழலை நாசப்படுத்தும் வண்ணமாக, ஏராளமான உயிரினங்கள் அழியும் நிலையில் ஏன் இத்திட்டம் அமல்படுத்தப்படுகிறது? பெருந்தொழில் வர்த்தக போக்குவரத்திற் –காகச் செல்வந்தர்களின் நலன்களுக்காக மக்கள் வெளியேற்றப்பட வேண்டுமா?

இத்திட்டத்தினால் பயனடையப் போவது இப்பகுதியில் அமையவிருக்கும் மற்றும் ஏற்கனவே அமைந்திருக்கும் பெருந்தொழிற்சாலைகள்தாம். இத்தொழிற் சாலைகளின் பயன்பாட்டிற்காக ஏராளமான நிலத்தடி நீரை எடுத்துக்கொள்ளப் போவதால் நிலத்தடி நீர் வற்றி இப்பகுதியிலுள்ள நீர்நிலைகளில் கடல்நீர் கலக்க நேரிடும். சாலை போடப்படுவதால் இப்பகுதிகளில் உள்ள நிலங்களின் விலை ஏறிவிடும். இதன்விளைவாக இங்கு சொற்ப நிலங்களை உடமையாக கொண்டிருக் –கும் விவசாயிகள் தங்கள் நிலங்களை விற்றுவிட்டு சென்னைக்கோ அல்லது மற்ற நகரங்களுக்கோ வாழ்வதற்கு வழி தேடிச்செல்வர். இச்சாலையின் வளைவுகள் அதிகமாக்கப்படுவதினால் மிக அதிக வேகமாக செல்லும் வாகனங் –களினால் ஏராளமான விபத்துக்கள் நேரிடும். ஏற்கனவே முதற்கட்ட சாலை – யினால் 1998–ம் ஆண்டில் மட்டும் சராசரியாக கிராமம் ஒன்றுக்கு 5 பேர் வரை சாலை விபத்தில் உயிரிழந்துள்ளனர். முன்போலன்றி நெடுஞ்சாலையாக இருப்பதினால் சாலையில் நகரப்பேருந்துகள் நிற்காமல் சென்றுவிடும். இதனால் இப்பகுதியில் இப்பேருந்து நிறுத்தங்களை நம்பியிருக்கும் மக்கள் எண்ணற்ற துன்பங்களுக்கு ஆளாவர். இப்பகுதி மக்களுக்கு இனிமேல் அமைதியான சூழ்நிலை என்பது கனவாகி சத்தமும், இரைச்சலும் நிரந்தரமாகிவிடும். சாலையை கடக்கும் சிறுகுழந்தைகளுக்கு எந்தவித பாதுகாப்பும் இல்லை. இப்படிப்பட்ட விளைவுகளுடன் வாகனங்கள் விடும் புகையினாலும், சுற்றுச்சூழல் மாசடைந்து பகுதி வாழ் மக்களின் ஆரோக்கியத்திற்கு கேடு விளைவிக்கும். ஆங்காங்கே சாலை உயர்த்தப்படுவதால் அதிகமான மழை பெய்தால் கூட சாலைக்கு அருகிலிருக்கும் கிராமங்களில் நீர் தேங்கி மேலும் மேலும் சுகாதாரக் கேட்டையே உருவாக்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**பரிந்துரைகள்**

1. எண்ணற்ற சுற்றுச்சூழல் பிரச்சனைகளை உருவாக்குவதோடு, பகுதி வாழ் மக்களின் உறைவிட உரிமைகளை பறிப்பதால் இரண்டாம் கட்ட சாலைப்பணி உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

2. முதற்கட்ட சாலை அமைக்கப்படும்போது அரசு ஏற்றுக்கொண்ட நிபந்தனைகளை உடனடியாக அமல்படுத்தப்பட வேண்டும்.

3. மத்திய அரசிடமிருந்து இதுபோன்ற திட்டங்களுக்கு அனுமதி பெறுவதற்கு முன் நிபந்தனையாக சமர்ப்பிக்கப்படும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை (Environment Impact Assessment)-ன்படி மக்களிடமிருந்து இத்திட்டத்தின் பாதிப்புகள் குறித்து கருத்துக்கள் கேட்பதற்குப் பொது விசாரணையை அரசு நடத்த வேண்டும். ஆனால் இப்படி நடத்தப்படும் பொதுவிசாரணையில் சம்பந்தப்பட்ட திட்டத்தினால் பாதிக்கப்படும் பகுதி மக்களின் பிரதிநிதிகள், பிரச்சனையைக் கையிலெடுத்து போராடும் அரசு சாரா நிறுவனங்களின் பிரதிநிதிகள் அழைக்கப்படாமல் சடங்கு முறையாகவே திட்டத்தினால் பயனடையும் நபர்களை வைத்து நடத்தப்படுகின்றன. இம்மோசமான நடைமுறை கைவிடப்பட்டு அரசு நடத்தும் பொது விசாரணையில் சம்பந்தப்பட்ட அனைவரும் அழைக்கப்பட்டு அவர்களின் கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு திட்டத்திற்கு அனுமதியளிக்கும் சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

4. மேலும் அரசு உலகவங்கியிடமிருந்து பெற்ற நிதி உதவியினால் சாலை அமைப்பதற்கு (கிலோ மீட்டருக்கு 1.5 கோடி ரூபாய் செலவழிக்கப்படுகிறது. ஆனால் அதே சமயத்தில் பாண்டிச்சேரி– திண்டிவனம் – திருவண்ணாமலை வழியாக சாலை அமைக்கப்பட்டதற்கு (எந்தவித மரங்களும் வெட்டப்படாமல், வீடுகள் இடிக்கப்படாமல்) கிலோமீட்டருக்கு 15 லட்சமே செலவானது.

எனவே பொருளாதார ரீதியாகவும், சுற்றுச்சூழல் ரீதியாகவும் விரய மாக்கும் இத்திட்டத்தை மறுபரிசீலனை செய்து உடனடியாக நிறுத்திட வேண்டும்.

(ஆதாரம்: கடலோர செயல்பாட்டு கூட்டு நடவடிக்கைக்குழுவின் (Coastal Action Network) (What is done so far in East Coast Road – II) என்ற ஆய்வறிக்கை, கிழக்கு கடற்கரை சாலை குறித்த துண்டறிக்கைகள், இவ்வமைப்பு தந்துதவிய தமிழக அரசின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை, சுற்றுச்சூழல் அனுமதிக்கான மனு 1998, நெடுஞ் சாலைத்துறை நடத்திய பொதுவிசாரணை கூட்டத்தின் அறிக்கை (27.02.99) ஆகியன.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## I.2. எண்ணூரையும், பழவேற்காட்டையும், காட்டுப்பள்ளியையும் அழித்துச் சாம்பலாக்கும் பிரம்மாண்டமான தொழில் திட்டங்கள்

இந்தியாவின் வளர்ச்சியில் இயற்கையும், இயற்கை சார்ந்த பொருளாதாரமும் பெரும்பங்கு வகிக்கின்றது. தமிழகத்தில் சென்னைக்கு அருகிலிருக்கும் எண்ணூரிலிருந்து காட்டுப்பள்ளி, பழவேற்காடு வரை உள்ள பகுதிகள் இயற்கையிலேயே அரிய அற்புத வளங்களைப் பெற்றுள்ளன. ஆனால் வளர்ச்சி என்ற பெயரில் இப்பகுதியில் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் தொழிற்திட்டங்கள் இப்பகுதியையே நாசப்படுத்த உள்ளன.

எண்ணூரில் துறைமுகப் பொறுப்புக் கழகமானது எண்ணூர் துறைமு — கத்தை நவீனமயமாக்கி துரிதமாக செயல்பட தனியார் நிறுவனமயமாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. இதே பகுதியில் இரசாயனத் தொழிற்பூங்காவும் இத்திட்டங்களுக்கான மின்சக்தி தேவையைப் பூர்த்தி செய்வதற்காக தமிழ்நாடு மின்சாரக் கழகத்தினால் வடசென்னை அனல்மின் நிலையமும் டிரை சக்தி மற்றும் வீடியோகான் போன்ற தனியார் மின் உற்பத்தி நிறுவனங்களும் அமைக்கப்பட விருக்கின்றன.கடலோர செயல்பாட்டு நடவடிக்கைக்குழு (Coastal Action Network) இத்திட்டத்தினால் ஏற்படும் பாதிப்புகளை அறிய, மும்பை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி ஹெச்.சுரேஷ், தமிழ்நாடு மீன்வளத்துறையின் முன்னாள் இணை இயக்குநர் (ஆய்வுத்துறை) திருமிகு. ஏ. சீனிவாசன், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் முனைவர் திருமிகு. வி. வசந்தி தேவி மற்றும் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் சுற்றுச்சூழல் துறையான ஸ்ரீபரமக்கல்யாணி சூழல் இயல் மையத்தின் சுற்றுச்சூழல் விஞ்ஞானியான திருமிகு. அருணாச்சலம் ஆகியோர் கொண்ட நிபுணர் குழு ஒன்றை அமைத்தது. இக்குழுவினர் இப்பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று ஆய்வு செய்தும், பொது விசாரணை ஒன்றை நடத்தியும் தமது ஆய்வு அறிக்கையை வெளியிட்டனர். இவ்வறிக்கையானது இப்பிரமாண்ட தொழில் திட்டங்களினால் சுற்றுச்சூழலில் ஏற்படும் பேரழிவையும் அதனால் மக்களின் முக்கியமான வாழ்வா தார உரிமை எவ்வாறு பாதிக்கப்படுகிறது என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

### பழவேற்காடு ஏரியின் முக்கியத்துவம்

பழவேற்காடு ஏரியானது வளமிக்க சுற்றுச்சூழல் நிறைந்ததும், பொருளாதார மற்றும் சமூக பாதுகாப்புக்குரிய ஏரியாகும். அலையாத்திக் காடுகள் இதன் பாதுகாப்பு அரணாக விளங்குகின்றன. பழவேற்காடு ஏரி, நீர், நிலம் மற்றும் மக்கள் என ஒன்றுக்கொன்று இணைந்தவையாக இருக்கின்றன. இயற்கை இடர்களிலிருந்து பாதுகாப்பு, கழிவுகளை சுத்திகரித்தல், உணவு உற்பத்தி மற்றும் நீர்வழிப் போக்குவரத்து ஆகிய மென்மையான பணிகள் இதன் முக்கிய அம்சங்களாகும்.இச்செயல்பாடுகளை மனதில்கொண்டு இயற்கை பராமரிப்புக்கான


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சர்வதேச சங்கமும் இந்திய அரசும் ராம்சார் பிரகடனத்தில் பாதுகாக்கப்பட வேண்டிய முக்கிய பகுதியாக இப்பகுதியை அறிவித்துள்ளன. பழவேற்காடு ஏரியானது பறவைகளின் சரணாலயமாக விளங்குவதுடன் மீன்கள், சிப்பியினங்கள், நண்டுகள், நத்தைகள் ஆகியவற்றின் இருப்பிடமாகவும் உள்ளது. இந்த ஏரியின் நீரைக் ஆதாரமாக கொண்டு 30 விவசாய கிராமங்கள் நெல் சாகுபடி உள்ளிட்ட விவசாயத்தையும் 15 மீனவ கிராமங்களில் மீனவர்கள் மீன்பிடித் தொழிலையும் செய்து வருகின்றனர். ஏறத்தாழ 1,00,000 மக்கள் தங்களது வாழ்வாதாரத்திற்காக இந்த ஏரியை சார்ந்துள்ளனர். ஏரியைச் சுற்றியுள்ள மணல் பரப்பு இயற்கையாகவே மருத்துவ மூலிகை செடிகள் வளர்வதற்குரிய இடமாக உள்ளது. வாய்ப்புண்களை குணப்படுத்தும் நித்திய கல்யாணி இப்பகுதியில் நிறைந்து காணப்படுகிறது. இதன் முக்கியத்துவம் கருதியே இயற்கை பராமரிப்புக்கான உலக நிதியமானது சமீபத்தில் பழவேற்காடு ஏரியை பாதுகாக்கப்பட வேண்டிய பகுதியாக அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. தமிழகத்தின் கடலோரப் பகுதி மேம்பாட்டுத் திட்டமும் (1996) இந்த ஏரியை கடலோரப்பகுதி முறைப்பகுதி ஆணையின் கீழ் முதல்பகுதியாக (CRZ – I) வகைப்படுத்தியுள்ளது. உலகின் பல பகுதிகளிலிருந்து வரும் பறவைகளின் சரணாலயமாகவும் இது திகழ்கிறது.

*காட்டுப்பள்ளித்தீவு*

கிழக்கில் வங்காள விரிகுடாவையும், மேற்கே பக்கிங்காம் கால்வாயினாலும் வடக்கே பழவேற்காடு ஏரியினாலும் தெற்கே எண்ணூர் கழிமுகத்தினாலும் சூழப்பட்டதே காட்டுப்பள்ளித்தீவாகும். பழவேற்காடு ஏரியிலிருந்து பரவிவரும் நீர்ப்பரப்பையும், நிலப்பகுதியை பிரிக்கும் குறுநீளத் தீவாகும். வடக்கிலிருந்து தெற்குவரை 14 கி.மீ நீளமும், கிழக்கிலிருந்து மேற்கு வரை 1.25 கி.மீ சராசரி அகலமும் கொண்டதாகும். இதன் பரப்பளவு 18 ச.கி.மீ ஆகும். இக்காட்டுப்பள்ளித் தீவானது பலவகை மரங்களையும், பயிர் வகைகளையும் விளைவிக்கும் வளமிக்க மணற்பரப்புடன், (Sand Dunes) கடலோரப்பகுதி மணல் மேடுகளையும், மணற்பரப்புகளையும் கொண்டுள்ளது. உயர் அலைப் (High Tide Line) பகுதிக்கும், மணற்மேடுகளுக்கிடையேயான சமமான நிலப்பரப்பினைக் கொண்டுள்ளது.இப்பகுதியில் சவுக்கு, முந்திரிமரங்கள் மற்றும் உவர் தன்மையைக் கொண்ட கொடிகளும், பயிர்களும் பெருமளவில் நிறைந்து காணப்படுகின்றன. மேற்கு கரையின் ஓரத்தில் மணல் மேடுகளிடையே இயற்கையான நன்னீர் ஊற்றுக்களும், குளங்களும் காணப்படுகின்றன.

மணற்பரப்பின்கீழ் களிமண் அல்லது கழிமுக மணற்பகுதி இயற்கையான ஊற்றிற்கு வழி செய்கின்றன. இத்தொன்மை வாய்ந்த கடற்கரை பகுதி கடல் ஆமைகளின் உற்பத்தித்தளமாகவும் இருக்கிறது. இப்பகுதியின் உவர் நீரே உப்புக்கான உற்பத்தி தளமாக இருக்கிறது. இத்தீவிலுள்ள 6 குடியிருப்பு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பகுதிகளிலும், மீனவர்கள், தலித்கள், பழங்குடியினர், முதலியார் மற்றும் செட்டியார் ஆகியோர் வாழ்ந்து வருகின்றனர். இங்குள்ள மொத்த மக்கள் தொகை 2250 ஆகும். ஏழை மக்களின் முக்கியத் தேவையான குடிநீரும், உணவு மற்றும் விற்பனைக்கு பயன்படும் விறகுகள், வீடு கட்டுவதற்கு பனை ஓலைகளும் இங்கு இயற்கையாகவே கிடைக்கின்றன.

### எண்ணூர் கழிமுகம்

எண்ணூர் கழிமுகமானது பழமையானதும், உயிரினத் தொகுதிகள் நிறைந்த நீர்நிலையாகும். வடக்கிலுள்ள 5 கி.மீ தொலைவிலுள்ள கத்திவாக்கம் வரையிலான எல்லையும், பக்கிங்காம் கால்வாயின் மத்தியப் பகுதியுமாகும். கொட்டரையாறு வங்காளவிரிகுடாவில் கலப்பதற்கு முன்பு இதன் வழியாகவே செல்கிறது. இக்கழிமுகத்தின் வடக்கு கரையோரம் அதிக அளவில் உப்பளம் காணப்படுகின்றது. 0.5 மீ முதல் அதிகப்படியாக 3.0 மீ வரையிலான ஆழத்திலும் 600 மீ நீளத்திலும் இந்நீர்வழி அமைந்துள்ளது. இக்கழிமுகத்தளமானது நெகிழும் தன்மையிலானது.

### தொழிற்திட்டங்களும், கடும் பாதிப்புகளும்

எண்ணூர் கழிமுகம், பழவேற்காடு ஏரி மற்றும் காட்டுப்பள்ளித்தீவு மற்றும் கடலோர உயிர்ச்சூழல் ஆகிய ஒன்றையொன்று சாந்திருப்பதால் இப்பகுதியானது சுற்றுச்சூழல் முக்கியத்துவம் வாய்ந்த மென்மையான பகுதியாகும். இப்பகுதிச் சூழலில் ஏற்படுத்தப்படும் சிறுமாற்றங்களும் மீட்க முடியாத அளவிற்குப் பாதிப்புகளை ஏற்படுத்தும். இப்பகுதிகள் முழுவதும் கடலோர முறைப்படுத்துதல் ஆணையின்கீழ் பாதுகாக்கப்பட வேண்டியவை என்று வரையறுக்கப்பட்டுள்ளன. ஆனால் இப்பகுதியில் ஏற்படும் சுற்றுச்சூழல் மாசைப்பற்றி கிஞ்சித்தும், கவலைப் – படாமல் பிரம்மாண்டமான தொழிற்திட்டங்கள் துவங்கப்பட்டுள்ளன.

சென்னை துறைமுகப் பொறுப்புக் கழகமானது எண்ணூர் துறைமுகத்தை நவீனமயமாக்கி துரிதமாகச் செயல்பட தனியார் நிறுவனமயமாக்கும் முயற்சியில் தரை போக்குவரத்து அமைச்சகம் ஈடுபடுகின்றது. நிலக்கரியை கையாளுவ தற்கும், துறைமுகத்தை ஆழப்படுத்துவதற்கும், கப்பல் வந்து போகும் கால்வாய்க்கும் வரையறுக்கப்பட்ட திட்டத் தொகையானது 927.1 கோடியாக அறிவிக்கப்பட்டுள்ளது. இக்கட்டுமான பணிகளுக்குத் தேவைப்படும் நிதியின் ஒரு பகுதியை ஆசிய வளர்ச்சி வங்கி அளிக்க முன்வந்துள்ளது.

காட்டுப்பள்ளி ஊராட்சியிலுள்ள காலஞ்சி புழுதிவாக்கம், வயலூர் ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய 7151.95 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ. 700 கோடி மதிப்பீட்டில் மின்சக்தி, ஏரி இரசாயன உற்பத்தி, எண்ணெய் போன்றவற்றை உள்ளடக்கிய 12 மிகப்பெரிய தனியார் இரசாயன தொழிற்சாலைகளை நிறுவிட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மின்உற்பத்தி திட்டமானது, எரிவாயு மூலமாக 1775 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளையும், வருடத்திற்கு 2.5 மில்லியன் டன் அளவிலான திரவமயமாக்கப்பட்ட எரிவாயுவை கையாளக் கூடிய முனையத்தையும் கொண்டதாகும். இத்திட்டத்தினுடைய மொத்த மதிப்பு 6000 கோடியாகும். இம்மின் உற்பத்திக்கு மட்டும் 4,300 கோடி ஒதுக்கப்பட் – டுள்ளது. இத்திட்டமானது 2003–க்குள் பூர்த்தியடைய வகை செய்யப்பட்டுள்ளது.

இதற்காக தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகமானது, கடலோர முறைப்படுத்துதல் ஆணையின் கீழான பாதுகாப்பான பகுதிக்குட்பட்ட 3500 ஏக்கர் நிலப்பரப்பை கையகப்படுத்தும் பணியை மேற்கொண்டிருக்கிறது.

தொழில் நிறுவனங்களின் மின்சக்தி தேவையைப் பூர்த்தி செய்ய தமிழ்நாடு மின்சார கழகத்தால் 630–யை மின்சக்தியை உற்பத்தி செய்யும் வடசென்னை அனல்மின்நிலையம் நிறுவப்பட்டது. 3 அலகுகளைக் கொண்ட இத்திட்டத்தில் தமிழ்நாடு மின்சாரக் கழகமானது முதல் அலகின் உரிமையையும் 2, 3–வது அலகுகளின் உரிமைகளை முறையே டிரை சக்தி, வீடியோகான் போன்ற நிறுவனங்களுக்கு வழங்குவதற்காக திட்டமிட்டு செயல்படும் இவ்வேளையில் இத்தனியார் நிறுவனங்களும் தனித்தனியே 530 மெகாவாட் மின் உற்பத்தியை தொடங்க திட்டமிட்டுள்ளதோடு அதற்கான துவக்கநிலைப் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

பழவேற்காடு ஏரி பக்கிங்காம் கால்வாயுடன் இணைக்கப்பட்டுள்ள பகுதியில் துறைமுகத்தின் இரண்டாம் கட்டப் பணியானது அமைய இருக்கிறது. விண்வெளிக்கோள்கள் மூலம் எடுக்கப்பட்ட படங்களிலிருந்து இப்பகுதியின் கடலோர பூகோளம், மணற்பாங்கான கடலோரப்பகுதி எனத் தெரிகின்றது. இப்பகுதியில் கடல் அரிப்பிற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாகவே உள்ளன. எண்ணூர் துறைமுகத்தின் கட்டுமான பணியில் கடல் அரிப்பு மிகுதியாக ஏற்படுவதால் கடலுக்கும், பழவேற்காடு ஏரிக்கும் இடையேயான பகுதியை நாம் இழப்பதுடன் இதனால் இடம் பெயரும் உயிரினங்களையும் இழக்கிறோம். கடலில் மீன்பிடிக்கும் பழவேற்காடு ஏரிக்கரையில் அமைந்திருக்கும் மீனவக் கிராமங்களாகிய கோரைக்குப்பம், ஆண்டிக்குப்பம், மாதாக்குப்பம், சாத்தான்குப்பம், கூனங்குப்பம் ஆகிய கிராமங்கள் இதுவரை கடல் அரிப்பினால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன. துறைமுக கட்டுமானப்பணிகளால் எண்ணூர் கழிமுகத்தின் நீரோட்டமானது பாதிக்கப்படுவதால் மின்சார உற்பத்தியில் குளிர வைப்பதற்கு எடுக்கப்படும் நன்னீரானது பழவேற்காடு ஏரியுடன் தொடர்பு கொண்ட பக்கிங்காம் கால்வாய் மூலமே எடுக்கும் நிலை உருவாகியுள்ளது. இதனால் பழவேற்காடு ஏரியிலுள்ள மீன் உள்ளிட்ட பல உயிரினங்கள் அழியும். நீர்பரப்பு குறைந்து, அதை ஜீவாதாரமாக நம்பியிருக்கும் மீனவர்களைப் பெரிதும் பாதிக்கும். அதிர்ச்சிக்குரிய இன்னொரு விஷயம் என்னவெனில், இந்த அனல் மின்

www.tamilarangam.net



நிலையத்திலிருந்து அப்படியே கொதிக்கும் நீரானது பக்கிங்காம் கால்வாய்க் -குள்ளும், பழவேற்காடு ஏரிக்குள்ளும் திறந்துவிடப்படுகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக இந்த அனல் மின் நிலையத்திலிருந்து நாள்தோறும் 3000 டன் சாம்பல் செப்பாக்கம் கிராமத்தில் கொட்டப்படுகிறது. இப்போது இக்கிராமமே சாம்பலால் மூடப்பட்டுள்ளது. இந்த சாம்பலில் ஸின்க், பேரியம், தாமிரம், ஆர்செனிக் வனடியம், தாளியம் மற்றும் மாங்கனீஸ் போன்ற நச்சுப் பொருட்கள் நிறைந்துள் -ளன என்பது குறிப்பிடத்தக்கது. இது எண்ணூர் கழிமுகத்தையும், பழவேற்காடு ஏரியையும், கடுமையாகவே பாதிக்கும். இது அப்பட்டமாக கடலோரப்பகுதி முறைப்படுத்துதல் ஆணையை மீறும் நடவடிக்கையாகும்.

இரசாயனப்பூங்காவிற்காக பக்கிங்காம் கால்வாய்க்கு மேற்கில் 1170 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தியுள்ளதே கடலோரப்பகுதி முறைப்படுத்துதல் ஆணை, வனவிலங்கு பாதுகாப்பு சட்டம், சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம், ஆகிவற்றை மீறும் நடவடிக்கையாகும். சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தின் நிபந்தனைகளை மீறியே எண்ணூர் துறைமுகம் கட்டப்படுகிறது. அரசின் சுற்றுச் சூழல் கண்காணிப்பு குழுவினர் இந்த நிபந்தனைகள் அன்ல்படுத்தப் படுகின்றனவா ? என்பதைக் கண்காணிக்கவில்லை.

**குறிப்பான பரிந்துரைகள்**

கொதிக்கும்நீர் அப்படியே பக்கிங்காம் கால்வாயில் திறந்துவிடப்படுவது மிகப்பெரிய குற்ற நடவடிக்கையாகும். சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டங்களையும், தர நிர்ணயங்களையும் மீறும் செயலாகும். இது ஆயிரக்கணக்கான கடலோர உயிரினங்களை அழிக்கும் செயலாகும். இது உடனடியாக தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

எல்லாவகையிலும், இத்தகைய தொழிற்திட்டங்கள், கடலோர முறைப்படுத் துதல் ஆணையின் பகுதி I-ன் கீழ் பாதுகாக்கப்பட வேண்டிய மென்மையான பகுதிகளில் கட்டப்படுகின்றன. எனவே, தொழிற்திட்டங்களுக்கு தடைவிதிக்கப் பட்ட இப்பகுதியில் இத்தகைய தொழில் திட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளது உடனே தடுத்து நிறுத்தப்பட வேண்டும். இதுவே எண்ணூரிலிருந்து பழவேற்காடு ஏரி வரையிலுள்ள கடலோரப்பகுதிகளுக்கு ஏற்படும் பேரழிவைத் தடுக்கும்.

## I.3. செய்யூர் அனல் மின் திட்டம்

தேசிய அனல் மின் கழகம் (National Thermal Power Corporation) அனல் மின் நிலையம் ஒன்றை தமிழ்நாட்டில் காஞ்சிபுரம் மாவட்டம் செய்யூரில் துவக்க உள்ளது. இம்மின் நிலையம் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தால் அபாயகரமான தொழிற்சாலைகளில் ஒன்று (Red Category) என வகைப்படுத்தப் பட்டது. இம்மின் நிலையம் நிலக்கரியை ஆதாரமாகக் கொண்டு 2,500 மெகா


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் திறன் கொண்டது. தென் சென்னை அனல் மின் நிலையம் என்றழைக்கப்படவுள்ள இம்மின்நிலையம் செய்யூர் கழிவேலி ஏரிபகுதியிலுள்ள 3000 ஏக்கர் நிலப்பரப்பில் நிறுவிட திட்டமிடப்பட்டுள்ளது. 4000 கோடி ரூபாயைத் திட்ட மதிப்பாகக் கொண்ட இந்த அனல் மின்நிலையம் செய்யூர் பகுதியிலுள்ள 24 கிராமங்களின் மீனவர்கள், தலித் விவசாயிகள் மற்றும் 12,000 உப்பளத் தொழிலாளர்களை நேரடியாகப் பாதிப்பதுடன் அவர்களது வாழ்வுரிமை – யையும் மற்றும் வாழ்வாதார உரிமைகளையும் பறிக்கிறது.

செய்யூர் கழிவேலியானது மழைக்காலங்களில் சுற்றுப்பகுதியிலுள்ள 60 கிராமங்களிலிருந்து வெள்ளம் வடிந்து வங்கக் கடலில் கலக்க உதவுகிறது. செய்யூர் கழிவேலி உவர்நீர் ஏரியில் நூற்றுக்கணக்கான மீன் இனங்களும், 40 ரக இறால் மீன்களும் 13 ரக நண்டு இனங்களும், இதர மீன் இனங்களும் உள்ளன. இந்த ஏரி ஆண்டொன்றுக்கு சுமார் 10 ஆயிரம் டன் மீன் இனங்கள் வளர்வதற்கு ஏதுவான இடமாகவும், நிலையான தொழிலுக்கும், பாதுகாப்பான வாழ்க்கைக்கும் இயற்கையாக அமைந்த இடமாகவும் உள்ளது. இப்போது இக்கழிமுகத்தில் அனல்மின்நிலையம் அமைக்கப்பட்டால் ஆண்டாண்டு காலமாக மீன்பிடி தொழில் செய்துவந்த மீனவர்களும், உள்ளூர்வாசிகளும் பிழைப்பதற்கு வழியின்றி நடுத்தெருவில் நிற்க வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

செய்யூர் கழிவேலி ஏரியுடன் இணைக்கப்பட்டுள்ள பக்கிங்காம் கால்வாயில் ஒவ்வொரு ஆண்டும் பருவ காலங்களில் மழைநீரும், கடல் நீரும் கலப்பதால் இந்தக் கால்வாயைச் சுற்றியுள்ள உப்பங்கழிக்கு மீன் மற்றும் இறால் குஞ்சுகளும் கடல் அலைத் தாக்கத்தினால் கொண்டு வரப்படுகின்றன. இவ்வாறு வரும் இறால் குஞ்சுகளும், மீன் குஞ்சுகளும் கழிவேலியில் தங்கி, இலட்சக்கணக்கில் இனப்பெருக்கம் செய்து வளர்ந்து வருகின்றன. இத்தகைய மீன் வளங்களையே ஆதாரமாகக் கொண்டு, இப்பகுதியில் வாழும் சுமார் 20 ஆயிரம் மீனவக் குடும்பங்கள் வாழ்க்கையை நடத்தி வருகின்றன. இப்பகுதி முழுவதும் அனல் மின் திட்டத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டதால் மீன்பிடித் தொழிலையே நம்பி வாழும் பாரம்பரிய மீனவர்களின் (ஏற்கனவே இவர்கள் கல்வியிலும், பொருளாதாரத்திலும் பின் தங்கியுள்ளவர்கள்) எதிர்காலம் கேள்விக்குறியாகவே உள்ளது.

செய்யூர் அனல்மின் நிலையம் செயல்படத் துவங்கினால், இப்பகுதி மக்களின் உப்புத் தேவையை பெருமளவில் பூர்த்தி செய்யும் 12000 ஆதி திராவிட மக்களின் உப்பு உற்பத்தி செய்வதற்கான அரசு அனுமதி பெற்ற 330 ஏக்கர் குத்தகை உப்பள நிலங்களை இழப்பதுடன், அவர்களை அப்பகுதியை விட்டு வெளியேற்றப்படும் அபாயமும் உள்ளது. மேலும் உப்பு உற்பத்தியின் மூல ஆதாரங்கள் ஒட்டு மொத்தமாக அழிக்கப்படுவதால் உப்பு உற்பத்திக்கான செலவு அதிகரிக்கப்பட்டு உப்புத் தட்டுப்பாடு ஏற்படும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாலாற்று படுகையிலிருந்து பல்லாயிரக்கணக்கான கனமீட்டர் அளவு தண்ணீர் ஆழ்குழாய் மோட்டார்களால் உறிஞ்சப்பட்டு தினமும் கல்பாக்கம், மறைமலைநகர், தாம்பரம், திருக்கழுகுன்றம், பல்லாவரம், வண்டலூர், உயிரியல் பூங்கா போன்ற பகுதிகளுக்கு தண்ணீர் எடுத்துச் செல்லப்படுகின்றது. மறுபுறம், அதிகமாகக் கொள்ளையடிக்கப்படும் ஆற்றுமணல் குவாரிகளால் நீர் இழப்பு ஏற்படுகிறது. வாயலூர், ஆயப்பாக்கம் பகுதிகளில் பல இடங்களில் அதிவேகமாக –வும், மிகையான வகையில் நிலத்தடி நீர் உறிஞ்சப்பட்டதால் நிலத்தடி நீரில் உவர்நீர் கலந்து விட்டது. மேலும் இந்த அனல் மின் திட்டத்திற்காக பாலாற்றுப் படுகையிலிருந்து மணிக்கு 375 செ.மீ அளவு நன்னீர் கொண்டு செல்லப்பட்டால் இப்பகுதி வாழ் மக்களுக்கு குடிப்பதற்கும், விவசாயம் செய்வதற்கும் பெரும் ஆபத்து ஏற்படும்.

இத்திட்டத்தின் மூலம் பயன்படுத்தப்படும் 30 ஆயிரம் டன் எடையுள்ள நிலக்கரித்தூளின் நச்சுச் சாம்பல் காற்றில் கலப்பதால் எடைக்கண்டு பஞ்சாயத்தின் கீழ் உள்ள இரண்டு லட்சம் தென்னை மரங்கள், 75 ஆயிரம் மா மரங்கள், 65 ஆயிரம் பலா மரங்கள், ஏராளமான முந்திரி மரங்கள், பனை மரங்கள் ஆகியவை மடியும் அபாயம் ஏற்படும். இப்பகுதிக்கேயுரிய பல்லுயிர்ப் பெருக்கம் அழிந்து சுற்றுச்சூழலுக்கு பெரும் கேடு விளையும்.

செய்யூர் கழிவேலி உவர் நீர் ஏரி பகுதியானது, கடலோரப்பகுதி முறைப்படுத்துதல் ஆணையின் கீழ் (CRZ Notification 90114 E dated 19.02.91) சுற்றுச்சூழல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக உள்ளது. இப்பகுதிகளில் வளர்ச்சித் திட்டங்கள் அதாவது கனரகத் தொழில்கள், இரசாயனத் தொழிற்–சாலைகள், இறால் தொழிற்சாலைகள் போன்ற சூழல் கேடுகளை உருவாக்கும் தொழிற்திட்டங்கள் தொடங்க தடை செய்யப்பட்ட பகுதியாகவும் அறிவிக்கப் பட்டுள்ளது. ஆனால் இந்த ஆணையையும் மீறி இம்மின் திட்டம் நிறைவேற்றப்பட உள்ளது.

இதனால்

1. மிக சக்தி வாய்ந்த பெரிய உறிஞ்சு குழாய்கள் மூலம் கடல்நீரை குளிர்ச்சி செய்விப்பு முறைக்கும் மற்றும் சாம்பல் கையாளுதல் முறைக்கும், மணிக்கு 8600 செ.மீ அளவு கடல் நீர் கொண்டு வர இருப்பதால் நீர் உறிஞ்சப்படும் வேகத்தின் தாக்கத்தால் மீன் மற்றும் இறால் குஞ்சுகள் அழிந்துபோகும் அபாயம் உள்ளது.

2. ஆலையை குளிர்விக்க கடல்நீரானது பயன்படுத்தப்படப் போவதால் நீரானது வெப்பமடையும். பின்னர் இந்த நீரே பெரும் குழாய் களன்கள் வழியாக மீண்டும் கடலில் விடப்படும்போது இந்நீரின் வெம்மை தாங்காமல் பெருமளவு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மீன்கள் இறக்க நேரிடும். தவிர சாம்பல் கழிவு நீரை ஒரு குழாய் வழி (One Way Lane) மூலம் மீண்டும் கடலில் கலக்க வைப்பதால் ஏற்படும் நச்சுத் தன்மையாலும், தாக்கத்தினாலும் கடலில் மீன் வளம் மற்றும் பல்லுயிர் பெருக்கமும் ஏற்படாது.

மழைக்காலத்தில், வெள்ளம் வடிந்து கடலில் கலக்க உதவும் கழிவேலி, மற்றும் பங்கிங்காம் கால்வாயும் மின் திட்ட செயல்பாட்டிற்கு ஆக்கிரமிக்கப்–பட்டுள்ளதால், பெரும் மழை நீர் வெளியேறுவது தடைபடும்.

## I.4. இறால் தொழிற்சாலைகள்

குறுகிய காலத்தில் மிக அதிக இலாபம் ஈட்டும் நோக்கத்துடன் துவக்கப்பட்டதே இறால் தொழிற்சாலைகள். இந்த இறால் தொழிற்சாலை களினால் ஒரு காலத்தில் தமிழகத்தின் நெற்களஞ்சியமாக இருந்த தஞ்சையின் வளமிக்க விவசாய நிலங்கள் இப்போது பாலைவனமாகிக் கொண்டிருக்கின்றன. கடந்த 20 ஆண்டுகளாக இந்தியாவில் அமல்படுத்தப்பட்டுவரும் தாராளமய பொருளாதாரக் கொள்கைகளின் ஒரு பகுதியாக, தமிழகம் ஆந்திரா, ஒரிசா உள்ளிட்ட 9 மாநிலங்களில் கடற்கரையோரங்களிலும் கடற்கரையோர கிராமங்களி–லும் அனுமதியளிக்கப்பட்ட இறால் தொழிற்சாலைகளினால் கடற்கரைச் சூழல் மட்டுமின்றி விவசாய நிலங்களும் நாசமாகி வருகின்றன. இத்தொழிற்சாலை – களைத் தடை செய்யக்கோரி தொடர்ந்த வழக்கினையடுத்து நீதிபதி திரு. குல்தீப்சிங் மற்றும் திரு. சாஹிர் அகமது ஆகியோரைக் கொண்ட உச்சநீதிமன்ற அமர்வு கடந்த 1996–ம் ஆண்டில் டிசம்பர் 11–ம் தேதியன்று அளித்த தீர்ப்பில் "கடலோரப்பகுதி முறைப்படுத்துதல் ஆணை (CRZ Notification)யில் குறிப்பிடப் – பட்டுள்ள உயர் அலை மட்டத்திலிருந்து (High Tide Line) தாழ்வு அலை (Low Tide Line) மட்டத்திற்கு இடையிலான 500 மீட்டர் பகுதியில் அமைந்திருக்கும் அனைத்து இறால் தொழிற்சாலைகள்/இறால் பண்ணைகளையும் இப்பகுதியிலி – ருந்து மார்ச் 31, 1997–ம் தேதிக்குள் நீக்கவோ அல்லது இடித்துத் தள்ளவோ செய்ய வேண்டும்" என்று உத்தரவிட்டது. ஆனால் இந்த உத்தரவிற்குப் பின்னரும் இறால் தொழிற்சாலை**களும் பண்ணைகளும் தொடர்ந்து** செயல்படுகின்றன. அது மட்டுமின்றி இறால் **தொழிற்சாலைகள் வேலை** வாய்ப்புக்கும் நாட்டின் வளர்ச்சிக்கும் வழி **வகுக்கின்றன என்றும், உச்சநீதி**மன்றம் தனது தீர்ப்பில் குறிப்பிட்டது எங்களைப் போன்ற பாரம்பரிய இறால் மீன்பிடிப்பு தொழிலில் ஈடுபடுபவர்களை அல்ல, இறால் தொழிற்சாலைகளைத் தான் என்றும் தாங்கள் இறால் பண்ணைகளையே வைத்திருப்பதாகவும் தொடர்ச்சியான பொய் பிரச்சாரத்தில் இறால் தொழிலதிபர்கள் ஈடுபட்டும் வருகின்றனர். இப்பொய் பிரச்சாரத்தின் மூலம் அவர்கள் எத்தகைய சுற்றுச்சூழல் நாசத்திலும் மீனவர்களின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


வாழ்வாதார உரிமை பறிப்பிலும் ஈடுபட்டு வருகின்றனர் என்பதை இங்கு சற்று விபரமாகக் காண வேண்டியது அவசியமாகும்.

## நீலப்புரட்சியின் வன்முறை

பாரம்பரிய இறால் மீன்பிடிப்புத் தொழில் (Traditional Shrimp Farming) என்பது, பல நூறு ஆண்டுகளாகவே கடைபிடிக்கப்படும் தொன்மையான முறையாகும். இந்த முறையில் கடலோரத்திலிருக்கும் முகத்துவாரங்களில் வளர்ந்திருக்கும் அலையாத்திக் காட்டு மரங்களின் வேர்களின் அடியில் கடலிலிருந்து வரும் சினையுள்ள இறால்கள் முட்டையிட்டுச் செல்லும். அலையாத்திக் காட்டு மரங்களின் வேர்களின் பாதுகாப்பிலேயே இம்முட்டையின் குஞ்சு பொறிக்கும். அவை வேர்களின் அடியில் கிடைக்கும் உணவைக் கொண்டு குறிப்பிட்ட காலம் வரை வளர்ந்து மீண்டும் கடலுக்குள் சென்று விடுகின்றன. கடலுக்குள் வாழும் இந்த இறால்களையும் அலையாத்திக் காடுகளில் பரவிக் கிடக்கும் முப்த்துவாரங்களிலுள்ள வளர்ந்த இறால்களையும் மட்டுமே மற்ற உயிரினங்களுக்குச் சேதம் இல்லாமல் மீனவர்கள் பிடிப்பர். இப்படி மீன்பிடிப்பது குறிப்பிட்ட கால இடைவெளிவிட்டே மேற்கொள்ளப்படும்.

இத்தகைய பாரம்பரிய இயற்கை சார்ந்த இறால் மீன்பிடிப்பு தமிழகத்தில் இல்லை எனினும் கடலுக்குள் இதற்கென பயன்படுத்தப்படும் சிறப்பு வலைகளை வைத்து இறால்களை மட்டும் பிடித்து வந்தனர். இப்போது தாராளவாதப் பொருளாதாரக் கொள்கைகள் அமல்படுத்தப்பின்னர், நான்கு நவீனமான செயற்கை முறைகளில் Intensive, Semi-intensive, Modified Extensive & Extensive Shrimp Farming Systems இறால் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டு பிடிக்கப்பட்டு வருகின்றன.

முதலாவதாக, கடலுக்கருகில் உள்ள விவசாய நிலங்கள் தெரிவு செய்யப்பட்டு அந்நிலங்களில் பெரிய பாத்தி/குளங்கள் அமைக்கப்பட்டு அதில் கடலிலிருந்து இராட்சத குழாய்கள் மூலம் கடல்நீர் உறிஞ்சப்பட்டு நிரப்பப்படுகிறது. முகத்துவாரங்களிலிருந்து பிடிக்கப்படும் அல்லது நேரடியாக விலை கொடுத்து இறால் குஞ்சுகள் வாங்கப்பட்டும் கடல்நீர் நிரப்பப்பட்ட குளங்களில்/பாத்திகளில் விடப்படுகின்றன. முகத்துவாரங்களிலிருந்து இறால் குஞ்சுகள் வலையின் மூலம் அரித்து எடுக்கப்படும் போது அதனுடன் சேர்த்தே மற்ற உயிரினங்களும் அள்ளி எடுத்து வரப்பட்டு அவை கழிவுகளாக வீணாகக் கொட்டப்படுகின்றன. எடுத்துவரும் இறால்களில் ஒன்று மற்றொன்றின் முட்டைகளைப் பொறிப்பதற்காகவும், ஒன்று மற்றொன்றைப் பிடித்து விழுங்காமலிருப்பதற்காகவும் பெண் இறால்களின் கண்கள் குரூரமான முறையில் குத்திக் குருடாக்கப்படுகின்றன. பின்னர் அதிகபட்சமான ஊட்டத்தையும், கொழுப்பையும் அளிக்கும் செயற்கை இரசாய உணவுகள் குளத்தில் கொட்டப்படுகின்றன. நாள் ஒன்றுக்கு 30



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விழுக்காடு தண்ணீர் மாற்றப்பட்டுக் குளத்திலுள்ள தண்ணீர் தரம் பராமரிக்கப் – படுகிறது. இதற்காக நன்னீரும், கடல் நீரும் மாறி மாறி பகுதியிலிருந்தே எடுக்கப்படுகின்றது. இப்படிச் செயல்படும் இறால் தொழிற்சாலைகளில் உற்பத்திச் செய்யப்படும் இறால் மீன்கள் டின்களில் அடைக்கப்பட்டு ஜப்பான், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு அந்நியச் செலாவணிக்காக ஏற்றுமதி செய்யப்படுகின்றன. விவசாயத்தில் அதிக உற்பத்தியை பெருக்குவதற் காகக் கொண்டு வரப்பட்ட பசுமைப்புரட்சியைப் போன்றே மீன் உற்பத்தியைக் குறிப்பாக அதிக லாபம் ஈட்டுவதற்காகக் குறிப்பாக, இறால்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்காக இந்நீலப்புரட்சி (Blue Revolution) அறிமுகப்படுத்தப்பட்டது.

உலகிலேயே அதிகமான மீன் வளத்தில் இந்தியா 7–வது இடத்தைப் பெற்றுள்ளதாலும், மிக நீளமான மற்றும் வளமான கடற்கரையைக் கொண்டதாலும் மீன்பிடிப்புத் தொழிலில் 90 லட்சம் பேர் பணிபுரிவதாலும் நீலப்புரட்சியைத் துரிதமாக நடைமுறைப்படுத்த இந்தியா தேர்ந்தெடுக்கப்பட்டதாக உலக வங்கி தனது அறிக்கையில் கூறியுள்ளது. (ஆதாரம் : Towards Sustainable Aqua-culture – Chenmeenkettu by Vandana Siva & Gurpreet Karir)

இறால் தொழிற்சாலைகள் தஞ்சை, சீர்காழி, காரைக்கால் உள்ளிட்ட பல பகுதிகளில் துவக்கப்பட்ட சில ஆண்டுகளுக்குள்ளாகவே அப்பகுதிகளில் இருந்த விளைநிலங்கள் எதற்கும் பயனற்ற முறையில் உவர் நிலங்களாகி விட்டன.

இறால் தொழிற்சாலைகளுக்காக ஏராளமான சதுப்பு நிலக்காடுகள் வெட்டப்பட்டதால், கடல் கொந்தளிப்பு, அலைகள், புயல் ஆகிய எந்த ஒரு இயற்கை சீற்றத்திற்கும் பாதுகாப்பு அரண்கள் இல்லாமல் போனது. (ஒரிசாவில் சமீபத்தில் ஏற்பட்ட புயல் நாசத்திற்கு அங்கு இறால் தொழிற்சாலைகள் அமைப்பதற்காக லட்சக்கணக்கான சதுப்பு நிலக்காடுகள் வெட்டப்பட்டதுதான் காரணம் என்று சுற்றுச்சூழல் விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்).மேலும் அலையாத்திக் காடுகளோடு தொடர்புடைய உயிரினச்சூழலும் பல்லுயிர்ப் பெருக்கமும் (Bio-Diversity) அழிக்கப்படுகின்றன. விவசாய நிலங்களில் பாத்தி, குளங்கள் கட்டி கடல்நீரைக் கொண்டு நிரப்பி இறால் குஞ்சுகள் வளர்க்கப்படுவதால் இந்த உவர் நீரானது நிலங்களின் வழியாக இறங்கி விடுவதால் நிலத்தடி நீர் முழுவதும் உவர் நீராகி விடுகிறது. இதனால் கடலோர கிராமங்களில் குடிநீருக்குப் பஞ்சமாகி, அப்பகுதியிலுள்ள மீனவப் பெண்கள் குடிநீருக்காகப் பல மைல்கள் நடந்து செல்ல வேண்டியுள்ளது.

இரசாயன உணவுகளைப் பாத்திகளில் இடுவதால் அப்பாத்திகள் உள்ள நிலங்களை 5 ஆண்டுகள் மட்டுமே இந்த இறால் தொழிற்சாலைகளை நடத்த முடியும். ஏனெனில் 5 ஆண்டுகள் தொடர்ந்து நிலத்தில் இரசாயனமும் உவர் நீரும் பயன்படுத்தப்படுவதால் நிலம் எதற்கும் பயனற்றதாகி விடும். அதன்பின்னர்,


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தொழிற்சாலை துவங்க இன்னொரு இடம் பார்க்கத் துவங்கி விடுகின்றனர். இந்த நிலமும் எதற்கும் பயனற்ற உவர் நிலமாகி விடுவதோடு அந்த நிலம் தனது இழந்த சக்தியை மீண்டும் பெறுவதற்கு பல நூறு ஆண்டுகள் ஆகும். இந்த பாத்திகளிலிருந்து வெளியிடப்படும் கழிவு நீரானது அருகிலுள்ள நிலங்களிலேயே விடப்படுவதால் இச்சூழல் மாசுக்கேட்டையும் ஏற்படுத்துகிறது. இதனால் கொள்ளையடித்து விட்டு (Rape and Run Industry) ஓடிவிடும் தொழில் என்று இறால் தொழிற்சாலைகள் அழைக்கப்படுகின்றன. இறால் தொழிற்சாலைகள் வேலை வாய்ப்பு அளிப்பவையாக உள்ளன என்று கூறப்படுகிறது. ஆனால் எந்தவொரு தொழிற்திட்டத்திற்கும் முன் அனுமதி பெறும்போது மேற்கொள்ளப் படும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆய்வினைச் செய்த சுற்றுச்சூழல் விஞ்ஞானி வந்தனா சிவா கூற்றின்படி (Environment Impact Assessment - EIA) "40 ஹெக்டேர் நிலங்களில் நெல் பயிரிடும்போது 50 தொழிலாளர்கள் தேவைப் படுகின்றனர். ஆனால் அதே அளவு இறால் தொழிற்சாலையுள்ள நிலங்களில் 5 தொழிலாளர்களே தேவைப்படுகின்றனர். மேலும் ஒவ்வொரு தொழிலாளருக்கும் 2 லட்சம் ரூபாய் வரை முதலீடும் தேவைப்படுகிறது. பெரும்பாலான இறால் தொழிற்சாலைகளில் இறால் குஞ்சுகளுக்கு உணவளிக்க குழந்தைத் தொழிலாளர் –களே அமர்த்தப்படுகின்றனர்". இத்துடன் இறால் தொழிற்சாலைகள் அமைக்கப் –பட்ட கடற்கரையோரங்கள் படிப்படியாக வேலியிடப்பட்டு அதை யாரும் கடந்து செல்ல முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது. மீனவர்கள் தங்கள் மீன் பிடிப்பதை மேற்கொள்ள இத்தொழிற்சாலைகளைச் சுற்றியே செல்ல வேண்டியுள்ளது. பல இடங்களில் இவை படிப்படியாகத் தனியார் வசமாகும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

அந்நியச் செலவாணியையும், குறுகிய காலத்தில் அதிக இலாபம் ஈட்டவும் துவக்கப்பட்டிருக்கும் இந்தக் கொடிய தன்மையுடைய இறால் தொழிற்சாலை களைத் தடை செய்து உச்சநீதிமன்றம் 1996–ம் ஆண்டு தீர்ப்பு வழங்கியது. ஆனால், உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை கிஞ்சித்தும் மதிக்காமல் இறால் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. மேலே கூறப்பெற்ற விஷயங்கள் தமிழகத்தில் நடத்தப்படும் இந்த இறால் தொழிற்காலைகள் பாரம்பரிய ரீதியாக செய்யப்படவில்லை என்பதை தெளிவுபடுத்துகின்றன.

**பரிந்துரைகள்**

1. உச்சநீதிமன்ற தீர்ப்பை அவமதிக்கும் இறால் தொழிற்சாலைகள் மூடப்பட்டு அதன் தொழிலதிபர்கள் மீது சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கப் பெற வேண்டும்.
2. இறால் தொழிற்சாலைகள் துவக்கப்பட்ட பகுதிகளில் ஏற்பட்ட சுற்றுச்சூழல் நாசமானது பொருளாதார ரீதியாகக் கணக்கிடப்பட்டு பாதிக்கப்பட்டவர் களுக்கு நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



3. உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி இறால் தொழிற்சாலைகள் மூடப்படும் முன்னர் அத்தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ஏற்படும் நஷ்டத்தை ஈடுகட்டும் வகையில் நஷ்டஈடு வழங்கப் பெற வேண்டும்.

(ஆதாரம்– கடலோர செயல்பாட்டுக் கூட்டு நடவடிக்கைக் குழுவின் (CAN) உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பிற்குப் பின்னர் இறால் தொழிற்சாலைகளின் நிலை குறித்த ஆய்வு மற்றும் இதர ஆவணங்கள், இறால் தொழிற்சாலைக்கு எதிரான பிரச்சார இயக்கத்தின் ஆவணங்கள் (Campaign Against Shrimp Industry - CASI )

## I.5. சேது சமுத்திரத் திட்டம்

இந்தியாவின் கிழக்கு கடற்கரைப்பகுதியை மேற்கு கடற்கரைப் பகுதியை மேற்கு கடற்கரைப் பகுதியுடன் இணைக்கும் திட்டம்தான் சேது சமுத்திரத் திட்டம். அதாவது வங்காள விரிகுடாவின் பாக் நீரிணைப்பையும், இந்தியப் பெருங்கடலின் மன்னார் வளைகுடாவையும் இணைக்கும் திட்டமாகும். தமிழ்நாடு அரசின் கீழ் இருக்கும் பல்லவன் ஆலோசனை சேவை, இத்திட்டம் பற்றி ஆய்வு செய்து 1996 மார்ச்சில் அறிக்கை சமர்ப்பித்தது. இத்திட்டத்தின்படி மேற்படி குறிப்பிடப்படும் கடல்பகுதியானது 30 அடி, 31 அடி, 35 அடி என ஆழப்படுத்தப்பவுள்ளது. இதற்காக முறையே 685 கோடி, 760 கோடி, 1200 கோடி ரூபாய் செலவு செய்யப்படவுள்ளது. செலவழித்த பணத்தை 17 ஆண்டுகளில் எடுத்துவிடவும் திட்டமிடப்பட்டுள்ளது. அதன்பின்பு (அதாவது 17 ஆண்டுகளுக்குப் பின்னர்) இத்திட்டத்தின் மூலம் முதலாண்டில் 47 கோடி ரூபாயும் அதற்குப்பின் வரும் ஆண்டுகளில் 100–200 கோடியும் ஆதாயம் கிடைக்கும் என்கிறது. இத்திட்டத்தின் மூலம் அந்நியச் செலாவணி (1996 ஆண்டின் மதிப்பீட்டின் படி) 35 கோடி கிடைக்கும் என்பதுடன் 40 கோடி ரூபாய் மதிப்பிற்கு எரிபொருள் இறக்குமதியைக் குறைக்க முடியும் என்றும் கூறப்படுகிறது.

திட்டப்படி, 19 கி.மீ நீளமுள்ள இராமேஸ்வரம் – தனுஷ்கோடி சாலையை இராமேஸ்வரம் நகரிலிருந்து எட்டாவது கிலோ மீட்டரில் கடக்கும் பாக் நீரிணைப்பும் மன்னார் வளைகுடாவும் இணைக்கப்பட்டு கடலின் இருபுறமும் ஆழப்படுத்தப்படும். இந்தக் கால்வாய் 100 கடல் மைல் நீளமும் 200 மீட்டர் அகலமும் உடையதாக இருக்கும். இந்திய கிழக்கு கடற்கரையிலிருந்து ராமேஸ்வரம், மேற்கு கடற்கரை தாண்டியுள்ள தென்னகத்துத் துறைமுகங்களுக்கு வரும் கப்பல்கள், இப்போது இலங்கையைச் சுற்றி வருகின்றன. இதனால் 259 – 434 கடல் மைல்கள் தூரம் அதிகமாகப் பயணம் செய்ய வேண்டியதுடன் எரிபொருள் செலவும் அதிகமாகிறது. இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால் சென்னை –யிலிருந்து தூத்துக்குடிக்குச் செல்லும் கப்பலில் இனி 434 கடல்மைல்கள் குறைவாகப் பயணம் செய்ய முடியும். இதன்மூலம் அவர்கள் பிராயண நேரத்தில் கிட்டத்தட்ட 31 மணி நேரம் சேமிக்கவும் முடியும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மேலும் கிழக்குக் கடற்கரை, மேற்குக் கடற்கரை மற்றும் மேற்குக் கடற்கரையில் உள்ள அனைத்துத் துறைமுகங்களுடன் குளச்சல், முட்டம், தூத்துக்குடி, இராமேஸ்வரம், நாகை, காரைக்கால், கல்லூர், பாண்டிச்சேரி, சென்னை துறைமுகங்கள் மேம்பாடடையும். சேது கால்வாய் திறக்கப்பட்டால் 11 பெரிய துறைமுகங்கள் 163 சிறிய துறைமுகங்கள் உள்ள நமது நாட்டின் 5700 கி.மீ கடற்கரை தூரம் நீர்வழியாக இணைக்கப்படும். கால்வாய் அமைப்புப் பணியில் 5 ஆண்டுகளுக்கு 5 ஆயிரம் பேர் வேலைவாய்ப்பு பெறுவர்.

இத்திட்டத்தின் பலன்கள் இவ்வாறு பட்டியலிடப்பட்டாலும் இத்திட்டத்தால் சுற்றுச்சூழல் கேடானது பெரும் நாசத்திற்குள்ளாகும் என்று சுற்றுச்சூழல் செயல்பாட்டாளர்களும், மனித உரிமை அமைப்புகளும் எச்சரிக்கை செய்துள்ளனர்.

மன்னார் வளைகுடாப் பகுதியானது நான்குவகை சூழல் அமைப்புகளால் பிரிக்கப்பட்டுள்ளன. அவை தீவுச்சூழல், அலையாத்திக் காடுகளின் சூழல், கடற்புல் சூழல் மற்றும் பவளப்பாறை சூழல் அமைப்பு என்பனவாகும். 21 தீவுகளால் அமையப் பெற்ற மன்னர் வளைகுடாவானது, யுனெஸ்கோ அமைப்பினுடைய மேப் திட்டத்தின் (மனிதனும் உயிர்வளி மண்டலமும் – Man and Biosphere) கீழ் இயற்கை வளங்களை வளங்குன்றாமல் பராமரிப்பதற்காக அங்கீகரிக்கப் – பட்டுள்ளது. மன்னார் வளைகுடா தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவிலும் முதன்மையான பாதுகாக்கப்பட்ட கடற்கரை உயிர்மண்டலம் (First Marine Biosphere Reserve – GOMMBRE) என்றே அழைக்கப்படுகிறது. இந்த உயிர்மண்டலமானது 10,500 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் உள்ளது. இங்கு அமைந்திருக்கும் 21 தீவுகளிலும் (623.12 ஹெக்டேர்) தொடர்ச்சியாகப் பவளப்பாறைகள் நிறைந்துள்ளன.

பவளப்பாறைகள் என்றால் பொதுவாகப் பாறைகள் என்றே பலரும் புரிந்து கொள்கின்றனர். எனவே, இங்கே பவளப்பாறைகள் குறித்து அறிந்து கொள்வது அவசியம். பவளப்பாறைகள் (Coral Reefs) என்பது வெறும் பாறைகள் அல்ல. சுற்றுச்சூழல் விஞ்ஞானிகளின் ஆய்வு முடிவுகளின்படி இவை உயிருள்ளவை. ஆனால் இவற்றைத் தாவர வகைகளிலோ, விலங்குகள் வகைகளிலோ சேர்க்க முடியாது. ஏனெனில் இவற்றால் என்றுமே நகர முடியாது. இதனால் இவற்றை அறிவியலாளர்கள் தாவர வகைகளுக்கும் விலங்கு வகைகளுக்கும் இடைவகை – யான சூபைட்ஸ் (Zoophytes) என்று அழைக்கின்றார்கள். தீவுக் கூட்டங்களை உருவாக்குவதில் பெரும்பங்கு வகிக்கும் இந்தப் பவளப்பாறையின் இளஞ்செடிகள் போன்ற அமைப்புடன் இருக்கும் பவளப்பாறை லார்வாக்கள் (Coral Larvaes) ஏதாவது ஒரு நிலையான இடம் கிடைத்தால் அவற்றில் அப்படியே அப்பிக் கொண்டு வெகு வேகமாக இனவிருத்தி செய்து கொள்ளத் துவங்கிவிடுகின்றன. அப்படியே அந்தப் பிரதேசத்தில், ஒரு புதிய நாட்டில் குடியேறுவது மாதிரி தங்கி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


காலப்போக்கில் வெகுவேகமாக வளருகின்றன. இவையே பிற்காலத்தில் தீவாகின்றன. அப்படித் தோன்றிய தீவுகள்தான் மன்னார்வளைகுடாவில் தூத்துக் –குடியிலிருந்து இராமேஸ்வரம் வரையிலும் கடலோரப் பகுதிகளில் அமைந்துள்ள 21–க்கும் மேலான தீவுக்கூட்டங்கள், இந்த தீவுக் கூட்டங்களுக்குள் தூத்துக்குடி நகரத்தை இயற்கையின் சீற்றம் கட்டுக்கடங்காமல் போகும்போது காத்துக் கொண்டிருப்பவை வான்தீவு, காஸ்வார் தீவு, கரைஜல்லி தீவு, விலாங்குத் தீவு போன்ற தீவுக்கூட்டங்கள். இவையே புயல் சீறி வரும்போது அழிவைத் தடுக்கும் அரண்களாகச் செயல்பட்டு வருகின்றன.

பவளப்பாறைகளால் உருவான இந்த அதிசயத்தீவுகள் தூத்துக்குடி, இராமநாதபுரம், இராமேஸ்வரம் போன்ற நகரங்களை அழிவிலிருந்து காப்பாற்று – கின்றன. சுற்றுச்சூழலைக் காக்கும் அரண்களாகச் செயல்படும் பவளப்பாறை ஏற்கனவே டன் கணக்கில் கடத்தல்காரர்களால் திருட்டுத்தனமாக வெட்டி எடுத்துச் செல்லப்பட்டு வருவதால் இவை வெகு வேகமாக குறைந்து வருகின்றது. இந்த நிலையில் இப்போது துவங்கப்படும் சேது சமுத்திரத்திட்டத்தினால் மிச்சமாக உள்ள இப்பவளப்பாறைகளுக்கும் பேரழிவு ஏற்படும். ஏனெனில் இப்பிரம்மாண்ட மான திட்டத்திற்காகக் கடலில் கால்வாய் தோண்டப்படுவதற்காகப் பயன்படுத்தப் படும் இரசாயன ஆழ்குழாய் மோட்டார்கள் தோண்டுவதினால் ஏற்படும் எண்ணெய்க் கசிவுகள், மண்சகதி இவற்றினால் பவளப்பாறைகள் அழியும்.

அதுமட்டுமின்றி, சேது சமுத்திரத்திட்டம் செயல்படத் துவங்கிய பின்னர் கப்பல்களின் போக்குவரத்தினால் எண்ணெய் கசிவும், அதிர்வும் இப்பகுதியினைச் சார்ந்திருக்கும் தாவர உயிரினங்களுக்கு (3600 இனங்கள்) அழிவையே ஏற்படுத்தும். கப்பல் போக்குவரத்தினால் கடற்கரைச் சூழலில் கரிஅமில வாயுவானது இரண்டு மடங்கு கூடும். இப்படி இரண்டு மடங்கு கூடுவதால் தட்ப வெட்ப சூழலில் வெப்பமானது 2.5 மடங்கு கூடி விடும்.

இதனால் சுற்றுச்சூழல் ரீதியாக ஈடு செய்ய முடியாத இழப்பு ஏற்படும். இப்பகுதியின் சிறப்பு அம்சமே ஆண்டு முழுவதும் மீன் கிடைப்பதுதான். கடல்பசு, (Dugong dugon) ஆமைகள், பலவிதமான நண்டுகள், இறால்கள் இங்கு அதிகமாக உள்ளன. மன்னார் வளைகுடாவில் புயல் மற்றும் தட்ப வெட்ப நிலை மாறும்போது மீனவர்கள் பாக் வளைகுடாவிற்கும், பாக் வளைகுடாவில் இதுபோன்று தட்ப வெட்ப நிலைமாறும்போது மன்னார் வளைகுடாவிற்கும் மாறி மாறிச் சென்று மீன்பிடித்து வருகின்றனர். இந்த மீன் வளத்திற்குக் காரணமாக இருப்பது இப்பகுதியின் பல்லுயிர்ப் பெருக்கமாகும் (Bio–diversity). இது கால்வாய் தோண்டப்படுவதினாலும், துறைமுகங்கள் இணைக்கப்படுவதினாலும் கப்பல்கள் போக்குவரத்தினாலும் இது அழியும் என்பது நிச்சயம். மொத்தம் இப்பகுதியில் 40,000 மீனவர்கள் மீன்பிடித் தொழிலை நம்பியே வாழ்ந்து வருகின்றனர். ஆண்டுக்கு 1000 கோடி ரூபாய் வருவாய் ஈட்டும் மீன்பிடித் தொழில் இங்கு


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நடைபெறுகிறது.. இவ்வளவு வருவாய் ஈட்டும் தொழிலானது சேது சமுத்திரத் திட்டத்தின் மூலம் ஆண்டுதோறும் கிடைக்கும் வெறும் 13.8 கோடிகளுக்காகப் பலி கொடுக்கப் போகிறது. ஆயிரக்கணக்கான வாழ்வாதாரங்களை அழித்து சுற்றுச்சூழலை நாசம் செய்யும் இத்திட்டம் தேவைதானா?

**பரிந்துரைகள்**

இத்திட்டத்தினால் தமிழகத்தில் தொழில் வளர்ச்சி ஏற்படும் என்று தொடர்ச்சியாகப் பத்திரிக்கைகளினாலும் அரசியல் கட்சிகளினாலும் பிரச்சாரம் செய்யப்படுகிறது. இப்பிரச்சாரத்திற்கு அரசும் பலியாகிவிடக் கூடாது. முறையான சுற்றுச்சூழல் ஆய்வின் மூலம் இத்திட்டம் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும்.

### I. 6. கடலூர் - நெய்வேலி நிலக்கரி நிறுவனம் (என்.எல்.சி.)

கடலூர் மாவட்டம் விருத்தாச்சலம் வட்டத்தில் உள்ள நெய்வேலி நிலக்கரி நிறுவனம் லிமிடெட், 1956-ல் உருவாக்கப்பட்டு இரண்டு திறந்தவெளி சுரங்கத்தில் முதல் சுரங்கம் 16.69 சதுரங்களில் கி.மீ. அளவு கொண்டதாகவும், வருடத்திற்கு 10.5 மில்லியன் டன் நிலக்கரி வெட்டி எடுக்கப்படும் திறன் கொண்டதாகவும் இரண்டாவது சுரங்கம் 26 சதுர கி.மீ. அளவிலும் அமைந்து செயல்பட்டு வருகின்றன. இரண்டு சுரங்கங்களிலிருந்தும் நாள் ஒன்றுக்கு 4,50,000 டன் தண்ணீர் நிலத்தில் இருந்து வெளியேற்றப்படுகின்றது.

இரண்டு சுரங்கங்களில் இருந்து எடுக்கப்படும் நிலக்கரியைப் பயன்படுத்தி 600 மெகாவாட் திறன் கொண்ட முதல் மின் நிலையமும், 1470 மெகாவாட் திறன் கொண்ட 2வது மின் நிலையமும் இயங்கி வருகின்றன. 1966ல் இருந்து 1,29,200டன் யூரியா உற்பத்தி செய்யும் திறன் கொண்ட தொழிற்சாலையும் இங்கு இயங்கி வருகின்றது. மேலும் பல இரசாயன உப பொருட்கள் உற்பத்தி செய்கின்ற பி.என்.சி. பினாண்ட்டும் உள்ளடக்கிய நிறுவனமும், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் நிறுவனங்களாகும்.

ஆனால், சுரங்கத்தில் இருந்தும், மின் நிலையத்தில் இருந்து வெளியேற்றப்படும் அபாயகரமான எரி சாம்பலை பாதுகாப்போடு என்.எல்.சி. நிறுவனம் சேமித்து வைக்க தவறியதால் சுற்று வட்டாரங்களில் உள்ள விவசாய நிலங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றன. பலமுறை சாம்பல் டேங்க் உடைந்து பாதிப்பு ஏற்படுத்திய பின்பு, கடந்த 03.11.93 அன்று சாம்பல் டேங்க் மழையின் காரணமாகவும், பாதுகாப்பு இன்மை காரணமாகவும் உடைந்து, ஆகாண்டார் கொல்லை, கொத்தங்குப்பம், அகிலாண்ட தங்கபுரம், ஒடை தாண்டவன்குப்பம் ஆகிய கிராமங்களில் உள்ள சுமார் 400 ஏக்கர் விவசாய் நிலத்தில் அறுவடைக்குத் தயாராக இருந்த கரும்பு, நெல் சாகுபடி நிலத்தில் 3அடி வரை சாம்பல் படிந்து மகசூல் இழப்பு ஏற்பட்டது. அது மட்டுமின்றி, வளமான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


விவசாய நிலம் மீண்டும் விவசாயத்திற்குப் பயன்படுத்த முடியாத நிலையும் ஏற்பட்டது.

என்.எல்.சி. நிறுவனம் வழக்கம் போல் பாதிப்பை முழுமையாக மறைத்து விவசாய நிலத்தில் உள்ள சாம்பலை அகற்ற மட்டும் சதுர அடிக்கு ரூ.10 முதல் ரூ.15 வரை மட்டுமே அளிக்க முன் வந்தது. பாதிக்கப்பட்ட விவசாயிகள் நெய்வேலி நுகர்வோர் பாதுகாப்பு பேரவைத் தலைவர் தங்கம் மற்றும் செயலாளர் கோவிந்தன் ஆகியோர்களிடம் புகார் செய்ததின் அடிப்படையில், பாதிக்கப்பட்ட விவசாயிகள் நுகர்வோர் குழுக்களின் கூட்டமைப்பு, பெட்காட் சுற்றுச்சூழல் இயக்குநர் எம்.நிஜாமுதீன் அவர்கள் மூலம் அணுகி, ஒரு நிபுணர் குழுவை நியமித்து சட்டப்படி நடவடிக்கை எடுக்கக் கோரியதில்,

1. மக்கள் கண்காணிப்பகம்–தமிழ்நாடு, மதுரை
2. தமிழ்நாடு சுற்றுச்சூழல் கழகம், திண்டுக்கல்
3. கடலோர செயல்பாட்டுக் கூட்டு நடவடிக்கைக்குழு (CAN) மற்றும் நெய்தல் நாகப்பட்டினம்.
4. சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் ஓய்வு பெற்ற பேராசிரியர் திரு.ராமலிங்கம்.
5. பெட்காட் இணை செயலாளர் எம்.நிஜாமுதீன்
6. நெய்வேலி நுகர்வோர் பாதுகாப்புப் பேரவை.
7. சுற்றுச்சூழல் விஞ்ஞானி முனைவர். அருணாசலம், மனோன்மணி சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, மற்றும்
8. பேராசிரியர் முனைவர் சாமுவேல், மனோன்மணி பல்கலைக்கழகம்
9. சுற்றுச்சூழல் மாணவர்களான தைரிய ராணி, பொற்கொடி, படத்துறை வல்லுனர் சீனுவாசன்

மற்றும் பல்வேறு தொண்டு இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் ஆகியோர் அடங்கிய ஒரு குழு, 10.11.98 அன்று நேரடியாக பாதிக்கப்பட்ட கிராமங்களுக்குச் சென்று பார்வையிட்டு மதிப்பீடு செய்து அறிக்கையை அரசுக்கு அளித்தனர். அதன் பிறகு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்காக மக்கள் கண்காணிப்பகம்–தமிழ்நாடு, சென்னை வழக்கறிஞர் திரு.மோகன், திருமதி. தேவிகா மூலமாக தொழிற்சாலைகளினால் பாதிப்பு நிவாரணம் இழப்பீடு அமைப்பில் ஒரு வழக்கு தொடுத்தனர். இந்த மனுவை மேற்படி அமைப்பு ஏற்றுக் கொள்ளாமல், ஒரு தொழிற்சாலையால் தொடர்ச்சியாக ஏற்படும் பாதிப்பு பற்றிதான் இந்த அமைப்பினால் பரிசீலனை செய்யப்படும் என்று கருத்து தெரிவித்தது.

இதனைத் தொடர்ந்து இழப்பீடு நிர்ணயிக்கும் அமைப்பு என்.எல்.சி. நிறுவனத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு நிர்ணயிக்க தாக்கல் செய்துள்ள மனுவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என சென்னை உயர்நீதி மன்றத்தில் பல்வேறு விவசாயிகள் வழக்கு தொடுத்தார்கள். வழக்கை விசாரித்த


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


நீதிபதிகள் பாலகிருஷ்ணன், சிவசுப்ரமணியன் ஆகியோர் கூறியுள்ள தீர்ப்பில் 2 வாரத்திற்குள் விவசாயிகள் மீண்டும் இழப்பீடு நிர்ணயிக்கும் அமைப்பில் மனு செய்ய வேண்டும். அந்த மனு மீது இந்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் வழிகாட்டுதல் நெறிகளின் நடவடிக்கை எடுக்கவேண்டும். 3 மாதத்திற்குள் மனு செய்தவர்களுக்கு என்.எல்.சி. நிறுவனம் இழப்பீடு முறைப்படி, நஷ்டஈடு வழங்க வேண்டும் என்று கூறியுள்ளனர்.

## I. 7. கடலூர் சிப்காட் மற்றும் டாசிட்

வெளிநாடுகளினாலும், இந்தியாவின் பிற மாநிலங்களினாலும் புறக் – கணிக்கப்பட்ட மோசமான தொழிற்சாலைகளின் புகலிடமாக கடலூர் மாவட்டம் மாறி வருகிறது. ஏற்றுமதியை மட்டும் நோக்கமாக் கொண்டு கடலூர் மாவட்டத்தை இராசயன நச்சுக்கழிவுகளைக் கொட்டும் குப்பைத் தொட்டியாக மாற்ற முயற்சி நடந்து வருகின்றது.

கடலூரில் இருந்து சிதம்பரம் செல்லும் வழியில் உள்ள முக்கிய சாலையையொட்டி கடலூர் பழைய சிப்காட் தொழிற்பேட்டை அமைந்துள்ளது. சிப்காட் வளாகத்தில் ஏறத்தாழ 60 தொழிற்சாலைகள் உள்ளன. இதில் ஒன்றிரண்டைத் தவிர மற்றவை அனைத்தும் இராசயனத் தொடர்புடையவை. இந்த தொழிற்சாலைகள் வெளியேற்றும் இராசயனக் கழிவுப் பொருட்கள் சரியான முறையில் சுத்திகரிக்கப்படாமல் அப்படியே வெளியேற்றப்படுவதால் அவை கிராமங்களின் சுகாதாரத்தை முற்றிலுமாக சீர் குலைத்து வருகின்றன. குறிப்பாக, சாசன் ஆலை, லாயர் சூப்பர் பேப்ரிக்ஸ், வானவில் போன்ற தொழிற்சாலைகள் வெளியே அனுப்பும் கழிவுகள் மகாமோசமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன. இந்த ஆலைகள் நாள் ஒன்றுக்கு 3 கோடி லிட்டர் கழிவுநீரை கிராமத்தின் மீது உமிழ்கின்றன. இதனால் இப்பகுதி முழுவதும் வீசும் காற்றிலும், நீரிலும், மண்ணிலும், வானிலுள்ள தூசி மண்டலத்திலும், விளைபொருள் யாவிலும் இராசயனப் பொருட்கள் உள்ளன. இப்பகுதியை ஆய்வு செய்த மாவட்ட நுகர்வோர் பேரவை செயலர் தலைமையில் வந்த ஆய்வுக் குழுவினர் மற்றும் அதனைத் தொடர்ந்து ஆய்வு செய்த பல சுற்றுச்சூழல் விஞ்ஞானிகளும், நீதிபதி நைனார் சுந்தரத்தின் தலைமையிலான மாநில மனித உரிமை ஆணையத்தினரும் இப்பகுதி யில் கிடைக்கும் இளநீரில்கூட இராசயனம் கலந்திருப்பதாகக் கூறியுள்ளனர்.

உப்பனாற்றின் ஓரத்தில் தொழிற்சாலைகள் அமைந்திருப்பதால் பாதிப்பு பல மடங்காக இருக்கிறது. சிங்காரத் தோப்பு, குடிகாடு, காரக்காடு, சங்கொலிக்குப்பம், செம்மங்குப்பம், கோனாங்குப்பம், பூண்டியாக்குப்பம், நடுத் திட்டு, பெரிய குப்பம், நொச்சிக்காடு போன்ற பல கிராமங்கள் ஆலைகளினால் பயங்கரமான அளவில் பாதிக்கப்பட்டுள்ளன. இதில் குடிகாடு கிராமம் வாழவே தகுதியற்றது என்று மாநில மனித உரிமை ஆணையமே குறிப்பிட்டுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இராசயனத்தின் பாதிப்பால் ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒவ்வொரு வண்ணத்தில் குடிநீர் வருகிறது. குடிநீரை முகர்ந்தால் அதிலிருந்து வரும் மட்டமான இராசயன வாடை குமட்ட வைக்கிறது. இம்மண்ணையும், இராசயனத்தின் கொடிய கரங்கள் விட்டு வைக்காததால் இங்கு விளையும் விளைபொருட்களிலும் இராசயனம் கரிக்கிறது. இப்பகுதியிலுள்ள புளிய மரங்கள் இரசாயனங்களால் பட்டுப் போய்விட்டன. இது மட்டுமின்றி இங்கு பயிரிடப்பட்ட வாழை, கரும்பு அடியோடு நாசமாகி விட்டன. அருகிலுள்ள உப்பனாற்றிலும் கடலிலும் கழிவு நீரைக் கலந்து விடுவதால் மீனவர்களும் நொந்து போயிருக்கிறார்கள். உப்பனாற்றில் பிடிக்கப்படும் மீன் மற்றும் இறால்களில் கூட இராசயன வாடை வீசுகிறது.

கடலூர் முதுநகரை அடுத்து கடற்கரையை ஒட்டியுள்ள கிராமங்களில் கிடைக்கும் மிக உயர்ந்த மீன் வகை மத்தி. இந்த மீன் கிடைக்கும் சீசனில் ஒரு வருடத்துக்கு தேவையான வருமானத்தை அவர்கள் சம்பாதித்து விடுவார்களாம். இப்போது சுற்றுச்சூழல் நாசமாகியிருப்பதால் இவ்வகை மீன்கள் இப்போது இங்கே கிடைப்பதில்லை. அவை இடம்பெயர்ந்து கேரள பகுதிக்குச் சென்று விட்டன.

இந்தச் சுற்றுச் சூழல் சீர்கேடுகளால் இப்பகுதி கிராமமக்கள் காலி செய்து கொண்டு வேறு இடங்களைத் தேடி போகத் துவங்கி விட்டார்கள். "இங்குள்ள ஒரு தொழிற்சாலை வெளியேற்றும் கழிவு நீரில் ஃபுளோரைடு அதிகம் கலந்திருக்கிறது. இந்த நீர் உப்பனாற்றில் கலக்கிறது. அந்தத் தண்ணீரில் கிடைக்கும் மீன்களில் ஃபுளோரைடு அதிகம். இதைத் தொடர்ந்து சாப்பிட்டால், நிச்சயம் எலும்பு சம்பந்தப்பட்ட நோய்கள் வரும். இதனால் இப்பகுதியில் உள்ள அடுத்த தலைமுறைக்கு இளவயதிலேயே கூன் விழுந்து விடும்" என்று மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 97–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இந்தப் பகுதியைச் சுற்றிப் பார்த்த 'ஃபெட்காட்' அமைப்பின் உண்மை அறியும் குழு, ஓர் அறிக்கையை அரசுக்குச் சமர்ப்பித்துள்ளது. அவ்வறிக்கை "இப்பகுதி மக்களை மூச்சுத்திணறல், உடல் அரிப்பு, இனம் தெரியாத காய்ச்சல், வயிற்றுப் போக்கு போன்ற நோய்கள் பாதித்துள்ளன. ஊதா, அடர் ஆரஞ்சு, வெளிர் கறுப்பு ஆகிய நிறங்களில் நிலத்தடி நீர் மாறி விட்டது. சோதனையிடப் போனவர்களுக்கே சோதனையான அனுபவம்தான். பலருக்கு மூச்சுத் திணறல், கண் எரிச்சல், வாந்தி வருவது போன்ற உணர்வு ஏற்பட்டது" என்று குறிப்பிட்டுள்ளது.

இப்பகுதியில் சோதனை நடத்திய நெதர்லாந்து நாட்டு மாணவர்கள் ஆய்வுக்குழு ஒன்றும் இதே கருத்தை உறுதி செய்திருக்கிறது. "தென்னந்தியாவில் அதிக அளவு காற்று மாசாகி இருப்பது இங்குதான்" என்று அந்த மாணவர்கள் கூறியுள்ளனர். இப்பகுதியிலுள்ள மக்கள் கொஞ்சம் கொஞ்சமாக செத்துக் கொண்டிருக்கின்றனர் என்பதற்கு இதைவிட வேறென்ன சாட்சி வேண்டும்?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இக்கொடுமை போதாது என்று தமிழக அரசு டாசிட் தொழில்வளாகம் ஒன்றை பெரியப்பட்டு–சிலம்பிமங்கலம் பகுதியில் அமைப்பதற்காக 2411 ஏக்கர் விளைநிலங்களை கையகப்படுத்தும் அரசாணையை 1997ம் ஆண்டு ஜுன் மாதம் 30ம் தேதி வெளிப்பட்டது. இது குறித்து தகவலறிந்த நாள் முதலாய் அப்பகுதி கிராம மக்கள் அயராது போராடி வருகின்றனர்.

இந்தத் தொழிற்பேட்டை செயல்பட அனுமதிக்கப்பட்டால், 15,000 விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள். அது சுற்றுச்சூழலை மாசுபடுத்தும்; அந்தப் பகுதியில் நிலத்தடி நீரும் பாதிக்கப்படும்; குடிநீர் பிரச்சனை ஏற்படும்.

சுற்றுச்சூழல் அமைப்புகள், சர்வதேச மனித உரிமை செயல்பாட்டாளர்கள், கிராம மக்கள், பஞ்சாயத்துக்கள், அரசியல் கட்சிகள், பாராளுமன்ற உறுப்பினர் என்று பல தரப்பினரின் போராட்டங்களினால் நிர்ப்பந்தத்திற்குள்ளான அரசு 2411 ஏக்கரில் 'டாசிட்' தொழிற்பேட்டை அமைக்கும் முயற்சியில் ஓர் அங்கமான 300 ஏக்கரில் "டேனிங் பார்க்" எனும் தோல் பதனிடும் ஆலைகள் திட்டத்தை மட்டும் கைவிட்டுள்ளது.

**பரிந்துரைகள்:**

1. சுற்றுச் சூழல் பாதுகாப்புச் சட்டத்தின்படி இராசயன கழிவுகளைச் சுத்திகரிப்பு செய்யாமல் வெளியேற்றும் சிப்காட் தொழிற்சாலைகளை மூட அரசு உத்தரவிட வேண்டும்.
2. இதுவரை சிப்காட் தொழிற்சாலைகள் ஏற்படுத்திய பெரும் நாசங்களுக்குப் பொறுப்பேற்க வேண்டும். விளைநிலங்கள், குடிநீரை மீட்க முடியாத அளவிற்கு மாசாக்கிய இத்தொழிற்சாலைகள் மீது கிரிமினல் வழக்குகள் தொடரப்பட வேண்டும்.
3. சுற்றுச்சூழல் வழக்குகளில் உச்சநீதிமன்றம் மாசுபடுத்தியவரே நஷ்டஈடு அளிக்க வேண்டும். (Polluter Pays Principle) என்று அளித்த தீர்ப்பின் (இறால் தொழிற்சாலைகளுக்கு எதிரான வழக்கு, ஜெகநாதன் எதிர் இந்திய அரசு, 11–12, 1995) அடிப்படையில் ஏற்பட்ட சுற்றுச்சூழல் நாசங்களுக்குப் பொருளாதார ரீதியாக கணக்கிட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு அளிக்க வேண்டும்.

## I. 8. ஸ்டெர்லைட் - இன்றைய நிலை

இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள இரத்தினகிரி என்னுமிடத்தில் 1989ம் ஆண்டு நிறுவப்பட்ட ஸ்டெர்லைட் தாமிர உருக்காலை தனது உற்பத்தியைத் துவங்கினால் அப்பகுதியின் சுற்றுச்சூழல் பாதிக்கப்படும் என்பதை உணர்ந்த இரத்தினகிரியின் மக்கள் பல வகையான போராட்டங்களை நடத்தி இவ்வாலையை தங்கள் பகுதியில் செயல்படாமல் தடுத்து நிறுத்தினர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இப்படிப்பட்ட ஆலைதான் தமிழ்நாட்டின் தூத்துக்குடியில் கடந்த 30.10.94ம் தேதி அன்று இந்நகரின் மையப் பகுதியிலிருந்து சுமார் 6கிமீ தொலைவில் புறவழிச்சாலையிலுள்ள சிப்காட்டில் 128 ஏக்கர் நிலப்பரப்பில் ஆரம்பிப்பதற்காக அன்றைய தமிழக முதல்வரான திருமிகு. ஜெயலலிதா அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு இரண்டே ஆண்டுகளில் 1300 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டது. தாதுப் பொருட்களை இறக்குமதி செய்து, அதிலிருந்து தாமிரத்தை பிரித்தெடுத்து உருக்கி தாமிரத் தகடுகளை உற்பத்தி செய்வதே இவ்வாலையின் பணியாகும்.

இவ்வாலையில் தாமிரத்தை உருக்கும் போது, அதிலிருந்து கந்தக டை ஆக்ஸைடு மற்றும் ஆர்கானிக் கேட்மியம், யுரேனியம் மற்றும் ஈயம் கலந்த வாயுக்கள் வெளியேற்றப்படுகின்றன. இவ்வாலையிலிருந்து வெளிவரும் கழிவு நீர் நிலத்தடி நீரை நஞ்சாக்கி விடும். இதனால், தூத்துக்குடியைச் சுற்றியுள்ள விவசாய நிலங்கள், உப்பளங்கள் கடுமையாகப் பாதிக்கப்படும். (மேலும் விபரங்கள் அறிய மக்கள் கண்காணிப்பகத்தின் 1996–ம் ஆண்டறிக்கை காண்க. (பக்கம் 65–69)

இவ்வாலைக்கு அடிக்கல் நாட்டியதிலிருந்தே மக்களிடமிருந்து எதிர்ப்பு கிளம்பியது. இதனைத் தொடர்ந்து 1995, 1996,1997 ஆகிய 3 ஆண்டுகள் தொடர்ந்து மீனவர்கள், பகுதி வாழ் மக்கள், அரசியல் இயக்கங்கள், அரசு சாரா நிறுவனங்கள் ஆகியவை இணைந்து ஊர்வலம், மறியல், உண்ணாவிரதம், மௌனக்கூட்டம், முற்றுகைப் போராட்டம் என்று பல்வேறு வடிவங்களில் போராட்டம் நடத்திய போதிலும் இறுதியில் ஸ்டெர்லைட் ஆலையினருடன் இணைந்து கொண்ட அரசு அதிகாரிகள், அரசியல்வாதிகள் ஆகியோரின் மக்கள் விரோதக் கூட்டணியால் ஆலை தனது உற்பத்தியைத் துவங்கியது. ஆனால், ஆலை உற்பத்தியை தொடங்கிய காலத்திலிருந்தே பல விபத்துகள் நடந்துள்ளன.

உதாரணத்திற்கு சில விபத்துகள் இங்கு தரப்படுகின்றன. 5.7.97 அன்று ஸ்டெர்லைட் ஆலையில் ஏற்பட்ட விஷவாயுக் கசிவால் இவ்வாலையின் அருகிலுள்ள மற்றொரு நிறுவனமான ரமேஷ் பிளவர்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த சுமார் 97 பேர் பாதிக்கப்பட்டனர். இந்த சம்பவத்தைத் தொடர்ந்து ஆலையை மூடக்கோரி பொதுமக்களும் அரசியல் கட்சிகளும் போராட்டம் நடத்தினர். மாவட்ட ஆட்சித்தலைவர் உடனடியாக தலையிட்டு ஆலையை மூட உத்தரவிட்டார். பின்னர் நிபுணர் குழு கொடுத்த அறிக்கையின் அடிப்படையில் தமிழக அரசு ஆலையை திறக்க உத்தரவிட்டது

இதற்கு பின்னர் 30.8.97ம் தேதி அன்று தாமிரத்தை உருக்கும் கொதிகலனில் ஏற்பட்ட கோளாறினால் பயங்கர வெடி விபத்து ஏற்பட்டு 2 பேர் இறந்தனர். 4 பேர் காயமடைந்தனர். உடனே, இது மனித வெடிகுண்டினால் ஏற்பட்டிருக்கும் என்று ஸ்டெர்லைட் நிர்வாகத்தினர் கூறினர். அரசும் உடனடியாக வெடிகுண்டு நிபுணர் குழுவை அனுப்பி விசாரித்தது. அந்நிபுணர் குழு இது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வெடிகுண்டால் ஏற்பட்ட விபத்தல்ல. கொதிகலன் கோளாறினால் ஏற்பட்ட விபத்தே என்று கூறியது. உடனே அரசு அக்கொதிகலனை சரி செய்யும் வரை ஆலையைத் திறக்கக் கூடாது என்று உத்தரவிட்டது. தற்போது கொதிகலன் சரி செய்யப்பட்ட –தாகக்கூறி ஆலையை திறக்க உத்தரவிட வேண்டுமென உயர்நீதி மன்றத்தில் மனுத்தாக்கல் செய்ததன் அடிப்படையில், உயர்நீதிமன்றம் அளித்த ஆணையின்படி கடந்த 5.11.97 முதல் தனது உற்பத்தியை ஆரம்பித்து விட்டது.

5.7.97ல் நடந்த விஷவாயு வெளியேற்றத்திற்கான காரணம் ஸ்டெர்லைட் ஆலை வெளியேற்றும் கழிவுகளிலிருந்து மேலும் தாமிரத்தை எடுப்பதற்காகப் புதிய ஆராய்ச்சியை மேற்கொண்ட முயற்சியில் தன் கட்டுப்பாட்டை இழந்ததால் சல்பர்டை ஆக்சைடு அதிகமாக வெளியேறி விட்டது. அதனால்தான் நாங்கள் ஆலையை மூட உத்தரவிட்டோம் என்று மாவட்ட ஆட்சி நிர்வாகமும், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியமும் கூறுகின்றன.

ஆனால், அரசால் அமைக்கப்பட்ட ஆய்வுக்குழுவோ இவ்விஷவாயு ஸ்டெர்லைட் ஆலையிலிருந்து வெளியேறவில்லை என்று அறிக்கை கொடுக்கிறது. இதே நேரத்தில் தட்டப்பாரை காவல்நிலையம் குற்ற எண்.236/97–இல் இந்திய தண்டனைச் சட்டப்பிரிவு 283 மற்றும் 337–ன் கீழ் வழக்காகப் பதிவு செய்துள்ளது. இதற்காக ஆலையிலிருந்து கழிவு மண்ணை எடுத்துச் சோதனைக்காகவும் அனுப்பியிருக்கிறது. அதன் முடிவு இன்னும் வரவில்லை.

இவற்றைத் தன் கவனத்தில் எடுத்துக் கொள்ளாமலும், மக்களின் போராட்டங்களை உதாசீனப்படுத்தியும் வெறும் விசாரணைக்குழு அறிக்கையின் அடிப்படையில் அரசு ஆலையைத் திறக்க எப்படி உத்தரவிட்டது என்பது புரியாத் புதிராக உள்ளது. இச்சூழ்நிலையில், அவ்வுத்தரவின் அடிப்படையில் ஆலை திறக்கப்பட 16 நாட்களுக்குள்ளாகப் பயங்கர விபத்து ஏற்பட்டதால் இரு மனித உயிர்கள் பலியானது தவிர இவ்வாலைக்கு எதிர்ப்புறமுள்ள மீளவிட்டான் கிராம மக்களும், சிப்காட் துணை மின் நிலைய ஊழியர்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். மேலும், இவ்விபத்து நடைபெறுவதற்குப் பத்து நாட்களுக்கு முன் அதாவது 20.8.97 அன்று இவ்வாலையிலிருந்து வெளியான நச்சுப்புகையால் சிப்காட் துணை மின் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டதாகத் தூத்துக்குடி மின்சாரத் தொழிலாளர்கள் சுவரொட்டிகள் ஒட்டி தங்களது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

சிப்காட்டிலிலுள்ள தட்டப்பாரை புறக்காவல்நிலையமும் குற்ற எண் 298/97 இந்திய தண்டனைச் சட்டப்பிரிவு 304 (A), 337, 338–ன் கீழ் இவ்வாலை மீது வழக்குப் பதிவு செய்து நிலுவையில் உள்ளது. இவற்றையெல்லாம் கணக்கில் எடுத்துக் கொள்ளாத அரசு, வெடித்துச் சிதறிய கொதிகலன் சீர் செய்யப்படும் வரை ஆலையை ஓட்டக்கூடாது என்று மட்டும் உத்தரவிட்டுள்ளது. இந்த முரண் –பாடான நிலைக்கு அரசு எப்போது விளக்கம் அளிக்கும் என்று தெரியவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தற்போது கொதிகலன் சீர் செய்யப்பட்டதால் தனது உற்பத்தியைத் தொடங்க அரசை உத்தரவிடுமாறு ஆலை நிர்வாகம் நீதிமன்றத்தை அணுகி – யிருப்பது விந்தையாக உள்ளது. ஆனாலும், நீதிமன்ற உத்தரவின்படி 5.11.97 முதல் தனது உற்பத்தியைத் தொடங்கி விட்டது.

**பரிந்துரைகள்:**

1. இத்தகைய ஆலைகளை நிறுவக்கூடிய இடங்கள் எப்படி அமைய வேண்டும் என்று சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்புச் சட்டத்தின் சட்டப்பிரிவு 5 மிகத் தெளிவாகக் கூறுகிறது. அவை மக்கள் வசிக்கக் கூடிய பகுதிகள், வரலாற்றுச் சின்னங்கள், வழிபாட்டு இடங்கள், இயற்கைப் பூங்கா, பறவைகளின் புகலிடம் மற்றும் அரசால் அவ்வப்போது அறிவிக்கப்படும் இடங்கள் போன்றவற்றிற்கு அருகில் அமையக் கூடாது என்று கூறுகிறது.
2. ஆனால், இந்த ஸ்டெர்லைட் ஆலை மக்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளான மடத்தூர், மீளவிட்டான் பகுதிகளுக்கு வெகு அருகிலும், 1989–இல் தூத்துக்குடிக் கடலுக்குள் வான்தீவு, கோசவாரித்தீவு மற்றும் மன்னார் வளைகுடாப் பகுதியில் மொத்தம் 21 தீவுகளை கடல்வளப்பூங்கா என்று அரசு அறிவித்தது. ஆனால், இப்பூங்காவிலிருந்து இவ்வாலை 15 கி.மீ. தொலைவிலும், தூத்துக்குடி கடற்பகுதியிலிருந்து 7 கிமீ தொலைவிலும் அமைந்துள்ளது. இது CRZ ஆணையை அடிப்படையிலேயே மீறுவதாகும். மக்களின் வாழ்வுரிமை மற்றும் உயிருக்கான உத்திரவாத உரிமையை மீறுவதாகும். எனவே, இந்த ஆலை உடனடியாக மூடப்பட வேண்டும்.
3. அரசு அனுமதி வழங்குவதற்கு முன் சட்டத்தையும், விதியையும் பயன்படுத்தவில்லை எனவே, எந்த வகையில் இந்த ஆலை இயங்க அனுமதிக்கப்பட்டது என்பதை கண்டறியவும் நடந்த முறைகேடுகளை மக்கள் முன் வெளிச்சத்திற்கு கொண்டு வரவும் அமர்வு நீதிபதியின் தலைமையிலான விசாரணைக் கமிஷன் ஒன்று அமைக்கப்பட வேண்டும்.
4. அமைதியான கொலையாளியாக செயல்படும் இவ்வாலை தொடர்ந்து இப்பகுதியில் செயல்பட்டால் நிச்சயம் பல உயிர்கள், கால்நடைகள், நிலங்கள் பலியாகும். எனவே, இவ்வாலை உடனடியாக மூடப்பட வேண்டும்.

## I.9. சுற்றுலா

உலகமயமாதலின் ஒரு பகுதியாக, மூன்றாம் உலக நாடுகளின் இயற்கை வளங்களைக் காட்சிப் பொருட்களாக்கி, அனுபவிக்க அவற்றை மேற்கத்திய நாடுகள் முன்வைத்து அந்நியச் செலாவணி ஈட்டுவதற்காக சுற்றுலாத்துறை உலகம் முழுவதும் முடுக்கி விடப்பட்டுள்ளது. சுற்றுலாத்துறையில் பன்னாட்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நிறுவனங்களும் தேசங்கடந்த தொழிற்கழகங்களும் பெரும் முதலீடு செய்து வருகின்றன. இதன் பின்னணியில்தான் தெற்காசியாவின் கடலோரப் பகுதி - களுக்கு சுற்றுலாப் பயணிகள் வருவது அதிகரித்துள்ளது. மூன்றாம் உலக நாடுகளின் அரசுகளும் பன்னாட்டுக் கம்பெனிகளும் இணைந்து இந்நாடுகளின் கடலோரப்பகுதிகளைக் குறிவைத்து செயல்பட்டு வருகின்றன. இதற்காகச் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் விதத்தில் கடலோரங்களில் சட்டவிரோதமான முறையில் நீச்சல் குளங்கள், கோல்ப் விளையாட்டு மைதானம் உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன் கூடிய உல்லாச விடுதிகள், நட்சத்திர அந்தஸ்து பெற்ற பிரம்மாண்டமான ஒய்வு விடுதிகள் (Resort Centres) கேளிக்கை விடுதிகள், பூங்காக்கள் (Entertainment Parks) கட்டப்பட்டு வருகின்றன. இதனால் இப்பகுதிகளில் பாரம்பரியமாக வசித்து வரும் மக்கள் முக்கியமாக மீனவர்கள் விரட்டப்படுவது வாடிக்கையாக நடந்து வரும் ஒன்றாகிவிட்டது.

சுற்றுலாத்துறையினால் 1000 கி.மீ நீளமுள்ள அரிய வளமிக்க தமிழகத்தின் கடற்கரைக்கு இப்போது பேராபத்து ஏற்பட்டுள்ளது. தமிழகத்தின் கடற்கரையையொட்டி அமைந்துள்ள நதியின் முகத்துவாரங்கள் பழமையான, வளமிக்க, அடர்த்தியான அலையாத்திக்காடுகள் இருப்பதால் மத்திய அரசு, மாநில அரசை கடற்கரையோரங்களை விடுதிகள் கட்டுவதற்கு நிலங்கள் ஒதுக்குமாறு நிர்ப்பந்தித்து வருகிறது. ஏற்கனவே கடலோர முறைப்படுத்துதல் ஆணை (Coastal Zone Regulation Notification) உயர் அலை கோட்டிலிருந்து (High Tide Line – HTL) 500 மீட்டர் வரை எந்த வளர்ச்சித் திட்டங்களும் அமைக்கப்படக் கூடாது என்று 1991–ம் ஆண்டே உத்தரவிட்டிருந்தது. இதனைத் தளர்த்துவதிலும், ஆணையைத் திருத்துவது என்ற பெயரிலும் அதன் உண்மையான சாரத்தை ஒழித்து விட்டு சக்கையாக மாற்றுவதில் பெரும்பங்கு வகித்தது சுற்றுலாத் துறையே. இத்துறைக்குப் பின்னணியிலிருந்து பன்னாட்டு நிறுவனங்களும் தேசங்கடந்த தொழிற்கழகங்களும் செயல்பட்டன. சுற்றுலாத்துறையினரின் வசதிக்கேற்ப CRZ ஆணையில் கூறப்பட்டிருந்த மீனவர்கள் மற்றும் மீனவக் கிராமங்களைப் "பகுதியில் வசிப்பவர்கள்" என்றபடி வரவிருக்கின்ற ஆணை திருத்தத்தில் மாற்றப்படவுள்ளது.

இவர்களுக்குச் சாதகமாகவே சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரை கிழக்கு கடற்கரை சாலையும் போடப்பட்டு வருகிறது. இப்பகுதி முழுவதும் நிலங்களை விவசாயிகளிடமிருந்து வாங்கி ரியல் எஸ்டேட் முதலைகள் பன்னாட்டு நிறுவனங்களுக்கு விற்றுக்கொண்டிருக்கின்றனர். தமிழ்நாடு சுற்றுலாக் கொள்கை யாக சுற்றுலாவை மேம்படுத்துவதற்கான இலக்காக கடற்கரை சுற்றுலாவை (Coastal Tourism) முதன்மைப்படுத்தி கீழ்க்கண்ட பகுதிகளை கடற்கரைச் சுற்றுலா மையங்கள் அமைப்பதற்காக தெரிவு செய்துள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



- புலிக்காட்டு ஏரி – பழவேற்காடு
- சென்னை
- மாமல்லபுரம்
- பிச்சாவரம்
- சிதம்பரம்
- பூம்புகார்
- நாகூர்
- வேளாங்கண்ணி
- வேதாரண்யம்
- இராமேஸ்வரம்
- திருச்செந்தூர்
- கன்னியாக்குமரி
- காரைக்கால்

மேற்படி பகுதிகளில் சுற்றுலாமையங்கள் அமைக்கப்படுவதற்கான கட்டு – மானப் பணிகள் அமைக்கப்படுவதற்கு தமிழக அரசு பெரும் திட்டம் ஒன்றைத் தீட்டி 591.34 கோடியை ஒதுக்கியுள்ளது. 1992–97 ஆண்டின் மாநில திட்டத்தின் சுற்றுலாத்துறைக்கு 525 லட்சம் ரூபாயை ஒதுக்கியுள்ளது.

இதில் புலிக்காட்டு ஏரியைச் சார்ந்து 40 ஆயிரம் மீனவர்கள் வாழ்கின்றனர். இங்குள்ள பொது வளங்கள் பாரம்பரிய ரீதியாகவே "பாடு" என்ற முறையின் கீழ் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இதன்கீழ் 9 கிராமங்கள் ஒரு குறிப்பிட்ட பகுதியில் மீன் பிடிப்பதை உரிமையாகப் பெற்றுள்ளன. ஆனால் ஏற்கனவே சுற்றுலாப்பயணிகளுக்காகக் காடுகளை அழித்து சாலைகள் போட்டது, இறால் பண்ணைகள் செயல்படுவது போன்றவை இப்பகுதியின் மென்மையான சுற்றுச்சூழலைப் பாதிப்புள்ளாக்கியுள்ளது. இதனால் 11 மீன் இனங்கள் காணாமல் போய்விட்டன. 9 வகை மீன் இனங்கள் குறைந்து கொண்டு வருகின்றன. தமிழ்நாடு அரசின் சுற்றுலாக் கொள்கையின்படி புலிக்காடு ஏரி நீர் சார்ந்த விளையாட்டுகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.இங்கு அலை தாண்டும் விளையாட்டு, வாட்டர் ஸ்கையிங், ஜெட் ஸ்கையிங், கெனோய்ஸ், கேக்கேயிஸ் போன்ற நீர் விளையாட்டுக்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன. இதற்கான கருவிகள் வாங்கு – வதற்கு 18.93 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. புலிக்காட்டு ஏரியை சுற்றுலா மையமாக மாற்றினால் இந்த ஏரியை தங்கள் வாழ்வாதாரத்திற்கு சார்ந்து இருக்கும் 46 ஆயிரம் மீனவர்களின் வாழ்வு கேள்விக்குறியாக்கப்படும்.

உப்பளங்களையும், பல இன ஆமைகளையும், முதலைகளையும் கொண்ட முத்துக்காடு நீர் விளையாட்டுகளுக்கான மையமாக ஆக்கப்படவுள்ளது. படகு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போட்டியைத் தவிர சர்வதேசத் தரத்தில் நீர் விளையாட்டுக்கள் நடத்தப்பட உள்ளன. சுற்றுலாத்துறை அதிகாரி ஒருவரின் கூற்றின்படி முத்துகாட்டிலிருந்து ஈடைக்காடு வரையிலான 80 கி.மீ பாதையில் பல சுற்றுலா மையங்கள் அமைக்கப்படவுள்ளன. இது தொடர்பாகக் கடந்த 1993–ம் ஆண்டிலேயே இந்தியாவின் கிரானைட்கல் ஏற்றுமதி நிறுவனமான ஜெம் கிரானைட்டுடன் ஹாலிடே இன் என்ற நிறுவனமும் இணைந்து முத்துக்காட்டில் ஒரு ஓய்வு விடுதியைக் கட்டியுள்ளனர்.

**சென்னையின் புறநகர்ப் பகுதியான தீவுத்திடலில் 20 கோடி செலவில் குழந்தைகளுக்கான கேளிக்கை பூங்காவும், தாம்பரத்தில் 100 ஏக்கர் பரப்பளவில் மத்திய அரசினால் 15 கோடி செலவில் கேளிக்கை பூங்காவும் கட்டப்பட்டு வருகின்றன.**

- சென்னை புறநகர்பகுதியில் சிந்தூரி உணவு விடுதியினரால் 50 ஏக்கர் நிலப்பரப்பில் 50 குடியிருப்புக்களுடன் 50 கோடி செலவில் கடற்கரை சுற்றுலா மையமும் கட்டப்பட்டுள்ளன.

- சென்னைக்கும் **பாண்டிச்சேரிக்கும் இடையில்** கிளப் மெடிட்ரன்ஸ் என்ற பிரெஞ்சு **கம்பெனி தாஜ் குழுவுடன்** இணைந்து கடற்கரை சுற்றுலா மையங்கள் **அமைக்க மத்திய அரசு அனுமதி** அளித்துள்ளது.

- மாமல்லபுரமானது தமிழகத்தின் சிறப்பு சுற்றுலா மையங்களில் ஒன்றாக தெரிவு செய்யப்பட்டுள்ளது. இதனையொட்டி 70 லட்சம் மக்கள் வாழ்கின்ற 59 கிராமங்கள் உள்ளடங்கிய 29051 ஹெக்டேர் நிலப்பரப்பில் சுற்றுலாப் பயணிகளுக்கென்று பல விடுதிகள் கட்டப்பட்டு வருகின்றன. "மாமல்ல – புரத்தை அழகுபடுத்துதல் 2000" என்ற இத்திட்டத்தின் கீழ் கடற்கரையையொட்டி 2 கி.மீ சாலை அமைப்பதும் 30 லட்சம் ரூபாய் செலவில் திறந்தவெளி திரையரங்கமும் இதில் அடங்கும். இதனால் மாமல்லபுரத்தில் பல இடங்களில் உணவு விடுதிகளும் சுற்றுலாப் பயணிகளுக்கென்று உல்லாச விடுதிகளும், ஓய்வு விடுதிகளும் இப்பகுதியை ஆக்ரமித்துள்ளன. இப்பகுதிக்கேயுரிய கடற்கரையில் அமைந்திருக்கும் தனிச்சிறப்பு மிக்க கோவிலின் புகழ்பெற்ற சிற்பங்கள் ஏற்கனவே கடல் உப்புநீரால் அரிக்கப்பட்டு சிதைந்த நிலையிலுள்ளன. இதனால் இக்கோவில் சிற்பங்களை அசிங்கப் – படுத்தவேண்டாம் என்று எச்சரிக்கை செய்து ஒரு பலகையில் எழுதப்பட்டிருந் தாலும் அதை சுற்றுலாப் பயணிகள் யாரும் பொருட்படுத்துவதில்லை. எப்போது பார்த்தாலும் சுற்றுலாப் பயணிகள் நிரம்பி வழிவதால் இங்கு ஒரு கிரவுண்ட் நிலத்தின் விலை 8 லட்சமாக உயர்ந்துள்ளது. மத்திய அரசின் நகர வளர்ச்சித்துறை மாமல்லபுரத்தை அழகுபடுத்த மான்யமாகவும் 1.3 கோடியை அளித்துள்ளது. இப்பகுதியில் டெம்பிள்பே அசோக் ரிசார்ட்ஸ்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கோல்டன் சன், சில்வர் சேண்ட்ஸ், பிஷர்மென் கோவ், பே பீச் பார்ம்ஸ் என்ற பெயர்களில் உல்லாச விடுதிகளைஅமைத்திருக்கும் தனியார் நிறுவனங்களின் பட்டியல் நீளுகிறது. இத்துடன், சென்னையைச் சேர்ந்த ஸ்டேட்ஸ் ரிசார்ட்ஸ் 20 குடில்களுடன் கூடிய சுற்றுலா மையமொன்றையும் ஸ்டெர்லிங் ஹாலிடே ரிசார்ட்ஸ் ஒரு மையத்தையும் திறந்துள்ளன. 50 ஏக்கர் நிலப்பரப்பில் கேளிக்கை பூங்கா ஒன்றை இங்கு அமைக்கவும் திட்டம் உண்டு. இன்னும் விபரீதமான முறையில் காஷ்யாப் பவுன்டேஷன் என்ற சென்னையைச் சேர்ந்த தனியார் நிறுவனம் போரூர், தாம்பரம் மற்றும் பழைய மகாபலிபுரம் சாலையில் சாட்டிலைட் நகரங்களை அமைக்கவும் அரசு அனுமதித்துள்ளது. இங்கு சுற்றுலாமையம் அமைந்திருக்கும் ஒவ்வொரு தனியார் மையமும் கடற்கரை நிலத்தில் ஒரு பகுதியைத் தங்களுக்கு சொந்தமாக்கி உள்ளன. இதனால் இறுதியில் இப்பகுதிக்குச் சொந்தக்காரர்களான மீனவர்களுக்கு எந்த இடமும் இல்லாத நிலை ஏற்பட்டு வருகிறது. சாதாரணமாக ஒவ்வொரு மீனவரும் மீன் பிடிக்க பல மைல்கள் கடந்து தனியார் நிறுவனங்களை சுற்றிச் சுற்றியே செல்ல வேண்டியுள்ளது.

உலகப் புகழ்பெற்றவை பிச்சாவரம் அலையாத்திக் காடுகள். இந்தியாவின் 3 விழுக்காடு அலையாத்திக் காடுகள் தமிழகத்தில்தான் (225 சதுர கி.மீட்டர்) உள்ளன. இதில் 110 சதுர கிலோ மீட்டர் பிச்சாவரத்தில் உள்ளன. சுற்றுலா மையங்களுக்காகத் தொடர்ச்சியாக அலையாத்திக் காடுகள் சட்டவிரோதமான முறையில் வெட்டப்பட்டு வருகின்றன. இதை ஆராய அமைக்கப்பட்ட தமிழக அரசின் நிபுணர் குழு 2000 ஹெக்டேர் நிலப்பரப்பிலிருந்த காடுகள் இன்று 1000 ஹெக்டேர் பரப்பளவுக்கு சுருங்கி விட்டதாக கூறியுள்ளது. இதே கதிதான் பூம்புகாருக்கும் ஏற்பட்டுள்ளது.

தரங்கம்பாடியில் அமைக்கப்படவுள்ள திரைப்பட நகரத்திற்கு வாங்கப்பட்டுள்ள 88 ஏக்கரில் 53 ஏக்கர் நிலம் ஏரிக்கரையிலும், 35 ஏக்கர் நிலம் கடற்கரையை ஒட்டியும் அமைந்துள்ளது. 53 ஏக்கர் பரப்பளவு கொண்ட ஏரியில் 11 ஏக்கரானது மீன்வளத்துறையினர்க்கு மாதிரி இறால் பண்ணை அமைக்கவும் முதலைப் பூங்கா அமைக்கவும் அளிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 42 ஏக்கர் நிலங்கள் 3–லிருந்து 4 அடி ஆழம் வரை தோண்டப்பட்டு செயற்கையான ஏரியும் அமைக்கப்பட்டவுள்ளது. ஏரிக்கு நடுவே செயற்கையான முறையில் மணலைக் கொட்டி செயற்கைத் தீவு ஒன்றை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இவையெல்லாம் அப்பகுதிவாழ் மக்களின் வாழ்வுரிமையை பறித்து அவர்களின் வயிற்றிலடித்து வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளிடமிருந்து அந்நியச் செலாவணியைக் கறக்கத்தான்!

காரைக்காலை அழகுப்படுத்தும், சினிமா நகர் அமைக்கும் திட்டத்தில் தனியார் நட்சத்திர அந்தஸ்து பெற்ற ஓட்டல்களும் அடங்கும். திருநல்லாறில் 40 லட்சம் செலவில் மத்திய அரசினால் கடற்கரையில் சுற்றுலா மையமும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


அமைக்கப்படவுள்ளது. இது தவிர, இராமேஸ்வரத்தில் உள்ள தனுஷ்கோடிக்கு அதிகமான பக்தர்கள் வருவதை கணக்கில் கொண்டு அதை பக்தி சுற்றுலா மையமாக மத்திய அரசு மாற்றவிருக்கிறது. ஏற்கெனவே இப்பகுதி குடிநீர் பஞ்சத்திற்கு பெயர் போன பகுதியாகும். இப்பகுதி முழுவதற்கும் குடிநீரானது அருகிலுள்ள மாவட்டத்திலிருந்து தருவிக்கப்படுகிறது. நிலைமை இப்படியிருக்கையில் லட்சக்கணக்கான பக்தர்களை இக்குட்டித் தீவானது தாங்குமா ?

கன்னியாகுமரியிலும் தனியார் நிறுவனங்கள் சுற்றுலா மையங்கள் அமைக்க அரசே ஊக்குவித்து விளம்பரப்படுத்தியுள்ளது. இதனைத் தொடர்ந்து ஜப்பான் 100 கோடி ரூபாய் செலவில் கன்னியாகுமரிக்கு அருகிலுள்ள வட்டக் கோட்டையில் சுற்றுலா மையம் ஒன்று அமைக்கவுள்ளது. கன்னியாகுமரியில் ஹாலிடே இன்–னும் ஜெம் கிரானைட்சும் இணைந்து சுற்றுலா விடுதியும் ஸ்டெர்லிங் ஹாலிடே ரிசார்ட் நிறுவனமானது இராமேஸ்வரத்திலும் கன்னியாகுமரி–யிலும் சுற்றுலா மையங்களைத் துவங்கவுள்ளது.

மேலே சொல்லப்பட்ட பகுதிகள் எல்லாம் ஏற்கனவே கிழக்கு கடற்கரை சாலை, பிரம்மாண்டமான மின் நிலையங்கள், இரசாயனத் தொழிற்சாலைகள் ஆகியவை அமைக்கப்பட்டதால் கடுமையான மாசு கேட்டிற்குள்ளாகி வருபவை என்பது நாமறிந்த ஒன்று. இப்போது எரிகின்ற தீயில் ஊற்றுகின்ற எண்ணெயாக இப்பகுதிகளை முழுவதுமாக அழிக்க சுற்றுலா துறையும் சேர்ந்துள்ளது.

சுற்றுலா பயணிகள் வருவதால் எந்த சூழலுக்கு மாசும் ஏற்படாது. மாறாக, அந்நியச் செலாவணிதான் பெருகும் என்று வாதிடுவோரும் உள்ளனர். ஒரு பகுதியை வளர்ச்சி அடைய வைக்க சுற்றுலாத்துறை ஒரு மென்மையான தொழில் துறை (Soft Industry) என்று கூறப்படுகிறது. இந்த மென்மையான தொழில் துறைதான் சுற்றுலா பயணிகளுக்கு (நாட்டு மக்கள் அனுபவிக்க அல்ல) விடுதிகள், கேளிக்கை மையங்கள் கட்டுவதற்காகவும், கோல்ப் மைதானங்கள் அமைப்பதற்காகவும் காடுகளை அழித்து வருகிறது. நல்ல விளைநிலங்களை அழித்து வருகிறது. அதனுடன் சேர்த்து அப்பகுதி மக்களின் வாழ்வாதாரமான மீன்பிடித் தொழில் உள்ளிட்ட பாரம்பரிய தொழில்கள் மட்டுமின்றி உயிரினங்களின் ஆதாரமான பல்லுயிர்ப் பெருக்கமும் அழிக்கப்பட்டு வருகின்றன. கும்பி கூழுக்கு அழுத போது கொண்டை பூ கேட்ட கதையாய் இச்சூழல் அழிவுடன், கொழுத்த பணத்துடன் வரும் சுற்றுலா பயணிகளின் வக்கிரத்திற்கு நம் நாட்டின் சிறுவர், சிறுவர் பலியிடவும் படுகின்றனர். சுற்றுலா தொழிலினால் சாதாரணமாகவே அன்றாடம் வீட்டின் பணிகளால் நசுக்கப்படும் பெண்களின் நிலை இன்னும் பரிதாபமாகி வருகிறது. பகுதிவாழ் மக்களின் குடிநீர் (நிலத்தடிநீர்) ஓட்டல்களினால் உறிஞ்சி எடுக்கப்படுவதனால் அவர்கள் குடிநீருக்காக தொலைதூரம் செல்ல வேண்டிய நிலை. சுற்றுச்சூழல் அழிவு, பகுதி பொருளாதாரத்தின் அழிவு, பண்பாட்–டுச் சீரழிவு இவற்றுடன் வரும் அந்நியச் செலாவணியினால் யாருக்கு இலாபம் ?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**பரிந்துரைகள்**

- சுற்றுலாத் தொழில் மென்மையான தொழில் அல்ல. சுற்றுச்சூழலை அழித்து பகுதிவாழ் மக்களின் வாழ்வுரிமையை பறிக்கும் கோரமான தொழில் ஆகும். எனவே மத்திய அரசு தனது சுற்றுலாக் கொள்கையை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.
- அந்நியச் செலாவணிக்காக மென்மையான கடற்கரைப் பகுதிகளை சுற்றுலாத் துறைக்கு பலிகடா ஆக்குவது அபாயகரமானது ஆகும். எனவே 1991–ம் கடலோர முறைப்படுத்துதல் ஆணையின்படி (CRZ) உயர் அலை (HTL) மட்டத்திலிருந்து 500 மீட்டர் வரை முக்கியமாக சுற்றுலாத் தொழில் திட்டங்கள் உள்ளிட்ட எந்த வளர்ச்சித் திட்டங்களுக்கும் அனுமதியளிக்கப்படக்கூடாது.
- (CRZ) ஆணைக்குட்பட்ட பாதுகாக்கப்பட்ட கடலோரப் பகுதிகளில் கட்டப்பட்ட சுற்றுலா விடுதிகள் மூடப்பட்டு அவை இடிக்கப்பட வேண்டும்.

(ஆதாரம்: **Equation** அமைப்பினர் மற்றும் **CAN** அமைப்பினர் கொடுத்த புள்ளி விபரங்கள் மற்றும் ஆய்வு அறிக்கைகள்)

### I.10. கடலோரப்பகுதி முறைப்படுத்துதல் ஆணைத்திருத்தம் (Coastal Zone Regulations Amendment) - *அபாயகரமான பின்விளைவுகள்*

இந்தியக் கடற்கரை 7500 கி.மீ நீளமுடையதாகும். நாட்டின் 9 மாநிலங்களைக் கடந்து செல்லும் கடற்கரை மொத்தம் 2.02 மில்லியன் கி.மீ பரப்பளவை உள்ளடக்கியதாகும். இந்த 9 மாநிலங்களிலுள்ள மொத்த மக்கள் தொகையான 420 மில்லியனில் 330 மில்லியன் மக்கள் கடற்கரையிலிருந்து 150 கி.மீட்டருக்கு உட்பட்ட பகுதியில் வாழ்கின்றனர். உலகிலேயே மீன் உற்பத்தியில் இந்தியா 7–வது இடத்தில் உள்ளது. மீன்பிடிப்புத் தொழிலைச் சார்ந்து 70 லட்சம் மீனவர்கள் வாழ்கின்றனர். கடற்கரையோரப் பகுதியில் லட்சக்கணக்கான ஹெக்டேர் பரப்புள்ள மிக அரிய வளம் மற்றும் சிறப்புத் தன்மையுடைய காடுகள் உள்ளன. இதில் தமிழக கடற்கரை 1000 கி.மீ நீளமுடையது. இப்பகுதியில் மட்டும் 18,77,185 ஹெக்டேர் பரப்புள்ள வனக்காடுகளும், 57.33 லட்சம் ஹெக்டேர் பரப்புள்ள .விவசாய நிலங்களும், 12க்கும் மேற்பட்ட ஆற்று முகத்துவாரங்களும் உள்ளன. 18 பெரிய நகரங்களும், 2500 கிராமங்களும், 442 மீனவ கிராமங்களும் இக்கடற்கரையின் ஓரமாக உள்ளன. மரக்காணம் முதல் கோவளம் வரை உப்பளத் தொழில் மிகச்சிறப்பாக நடைபெறுகிறது. நம் நாட்டின் உப்பு உற்பத்தியில் இந்தப் பகுதியின் பங்களிப்பு கணிசமானதாகும்.

கிழக்குக் கடற்கரையில் சுற்றுச்சூழல் முக்கியத்துவம் வாய்ந்த சதுப்புநிலக் காடுகள் அமைந்துள்ளன. உயிர்வாய் கூளங்களின் படுகைகளும், இந்தப்பகுதியில் சிறப்பாக அமைந்துள்ளன. இப்பகுதி முழுவதையும் சார்ந்தே பல்லுயிர்ப் பெருக்கம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


(Bio-diversity) அமைந்துள்ளது. உலகிலுள்ள சகல ஜீவராசிகள் அல்லது உயிரினங்களும் (மனித இனம், விலங்குகள், தாவரங்கள், உயிர் வளக்கூளங்கள், புற்பூண்டுகள், நுண்ணுயிர்கள் ஆகியவை) சேர்ந்ததுதான் பல்லுயிர்ப்பெருக்கம் எனப்படுகிறது. இது பூமியின் உயிரினச் சொத்து. ஒவ்வொன்றுக்குள்ளேயும் இவைகளுக்கு இடையேயும் ஒன்றுக்கொன்று உறவும், தொடர்பும், சார்பும் இருக்கிறது. இந்த சங்கிலித் தொடர்பான உறவுத் தொடர்புகளில் ஏதேனும் ஒரு தொடர்பு அறுந்துவிட்டால், அதாவது ஏதேனும் ஒரு உயிர் பாதிக்கப்பட்டால் மற்ற உயிரினங்களும் பாதிக்கப்படும். அப்பகுதி முழுவதும் வறட்சி, வெள்ளம் உள்ளிட்ட ஏதாவது ஒரு இயற்கை சீற்றத்திற்குள்ளாகி கடுமையாகப் பாதிக்கப்படும். பல்லுயிர் பெருக்கமானது மனிதனின் உணவுத் தேவை, உள்ள மருத்துவத் தேவை உள்ளிட்ட பல தேவைகளை நிறைவு செய்வதோடு கடற்கரையோரத்தில் பல மீன் இனங்களின் வாழ்க்கைச் சூழலுக்கும் அடிப்படை ஆதாரமாக உள்ளது. இறால், நண்டு மற்றும் பல்லுயிர்ப் பெருக்கத்தின் அடிப்படை ஆதாரமாக உள்ள அரிய மீன் இனங்கள் பல அலையாத்திக்காட்டு மரங்களுக்குக் கீழே தான் முட்டையிட்டு குஞ்சு பொறிக்கின்றன. இக்குஞ்சுகள் ஒரு குறிப்பிட்ட பருவம் வரை வளருவதற்கு ஏற்ற வகையில் இக்காடுகளின் தட்பவெப்ப சூழ்நிலை அமைந்துள்ளது.

இதுமட்டுமின்றி, அலையாத்திக்காடுகள் புயல் வெள்ளம் போன்றவற்றைத் தடுக்கும் பாதுகாப்பு அரணாகவே விளங்குகின்றன. கடல் எவ்வளவு கொந்தளித்தாலும் அலையாத்திக்காடுகளே அலைகள் நாட்டிற்குள் வரவிடாமல் தடுத்து பேருதவி செய்கின்றன. மனித குலத்தின் வாழ்க்கையில் மிகப் பெரிய பங்களிப்பு செலுத்துகின்ற கடற்கரையோரப் பகுதி மற்றும் கடலின் முக்கியத்துவம் உணர்ந்தே அப்போதைய பிரதமர் திருமதி.இந்திராகாந்தி (1981) கடலின் உயர் அலை கோட்டிலிருந்து (High Tide Line-HTL) 500 மீட்டர் வரை எந்த வளர்ச்சித் திட்டங்களும் அமைக்கப்படக் கூடாது என கடித மூலமாக உத்திரவு பிறப்பித்தார். இந்த உத்தரவு நடைமுறைப்படுத்துவதைக் கண்காணிக்க மத்திய அரசினால் செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டு கடற்கரை வளர்ச்சிக்கென சுற்றுச்சூழல் வழிகாட்டுதல்கள் தரப்பட்டன. இக்கடற்கரையோர மாநிலங்கள் தத்தம் கடற்கரை –யோரப்பகுதி மேம்பாட்டுத் திட்டங்களைத் தயாரிக்குமாறு கேட்டுக்கொள்ளப் –பட்டன. இத்திட்டங்கள் பல்வேறு மாற்றங்களுக்குட்பட்டு 1991 பிப்ரவரி, 19–ம் தேதி கடற்கரையோரப்பகுதி முறைப்படுத்துதல் ஆணையாக (Coastal Zone Regulation Notification) வெளியாகியது. சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம் 1986–ன் பிரிவு 3(2 (c) ன் கீழும் சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) விதிகள் 1986 பிரிவு 5–ல் 3 (v) ன் கீழும் இந்த ஆணை வெளியிடப்பட்டது. இதன்படி, உலக வரலாற்றிலேயே முதன்முதலாக இந்தியக் கடற்கரைகள் நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


## முதல் பகுதி (CRZ I)

மிகவும் முக்கியமான, அவசியம் பாதுகாக்கப்பட வேண்டிய பகுதி. தேசிய பூங்கா, கடல்பூங்கா, சரணாலயம் போன்ற சிறப்பு உயிரினங்கள் உள்ள பகுதிகள், பூகோள வெப்ப அதிகரிப்பு போன்ற காரணத்தினால் கடல் மட்டம் உயர்வதால் பாதிப்படையக் கூடிய பகுதிகள். இவை போன்ற மத்திய, மாநில அரசுகளால் அவ்வப்போது குறிப்பிடப்படுகின்ற சிறப்புப் பகுதிகளில் தொழிற்சாலை –கள், மீன் பதனிடும் தொழிற்கூடங்கள், தொழிற்சாலை இரசாயனக் கழிவுகள் கொட்டப்படுவதோ அல்லது வேற எங்கிருந்தும் கழிவுகள் கொட்டப்படுவதோ இப்பகுதிக்குட்பட்ட நிலங்களைப் பயன்படுத்துவதோ, சுரங்கம் தோண்டுவதோ, பாறைகளை உடைப்பதோ முற்றிலுமாகத் தடைசெய்யப்படுகிறது.

## இரண்டாம் பகுதி (CRZ II)

கடற்கரை வரை ஏற்கனவே வளர்ச்சித் திட்டங்களால் நிறைந்துவிட்ட பகுதி. நகராட்சிப் பகுதிகள், ஏற்கனவே நிறைய கட்டிடங்கள், வடிகால் வசதிகள், பாதைகள், குடிநீர் வசதி போன்ற உட்கட்டமைப்பு உடைய, பெருமளவில் கட்டிடங்கள் கொண்ட சட்டப்பூர்வமான நகர்ப்பகுதிகள் அனைத்தும் இதில் அடங்கும். இங்கு சாலைக்கு அருகில் அமைந்த நிலங்களில் மட்டுமே கட்டிடங்கள் கட்ட அனுமதிக்கப்படுகிறது.

## மூன்றாம் பகுதி (CRZ III)

முதல் இரண்டு பகுதிகளிலும் வராத, இன்னமும் வளர்ச்சித்திட்டங்களால் பாதிக்கப்படாத பகுதிகள் இதில் அடங்கும். வளர்ச்சியடைந்த, வளர்ச்சியடையாத பாரம்பரிய கடலோர கிராமங்கள் (பெரும்பாலும் மீனவ கிராமங்கள்) இதில் அடங்கும். நகராட்சிகள் அமைந்த பகுதிகள், பெருமளவில் கட்டிடங்கள் அமையப்பெறாத சட்டப்படி நகர்புறமாக உள்ள பகுதிகள் இதில் அடங்கும்.

## நான்காம் பகுதி (CRZ IV)

அந்தமான், நிக்கோபார், லட்சத் தீவு மற்றும் ஏனைய சிறிய தீவுப்பகுதிகள் மட்டும் இந்தப்பகுதியில் அமையும். எந்தக் கட்டிடங்களும் கட்டுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. கடலோரப்பகுதி முறைப்படுத்துதல் ஆணை கடந்த 1991–ம் ஆண்டிலேயே வெளியிடப்பட்டாலும் அந்நியச் செலாவணியை மட்டும் குறி வைத்துச் செயல்படும் சுற்றுலாத்துறையினருக்கும், பன்னாட்டு நிறுவனங்களுக்கும் தாங்கள் கடற்கரையில் தொழில் துவங்க இந்த ஆணை பெரும் தடையாகவே இருந்துவந்தது. அதனால் இந்த ஆணையைத் திருத்துவதற்கு முன்னாள் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி ஆட்சிக் காலத்தில் துவங்கி பல காலமாகவே முயற்சிகள் நடைபெற்று வந்தன. கடந்த 1994–ம் ஆண்டில் நீதிபதிகள் திரு. குல்தீப்சிங்,


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மற்றும் எஸ்.சி. சென் ஆகியோரைக் கொண்ட உச்சநீதிமன்றத்தின் அமர்வு கடல் **உயர் அலைக்கோட்டிலிருந்து 500 மீட்டர் தொலைவுக்குள் எந்த கட்டிடமும் கட்டக்கூடாது என்று தீர்ப்புக்கூறியது. சுற்றுச்சூழல் செயல்பாட்டாளர்களுக்கு இத்தீர்ப்பு ஒரு ஆயுதமாக இருந்தாலும் 1997–ம் ஆண்டில் இருமுறை திருத்தப்பட்டு ஆணையின் உண்மையான சாரம் நீக்கப்பட்டு வெறும் சக்கையாக** மாற்றப்பட்டுவிட்டது. வெறும் சக்கையாகிப் போன இந்த ஆணைக்கு கடந்த **1999–ம் ஆண்டு ஆகஸ்டு 5–ம் தேதியன்று செய்யப்பட்ட திருத்தம் இறுதியில்** பாடையே கட்டிவிட்டது. இச்சட்டத் திருத்தம் ஆணையிலிருந்த மீனவர்கள் மற்றும் மீனவக் கிராமங்களை "பகுதியில் வசிப்பவர்கள்" என்று மாற்றியுள்ளது.

இப்போது மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தத்தின்படி பகுதியில் வசிப்பவர் –களுக்காக கட்டுமானப்பணிகள் அனுமதிக்கப்படும். உண்மையில் கட்டுமானப் பணிகள் என்ற பெயரில் ஒட்டல்கள், சுற்றுலாத்தளங்கள், தொழிற்பேட்டைகள், பொழுதுபோக்கு பூங்காக்கள், பொதுத்துறை நிறுவனங்கள், பாதுகாப்புப் படைத்தளங்கள் ஆகிய்வை கட்ட அனுமதிக்கப்படும். இதனால் கடற்கரைக்குப் பாரம்பரிய ரீதியாகவே சொந்தமான மீனவர்கள் அங்கிருந்து விரட்டியடிக்கப்படுவர். மென்மையான பாதுகாக்கப்பட வேண்டிய கடற்கரை முற்றிலும் சீரழிந்து சுற்றுச் சூழல் ரீதியாக பெரும் நாசத்தை விளைவிக்கும்.

இரண்டாவதாக, எண்ணெய், எரிவாயு எடுப்பதற்காகவும், அவற்றை பாதுகாத்து வைப்பதற்காகவும், கடல்நீரை சூரியக்கதிர்களின் சக்தி மூலம் உப்பாக்குவதற்கும் அனுமதியளிக்கும் விதமாக ஆணை திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இச்சட்டத் திருத்தத்தினால் பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் பொதுத்துறையினரால் துவக்கப்படும் பிரம்மாண்டமான தொழிற்திட்டங்களினால் கடல் சூழலே அழிந்து கடலையும் கடற்புரத்தையும் சார்ந்து வாழும் மீனவர்களின் வாழ்வும், பாரம்பரிய ரீதியாக, இயற்கையான உப்பளத்தொழிலில் ஈடுபட்டு வரும் லட்சக்கணக்கான உப்பளத் தொழிலாளர்களின் வாழ்வும் கேள்விக்குறியாகும். சொல்லப்படுவதுபோல் CRZ ஆணையானது, மண்டல வாரியாக பிரிக்கப்பட்ட பகுதிகளை மறுபகுப்பாய்வு (Reclassification) செய்யும் நோக்கத்திற்காக திருத்தப்படவில்லை; மாறாக CRZ ஆணையையே ஒழித்துக் கட்டும் (Declassification) வேலைதான் இது. அதனால் மீனவர்களின் வாழ்வுரிமையைப் பறிக்கும் இந்த ஆணை திருத்தத்தை உடனடியாக கைவிட்டு 1991–ம் ஆண்டின் (CRZ) ஆணையை விதிவிலக்கின்றி நடைமுறைப்படுத்த வேண்டும்.

(ஆதாரம்: ஜனவரி 29, 2000–ம் தேதியன்று சென்னையில் நடைபெற்ற கடலோர செயல்பாட்டு கூட்டு நடவடிக்கைக்குழுவின் CRZ ஆணை திருத்தம் குறித்த மாநில அளவிலான கலந்தாய்வில் கொடுக்கப்பட்ட ஆவணங்கள்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## பொதுவான பரிந்துரைகள்

1. வெறும் இலாபம் மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு சுற்றுச்சூழல் பாதிப்புகளையும், மக்களின் வாழ்வுரிமையைப் பாதிப்பதுமான திட்டங்கள் உடனடியாகக் கைவிடப்பட வேண்டும். இயற்கை மற்றும் பொதுவளங்கள் அழியாத வண்ணம் செயல்படும் திட்டங்களைத் தீட்ட வளர்ச்சித் திட்டங்கள் குறித்து கொள்கை அளவிலேயே மாற்றம் கொண்டு வர வேண்டும். இதன் மூலம் மட்டுமே அரசு நடைமுறைப்படுத்தும் திட்டங்களினால் வளங்குன்றா வளர்ச்சி (Sustainable Development) ஏற்படும். ஐ.நாவின் பொதுச்சபையில் 1980–ம் ஆண்டு டிசம்பர் 4–ம் தேதியன்று வளர்ச்சிக்கான உரிமை என்ற தீர்மானம் தெளிவாகவே கூறுகிறது. வளர்ச்சிக்கான உரிமை என்பது மக்களின் சுயநிர்ணய உரிமையை முழுமையாக அங்கீகரிப்பது ஆகும். இயற்கை வளங்கள் மற்றும் மூலதாரங்களின் மீதான அவர்களது இறையாண்மையும் இதில் அடங்கும். இந்தியா போன்ற மூன்றாம் உலக நாடுகளில் இயற்கை வளங்களின் மீதான மக்களின் இறையாண்மை உறுதி செய்வதே சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்கும், பராமரிப்பதற்கும் அடிப்படை நிபந்தனை ஆகும். இந்த வளர்ச்சிக்கான உரிமை என்பது இயற்கை வளங்களின் மீதான மக்களின் இறையாண்மை உரிமை இந்திய அரசியல் சாசனத்தில் ஒரு அடிப்படை உரிமையாகச் (Right to Common Property Resources) சேர்க்கப்படும்போதே இப்பிரம்மாண்டமான திட்டங்களின் சுற்றுச்சூழல் நாசங்களைத் தடுத்து நிறுத்த முடியும்.

2. மிகப்பெரிய சுற்றுச்சூழல் நாசங்களை ஏற்படுத்தும் தொழிற்கழகங்களுக்கு எதிராக வழக்குகளில், ஜெகநாதன் எதிர் இந்திய அரசு வழக்கில், உச்சநீதிமன்றத்தின் (இறால் தொழிற்சாலைகளுக்கு எதிரான வழக்கு) நீதிபதிகள் திரு. குல்தீப்சிங் மற்றும் திரு. ஜாஹிர் அஹமது அளித்த தீர்ப்பில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள (11–12, 1995) "மாசுபடுத்தியவரே நஷ்ட ஈட்டை அளிக்க வேண்டும்" என்ற கொள்கையின் அடிப்படையில் (Polluter Pays Principle) மாசு ஏற்படுத்திய நிறுவனங்களை நஷ்ட ஈட்டை அளிக்குமாறு அரசு நிர்ப்பந்திக்க வேண்டும்.

3. திட்டங்களுக்கு அனுமதி பெறுவதற்கு முன் நிபந்தனையாக சமர்ப்பிக்கப் –படும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையின்படி நடத்தப்படும் பொதுவிசாரணையில் பாதிக்கப்பட்ட பகுதியில் வசிக்கும் மக்களின் பிரதிநிதி –களும் அப்பிரச்சினையை கையிலெடுத்துப் போராடும் அரசு சாரா நிறுவ –னங்களின் பிரதிநிதிகளும் பங்கேற்பதை அரசே உறுதி செய்ய வேண்டும்.

கடலோரப்பகுதியின் சூழல் முக்கியத்துவம் கருதி கடலோரப்பகுதி முறைப்படுத்து –தல் ஆணை (1991)யானது திருத்தப்படுவது உடனடியாக கைவிடப்பட வேண்டும். 1991–ம் ஆண்டின் CRZ ஆணையானது விதி விலக்கின்றி நடைமுறைப்படுத்தப் படவேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# XI. விசாரணை ஆணையங்கள்

## -பகுதி 1-

தமிழகத்தில் நடைபெற்ற சாதிக்கலவரங்களையும், அப்போது போலீசார் மேற்கொண்ட நடவடிக்கைகளையும் விசாரிக்க அரசினால் அவ்வப்போது நியமிக்கப்பட்ட விசாரணை ஆணையங்கள் பற்றியே இந்த அறிக்கை தொகுக்கப்பட்டுள்ளது.

### 1. நீதிபதி. திரு. எஸ். மோகன் விசாரணை ஆணையம் (16.07.97)

தமிழ்நாட்டில் பல ஆண்டுகளாக வகுப்புக் கலவரங்கள் அவ்வப்போது நிகழ்ந்து வருகின்றன. 1948–ல் ராஜாஜி முதலமைச்சராக இருந்தபோது ராமநாத புரத்தில் எழுந்த சாதிய மோதல்கள் அடங்க 5 நாட்களாயின. 1958–ல் எழுந்த சாதிய வன்முறைகளை அடக்கி இயல்பு நிலைக்கு திரும்ப காமராசர் அரசுக்கு 15 நாட்கள் பிடித்தன. 1989–ல் கருணாநிதி முதலமைச்சராக இருந்தபோது இத்தகைய வன்முறை அடங்க 23 நாட்கள் ஆயின. இக்கலவரங்கள் தற்சமயம் அரசின் தீவிர நடவடிக்கைகளால் ஓரளவு குறைந்தாலும் தென் மாவட்டங்களில் சாதிக் கலவரங்கள் ஏற்படக்கூடிய சூழல் தொடர்ந்து நீடித்துவருகிறது. சாதிகளை ஒழிக்கவும், தாழ்த்தப்பட்ட மக்கள் மற்றும் பிற்படுத்தப்பட்டோரின் மேம்பாட்டிற்காக அரசு பல நடவடிக்கைகளை எடுத்திருந்தும் வகுப்புக் கலவரங்கள் தொடர்வது வருந்தத்தக்கது. எனவே வகுப்புக்கலவரங்களை தடுப்பதற்கான வழிவகைகளை ஆராய உயர்மட்டக்குழு ஒன்றினை கீழ்கண்ட நபர்களுடன் அரசு அமைத்தது.

1. ஓய்வு பெற்ற உச்சநீதி மன்ற நீதிபதி குரு. எஸ் மோகன் – தலைவர்
2. திரு. கே. லெட்சுமிகாந்தன் பாரதி – உறுப்பினர், இ.ஆ.ப. – ஓய்வு
3. பேராசிரியர் டி.சுந்தரம் –சென்னை பல்கலைக் கழக சமூகவியல்–உறுப்பினர், துணைத் தலைவர்.

**இக்குழுவின் வரம்புகள்**

தமிழகத்தில் நடைபெறும் வகுப்புக் கலவரங்களின் அடிப்படைக் காரணங்களை கண்டறியவும், குறிப்பாக தென் மாவட்டங்களில் நடைபெறும் வகுப்புக் கலவரங்களுக்கான தனிப்பட்ட காரணங்களை அறியவும், கலவரங் – களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளைப் பற்றி ஆராய்வதற்காகவும் உதவும் வகையில் இக்குழுவின் அதிகார வரம்புகள் நிர்ணயிக்கப்பட்டன.

**ஆணையத்தின் முடிவுகள்**

☆ சிலைகள் நிறுவுதல், மாவட்டங்கள் மற்றும் அரசுப் போக்குவரத்து கழகங் – களுக்கு தலைவர்களின் பெயர்களைச் சூட்டுதல் ஆகியவற்றை வகுப்புக் கலவரங்களுக்கான அடிப்படை காரணங்களாக ஆணையம் கருதுகிறது.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



☆ இன்று அரசியல் சாதிய அரசியலாக மாறியிருப்பதும் முதன்மைக் காரணங்களில் ஒன்றாக ஆணையம் குறிப்பிடுகிறது.

☆ படிப்பறிவு இல்லாத, படித்துவிட்டும் வேலை வாய்ப்பு இல்லாத, பொருளாதார வளர்ச்சிக்கு வாய்ப்பற்ற இளைஞர்களே இதுபோன்ற சாதிய கலவரங்களைத் தூண்டும் சக்திகளுக்கு எளிதாக துணைபோகின்ற நிலையும் ஒரு முக்கிய காரணமாக ஆணையம் கருதுகிறது.

☆ இருவேறு சாதிகளுக்கிடையேயுள்ள சமூகப் பாகுபாடுகள் மட்டுமின்றி, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளும் சாதிய கலவரங்களுக்குக் காரணமாக உள்ளன. சாதீய மோதல்களுக்கு சமூக விரோத சக்திகளும், அவை ஊக்குவிக்கும் தொழில்களான கள்ளச்சாராயம், கந்துவட்டி, குண்டர்படை போன்றவையும் முக்கிய காரணமென ஆணையம் குறிப்பிடுகிறது. இது போன்ற சீரழிவுகளுக்கு கல்வியின்மையும், பொருளாதார ஏற்றத் தாழ்வு – களுமே காரணமென ஆணையம் கருதுகிறது.

**பரிந்துரைகள்**

1. சமூகத்தின் ஏற்றத் தாழ்வுகளை நீக்குதல் என்ற அடிப்படையில், சமூக அக்கறையுள்ள பொதுமக்கள், கல்வியாளர்கள், தகவல்தொடர்புத் துறையினர், அரசியல் கட்சிகள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், சமூக நல நிறுவனங்கள் மற்றும் நீதித்துறையினர் ஆகியோரை உள்ளடக்கிய, புதிய சமூக சீர்திருத்த இயக்கமொன்று பல்வேறு சாதிகளுக்கிடையேயான நல்லுறவை வளர்க்கும் பாலமாக உருவாக வேண்டும்.

2. சாதீய சண்டை, சச்சரவுகளைத் தீர்க்கும் வகையிலான மாறுபட்ட செயல்பாடுகளைக் கொண்ட சமாதானக் குழு ஒன்றை ஏற்படுத்தப்பட வேண்டும்.

3. மாவட்ட அளவிலான வளர்ச்சி மற்றும் நலத் திட்டங்கள் உரிய நேரத்தில் சீரிய முறையில் மக்களிடம் சென்றடைய முயற்சிக்கும் வகையில் மாவட்ட நிர்வாக அமைப்பு சீர்படுத்தப்பட வேண்டும்.

4. மக்களின் தேவைகளைப் புரிந்து கொண்ட, அதற்கென பயிற்சியளிக்கப்பட்ட, வளர்ச்சித் திட்டங்களை நிர்வகிக்கும் அமைப்பானது கிராம அளவிலிருந்து மாவட்ட அளவு வரை அமைக்கப்பட வேண்டும்.

5. சமூக விழிப்புணர்வு கொண்ட நீதி நிர்வாகத் துறையினர், குறிப்பாகக் காவல்துறையினர், தங்கள் கடமைகளைச் செவ்வனே செய்யும் வகையில், அனைத்து வகையான திறன்களையும் கொண்டவர்களாக அதிலும் குறிப்பாக மனிதநேய உணர்வுடன் சட்ட ஒழுங்கை சீர்படுத்துபவர்களாக, மெருகூட்டப் பட வேண்டும்.



தமிழ்த் தேசியப் ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


6. செய்திகளை உடனுக்குடன் தெரிவிக்கும் கடமை மட்டுமன்றி மக்கள் நலன் மற்றும் சமூகத்தில் அமைதி நல்லுறவை மேம்படுத்தும் வகையில் மக்கள் தொடர்பு சாதனங்கள் சமூக பொறுப்புணர்வுடன் பணியாற்ற வேண்டும்.

7. ஒடுக்கப்பட்ட சமூகத்தினர் மற்றும் உயர் சமூகத்தினர் ஆகிய இருவரும் இணைந்து சமூகத்தை மேம்படுத்தும் பணியில் செயலாற்றும் வகையில் ஊக்கப்படுத்தப்பட வேண்டும்.

8. கல்வி நிலையங்கள் குறிப்பாகப் பல்கலைக்கழகங்கள் மனித வள மேம்பாட்டிற்கான கல்வி பாடத்திட்டங்களை வகுத்து, அதன் மூலம் இளம் தலைமுறையினருக்கு தன்னம்பிக்கையையும் மற்றும் பொறுப்புணர்வையும் வளரச் செய்யும் வகையில் வேலைவாய்ப்புடன் கூடிய பயிற்சியினை அளிக்க வேண்டும்.

9. எல்லா வசதிகளுடன் கூடிய வெறும் குடியிருப்புகளாக மட்டுமல்லாது உற்பத்தி மற்றும் சேவை மையங்களை இணைக்கும் பொருளாதார தலங்களாக சமத்துவபுரங்கள் அறிவியல் பூர்வமாக வகுக்கப்பட்டு முழுமையாகச் செயல்படுத்தப்பட வேண்டும்.

10. கள்ளச்சாராயம் முழுமையாக ஒழிக்கப்பட வேண்டும்.

11. சமூக ஏற்றத்தாழ்வுகளை ஒழிக்கும் வகையில் அரசியலுக்கும் உயர் சாதியத்திற்கும் இடையேயான உறவை மாற்றியமைக்க புதிய சமூக மாற்றத்திற்கான சட்டங்கள் உருவாக்கப்பட்டு, முறையாக செயல்படுத்தப்பட வேண்டும்.

12. வளர்ச்சி என்பது அனைவரையும் ஒருங்கிணைக்கும் வகையில் அமைய வேண்டுமேயொழிய பிரிக்கும் வகையில் அமையக் கூடாது.

13. பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள அனைத்துச் சமூகத்தினரையும் மேம்படுத்தும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் நலத்திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். இயற்கை வளங்கள் பற்றிய வரைபடம் தயாரிக்கப்பட்டு அதனடிப்படையில் தொழிற்திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும்.

14. அடிப்படைக் கல்வித் திட்டங்கள் சிறந்தமுறையில் வகுக்கப்பட்டு, செயல்படுத்தப்படுவதுடன், அதன் செயல்பாடுகள் குறித்த முழுமையான அறிக்கைகளிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

## 2. நீதிபதி கோமதி நாயகம் விசாரணை

திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் 1995ம் ஆண்டு ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் ஆகிய மாதங்களில் ஆதி திராவிடர்கள் மற்றும் தேவர் இன மக்கள் சம்பந்தப்பட்ட மோதல்கள், சட்டம்–ஒழுங்கு பிரச்சினைக்கு வழி வகுத்த காரணங்கள் மற்றும் அதற்கான சந்தர்ப்ப சூழ்நிலைகளை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விசாரணை செய்வதற்காக 30.9.95 அன்று அமைக்கப்பட்ட ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி கோமதி நாயகம் விசாரணை ஆணையம் தனது அறிக்கையை அரசிடம் 12.3.96 அன்று சமர்ப்பித்தது. அதன்பிறகு கிடப்பில் போடப்பட்ட இந்த அறிக்கை 24.11.99 அன்று சட்டசபையின் முன் வைக்கப்பட்டது. அதிமுக ஆட்சியில் நடந்த சம்பவம் பற்றிய அறிக்கையை திமுக அரசு அதுவும் மூன்றரை ஆண்டுகளுக்குப் பிறகு வெளியிட்டுள்ளது. பலத்த எதிர்ப்புக்குள்ளாகியிருக்கும் இவ்வறிக்கையினை பற்றி அறியுமுன் மக்கள் கண்காணிப்பகத்தின், இச்சம்பவம் பற்றிய ஆய்வின் விபரங்களை இங்கு பார்ப்பது சரியாக இருக்கும்.

1995ம் ஆண்டு ஜூலை மாதம் 14ம் தேதி சாலையை மறித்துக் கொண்டும், விளையாடிக்கொண்டும் சென்ற மாணவர்களை அதட்டித் திட்டிய காரணத்திற்காக வடநத்தம்பட்டியைச் சேர்ந்த தலித் வகுப்பைச் சேர்ந்த தங்கவேலு எனும் கட்டபொம்மன் பேருந்து ஓட்டுநரை அவர் அடுத்த முறை பேருந்தில் திரும்பி வரும்போது, வீரசிகாமணி நிறுத்தத்தில் 20 பேர் கொண்ட கூட்டம் தாக்கியுள்ளது. இதனைக் கேள்விப்பட்ட வடநத்தம்பட்டி தலித் மக்கள் வீரசிகாமணிக்குச் செல்ல அங்கு தேவர் மற்றும் தலித் மக்கள் இடையே கல் வீச்சும் மோதலும் ஏற்பட்டுள்ளது. கூட்டம் கலைந்த பின் அங்கிருந்த தேவர் சிலை சிதைக்கப்பட்டது தெரியவர காவல்துறையினர் சிலையைச் சேதப்படுத்திய –வர்களைத் தேடும் பணி எனும் பெயரில் வடநத்தம்பட்டிக்குச் சென்று தலித் மக்களைக் கண்மூடித்தனமாகத் தாக்கியதுடன் 31 பேரைக் கைது செய்துள்ளனர். மேற்குறிப்பிடப்பட்ட சம்பவங்கள் இரு சமூகத்தினரிடையே இழிவான சுவரொட்டிப் போர் ஒன்றை உருவாக்கியுள்ளன.வன்முறையைத் தூண்டும் இச்சுவரொட்டிகளும், மிகைப்படுத்தப்பட்டு பரவிய செய்திகளும் பிற இடங்களிலும் மோதல்களும், பதட்டமும் பெருக காரணமாயிருந்துள்ளன.

அதன்பின்பு இரு சமூகத்தினரிடையே நிகழ்ந்த சாதிய வன்முறைகள் ஏறக்குறைய 6 மாதங்கள் நீடித்தன. இதில் மாநில நிர்வாகமும் அரசு இயந்திரங்களும் உரிய நடவடிக்கை எடுத்து பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாப்பதை விடுத்து, இதனை வெறும் சட்ட ஒழுங்குப் பிரச்சனையாகவே கணக்கில் கொண்டு தடியடிப் பிரயோகம், துப்பாக்கிச் சூடு, வீட்டுச் சோதனை, தடையுத்தரவு செய்தல் எனவும் இவற்றையெல்லாம் மிஞ்சும் வகையில் எவ்வித முன்னறிவிப்புமின்றி சிவகிரி, சிந்து பூந்துறை மற்றும் கொடியங்குளத்தில் புகாரிட வந்தவர்கள், வேடிக்கை பார்த்தவர்கள் என அனைவர் மீதும் துப்பாக்கிச் சூடு நடத்துதல் என கண்மூடித்தனமாகவே போலீஸ் செயல்பட்டுள்ளது. போலீஸ் கணக்கீட்டின் படி தலித் மக்களின் பொருளாதார அதிகார மையங்கள் என்று கருதப்பட்ட ஆலந்தா, காசிலிங்கபுரம் மற்றும் கொடியங்குளத்தில் கண்ணீர்ப்புகை, தடியடி பிரயோகம் மற்றும் துப்பாக்கிச் சூடு நடத்தியதுடன் அரிவாள், கம்பு கம்பி, கோடரி போன்ற ஆயுதங்களுடன் வீடுகளுக்குள் நுழைந்து அனைத்துப் பொருட்களையும் உடைத்து நாசப்படுத்தியும், ஆவணங்களைக் கிழித்தும், உணவுப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பொருள்களில் மண், கண்ணாடித் துண்டுகள் மண்ணெண்ணை கலந்தும், வீடுகளை சேதப்படுத்தியும், செடி கொடிகளைப் பிடுங்கியும், ஊரின் பொது குடிநீர் கிணற்றில் பெட்ரோல் பூச்சிக்கொல்லி மருந்துகளை ஊற்றியும், தெரு விளக்குகளை உடைத்தும், விலை மதிப்புள்ள நகைகள், விசிபி, விசிஆர், டீவி, கடிகாரங்கள், கேமராக்கள் ஆகியவற்றை திருடியும் சூறையாடியுள்ளனர். பெண்களையும், குழந்தைகளையும் கண்மூடித்தனமாகவும், கொடூரமாகவும் தாக்கி கண்ணியமற்ற முறையில் நடத்தியதுடன் 42 பேரைக் கைது செய்துள்ளனர். போலீஸ்தரப்பிலிருந்து அவிழ்த்துவிடப்பட்ட இந்த வன்முறைக்கு "வெடி பொருட்களையும் ஆபத்தான ஆயுதங்களையும் கைப்பற்றும் வீனஸ் நடவடிக்கை" என்று பெயர் வைக்கப்பட்டது.

கொடியங்குளம் சம்பவம் மாவட்டத்திலுள்ள அனைத்து ஊர்களிலும் அதிர்ச்சி அலைகளை பரப்பியது. காவல்துறையினரின் செயல்களைக் கேள்விப் – பட்ட பல்வேறு தலித் இயக்கத் தலைவர்களும், அரசியல் கட்சிகளின் தலைவர்களும் கொடியன்குளம் விரைந்தனர். 5.9.95 அன்று டிஜிபி வைகுந்த் சம்பவ இடத்திற்கு வந்தார். இத்தகைய அட்டூழியங்களைக் கண்டித்து 6.9.95 அன்று சென்னை மெரினா கடற்கரையில் தேவேந்திர குல வேளாளர் கூட்டமைப்பு நடத்திய பேரணியில் சுமார் 40,000 பேர் பங்கு கொண்டனர். இப்பேரணியில் ஒரு வன்முறைக் கும்பல் ஊடுருவி குழப்பத்தை ஏற்படுத்தி, காவல்துறையினரின் துப்பாக்கிச் சூட்டிற்கும் வழி வகுத்தது. 3 பேர் சம்பவ இத்திலேயே இறந்தனர். 23 பேர் காயமடைந்தனர்.தமிழகமெங்கும் கொந்தளிப்பை ஏற்படுத்திய இச்சம்பவங்கள் மற்றும் எதிர்ப்புகளைத் தொடர்ந்து அன்றைய அதிமுக அரசு மாவட்ட நீதிபதி (ஓய்வு) கோமதி நாயகம் தலைமையில் விசாரணை ஆணையம் ஒன்றினை 30.9.95 ஏற்படுத்தியது.

தேவேந்திர குல வேளாளர் கூட்டமைப்பினர் சிபிஐ விசாரணை கோரியும் அரசு அமைத்துள்ள நீதி விசாரணையை வெறும் கண்துடைப்பாகவும் இழப்பீடு தொகை ரூ.50,000 வழங்குவதன் மூலம் இச்சம்பவங்களை மறைப்பதாகக் கூறி மறியலை நடத்தினர். இதனால் அரசு அமைத்துள்ள விசாரணை ஆணையத்தை பெரும்பாலான தலித் மக்கள் புறக்கணிப்பு செய்தனர். உறுதிமொழிப் பத்திரமோ அல்லது சாட்சியமோ அளிக்க முன்வரவில்லை. இந்நிலையில்தான் நீதிபதி கோமதி நாயகம் விசாரணையை சுமார் 6 மாதகால அவகாசத்தில் நடத்தி முடித்து 12.3.96 அன்று அறிக்கையையும் சமர்ப்பித்தார்.

ஆய்வின் வரம்புகளாக திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங் – களில் நடந்த சாதிய மோதல்களுக்கான காரணங்கள் பின்னணி பற்றி அறிதல், கொடியன்குளத்தில் நடந்ததாகக் கூறப்படும் காவல்துறையினரின் அத்துமீறல்கள் பற்றி ஆய்தல், மக்களுக்கு ஏற்பட்ட பொருட்சேதங்களின் மதிப்பு, மோதலினாலும் காவல்துறையினராலும் ஏற்பட்ட சேதத்திற்கு உரிய இழப்பீடுகளைப் பரிந்துரைத்தல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மற்றும் எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் நிகழாமல் தடுக்க பரிந்துரைகள் ஆகியவை கொடுக்கப்பட்டன.

விசாரணை ஆணையம் தனது விசாரணையை 4.10.95ல் துவக்கியது. இச்சம்பவத்தை அறிந்தவர்கள், பாதிக்கப்பட்டவர்களிடம் இருந்து வாக்குமூலங்கள் பெறப்பட்டு, அதனடிப்படையில் மாவட்ட நிர்வாகம் மற்றும் காவல்துறையினர் சார்பில் 26 சாட்சிகளும், பொதுமக்களின் சார்பில் 133 சாட்சிகளும் நேரில் விசாரிக்கப்பட்டனர். 1995 அக்டோபர் 9ம் தேதி கொடியன்குளத்தையும், 10–ம் தேதி சிவகிரியையும், 21–ம் தேதி வீரசிகாமணியையும் ஆணையம் பார்வையிட்டு ஆய்வு செய்தது. மற்ற கிராமங்களுக்கு பிப்ரவரி மாதம் 5 மற்றும் 6ம் தேதிகளில் சென்றது.

**விசாரணை முடிவுகள்**

☆ வாக்குவாதமே இத்தகைய பெரிய மோதலுக்கு காரணமாகியது. இந்தச் சாதிய மோதலில் ஈடுபட்டதாகக் கூறப்படும் தேவர் சமூகத்தினர் பொருளாதார நிலையிலும், சமூக அளவிலும் அந்தஸ்துடன் விளங்குவதால், அவர்கள் கலவரத்தை தூண்டுவதற்கு வாய்ப்பில்லை.

☆ சாதிய உணர்வு வேரூன்றி இருக்கும்வரை, இத்தகைய மோதல்களை தடுப்பது என்பது மிகவும் கடினமாகும். மிகவும் கடினமான காரியமென்றாலும் சாதிய வேறுபாடுகளை அனைத்து நிலைகளிலும் களைய வேண்டும்.

☆ கொடியங்குளத்தில் நிகழ்த்தப்பட்டதாகக் கூறப்படும் காவல்துறையினரின் அத்துமீறல்கள் எத்தகையதாக இருப்பினும் மக்கள் தொடர்பு சாதனங்கள் உண்மை என்னவென்று அறிந்து கொள்ளாமல், பிரச்சினையை ஊதிப் பெரிதாக்கியுள்ளன. காவல்துறையில் அடிப்படையிலேயே ஏதோ பெரிய தவறு இருப்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்திவிட்டன. இச்சம்பவத்தைப் பொருத்தமட்டில் அரசுக்கு எதிரானவர்களின் ஒரே நோக்கம் அரசுக்கு எதிராக களங்கம் ஏற்படுத்துவதே ஆகும். பெரிதும் பேசப்படும் கொடியங் – குளம் மக்களின் செல்வாக்கினைப் பற்றி போதிய ஆதாரங்கள் இல்லை எனினும் நம்பத் தகுந்த ஆதாரங்கள் மூலம் பல்வேறு இடங்களில் கொள்ளை அடிக்கப்பட்ட பொருட்கள் மற்றும் ஆயுதங்கள் கொடியங்குளத்தில் இருப்பதாக தெரியவந்ததன் அடிப்படையிலேயே காவல்துறையினர் தேடுதல் வேட்டையை நடத்தியுள்ளனர். அதிகாரிகள் உட்பட 100–க்கும் குறைவான காவலர்களே சென்றிருக்கையில் 500 காவலர்கள் சென்றதாகத் தவறான தகவல் பரப்பப்பட்டுள்ளது. ஆயினும் கொடியங்குளத்தில் பத்திரிக்கைகள் மற்றும் சாதனங்கள் குறிப்பிட்டது போல அத்துமீறல்கள் நடைபெறவில்லை. அதுபோல் காவல்துறையினர் மற்றும் பிற சாட்சிகள் கூறியது போன்ற எந்த நிகழ்வும் நடைபெறவில்லை.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


☆ கூடுதலாக 60 நபர்களுக்கு ரூ.15,000 முதல் ரூ.30,000 வரை இழப்பீடும் 30 நபர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட தொகையே போதுமானது என்றும் ஆணையம் பரிந்துரைத்தது.

☆ சிவகிரி, சங்கதங்குறிச்சி மற்றும் கொடியங்குளம் ஆகிய ஊர்களில் முறையே ஜூலை 30/95, ஆகஸ்டு 25/95 மற்றும் ஆகஸ்டு 31/95 ஆகிய தேதிகளில் **நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு அவசியமானதும் நியாயமானதுமென்றும்** ஆணையம் கருதுகிறது.

***பரிந்துரைகள்***

ஆணையம் இதுபோன்ற நிகழ்ச்சிகள் எதிர்காலத்தில் நிகழாமல் தடுக்க

1) பொது இடங்களில் சிலைகள் அமைப்பதை தடைசெய்வது மற்றும் தற்போது இருக்கும் சிலைகளை அருங்காட்சியகம் அல்லது கோயில்களுக்கு மாற்றுவது,

2) எந்த சமூகத்தினருக்கும் கொடுக்கப்படும் சிறப்புச் சலுகைகளை முற்றிலும் ஒழிப்பது,

3) கல்லாமையை அகற்ற நீண்டகால திட்டங்களை வகுத்தல்,

4) எந்த சமூகத்தைச் சேர்ந்தவராயினும் பொருளாதார நிலையில் பின் தங்கியிருப்போரின் நிலையை உயர்த்துதல்,

5)

அ. பொதுத்துறை வாகனங்களின் ஓட்டுனர் மற்றும் நடத்துனர் ஆகியோருக்கு நடத்தை முறையைக் கற்றுத் தருதல்,

ஆ. காவல்துறையின் கீழ்மட்ட காவலர்களுக்குப் பொதுமக்களிடம் மரியாதையுடன் நடக்கக் கற்றுத்தருதல்

இ. தற்போது பதவியிலிருக்கும் திறமையும், நேர்மையுணர்வும் கொண்ட அதிகாரிகள் திரு ஜாங்கிட் போன்றோரை தூத்துக்குடி நெல்லை மாவட்டங்களிலும் பதவியிலமர்த்துதல்

6) தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து வருவாய்த் துறை மூலம் பாதிக்கப்பட்டோருக்கு உரிய இழப்பீடு தொகை வழங்குதல்.

7) தங்கள் கிராமங்களை விட்டு வெளியேறியவர்களை மறுபடியும் குடியமர்த்த அரசு ஏதாவது ஒரு துறையின் மூலம் ரோட்டரி சங்கம் போன்ற தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து ஆவண செய்தல்,


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**ஆணையத்தின் பரிந்துரைகள் மீதான அரசின் நடவடிக்கைகள்**

1. அரசு வரம்பு 1–க்குட்பட்ட விசாரணை ஆணையத்தின் முடிவுகளை பதிவு செய்து கொண்டுள்ளது.

2. ஆணையம் வரம்பு 2 மற்றும் 4–ன் கீழ் அளித்துள்ள பரிந்துரைகளை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

3. வரம்பு 3–ன் கீழ் ஆணையம் இழப்பீடு தொடர்பாக அளித்த பரிந்துரை – களையும் அப்படியே ஏற்றுக் கொண்டுள்ளது.

4. வரம்பு 5–ன் கீழ் ஆணையம் இது போன்ற நிகழ்வுகள் நிகழாமல் தடுக்க பரிந்துரைத்தவைகளை கருத்தில் கொள்கிறது. மேலும் அது குறித்த ஆணைகள் பிறப்பிக்க அரசின் சம்பந்தப்பட்ட துறைகளால் மேலும் விரிவாக பரிசீலிக்கப்படலாம் என அரசு முடிவு செய்துள்ளது.

5. ஆணையம் கூறிய 60 குடும்பத்தினர் இச்சம்பவத்தின்போது வெளியூர்களில் போய் தங்கிவிட்டவர்களில் மீண்டும் திரும்பிவர விருப்பம் தெரிவிப்பவர்களை அரசு முயற்சி எடுத்து மீண்டும் குடியமர்த்த முனையும்.

### 3. நீதிபதி கோகுலகிருஷ்ணன் விசாரணை ஆணையம்

1997–ம் ஆண்டு நவம்பரில் கோவையில் காவலர் செல்வராஜ் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட கலவரம், 1998 பிப்ரவரியில் நடந்த குண்டு வெடிப்புச் சம்பவங்களைத் தொடர்ந்து ஏற்பட்ட கலவரம் ஆகியவை குறித்து உச்சநீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி பி.ஆர். கோகுலகிருஷ்ணன் தலைமையிலான விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டது.

காவலர் கொலையைத் தொடர்ந்து கலவரம் எற்பட்டதற்கான சூழ்நிலை, மோதலுக்குக் காரணமான நபர்கள், சூழ்நிலைகள், எதிர்காலத்தில் தவிர்க்கத் தேவையான வழிமுறைகள் குறித்து கடந்த ஆண்டின் விசார்ணை முடித்து ஆணையம் அறிக்கையை சமர்ப்பித்தது.

குண்டு வெடிப்புச் சம்பவத்திற்கான காரணங்கள், தனிநபர் மற்றும் சூழ்நிலை, தவிர்க்கத் தேவையான ஆலோசனைகள், சேதம் மற்றும் இழப்பீடு குறித்து கடந்த ஒரு ஆண்டாகக் கோவையிலும் சென்னையிலும் தொடர்ந்து இந்த ஆணையம் விசாரணை நடத்தி வந்தது.

அரசியல் கட்சிகள், சமுதாய அமைப்புகளின் தலைவர்கள், முக்கிய பிரமுகர்கள், காவல்துறை அதிகாரிகளிடம் விசாரணை நடத்தியதோடு, பாதிக்கப் –பட்டோருக்கு ஏற்பட்ட சேத விபரத்தையும் நீதிபதி கோகுல கிருஷ்ணன் கேட்டறிந்தார். குண்டு வெடிப்பைத் தொடர்ந்து கலவரத்தில் பாதிக்கப்பட்ட சுமார் 600 பேரிடம் விசாரணை நடத்தி அவர்களுக்கு வழங்கவேண்டிய இழப்பீடு குறித்தும் அறிக்கை தயாரித்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


மேலும் குண்டு வெடிப்புச் சம்பவம் நடந்ததற்கான சூழ்நிலைகள், தனிநபர் அல்லது அமைப்புகள் குறித்தும் எதிர்காலத்தில் இது போன்ற சம்பவங்களைத் தவிர்ப்பதற்கான வழிமுறைகள், ஆலோசனைகள் குறித்த அறிக்கையை கடந்த 1999 ஜனவரி மாத இறுதியில் முதல்வரிடம் சமர்ப்பித்துள்ளார்.

இவ்வறிக்கை இன்றும் வெளியிடப்படவில்லை.

## 4. நீதிபதி முருகேசன் விசாரணை ஆணையம்

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானலிலிருந்து 26 கி.மீ தூரத்தில் உள்ள கூக்கால் பஞ்சாயத்தில் குண்டுப்பட்டி, விடுதலைநகர், பாரதிநகர் ஏ காலனி, பி காலனி, என உள்ள 10 கிராமங்களில் இலங்கையிலிருந்து சாஸ்திரி – சிரிமாவோ ஒப்பந்தத்தின்படி தாயகம் திரும்பியோர் குடியமர்த்தப்பட்டுள்ளர். இவர்களில் பெரும்பாலோர் தாழ்த்தப்பட்வர்கள். சுமார் 20,000 பேர் வாழ்ந்துவரும் இக்கிராமங்களுக்குப் பள்ளிக்கூட வசதி, மருத்துவ வசதி, சாலை வசதி போன்ற அடிப்படை வசதிகள் இல்லை. கடந்த 14 வருடங்களாக இவ்வடிப்படை வசதிகளுக்காக போராடியும் அரசால் அவை நிறைவேற்றப்படவில்லை. சந்தை – களுக்கு விவசாயப் பொருட்களைக் கொண்டு செல்ல 10 கி.மீ. தூரத்தில் உள்ள பூம்பாறை வரை தலைச்சுமையாகவோ, குதிரைகள் மூலமாகவோ கொண்டுவந்து லாரிகளில் ஏற்ற வேண்டிய நிலை, சுகவீனம் அடைந்தவர்களை தோள்களில் சுமந்து கொண்டு செல்ல வேண்டிய நிலை. இதனால் வெறுப்படைந்த அப்பகுதி மக்கள் 12–வது பாராளுமன்றத் தேர்தலைப் புறக்கணிக்க முடிவு செய்தனர். 1998–ம் வருடம் பிப்ரவரி 18–ம் தேதியன்று தி.மு.க. கட்சிப் பிரமுகரும் கொடைக்கானல் பஞ்சாயத்து தலைவருமான திரு. வடிவேலு பி காலனி மக்களிடம் பேசி சமாதானம் செய்துள்ளார். அவரது வாக்குறுதிகளை நம்பாது தங்களது முடிவில் உறுதியாயிருப்பதைக் கண்ட வடிவேலு அவர்களை பழிவாங்குவதென முடிவு செய்தார்.

18.12.98 அன்று இரவில் கொடைக்கானல் காவல்நிலையத்தைச் சேர்ந்த காவலர்கள் குடிபோதையில் பி காலனிக்குள் வந்து விசாரித்துவிட்டு அவர்களை கீழ்த்தரமான கெட்ட வார்த்தைகளால் திட்டியதுடன் அவர்களில் சிலரை பிடித்து ஜீப்பில் ஏற்ற முற்பட, கிராம மக்கள் தடுக்கவே வேறுவழியின்றி காவலர்கள் சென்றுவிட்டனர். மறுபடியும் 19–ம் தேதி காலையில் ஆய்வாளர் கலைமோகன் மற்றும் கோட்டாட்சியர் முத்துசாமி தலைமையில் வந்த 50–க்கும் மேற்பட்ட துப்பாக்கி ஏந்திய காவலர்கள் எந்த விசாரணையும் மேற்கொள்ளாமல் காவலர் – களின் வாகனத்தை அடித்து நொறுக்கியதாகவும், காவலர்களின் சீருடைகளை அவிழ்த்து எரித்ததாகவும் கிராம மக்கள் 113 பேர் மீதும் மற்றும் 300 பேர் மீதும் பொய் வழக்குகள் பதிவு செய்து மேற்படி 13 பேரையும் பிப்ரவரி 24–ம் தேதிக்குள் ஒப்படைக்கும்படி கிராமத் தலைவர்கள் 5 பேரிடம் கையெழுத்து வாங்கிக் கொண்டு சென்றுவிட்டனர்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எனினும் கிராம மக்கள் தங்கள் முடிவில் உறுதியாக இருந்து தேர்தலில் வாக்களிக்கவில்லை. இது தி.மு.க.வினரை கடுங்கோபத்திற்கு ஆளாக்கியது. இதன் விளைவாக பிப்ரவரி 26-ம் தேதி விடுதலை நகரிலும், பி காலனியிலும் பழனி காவல்துறை துணை கண்காணிப்பாளர் காளிமுத்து தலைமையில் சுமார் 100 ஆண்காவலர்களும், 30 பெண் காவலர்களும் தி.மு.க அடியாட்களும் நுழைந்துள்ளனர். காலை 9 மணி முதல் 1 மணி வரை வயதானவர்களையும், பெண்களைத் துப்பாக்கி முனைகளாலும், லத்தியாலும், பூட்ஸ் காலாலும் அடித்து உதைத்துள்ளனர். குழந்தைகளைத் தூக்கி முட்புதர்களில் வீசியுள்ளனர். வீடுகளையும், கடைகளையும் அடித்து நொறுக்கி கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். சாதியைச் சொல்லியும் குறிப்பாக பெண்களைக் கேவலமான அசிங்கமான வார்த்தைகளால் திட்டிச் சென்று விட்டனர். இப்படி காவலர்களின் பூட்ஸ் கால்களின் தாக்குதல்களுக்கு ஆளான மூன்று கர்ப்பிணி பெண்களுக்கு கருச்சிதைவு ஏற்பட்டுள்ளது.

அதன்பிறகு பாரதி நகர் பி காலனியைச் சேர்ந்த 25 பேர்களை மட்டும் கைது செய்து கொண்டு மாவட்ட ஆட்சியரிடம் அமைதியான முறையில் கைது செய்து வந்ததாக அறிக்கையும் கொடுத்துள்ளனர்.

சம்பவத்தை அறிந்த தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து நடந்த சம்பவத்தின் அறிக்கையை ஆட்சியரிடம் வழங்கிய பிறகே உண்மையை அறிந்து அதிர்ச்சியுற்ற ஆட்சியர் உடனடி நிவாரணம் வழங்க உத்தரவிட்டுள்ளார். அரசிற்கு உடனடி அறிக்கையையும் அளித்துள்ளார். அதன் பின்பு மக்கள் இயக்கங்களும், அரசுசாரா அமைப்புகளும் கண்டன ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள், உண்ணாவிரதம் போன்று பல்வேறு வழிகளில் குரல் கொடுத்ததன் எதிரொலியாக முதல்வர் முதலில் உயர்மட்டக்குழு ஒன்றை அனுப்பி விசாரித்து அறிக்கையினைப் பெற்று அதன்பின்பு ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி திரு. முருகேசன் தலைமையில் விசாரணை ஆணையம் ஒன்றை அமைத்தார்.

14.03.98 தேதியில் வெளியிடப்பட்ட அரசாணையின் கீழ் 3 மாதங்க – ளுக்குள் விசாரணை நடத்தி அறிக்கை தர வேண்டுமென்றதைத் தொடர்ந்து விசாரணை துவங்கியது. 3 மாதங்களுக்குள் விசாரணை முடியாததால் முதலில் 2 மாதங்களுக்கும் பிறகு 1 மாதத்திற்கும் ஆக அவகாசம் நீட்டிக்கப்பட்டது.

விசாரணை ஆணையம், கீழ்க்கண்ட அரசு வெளியிட்ட 14.03.98 தேதியிட்ட அரசு ஆணை (எண் 408) – யின்படி வரம்புகளைக் கொண்டிருந்தது

அ. 26.02.98 அன்று குண்டுப்பட்டி கிராமத்திற்கு, பழனி காவல்துறைத் துணைக் கண்காணிப்பாளர் தலைமையின் கீழ் 35 பெண் காவலர்கள் உட்பட மொத்தம் 130 காவல் படையினர் போக நேரிட்ட அவசியமும், காரணங்களும் என்ன ?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆ. அந்தக் காவல்துறையினருடன் சமூக விரோத சக்திகள் சேர்ந்து பாரதிநகர் பி காலனி மற்றும் விடுதலை நகர் கிராமவாசிகளைத் தாக்கி பொருட்களைச் சேதப்படுத்தினார்களா ?

இ. உண்மையிலேயே காவல்துறையினர் அத்துமீறி நடந்தனரா ? அப்படியானால் அப்படி நடந்துகொண்டவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் ? **காவல்துறையினர் அத்துமீறலினால்** காயம்பட்டவர் **களுக்கும், பொருட்சேதம்** அடைந்தவர்களுக்கும் யார் யாருக்கு எவ்வளவு இழப்பீடு கொடுக்க வேண்டும் ?

ஈ. இம்மாதிரி சம்பவங்கள் எதிர்காலத்தில் நடவாமலிருக்க என்ன முன் நடவடிக்கைகள் எடுக்கலாம் ?

விசாரணை ஆணையம் பதிவு செய்யப்பட்ட வாய்மொழி மற்றும் ஆவணச் சாட்சியங்களைக் கவனமுடன் பரிசீலனை செய்த பின்னர் ஆய்வு வரம்புகள் குறித்து அதன் முடிவுகளை செப்டம்பர் 11–ம் தேதி அறிக்கையாகத் தமிழக அரசிடம் சமர்ப்பித்தது. இவ்வறிக்கை நவம்பர் 23–ம் தேதி சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

### ஆணையத்தின் விசாரணை முடிவுகள்

(அ) வரம்பு ஒன்றின் முடிவு – 130 காவலர் கொண்ட படை குண்டுப்பட்டி போக நேரிட்ட அவசியமும் காரணமும்

18.02.98 அன்று மாலையில் தேர்தல் பிரச்சாரத்திற்குக் குண்டுப்பட்டிக்கு சென்ற கொடைக்கானல் ஊராட்சி ஒன்றியத்தலைவர் திரு.வடிவேலுவையும், அவருடன் சென்றவர்களையும் குண்டுப்பட்டி கிராமத்தினர் வன்முறையைக் கையாண்டு தடுத்ததும், அன்று இரவு அவரைத் தேடிப்போன காவல் படையில் ஐந்து காவலர்களை கிராமத்தினர் சிறைபிடித்து அவமானப்படுத்தி அவர்களில் இரு காவலர்களின் சீருடையில் பாதியைத் தீயிட்டுக் கொளுத்தியதும், அந்த குற்றத்தைச் செய்த குற்றவாளிகளைக் கைது செய்ய 19.02.98 அன்று சென்ற காவல்படை கைது செய்ய முடியாமல் போனதும்தான் 26.02.98 அன்று 35 பெண் காவலர்கள் உட்பட 130 காவல்துறையினர் துணைக் கண்காணிப்பாளர் காளிமுத்து தலைமையில் சென்றதற்குக் காரணம்.எனவே 26.02.98 அன்று குண்டுப்பட்டிக்கு துணைக் கண்காணிப்பாளர் காளிமுத்து தலைமையில் அவ்வளவு பெரிய படை போனது சரியானதும், நியாயமானதும் தான் என்று ஆணையம் கருதுகிறது.

***(ஆ) வரம்பு இரண்டிற்கான முடிவு***

26.02.98 அன்று விடுதலை நகர் மற்றும் பி காலனிக்கு காவல்படையுடன் சமூக விரோதிகளும் சேர்ந்து போய் கிராம மக்களைத் தாக்கி, வீடுகளை அடித்து நொறுக்கிச் சேதப்படுத்தினார்கள் என்பது உண்மைதான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



*(ஆ) வரம்பு மூன்றிற்கான முடிவு*

மேற்படி நடவடிக்கையில் அந்த கிராமத்திலிருந்து ஆண்கள், பெண்கள் சிலரை அடித்துக் காயப்படுத்தியும், பொருட்களைச் சேதப்படுத்தியும் காவல் துறையினர் அத்துமீறி நடந்து கொண்டுள்ளனர். இதற்கு அந்த காவல் படைக்குத் தலைமை வகித்துச் சென்ற பழனி நகர துணைக் கண்காணிப் –பாளர் காளிமுத்தும், அவருடன் சென்ற சின்னச்சாமி அருளானந்தம், கலியமூர்த்தி மற்றும் கலைமோகன் ஆகிய நான்கு ஆய்வாளர்களும் தான் பொறுப்பு. அத்துமீறல் நடந்த சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம் என்று விசாரணை ஆணையம் பரிந்துரை செய்துள்ளது.

மேலும் ஏற்கனவே அரசு இடைக்கால நிவாரணமாக ரூ 5,16,000 நீங்கலாக அறிக்கையுடன் இணைத்து அளித்திருக்கும் பட்டியலில் உள்ளபடி விடுதலைநகர் வாசிகளுக்கு 2,78,000 மற்றும் பி காலனிவாசிகளுக்கு ரூ.3,15,500 கூடுதலாக இழப்பீடு வழங்க விசாரணை ஆணையம் பரிந்துரை செய்துள்ளது.

**ஆய்வு வரம்பு நான்கு - பரிந்துரைகள்**

1. உடனடியாக குண்டுப்பட்டியையும், அதைச் சேர்ந்த சிற்றூர்களையும் பூம்பாறையையும் இணைத்து நல்ல சாலை வசதி, அடிப்படை வசதிகளை உடனே செய்து தர வேண்டும்.

2. பூம்பாறையில் இயங்கி வரும் சமூக சேவை அமைப்புகள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட வேண்டும்.

3. குண்டுப்பட்டி கிராம மக்களின் இயல்பு வன்முறையை அடிப்படையாக கொண்டு இருப்பதால், அவர்களைக் கண்காணிக்கவும் மற்றும் சமூக விரோத செயல்களையும், குற்றவாளிகளையும் தடுக்கவும், தண்டிக்கவும் வசதியாக பூம்பாறையில் ஒரு முழு சகல வசதிகளுடன் கூடிய காவல் நிலையம் அ...மைக்க வேண்டும்.

4. இப்பகுதியில் நிறைய மரங்கள் வெட்டப்பட்டு திருடு போவது விசாரணையில் தெரிய வருவதாலும், அதில் பெரும் புள்ளிகள் ஈடுபட்டிருப்பதாகவும் அவர்களில் சிலர் குண்டுப்பட்டி மக்களின் பின்னாலிருந்து அவர்களை இயக்கி வருவது தெரிவதாலும் இதனை தடுக்க காவல்துறையையும், வனக்காவல் துறையையும் பலப்படுத்த வேண்டும்.

5. குண்டுப்பட்டி மக்களின் நடவடிக்கைகளைக் கண்காணிக்க அப்பகுதிக்குப் போய் வர 4 சக்கர இயக்க ஜீப்புகள் கொடை காவல்நிலையத்திற்கு உடனடியாக வழங்கப்பட வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



6. வெளிநாடுகளிலிருந்து நம் நாட்டிற்கு குடியேற்றப்படும் மக்களை எளிதாகச் சென்றடைய முடியாத குண்டுப்பட்டி போன்ற பகுதிகளில் குடியமர்த்துவதைத் தவிர்த்து எளிதாக அவர்களை கண்காணிக்கும் வசதியுள்ள இடங்களில் குடியமர்த்த வேண்டும். அவ்வாறு அமர்த்தும்போது அடிப்படை வசதிகளையும் செய்து தர வேண்டும்.

7. காவல்துறையின் அடிமட்டத்தில் இருப்பவர்களுக்கு மக்களிடம் நல்ல பெயர் வாங்கும் பண்பாட்டை பயிற்றுவிக்க வேண்டும்.

விசாரணை ஆணைத்தின் அனைத்து முடிவுகளையும் அரசு ஏற்றுக் கொண்டு தொடர்புடைய காவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும், பரிந்துரைக் –கேற்ப இழப்பீடு வழங்கவும் உத்தரவிட்டுள்ளது.

சமூக விரோதிகளின் ஈடுபாட்டுடன் குண்டுப்பட்டியில் நடந்த காவல் துறையின் அத்துமீறலை உறுதிப்படுத்திய இவ்வாணையத்தின் அறிக்கை வரவேற்கத்தக்கதாக இருப்பினும், வரம்பு 4–ன் கீழாக அளிக்கப்பட்ட கிராமங்களுக்கு காவல்படை போவதற்கு ஆணையம் கூறும் காரணங்களை – குண்டுப்பட்டி மக்களை, உரிமைகளைக் கேட்கின்ற மக்களை, வன்முறையாளர்கள் என்று முத்திரை குத்தியதையும், அங்கு செயல்படும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் சமூக அமைப்புகளை கண்காணிக்கும்படி கூறியுள்ளதும் கண்டிக் –கத்தக்கது. ஆணையத்தின் முடிவுகள் அனைத்தும் மனித உரிமை மீறல்களை ஆமோதிக்கும் தொனியிலும், சட்ட ஒழுங்கு சீர்கேடு, காவல் துறையினரை பலப்படுத்துதல் மற்றும் மீறல்களை சுட்டிக்காட்டும் அமைப்புகளை கண்காணித்தல் என்ற பாரபட்சமான தொனியிலும் உள்ளது.

## 5. நீதிபதி மோகன் விசாரணை ஆணையம்

கடந்த ஜூன் மாதம் 23–ம் தேதி மாஞ்சோலை தேயிலை தோட்டத் தொழிலாளர் பிரச்சனைக்காக பேரணி ஒன்று நடத்தப்பட்டது. அதில் புதிய தமிழகம் கட்சி தலைவர் டாக்டர். கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ, எதிர் கட்சித் தலைவர் சோ. பாலகிருஷ்ணன், த.மா.கா எம்.எல்.ஏக்கள் சட்டமன்ற உறுப்பினர்கள், அப்பாவு, வேல்துரை, ஆரூண், நெல்லை மாவட்ட மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு செயலாளர் பழனி மற்றும் ஆயிரக்கணக்கான தொண்டர்கள் கலந்து கொண்டார் –கள். பேரணி முடிவுல் காவலர்கள் நடத்திய கொடூரத் தாக்குதலில் 17 பேர் உயிரிழந்தனர். இச்சம்பவத்தை தமிழகத்தில் உள்ள அனைத்து எதிர்க்கட்சிகளும் வன்மையாக கண்டித்தன. பொதுமக்களின் கோரிக்கை, உண்ணாவிரதப் போராட்டங்களைத் தொடர்ந்து தமிழக அரசு ஒய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி மோகன் மூலமாக விசாரணை கமிஷன் ஒன்றை அறிவித்தது. கடந்த 1999–ம் வருடம் செப்டம்பர் மாதம் 20–ம் தேதி விசாரணையை துவக்கிய கமிஷன் இதுவரை நான்கு அமர்வுகளை நடத்தியுள்ளது. பலதரப்பட்ட மக்களின் சாட்சியங்களை கேட்டறிந்துள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விசாரணை ஆணையம் தனது முடிவுகளை அறிக்கையாக முதல்வரிடம் சன்ர்ப்பித்துள்ளது. ஆனால் அந்த அறிக்கை இன்னும் வெளியிடப்படவில்லை.

**6. நீதிபதி மருதமுத்து விசாரணை ஆணையம்**

சென்னை அரும்பாக்கத்திலுள்ள திரு.இரமணய்யா என்பவருக்கு சொந்தமான ஸ்ரீ விக்னேஸ்வரா டிரேடர்ஸ் என்ற இரும்புக் கடையில் பணிபுரிந்து வந்த திரு. அருண் என்பவரும், திரு.ரவி என்பவரும் கடையிலிருந்து 2,25,000– ரூபாயை திருடி பங்கிட்டுக் கொண்டதாகவும் இதற்காக கடை உரிமையாளரால் அளிக்கப்பட்ட புகாரின் பேரில் விசாரணை செய்வதற்காக ரவியின் மனைவி சித்ரா அமைந்தகரை போலீஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டதாகவும் அங்கு அவர் மானபங்கப்படுத்தப்பட்டதாகவும், அதனால் மனம் உடைந்த சித்ரா தனது வீட்டில் தூக்குப் போட்டு தற்கொலை செய்து கொண்டதாகவும் கூறப்பட்ட புகார்களை விசாரிக்க தமிழக அரசினால் நீதிபதி எம். மருதமுத்து தலைமை – யிலான இந்த விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டது. (1998 ஆம் ஆண்டு நவம்பர் 30–ம் தேதியிட்ட அரசு ஆணை எம்.எஸ். எண்.1927, பொதுச் சட்டம் மற்றும் ஒழுங்கு துறை)

**ஆணையத்தின் வரம்புகள்:**

(1) 1998ம் ஆண்டு அக்டோபர் 13ம் தேதியன்று திருமதி சித்ரா மரணமடைந்ததற்கான காரணம் மற்றும் சூழ்நிலைகளையும்

(2) 1998ம் ஆண்டு அக்டோபர் 12 மற்றும் 13ம் தேதிகளில் போலீசாரால் சித்ரா மானபங்கப்படுத்தப்பட்டதாக கூறப்படுவதையும்

(3) திருட்டு வழக்கில் சம்பந்தப்பட்ட திருமதி சித்ராவின் கணவர் ரவியை விசாரிக்கும்போது தவறிழைத்த போலீசாரையும் விசாரிக்கும்.

இந்த ஆணையம் இவ்வழக்கு தொடர்பாக சாட்சியம் மற்றும் பிரமாணப் பத்திரங்களை பெறுவதற்கான இறுதி தேதியாக 1999ம் ஆண்டு பிப்ரவரி 20–ம் தேதியை அறிவித்து பின்னர் அதனை பிப்ரவரி 25ம் தேதி வரை நீட்டித்தது. 1999ம் ஆண்டு ஜுலை 7ம் தேதியன்று விசாரணை துவங்கியது. இந்த விசாரணை அமர்வுகளில் மொத்தம் 25 சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர்.

**ஆணையத்தின் முடிவுகள்:**

**வரம்பு ஒன்றுக்கான விசாரணை முடிவு**

அருணும் ரவியும் கூட்டுச் சேர்ந்து இரும்புக் கடையிலிருந்து 2,25,000–ம் ரூபாயை திருடி பங்கிட்டுக் கொண்டதாக குற்றத்தை ஒப்புக் கொண்டதன் பேரில் இருவருக்குமே மாநகர நடுவர் மன்றத்தினால் 3 மாத காலம் கடுங்காவல் சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இதில் இருவருமே குற்றத்தை ஒப்புக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொண்டு திருடிப் பங்கிட்டுக் கொண்ட பணத்தை திரும்பத் தருவதற்காக போலீசார் மேற்கொண்ட நடவடிக்கையின் போது அருண் என்பவர் மைதானத்தில் மறைத்து வைத்திருந்த 1,26,500–ஐ எடுத்துக் கொடுத்துள்ளார். ரவி என்பவர் தனது பங்கிலிருந்து 10,000 ரூபாயை மட்டுமே திருப்பிக் கொடுத்துள்ளார். மீதி பணத்தை ஒளித்து வைத்திருந்த இடம் தேடிக் கண்டுபிடிக்க முடியாதபடி இருட்டாக இருக்கிறது என்று காரணம் கூறி மறுநாள் எடுத்துத் தருவதாகக் கூறியதனால் அருணும், ரவியும் அமைந்தகரை போலீஸ் நிலையத்திற்கு (அக்டோபர் 13ம் தேதி 1998) அதிகாலை 4 மணியளவில் கொண்டு வரப்பட்டனர். பின்னர் ஒரு மணி நேரம் கழித்து அதாவது அதே நாள் 13ம் தேதியன்று அதிகாலை 5 மணியளவில் வலிப்பு வந்தது போல் நடித்துள்ளார். மீதியுள்ள பணத்தை திரும்பக் கொடுப்பதை தவிர்ப்பதற்காகவே இவ்வாறு நடித்துள்ளார் என்று ஆணையம் கருதுகிறது. இதனால் ரவி முதலில் ஸ்ரீதேவி மருத்துவ – மனையிலும், பின்னர் அரசு பொது மருத்துவமனையிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதற்கிடையில் முதல்நாள் அக்டோபர் 12ம் தேதியன்று ரவி தனது வீட்டிற்கு அருகில் தெருவில் கைது செய்யப்பட்டதால் அப்போது எழுந்த வாக்குவாத சத்தத்தைக் கேட்டு வீட்டிற்குள்ளிருந்து வெளியே வந்த ரவியின் மனைவி சித்ரா நடந்ததை அறிந்து அதிர்ச்சியடைந்து தனது குடும்பத்திற்கு பல வகைகளிலும் உதவி புரிந்த கடை உரிமையாளர் திரு. இரமணய்யாவிற்கு துரோகம் புரிந்த தனது கணவர் ரவியை அந்த இடத்திலேயே கடிந்து – கொண்டுள்ளார். ரவியிடம் எடுத்த பணத்தை உடனடியாக திருப்பிக் கொடுக்குமாறு வேண்டியுள்ளார். தனது கணவர் செய்த குற்றத்தை மன்னித்து அவரை விடுவித்துவிடுமாறு போலீஸ் அதிகாரியிடம் கெஞ்சியுள்ளார். போலீஸ் அதிகாரி இது பெரிய குற்றமென்பதால் சட்டப்படி நீதிமன்றத்தின் மூலமாகவே விடுதலைக்கு முயற்சி செய்யுமாறு சித்ராவிற்கு அறிவுறுத்தியுள்ளார். இதனைத் தொடர்ந்து ரவி அமைந்தகரை போலீஸ் நிலையத்திற்கு கூட்டிச் செல்லப் – பட்டுள்ளார். பின்னர், ரவியை எப்படியாவது விடுதலை செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் இரவு 12.30 மணியளவில் சித்ரா, ரவியின் அக்கா மகன் சிவகணேசனை துணைக்கு அழைத்துக்கொண்டு அமைந்தகரை போலீஸ் நிலையத்திற்கு சென்று அங்குள்ள போலீசாரிடம் ரவியை விடுதலை செய்யுமாறு கெஞ்சியுள்ளார்.அவர்கள் மறுக்கவே, மிகுந்த சோகத்துடன் சிவகணேசனுடன் வீட்டிற்கு திரும்பிய சித்ரா அவமானம் தாங்காமல் வீட்டில் தூக்கிலிட்டுக் கொண்டுள்ளார் என்று சாட்சியங்கள் மூலம் நிரூபணமாகியுள்ளது. மற்றபடி சித்ரா அமைந்தகரை போலீஸ் நிலையத்திற்கு போலீசாரால் அழைத்துச் செல்லப்பட்ட – தாகவோ, அங்கு மானபங்கப்படுத்தப்பட்டதாகவோ கூறுவது பொய்யானதாகும் சித்ரா தற்கொலை செய்வதற்கு முன்னதாக எழுதியதாக கூறப்பட்ட கடிதமும் அவரால் எழுதப்படவில்லை என்பது நிரூபணமாகியுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**வரம்பு இரண்டிற்கான விசாரணை முடிவு:**

அமைந்தகரை போலீசாரால் திருமதி. சித்ரா போலீஸ் நிலையத்தில் வைத்து மானபங்கப்படுத்தப்பட்டதாக கூறப்படும் குற்றச்சாட்டு உண்மையானது அல்ல என்று நிரூபணமாகியுள்ளது.

**வரம்பு மூன்றுக்கான விசாரணை முடிவு:**

இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ரவியை விசாரித்ததில் ஈடுபட்டதாகக் கூறப்படும் போலீசார் பின்வருமாறு :

1. எஸ் சுப்பிரமணியன், போலீஸ் உதவி ஆணையர் (குற்றவியல்), அண்ணாநகர்.
2. அ.அ.ஜீவரத்தினம், போலீஸ் ஆய்வாளர் (குற்றவியல்), அமைந்தகரை போலீஸ் நிலையம், சென்னை.
3. எஸ்.முருகையன், போலீஸ் துணை ஆய்வாளர் (குற்றவியல்) அரும்பாக்கம் போலீஸ்நிலையம், சென்னை.
4. ஆர் திருநாவுக்கரசு, போலீஸ், எண்–16169 (ஜீப் ஓட்டுநர்)
5. சி.ஆனந்த விஜயன், போலீஸ், எண்–9699 (ஜீப் ஓட்டுநர்)
6. சி.கோபாலகிருஷ்ணன், போலீஸ், எண்–501 (கிரேடு 1), அரும்பாக்கம் போலீஸ்நிலையம், சென்னை.
7. எஸ்.சாமுவேல் கோவில்பிச்சை, போலீஸ், எண்–8224, (கிரேடு 1), அரும்பாக்கம் போலீஸ்நிலையம், சென்னை.
8. எல்.சேகர், போலீஸ், எண்–8597 (கிரேடு 1), அமைந்தகரை போலீஸ்நிலையம், சென்னை.
9. கே.பிரேம்குமார், போலீஸ், எண்–4434, (கிரேடு 1), அமைந்தகரை போலீஸ்நிலையம், சென்னை.
10. கே.மாரி, தலைமை போலீஸ், எண்–6181, அரும்பாக்கம் போலீஸ் நிலையம், சென்னை.
11. எஸ்.மாணிக்கவேல், தலைமை போலீஸ், எண்–10173, (கிரேடு 1), அரும்பாக்கம் போலீஸ்நிலையம், சென்னை.
12. எஸ்.வரதராஜன், தலைமை போலீஸ், எண்–9523, (கிரேடு 1) அரும்பாக்கம் போலீஸ் நிலையம், சென்னை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மேற்படி போலீசார் யாருமே 1998ம் ஆண்டு 12, 13ம் தேதிகளில் சித்ராவை போலீஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லவில்லை. எனவே அவர்கள் குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 160 (1) ஐ மீறவில்லை, 1998ம் ஆண்டு ஆகஸ்ட் 20-ம் தேதி சென்னை போலீஸ் ஆணையர் பிறப்பித்த உத்திரவுகளையும் மீறவில்லை.

***ஆணையத்தின் பரிந்துரைகள்:***

இந்த வழக்கில் சித்ரா மானபங்கப்படுத்தப்பட்டதனால் தற்கொலை செய்து கொண்டார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் இடைக்கால பதவி நீக்கம் செய்யப்பட்ட போலீசார் எந்தவிதக் குற்றமும் இழைக்கவில்லை என்பதால் அவர்கள் மீண்டும் பதவியில் அமர்த்தப்பட்டு அவர்களுக்கு கிடைக்க வேண்டிய சம்பளம் உள்ளிட்ட சலுகைகள் அளிக்கப்பட வேண்டும் என்று இந்த விசாரணை ஆணையம் பரிந்துரைக்கின்றது.

ஆனால், இந்த சம்பவத்தில் நடந்த உண்மையை கள ஆய்வு செய்த, தமிழக மற்றும் பாண்டிச்சேரி மக்கள் சிவில் உரிமைக் கழகத்தின் (பி.யூ.சி.எல்) தலைவரும், வழக்கறிஞருமான திருமதி. சுதா இராமலிங்கமும், பி.யூ.சி.எல்லின் தேசியக்குழு உறுப்பினரும் எழுத்தாளருமான திரு.கே.மனோகரனும்,பி.யூ.சி.எல்-ன் உறுப்பினரும், வழக்கறிஞருமான திருமிகு. கீதாவும், பியூசிஎல்லின் உறுப்பினரும், வழக்கறிஞருமான திருமிகு.ஏ.ஜே.ஜாவத்தும், பியூசிஎல்-ன் உறுப்பினரான திருமிகு. ஆசி பெர்னான்டசும் அடங்கிய உண்மைய அறியும் குழுவின் அறிக்கை (ஆதாரம்: பி.யூ.சி.எல்-ன் உண்மையறியும் குழுவினரின் கையொப்பமிட்ட அறிக்கை) இவ்விசாரணை ஆணையத்தின் முடிவுகளுக்கு நேர்மாறான முடிவுகளை கூறியுள்ளது.

பி.யூ.சி.எல்லின் அறிக்கையானது பின்வருமாறு தனது விசாரணை முடிவுகளை கூறியுள்ளது.

(1) 1998ம் ஆண்டு அக்டோபர் 12ம் தேதி இரவு திருமதி சித்ரா அமைந்தகரை போலீஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். இதை போலீஸ் துணை ஆணையர் திரு. சிவனாண்டியே ஒப்புக் கொண்டுள்ளார். மேலும் விக்னேஸ்வரா டிரேடர்ஸ் என்ற இரும்புக் கடையின் இரு பெண் ஊழியர்களும் விசாரணைக்காக அமைந்தகரை போலீஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். இது பெண்களை இரவில் போலீஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லவோ வைத்திருக்கவோ கூடாது என்று கூறும் குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 160ஐ மீறும் செயலாகும்.

(2) அமைந்தகரை போலீஸ் நிலையத்தில் போலீஸ் உதவி ஆணையர் எஸ் சுப்பிரமணியம் முன்பாகவே சித்ரா மானபங்கப்படுத்தப் -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பட்டுள்ளார் என்பது திட்டவட்டமாக தெளிவாகிறது. ஏனெனில், சித்ரா போலீஸ் நிலையத்திற்கு 12.30 மணிக்கு அழைத்துச் செல்லப் –பட்டுள்ளார். (விசாரணை ஆணையத்தின் முடிவின் படி அவராகவே சென்றிருந்தாலும்) அவர் அதிகாரை 4–5 மணிக்கே திரும்பியுள்ளார். அவர் ஏன் 3 மணிநேரம் வரை போலீஸ் நிலையத்தில் வைக்கப் –பட்டிருந்தார் என்பதற்கு போலிசாரால் பதில் கூற முடியவில்லை.

(3) அருணும், ரவியும் விசாரணை என்ற பெயரில் சித்ரவதையே செய்யப்பட்டுள்ளனர்.

(4) அருண், ரவி மற்றும் சித்ரா கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்ட போதும் காவலில் வைக்கப்பட்ட போதும் அவர்களுக்கு கைது குறிப்பு கொடுக்கப்படவில்லை. இது டி.கே.பாசு வழக்கில் உச்சநீதிமன்றம் கொடுத்த உத்திரவுகளை மீறுவதாகும். நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கையாகும்.

(5) ரவி தான் திருடிய பணத்தை திரும்பிக் கொடுப்பதை தவிர்ப்பதற் –காகவே நடிக்கிறார் (Malingery) என்று போலிசார் கூறியுள்ளனர். ஆனால், அரசு மருத்துவமனையின் மனநோய் மருத்துவர் டாக்டர். சத்திய நாதனும், அரசு மருத்துவமனை தலைமை மருத்துவர் டாக்டர் பிரேம்குமாரும் ஒருவர் நடிக்கிறார் என்பதை நிரூபிப்பது மிகவும் கடினமான ஒன்று என்று கூறியுள்ளனர். ரவிக்கு சிகிச்சையளித்த மனநோய் மருத்துவர் டாக்டர் சத்தியநாதன் ரவி 15.10.98லிருந்து 20.10.98ம் தேதி வரை மயக்கநிலையிலேயே சுயநினைவற்று எந்தவித தொடர்பும் கொள்ளமுடியாத நிலையில் இருந்திருக்கிறார் என்று கூறியுள்ளார். இதுவே ரவி சித்ரவதை செய்யப்பட்டுள்ளார் என்பதை நிரூபிக்கிறது.

(6) சட்ட விரோதமாகவும் மருத்துவ நெறிமுறைகளுக்கெதிராகவும் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த ரவி கட்டிலுடன் சேர்த்து இரும்புச் சங்கிலியால் கட்டப்பட்டுள்ளார். இதை அப்போது இந்த வழக்கின் உண்மை நிலையை அறிய மருத்துவமனைக்கு வருகைதந்த தேசிய மகளிர் ஆணையத்தின் உறுப்பினர் திருமிகு. இந்திரா பஸ்வராஜ் நேரிலேயே கண்டுள்ளார்.

(7) சித்ராவை பிரேதப் பரிசோதனை செய்ய நியமிக்கப்பட்ட மருத்துவக் குழுவினர் நடுநிலையாளர்கள் அல்ல. இவர்களில் சிலர் போலிஸ் அதிகாரிகளின் நெருங்கிய உறவினர்கள் ஆவர். இக்குழுவின் பிரேதப் பரிசோதனை அறிக்கை எவ்வளவு சரியாக இருக்கும் என்பது சந்தேகமே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## பகுதி-2

# தமிழ்நாடு மாநில மனித உரிமை ஆணையத்தின் அறிக்கைகள் - ஒரு விமர்சனம்

1993 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், பிரிவு 21–ன்படி 17.04.1997 அன்று மாநில மனித உரிமை ஆணையம் உருவாக்கப்பட்டது. மாநில மனித உரிமை ஆணையத்திற்கான அதிகாரங்களையும், அதன் பணிகளையும் மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் பட்டியல் – படுத்துகின்றது. மனித உரிமை ஆணையங்கள் அமைக்கப்பட்டுள்ள ஒரு சில மாநிலங்களில் தமிழகமும் ஒன்று என்ற பெருமை தமிழ்நாட்டிற்கு இருந்தாலும், இவ்வாணையத்தின் செயல்பாடுகள் பெருமைப்படத்தக்கதாகவோ, பாராட்டக்கூடிய வகையிலோ அமையவில்லை என்பது வருத்தத்திற்குரிய ஒன்று. மாநில மனித உரிமை ஆணையத்தின் தலைவராக ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி மாண்புமிகு நைனார் சுந்தரம் அவர்களும், உறுப்பினர்களாக உயர்நீதிமன்ற நீதிபதி திரு.கே.சுவாமிதுரை, மாவட்ட நீதிமன்ற நீதிபதி திரு.அப்துல்கனி, திரு.ஆர்.ரத்தின சாமி மற்றும் திருமதி. டாக்டர்.எம்.சுசீலாராஜ் ஆகியோரும் பதவியேற்றனர். மனித உரிமைப் பாதுகாப்புச் சட்டம் பிரிவு 12ல் வரையறுக்கப்பட்டுள்ள பணிகளில் 12(f)–ஐத்தவிர (மனித உரிமைகள் குறித்த சர்வதேச உடன்படிக்கைகள்/ ஒப்பந்தங்கள் தொடர்பானது) ஏனைய பணிகள் அனைத்தும் மாநில மனித உரிமை ஆணையத்திற்கு பொருந்தும்.

மாநில மனித உரிமை ஆணையம் தனது ஆண்டறிக்கைகளை (1997–98, 1998–99) வெளியிட்டுள்ளது. ஆணையத்தின் 1997–98 ஆண்டறிக்கை ஏழு பகுதிகளை உள்ளடக்கிய 85 பக்கத் தொகுப்பாகும். இதில் முதல் இரண்டு பகுதிகளும் ஆணையத்தினுடைய பணி மற்றும் அதிகாரங்களைப் பற்றி பேசுகிறது. மூன்றாவது பகுதியும், நான்காவது பகுதியும் மாநில மனித உரிமை ஆணையத் தலைவர் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று நிகழ்த்திய மனித உரிமை குறித்த உரைகள் பற்றியும், அவர் கலந்துகொண்ட கருத்தரங்குகள் குறித்தும் பிற உறுப்பினர்கள் கலந்து கொண்ட மனித உரிமை கருத்தரங்குகள் பற்றியும் குறிப்பிடுகிறது.

பகுதி 5 ஆணையத்திற்கு வந்த வழக்குகள், புகார் மனுக்கள் பற்றிய பட்டியல் உள்ளது. (பக்கம்21) அதன்படி, 31.3.98 வரையிலும் தலைவர் மாண்புமிகு நைனார் சுந்தரம் அவர்களிடம் வந்த மொத்தவழக்குகள் 418, தள்ளுபடி செய்யப்பட்டவை 324, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட வழக்குகள் 94. அதே போல், நீதிபதி கே.சுவாமிதுரை (713/366/347), நீதிபதி அப்துல்கனி (263/103/160), திரு.ஆர்.ரத்தினசாமி(428/206/222), திருமதி.டாக்டர்.எம் சுசீலா ராஜ் (340/79/261).



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பட்டியல் –1

தள்ளுபடி செய்யப்பட்ட வழக்குகளின் விபரம் (ஆணையத்தின் உறுப்பினர் ரீதியாக)

| வ. எ ண் | பெயர் | மொத்த வழக்குகளின் எண்ணிக்கை | தள்ளுபடி செய்யப்பட்ட புகார்களின் தன்மை | |
|---|---|---|---|---|
| | | | நிராகரிக்கப்பட்டவை/ தாக்கலானவை | நடவடிக்கை எடுக்கப்பட்டவை |
| 1. | நீதிபதி எஸ். நைனார் சுந்தரம், தலைவர் | 418 | 324 | 94 |
| 2. | நீதிபதி கே.சாமிதுரை | 713 | 366 | 347 |
| 3. | திரு.அப்துல்கனி | 263 | 103 | 160 |
| 4. | திரு.ஆர். இரத்தினசாமி | 428 | 206 | 222 |
| 5. | டாக்டர் திருமதி எம் சுசிலா ராஜ் | 340 | 79 | 261 |
| | மொத்தம் | 2162 | 1078 | 1084 |

பகுதி 6–ல் மாநில மனித உரிமை ஆணையம் மேற்கொண்ட முக்கிய வழக்குகள் ஒருசிலவற்றை (பக்கம்22–24) குறிப்பிட்டுள்ளார்கள். இதில், தென்மாவட்ட சாதிய மோதல்களினால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு கூடுதலாக இழப்பீட்டுத் தொகையை அரசு வழங்க வேண்டும் என்ற ஒரு பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளது. அதேபோல, கோயம்புத்தூரில் நடந்த மதக்கலவரத்தின் போது இறந்தவர்களுக்கும், திருச்சி மற்றும் ஈரோட்டில் நடந்த வெடிகுண்டுச் சம்பவங்களில் இறந்தவர்களுக்கும் வழங்கப்பட்ட நஷ்டஈட்டுத்தொகை அதிகமாக்கப்படவேண்டும் என்ற ஒரு பரிந்துரையும் முன்வைக்கப்பட்டுள்ளது. கொடைக்கானல் மலைப்பகுதியில் மரம் வெட்டப்படுவது நின்று போனதால் வேலை இழந்து போன குடும்பங்களுக்கு உடனடி நிவாரணம் செய்யக் கோரியும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

பகுதி 7 மனித உரிமைகள் குறித்த் பல்வேறு கட்டுரைத் தொகுப்பாக உள்ளது. இதில் மனித உரிமை பற்றிய ஒரு ஒழுக்கவியல் பார்வை என்ற தலைப்பில் ஆணையத் தலைவர் மாண்புமிகு நைனார் சுந்தரம் அவர்களும், குற்றவியல் நீதித்துறை அதிகாரிகளுக்கு மனித உரிமை குறித்த விழிப்புணர்வு பற்றிய விரிவான ஒரு கட்டுரை (பக்கம்28–47) திரு.ஆர்.ரத்தினசாமி அவர்களும், ஆரோக்கியமான சுற்றுச்சூழலும் மனித உரிமைகளும் என்ற கோணத்தில் டாக்டர்.எம்.சுசீலாராஜ் அவர்களும் எழுதிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



31 பக்கங்களைக் கொண்ட ஆணையத்தின் 1998-99 ஆண்டறிக்கையில் பக்கம் 5ல் ஆணையத்திற்கு வந்த மொத்த வழக்குகள் 3,416 என்றும், அவற்றில் தள்ளுபடி செய்யப்பட்ட வழக்குகள் 1,628 என்றும், விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வழக்குகள் 1,788 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் வந்த மொத்த வழக்குகள், தள்ளுபடி செய்யப்பட்டவை, விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டவை பின்வருமாறு – நீதிபதி நைனார் சுந்தரம் (766/592/174), நீதிபதி கே.சுவாமிதுரை (647/453/194), திரு.அப்துல்கனி (449/192/257), திரு.ஆர்.ரத்தினசாமி (1045/160/885), டாக்டர்.எம்.சுசிலாராஜ் (509/231/278).

பட்டியல் – 2

தள்ளுபடி செய்யப்பட்ட வழக்குகளின் விபரம் (ஆணையத்தின் உறுப்பினர் ரீதியாக)

| வ. எண் | பெயர் | மொத்த வழக்குகளின் எண்ணிக்கை | தள்ளுபடி செய்யப்பட்ட புகார்களின் தன்மை | |
|---|---|---|---|---|
| | | | நிராகரிக்கப்பட்டவை/ தாக்கலானவை | நடவடிக்கை எடுக்கப்பட்டவை |
| 6. | நீதிபதி எஸ். நைனார் சுந்தரம், தலைவர் | 766 | 592 | 174 |
| 7. | நீதிபதி கே.சாமிதுரை | 647 | 453 | 194 |
| 8. | திரு.அப்துல்கனி | 449 | 192 | 257 |
| 9. | திரு.ஆர். இரத்தின சாமி | 1045 | 160 | 885 |
| 10. | டாக்டர் திருமதி எம் சுசிலா ராஜ் | 509 | 231 | 278 |
| | மொத்தம் | 3416 | 1628 | 1788 |

இவ்வறிக்கையில் (பகுதி4ல்) வருவாய்த்துறை மற்றும் காவல்துறை அதிகாரிகளுக்கு மனித உரிமைகள் குறித்த முக்கியத்துவம் பற்றிய மாவட்ட வாரியான கூட்டங்களில் ஆணையத் தலைவர் நீதிபதி நைனார் சுந்தரம் அவர்கள் கலந்து கொண்ட விவரம் பற்றிய ஒரு சிறிய அறிக்கை உள்ளது. அதேபோல, பகுதி5 மனித உரிமை மேம்பாடு மற்றும் பாதுகாப்பு பற்றிய தமிழக அளவில் நடத்தப்பட்ட பல்வேறு கருத்தரங்குகள், பயிற்சி முகாம்கள் பற்றிய அறிக்கையாகவும், பகுதி 6 பழங்குடியினர் மற்றும் ஊனமுற்றோர் நல வாழ்வு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குறித்த அறிக்கையாகவும் உள்ளன. ஆணையம் மேற்கொண்ட முக்கிய வழக்குகளான பெண் சிசுக்கொலை, கடலூர் சிப்காட் வளாகத்தில் சுற்றுச்சூழல் சீர்கேடு, நெய்வேலி அனல் மின் நிலையக்கழிவுகளால் சுகாதாரச் சீர்கேடு, வத்தலக்குண்டு பகுதியில் மோசமான குடிநீரால் சுகாதாரச் சீர்கேடு, போலி மதுபானம் அருந்துதல் போன்ற பல வழக்குகள் குறித்த ஆணையத்தின் விசாரணைத்தொகுப்பாக (பக்கம் 14–19 )பகுதி7 அமைந்துள்ளது. முதல் அறிக்கையைப் போன்று, இரண்டாவது ஆண்டறிக்கையிலும் மனித உரிமைத் தலைப்புகளில் ஆணைய உறுப்பினர்களால் எழுதப்பட்ட ஒரு சில கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

இவ்வாண்டறிக்கைகளை படிக்கும் போது ஒரு மாநில மனித உரிமை ஆணையம் இரண்டாண்டில் நிறைவேற்றிய செயல்பாடுகளின் தொகுப்பாகத் தெரியவில்லை. மாறாக, ஒரு நிறுவனமோ அல்லது ஒரு அமைப்போ ஆண்டு மலர் வெளியிடுவதைப் போல இது ஆண்டறிக்கைகளை வெளியிட்டுள்ளது நமக்கு அதிருப்தியாகவும், அதிர்ச்சியாகவும் உள்ளது. ஏற்கெனவே, கடந்த நான்கைந்து ஆண்டுகளாக தேசிய மனித உரிமை ஆணையம் ஆண்டறிக்கைகளை வெளியிடுவதில் ஒரு நல்ல மாதிரி ஒன்றை வழங்கியுள்ளது. குறைந்த பட்சம் அந்த மாதிரியையாவது மாநில மனித உரிமை ஆணையம் பின்பற்றி இருக்கலாம். ஆனால், அந்த மாதிரியையும் பின்பற்றாமல், தனக்கென்று ஒரு சரியான பாணியையும் வகுத்துக் கொள்ளாமல் ஏதோ சடங்கிற்காக அறிக்கைகளை வெளியிட்டுள்ளது.

1993ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் மாநில மனித உரிமை ஆணையத்தின் பணிகள் குறித்த வரையறையின் கீழ் இவ்வாணையம் என்னென்ன செயல்பாடுகளை மேற்கொண்டுள்ளது? என்னென்ன செயல்பாடுகளை மேற்கொள்ளத் தவறியிருக்கிறது? அவற்றில் நிறைகுறைகள் என்ன? ஆணையம் ஆற்ற வேண்டிய கடமைகள் என்ன? எத்தனை வழக்குகள்/புகார் மனுக்கள் ஆணையத்தின் முன் சமர்ப்பிக்கப்பட்டன? அவற்றில் எத்தனை மனுக்களை முறையாக விசாரித்து, அரசுக்கு பரிந்துரை செய்திருக்கிறது? எத்தனை வழக்குகளில் அரசு முறையே நடவடிக்கை எடுத்திருக்கிறது? வரவிருக்கின்ற ஆண்டுகளில் அவற்றை எவ்வாறு சரி செய்வது என்பன போன்ற விஷயங்கள் ஒரு ஆண்டறிக்கையில் அமைவதுதான் சரியான போக்காக இருக்கும்.


தேசிய மனித உரிமை ஆணையத்தின் 1997–98 ஆண்டறிக்கையில் அவ்வாணையத்திற்கு வந்த புகார் மனுக்கள்/வழக்குகள் குறித்து விரிவான ஒரு பட்டியல் இடம் பெற்றிருக்கிறது. அதில் இது குறித்த தெளிவான வரைபடங்களுடன் விளக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன.
(பார்க்க வரைபடங்கள்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# Nature and Classification of complaints admitted for Disposal during 1997-98




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# No. of Cases registered during 1997-98




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அதில் மொத்த வழக்குகளின் எண்ணிக்கை மாநிலங்கள் வாரியான வழக்குகள், தள்ளுபடி செய்யப்பட்ட வழக்குகளின் தன்மை, என்ன காரணத்திற்காக தள்ளுபடி செய்யப்பட்டது, என்னென்ன தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் (காவல் மரணம், காவலில் பாலியல் வன்முறை, காணாமற் போதல், கைது மற்றும் சட்டத்திற்கு புறம்பான காவலில் வைப்பு, பொய் வழக்குகள், பிற போலீஸ் அத்துமீறல்கள் அரசு நடவடிக்கை எடுக்கத் தவறியமை, பெண்களை மானபங்கப் –படுத்துதல், சிறை நிலவரம், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் மீதான வன்கொடுமைகள் இன்னும் பிற) என்று அதற்கு முந்தைய இரண்டாண்டுகளோடு அவ்வாண்டு வந்த வழக்குகள் குறித்த ஒரு ஒப்பீடு ஆகியவை இடம் பெற்றிருக்கின்றன. ஆனால், மாநில மனித உரிமை ஆணையத்தினுடைய அறிக்கையில் அவ்வாறான தெளிவான வரையறையோ, வகைப்பாடோ இல்லை என்பது வருந்தத்தக்கது.

மாநில மனித உரிமை ஆணையத்தினுடைய (1997–98, 1998–99) அறிக்கைகளில் முறையே பக்கங்கள் 21, 5ல் இடம் பெற்றுள்ள புகார் மனுக்களின் பட்டியலில் ஒரே ஒரு வகைப்பாடு மட்டும் உள்ளது. இவ்வாணையத்தின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியே விசாரித்த வழக்குகளின் எண்ணிக்கை, தள்ளுபடி செய்த வழக்குகள், நடவடிக்கை எடுத்த வழக்குகளின் எண்ணிக்கை என்ற வகைப்பாடு மட்டும் இடம் பெற்றுள்ளது. இதுவே சரியான அணுகுமுறை இல்லை. ஏனெனில், இப்படிப்பட்ட தகவல்களை வைத்து என்ன காரணத்திற்காக வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டன. ஆணையத்திற்கு எத்தகைய தன்மையிலான வழக்குகள் வந்துள்ளன. அவை கடந்த ஆண்டு – களுடன் ஒப்பிடும் போது குறைந்துள்ளதா, கூடியுள்ளதா என்பது குறித்து எந்த முடிவுக்கும் வர முடியாது.

மனித உரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின்படி அமைக்கப்பட்டுள்ள ஆணையத்தில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் ஒருங்கிணைந்து மனித உரிமைகள் குறித்த தங்களது அறிவையும், அனுபவத்தையும் பயன்படுத்தி வழக்குகளை விசாரித்து தீர்ப்பு சொல்ல வேண்டும் என்பதுதான் சட்டத்தின் நோக்கம். அதன் காரணமாகவே, ஆணையத்தின் உறுப்பினர்கள் பல்வேறு தரப்பட்ட அனுபவங்களிலிருந்தும், நிலைகளிலிருந்தும் தெரிவு செய்யப்படுகிறார் – கள். ஒரு மாநில ஆணையத் தலைவராக ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியும், உறுப்பினர்களாக உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவரும், மாவட்ட நீதிபதி ஒருவரும், மனித உரிமைகளில் அனுபவம் வாய்ந்த இரண்டு அறிஞர்களும் இடம் பெற வேண்டும் என்று சட்டம் தெளிவுபடுத்துகிறது. இது ஏதோ ஒரு சிலருடைய எண்ணப்படி வரையறுக்கப்பட்ட ஒன்றல்ல. மாறாக, உலக நாடுகள் பலவும் ஏற்றுக் கொண்ட 1991ல் உருவான பாரீஸ் கொள்கையிலிருந்து எடுக்கப்பட்டதே. அதன்படி, பல தரப்பினரும் பங்கு கொள்ளும் இவ்வாணையம் சுதந்திரமாகவும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அரசின் பிடியிலிருந்து தனித்தும் இயங்க வேண்டும் என்பதுதான் இதன் நோக்கம். இவ்வாணைய உறுப்பினர்கள் ஒருங்கே அமர்ந்து ஒரு வழக்கை விசாரிக்கும் போதுதான், தங்களுடைய முழு சட்ட அறிவையும், ஞானத்தையும் பயன்படுத்தி நிகழ்ந்திருக்கின்ற உரிமை மீறல்களை பல்வேறு கோணங்களில் அலசி, ஆராய்ந்து அதற்கேற்றாற்போல் வழிகாட்டுதல்களை வழங்க முடியும். அதுவே மேற்படி சட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதாகும். ஆனால் இங்கு ஒரு வழக்கின் விசாரணையின் போது கூட்டான அமர்வு இல்லை என்பது இரண்டு அறிக்கைகளையும் படிக்கும் போது தெரிய வருகிறது. இதுவே மனித உரிமைச் சட்டத்திற்கும், பாரீஸ் கொள்கைக்கும் முரணனானதாகும்.

இரண்டாவது மாநில மனித உரிமை ஆணையத்தின் உறுப்பினர்கள் நியமன முறையில் குறைபாட்டை எடுத்துக் கொள்வோம். ஆணையத்தில் மனித உரிமை அமைப்புகளின் பிரதிநிதிகள் யாரும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ்நாட்டில் நிகழ்கிற மனித உரிமை மீறல்களினால் பாதிக்கப்பட்டோர் தங்களுக்கு நிகழ்ந்துள்ள மீறல்களுக்கு உடனடி நிவாரணம் கிடைக்கும் என்ற ஆவலில் தங்களது புகார் மனுக்களை மாநில மனித உரிமை ஆணையத்திற்கு அனுப்பி வைக்கின்றனர். இப்புகார்களை அனுப்பி வைப்பதும் அதன் பின்புலத்தில் இருப்பதும் மனித உரிமை அரசு சாரா நிறுவனங்களும் மற்ற மக்கள் இஸ்க்கங்களுமே. அவர்களே மக்கள் மத்தியில் மனித உரிமை குறித்து விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி வருவதால் அவர்கள் மாநில மனித உரிமை ஆணையத்தில் பிரதிநிதிகளாக இருப்பதற்கு முழு உரிமையை கொண்டவர்கள் ஆவர். மேலும், அவர்கள் மாநில மனித உரிமை ஆணையத்தின் செயல்பாடுகளை விமர்சனப்பூர்வமாக பரிசீலனை செய்யவும் முடியும். ஆனால், இவ்வாறு இந்த அமைப்புகளுக்கு பிரதிநிதித்துவம் இல்லை என்பது வருந்தத்தக்கது. மேலும், அனுப்பி வைக்கப்பட்ட புகார் மனுக்களை ஆணையம் ஏற்றுக் கொண்டதற்கு எந்த ஒரு அத்தாட்சியோ, ஏற்புக்கடிதமோ ஆணையத்திடமிருந்து அனுப்பப்படுவது கிடையாது. அதற்கான எந்த ஒரு முறையான படிவமோ, வரையறையோ ஆணையம் இதுவரை உருவாக்கவுமில்லை, பின்பற்றுவதுமில்லை. மேலும் புகார்மனுவை அனுப்பிய நபருக்கு அவரது புகார்மனு எந்த நிலையில் உள்ளது, ஏற்றுக் கொள்ளப்பட்டதா, பரிசீலனையில் உள்ளதா, அதன்மீது என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன, எவ்வளவு நாட்களுக்குள் அம்மனு முடிக்கப்–படும் என்பன போன்ற தகவல் எதுவுமே கிடையாது. இப்படி சட்ட ரீதியாக அமைக்கப்பட்ட அமைப்பிற்கு புகார் மனுக்களை அனுப்புவதன் மூலம் நமக்கு என்ன பயன் என்ற அதிருப்தி பாதிக்கப்பட்டோர் மத்தியில் உருவாகி விட்டது என்பது வருந்தத்தக்கது. ஆகாது. அவ்வாறு எண்ணம் உருவாகுமாயின், மனித உரிமைச் சட்டத்தின் நோக்கத்திற்கான அடிப்படையே ஆட்டங்கண்டு விடும்.

மனித உரிமை பாதுகாப்புச் சட்டம் 12 (a)படி மாநில மனித உரிமை ஆணையம் உரிமை மீறல்களை தானாகவே (Suo moto) விசாரிக்க


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


கடமைப்பட்டுள்ளது. கடந்த மூன்றாண்டுகளாக மாநில மனித உரிமை ஆணையம் எத்தனை மனித உரிமை வழக்குகளை தானாக விசாரித்துள்ளது? அவற்றின் மீது என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது? என்பது குறித்த ஒரு விளக்கமும் அறிக்கையில் இல்லை என்பது வருந்தத்தக்கது. தமிழ்நாட்டில் தினந்தோறும் நடக்கும் எண்ணற்ற உரிமை மீறல்கள் அல்லது அமைப்பு ரீதியாக தொடர்ந்து நிகழ்த்தப்படும் மீறல்கள் மீது ஆணையம் தானாகவே விசாரிப்பதற்கு அதன் கைகளை யார் **கட்டிப் போட்டது? குழந்தைத் தொழிலாளர், கொத்தடிமைத்** தொழிலாளர், காவல் மரணங்கள், துப்பாக்கிச்சூடு சிறுபான்மையினர் மீது தாக்குதல்கள், அகதிகள் மோசமாக நடத்தப்படல் என்று எத்தனையோ உரிமை மீறல்கள் தினந்தோறும் செய்தித்தாள்களிலும், தொலைக் காட்சிகளிலும் வெளிவந்தாலும் அவை மாநில மனித உரிமை ஆணையத்தின் செவிகளை எட்டவில்லையோ? ஆணையம் தானாகவே விசாரிக்க அதிகாரம் இருந்தும் உரிமை மீறல்களின்போது அவ்வதிகாரத்தை முழுமையாகப் பயன்படுத்தாது, பெயரளவில் செயல்படுவது என்ன நியாயம்?

கடந்த டிசம்பர் மாதம் சென்னை மத்திய சிறையில் நடந்த சிறைக்கலவரத்தின் போது மாநில மனித உரிமை ஆணையத்தினுடைய தலையீடு என்னவாக இருந்தது? பல கைதிகள் கொல்லப்பட்டு, ஒரு ஜெயிலர் உயிரோடு எரிக்கப்பட்டு, நூற்றுக்கணக்கானோர் படுகாயம் அடைந்தும் அதில் பலரின் முதுகெலும்பு முறிந்து சிகிச்சைக்கு அனுப்பப்படாமல் இருந்தனர். இதனை எதிர்த்து பலர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்த நிலையிலும்கூட, சென்னை – யிலேயே இயங்குகின்ற மனித உரிமை ஆணையம் இவ்விஷயத்தில் ஒரு துரும்பைக்கூட எடுத்துப் போடவில்லை. இது ஆணையத்திற்கு நேர்ந்த இழுக்கு; அவமானம். மாநில மனித உரிமை ஆணையம் சரியாக தலையீடு செய்திருந்தால், தேசிய மனித உரிமை ஆணையம் தலையிட்டிருக்க வேண்டிய அவசியம் இருந்திருக்காது. இது போன்ற, மிகக்கொடூரமான மனித உரிமை மீறல்களில்கூட மாநில மனித உரிமை ஆணையம் தானாகவே, தலையிடுவதற்கான பொறுப்பும், கடமையும் உண்டு என்பதை நாம் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

1998–99 ஆண்டறிக்கையில் பக்கம் 3, 4ல் அரசிற்கு ஆணையம் அளித்துள்ள பரிந்துரைகளையும், தமிழக அரசு அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கைகளையும் குறிப்பிட்டுள்ளது. ஒரு ஆண்டிற்கு மாநில மனித உரிமை ஆணையம் மொத்தமே 5 வழக்குகளைத் தான் அரசினுடைய பார்வைக்கு அனுப்பி வைத்துள்ளதா என்ற சந்தேகம் இதனைப் பார்த்ததும் எழுகிறது. ஏதோ ஒப்புக்கு ஒரு சில பரிந்துரைகளை மாநில அரசுக்கு அனுப்பி வைக்க ஒரு ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதியும், பிற உறுப்பினர்களும் தேவையா?

இவ்வறிக்கையில் இடம் பெற்றுள்ள பல விஷயங்கள், ஆணையத் தலைவரின் சுற்றுப்பயணத்தின் அறிக்கைத் தொகுப்பாக இருக்கிறதேயொழிய,


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆணையத்தின் ஒட்டுமொத்த அறிக்கைத் தொகுப்பாக இல்லை. பிற உறுப்பினர்களுடைய பங்கெடுப்பு என்ன? மனித உரிமைப் பாதுகாப்பிலும், மனித உரிமைப் பண்பாட்டை வளர்த்தெடுப்பதிலும், ஆணையத் தலைவருக்கு இருக்கக்கூடிய அதே பொறுப்பும், கடமையும் பிற உறுப்பினர்களுக்கும் உள்ளது.

1997–98 ஆண்டறிக்கையில் இடம் பெற்றுள்ள உறுப்பினர்களின் பல்வேறு கட்டுரைகள் உப்புச்சப்பில்லாததாக உள்ளன. மனித உரிமை குறித்த கோட்பாட்டு தத்துவங்களோ, ஆழமான அனுபவத் தொகுப்போ, சட்ட நெறிமுறைகளின் விளக்கங்களோ எதுவுமின்றி, இடத்தை நிரப்புவதற்காக எழுதப்பட்ட கட்டுரைகளாக (fillers) இவை உள்ளன. உறுப்பினர் திரு.ரத்தினசாமி அவர்கள் எழுதியுள்ள ஒரு கட்டுரை மட்டுமே இதற்கு விதிவிலக்காக உள்ளது. தவிர ஏனையவை அனைத்தும் படிப்பதற்கோ, மனித உரிமைகள் பற்றிய சட்டங்களைத் தெரிந்து கொள்வதற்கோ கொஞ்சமும் உதவாது. ஆண்டறிக்கையில் கட்டுரைகள் இடம்பெற என்ன அவசியம்? ஒரு ஆண்டறிக்கை என்பது அந்த ஆண்டில் அவ்வமைப்பு மேற்கொண்ட செயல்பாடுகளின் தொகுப்பாகும். செயல்பாடுகள் இல்லாத அமைப்பு வேறு வழியில்லாமல் எதை எதையோ எழுதி பக்கங்களை நிரப்பிடும் முயற்சியில் ஈடுபடுவதற்கு இது ஓர் சிறந்த உதாரணம்.

ரூபாய் 22,71,000/– முன்பணமும், ரூ.1,89,252/– மாத வாடகையும் கொடுத்து மோகனவிலாஸ், எண்.35, திரு.வி.க.சாலை, இராயப்பேட்டை, சென்னை–14 என்ற முகவரியில் 10,514 சதுரஅடி பரப்பளவில் (இரண்டாவது மாடியில்) இம்மாநில மனித உரிமை ஆணையம் (மாநில மனித உரிமை ஆணைய ஆண்டறிக்கை 1998–99, பக்கம் 1) இயங்கி வருகிறது. இதுதவிர, இவ்வாணையம் கேட்டுக்கொண்டதற்கிணங்க இவ்வலுவலகத்தை மாற்றியமைத்து வசதிகளைப் பெருக்குவதற்காக மாநில அரசு ரூ.35,85,000/– தொகையை ஒதுக்கியுள்ளது. (அரசு ஆணை எண்.1913 மற்றும் 290, தேதி 27.11.98, 8.3.99) மேலும், உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் மொத்தம் ரூபாய் 18,12,138/– செலவில் தனித்தனியே புதிய கார்களும் மாநில அரசால் வழங்கப்பட்டுள்ளன. ஆணைய உறுப்பினர்கள் தவிர, மனித உரிமை மீறல்களை விசாரிக்க உதவியாக புலனாய்வுத்துறை ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. (அரசு ஆணை எண்.1076, தேதி 9.7.98) இந்த புலனாய்வுப் பிரிவில் ஐ.ஜி ஒருவர், காவல்துறை கண்காணிப்பாளர் ஒருவர், துணைக் கண்காணிப்பாளர்கள் இருவர், ஆய்வாளர்கள் இருவர், துணை ஆய்வாளர்கள் இருவர், காவலர்கள் எட்டுப்பேர் ஆகியோர் அடங்கிய குழு உள்ளது.

இவ்வளவு பெரிய அலுவலகத்தையும், கூடுதல் வசதி வாய்ப்புகளையும் கொண்டு புலன்விசாரணை செய்வதற்கு உதவியாக ஒரு போலீஸ் அதிகாரிகள் குழுவையும் உள்ளடக்கிய இவ்வாணையம் சட்டப்படி ஆற்றவேண்டிய தன்னுடைய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கடமைகளை வேண்டுமென்றே புறக்கணிப்பது சட்டத்திற்கு புறம்பான செயல். இதுவும் ஒரு வகையில் மனித உரிமை மீறல்தான். மனித உரிமை ஆணையத்திற் –கென்று ஒதுக்கப்பட்ட நிதி, ஏதோ தனி நபர்களுடைய மேம்பாட்டிற்காகவும், வசதிக்காகவும், பொழுதுபோக்கிற்காகவும் ஒதுக்கப்பட்ட நிதியல்ல. மக்களுடைய வரிப்பணத்தில் இருந்து செலவிடப்படக்கூடிய இப்பணத்திற்கு ஆணையத்தின் தலைவரும், பிற உறுப்பினர்களும் பதில் சொல்ல கடமைப்பட்டிருக்கிறார்கள். மனித உரிமை மீறல்களுக்கு அரசை பொறுப்பாக்க வேண்டும் என்ற முழக்கங்கள் உரக்க எழுப்பப்படக்கூடிய இந்தச் சூழலில், மனித உரிமை மீறல்களை விசாரிக்க வேண்டிய மனித உரிமை ஆணையங்களே இப்படி பொறுப்பற்ற தன்மையில் செயல்படுவதும் அரசின் பொதுப்பணத்தை விரயமாக்குவதும் மனித உரிமை மீறலே என்பதில் ஐயமில்லை. செலவழிக்கக்கூடிய ஒவ்வொரு பைசாவிற்கும் ஆணையம் கணக்குச் சொல்லியாக வேண்டும். அடிப்படை வசதிகள் இல்லாத எத்தனையோ மனித உரிமை அமைப்புகள் முழு மூச்சாக மனித உரிமைக்காக களத்தில் இறங்கி பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய இந்தச் சூழலில், மனித உரிமை மேம்பாட்டிற்காகவே அரசால் உருவாக்கப்பட்டுள்ள இந்த ஆணையம் தனக்குள்ள வசதிகளை சரியான முறையில் பயன்படுத்திட வேண்டும் என்பதுதான் எங்களது கோரிக்கை.

மனித உரிமைகள் பாதுகாப்பிலும், வளர்ப்பிலும் உண்மையான அக்கறை இவ்வாணையத்திற்கு இருக்குமேயானால், மனித உரிமைத் தளத்தில் பணி –யாற்றக்கூடிய பல்வேறு அமைப்புகளையும், நிறுவனங்களையும், வழக்கறிஞர்கள், கல்வியாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் உள்பட பலரையும் இணைத்து ஒரு பயனுள்ள விவாதத்திற்கு அழைப்பு விடுக்கலாம். தமிழகத்தில் நடைபெறுகின்ற மனித உரிமை மீறல்கள் குறித்த ஒரு நீண்ட விவாதத்தை நடத்தி, அதைத் தொடர்ந்த ஒருங்கிணைந்த செயற்பாட்டுத் திட்டத்தையும் இவ்வாணையம் உருவாக்க வேண்டும். மனித உரிமைப் பணியில் ஈடுபட்டு வரும் பலரும் தங்கள் ஆக்கப்பூர்வமான கருத்துக்களை வெளியிடவும், இணைந்த செயல்பாட்டுக்கு வழிவகுக்கும் வகையில் திட்டமிடவும் இது வழிவகுக்கும்.

இதுபோன்ற பொதுப்பணியில் ஈடுபட்டிருக்கக் கூடிய அமைப்பை கேள்விக்குட்படுத்த வேண்டியது நம்மைப் போன்றோருடைய கடமை. **ஒதுக்கப்பட்ட நிதியில்** ஒவ்வொரு ரூபாயும் முறையாக பயன்படுத்தப்படுகிறதா என்ற **கண்காணிப்பு** அவசியம்.

◆◆◆



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# XII. மனித உரிமைக்கான முன்முயற்சிகள்

## 1. மனித உரிமைக் கல்வி

மக்கள் கண்காணிப்பகம்–தமிழ்நாடும், பெங்களூர் இந்திய சமூக நிறுவனமும் இணைந்து மனித உரிமைக் கல்வித் திட்டத்தை 1997–98ம் ஆண்டு ஓர் மாதிரி திட்டமாக சென்னையில் உள்ள கத்தோலிக்க பெண்துறவியர் நடத்தும் 9 பள்ளிகளில் மட்டும் அறிமுகப்படுத்தியது. இம்மாதிரித் திட்டத்தில் 50 ஆசிரியர்களும், 2500 மாணவியரும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர். 9ம் வகுப்பு மாணவிகளுக்கு இக்கல்வி வழங்கப்பட்டது. தெற்காசிய மனித உரிமை ஆவணக் காப்பகத்தின் மனித உரிமைக் கல்வி பற்றிய பாடப்புத்தகத்தை அடிப்படையாகக் கொண்டு போதிக்கப்பட்டது. ஆசிரியைகளுக்கென்று இதற்கென மனித உரிமை பற்றிய அறிமுக பயிலரங்கமும், பாடப் பயிற்சியும் நடத்தப்பட்டது. இம்முதல் மாதிரித் திட்டத்தின் இறுதி விழாவில் தமிழக கல்வி அமைச்சர் திரு.க.அன்பழகன் மற்றும் தேசிய மனித உரிமை ஆணையத்தின் முன்னாள் தலைவர் திரு. வெங்கடாச்சலையாவும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். தமிழகப் பள்ளிகளில் அரசு இதை ஒரு கட்டாயப் பாடமாக்க வேண்டும் என்ற கோரிக்கை அம்மேடையில் வைக்கப்பட்டது.

இக்கல்வியின் மாதிரித் திட்டத்தில் மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் காட்டிய ஈடுபாட்டையும், ஆர்வத்தையும் உணர்ந்து கொண்ட பிறகு இத்திட்டத்தை இரண்டாம் கட்டமாகத் தமிழகத்தில் 10 மாவட்டங்களில் கொண்டு செல்ல வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது. சென்னை, மதுரை, திண்டுக்கல், திருச்சி, கரூர், கோவை, திருநெல்வேலி, தூத்துக்குடி, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் சுமார் 136 பள்ளிகள் இரண்டாம் கட்டத்தில் அங்கம் வகித்தன. இத்திட்டத்தில் அரசு பள்ளிகள், சிறுபான்மையினர் பள்ளிகள் மற்றும் மாநகராட்சிப் பள்ளிகள் மனமுவந்து தங்களை இணைத்துக் கொண்டன. 1998–2000 கல்வி ஆண்டில் இரண்டாண்டுத் திட்டமாக இத்திட்டம் நடைமுறையில் இருந்தது. இம்முறை 8ம் வகுப்பில் அறிமுகப்படுத்தப்பட்டு 9ம் வகுப்பில் அதே மாணவ, மாணவிகளுக்கு நடத்தப்பட்டது. இம்முறை மக்கள் கண்காணிப்பகமும், இந்திய சமூக நிறுவனமும் இணைந்து ஆசிரியர் குழுவை உருவாக்கி 'மனித உரிமை–ஓர் அறிமுகம்' என்ற நூலை 8ம் வகுப்பினருக்கு வெளியிட்டனர். இரண்டாம் ஆண்டில் 'குழந்தை உரிமைகள்' என்ற நூலை எழுதி 9 ஆம் வகுப்பினருக்கு அறிமுகப்படுத்தினர். இத்திட்டத்தில் 136 பள்ளிகள் இணைந்தன. சுமார் 350 ஆசிரியர்கள் இதில் தன்னார்வத்துடன் பணியாற்றினர். சுமார் 24,000 மாணவ, மாணவியர் இத்திட்டத்தில் பயனடைந்தனர். இதில் பணியாற்றிய ஆசிரியர்களுக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



50 பயிற்சி பெற்ற கருத்தாளர்களைக் கொண்டு 3 நாள் மனித உரிமை பற்றிய அறிமுக பயிலரங்கம், 2 நாள் பாடப்பயிற்சியும் நடத்தப்பட்டது.

இரண்டாம் கட்டம் நடந்து கொண்டிருக்கும் போதே தமிழக கத்தோலிக்கத் துறவியர் சபைப் பள்ளிகளின் தலைவர்களின் அழைப்பின் பேரில் நடைபெற்ற கூட்டத்தில் தமிழக துறவியர் சபைப்பள்ளிகளில் இத்திட்டம் கொண்டு செல்லப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. 1999–2002ம் கல்வி ஆண்டில் 3 ஆண்டு திட்டமாக இக்கல்வி இம்முறை 7ம், 8ம் மற்றும் 9ம் வகுப்பிற்கு எடுத்துச் செல்ல முடிவெடுக்கப்பட்டது. இத்திட்டத்தில் தமிழகம் மற்றும் பாண்டிச்சேரியில் உள்ள 265 பள்ளிகள் இணைந்துள்ளன. சுமார் 750 ஆசிரியர்கள், 35 ஆயிரம் மாணவ மாணவியர் இதில் பங்கு பெறுகின்றனர். இம்முறையும் ஆசிரியர்களுக்கான மூன்று நாள் மனித உரிமை பற்றிய பயிலரங்குகளும், இரண்டாம் நாள் பாடத்திட்ட பயிலரங்கும் 16 மையங்களில் பயிற்சி பெற்ற கருத்தாளர்களைக் கொண்டு நடத்தப்பட்டது.

### பாடநூல்

மனித உரிமைக் கல்வி ஓர் அறிமுகம் மற்றும் குழந்தை உரிமைகள் ஆகிய மனித உரிமைக் கல்வி நூல்கள் குழந்தைகளின் வயதிற்கும், மன நிலைக்கும் ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளன. உரையாடல்கள், கதைகள், கவிதை, நாடகம், கேள்வி–பதில், செய்முறை பயிற்சிகளாக ஒவ்வொரு பாடத்தின் பின்னுரையில் இணைக்கப்பட்டுள்ளன. வகுப்பறையில் நடக்கும் இயல்பான உரையாடல்களும் இதில் அடங்கும். அகில உலக மனித உரிமை பிரகடனம் இந்திய அரசியல் சாசனம், அடிப்படை உரிமைகள் போன்றவற்றிலிருந்து குறிப்பிட்ட பொருத்தமான சட்டப்பிரிவுகளும் ஆங்காங்கே இடம் பெற்றுள்ளன.

### ஆசிரியர்களுக்கான பயிற்சி

மனித உரிமைப் பயிற்சி பற்றிய கருத்தாளர்களைக் கொண்டு இத்திட்டத்தில் இணைந்துள்ள அனைத்து ஆசிரியர்களுக்கும் மூன்று நாள் மனித உரிமைப் பற்றிய அறிமுக பயிலரங்கு அளிக்கப்பட்டது. அதில் நலிந்தோர் பார்வையில் இந்தியச் சூழல், இன்றைய கல்வி அமைப்பு முறை பற்றிய அமர்வுகளும், குழந்தை உரிமைகள், பெண்கள் உரிமைகள், பாகுபாட்டுக்கெதிரான உரிமைகள் மற்றும் சுற்றுச்சூழல் உரிமைகள் போன்ற தலைப்புகளில் கலந்தாய்வரங்கமும், இந்திய அரசியலமைப்புச் சட்டம் பற்றிய தெளிவான கருத்துக்களும் இடம் பெற்றன. பெரும்பாலான ஆசிரியர்கள் இப்பயிலரங்கில் அதிகம் விஷயங்களைத் தெரிந்து கொண்டதையும், மாறுதலுக்கான பணியில் ஈடுபடப் போகிற ஆர்வமும் தங்களுக்கு ஏற்பட்டிருப்பதாக தங்களின் மதிப்பீட்டில் தெரிவித்திருந்தனர். இரண்டு நாள் நடத்தப்பட்ட பாடத்திட்ட பயிற்சியில் மாதிரி வகுப்புகள் எடுக்கப்பட்டன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**கருத்தாளர்கள்-ஒருங்கிணைப்பாளர்கள்**

இத்திட்டத்தில் மக்கள் கண்காணிப்பகம் மற்றும் இந்திய சமூக நிறுவனம் இணைந்து நடத்திய பயிலரங்கில் கலந்து கொண்ட கருத்தாளர்கள் ஆசிரியர் – களுக்கு பயிற்சி அளித்தனர். கல்வியாளர்கள், பேராசிரியர்கள், வழக்கறிஞர்கள், சமூக செயல்பாட்டாளர்கள், பெண்ணுரிமை ஆர்வலர்கள் ஆகியோர் தன்னார்வத் –தோடு இத்திட்டத்தில் பயிற்சியாளர்களாகவும் குறிப்பாக இரண்டாம்கட்ட திட்டத்தில் பத்து மாவட்டங்களில் தன்னார்வ மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களாக –வும் செயல்பட்டனர். மூன்றாம் கட்ட திட்டத்தில் துறவியர் சபையைச் சேர்ந்த அருட் சகோதரிகளே மாநில, மண்டல மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களாக செயல்பட்டு இத்திட்டத்தை வெற்றிகரமாக நடத்துகின்றனர்.

**2. போலீஸ் அதிகாரிகளுக்கான பயிலரங்கு**

தமிழக போலீஸ் அதிகாரிகளுக்கான மனித உரிமை பற்றிய பயிலரங்கு நடத்தப்பட வேண்டிய அவசியத்தை உணர்ந்து பல்வேறு மாவட்ட போலீஸ்துறை தலைமை அதிகாரிகளின் அழைப்பின் பேரில் மக்கள் கண்காணிப்பகம் இதுவரை இராமநாதபுரம், சிவகங்கை, கடலூர், திருச்சி புறநகர், புதுக்கோட்டை, திருச்சி நகர் ஆறு மாவட்டங்களில் மனித உரிமை பற்றிய பயிலரங்குகளை நடத்தியிருக்கிறது.

இப்பயிலரங்கில், 586 பேர் கலந்து கொண்டனர் இவர்களில் உதவி போலீஸ் ஆய்வாளர்கள், சார்பாய்வாளர்களும் அடங்குவர். தேசிய மனித உரிமை ஆணையங்கள், போலீஸ்துறையும் தாழ்த்தப்பட்டோர் உரிமையும், போலீஸ்துறையும் கைது செய்யப்படுவோர் உரிமைகளும், போலீசாரின் நடத்தை விதிகளும் பயிலரங்கில் விவாதிக்கப்பட்டன.

இப்பயிலரங்கு நடைபெற்ற பிறகு போலீஸ்நிலையங்களில் உச்சநீதி மன்றத்தின் கைது செய்யும் போது கடைபிடிக்க வேண்டிய 11 கட்டளைகளை மக்கள் பார்வையில் படும்படி வைத்துள்ளனர். கைது குறிப்பு மற்றும் முதல் தகவல் அறிக்கைகளில் முறையான தகவல்களை குறிப்பிட முனைந்திருக்கின்றனர். போலீஸ்துறையினுள்ளே இருக்கும் மனித உரிமை பிரச்சனைகளையும் வெளிக் கொணரும் ஒரு அமர்வாக இப்பயிலரங்கு அமைந்தது குறிப்பிடத்தக்கது. போலீஸ்துறையில் மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் நோக்கில் இப்பயிலரங்கு அமைந்திருந்தது சிறப்பான அம்சமாகும்.

**3. அதிரடிப்படையினரின் மனித உரிமை மீறல்களில் தலையீடு**

1992–93ல் சிறப்பு அதிரடிப்படையினர் நிகழ்த்திய மனித உரிமை மீறல்களை, அவ்வப்போது பல அமைப்புகளும், பத்திரிகைகளும் வெளிச்சத்திற்கு கொண்டு வந்தன. இந்நிலையில், 1999ம் ஆண்டு தமிழகத்திலும், கர்நாடகத்தி லுமுள்ள பல மனித உரிமை அமைப்புகள் இணைந்து தடா வழக்குகளில் சிக்கி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


மைசூர் சிறையில் வாடும் தமிழர்களை மீட்டு மறுவாழ்வு அளிக்கும் நோக்கில் பிரச்சாரக்குழு ஒன்றை உருவாக்கின. இக்குழுதான் முதன் முதலில் அதிரடிப்படையினரால் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரையும் ஒன்று திரட்டி, அவர்களிடமிருந்து தகவல்களையும், பாதிக்கப்பட்டோரிடமிருந்து சத்தியப் பிரமாண வாக்குமூலங்களைப் பெற்று அவற்றை தேசிய மனித உரிமைகள் ஆணையத் – திலும், மாநில மனித உரிமை ஆணையத்திலும் 1999ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் சமர்ப்பிக்க ஏற்பாடு செய்தது. தொடக்கத்தில் தேசிய மனித உரிமைகள் ஆணையம் செயல்படாமல் இருந்தாலும், பின்னர் அங்கு நடந்த மனித உரிமை மீறல்களை விசாரிக்க இருநபர் விசாரணைக்குழு ஒன்றை அமைத்தது. நீதிபதி திரு.சதாசிவா, ஓய்வு பெற்ற புலனாய்வுத்துறை இயக்குநர் திரு.சி.வி. நரசிம்மன் ஆகியோர் அடங்கிய இந்த விசாரணைக் குழுவை இப்பிரச்சாரக்குழு உறுப்பினர்கள் இருமுறை சந்தித்து நடைபெறவிருக்கும் விசாரணை குறித்துப் பேசினர். அப்போது தமிழ்நாட்டில் உள்ள கோபி செட்டிப்பாளையத்தில் (ஈரோடு மாவட்டம்) ஒருமுறையும், குளத்தூரில் (சேலம் மாவட்டம்) ஒரு முறையும், மாதேஸ்வரன் மலையில் (சாம்ராஜ் நகர் மாவட்டம், கர்நாடகம்) ஒருமுறையுமாக மூன்று இடங்களில் இருந்து விசாரணையை நடத்த வேண்டும் எனப் பிரச்சாரக்குழு கேட்டுக் கொண்டதை விசாரணைக்குழு ஏற்றுக் கொண்டது. அதன்படி 2000 ஜனவரி 27–29 ஆகிய நாட்களில் கோபிச் செட்டிப்பாளையத்தில் முதல் விசாரணையைத் துவக்கியது. கோபிச் செட்டிப்பாளையத்தைச் சுற்றியுள்ள பகுதியிலிருந்து பாதிக்கப்பட்ட மக்களை பிரச்சாரக் குழுவில் இடம்பெற்ற அமைப்பினர் திரட்டிக் கொண்டு வந்த பின், ஜனவரி 27ம் தேதி திட்டமிட்டபடி விசாரணை தொடங்கவில்லை. பின்னர், 28, 29 ஆகிய தேதிகளில் மொத்தம் 95 சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். 2000 பிப்ரவரி 28, மார்ச் 1ம் தேதி வரை சேலம் மாவட்டம், மேட்டூர் தாலுகா, கொளத்தூரில் இரண்டாவது விசாரணை துவங்கியது.

இந்த இரண்டாவது விசாரணைக்கு வரும் அப்பாவி சாட்சிகளை அவர்கள் ஊரில் இருந்து கிளம்பும் போதே அவர்களை மிரட்டியதோடு, விசாரணையின் போது, எண்ணற்ற போலீசார் விசாரணை இடத்திற்கும் வந்தும், அச்சுறுத்தும் சூழ்நிலையை ஏற்படுத்தினர். இரண்டாவது விசாரணை ஆரம்பிக்கும் போதே, ஏற்கெனவே பாதிக்கப்பட்டோர் தமிழ்நாடு மனித உரிமைகள் ஆணையத்தில் இம்மனித உரிமை மீறல்கள் சம்பந்தமாக புகார்களை அனுப்பி – யுள்ளதாலும், தமிழக சிறப்பு அதிரடிப்படையினர் நிகழ்த்திய மனித உரிமை மீறல்களை விசாரிக்க இக்குழுவுக்கு உரிமை இல்லை என்பதாலும், எஞ்சிய வழக்குகளை விசாரிக்க இயலாது என்று விசாரணைக்குழு தெரிவித்தது. தமிழக மனித உரிமைகள் ஆணையத்தை அணுகுவது மேற்படி விசாரணைக் குழுவிற்கு சிரமத்தை உண்டாக்குமேயாயின், அதைத் தவிர்த்து விடுவதாகவும் கூறியது. பெரும்பாலான மனித உரிமை மீறல்கள் கர்நாடக அதிரடிப்படையினருடன், தமிழக சிறப்பு அதிரடிப்படையினரும் இணைந்தே நடத்தியுள்ளனர். எனவே,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இவ்வழக்குகளை கட்டாயம் விசாரிக்க வேண்டும் என்றும் பிரச்சாரக்குழு சார்பாக விசாரணைக்குழுவிடம் தெரிவிக்கப்பட்ட பின், விருப்பமின்றி எஞ்சிய வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

விசாரணை ஆரம்பித்ததும், பாதிக்கப்பட்டோர் மீது கிரிமினல் வழக்குகள் இருப்பதால், மேலும் விசாரணையைத் தொடர இயலாது என்று மீண்டும் விசாரணைக்குழு தெரிவித்தது.

### 4. மரண தண்டனை ஒழிப்புப் பிரச்சாரம் (Campaign Against Death Penalty)

மரணதண்டனை மனிதனின் வாழ்வுரிமையையே பறிப்பதாக அமைகிறது; அது சட்டப் புத்தகத்திலிருந்தே அகற்றப்பட வேண்டும் என்று உலகின் பல பாகங்களிலிருந்தும் எதிர்ப்புக் குரல்கள் வலுவாக எழுந்து வருகின்றன. மரண தண்டனை ஒழிப்பிற்கான பிரச்சாரத்தை ஒரு இயக்கமாகவே சர்வதேச பொதுமன்னிப்புச் சபை என்ற அகில உலக மனித உரிமை அமைப்பு நடத்தி வருகிறது. கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்ற கற்காலத்து காட்டு – மிராண்டித்தனமான தண்டனையை நாகரீகமடைந்த அரசுகள் வழங்கிடக் கூடாது. மரணதண்டனை வழங்கப்படுவதால் குற்றங்கள் பெருவாரியாகக் குறைந்தும் விடவில்லை என்பதை இது சம்பந்தமாக நடத்தப்பட்ட அகில உலக அளவில் பல்வேறு ஆய்வின் புள்ளிவிபரங்களும் இதையே நிரூபிக்கின்றன.

இச்சூழ்நிலையில், இந்தியாவில் மரண தண்டனை ஒழிப்புப் பிரச்சாரம் 1998–ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. உச்சநீதிமன்றத்தின் ஒய்வு பெற்ற நீதிபதியும், மனித உரிமைப் போராளியுமான திரு.வி.ஆர்.கிருஷ்ண அய்யரைத் தலைவராகக் கொண்டு செயல்படும் மரண தண்டனை ஒழிப்புப் பிரச்சார இயக்கம் தேசிய அளவில் பல்வேறு பிரச்சாரக் கூட்டங்களை நடத்தி வருகிறது. எந்த வகையான குற்றமாயினும் மரண தண்டனை வழங்கக் கூடாது என்ற நிலைப்பாட்டை முன்வைக்கும் இவ்வியக்கத்தில் மேலும் மேலும் பல்வேறு நீதிபதிகள், வழக்கறி – ஞர்கள், அறிஞர்கள் பேராசிரியர்கள், கல்வியாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் பல்வேறு துறைகளைச் சார்ந்த பலரும் இணைந்து குரல் கொடுத்து வருகின்றனர். இந்தியாவில் மரண தண்டனையை ஒழித்திட இந்திய குடியாட்சித் தலைவருக்கு தொடர்ந்து வேண்டுகோள் விடவும், சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான அகில உலக உடன்படிக்கையின் இரண்டாவது விருப்ப உடன்பாட்டில் இந்தியா கையெழுத்திட வற்புறுத்தவும், இந்தியத் தண்டனைச் சட்டத்தில் பிரிவு 302ம், பிற சட்டங்களிலும் இடம் பெற்றுள்ள 'மரண தண்டனை' என்ற வார்த்தையை நீக்கிடவும் இவ்வியக்கம் குரல் கொடுத்து வருகிறது.

1998, ஜனவரி 28ம் தேதி சென்னை பூந்தமல்லி 'தடா' சிறப்பு நீதிமன்றத்தால் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 26 தமிழர்களுக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. பின்னர், இத்தீர்ப்பை எதிர்த்து தாக்கல் செய்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மேல்முறையீட்டினால், 1999, மே 11ம் தேதி உச்சநீதிமன்றம் 19 பேரை விடுவித்தும், 3 பேருக்கு ஆயுள்தண்டனையாகக் குறைத்தும், மீதி நால்வருக்குத் தூக்குத் தண்டனையை உறுதி செய்தும் தீர்ப்பு வழங்கியது. இவ்வழக்கில் நால்வரின் மரணதண்டனை குறைக்கப்பட வேண்டும் என்ற முனைப்போடு இப்பிரச்சாரம் இந்தியாவின் பல பகுதிகளிலும் பிரச்சாரக் கூட்டங்களை நிகழ்த்தியது.

தமிழக ஆளுநருக்கும், குடியாட்சித் தலைவருக்கும் கருணை மனுக்கள் அனுப்புவது, மரண தண்டனை ஒழிப்பு குறித்து தொடர்ந்து மக்கள் மத்தியில் பிரச்சாரத்தைக் கொண்டு செல்வது போன்ற பணிகளில் இந்த இயக்கம் ஈடுபட்டு வருகிறது. ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை உறுதி செய்யப்பட்ட நால்வரில் நளினிக்குத் தமிழக கவர்னர் வழங்கியிருக்கும் தண்டனைக் குறைப்பு இப்பிரச்சாரத்தை வலுப்படுத்தும் என்பதில் அய்யமில்லை.

தொடர்பு முகவரி: மரண தண்டனை ஒழிப்புப் பிரச்சாரம்
பி1, முதல் தளம், பில்லர் அபார்ட்மன்ஸ்,
எண்.13, 10–ஆ அவென்யூ, அசோக்நகர்,
சென்னை – 600 083.

**5. *பெண்கருகொலைக்கெதிரான பிரச்சாரம்*** (Campaign Against Sex Selective Abortion – CASSA)

சமூக வளர்ச்சி என்பது சமூகத்தின் சரிபாதி அங்கமான பெண்ணின் பங்களிப்பு மற்றும் பங்கேற்பு இல்லாமல் சாத்தியமில்லாத ஒன்றாகும். ஆனால், பெண்கள் உயிர் வாழ்வதற்கான அனைத்து உரிமைகளும், பிறப்பது முதல் இறப்பது வரை மீறப்பட்டும், மறுக்கப்பட்டும் வருவது கண்கூடான ஒன்றாகும். பெண் மீதான ஒடுக்குமுறைகள் வெவ்வேறு கால கட்டத்திலும் வெவ்வேறு வடிவத்திலும் வெளிப்பட்டபோதும், சமீபகாலமாக பெண்ணினத்தையே அழித்திடும் வகையில், பல்வேறு தொழில் நுட்ப உதவியுடன் பெண் கருக்கொலை அதிக அளவில் நடந்தேறி வருகிறது. இந்த வன்முறையானது அதிர்ச்சியூட்டுவதுடன் மிகப்பெரிய மனித உரிமை மீறலாகவும் இருக்கிறது.

கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ்நாட்டில் ஆண் குழந்தைகளை விட பெண் குழந்தைகளின் விகிதம் குறைந்து வருகின்றது. 1961ல் 995 ஆக இருந்த குழந்தைகளின் பாலின விகிதாச்சாரம் 1991ல் 948 ஆக குறைந்துள்ளது. 5 வயதிற்குட்பட்ட ஆண் பெண் குழந்தைகள் குறித்து சமீபத்தில் தன்னார்வக் குழுக்களால் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின் மூலம் (1999ம் வருடம்) உசிலம்பட்டி பகுதியில் 1000 ஆண் குழந்தைகளுக்கு 879 பெண் குழந்தைகளும் (88 கிராமம்). செல்லம்பட்டி பகுதியில் 850 பெண் குழந்தைகளும் (41 கிராமம்). நாகபட்டினத்தில் 924 பெண் குழந்தைகளும் (50 கிராமம்). தர்மபுரி பகுதியில் 14 வயதிற்குட்பட்ட 1000 ஆண் குழந்தைகளுக்கு 822 பெண் குழந்தைகளும் (50 கிராமம்) உள்ளது தெரியவந்துள்ளது.அரசு மற்றும் தனியார் மருத்துவமனை புள்ளிவிபரங்களிலிருந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெறப்பட்ட, பிறந்த சிசுக்களின் ஆண்–பெண் விகித்தாச்சாரம் சென்னையில் மூன்று மருத்துவமனைகளில் முறையே 927, 859, 929 ஆகவும் மதுரையில் மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்களில் முறையே 718, 888, 786 ஆகவும் இருப்பது மனித இனத்திற்கு விடுக்கப்பட்டுள்ள சவாலாக அமைந்துள்ளது.

இந்நிலையில் உடல் உள்ளுறுப்புகளின் குறைபாடுகள், நோய்களைக் கண்டறிவதற்காகவும், பிறக்கப் போகும் குழந்தைகளின் குறைபாடுகளைக் கண்டறிவதற்காகவும் அறிமுகப்படுத்தப்பட்ட Chorionic Villi Biopsy, Amniocentesis, Ultrasonogram, Foetoscope போன்ற மருத்துவ தொழில்நுட்பங்கள், பிறக்கப் போகும் குழந்தை ஆணா பெண்ணா என்று கண்டறிய உபயோகப்–படுத்தப்படுவதுடன், பெண் குழந்தையாக இருக்கும் பட்சத்தில் கருவிலேயே அழித்து விடுவதற்கு, இத்தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த பெண் விரோத தொழில் நுட்பங்களை நெறிப்படுத்தும் வகையில் மத்திய அரசு, "பிறக்கப் போகும் குழந்தையின் குறைபாடுகளைக் கண்டறிய உதவும் தொழில் நுட்பம் (முறைப்படுத்துதலும், தவறாக உற்யோகப்படுத்துவதைத் தடுத்தலும்) சட்டம் 1994"ஐ (Prenatal Diagnositc Techniques (Regulation and Prevention of Misuse) Act) நிறைவேற்றியுள்ளது. இச்சட்டத்தின் கீழ் விதிமுறைகளையும் இயற்றியுள்ளது. தமிழ்நாடு மாநில அரசும் இது சம்பந்தமான அரசாணைகளை வெளியிட்டுள்ளது. இச்சட்டம் இயற்றப்பட்டு 5 ஆண்டுகள் முடிவடைந்தும், இச்சட்டத்தை முழுமையாக அமல்படுத்த அரசு எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

இச்சூழலில் பெண்குழந்தைகள் பிறக்கும் உரிமையை பறிப்பதை எதிர்த்தும் பெண்களின் வாழ்வுரிமை பாதிக்கப்படுவதை எதிர்த்தும் உருவானது தான் பெண்கருக்கொலைக்கு எதிரான பிரச்சார இயக்கம்.(CASSA) இந்த மாநில அளவிலான, பெண் கருக்கொலைக்கெதிரான பிரச்சாரமானது அரசின் இந்த மெத்தனப் போக்கை கண்டித்து பல நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன், சம்பந்தப்பட்ட அமலாக்க அதிகாரிக்கும், சுகாதார அமைச்சர் மற்றும் முதலமைச்சர் அவர்களுக்கும் பல்வேறு மனுக்களை அனுப்பியுள்ளது.

இதுவரை காசா இயக்கம் பலமுறை சட்டமன்ற உறுப்பினர்களை சந்தித்து இப்பிரச்சினையை சட்டப்பேரவையில் எழுப்புமாறு நிர்பந்தித்து உள்ளது. இதனால், மேற்குறிப்பிட்டுள்ள தொழில் நுட்பங்களை உடைய அனைத்து மையங்களையும் மே 31, 1999க்குள் பதிவு செய்யும்படி அரசு அறிவிப்பு பத்திரிக்கைகளில் வெளியானது. தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் ஏறத்தாழ 5000 ஸ்கேன் மையங்கள் இருப்பதாக தெரிய வருகிறது. மருத்துவம் மற்றும் ஊரக சேவைத்துறை தகவலின் அடிப்படையில் ஏப்ரல் 2000 வரை 706 விண்ணப்பங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 318 நிலையங்களுக்கு பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. 124 விண்ணப்பங்கள் பரிசீலனையில் உள்ளன. 264



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


நிலையங்களுக்கு விண்ணப்பங்கள் அனுப்பாததற்கான நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. இச்சட்டம் இயற்றப்பட்டு நான்கு வருடங்கள் ஆன போதும், சட்டம் குறித்த விழிப்புணர்வு மருத்துவர்களிடமும், மேற்கூறிய தொழில் நுட்பத்தை உபயோகப்படுத்தும் வல்லுநர்களிடமும் இல்லை. சட்டத்தை மீறியுள்ள மருத்து – வர்கள் யாரும் இன்றுவரை தண்டிக்கப்படவில்லை. பதிவு செய்யப்படாத மரபணு நிலையங்கள் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இப்பிரச்சாரத்தின் ஒரு கோரிக்கையாக மாவட்ட ரீதியிலான அமுலாக்க அதிகாரிகள் (நான்கு மாவட்டங்கள் நீங்கலாக) நியமிக்கப்பட்டுள்ளனர்.

பெண் கருக்கொலைக்கெதிரான பிரச்சாரமானது அரசு மற்றும் பதிவு செய்யப்படாத ஸ்கேன் மையங்களைக் கண்டித்து, கீழ்க்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, மே 16, 2000 அன்று மாநில அளவிலான ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

- மே 31, 1999க்குள் பதிவு செய்யப்படாத ஸ்கேன் மையங்கள் மற்றும் மரபணு கூடங்கள் தடை செய்யப்பட வேண்டும்.
- பெண் கருக்கொலை தடுப்புச் சட்டம் அமுல்படுத்தப்பட, மாநில மற்றும் மாவட்ட அளவிலான அமுலாக்க அதிகாரிகளோடு இதர மருத்துவத் துறைகள், சமூக நலத்துறையைச் சேர்ந்த நிறுவனங்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டு, அவை ஸ்கேன் மையங்களைப் பதிவு செய்வதுடன், கண்காணிக்கும் பொறுப்பையும் ஏற்க வேண்டும்.
- ஏப்ரல் 2000க்குள் பதிவு செய்ய விண்ணப்பித்துள்ள அனைத்து மையங்களுக் –கும், இவ்வருட மே மாத இறுதிக்குள் பதிவு சான்றிதழ் வழங்கப்பட வேண்டும்.
- ஜூலை மாத இறுதிக்குள், விடுவிக்கப்பட்ட கோயம்புத்தூர், நீலகிரி, கன்னியாகுமரி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களுக்கு அமுலாக்க அமைப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.
- ஜூன் மாத இறுதிக்குள் மாவட்ட அளவில் ஆலோசனை குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு அவை ஜனநாயகப்படுத்தப்பட வேண்டும்.
- அனைத்து தனியார் மருத்துவமனைகளுக்கும், அரசு மருத்துவமனைகளுக் – கும் பொதுமக்களுக்கும், பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கை மற்றும் பாலினம் குறித்த தக்வல்களையும், கருக்கலைப்பு மற்றும் பாலினம் குறித்த தகவல்களையும் மாதவாரியாக, அரசு அறிவிக்கை (Notification) மூலம் தெரிவிக்கப்பட்டு அவை பொதுமக்களின் பார்வையில்படும்படி முன் வைக்கப்பட வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



- பெண் கருக்கொலை சட்டத்தினை மீறும் மருத்துவர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களின் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
- பெண் குழந்தைகளின் பிறக்கும் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும்.
- ஆண் குழந்தை பிறப்பதற்கு முன்னுரிமை அளிப்பதை உடனடியாக நிறுத்த வேண்டும்.
- பிறக்கும் அனைத்து குழந்தைகளின் மனித மதிப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும்.
- மருத்துவத் துறையைச் சேர்ந்தவர்கள் பெண் விரோத தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி பெண் சிசுவை கருவிலேயே கொல்லும் கொடுமையான உடனடியாக தடுத்து நிறுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

தொடர்பு முகவரி : பெண்கருக்கொலைக்கெதிரான பிரச்சாரம்
11, கமலா 2வது தெரு,
சின்ன சொக்கிகுளம், மதுரை – 625 002.

### 6. தாமிரபரணி - பொது விசாரணை

கடந்த ஜூலை மாதம் 23ம் தேதியன்று தமிழகத்தையே உலுக்கிய திருநெல்வேலி தாமிரபரணி சம்பவத்தில் 17 பேர் மரணமடைந்தனர். தமிழகத்தின் ஜாலியன்வாலாபாக் என்று வர்ணிக்கப்படுகின்ற இச்சம்பவம் மாஞ்சோலை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் ஊர்வலத்தில் போலீசாரின் அத்து மீறலால்தான் ஏற்பட்டது என்று பத்திரிகைகளில் செய்தி வெளியானது. இதனைத் தொடர்ந்து நடந்த சம்பவத்தின் உண்மையை அறிய மனித உரிமைக் கல்வி மற்றும் பாதுகாப்புக் குழு, திருநெல்வேலி, சோக்கோ அறக்கட்டளை, எஸ்.ஐ.ஆர்.டி, தலித் மனித உரிமைகளுக்கான தேசிய இயக்கத்தின் தமிழ்நாடு பிரிவு, மனித உரிமைகளுக்கான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம், மக்கள் கண்காணிப்பகம்–தமிழ்நாடு ஆகிய அரசு சாரா நிறுவனங்கள் ஒன்று சேர்ந்து 7 பேர் கொண்ட உண்மை அறியும் குழு ஒன்றை அமைத்தன. இக்குழு ஜூலை மாதம் 24ம் தேதியிலிருந்து 30ம் தேதி வரை இச்சம்பவத்தில் இறந்தவர்களின் உறவினர்கள், பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோரை சந்தித்து விசாரணையை மேற்கொண்டனர். மீண்டும் ஆகஸ்ட் 1ம் தேதியிலிருந்து 18ம் தேதிவரை இக்குழு இச்சம்பவத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள், வீடியோ கேசட்டுகள், பத்திரிகைச் செய்திகள் ஆகியவற்றை சேகரித்தது. பின்னர், இச்சம்பவம் குறித்த பொது விசாரணை நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது. இக்குழு கேட்டுக் கொண்டதற்கிணங்க மும்பை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி எச்.சுரேஷ், முன்னாள் போலீஸ் இயக்குனர் வி.ஆர்.லட்சுமி நாராயணன், ஐ.பி.எஸ்., தலித்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கூட்டு செயல்பாட்டுக் கமிட்டி மற்றும் பஞ்சமி நில மீட்பு இயக்கத்தின் தலைவரான வி.கருப்பன், ஐ.ஏ.எஸ். (ஓய்வு) மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் முனைவர் வசந்தி தேவி ஆகியோர் நீதிபதிகளாக இருந்த, பொது விசாரணை ஒன்று கடந்த ஆகஸ்ட் 19 மற்றும் 20ம் தேதிகளில் திருநெல்வேலியில் நடைபெற்றது.

பொது விசாரணையில் பங்கெடுத்துக் கொள்ள, நீதிபதிகள் முன்பாக தத்தம் சாட்சியங்களை அளிக்கக் கோரி இறந்தவர்களின் உறவினர்கள், காயமடைந்து பாதிக்கப்பட்டவர்கள், நேரடி சாட்சியங்கள், ஊர்வலத்தில் பங்கேற்ற அரசியல் கட்சிகளின் தலைவர்கள் ஊர்வலத்திற்கு அனுமதி அளித்த மாவட்ட அதிகாரிகள் அரசின் தலைமைச் செயலர், உள்துறை செயலர் மற்றும் போலீஸ் துறையின் பொது இயக்குனர் ஆகியோர்களுக்கு நீதிபதிகள் குழு நோட்டீசுகளை அனுப்பியது. ஆகஸ்ட் 19ம் தேதியன்று உள்துறை செயலரின் உதவியாளர், சென்னையிலுள்ள கூட்டமைப்பைச் சேர்ந்த அரசு சாரா நிறுவனத்தை தொடர்பு கொண்டு இப்பொது விசாரணையில் பங்கேற்குமாறு மாவட்ட அதிகாரிகளுக்கு உள்துறை செயலகம் கடிதம் எழுதியுள்ளதாக கூறினார். இப்படி அரசு அதிகாரிகளுக்கும், போலீஸ் அதிகாரிகளுக்கும் கடிதம் எழுதியும் அரசு சார்பாக இச்சம்பவத்தில் தொடர்புடைய போலீஸ் அதிகாரிகளோ மாவட்ட அதிகாரிகளோ விசாரணைக்கு வரவில்லை. ஆகஸ்ட் 19ம் தேதியன்று நீதிபதிகள் குழு தாமிரபரணி ஆற்றை ஒட்டியுள்ள கொக்கிரகுளம் சாலைக்கும் சம்பவம் நடந்த தாமிரபரணி ஆற்றின் பகுதிக்கு சென்று பார்வையிட்டனர். பின்னர் நடந்த பொது விசாரணையில் நீதிபதிகள் முன்னிலையில் 40 சாட்சிகள் தங்கள் வாக்கு மூலங்களை அளித்தனர். எழுத்து மூலமான வாக்குமூலங்களும் நீதிபதிகளிடம் தரப்பட்டன. மறுநாள், 20ம் தேதியன்று நீதிபதிகள் வி.கருப்பன், முனைவர் வசந்தி தேவியின் முன்னிலையில் 9 பேர் தங்கள் வாக்குமூலங்களை தந்தனர். இதன் பின்னர், நீதிபதிகள் இச்சம்பவத்தில் காயம்பட்ட அதிகமான தொழிலாளர்கள் வசித்து வரும் நாஞ்சன்குளம் கிராமத்திற்குச் சென்றனர்.

இந்நீதிபதிகள் குழு ஆகஸ்டு 19, 20 ஆகிய தேதிகளில் சாட்சிகள் முன்மொழிந்த சாட்சியங்களையும், சமர்ப்பிக்கப்பட்ட நிழற்படங்கள் மற்றும் பிற ஆவணங்களையும் ஆராய்ந்து தனது முடிவுகளை வழங்கியது. அமைதியாக, ஆயுதங்களின்றி கூடிய கூட்டத்தைக் கலைக்க காக்கிச் சீருடை அணிந்த போலீசார் மிருகத்தனமான முறையில் நடந்து கொண்டனர் என்றும் போலீசாரின் நடவடிக்கையால் தாமிரபரணி ஆற்றில் 17 பேர் இறந்தனர் என்றும் விசாரணை முடிவுகள் தெளிவாகக் குறிப்பிடுகின்றன.

மனித உரிமை மீறல்களுக்கு அரசினைப் பொறுப்பாக்கும் முயற்சியில் திருநெல்வேலியில் நடந்த இந்த பொது விசாரணை ஒரு முன்னுதாரணம். இப்படுகொலை சம்பந்தமாக தொடர்ந்து நடைபெற்ற நீதியரசர் திரு.மோகன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


ஆணையத்தின் முன்பாகவும்,பாதிக்கப்பட்டோர் சார்பாக மக்கள் கண்காணிப்பகம்–தமிழ்நாடு வழக்காடியது. இப்போது நீதிபதி மோகன் தனது அறிக்கையை தமிழக அரசிடம் சமர்ப்பித்துள்ளார்.

**7. கடலோர செயல்பாட்டு கூட்டு நடவடிக்கைக்குழு**
(Coastal Action Network )

தமிழகத்திலும் பாண்டிச்சேரியிலும் கடற்கரையோரங்களை நாசப்படுத்தி வந்த இறால் தொழிற்சாலைகள் அமைக்கப்படுவதை எதிர்த்து 1994ம் ஆண்டில் இறால் தொழிற்சாலைகளுக்கு எதிரான பிரச்சாரமாக (Campaign Against Shrimp Industries - CASI) துவங்கப்பட்ட இப்பிரச்சார இயக்கத்தில் மீனவர் சங்கங்களின் தலைவர்கள், கடலோரக் கிராமங்களின் பஞ்சாயத்து தலைவர்கள், சுற்றுச்சூழல் செயல்பாட்டாளர்கள் மற்றும் விஞ்ஞானிகள், கல்லூரி ஆசிரியர்கள், வழக்கறிஞர் –கள், அரசு சாரா அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் தொழிற்சங்க பிரதிநிதிகள் ஆகியோர் உறுப்பினர்களாக இருந்தனர்.

காசி அமைப்பானது துவக்கப்பட்டதிலிருந்தே இறால் தொழிற்சாலை –களுக்கு மட்டுமின்றி கடலோரப் பகுதியிலுள்ள சுற்றுச்சூழல் பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்தே வந்தது. நாளடைவில் இக்கடலோரப் பிரச்சினைகள் கடலோர முறைப்படுத்துதல் (Coastal Regulation Zones-CRZ) பகுதிகளுடன் தொடர்புடைய –தாகவும் உடனடி கவனத்தைக் கோருபவையாகவும் இருந்ததால் இப்பிரச்சினை –களை எதிர்கொள்ள இன்னொரு அமைப்பு உருவாக்கப்படுவதன் அவசியம் உணரப்பட்டது. இதன் விளைவாக, கடலோரப் பிரச்சினைகளை எதிர்கொள்ள சுற்றுச்சூழல் குழுக்கள், மனித உரிமை செயல்பாட்டாளர்கள், வழக்கறிஞர்கள், அரசு சாரா அமைப்புகளினால் கட்டப்பட்ட மக்கள் இயக்கங்கள், பெண்கள் அமைப்புகள் கொண்ட கடலோர செயல்பாட்டு கூட்டு நடவடிக்கைக்குழு 1996–ம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.

கேன் என்றழைக்கப்படும் (Coastal Action Network-CAN) இந்த அமைப்பின் முக்கியச் செயல்பாடே கடலோரச் சுற்றுச் சூழலையும் கடலோரப் பகுதி வாழ் மக்களின் முக்கியமாக மீனவர்களின் உரிமைகளைக் காப்பதாகவும் இருந்தது. கடல்பகுதியைக் காக்க வேண்டுமெனில், கடலோரப் பகுதி முறைப்படுத் –துதல் ஆணைக்குட்பட்ட (1991) பகுதிகளை (Coastal Regulation Zone Notification) பாதுகாப்பது அவசியமாகும். கேன் துவங்கப்பட்டபோது, அரசு தனது பல்வேறு நடவடிக்கைகளின் மூலம் இந்த ஆணையை மழுங்கடிக்கச் செய்வதற்கான வேலைகளை செய்து கொண்டிருந்தது.

1000 கி.மீட்டர் உடைய தமிழகக் கடற்கரையானது பூகோள ரீதியாக அழகிய இயற்கை வளங்களையும், அரிய உயிரினங்களையும் பல்லுயிர்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெருக்கத்தையும் கொண்டது. இச்சுற்றுச்சூழல் அமைப்பானது பன்முகத்தன்மை கொண்டதுடன் மிகவும் சிக்கலான உறவுகளையும் கொண்டது. இப்பகுதி முழுவதும் வாழும் உயிரினங்களும் சுற்றுச்சூழலும் ஒன்றையொன்று சார்ந்து இயங்குபவை. ஏற்கெனவே இப்பகுதியானது அடிப்படைக் கட்டுமான வசதிகள் இன்றி சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டே இருந்தது. இத்துடன் இப்பகுதி முழுவதும் துவங்கப்பட்டுள்ள மற்றும் துவக்கப்பட்டு வரும் பல்வேறு பிரம்மாண்டமான தொழிற்திட்டங்களினால் இப்பகுதிவாழ் தாவர உயிரினங்களுக்கும், சுற்றுச் சூழலுக்கும் குடிநீருக்கும் பெரும் மாசு ஏற்பட்டு வந்தது. கடற்கரையின் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க மத்திய அரசு 19.2.91ம் தேதியன்று சுற்றுச்சூழல் பாதுகாப்பு விதிகள் 1986ன் கீழ் உள்ள 5ன் உபபிரிவு 3ல் பிரிவு (ஈ)ன்படி கடலோரப் பகுதி முறைப்படுத்துதல் ஆணையை அறிவித்தது. இந்த ஆணையின் மூலம் உயர் அலை மட்டத்திற்கும் (High Tide Line) தாழ்வு அலை மட்டத்திற்கும் (Low Tide Line) இடையிலான 500 மீட்டர் பகுதி கடலோர முறைப்படுத்தப்பட்ட பகுதியாக (CRZ) அறிவிக்கப்பட்டது. இப்பகுதியில் ஆணை அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து தொழிற்சாலைகளை அமைக்கவோ, அவை செயல்படவோ தடைகள் விதிக்கப்பட்டன. ஆனால், இந்த ஆணையானது மாற்றப்பட வேண்டுமேன்று பெருந்தொழிலதிபர்களின் மூலமாகவும், சுற்றுலாக் குழுக்களின் மூலமாகவும் நிர்பந்தங்களுக்குள்ளானது. இதனால் ஆணை பல்வேறு திருத்தங்களுக்குள்ளாகி அதன் சாரத்தை இழந்து சக்கையானது. இதனால் சுற்றுச்சூழல் குழுக்கள், கடலோரப் பகுதி முறைப்படுத்துதல் ஆணை–1991 ஆனது அமல்படுத்தப்பட வேண்டுமென்று ரிட்மனு ஒன்றைத் தாக்கல் செய்தன. இதனைத் தொடர்ந்து அனைத்து மாநில அரசுகளையும் CRZ ஆணை 1991–ஐ அடிப்படையாகக் கொண்டு கடலோரப் பகுதி மேம்பாடு திட்டம் (Coastal Zone Management Plan-CZMP) ஒன்றைத் தயாரித்து சமர்ப்பிக்குமாறு உச்சநீதிமன்றம் உத்திரவிட்டது. CRZ ஆணையில் மேற்கொள்ளப்பட்ட அனைத்துத் திருத்தங்களையும் செல்லாதது என்றும் உச்சநீதிமன்றம் அறிவித்தது.

## கேன் (CAN) அமைப்பின் தலையீடுகள்

கேன் அமைப்பு உருவாக்கப்பட்டவுடன் முதல் பணியாக, சென்னையில் மீனவர்கள் சுற்றுச்சூழல் செயல்பாட்டாளர்கள் பங்கேற்கும்படி 2 நாட்கள் கூட்டமொன்றை ஏற்பாடு செய்து அதில், தமிழக அரசின் CZMPஐ ஆராய்ந்து தனது விமர்சனங்களையும், ஆலோசனைகளையும் முன் வைத்தது. கேன் முன் வைத்த ஆலோசனைகளில் 35 விழுக்காட்டை மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் ஏற்றுக் கொண்டது. தமிழக அரசின் செயலருக்கு சில நிபந்தனைகளையும் கீழ்க்கண்ட திருத்தங்களையும் சேர்க்கக் கூறி CZMPஆனது திரும்பி அனுப்பப்பட்டது. அம்முக்கியமான திருத்தங்களாவன:



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


- CRZ ஆணையின்படி உயர் அலை மட்டத்திற்கும், தாழ்வு அலை மட்டத்திற்கும் இடையிலான 500 மீட்டர் 200 மீட்டராகக் குறைக்கப்பட்டிருந்தது. அது மீண்டும் 500 மீட்டர் வரையறையாக மாற்றப்பட்டிருக்கிறது.

- CRZ-II பகுதியில் வரும் நதிகளையும், ஆறுகளையும் கழிமுகங்களையும் பொறுத்தவரை ஏற்கெனவே இருந்த 100 மீட்டர் என்பது 50 மீட்டராக மாற்றப்பட்டிருந்த்து. இப்போது மீண்டும் 100 மீட்டராக மாற்றப்பட்டிருக்கிறது.

- மணல்மேடுகள் CRZ-I பகுதியில் வருவதாகவே உறுதி செய்யப்பட்டுள்ளது.

- மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தின் அனுமதியின்றி தமிழக அரசு இதழ பகுதிகளின் வரையறையை எவ்வித மாற்றமும் செய்யக் கூடாது என்ற உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**(1) ஸ்டெர்லைட் எதிர்ப்பு இயக்கத்திற்கான ஆதரவு**

தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் ஒன்றான தூத்துக்குடியின் கடலோரச் சூழலும் நிலத்தடி நீரும் அங்குள்ள பெட்ரோல் இராசயனத் தொழிற்சாலைகளினால் சுரண்டப்பட்டு வருகிறது. இச்சூழ்நிலையில் மகாராஷ்டிரா –விலிருந்து சுற்றுச்சூழல் மாசை உருவாக்கும் என்பதால் விரட்டியடிக்கப்பட்ட ஸ்டெர்லைட் என்ற தாமிர உருக்காலைக்கு தமிழக அரசு அனுமதியளித்திருந்தது. இந்த ஆலை துவக்கப்பட்டால் அது தூத்துக்குடியின் சுற்றுச்சூழலுக்கு பெரும் நாசத்தை உருவாக்கும் என்பதால் அந்த ஆலையின் உற்பத்தி முறையை ஆராய கேன் அமைப்பினர் ஸ்டெர்லைட் எதிர்ப்பு இயக்கத்தினருடன் இணைந்து ஸ்டெர்லைட் ஆலைக்கு 1997ம் ஆண்டு செப்டெம்பர் 9ம் தேதியன்று செல்வதற்கான அனுமதியை அம்மாவட்ட ஆட்சியரிடம் கேட்டனர். இதற்காக முன்னதாக அனுமதியளித்த ஆட்சித்தலைவர் பின்னர் ஏதோ காரணங்களுக்காக மறுத்து விட்டார். இதனைத் தொடர்ந்து கீழ்க்கண்ட கோரிக்கைகளை முன் வைத்து தமிழக ஆளுநருக்கு மனு ஒன்று அளிக்கப்பட்டது.

- சுற்றுச்சூழலுக்கு கேடு விளைவித்து, வாழ்வுரிமையைப் பறிக்கும் ஸ்டெர்லைட் ஆலை நிரந்தரமாக மூடப்பட வேண்டும்.

- தூத்துக்குடி மக்கள் சுகாதாரமான சூழலில் வாழ்வதற்கான உரிமையை பறித்ததற்காகவும்,

- 30.8.87ம் தேதியன்று தனது கடமையிலிருந்து தவறி இருவர் மரணத்திற்கு காரணமாக இருந்தத்ற்காகவும் ஸ்டெர்லைட் ஆலையின் அதிபர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


- மத்திய அரசின் மருத்துவர்கள் குழுவினால் ஸ்டெர்லைட் தொழிலாளர் – களுக்கு மருத்துவ சிகிச்சையும் போதுமான நஷ்டஈடும் அளிக்க வேண்டும்.

- ஸ்டெர்லைட் ஆலைக்கு அருகாமையிலிருந்த நீர் நிலைகள் மற்றும் நிலங்கள் ஆகியவை மாசடைந்து விட்டன. இவை ஆலை துவங்குவதற்கு முந்தைய நிலையிலிருந்ததைப் போல் மாற்றப்பட ஆலையின் செலவிலேயே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

- **ஸ்டெர்லைட் ஆலையில் ஏற்பட்ட விபத்தில் மரணமடைந்த தொழிலாளர்களுக்கு 5 இலட்ச ரூபாயும் காயமடைந்த தொழிலாளர்களுக்கு 2 இலட்ச ரூபாய் நஷ்ட ஈடும் (அவர்கள் வேலை செய்து கொண்டிருக்கும் போது இவ்விபத்து ஏற்பட்டதால்) அளிக்கப்பட வேண்டும்.**

### (2) கிழக்கு கடற்கரைச் சாலை

கடலூரிலிருந்து தூத்துக்குடி வரை போடப்படும் கிழக்கு கடற்கரைச்சாலையின் இரண்டாம் கட்டப் பணிகளின் போது, காசி அமைப்புடன் இணைந்து, அரசு சாரா அமைப்புகள், சமூக செயல்பாட்டாளர்கள், நுகர்வோர் அமைப்புகள், தொழிற்சங்கங்கள், மீனவர் தொழிற்சங்கங்கள் பங்கேற்ற கருத்துப்பட்டறை ஒன்றை கேன் அமைப்பானது ஆகஸ்ட் 4 மற்றும் 5ம் தேதிகளில் நாகையில் நடத்தியது. இக்கருத்துப் பட்டறையின் முடிவாக சாலைகள் மக்களின் தேவைகளுக்காக போடப்பட வேண்டுமேயன்றி, பிரம்மாண்டமான தொழிற் திட்டங்களின் நலன்களுக்காக போடப்படக்கூடாது என்றும், முக்கியமாக இதழ பகுதிகளை நேரடியாகவோ, மறைமுகமாகவோ இச்சாலை தொட்டுச் செல்லக் கூடாது என்றும் ஏகமனதாக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்த கருத்துப் பட்டறையைத் தொடர்ந்து, கேன் அமைப்பானது ஃபெட்காட் (FEDCOT) மற்றும் காசி (CASI) ஆகிய அமைப்புகளுடன் இணைந்து முதற்கட்ட கிழக்குக் கடற்கரைச் சாலை போடப்பட்டதால் ஏற்பட்ட சேதங்களையும் இரண்டாவது கட்டச் சாலை போடப்படுவதால் ஏற்படப்போகும் விளைவுகளையும் ஆய்வு செய்ய உண்மை அறியும் பயணத்தை சாலை போடப்படும் பகுதிகளுக்கு மேற்கொண்டது. இந்த நேரடி ஆய்வின்படி கிழக்கு கடற்கரைச் சாலைக்கெதிரான இயக்கத்திற்காக கீழ்க்கண்ட கோரிக்கைகள் தொகுக்கப்பட்டன.

- கிழக்குக் கடற்கரை சாலை இதழ பகுதிகள் வழியாகவோ அப்பகுதிகளை பாதிக்கும்படியாகவோ போடப்படக் கூடாது.

- முதல் கட்ட சாலை போடப்பட்ட போது மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை விதித்த நிபந்தனைகள் இரண்டாவது கட்டத்திலும் அமல்படுத்தப்பட வேண்டும்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



- முதல் கட்டச் சாலை போடப்பட்டதால் ஏற்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை (Environment Impact Assessment-EIA) பொதுமக்கள் முன் வைக்கப்படாமல் சர்ச்சைக்குரிய இரண்டாம் கட்டப்பணி துவங்கப்படக் கூடாது.

- உயர்நீதிமன்றத் தீர்ப்பு விதித்துள்ள வரம்புகளுக்குட்பட்டே சாலை போடுவதற்கான நிலங்கள் கையகப்படுத்தப்படவேண்டும்.

- சாலை போடப்படுவதால் அரசு நிலங்களை பயன்படுத்துபவர்கள் குத்தகை – தாரர்கள் உள்ளிட்ட இடம் பெயர்ந்த அனைவருக்கும் மறுவாழ்வுக்கான உதவிகளுடன் இழப்பீட்டுத் தொகை அளிக்கப்பட வேண்டும்.

- சாலையில் இருமரங்கிலும் தண்ணீர் தேங்குவதைத் தடுக்க சிறிய பாலங்கள் (Culverts) கட்டப்பட வேண்டும்.

- சாலையின் இரண்டாம் கட்டப்பணியின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆய்வு அறிக்கையானது பொதுமக்கள் முன்னிலையில் வைக்கப்பட வேண்டும். அதுவரை சாலையின் மூன்றாம் கட்டப்பணி துவக்கப்படக் கூடாது. இந்த ஆய்வானது எதையும் சார்ந்திராத சுதந்திரமான சுற்றுச்சூழல் குழுவினால் செய்யப்பட வேண்டும்.

இதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு சாலை மேம்பாட்டு திட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொது விசாரணையில் நுகர்வோர் அமைப்புகள், மக்கள் அமைப்புகள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் ஆகியோரைத் திரட்டி கேன் பங்கேற்றது. சாலையின் இரண்டாம் கட்ட திட்டத்திற்கு ஆலோசகரான கின்ஹில் என்ற தனியார் நிறுவனம் தயாரித்துக் கொடுத்த, சுற்றுச்சூழல் பராமரிப்புத் திட்டத்தை (Environment Management Plan -EMP) பற்றிய ஆட்சேபணைகளை எழுப்பவே கேன் இந்த பொது விசாரணையில் பங்கேற்றது. இரண்டாம் கட்டத்தில் கீழ்க்கண்ட நிபந்தனைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று கேன் முன் வைத்தது.

- சாலை போடப்படுவதற்காக மக்கள் யாரும் வெளியேற்றப்படக் கூடாது.
- மரங்கள் வெட்டப்படக் கூடாது
- சாலையின் இருமரங்கிலும் மரங்கள் நடப்பட வேண்டும்.
- கடலோரங்களில் தொழிற்சாலைகளோ, ஒட்டல்களோ கட்டப்படக் கூடாது.
- மாவட்டங்களின் சாலை தர நிர்ணயங்களுக்கேற்பவே (District Road Standards) சாலை போடப்பட வேண்டுமேயன்றி நெடுஞ்சாலைக்கான தர நிர்ணயங்களைப் (Highways Standards) பின்பற்றி அல்ல.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


- முதன்மைச் சாலையை இணைக்கும் கிளைச் சாலைகளும் போடப்பட வேண்டும்.
- முதல் கட்டத்தில் மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் விதித்த நிபந்தனைகள் இரண்டாம் கட்டத்திலும் பின்பற்றப்பட வேண்டும்.

**(3) தொழிற்சாலை மாசு**

இதழ ஆணையை மீறி கடலோரப் பகுதிகளில் கட்டப்படும் தொழிற் – சாலைகளினால் ஏற்படும் மாசை எதிர்த்து விரிவான பிரச்சாரம் ஒன்றை கேன் துவங்கியது. இதன்படி, கடலூர், எண்ணூர், செய்யூர் மற்றும் பிள்ளைபெருமாள் நல்லூர் ஆகிய நான்கு பகுதிகளிலும் கட்டப்படும் பெரும் தொழிலகங்களை எதிர்த்து கேன் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொண்டது.

**(அ) கடலூர்**

கடலூரில் செயல்படும் சிப்காட் கட்டம்–ஐ (Phase–ஐ) அப்பகுதி குறிப்பாக குடிக்காடு போன்ற பகுதி மனிதர்களே வாழத் தகுதியற்ற நிலை ஏற்பட்டு விட்டது என்று நீதிபதி திரு.நயினார் சுந்தரம் தலைமையிலான மாநில மனித உரிமை ஆணையம் அறிக்கை சமர்ப்பித்திருந்தது. அந்த அறிக்கை மேற்படி தொழில் வளாகத்தின் கடுமையான மாசினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடும் அவர்களை வேலை வாய்ப்புள்ள இடங்களில் குடியமர்த்துமாறும் பரிந்துரைத்திருந் –தது. ஆனால், தமிழக அரசு ஆணை எண்.179ன் மூலம் அப்பகுதியில் மேலும் ஒரு தொழில் வளாகம் அமைப்பதற்கு டாசிட் (TACIT) நிறுவனத்தை 2411.16 ஏக்கர் நிலங்களை கையகப்படுத்துமாறு உத்திரவிட்டிருந்தது. இதனை அறிந்த கேன் பல்வேறு இயக்கங்களை அமைத்தும் பல்வேறு போராட்ட வடிவங்களின் மூலமாகவும் அரசின் இந்த நடவடிக்கையை கடுமையாக எதிர்த்தது. இதன் விளைவாக, அரசு தோல் பதனிடும் தொழிற்சாலை அமைப்பதை கைவிட்டது.

கேன் கீழ்க்கண்ட கோரிக்கைகளை அரசின் பரிசீலனைக்காக முன் வைத்தது.

- டாசிட் மூலம் 2411.16 ஏக்கர் நிலங்களை கையகப்படுத்தும் ஆணையை அரசு வாபஸ் பெற வேண்டும்.
- சிப்காட்–II (Phase –II) தொழிற்வளாகம் அமைப்பது கைவிடப்பட வேண்டும்.
- மாசு சுத்திகரிப்பின்றி செயல்படும் சிப்காட்–ஐ ஆலைகளை தடை செய்ய வேண்டும்.
- குடிக்காடு மற்றும் காரைக்காடு மக்கள் குடியேற வேலை வாய்ப்புகளுடன் கூடிய மாற்று இடங்களை அளித்திட வேண்டும்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



CRZ பகுதிகளை பாதுகாக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை மக்கள் உணர்ந்திட பிப்ரவரி 1999ம் ஆண்டில் 1ம் தேதியிலிருந்து 12ம் தேதி வரை யாத்திரை ஒன்று கேனினால் நடத்தப்பட்டது.

**(ஆ) செய்யூர்**

செய்யூரில் அமைக்கப்படவிருந்த தென்சென்னை அனல்மின் நிலையத் திட்டம், அப்பகுதியை அழித்து அப்பகுதி வாழ் மக்களின் வாழ்க்கையை சூறையாடி விடும் என்பதால், கேன் அப்பகுதியிலுள்ள மக்கள் அமைப்பு ஒன்றுடன் இணைந்து போராட்டத்தில் குதித்தது. இப்போராட்டத்தின் முதன் முயற்சியாக, இத்திட்டம் குறித்து மக்களின் ஒப்புதலைப் பெற அரசு பொதுவிசாரணை (14.7.99) ஒன்றின் மூலம் செய்த முயற்சியை கேன் தோல்வியடைய வைத்தது.

மேலும், சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கையின்படி, (Environment Impact Assessment Notification) இடைக்கால சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டை (Interim Environment Impact Assessment) மட்டுமே கொண்டிருக்கும் தொழில் திட்டம் ஒன்றுக்கு பொதுவிசாரணையை நடத்தக் கூடாது. தேசிய அனல்மின்கழகம் (NTC), தென்சென்னை அனல் மின் திட்டத்திற்கு பெற்றுள்ள சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடே உண்மையில் வேறு ஒரு திட்டத்திற்காக பெறப்பட்ட –தாகும். இத்தகைய சட்ட விரோதச் செயல்பாட்டை அடிப்படையாகக் கொண்டு திட்டம் குறித்த பொது விசாரணை மறுபடியும் நடத்த கேன் கோரியுள்ளது.

**(இ) எண்ணூர்**

பழவேற்காடு ஏரி, காட்டுபள்ளித் தீவு மற்றும் எண்ணூர் கழிமுகப் பகுதிகளில் மக்களின் எதிர்ப்பையும் மீறி அரசானது எண்ணூரில் துறை – முகத்தையும், காட்டுப்பள்ளித் தீவில் பெட்ரோல் இராசயனப் பூங்காவையும் கட்டி வருகிறது. இதே பகுதியில் செயல்பட்டு வரும் வடசென்னை அனல்மின்நிலையம் ஏற்கெனவே சுற்றுச்சூழலில் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இந்தச் சூழ்நிலையில் இப்பகுதி வாழ் மக்கள் கேனின் ஆதரவை நாடினர். இதனைத் தொடர்ந்து கேன் அமைப்பு மும்பை உயர்நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி. திருமிகு. எச்.சுரேஷ், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் திருமிகு. வசந்திதேவி, மீன்வளத்துறை முன்னாள் இணை இயக்குனர் (ஆய்வுத்துறை) திருமிகு. ஏ. சீனிவாசன், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தின் சுற்றுச்சூழல் இயல் மையத்தின் சுற்றுச்சூழல் விஞ்ஞானி திரு.எம். அருணாச்சலம் ஆகியோர் கொண்ட நிபுணர் குழு ஒன்றை அமைத்து இப்பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று ஆய்வு செய்து அறிக்கை வெளியிட்டுள்ளது. இந்த ஆய்வு அறிக்கை இந்த பிரம்மாண்ட தொழில் திட்டங்களினால் ஏற்படும் சுற்றுச்சூழல்


தமிழ்த் தேசியம் ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பேரழிவையும் அப்பகுதியின் சூழலைச் சார்ந்து வாழும் லட்சக்கணக்கான மக்களின் வாழ்வாதார உரிமைகள் பறிக்கப்பட்டு வருவதையும் தெளிவுபடச் சுட்டிக் காட்டியுள்ளது.

இப்பிரச்சினைக்கு எதிராக கேன் அமைப்பானது தொடர்ச்சியான இயக்கமொன்றை நடத்தி வருகிறது. கேன் அமைப்பானது பல்வேறு மக்கள் அமைப்புகளுடன் இணைந்து தர்ணா ஒன்றையும், மனிதச் சங்கிலி போராட்டத்தையும் 21.9.99ம் தேதியன்று நடத்தியது. இப்போராட்டங்களில் கீழ்க்கண்ட முக்கிய கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டன:

- எண்ணூர் துறைமுகம் கட்டுவதை நிறுத்த வேண்டும்.
- வடசென்னை அனல்மின் நிலையத்தின் விரிவாக்கத்தை கைவிட்டு விட்டு ஏற்கெனவே மின்நிலையத்திலிருந்து கொட்டப்படும் சாம்பல் (Fly Ash) பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும்.
- காட்டுப்பள்ளியில் பெட்ரோல்–இரசாயனப்பூங்கா கட்டும் திட்டத்தை கைவிட வேண்டும்.
- பங்கிம்காம் கால்வாய் அழிக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும்.
- காட்டுப்பள்ளி கிராம பஞ்சாயத்தின் நிலங்களை கையகப்படுத்துவதையும், இப்பகுதியின் வளமான பல்லுயிர்ப் பெருக்கம் மற்றும் மக்களின் வாழ்வாதாரத்தை அழித்து வருவதையும் நிறுத்த வேண்டும்.
- அழிந்து வரும் பழவேற்காடு ஏரியை காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### (ஏ) பிள்ளைபெருமாள்நல்லூர்

சென்னைக்கு அருகிலுள்ள பிள்ளைபெருமாள் நல்லூரில் தனியார் மின் உலை கட்டப்படுமேயானால் அதிலிருந்து குழாய்கள் மூலம் வெளியேற்றப்படும் "நாப்தா" என்ற கொடிய நச்சு குழாய்களிலிருந்து கசிந்தால் கற்பனைக்கும் எட்டாத நாசகர விளைவுகளை ஏற்படுத்தி விடும். அதுமட்டுமின்றி, மின் உலையில் பயன்படுத்தப்படும் கடல்நீரானது குளிர வைக்கப்படாமல் அப்படியே கொதி நீராக கடலில் கொட்டப்பட்டால் கடல் உயிரினங்கள் அழியும். இதற்கெல்லாம் மேலாக, இத்திட்டமே CRZ–ஐ பகுதியில்தான் கட்டப்பட்டு வருகிறது. 1998ம் ஆண்டிலிருந்தே இந்த உலை கட்டப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை எதிர்த்து இப்பகுதியிலுள்ள மீனவர் சங்கங்கள் மற்றும் இப்பிரச்சினையை கையிலெடுத்துப் போராடும் சினேகா என்ற பகுதி அமைப்பிற்கும் கேன் தனது ஆதரவை நல்கி வருவதோடு இத்திட்டத்திற்கு எதிரான பிரச்சார இயக்கத்தையும் மேற்கொண்டு வருகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



### (4) CRZ திருத்தம் பற்றிய கலந்தாய்வு

மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் தனது அறிவிக்கையின் (Notification–ன் ஆகஸ்ட்5, 99ம் தேதியிட்டது) மூலம் ஏற்கனவே பல்வேறு திருத்தங்களினால் பலவீனமாகவுள்ள CRZ ஆணையை, முற்றிலும் மழுங்கடிக்கச் செய்வதற்காக புதிய திருத்தங்களை அறிவித்திருந்தது. இது தொடர்பான மாநில அளவிலான கலந்தாய்வு ஒன்றை சென்னையில் நடத்தியது. இந்த கலந்தாய்வின் இறுதியில் ஏற்பட்ட ஒருமித்த கருத்தினை அடிப்படையாகக் கொண்டு கேன் அமைப்பானது CRZ ஆணைத்திருத்தங்கள் குறித்து தனது விமர்சனங்களையும் இத்திருத்தங்கள் முழுமையாக கைவிடப்பட வேண்டுமென்ற கோரிக்கையையும் உள்ளடக்கி மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்திற்கு அறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளது.

### (5) முக்கிய பகுதிகள் - பட்டியலிடுதல்

உச்சநீதிமன்றத்தின் உத்திரவின்படி (WP(C) No.664 of 1996 Dt.18, 1996) ஒவ்வொரு மாநில அரசமும், கடலோரப் பகுதி பராமரிப்புத்துறை (Coastal Zone Management Authority) ஒன்றை அமைத்துள்ளது. அதேபோல் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகமும் நிபுணர் குழு ஒன்றையும் அமைத்துள்ளது. கேன் அமைப்பானது கடலோரப் பகுதிகளிலுள்ள சுற்றுச்சூழல் ரீதியாக முக்கியமான மென்மையான பகுதிகளை அடையாளங்கண்டு அவற்றை பாதுகாக்கப்பட்ட பகுதிகளின் கீழ் கொண்டு வருவதற்காக பட்டியிட்டு நிபுணர் குழுவிற்கு அனுப்பியுள்ளது.

தொடர்பு முகவரி: கடலோர செயல்பாட்டு கூட்டு நடவடிக்கைகள் குழு (CAN)
எண்.546, செல்வ பிரபா வளாகம்,
அரசு அலுவலக சாலை, வெளிப்பாளையம்,
நாகை – 611 001.

## 8. தலித் மனித உரிமைக்கான தேசியப் பிரச்சாரம்
(National Campaign for Dalit Human Rights)

அகில உலக மனித உரிமைப் பிரகடனம் நிறைவேற்றப்பட்டும், இந்திய அரசியல் சாசனம் இயற்றப்பட்டும் 52 ஆண்டுகள் உருண்டோடிய பின்பும், தீண்டாமை நம் நாட்டில் தொடர்ந்து நிலவிக்கொண்டுதான் இருக்கிறது. மனித இனத்திற்கே அவமானகரமாக 'மதம்' என்ற பெயரில் கடைப்பிடிக்கப்படும் வர்ணாசிரம தர்மமே தீண்டாமைக்கு அடிப்படையாக உள்ளது. ஆதிக்க சாதியச்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சக்திகளாலும், ஆதிக்க சாதிகளின் ஒட்டு மொத்த உருவமாக அமைந்துள்ள அரசுகளாலும், தலித் மக்களின் அடிப்படைத் தேவைகள் கூட மறுக்கப்படுகின்றன.

ஆதிக்க சக்திகளின் செயல்பாடுகளால் பஞ்சாயத்து ராஜ் அமைப்பும், தலித்துகளுக்கு எதிரான அரசியல், கலாச்சாரக் கொடுமைகள் இழைக்கப்படும் தளமாக மாற்றப்பட்டுள்ளது. அடிப்படை ஆதாரங்களாகிய நிலம், நீர் போன்றவையும், மற்ற வாழ்வாதாரங்களும் அவர்களுக்கு மறுக்கப்படுகின்றன.

தலித் மக்களுக்கு இழைக்கப்பட்டுள்ள கொடுமைகளின் வரலாற்றைப் புரட்டிப் பார்க்கும் போது அவர்களுக்கு எப்போதுமே கல்வி மறுக்கப்பட்டுள்ளது என்பது புலனாகும். தலித் மக்கள் மனதில், ஆதிக்க சக்திகள் ஒருவித தாழ்வு உணர்வை பதிய வைத்திருப்பதும் இந்த கல்வியறிவின்மையால்தான். தலித் மக்களின் சுயசிந்தனையும், கருத்துச் சுதந்திரமும் மறுக்கப்படும் நிலைக்குக் காரணம் இதுவே. தலித்துகள் விரும்பும் மதத்தை ஏற்றுக் கொள்ளும் உரிமையும் அவர்களுக்கு மறுக்கப்படுகின்றது. சார்ந்திருக்கும் மதத்தின் அடிப்படையில் அவர்கள் அரசால் பாகுபடுத்தப்படுகிறார்கள்.

இருப்பினும், தலித்துகள் தங்கள் துன்பங்களையும், போராட்டங்களையும் ஒரு மாபெரும் சக்தியாக மாற்ற இயலும் என நம்புகிறார்கள். இழந்து போன மனிதத்தை, மாண்பினை, பாதுகாப்பினை நிலைபெறச் செய்து, இந்தப் பூமியில் தலித் தலைமையில் சுயஆட்சி அமைத்து, அதன் மூலம் பொருளாதார, கலாச்சார, அரசியல் அமைப்புக்களில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வந்து, இந்த நாட்டின் மக்களாக தங்களை நிலைப்படுத்திக் கொள்ள முனைகிறார்கள்.

இப்பின்னணியில் 1998–ம் ஆண்டு தலித் உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் நோக்கில் பல்வேறு அமைப்புகள் ஒன்றிணைந்து உருவாக்கப்பட்டது – தான் தலித் மனித உரிமைக்கான தேசியப் பிரச்சாரம்.

"தலித் உரிமைகள் மனித உரிமைகளே" என்ற முழக்கத்தை முன் வைத்து இப்பிரச்சாரத்தை தேசிய அளவில் மேற்கொண்ட இவ்வியக்கத்தில் இந்தியாவின் பல பகுதிகளிலும் இருந்து செயல்படும் மக்கள் இயக்கத் தலைவர்கள், தொழிற்சங்கவாதிகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், அறிவு ஜீவிகள், சமூக செயல்பாட்டாளர்கள் மற்றும் பலரும் தங்களை இணைத்துக் கொண்டனர். இப்பிரச்சாரம் சார்பாக ஒரு கோரிக்கை மனு தயாரிக்கப்பட்டு ஒரு கோடி கையெழுத்துகள் வாங்கி, அதனை இந்தியக் குடியரசுத்தலைவர், பிரதமர், நாடாளுமன்ற சபாநாயகர், மாநிலங்களவைத் தலைவர், அனைத்து மாநிலங்களின் ஆளுநர்கள், முதலமைச்சர்கள், சட்டப்பேரவை சபாநாயகர்கள், அய்.நா. சபையின் செயலாளர், அய்.நா.சபையின் மனித உரிமை உயர்ஆணையர் மற்றும் வெளிநாடுகளில் உள்ள இந்திய சபைகளின் பிரதிநிதிகள் பலருக்கும் அனுப்பி வைக்கத் திட்டமிடப்பட்டது.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இப்பிரச்சார இயக்கம் இந்திய அரசிற்கு முன் வைத்த கோரிக்கைகள்:

1. தலித் உரிமைகள் மனித உரிமைகளே என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

2. தாழ்த்தப்பட்டோர்/பழங்குடியினர் வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் எல்லா மாநிலங்களிலும் முழுமையாக செயல்படுத்தப்பட வேண்டும். அந்தச் சட்டத்தைச் செயல்படுத்தும் விதத்தைக் கண்காணிக்கும் பொறுப்பினை தேசிய தாழ்த்தப்பட்டோர்/ பழங்குடியினர் ஆணையத் –திடம் வழங்க வேண்டும்.

3. பஞ்சாயத்து ராஜ் அமைப்பிலும், பிற சனநாயக அமைப்புகளிலும் இணைந்து செயல்படும் தலித் அமைப்புகளுக்கு முழுப் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும்.

4. தலித்துகளிடமிருந்து பிடுங்கப்பட்ட நிலங்கள் அனைத்தும் அவர்களுக்குத் திருப்பித் தரப்பட வேண்டும்.

5. மத்திய, மாநில அரசுகளிடமிருந்து, ஏதோ ஒரு வகையில் ஊக்கத் தொகையைப் பெறும் தனியார் நிறுவனங்களில், தலித்துகளுக்கும், மிகப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் இடஒதுக்கீடு உறுதி செய்யப்பட வேண்டும்.

6. இந்திய அரசியல் சட்டத்திற்கு உட்பட்டு, எந்த மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், எல்லா தலித்துகளும் பட்டியல் வகுப்பினர் என்று அறிவிக்கப்பட வேண்டும்.

இப்பிரச்சார இயக்கம் அகில உலக மனிதஉரிமை அமைப்புகளிடம் முன்வைத்த கோரிக்கைகள்:

1. தலித் உரிமைகள் மனித உரிமைகளே என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

2. அனைத்து வடிவங்களிலும் தீண்டாமையை ஒழிப்பதற்கு வேண்டிய திட்டங்களை அகில உலக அளவில் செயல்படுத்த வேண்டும். தீண்டாமை மனித இனத்திற்கு எதிரான மிகக் கொடிய குற்றமாகக் கருதப்பட்டு – குறிப்பாக, இந்தியாவிலும், பிற ஆசிய நாடுகளிலும் அதற்குக் கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும்.

3. அரசுகளாலும், பிற சமுதாய அமைப்புக்களாலும் தலித்துகளுக்கு இழைக்கப்படும் பலவகை அத்துமீறல்களும், பாகுபாடுகளும், மனித உரிமைகளின் வரம்புக்குள் கொண்டு வரப்பட வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



4. தீண்டாமையைக் கண்காணிக்க ஆசிய அளவிலான ஒரு சிறப்புத் தொடர்பாளரை/ஒரு செயற்குழுவை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஆதரிக்க வேண்டும். இனப்பாகுபாட்டு ஒழிப்பிற்கான அகில உலக உடன்படிக்கையின் முதலாவது பிரிவில் சாதியை, பாகுபாட்டின் மூலங்களில் ஒன்றாக சேர்க்க வேண்டும்.

அய்க்கிய நாட்டு அமைப்பிடம் முன் வைத்த கோரிக்கைகள்:

1. ஆசிய நாடுகளில் நடைமுறையில் இருக்கும் தீண்டாமையைக் கண்காணிக்க சிறப்புத் தொடர்பாளரையோ, செயற்குழுவையோ உடனே நியமிக்க வேண்டும்.
2. இனப்பாகுபாட்டு ஒழிப்பிற்கான அகில உலக உடன்படிக்கையின் முதல் பிரிவில் சாதிப்பாகுபாட்டை, சேர்ப்பதற்கான உடனடி நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

கடந்த 2 ஆண்டுகளாக இப்பிரச்சார இயக்கம் மேற்கொண்ட செயல்பாடுகள்:

- இந்தியாவின் பல மாநிலங்களில் 'தலித் உரிமைகள் மனித உரிமைகளே' என்ற தலைப்பில் கருத்தரங்குகள் நடத்தி மக்கள் மத்தியில் தலித் மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை உருவாக்கியது.
- இந்தியாவில் தீண்டாமை ஒழிய முறையாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை மனுவை முன் வைத்து பெறப்பட்ட 50,000 கையெழுத்துக்களை 1998, டிசம்பர் 10ம் தேதி இந்திய குடியரசுத் தலைவர் திரு.கே.ஆர் நாராயணன் அவர்களிடம் வழங்கியது.
- தலித் மனித உரிமைகள் சாசனம் அடங்கிய ஒரு கையேடு வெளியிட்டது.
- தலித் மனித உரிமைகள் பற்றிய கொள்கை அறிக்கை வெளியீடு.
- இந்தியாவில் இன்றைய தலித்துகளின் நிலை பற்றிய வெள்ளை அறிக்கை வெளியிடுமாறு மத்திய, மாநில அரசுகளை வற்புறுத்தி, கருப்பு அறிக்கை ஒன்றை 1999, டிசம்பர் 8ம் தேதி புதுதில்லியிலும், மற்ற மாநிலத் தலைநகரங்களிலும் வெளியிட்டது.
- 1999ம் ஆண்டும் டிசம்பர் 8ம் தேதி தலித் பெண்கள் தேசிய மாநாட்டில் தலித் பெண்கள் உரிமைகள் பற்றிய பிரகடனத்தை அறிவித்தது.
- இந்தியாவில் பல பகுதிகளிலிருந்தும் 25 இலட்சம் கையெழுத்துக்களைப் பெற்று 1999, டிசம்பர் 9ம் தேதி இந்தியப் பிரதமர் திரு.வாஜ்பாயிடம் சமர்ப்பித்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



- அக்கோரிக்கை மனு நாடாளுமன்ற சபாநாயகர், மாநிலங்களவைத் தலைவர், அனைத்து மாநிலங்களின் ஆளுநர்கள், முதலமைச்சர்கள், சட்டப்பேரவை – சபாநாயகர்கள், எதிர்கட்சித் தலைவர்கள், அய்.நா. அவையின் பொதுச் செயலர், அய்.நா. சபையின் தலைமை மனித உரிமை ஆணையர், வெளிநாடுகளில் உள்ள இந்திய சபைகளின் பிரதிநிதிகள் பலருக்கும் அனுப்பப்பட்டன.

- தலித் மனித உரிமைகள் தொடர்பாக துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள் அச்சடித்து விநியோகிக்கப்பட்டன.

- வெளிநாடுகளில் ஒரு இலட்சம் கையெழுத்துகள் பெறப்பட்டன.

- அமெரிக்கா, இங்கிலாந்து, நெதர்லாந்து, ஜெர்மனி, பெல்ஜியம், ஸ்விட்சர்லாந்து மற்றும் பல நாடுகளில் தலித் தோழமை அமைப்புகள் உருவாக்கப்பட்டு, பிற சர்வதேச மனித உரிமை அமைப்புகளையும் ஒருங்கிணைத்து அகில உலக அளவில் தலித் மனித உரிமைகளுக்கான ஒருங்கிணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- 2000, ஏப்ரல் 18, 19 ஆகிய தேததிகளில் தலித் மனித உரிமைக்கான பொது விசாரணை சென்னையில் நடைபெற்றது. 11 மாநிலங்களிலிருந்து கொண்டு வரப்பட்ட **58 தலித் மனித உரிமை** மீறல் வழக்குகளை 9 நீதிபதிகள் கொண்ட **குழு விசாரித்தது. இந்நீதி**பதிகள் குழு கீழ்க்கண்ட தமது இடைக்கால **முடிவுகளை வழங்கியுள்ளது.**

    1. தீண்டாமை என்ற மறைமுக இனவெறியால் நசுக்கப்படும் தலித் மக்கள் நொறுக்கப் பட்ட மக்களே. அரசியல் சாசனத்தில் தீண்டாமை யானது ஒழிக்கப்பட்டிருந்தாலும், அரசியல் சாசனம் இயற்றப்பட்டு 50 ஆண்டு களாகியும் இன்னமும் இந்தியாவில் 160 மில்லியன் தலித் மக்கள் தீண்டாமை என்னும் கொடுமைக்குள்ளாகி அவர்களது அன்றாட இருத்தலே கேள்விக்குள்ளாக்கப்பட்டு வருகிறது.

    2. அனைத்து மனித உரிமை மீறல்களிலும் ஆதிக்க சாதியினருக்கும் அரசுக்கும் இடையிலான கள்ளக்கூட்டு வெளிப்படையாக உள்ளது. அரசியல் சாசனத்தில் அடிப்படை உரிமைகள் இருப்பினும், சிவில் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 1955 மற்றும் தலித், பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்புச்) சட்டம் 1989 ஆகியவை இருப்பினும் தொடர்ந்து தலித் உரிமைகள் மீறப்பட்டு வருகின்றன. பல வழக்குகளில் ஆதிக்க சாதியினரின் எழுதப்படாத சட்டமே நடைமுறைப்படுத்தப்படுகிறது. தலித் உரிமைகளைப் பாதுகாக்க நியமிக்கப்பட்ட அதிகாரிகளே அம்மீறல்களில்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஈடுபடுகின்றனர். தலித் மனித உரிமை மீறல்களுக்கு அரசையே இந்த பொது விசாரணை நீதிமன்றம் பொறுப்பாக்குகிறது.

3. அரசினால் இயற்றப்பட்ட மனித உரிமை பாதுகாப்புச் சட்டமும் தலித் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்புச்) சட்டமும் தலித் உரிமை மீறல் வழக்குகளில் பொறுப்புடன் அமல்படுத்தப்பட அரசே அக்கறை காட்டுவதில்லை. எனவே, தலித் மக்களை பாதுகாப்பதில் அரசு முழுமையாகவே தோல்வி அடைந்து விட்டது.

4. அரசு நிறுவனங்களுக்கு உடனடியாக நடத்தை விதிகள் தேவை.

உத்திரபிரதேசத்தில் அமர்வு நீதிபதி ஒருவரே தலித் ஒருவரை கொலை செய்து விட்டு இன்னும் பதவியிலிருப்பதைப் பார்க்கும் போது இது போன்ற மனித உரிமை மீறல் வழக்குகளில் முக்கியமாக தலித் உரிமை மீறல் வழக்குகளை விசாரிக்கும் போது நீதித்துறை உள்ளிட்ட அரசு நிறுவனங்களுக்கு நடத்தை விதிகள் அவசியம் தேவை. அவை தலித் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்புச்) சட்டத்திற்குட் – பட்டும், தலித் உரிமை மீறல்களை ஒழிப்பதற்கு வழிவகை செய்யும் அரசியல் சாசனத்திற்குட்பட்டும் இருக்க வேண்டும்.

5. கையினால் மலம் அள்ளுதல் – தலித்களின் கண்ணியத்தையும் உரிமைகளையும் மறுப்பது.

கையினால் மலம் அள்ளுவது சட்டத்தால் தடை செய்யப்படும் அச்சட்டமிருப்பதையே அறியாமல் 7.9 லட்சம் தலித் மக்கள் இத்தகைய இழிவான தொழிலை மேற்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

6. கிராம பஞ்சாயத்துகளில் தலித் மக்களைப் பங்கேற்க விடாமல் ஆதிக்க சாதியினரும் அரசு நிறுவனங்களுமே தடுத்து வருகின்றன.

7. அரசியலில் பங்கேற்க விடாமல் தலித்துகளைத் தடுப்பதும், தேர்தலில் ஓட்டுப் போடும் உரிமையை மறுப்பதும் அதிகரித்து வருகிறது. இது ஒரு இனப்பாகுபாட்டு கொள்கையே.

8. தேவதாசி முறை – தலித் உரிமைகளை இழிவுபடுத்தும் முறை.

அரசியல் சாசனத்தில் பிரிவு 14 மற்றும் (சமமாக நடத்தப்படும் உரிமை) பெண்களுக்கெதிரான அனைத்து வகை பாகுபாடுகளையும் **ஒழிக்கும் உடன்பாட்டில் இந்தியா கையெழுத்திட்டிருந்தாலும் தேவதாசி போன்ற காட்டுமிராண்டித்தனமான முறைகள் பெண்களின் கண்ணி – யத்தை இழிவுபடுத்து கின்றன. தேவதாசி முறையில் தலித் பெண்களே ஈடுபட ஆதிக்கசாதியினரால் கட்டாயப்படுத்தப்படுகின்றன. அவர்களின்** குழந்தைகளும் இம்முறையில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


9. கர்நாடகத்தில் கம்பளபல்லியில் உயர்சாதியினர் ரெட்டியார், போலீசார் அரசு நிர்வாகம் மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகள் உடந்தையுடன் நடந்த காட்டுமிராண்டித்தனமான தலித் படுகொலைகளுக்கு அரசு பொறுப்பேற்று உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

10. சாதியமும் தீண்டாமையும் இனவெறியாகவும் இனப்பாகுபாடாகவும் தேசிய மனித உரிமை ஆணையத்திலும், ஐ.நா.வினாலும் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

1998–99 ஆகிய இரண்டு ஆண்டுகளில் ஆந்திரமாநிலம், சித்தூரில் செயல்பட்டு வரும் சாக்சி அமைப்பின் பொறுப்பாளர் திரு.பால்திவாகர் இந்த தேசியப் பிரச்சாரத்தின் ஒருங்கிணைப்பாளராக செயல்பட்டார். 18, 19.02.2000 அன்று பெங்களூரில் கூடிய கூட்டத்தில் குஜராத் மாநிலம் அகமதாபாத் நகரில் நவஜர்சன் அமைப்பின் பொறுப்பாளர் திரு.மார்ட்டின் மக்வான் இப்பொறுப்பினை ஏற்றுச் செயல்பட்டு வருகிறார். 2001ஆம் ஆண்டில் தென்னாப்பிரிக்க நாட்டில் நடைபெறவிருக்கும் இனவெறிக்கெதிரான அகில உலக மாநாட்டில் சாதியமும், தீண்டாமையும் பேசப்பட வேண்டும் என்ற நோக்கில் பல்வேறு தொடர் செயல்பாடுகள் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக ஐ.நா.சபையின் மனித உரிமைத் துணை ஆணையமானது, இந்தியாவில் நிலவும் சாதியப் பாகுபாட்டை ஆய்வு செய்ய தீர்மானித்துள்ளது இந்த இயக்கத்திற்குக் கிடைத்த குறிப்பிடத்தகுந்த வெற்றியே. அகில உலக அளவில் செயல்பட்டு வரும் பல்வேறு மனித உரிமை அமைப்புகள் தங்களது ஆக்கப் பூர்வமான ஒத்துழைப்பையும், தார்மீக ஆதரவையும் தந்து பல்வேறு வழிகளில் இப்பிரச்சார இயக்கத்தை ஊக்கப்படுத்தி வருகின்றன.

## தமிழகத்தில் 'பொடா' எதிர்ப்பு இயக்கம்

கோவையில் 1998 பிப்ரவரி 14ம் தேதி நடந்த தொடர்குண்டு வெடிப்புச் சம்பவங்களை ஒட்டி, தமிழகத்தில் பயங்கரவாதத்தை ஒழிக்கும் நோக்கில் தமிழக அரசு 1998 மே மாதம் தமிழ்நாடு பயங்கரவாதத் தடுப்புச் சட்ட மசோதாவை (பொடா அல்லது போட்டா) சட்டமன்றத்தில் தாக்கல் செய்தது. பா.ம.க., ம.தி.மு.க., சி.பி.எம், சி.பி.அய், புதிய தமிழகம், தமிழ்நாடு முஸ்லீம் லீக் உட்பட பல்வேறு கட்சிகளும் இம்மசோதாவை கடுமையாக எதிர்த்தன. இக்கட்சிகளைத் தொடர்ந்து அதிமுகவும் இம்மசோதாவை எதிர்க்கத் தொடங்கியது. 'பொடா'ச் சட்டத்தை பரிசோதனை முறையில் ஓராண்டு மட்டுமே வைத்துக் கொண்டு பின்பு நீட்டிப்பதைப் பரிசீலிக்கலாம் என்று த.மா.கா. தமிழக அரசிற்கு ஆலோசனை கூறியது. தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்றக் கழகம் போன்ற முஸ்லீம் அமைப்புகள் இச்சட்டத்தை கடுமையாக எதிர்த்தன.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழ் தமிழர் இயக்கம், தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி, தமிழர் தேசிய இயக்கம், தமிழ்நாடு மார்க்சிய லெனினிய பொதுவுடமைக் கட்சி, பெரியார் திராவிடர் கழகம் போன்ற தமிழ்த் தேசியக் குழுக்களும், விடுதலைச் சிறுத்தைகள், தியாகி இம்மானுவேல் பேரவை, அருந்ததியர் கூட்டமைப்பு, பறையர் பேரவை போன்ற தலித் இயக்கங்களும் ஆர்ப்பாட்டங்கள், பொதுக்கூட்டங்கள் வாயிலாக தமிழக அரசிற்கு தங்களது எதிர்ப்பினைத் தெரிவித்தன. புதிய தமிழகம் 'பொடா' எதிர்ப்பை தனது திட்டங்களில் முதன்மையாகக் கொண்டு தமிழகம் முழுவதிலும் 100 கூட்டங்களை நடத்தி மக்களிடையே பிரச்சாரம் செய்வதாக அறிவித்தது.

மனித உரிமைத் தளத்தில் பணியாற்றும் பல தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும், பெண்கள் அமைப்புகளும் இப்போராட்டத்தில் தங்களை இணைத்துக் கொண்டன. எதிர்ப்பலைப் பெருகுவதைக் கண்ட தமிழக முதல்வர் கருணாநிதி இச்சட்டத்தில் திருத்தங்களைச் செய்யத் தயார் என்று அறிவித்தார். ஆனால், இச்சட்டத்தில் திருத்தங்கள் தேவையில்லை, இதனைத் திரும்பப் பெற வேண்டும் என்று பலதரப்பிலிருந்தும் குரல்கள் ஒலித்தன.

மக்கள் சிவில் உரிமைக் கழகம் 1998, ஜூலை 14ம் தேதி சென்னையில் பொடா சட்டத்திற்கு எதிராக மிகப் பெரிய பேரணி ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. ஆயிரக்கணக்கான மனித உரிமை ஆர்வலர்களும், மக்கள் பிரதிநிதிகளும் கலந்து கொண்ட இப்பேரணியில், தில்லி உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி திரு.ராஜிந்தர் சச்சார், மக்கள் சிவில் உரிமைக் கழகத் தலைவர் திரு.கே.ஜி. கண்ணபிரான், பி.யு.சில்எல். தேசிய செயற்குழு உறுப்பினர் திரு.எஸ்.வி. இராஜதுரை ஆகியோர் உரையாற்றினர். பேரணியின் இறுதியில் ஆளுநரிடம் கோரிக்கை மனு ஒன்றையும் சமர்ப்பித்தனர்.

1998, ஜூலை 16ம் தேதி 'பொடா' எதிர்ப்புக்குழு ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்கில் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் நூற்றுக்கணக்கான மனித உரிமை செயல்வீரர்கள் கலந்து கொண்டனர். மக்கள் கண்காணிப்பக சட்ட ஆலோசகர் திரு.வின்சென்ட் எழுதிய 'அன்று தடா, இன்று பொடா' என்று சிறிய விளக்க நூலினை மக்கள் கண்காணிப்பகம்–தமிழ்நாடு பொடா எதிர்ப்புக் கூட்டமைப்பு சார்பாக வெளியிட்டது.

மனித உரிமைகளை முடக்கிப் போடும் கொடூர சட்டமான 'பொடா' ஏற்கெனவே அமலிலிருந்த 'தடா' சட்டத்தின் மறுவடிவமே. எனவே, இப்பொடா சட்டத்திற்கு ஆளுநரும், ஜனாதிபதியும் ஒப்புதல் வழங்கக் கூடாது என்று கையெழுத்து இயக்கங்கள் தமிழகமெங்கும் நடந்தன. இலட்சக்கணக்கான தந்திகளும், அஞ்சலட்டைகளும், ஆளுநருக்கும், குடியரசுத் தலைவருக்கும் சென்றன. பல்வேறு இயக்கப் பிரதிநிதிகள், சமூக நலனில் அக்கறை கொண்ட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வழக்கறிஞர்கள், மனித உரிமை ஆர்வலர்கள், பல கட்சிப் பிரமுகர்கள் ஆளுநரை நேரில் சென்று பொடாச் சட்டத்திற்கு ஒப்புதல் வழங்கக்கூடாதென மனுக்கள் சமர்ப்பித்தனர். 1998, ஜூலை 29ம் தேதி சென்னைக்கு இந்திய குடியரசுத் தலைவர் திரு.கே.ஆர்.நாராயணன் வந்திருந்தபோது, பொடா எதிர்ப்புக் குழு அவரை நேரில் சென்று பார்த்து மனு ஒன்றைச் சமர்ப்பித்தது.

கர்த்தார் சிங் வழக்கில் இது போன்ற சட்டங்களை நிறைவேற்ற மாநில அரசுக்கு அதிகாரம் இல்லை என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பினை வழங்கியிருந்தும் கூட, தமிழக அரசு பொடாச் சட்டத்தை சட்டமன்றத்தில் நிறைவேற்றியிருப்பது கேலிக்கூத்து மட்டுமல்ல, மனித உரிமைகளை காலில் போட்டு மிதிப்பதும் ஆகும். பி.யு.சி.எல். தேசியக்குழு உறுப்பினர் திரு.எஸ்.வி.ராஜதுரை இந்து நாளிதழில் (23.7.98 பொடாச் சட்டம் எவ்வாறு அகில உலக மனித உரிமைகள் பிரகடனத்தின் 5–11 பிரிவுகளை மீறுகிறது என்றும், சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான அகில உலக உடன்படிக்கையின் 9 பிரிவிற்கு எதிராக செயல்படும் என்பதையும் விளக்கினார். ரவுலட் சட்டம், தடா, பொடா என்ற தலைப்பில் இந்து நாளிதழில் (3, 4.8.98) இரு கட்டுரைகள் எழுதிய முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி திரு.வி.ஆர்.கிருஷ்ண அய்யர் 'பொடா'ச் சட்டத்தின் கோரமுகத்தைப் படம் பிடித்துக் காட்டி, எவ்வாறு இது மனித உரிமை மீறல்களுக்கு வழி வகுக்கும் என்று பட்டியல்படுத்தினர். தனிநபர் பயங்கர–வாதத்தை ஒழிக்க அரசு பயங்கரவாதம் தீர்வாக அமையாது என்பதை அழுத்தந்திருத்தமாகக் கூறினார்.

இயற்கை நீதிக்கு முரணான இக்கொடிய சட்ட மசோதா தேசிய மனித உரிமை ஆணைய முன்னாள் உறுப்பினரும், தமிழக ஆளுநருமான திருமதி. பாத்திமா பீவி அவர்களிடம் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டபோது, எந்தவித எதிர்ப்புமின்றி அவரும் ஒப்புதல் வழங்கியது வியப்பை அளித்தது. ஆனால், இச்சட்ட நகல் இந்திய குடியரசுத்தலைவர் திருமிகு. கே.ஆர். நாராயணன் அவர்களிடம் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்ட போது, அவர் கையெழுத்திட மறுத்து அதனைத் திருப்பி அனுப்பி விட்டார். அன்றைய பா.ஜ.மத்திய அரசாங்கம் இம்மசோதா குறித்து சில விளக்கங்களைக் கேட்டுள்ளதாகக் கூறிய தமிழக அரசு இம்மசோதாவைத் திரும்பப் பெற்றுக் கொண்டது.

குற்றம் சாட்டப்பட்டவருக்கு சட்டப்படி வழங்கப்பட்டுள்ள அனைத்து உரிமைகளையும் இது மறுப்பதோடு, அரச பயங்கரவாதத்திற்கு வித்திடும் ஒரு கருவியாக அமையும் என்பதில் எள்ளளவும் அய்யமில்லை.

### 'புதிய தடா' எதிர்ப்புக் கூட்டமைப்பு

ரௌலட் சட்டத்தைவிடக் கொடுமையான, அடிப்படை மனித உரிமைகள் அனைத்தையும் பறிக்கின்ற பயங்கரவாத, சீர்குலைவு நடவடிக்கைகள் (தடுப்பு)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


சட்டம் (தடா) பஞ்சாப் தீவிரவாதிகளை ஒடுக்குவதற்கென்று 1985இல் ராஜீவ் காந்தி அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்டது. இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை நாடாளுமன்றத்தின் ஒப்புதலோடு நீட்டிக்க வைக்கப்பட்ட அச்சட்டம் இந்தியா முழுவதிலிருமிருந்தும் மட்டுமின்றி சர்வதேச அளவிலும் கடும் கண்டனத்திற் – குள்ளாகியது. நாடாளுமன்றத்திற்குள்ளும் அதற்கான எதிர்ப்பு வலுப்பட்டது. அக்காரணங்களாலும், 1996ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலைக் கருத்தில் கொண்டும் நரசிம்மராவ் தலைமையிலிருந்த காங்கிரஸ் அரசாங்கம், அச்சட்டம் மேலும் நீடிக்காமல் கால வழக்கொழிய அனுமதித்தது.

23.05.95 அன்று 'தடா' சட்டம் கால வழக்கொழிவதை அனுமதித்த அதே காங்கிரஸ் அரசாங்கம், அவசர அவசரமாகவும் 18.05.95 அன்று மாநிலங்களவையில் குற்றவியல் சட்டத் திருத்த மசோதா 1995 (Criminal Law Amendment Bill 1995) என்ற மசோதாவைக் கொண்டு வந்தது. பயங்கரவாதிகள், தேசவிரோத சக்திகள் ஆகியோரை ஒடுக்குவதற்கு மட்டுமே இப்புதிய சட்டம் பயன்படுத்தப்படும் என்றார் அன்றைய பிரதமர் நரசிம்மராவ். இடதுசாரி, ஜனதா தளம் கட்சிகளின் கடுமையான எதிர்ப்பின் காரணமாகவும், போதுமான ஆதரவு இல்லாமையாலும் அம்மசோதா அப்போது நிறைவேற்றப்படவில்லை. 'தடா' சட்டத்திலிருந்த கொடுமையான அம்சங்கள் புதிய சட்டத்தில் இல்லை என்று கூறிய அன்றைய மத்திய அரசாங்கம் அதே அம்சங்களைச் சேர்ப்பதற்காகத் தான் வரைந்த மசோதாவிற்குத் தானே திருத்தங்களைக் கொண்டு வந்தது. அதே மசோதா தான் சில திருத்தங்களுடன் 'குற்றவியல் சட்டத்திருத்த மசோதா 1998 (Criminal Law Amendment Bill 1998)' என்ற பெயரில் வாஜ்பாயி தலைமையிலுள்ள தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்டு சட்டமாக்கப்பட உள்ளது.

குற்றவியல் சட்ட(திருத்த) மசோதா 1998 என்ற மசோதாவை மத்திய அரசாங்கம் சட்ட ஆணையத்திற்கு அனுப்பி, அதனுடைய ஆலோசனைகளைக் கேட்டுள்ளது. பல வகைகளில் 'தடா' சட்டத்தின் மறுபதிப்பாகவும், அதே சமயம் வேறு சில கொடிய பிரிவுகளை உள்ளடக்கியுள்ளதுமான இப்புதிய சட்ட மசோதா குறித்து இந்தியாவின் பல்வேறு சமூகப்பிரிவினர், மனித உரிமை அமைப்புகள், அரசியல் கட்சிகள் ஆகியோருடன் பரந்த, விரிந்த விவாதத்தை சட்ட ஆணையம் நடத்தாமல், ஒரு குறுகிய வட்டத்திற்குள் விவாதத்தை முடக்கும் வகையில் 20.12.99 அன்று ஒரு ஆலோசனைக் கூட்டத்தை நடத்தியது. இத்தகைய சட்டங்கள் வருமேயானால், அவற்றை ஆய்வுக்குட்படுத்தி, அவற்றின் மனித உரிமை மீறல் அம்சங்களைச் சுட்டிக் காட்டும் அதிகாரம் வழங்கப் பெற்ற இந்திய தேசிய மனித உரிமை ஆணையத்தின் தலைவர் நீதிபதி ஜே.எஸ்.வர்மா, அந்த ஆலோசனைக் கூட்டத்திற்குத் தலைமை ஏற்றிருக்கிறார். தேசிய மனித


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உரிமைகள் ஆணையத்தின் முன்னாள் தலைவர் நீதிபதி ரங்கநாத் மிஸ்ரா 'தடா' சட்டத்தை 1995–ல் கடுமையாக எதிர்த்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்புதிய சட்டம், இந்தியாவின் பாதுகாப்பை அச்சுறுத்தும் பிரிவினைவாத, பயங்கரவாத, சீர்குலைவு நடவடிக்கைகளை ஒடுக்குவதற்காகக் கொண்டு வரப்படுகிறதென்று மத்திய அரசாங்கம் கூறுகிறது. அத்தகையதொரு மசோதாவை இந்தியாவின் சட்ட ஆணையம் தயாரித்து, நாடு தழுவிய விவாதத்திற்கு உட்படுத்தியிருக்க வேண்டும். ஆனால், அது அப்படிச் செய்யாததுடன், அரசாங்கம் ஏற்கனவே தயாரித்து திருத்தங்கள் செய்துள்ள மசோதாவில் தனது ஆலோசனை –களையும், திருத்தங்களையும் சேர்த்து சட்டமாக்கி விடலாம் என்று கூறி விட்டது. சட்டஆணையம் வழங்கியுள்ள ஆலோசனைகள் புதிய சட்டத்தை மேலும் கொடியதாக ஆக்கியுள்ளன.

'தடா'வை விடக் கொடிய இந்த புதிய சட்டமொன்று கொண்டு வரப்படுவது ஏன் என்பதற்கு ஒருதலைப்பட்சமான நியாயங்களை வழங்குகிறது சட்ட ஆணையம். எடுத்துக்காட்டாக–காஷ்மீர், வடகிழக்கு மாநிலங்கள், ஆந்திரம், தமிழ்நாடு முதலியவற்றில் பயங்கரவாத நடவடிக்கைகள் பெருகியுள்ளதற்குக் காரணம், 'தடா' போன்ற சட்டங்கள் இல்லாமல் போனதுதான் என்று கூறுகிறது. ஆனால், தேசப் பாதுகாப்புச் சட்டம், சட்ட விரோத நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டம், ஆயுதப்படைகள் சிறப்பு அதிகாரங்கள் சட்டம், ஆயுதங்கள் சட்டம், கலவரப் பகுதிப் பாதுகாப்புச் சட்டம் என ஏறத்தாழ 20 கடுமையான மத்திய அரசாங்கச் சட்டங்கள் பல ஆண்டுகளாகவே பயன்படுத்தப்பட்டு வருவதையும், அவை நடைமுறையில் இருப்பதையும் குறித்து சட்ட ஆணையம் மௌனம் காக்கிறது. 'தடா' சட்டம் எவ்வாறு பயன்படுத்தப்பட்டது என்பதைப்பற்றி எதையும் சொல்வ – தில்லை. கடந்த சில ஆண்டுகளாக நிகழ்ந்துள்ள பயங்கரவாத நடவடிக்கைகளைப் பட்டியலிடும் சட்ட ஆணையம், பாபர் மசூதி இடிப்பின் காரணமாக ஏற்பட்ட கலவரங்களில் பத்தாயிரத்திற்கும் அதிகமான முஸ்லீம்கள் கொல்லப்பட்டதை மூடி மறைக்கிறது. மும்பையில் குண்டுவெடிப்புகள் நடந்ததைக் கூறும் சட்ட ஆணையம், ஸ்ரீகிருஷ்ணா ஆணையத்தின் அறிக்கையைக் குறிப்பிடவில்லை.

தமிழ்நாட்டில் அல்–உம்மா இயக்கத்தினர் செய்ததாகக் கூறப்படும் குண்டு வெடிப்புகள் பற்றிப் பேசும் சட்ட ஆணையம், 1997 நவம்பர்–டிசம்பரில் கோவையில் முஸ்லீம்கள் கொல்லப்பட்டதை மூடிமறைக்கிறது. காஷ்மீரில் தீவிரவாதிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளைச் சட்ட ஆணையம் பட்டியலி – டுகிறது. காஷ்மீர் மக்கள் அந்நியமாக்கப்பட்டதற்கு இந்திய அரசின், அரச பயங்கரவாத அணுகுமுறைகள் காரணமாக இருந்தது குறித்துப் பேசுவதில்லை.

நாட்டின் பாதுகாப்பு என்ற பெயரால் கொண்டு வரப்படும் இந்தச் சட்டம், 'தடா'வைப் போலவே, மக்களின் உரிமைகளுக்காகப் போராடுபவர்கள்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


தொழிற்சங்கவாதிகள், தலித்துகள், எதிர்க்கட்சியினர், சிறுபான்மையினர் ஆகியோர் மீது பாயும். நமது அரசியல் சட்டமும், சர்வதேச மனித உரிமை ஆவணங்களும் உருவாக்கியுள்ள மனித உரிமை அளவுகோல்கள் அனைத்தையும் மீறுகின்றது இந்த 'புதிய தடா' சட்டம்.

மத்திய அரசால் கொண்டு வரவிருக்கின்ற இக்கொடிய சட்டத்தை **எதிர்க்க 06.01.2000 அன்று** சென்னையில் **மனித** உரிமை **ஆர்வலர்கள்** பலர் ஒரு ஆலோசனைக் கூட்டம் நடத்தினர். அதில், மக்கள் சிவில் உரிமைக் கழகம் (பி.யு.சி.எல்.) தமிழக பெண்கள் இணைப்புக் குழு, பெரியார் திராவிடர் கழகம், தமிழ்த்தேசப் **பொதுவுடைமைக் கட்சி**, சோக்கோ அறக்கட்டளை–மதுரை, தமிழ்நாடு **முஸ்லீம் முன்னேற்றக்** கழகம், மனித உரிமை முன் முயற்சி–சென்னை, **ஸ்வாதி–கரூர், தலித்** கூட்டு நடவடிக்கைக் குழு, மக்கள் கண்காணிப்பகம்–தமிழ்நாடு ஆகிய அமைப்புகளிலிருந்து பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இதில் 'தடா' சட்டத்தைவிடக் கொடுமையான இச்சட்டம் பற்றிய நாடு தழுவிய விரிவான விவாதத்திற்கு ஏற்பாடு செய்யாத இந்திய சட்ட **ஆணையத்திற்கு கண்டனக் கடிதம் அனுப்புதல்; சட்ட ஆணையம் 20.12.99 அன்று இக்கொடிய சட்டம் தொடர்பாக ஏற்பாடு செய்த ஆலோசனைக் கூட்டத்திற்கு தலைமை தாங்கிய தேசிய மனித உரிமை ஆணையத்தின் தலைவர் நீதிபதி. ஜே.எஸ்.வர்மாவிற்கு கண்டனக் கடிதம் அனுப்புதல்; இப்புதிய சட்டத்தை எதிர்த்துப் பிரச்சாரம் செய்வதற்காக மாநில ஒருங்கிணைப்புக் குழுவை** உருவாக்குதல்; தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்தவர்களைத் திரட்டி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களை அமைத்து, பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்; புதிய தடா பற்றிய சிறிய அறிமுகக் குறிப்பை உடனடியாக விநியோகித்தல்; அச்சட்டம் குறித்த 64 பக்க அளவில் ஒரு விளக்க **நூலை கொண்டு வருதல் போன்ற** பல முடிவுகள் எடுக்கப்பட்டன. அதன்படி **மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கள்** உருவாக்கப்பட்டு பல மாவட்டங்களில் **கருத்தரங்குகள் நடைபெற்றன. இச்சட்டம்** குறித்து திரு.கா.மனோகரன் எழுதிய 64 பக்க விளக்க நூல் 'புத்தாயிரத்தில் ஒரு புதிய தடா' என்ற தலைப்பில் 2000, பிப்ரவரி மாதத்தில் வெளி வந்தது. இதனை மக்கள் கண்காணிப்பகம்–தமிழ்நாடு புதிய தடா கூட்டமைப்பிற்காக வெளியிட்டது. இப்புதிய சட்டத்தை எதிர்த்து, மார்ச் 17ம் தேதி பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள், மக்கள் இயக்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்ட ஒரு பொதுக்கூட்டம் சென்னையில் ஏற்பாடு செய்யப்பட்டது.

◆ ◆ ◆


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

